[illegible]

ஜனவரி - மார்ச் 1998

[illegible]

ஜனவரி — மார்ச்

1998

L
m, 870 TA.
28.12.18.
16691

◆

தூய
பட்டு

தூய
சரிகை

◆

◆

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

◆

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

[illegible] காப்பகம்
[illegible] சென்னை-600 008

இந்த இதழில்...

- திருவள்ளுவர் விழாவில் முதலமைச்சர் உரை 2
- குறளோவியம் - கலைஞர் 8
- தம்பி, தமிழர் திருநாள் - அறிஞர் அண்ணா 9
- வேழமே உனக்கொரு வினா! (கவிதை) 14
- பூவைமேல் எத்தனை பூ! - 17
- மனிதநேய உதவிகள் 20
- குறள் காட்டும் வாழ்வு - கி.ஆ.பெ. விசுவநாதம் 22
- போகியோ போகி! (கவிதை) 25
- தொழில் ஒத்துழைப்பு மாநாடு 28
- இன்றும் நாளையும் (கதை) 33
- தழைத்தோங்கும் தமிழ் வளர்ச்சி 37
- ஊரக வளர்ச்சிப் பணிகள் 43
- பொன்னான நாளில் நமது சூளுரை - கலைஞர் கவிதை 48
- தமிழ்ப் பொழில் - இதழாய்வு 57
- பரிதிமாற் கலைஞரின் தமிழ்த்தொண்டு 73
- புத்தாண்டே வருக 78
- அவர்தான் பெரியார் 81
- அந்த மரம் இரத்தம் வடிக்கவில்லை (கவிதை) 84
- பொன்விழா ஆண்டில் புகழ்மிகு சாதனைகள் 92



தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2029
மார்கழி - தை
ஜனவரி 1 - 31, 1998
மலர் : 28 இதழ் : 13 & 14
விலை ரூ.6/-

Verified

வாழ்த்தும் - வணக்கமும்

'தமிழரசு'
வாசகர்களுக்கு...
முகவர்களுக்கு...
சந்தாதாரர்களுக்கு...
விளம்பரதாரர்களுக்கு...
எழுத்தோவியங்களை
வழங்கிடும்
அறிஞர் பெருமக்களுக்கு...
எங்கள்
ஆக்கப் பணிகளில்
துவளாது துணையிருந்து
ஊக்குவிக்கும்
நண்பர்களுக்கு
அன்பார்ந்த
புத்தாண்டு - பொங்கல்
நல்வாழ்த்துகளையும்,
வணக்கங்களையும்
தெரிவித்துக்கொள்கிறோம்.

- ஆசிரியர்

'மூடப் பழமைகளைப் போக்கிட முன்கூட்டியே விழித்தெழுவோம்'

திருவள்ளுவர் விழாவில்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்

21691



(முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 17.1.1998 அன்று, சென்னை - கலைவாணர் அரங்கில் நடைபெற்ற 'திருவள்ளுவர் விழாவில்' ஆற்றிய உரை.)

தைப் பொங்கலைத் தொடர்ந்து இந்தத் தமிழர் திருநாள் தொடரில் திருவள்ளுவர் நாளை நாம் பெருமிதத்தோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த நாளில் திருவள்ளுவர் விருது வழங்கியும், தமிழக வரலாற்றில் ஒரு பகுதியாக சி.இராமச்சந்திரன் தலைமையிலே இயங்குகின்ற வரலாற்றுக் குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 'சோழப் பெருவேந்தர் காலம்' என்ற நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சியும் சிறந்த நூல்களுக்குப் பரிசு என்ற வகையில் அந்த நூலாசிரியர்கள் 56 பேரை - பழைய காலத்தில் 56 தேசத்து ராஜகுமாரர்களைப் பாராட்டுவதைப் போலப் பாராட்டி, பரிசு வழங்கியும், முதிர்ந்த வயதுடைய புதிய தமிழ் அறிஞர் பெருமக்கள் நால்வருக்குத் திங்கள்தோறும் வழங்குகின்ற நிதியினை வழங்கியும் சிறப்புப் பெற்றுள்ள இந்த அரிய நிகழ்ச்சியில் உங்கள் அனைவரோடு நானும் கலந்துகொள்கின்ற வாய்ப்புப் பெற்றமைக்காகப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கண்ணாடிக் குடத்திற்குள் இருக்கின்ற விளக்கு

திருவள்ளுவர் விருதுபெற்ற சாரங்கபாணி அவர்களைப் பற்றி நம்முடைய பேராசிரியர் அவர்கள் குறிப்பிடும்போது அவர்கள் "குடத்திலிட்ட விளக்காக இருக்கிறார்" என்று குறிப்பிட்டார். அதுதான் நல்லது என்று கூடச் சொன்னார். ஆனால் சாரங்கபாணி அவர்கள், உரை வேற்றுமை கண்டவர் என்ற காரணத்தினால் பேராசிரியருடைய உரையிலேயிருந்து நான் கொஞ்சம் விலகிச் சென்றல்ல; ஒட்டிச் சென்று அவர் குடத்திற்குள்ளே இருக்கின்ற விளக்குதான்; ஆனால் அந்தக் குடம் கண்ணாடியில் செய்யப்பட்ட குடம்; மண் குடமாக இருந்திருந்தால், பித்தளைக் குடமாக இருந்தால் ஒளி வெளியே தெரியாது. எனவே, இன்று முதல் அவரைக் கண்ணாடிக் குடத்திற்குள்ளே நாம் வைத்திருக்கிறோம் என்று சொல்லலாமே என்று கருதிக்கொண்டேன்.

அப்படி கண்ணாடிக் குடத்திற்குள்ளேயிருந்து ஒளி வழங்கிக் கொண்டிருக்கின்றவராக, திருக்குறளுக்கு உரை இயற்றிய நூல்கள் மாத்திரமல்ல, திருக்குறளைப் பற்றிய ஆய்வு நூல்களை மாத்திரமல்ல, சங்க இலக்கிய நூல்கள் பலவற்றைத் தன்னுடைய அருந்திறனால் ஆய்வு செய்து வெளியிட்டுள்ள பெருமைக்குரியவர் சாரங்கபாணி என்கிறபோது; அவர் சொன்னார்; கலைஞர் கையினால் நான் இன்று இந்த விருது பெறுகின்ற பேற்றினைப் பெற்றேன் என்று. நான் சொல்கிறேன். அவை அடக்கத்திற்காக அல்ல; உண்மையைச் சொல்கிறேன். அவரைப் போன்ற தமிழ் அறிஞர்களுக்கு விருது அளிக்கின்ற பேற்றினை நான் பெற்றேன் என்று பெருமைப்படுகிறேன். அப்படி ஒரு நல்ல விழா இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அண்ணா பொறுப்பேற்ற பின்னரே தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட்டது

தமிழக அரசைப் பொறுத்தவரையில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே 1967-ஆம் ஆண்டு இந்த அரசு அமைந்த காலந்தொட்டு மொழி வளர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் எத்துனையோ நற்செயல்களை ஆற்றியிருக்கிறது. அரும்பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று முதலமைச்சராக ஆன அந்தக் காலக்கட்டத்திலேதான் தமிழர்களுடைய நீண்டகாலக் கனவாக இருந்த, நாம் பிறந்த மண்ணுக்கு 'சென்னை ராஜ்யம்' என்று இருக்கின்ற பெயரை மாற்றி, இந்த மண்ணுக்கு உரிய பெயரை - தமிழ் நிலத்தின் பெயரை 'தமிழ்நாடு' என்று சூட்டவேண்டும் என்ற கோரிக்கை வெற்றி பெற்றது . அந்தக் கோரிக்கையைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நிறைவேற்றித் தந்தார்கள்.

யார் யார் 'தமிழ்நாடு' என்ற பெயர் தேவையில்லை என்றெல்லாம் வாதிட்டார்களோ, அவர்களை எல்லாம் பேரவையிலே நிறுத்திவைத்து அண்ணா அவர்கள் எழுந்து நின்று நான் மும்முறை சொல்வேன் 'தமிழ்நாடு' என்று, நீங்களெல்லாம் 'வாழ்க! வாழ்க!' என்று சொல்ல வேண்டும் என்று, தமிழ்நாடு என்ற பெயர் தேவையா? என்று வாதிட்டவர்களையும் 'வாழ்க! வாழ்க!' என்று சொல்ல வைத்த பெருமையும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு.

அண்ணா காலத்திலே தான் தமிழர்களுக்கு அவர்களுடைய உரிமைகள் சிதைக்கப்படாமலிருக்க - தமிழ்மொழி எதிர்காலத்திலே அறவே வீழ்ந்துவிட்டது என்ற நிலை ஏற்படாமலிருக்க இனிமேல் தமிழ் நாட்டிலே இந்தி ஆதிக்கத்திற்கு இடமில்லை, தமிழ், ஆங்கிலம் என்ற இரு மொழித் திட்டந்தான் என்று அறைகூவலாக விடுத்து அறிவித்த பெருமையும் கழக அரசுக்கு, அண்ணா தலைமையிலே அமைந்த அரசுக்கு உண்டு என்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள்.

தமிழ் வளர்ச்சிக்காகப் பணியாற்றி வருகிறோம்

அண்ணா அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நாங்கள் - நானும், பேராசிரியரும் மற்றும் அமைச்சர் பெருமக்களும் ஆற்றிய தொண்டின் அடிப்படையிலே தமிழ் வளர்ச்சிக்காக , தமிழ்ப்பண்பாட்டு வளர்ச்சிக்காக எத்தனையோ நற்காரியங்களை ஆற்றி வந்திருக்கின்றோம். இன்னமும் ஆற்றிக்கொண்டிருக்கின்றோம்.

குறிப்பாக நான் 67-ல் இருந்து அந்த நீண்ட கால சாதனையைச் சொல்ல விரும்பவில்லை, கடந்த 96-ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு மீண்டும் வந்து, குறிப்பாக நான் நான்காவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்று இந்த இரண்டாண்டு காலத்தில் தமிழ் வளர்ச்சிக்கு இந்த அரசு என்னென்ன செய்திருக்கின்றது என்பதைக் கொஞ்சம் நீங்கள் கருதிப்பார்க்க வேண்டும்.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு புதிய அமைச்சகமே கண்டு அதற்கென்று ஒரு அமைச்சரையே நியமித்தது இந்த அரசுதான். இதுவரையில் இல்லாத ஒன்று தமிழகத்தில்.

மெட்ராசோ, மதராசோ இல்லாமல் சென்னை

'மெட்ராஸ் ஸ்டேட்' அதாவது சென்னை ராஜ்யம் என்று இருந்தது தமிழ்நாடு என்று ஆகிவிட்ட பிறகு மெட்ராசோ, மதராசோ இருக்கக் கூடாது என்பதற்காக

[illegible] 11791 N7OT2 [illegible]

“சென்னை” என்ற தமிழ்ப் பெயர் சூட்டப்பட்டதும் இந்த ஆட்சியிலேதான்.

அன்று 76-க்கு முன்பு ‘பூம்புகார்’ சிலப்பதிகாரத்தினுடைய சாயலாய், தமிழர்களுடைய வரலாற்றுப் பெட்டகமாய், கரிகால் பெருவளத்தான் ஆண்ட மூதூர் என்ற சரித்திரச் சான்றாய் விளங்கிய அந்தப் பூம்புகார் பட்டினத்தை புதுப்பித்து, பழைய பூம்புகாரை நிலைநாட்ட முடியாவிட்டாலும் கூட இயன்ற வரையில் இந்த பூம்புகாரைக் காணீர்! என்று அதைப் புதுப்பித்து ‘இந்திர விழா’ ஆண்டுதோறும் எடுத்த ஆட்சி இந்த ஆட்சி என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆனால் அந்த விழா இடையில் நின்றுபோனது. இப்பொழுது அதை மீண்டும் தொடங்க வேண்டும் என்ற ஆர்வம் இந்த அரசுக்கு இருக்கின்றது. எனவேதான், பாழ்பட்டுப்போன பூம்புகாரில் ஒரு கோடி ரூபாய் செலவிலே அதனைப் புதுப்பிக்கின்ற பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முழுமையாக முடிவுற்றதும் இந்திர விழா அங்கே கோலாகலமாக நடைபெறும் என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய உணர்வுகளை ஊட்டிய அறிஞர் அண்ணா அவர்கள் கடற்கரையில் தூங்குகின்றாரே அந்தச் சதுக்கத்திற்கு ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் புதுமைகள் செய்யப்படுகின்றன. அருங்காட்சியகம் அமைக்கப்படுகிறது.

காஞ்சியில் அறிஞர் அண்ணா அவர்களுடைய இல்லம் நான்கு இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

வள்ளுவர் கோட்டம் - அதைப்பற்றி இங்கே பேசினார்கள். விருது பெற்ற சாரங்கபாணி பேசினார் - முனைவர் தமிழ்க்குடிமகனும் அதைப்பற்றி விளக்கினார். விளாக்காமலே உங்களுக்கு தெரியக்கூடியதுதான் வள்ளுவர் கோட்டம். ஆனால் அந்த வள்ளுவர் கோட்டம் ஐந்தாண்டுக் காலத்தில் என்ன பாடுபட்டது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நான் சொல்லவில்லை. முரசொலியிலே அல்ல. வேறு ஏடுகளிலே அல்ல - கல்கி, குமுதம், விகடன் போன்ற ஏடுகளில், நடுநிலை ஏடுகளில், ஒரு கட்சியைச்சாராத நடுநிலையிலே உள்ள ஏடுகளில் எல்லாம் வள்ளுவர் கோட்டத்தில் என்னென்ன அநியாயங்கள் நடைபெறுகின்றன என்பனவற்றைப் புகைப்படமெடுத்து வெளியிட்ட காட்சிகளை எல்லாம் நீங்கள் கண்டிருப்பீர்கள். நீங்களோ கண்டீர்கள். நானோ கண்டு கண்ணீர் விட்டேன். அந்த வள்ளுவர் கோட்டத்தை மீண்டும் புதுப்பித்து அது வள்ளுவர் கோட்டமாகவே இருக்கவேண்டும். கோட்டம் “தோட்ட”மாகிவிடக் கூடாது என்ற அந்த உணர்வோடு 84.94 இலட்ச ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ள காட்சியை இன்றைக்கு நீங்கள் காணுகின்றீர்கள்.

> *“ஜனநாயகம் என்ற அமைப்பு, தழைத்தோங்கிட,*
> *நம் ஒவ்வொருவரிடமும் ஜனநாயக மனநிலை -*
> *மனஉரம் - மனப்பாங்கு வளரவேண்டும். எத்தகைய*
> *அறைகூவலையும் ஏற்கத்தக்க ஜனநாயக*
> *நல்லுணர்வையும் நாம் பெறவேண்டும்”.*
>
> **_ பேரறிஞர் அண்ணா**

சென்னையிலே உள்ள தென்மொழிகள் புத்தக நிறுவனத்திற்கு 80ஆயிரம் ரூபாய் இந்த அரசு நிதியுதவி வழங்கி இருக்கிறது.

சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 43.75 இலட்ச ரூபாய் இந்த அரசு வழங்கியிருக்கிறது.

பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டி கட்டபொம்மன் கோட்டை கலனாகிக் கிடக்கிறது. அந்தக் கலனாகக் கிடக்கின்ற கட்டபொம்மன் கோட்டையை புதுப்பிக்கும் பணி 25 இலட்சம் ரூபாய் செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கங்கை கொண்ட சோழபுரம் கோவில் கலைச் செல்வங்கள் பராமரிப்புக்காக 5 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் அங்குள்ள ஒரு மண்டபம் இடிந்து வீழ்ந்தது. அதற்காக 50 இலட்ச ரூபாய் நிதியுதவி இந்த அரசின் சார்பில் செய்யப்பட்டிருக்கிறது. எங்களுக்குப் பக்தி இருக்கிறதா என்று கேட்காதீர்கள். கலைப்பற்று இருக்கிற காரணத்தால் அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திராவிட மொழியியல் பள்ளியில் தமிழியல் ஆய்வுக்கான நிதி உதவி அதிகரிப்பு

திராவிட மொழியியல் பள்ளிக்குக் கழக அரசு உயர்த்தி வழங்கிய மான்ய உதவி என்ற பெயரில் திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் பள்ளிக்குத் தமிழியல் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆண்டு தோறும் ஐந்து இலட்ச ரூபாய் நிதி வழங்கப்பட்டு வந்தது. இந்த நிதி 96-97 ஆம் ஆண்டு முதல் பத்து இலட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்குத் தமிழ் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளுக்காக 96-97 ஆம் ஆண்டில் 19.57 இலட்ச ரூபாயும், 97-98 ஆம் ஆண்டில் இருபது இலட்ச ரூபாயும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

புதுடெல்லியிலுள்ள தமிழ்ச்சங்கத்திற்குத் திருவள்ளுவர் கலையரங்கம் கட்டுவதற்காகப் பத்து இலட்ச ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டு அந்தக் கலையரங்கத்தைச் சில மாதங்களுக்கு முன்பு நானே திறந்துவைத்த நிகழ்ச்சியும் நடைபெற்றது.

தேவநேயப்பாவணரின் நூல்களை நாட்டுடைமையாக ஆக்கி, அவருடைய வாரிசுகளுக்கு இருபது இலட்ச ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் மறைமலையடிகளாரின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவருடைய வழித்தோன்றல்களுக்கு மொத்தம் ரூபாய் முப்பது இலட்சத்து முப்பதாயிரம் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.

சென்னை திருவல்லிக்கேணியிலே உள்ள பாரதியார் இல்லம் 8.30 இலட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு அங்கு 80 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு நூலகம் இந்த அரசினால் அமைக்கப்பட்டுள்ளது. பாரதியார் வாழ்க்கை வரலாறு பற்றிய திரைப்படம் வாரம் 3 முறை அங்கே காட்டப்படுகிறது.

மதுரை தமிழ்ச்சங்க மேம்பாட்டிற்கு நிதி உதவி

மதுரை தமிழ்ச் சங்க மேம்பாட்டிற்காகத் தேவர் பேரவையின் கோரிக்கைகளை ஏற்று, கழக அரசு 45 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கின்றது.

ஆந்திர மாநிலத்திலுள்ள திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு இந்த அரசு 50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கிறது.

மறைமலை அடிகள் நூலகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த மான்ய உதவி பத்தாயிரம் ரூபாயை ஒரு இலட்ச ரூபாயாக உயர்த்தி இந்த அரசு வழங்கத் தொடங்கியிருக்கிறது.

திருவான்மியூரில் உள்ள உ.வே.சாமிநாத அய்யர் நூலகத்திற்கு வழங்கப்பட்டு வந்த 60 ஆயிரம் ரூபாய் மான்ய உதவியை இந்த ஆண்டு முதல் 1 இலட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கியதும் இந்த அரசுதான்.

அதுமாத்திரமல்ல; நான் கட்டபொம்மன் கோட்டையைப் பற்றிச்சொல்கிறபோது நண்பர் பரமகுரு அவர்கள் பூலித்தேவன் என்ன ஆனான் என்று கேட்காமலே விழிகளால் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே நம்முடைய, அமைச்சர்கள் துரைமுருகன், முல்லைவேந்தன், ஆலடி அருணா இவர்கள் எல்லாம் சென்று பார்வையிட்டு, அந்த பூலித்தேவனுடைய பழைய இடிந்துபோன மாளிகையைப் புதுப்பிக்கத் திட்டமிட்டு அதற்கான வரைபடம் என்னால் ஒப்புதல் அளிக்கப்பட்டு 53 இலட்சம் ரூபாய் செலவிலே பூலித்தேவன் மாளிகை அங்கு அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

வீரன் சுந்தரலிங்கம் நினைவாக அவரது வழித்தோன்றல்கள் வாழ்ந்திட இருநூறு வீடுகள் கொண்ட ‘சுந்தரலிங்கம் நகர்’ அமைக்கப்பட்டுள்ளது, சுமார் அறுபது இலட்ச ரூபாய் செலவில்!

விஸ்வநாத தாஸ் நினைவு மண்டபம்

அதைப்போலவே தியாகி, நாடகப் புலவர் விஸ்வநாததாஸ் “கொக்கு பறக்குதடி பாப்பா” என்று வெள்ளையனுக்கு எதிராக வீரக்குரல் எழுப்பிய நாடக நடிகர். நடித்துக் கொண்டிருக்கும் போதே மேடையிலே உயிர் விட்டவர். அந்த தியாகி விஸ்வநாத தாசுக்காக மதுரை திருமங்கலத்தில் அவர் வாழ்ந்த வீட்டை வாங்கி 50 இலட்ச ரூபாய் செலவிலே விஸ்வநாத தாஸ் நினைவு மண்டபம், அங்கே அமைக்கப்படுகிறது.

நம்முடைய இலக்கியச் செல்வர், குமரி அனந்தன் அடிக்கடி என்னைத் துளைத்தெடுத்து அந்த “தொந்தரவுக்குள்ளே தோழி நான் சுகம் கண்டேன்” என்பதற்கு ஒப்ப அதனை ஏற்று(கிண்டியிலே காமராஜர் நினைவிடம், ராஜாஜி நினைவு மண்டபம், காந்தி மண்டபம், எல்லாம் இருப்பதற்கு அருகில்) தியாகிகள் மணி மண்டபம் 30 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்படுகிறது என்ற செய்தியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

உ.வே.சா.நூலகத்தில் அவருடைய சிலை நிறுவ உதவி

உ.வே.சா. நூலகத்தில் அவருடைய சிலை நிறுவுவதற்கு இந்த அரசு 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கியுள்ளது. இதை யாரும் கேட்கவில்லை. பத்திரிகைகளிலே செய்தியைப் பார்த்தேன். சிலையை வைக்க முடியாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள்; சிலை வைப்பார்கள் என்ற செய்தி ஏடுகளிலே வந்தது. உடனடியாக அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபாய் அந்தச் சிலையை நிறுவுவதற்கு அரசு வழங்கியது.

“சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்குச் சேர்ப்பீர்”

- என்ற பாரதி மொழிக்கேற்ப, பிற மொழிச் செல்வங்களைத் தமிழில் மொழி பெயர்த்திட வேண்டும் என்ற உணர்வோடு சிறந்த மொழி பெயர்ப்பு நூல்களை தமிழில் கொண்டு வருவதற்கு உதவும் வகையில் 96-97ஆம்

ஆண்டு முதல் புதிய திட்டம் ஒன்றைக் கழக அரசு ஏற்படுத்தி பிறமொழி நூல்களைத் தமிழிலும், தமிழிலே உள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழி நூல்களிலும் மொழி பெயர்த்து வெளியிடும் திட்டத்திற்கு 5 இலட்ச ரூபாய் இந்தஅரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு மாதந்தோறும் 400 ரூபாய் வழங்கப்பட்டது. அதனை 10.9.96 முதல் 500 ரூபாய் என்று அரசு உயர்த்தியது. அதோடு முடியவில்லை. பிறகு 10.10.96 முதல் அந்தத் தொகை பல தியாகிகளுடைய வேண்டுகோளுக்கு இணங்க, மாதந்தோறும் 1500 ரூபாயக உயர்த்தப்பட்டது. அத்துடன் மருத்துவப் படியாக 15 ரூபாயும் இந்த அரசினால் சேர்த்து வழங்கப்பபட்டது.

சுதந்திரப் பொன்விழாவை ஒட்டி தியாகிகள் உதவித் தொகை உயர்த்தப்பட்டது

இந்திய சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி இந்த உதவித் தொகை மேலும் உயர்த்தப்பட்டு 15.8.97 முதல் தியாகிகளுக்கு மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்து அதே தியாகிகளுக்குத் தருகிற 3 ஆயிரம் ரூபாய் மொழிக் காவலர்களுக்கும் தரப்படும் என்று சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மொழிக் காவலர்களுக்கும் திங்கள்தோறும் 3 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

எந்த ஒரு முனையிலும் தமிழ் வளர்த்தவர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய தொண்டு உண்டு என்பதை எடுத்துக் காட்டவும், தொடர்ந்து இந்தத் தமிழ்த் தொண்டினை ஆற்றுவோம் என்பதை உங்களுக்கு எடுத்துக் கூறவும்தான் இவற்றை நான் இங்கே குறிப்பிட்டிருக்கின்றேன்.

இங்கே நம்முடைய இனமானப்பேராசிரியர் அவர்கள் திருவள்ளுவருடைய அருமை பெருமைகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இங்கே நமமுடைய பெரியவர் சாரங்கபாணி - பெரியவர் என்று சொல்லக் கூடாது - என்னை விட ஒரு வயது இளையவர்தான். தமிழில் பெரியவர் என்ற காரணத்தால் சொன்னேன். அவர் உரை வேற்றுமை எழுதியிருகின்றார்கள். பேராசிரியர் உரையாற்றும் போது பலரும் திருக்குறளுக்கு அவரவர்களுடைய சிந்தனைக்கு ஏற்ப, அவரவர்களுடைய எண்ணத்திற்கேற்ப உரை எழுதினார்கள் என்பதெல்லாம் திருக்குறளுக்கு வலு சேர்ப்பது, திருக்குறளுக்கு வளம் சேர்ப்பது என்ற கருத்துப்பட எடுத்துச் சொன்னார்கள்.

திருக்குறளுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறிய விளக்கம்

என்னைப் பொறுத்துக் கூட இந்தத் திருக்குறளுக்கு உரை காண்பதில் - ஒருமுறை நான் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனோடு பேசிக்கொண்டிருக்கும் போது சொன்னார்கள். "பழைய காலத்து உரைகள் எல்லாம் தவறாக, ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு எழுதப்பட்டிருக்கின்றன" என்று குறிப்பிட்டு எடுத்துக்காட்டாக ஒன்றைச் சொன்னார்கள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

- என்ற குறளுக்குப் பாரதிதாசன் சொன்ன விளக்கத்திற்கு முன் ஏற்கெனவே அதற்காகத் தரப்பட்ட விளக்கம் என்ன என்பதை முதலில் பார்க்கவேண்டும்.

தெய்வத்தைக் கூட தொழாமல் கணவரைத் தொழுது எழுகின்ற பெண், மழை பெய்யாமல் இருக்கின்ற காலத்தில் மழையே பெய் என்று சென்னால் மழை பொழியும். இதுதான் பழைய காலத்திலே எழுதப்பட்ட உரை.

இந்தக் காலத்திலே கூட அந்தப் பழைய எண்ணத்தோடு எழுதப்பபட்டவரை இப்படித்தான் "தெய்வத்தைக்கூடத்.தொழாமல்கணவனைத் தொழுது எழுகின்ற பெண் சொ்ன்னால் மழை பொழியும்" என்று. இதனைச் சோதித்துப் பார்க்க முடியாது. ஒரு பெண்ணை அழைத்து 'மழை பொழியச் சொல்' என்று சொல்லி அந்த அம்மையார் ஆகாயத்தைப் பார்த்து 'மழையே வா' என்று சொல்லி மழை வராவிட்டால் அந்தப்பெண் மீது நாம் வைத்திருக்கின்ற அன்பு எப்படி எல்லாம் மாறும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஐயப்பாடே ஏற்பட்டு விடும். அதனால்தான் பாரதிதாசன் சொன்னார். அப்படி அல்ல அதற்குப்பொருள். தவறாக எழுதிவிட்டார்கள். பெய்யெனப் பெய்யும் மழை என்றால், ஒரு உழவன் தன்னுடைய வயலுக்கு, குளத்திற்கு, ஏரிக்கு இவற்றுக்கெல்லாம் தண்ணீர் வேண்டும் என்று ஏங்குகிற நேரத்தில் மழை பெய்யாதா ? என்று ஏங்குகின்ற நேரத்தில் அவன் பெய்ய வேண்டும் என்று எண்ணுகிற நேரத்திலே, பெய்கிற மழை எப்படிப்பட்டதோ அதைப் போன்றவள் அந்தப் பெண். தெய்வத்தைக் கூட தொழாமல் கணவனைத் தொழுகின்ற அந்தப் பெண் பெய் என்று சொல்கிற நேரத்திலே பெய்கின்ற மழைக்கு ஒப்பானவளே தவிர அவள் சொன்னால் ஒன்றும் மழை பெய்துவிடாது என்று பாரதிதாசன் சொன்னார். அதைத் தான் நான் குறளோவியம் தீட்டும் போது அந்தப் பொருளைத்தான் குறிப்பிட்டிருந்தேன். அது குறளோவியம் எழுதிய காலக்கட்டம்.

திருக்குறளுக்கு உரை எழுதிய போது நான் கூறிய கருத்து

பிறகு திருக்குறளுக்கு உரையே எழுதினேன். புரட்சிக் கவிஞர் சொன்ன அந்த உரையைச் சற்று மாற்றத்தோடு நான் என்ன சொன்னேன் என்றால் - அப்போதெல்லாம்; ஏன்! இன்றைக்கு கூட திருக்குறளை பாராட்டுகின்ற, போற்றுகின்ற பெண்கள் பலர். என்ன இருந்தாலும் பெண்களை அடிமையாக அல்லவா திருவள்ளுவர் சித்திரித்திருக்கிறார் என்று பெண்களைப் பற்றி வள்ளுவர் குறிப்பிட்டிருக்கின்ற சில குறட்பாக்களை எடுத்துக் காட்டுவார்கள். வள்ளுவரை அந்தப் பழிக்கு ஆளாக்கி விடக்கூடாது என்பது என்னுடைய எண்ணம். எனவேதான் நான் 'பெய்யெனப் பெய்யும் மழை' என்ற அந்தக் குறளுக்கு உரை கண்டபோது என்ன எழுதினேன் என்றால் தெய்வத்தைக் கூட தொழாமல் கணவனைத் தொழுது எழுகின்ற பெண் - பெய் என்று சொன்னவுடன் பெய்கின்ற மழையைப் போல அடிமையாக இருப்பவள். பெண் உரிமையோடு இருக்கவேண்டும். அடிமை நிலை இல்லாமல் இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவதற்காக அப்பபடி ஒரு உரையை நான் எழுதினேன்.

எல்லா மதத்தினராலும் போற்றப்படுபவர் திருவள்ளுவர்

இப்படி உரைகள் பரிமேலழகர் எழுதின காலத்திலிருந்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் காலம்வரை அதற்குப் பிறகும் சில உரை ஆசிரியர்களால் மாற்றம் பெற்றிருக்கின்றன. இருந்தாலும்கூட திருவள்ளுவர் எல்லோருக்கும் பொதுவானவர். எல்லாராலும் புகழப்படுபவராக எல்லோரும் அவர் எனக்கு உரியவர், எனக்கு உரியவர் என்று சொல்லக் கூடியவராக எல்லா மதத்திலே உள்ளவர்களும், என் மதக்கருத்துக்கள் அங்கே இருக்கின்றன. சமண மதக் கருத்து உண்டு என்று சமணர்களும், சைவ மதக் கருத்து உண்டு என்று சைவர்களும், புத்த மதக் கருத்து அங்கே இருக்கிறதென்று புத்தர்களும்; வைணவ மதக் கருத்து அங்கே இருக்கிறதென்று வைணவர்களும் எடுத்துக் காட்டுகின்ற அளவிற்கு எல்லா மதத்தார்களாலும் போற்றப்படுகின்றவர் திருவள்ளுவர். அந்தத் திருவள்ளுவருக்குத்தான் இந்த அரசு 76-ஆம் ஆண்டுக்கு முன்பே நாங்கள் ஆலோசித்து உலகத்திலேயே உள்ள சில சிலைகளோடு ஒப்பிடத்தக்க அளவிற்கு, வள்ளுவருக்குச் சிலை அமைக்க வேண்டும் என்று கருதி குமரிக் கடல் ஓரத்தில் வள்ளுவருக்குச் சிலை அமைக்கத் திட்டமிட்டு அன்றைக்கே அது அறிவிக்கப்பட்டு, பணிகள் ஆரம்பமாயின. வள்ளுவர் சிலை வைப்பதற்காக கல்லெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு 76-ல் ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் அப்பணி நிறைவுபெறாமல் நின்றுவிட்டது. பிறகு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பொறுப்பேற்ற பிறகு அந்தப் பணியைத் தொடர எண்ணினார் - தொடரப்பட்டது. ஆனால் தொய்வு விழுந்து விட்டது. மேலும் மேலும் தொய்வு ஏற்பட்டது.

> *திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம்; அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல; செயலினால் மெய்ப்பித்துக் காட்டவேண்டும்.*
>
> **- அறிஞர் அண்ணா**

இப்போது நாங்கள் நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கின்ற காலக் கட்டத்தில் வள்ளுவருடைய சிலையின் பணி அநேகமாக பெரும் பகுதி முடிந்து விட்டது. விரைவில் அந்தச் சிலை குமரிக்கடல் ஓரத்திலே நிறுவப்படும். 133 அடி உயரத்திலே திருவள்ளுவருடைய சிலை அங்கே நிறுவப்படும் என்ற இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை வள்ளுவர் விழாவிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்க்குடிமகன் இந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்ற காலந்தொட்டு தமிழ் வளர்க்க தமிழுக்குச் செல்வாக்குத் தேடித்தர அதைப்போலவே அறநிலையத்துறையிலே ஆலயங்களில் நடைபெறுகின்ற கொள்ளைகளைத் தடுக்க, ஆலயச் சொத்துக்களை யார் யார் அபகரித்திருக்கிறார்களோ அவர்களிடமிருந்து சொத்துக்களை மீட்க அருமையாகப் பணியாற்றி வருகின்றார். ●

குறளோவியம்

- கலைஞர்

வெள்ளிப் பாற்குடத்தின் வாய்போன்ற வட்ட நிலா. அல்லிக்குளமோ என ஐயுறும் வண்ணம் நட்சத்திர வானம். அவைகளைப் பற்றியெல்லாம் தேனிசை மீட்டிவிட்டு உலகத்தையே மறந்து அசைவற்று இருக்கின்றன அந்த நல்யாழ்கள் இரண்டும். அந்த உயிர் யாழ்களின் கனவுலகத்தைக் கலைத்துவிடக் கூடாதேயென்ற பயத்தோடு, மென்காற்று - அவர்களைக் கீழ் ஸ்தாயியில் தாலாட்டுகிறது.

வானத்திலே உள்ள - விண்மீன்களோ, பெரியதோர் குழப்பமான ஆராய்ச்சியில் இறங்கிக் கலங்கித் திரிகின்றன; என்ன அந்த ஆராய்ச்சி?

தாங்கள் எங்கேயிருக்கிறோம் - நிலவு எங்கேயிருக்கிறது என்பதுதான் அவைகளின் ஆராய்ச்சியாகும்.

வானத்திலே உள்ள கண்ணாடியில்தான் இவள் முகம் தெரிகிறதோ - அல்லது, பூமியில் உள்ள கண்ணாடியில்தான் நிலவு தெரிகிறதோ - என வியக்கும் அளவுக்கு, நிலா முகம் படைத்த பேரழகி அவள்! ஆகவேதான் அவளுக்கும் நிலவுக்கும் வேறுபாடு தெரியாமல் விண்மீன்கள் கலங்கித் திரிகின்றன. அதற்கு –

இதோ குறள் :-

"மதியும் மடந்தை முகனும் அறியாப்
பதியிற் கலங்கிய மீன்"

இப்படி விண்மீன்களுக்கே கலக்கத்தை உண்டுபண்ணிய அந்தக் கட்டழகியின் தோளிலே ஒருவன் மெய்ம்மறந்து சாய்ந்து கிடக்கிறான் என்பதைக் காணும்போது, இளம் உள்ளங்களில் பொறாமைக் கீறல் விழத்தான் செய்யும் - ஆனால் வள்ளுவர் உள்ளமோ அறிவு மணக்கும் அழகான கேள்வியொன்றை எழுப்புகிறது.



தான் விரும்பும் காதலியின் மெல்லிய தோளில் சாய்ந்திருந்து துயிலும் துயில்போல் இனிமை வாய்ந்ததா, அந்தத் தாமரைக்கண்ணான் உலகம்?

இல்லை, - இல்லை!

இதோ, குறளோவியம் காணுங்கள் :-

"தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு ?"

தம்பி! தமிழர் திருநாள்!

பேரறிஞர் அண்ணா

முதலமைச்சர் என்ற முறையில் பல பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களை அறிக்கைகள், சொற்பொழிவுகள், சட்டமன்ற உரைகள் மூலம் நாட்டுக்குத் தந்துவிட முடிகிறது - தனிமையாக உன்னிடம் உரையாடி மகிழ்ந்திட என்று நான் வகுத்துக்கொண்ட 'கிழமைக் கடிதம்' எழுதிட இயலவில்லை.

பிரச்சினைகளை விளக்கிட, ஐயப்பாடுகளைப் போக்கிட, அச்சம் துடைத்திட, மறுப்புக்கு மறுப்புரைக்க, 'வாழ்க வசவாளர்' என்று அவர்களையும் வாழ்த்திட, "தம்பிக்குக் கடிதம்" மிக நேர்த்தியான முறையில் பயன்பட்டு வந்தது. எனக்குத் தோன்றும் எண்ணங்களை உன்னிடம் கூறிவிடுவதிலே, தனியானதோர் மகிழ்ச்சி.

எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியினை உன்னோடு பங்கிட்டுக் கொள்வதிலே ஓர் இன்பம். கவலை குடையும்போது, மன உளைச்சல் ஏற்படும்போது, உன்னோடு உரையாடி, தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்ற எழுச்சி பெற்று வந்தேன்.

அமெரிக்கா சென்று அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய அளவுக்கு உடல் நலம் பாழ்பட்டது. ஆனால் அதனால் ஏற்பட்ட கவலையை நான் உதறித் தள்ளும் விதமான அன்பும் கனிவும் நாடு முழுவதிலுமிருந்து கிடைத்தது. அரசியலில் நம்மோடு மாறுபட்டிருப்பவர்களிலே பலரும் கனிவு காட்டிடக் கண்டேன் - மனிதத் தன்மை அடியோடு மடிந்துவிடவில்லை என்பதனை உணர்ந்தேன்.

தம்பி! அந்த மனிதத் தன்மையிலேதான் முழுக்க முழுக்க நம்பிக்கைக் கொண்டிருக்கிறேன். மனிதத் தன்மை திகழ்ந்திடச் செய்வதைக் காட்டிலும் மகத்தான வேறோர் வெற்றி இல்லை என்றே கருதுகிறேன். அரசுகள் அமைவதே, இந்த மனிதத் தன்மையின் மேம்பாட்டினை வளர்த்திடத்தான் என்று கருதுகிறேன். என்னால் எந்தப் பிரச்சினையையும் மனிதத் தன்மை கலந்ததாக மட்டுமே கொள்ளமுடிகிறது. அதனால் கொடுமை நேரிட்டுவிடும் போது குமுறிப் போகிறேன். அக்ரமம் நடைபெற்றிடும்போது நெஞ்சில் வேல் பாய்கிறது. இந்நிலை உடலைப் பாதிக்கிறது; மருத்துவர்கள் பலர் என் உடல்நிலை தேறிடத் துணைநிற்கின்றனர். ஆனால், உன் புன்னகை தவழும் முகத்தை மனக்கண்ணால் காணும்போதுதான் உண்மையான 'மாமருந்து' கிடைக்கிறது. கிடைத்தற்கரிய அந்தச் செல்வத்தைக் கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கிலே திளைத்திருக்க எண்ணும் என்னை, தம்பி! நான் மேற்கொண்டுவிட்ட 'கடமை' வேலையைக் கவனி! வேலையைக் கவனி! என்று முடுக்குகிறது.

இன்று, எப்படியும் எழுதுவது - ஆண்டுக்கோர் நாள் - **அருமைமிகு திருநாள் - பொங்கற் புதுநாள்** - அதற்காக வெளிவரும் மலரில் எப்படியும் எழுதவேண்டும்.

பொங்கற் புதுநாள் வாழ்த்தினைத் தெரிவித்துப் பெற்றிடும் மகிழ்ச்சியினை மட்டும் நான் இழந்துவிடமாட்டேன். **நமக்கென்று உள்ள ஒப்பற்ற விழா அல்லவா அது!** எத்தனையோ இன்னல்கள் தாக்கிடினும், அவைகளை மறந்து, ஒருநாள் மனைதோறும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிட என்று அமைந்த நாளல்லவா பொங்கற் புதுநாள், பேச்சிலே ஒரு இசை கலந்திடும் நாள் இத்திருநாள்! இந்நாளில், உனக்கு வாழ்த்துக் கூறுவதிலே பெற்றிடும் இன்பம் ஈடற்றதல்லவா. எனவேதான், எப்படியும் எழுதுவது என்று உட்கார்ந்தேன்.

உலக நாடுகள் பலவற்றின் தலைநகரங்களை ஒருமுறைக்கு மும்முறை கண்டு வந்தேன். அங்கு எங்கும் - விழாக்கள் பலப்பல நடாத்தப்படினும் - **தமிழகத்தின் பொங்கற் புதுநாள் போன்றதோர் பொன்விழா இல்லை;** நிச்சயமாக இல்லை. கோலாகல விழாக்கள் உள்ளன; பரபரப்பூட்டும் விழாக்கள் நடத்தப்படுகின்றன; கேளிக்கைகள், மதுபான விருந்துகள் மிகுதியாக; எனினும், ஆர்ப்பரிப்பின்றி - ஆனால் அகமகிழ்ச்சியுடன், போலிப் பூச்சுகளின்றி - ஆனால் புதியதோர் பொலிவுடன், வீட்டில் உள்ள அனைவரும் கலந்துரையாடி மகிழ்ந்திருக்கும் நமது பொங்கற் புதுநாளுக்கு ஒப்பான விழா அங்கு இல்லை. நாட்டியக் கூடங்களிலே அமளி! பாதைகளிலே புதுவேகம், மோதல், உயிர்ச்சேதம்! அங்காடிகளிலே ஆரவாரம்! இவைகள் ஏராளமான அளவு! ஆனால் இங்கு வீடுதோறும் எழுகிறதே, முதியவரும், மூதாட்டியும். இளைஞரும், இளநங்கையும், சிறாரும், சிறுமியரும் கலந்து எழுப்பும் பொங்கலோ! பொங்கல்! என்ற இசை, அது அங்கு எங்கும் இல்லை. இருந்திடத் தக்க விதமான சமூக அமைப்பே இல்லை.

தமிழகத்தில் பன்னெடுங்காலத்துக்கு முன்பிருந்து நாடு பல, தனது எல்லையை வகுத்துக்கொண்டு அரசு அமைத்துக்கொண்டு நிலவத் தொடங்குவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே, நாம் பெற்றிருந்த கருத்துச் செல்வத்தை எண்ணிப் பார்த்திடும்போது, நமக்கு இன்றுள்ள எல்லாத் துயரங்களையும் ஒருகணம் மறந்து, வேறு எவரும் பெறமுடியாத ஓர் பெருமித உணர்வினை நாம் பெறமுடிகிறது. அத்தகைய கருவூலத்தை நமக்குத் தந்த தமிழ்நாட்டுக்கு, **இந்தப் பொங்கற் புதுநாளிலிருந்து, நாம் உலகுக்கு அறிவிக்க முடிகிறது. இது தமிழ்நாடு என்பதாக, பெயரில் என்ன இருக்கிறது என்று பேசிடும் பெரியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் - ஆனால் பாடினாரே பாரதியார்,**

'செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது, காதினிலே'

- என்று. அந்த 'கவிதா வாக்கியம்' பெரிய இடத்தில் அமர்ந்துகொண்டு 'சின்னத்தனம்' பேசிடும் பலருடைய ஏளனத்தைப் பொருட்படுத்தவேண்டாம், உயர்ந்த எண்ணம் கொள்! என்றன்றோ கட்டளையிடுகிறது. 'நாம்' தமிழ்நாடு என்ற பெயர் பெற்றிடக் காரணமாக இருந்தோம் என்ற தித்திப்புக் கலந்திடும் பொங்கற் புதுநாள் இந்த ஆண்டு.

'தமிழ்நாடு' - என்ற பெயர் கிடைப்பதால் கிடைத்திடும் பெருமிதம் காலமெல்லாம் நிலைத்து நிற்கும்; நமது வழிவழி வருவோருக்கெல்லாம் நம்மைப்பற்றி அறிவிக்கும்; வரலாற்றில் இடம் பெறும்; பருவமழை தவறுவதும் வறட்சி மிகுவதும்; பஞ்சநிலை தலைதூக்குவதும் என்றென்றும் இருப்பதல்ல; திங்கள் சில.

எனவேதான், தம்பி!எப்போதுமே எழுச்சியுடன் நடாத்திடும் பொங்கற் புதுநாளை இவ்வாண்டு புதியதோர் எழுச்சியுடன் கொண்டாடிடக் காரணம் இருக்கிறதுஎன்பதனை நினைவுபடுத்துகின்றேன்.

உடையார்க்கே-விழாவெல்லாம்; ஏழையர்க்கு ஏது? என்ற கேள்வியிலே தொக்கியுள்ள நியாயத்தை நான் மறுப்பவனல்ல. தமிழக முழுவதும் விழாக்கோலம் கொள்ளக்கூடிய விதமான வளம் கொழித்திட வேண்டும் என்று விரும்புகிறேன்.

மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரங்களைப் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறி வருகின்றேன்.

தமிழகத்திற்கென்று இருக்கின்றனவே தனிச்சிறப்புகள் - என் செய்வது! எப்படி மறப்பது! எப்படி மறைப்பது!

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'

'மெய்ப்பொருள் காண்பது அறிவு'

'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'

'கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு'

- இவைகளை எங்கனம் மறந்திட இயலும். வேறு எங்கும் இந்த எண்ணம் ஏற்படாத நாட்களில், இவை தமிழகத்திலே மலர்ந்தன என்ற உண்மையை எப்படி மறைக்க முடியும்! ஏன் மறைக்க வேண்டும்?

சிலர் எதிர்க் கூச்சலைக் கிளப்பியபடி இருப்பினும், இன்றையத் தமிழர், தமிழகத்தின் தனிச் சிறப்பினை பெருமளவிற்கு உணர்ந்து எழுச்சிபெற்று வருகின்றனர். தமிழகத்து வரலாற்றுத் துறையிலும், இலக்கியத் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் மேலும்மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படின் தமிழரின் தனிச் சிறப்புகள் முழுஅளவு கிடைக்கப்பெறும் என்பது மட்டும், அதனைத் தரணி அறிந்து போற்றிடத்தக்க வாய்ப்பும் மிகுந்திடும்.

இப்போதே, அமெரிக்க ஐரோப்பியப் பல்கலைக்கழகங்கள் பல, தமிழ்த் துறைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

தமிழரின் தனிச்சிறப்புகளை ஆய்ந்தறியும் ஏற்பாடு, இங்கு இன்னமும் போதுமான அளவுக்கு மேற்கொள்ளப்படவில்லை. உலகமே ஏற்றுக்கொண்ட உயர்நூலாம் திருக்குறளுக்கான ஆராய்ச்சியேகூட அல்லவா இங்கு மேற்கொள்ளப்படாமலிருந்து வந்தது.

'இதுகள்' என்ற ஏளனத்தைச் சுமந்து கொண்டிருக்கும் 'நாம்' ஆட்சி நடத்தத் தொடங்கியதன் தொடர்பாக நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டிலே திரட்டிய பணத்தில், ஒன்பது இலட்சம் வெண்பொற்காசுகளைக் கொடுத்தல்லவா மூன்று பல்கலைக்கழகங்களையும் திருக்குறள் ஆராய்ச்சியில் ஈடுபடும்படி ஊக்குவித்திருக்கிறோம்.

வேறெல்லா விழாக்களும், ''போகும் இடத்திற்காக" - பொங்கற் புதுநாள் இருக்கும் இடத்திற்காக என்பதனைத் தம்பீ! ஆண்டு பலவாக நீ எடுத்துக் கூறி வந்திருக்கின்றாய்.

துவக்கத்திலே இதுகேட்டு வெகுண்டெழுந்தோரெல்லாம் கூட, இப்போது உண்மைதானே! என்று கூறிட முன்வந்துள்ளனர். பொங்கற் புதுநாளை ஒட்டி, தம்பி! உன்னால் இயன்ற அளவுக்கு, தமிழரின் தனிச் சிறப்புகளைக் குறித்து எடுத்துரைக்கும் பணியிலே ஈடுபடக் கேட்டுக்கொள்கிறேன். நீ முயன்றால், முடியாததும் இருக்கிறதா! என்னையே முதலமைச்சர் ஆக்கிட முடிந்திருக்கிறதே உன்னால் - வேறு எதுதான் செய்திட உன்னால் முடியாது! முயன்றிடு! முனைந்திடு!

போலிப் பெருமை தேடிக்கொள்ளவோ, நாட்டின் பிறபகுதிகளைத் தரக்குறைவாகக் கருதுவதற்காகவோ அல்ல தம்பி! **தமிழகத்தின் தனிச்சிறப்புகள் பற்றி நாம் அறிந்திடவேண்டும், அகமகிழ்ந்திட வேண்டும், எழுச்சி பெற்றிடவேண்டும் என்று நான் கூறுவது, பிறபகுதிகளும், உலகின் பல்வேறு நாடுகளும் கேட்டு இன்புறத்தக்க, அறிந்து மேற்கொள்ளத்தக்க பண்பாடு நம்முடையது.**

அத்தகைய கருவூலத்தை இழந்துவிடுவது நமக்கும் நாட்டுக்கும் மட்டுமல்ல, உலகுக்கே நட்டம் என்பதாலேயே, தமிழகத்துத் தனிச்சிறப்பு இயல்புகளை நாம் நன்கு அறிந்திடவேண்டும் என்று கூறி வருகிறேன். குறுகிய மனப்பான்மை என்கின்றனர் இதனை; அவர்கள் குறைமதியாளர் என்று கூறிடத் தோன்றுகிறது, பண்பாடு அந்த உணர்ச்சியைத் தடுத்து நிறுத்துகிறது. பிளவு மனப்பான்மை என்றும்கூடக் கூறுவார் உளர்! எதனை என்று பார்த்திடும்போது சிரிப்பே வருகிறது.

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'

- என்ற பண்பாட்டினை எடுத்துக் கூறுவது, பிளவு மனப்பான்மையாமே! யாழ், காது குடைச்சலை உண்டாக்குகிறது; தேன், குமட்டலைத் தருகிறது; தென்றல் வெப்பத்தை மூட்டுகிறது என்று கூறுவதுபோல அல்லவா இருக்கிறது, தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பினை எடுத்துக் கூறுவது பிளவு மனப்பான்மையை மூட்டிவிடும் என்று கூறுவது?

வான் கோழி கண்டால் வருத்தப்படுமே என்று எண்ணி தோகையைக் கீழே உதறிப்போட்டுவிடுமா கலாப மயில்? காக்கைக்கு வருத்தமாக இருக்குமே என்பதற்காகப் பச்சைக் கிளி கருப்புப் பூச்சைத் தேடிக்கொண்டிருக்குமா? பிறநாடுகளும், நமது நாட்டின் பிற பகுதிகளும் பெற்றிராத கருத்துக் கருவூலத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது என்பதனை எடுத்துக் காட்டுவது எந்த வகையிலும் தவறு அல்ல; எத்தகைய தீமையும் தந்திடாது; எவருக்கும்.

தமிழரின் தனிச்சிறப்பினை அறிந்திடப் பயன்படும் நமது இலக்கியச் செல்வத்தை நினைவிற் கொள்ளவும், மற்றையோர்க்கு எடுத்துக்கூறவும் **பொங்கற் புதுநாள்** ஏற்றது என்பதாலேயே **பெரியோர்கள்** இதனைத் **'தமிழர் திருநாள்'** என்றழைக்கின்றனர்.

பழம்பெருமை பேசி பெருமூச்செறிந்து கொண்டே செயலற்று இருப்பதல்ல நமது குறிக்கோள்; செயலினால் பெற்றிடும் செழுமையை எடுத்துக் காட்டிடும் நன்னாளாம் பொங்கற் புதுநாளில், செயலார்வம் மிகுந்திடுவது இயல்பு, செயலும் செம்மையானதாக அமைந்திட வேண்டும், பயனும் சமூகம் முழுவதற்கும் கிடைத்திடத் தக்க முறை கண்டாக வேண்டும். வெள்ளம் அழித்திடும்; - வாய்க்கால் வளமூட்டும். செல்வம் சிலரிடம் சென்று குவித்திடுவது வெள்ளத்துக்கு ஒப்பானது; அது கொண்டவனையும் அழித்திடும், சமூகத்தில் வலிவற்றோரையும் அழித்திடும். எனவேதான் - சிந்தனையாளர், செல்வம் பெருக்கிட வேண்டும்.

அஃது முடக்கப்படாமல் சமூகம் முழுவதிற்கும் பயன் அளிக்கக்கூடிய வழிமுறை கண்டாக வேண்டும் என்று எடுத்துக் கூறினர். ' நமது அரசு கூட அந்தச் சமதர்ம இலட்சியத்தைப் போற்றுகிறது.

ஆண்டவனே! ஏனோ எனக்கு இந்தச் சோதனை; இத்துணை வேதனை என்று ஏழை இறைஞ்சுகிறான். செல்வவன், ஆண்டவன் அருளால் நான் பெருநிதி பெற்றேன். இதனைக் குறை கூறுவது தர்மமா? என்று நியாயம் பேசுகிறான்.

மொரேவியா நாட்டில்- 'பணம் பெட்டியில் தூங்குகிறது; பணக்காரன் பட்டு மெத்தையில் தூங்குகிறான்; ஆண்டவன் சொர்க்கத்தில் தூங்குகிறார்; இல்லாவிடில் தெருவில் ஏன் இத்தனைப் பிச்சைக்காரர்கள்?' என்றோர் பழமொழி உண்டு.

இந்த நிலை கண்டு மனம் வெதும்பிய நிலையில், பொங்கலாம் பொங்கல்! யாருக்கு? ஏழைக்கு ஏது அந்த இன்பம்? - என்று நமது இளங்கவிஞர்கள் கேட்கின்றனர். அந்தக் கேள்வியிலே உருக்கமும் இருக்கிறது உண்மையும் இருக்கிறது.

இந்த நிலையைக்கண்டு மனம் வெதும்பி, கவிஞர் இராஜேந்திரன்,

'தைத்திங்கள் வருகின்ற பொங்கல் நாளில்
தங்கத்தைச் சுமக்கின்ற மகளிர் ஆக்கும்
நெய்ப்பொங்கல் சுவைத்துண்டு மகிழ்ச்சி கொள்வர்
நிதிபடைத்த சீமான்கள்; என்றும் எங்கள்
கைதொட்டு வாய்பட்ட துண்டோ பொங்கல்
கண்மட்டும் ஓயாமல் பொங்கும்! பொங்கும்!
தெய்வங்கள் திருநாட்கள் எங்கட்கு இல்லை
தெருவோரச்
சாக்கடையில் வருமா
தெப்பம்?'

- என்று கேட்டிருக்கிறார். மிகைப்படுத்திக் கூறுகிறார் என்று எவரும் கூறிடார்! ஏழ்மை நெளிகிறது! அதிலும் வளம் பெற்றளிக்கும் பாட்டாளிகளிடம்! இது நீதியல்ல; தமிழர் நெறியுமாகாது. இந்நிலை மாறிட, எல்லோர்க்கும் வாழ்வில் இன்பம் கிடைத்திட நாம் ஒவ்வொருவரும் தத்தமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பிற்கு ஏற்ற முறையில் பணியாற்றிட வேண்டும். தமிழர் திருநாளில் தமிழர் அனைவரும் களிப்புடன் கலந்துகொள்ளத் தக்கதான சமுதாய அமைப்பு முறை காணப் பாடுபட்டாக வேண்டும். உவகை தந்திடும் இந்நாளில் இதற்கான உறுதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால் தம்பி! மனம் வெதும்பி இதுபற்றிக் கூறிய கவிஞரே, பிறகோர் இடத்தில்,

'தைத்திருநாள் வருகைபார் தம்பி! வெல்லத்-
தமிழ்உள்ளம் தனில்இன்ப வெள்ளம் சேர்க்கும்
மெய்த்திருநாள் மேன்மைபார்! அறிவை வாட்டி
மெலியவைக்கும் தேவையற்ற பண்டிகைகள்
பொய்த்தினிமேல் போய்விடும்பார் வானில் பாயும்
புலிச்சின்னப் புகழ்மன்னன் கரிகாலன் றன்
கைத்திருவாள் வெளிச்சம்போல் மின்னுகின்ற
கதிர்மணியின் குவியல்பார்! கரும்பைப் பார்!..'

- என்று எழுச்சியுடன் பாடுகிறார். தமிழ் கற்றுணர்ந்தவர்கள் அனைவருமே இதுபோலத் தான்; சமூகத்தில் மூட்டிவிடப் பட்டுள்ள கேடுகளைக் கண்டு மனம் வெதும்பினாலும், **பொங்கற் புதுநாளை மட்டும் 'தமிழர் தமது திருநாளாகக் கொள்ள வேண்டும்'** என்பதனை எடுத்துரைத்து வருகின்றனர்; காரணம் மற்றைய பல விழாக்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.

நாம் வந்த வழி அது.

இங்கு துன்பம், அங்கு இன்பம் கிட்டும்.

என்ற எண்ணங்களுக்கு முதலிடம் தருவன. தமிழர் திருநாளாம் பொங்கற்புதுநாள் தனித்தன்மை பெற்றது.

உழைப்பே செல்வம்
உழைப்பே உயர்வு
உழைப்பின்றி உலகு இல்லை

என்பன போன்ற நற்கருத்துக்களைத் தருவதாக அமைந்திருக்கின்றது.

தம்பி! சீமான் மகன் கொண்டாடும் விழா அல்ல பொங்கற் புதுநாள். சமூகத்தின் கோணங்களை நிமிர்த்தியாகவேண்டும் என்ற குறிக்கோள் கொண்ட உன் போன்றாருக்கென்றே அமைந்துள்ள விழாவாகும்.

கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் தக்க முறையிலே பயன்படுத்தினால், சமூகத்தை நிச்சயமாகத் திருத்தி அமைத்திடலாம்.

காலத்தை வீணாக்காமல், சமூகத் தொண்டாற்ற ஓர் துடிப்பு உனக்கு உண்டு என்பதனை உணர்ந்த உன் அண்ணன் இன்று உனக்குக் கனிவு நிரம்பிடும் வாழ்த்தினை அளிப்பதுடன், உன் இல்லதுள்ளார் யாவருக்கும் வாழ்த்துக் கூறுவதுடன், நாடு வளம் பெற, சமூகம் சீர்பெற, சமதர்மம் மலர்ந்திடப் பாடுபடுவதற்கான உறுதியினை இன்று பெற்றிடுக என்றும் கூற விரும்புகிறேன்.

ஒரு நிமிடம் கூட வீணாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் கூறுவதற்குக் காரணம் தம்பி! எங்கே படித்ததாக நினைவு, ஒரு நிமிடத்தில், விண்ணிலிருந்து 6000 விண்கற்கள் விழுகின்றன; பூமி தன்னைத்தானே 950 மைல் வேகத்தில் சுற்றுகிறது; 100 பேர் இறந்துபடுகின்றனர்; 114 குழந்தைகள் பிறக்கின்றன. 34 திருமணங்கள், 16 விவாக விடுதலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. 68 மோட்டார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதாக.

காலம் அத்துணை மதிப்புவாய்ந்தது. கடமை உணர்ந்த நீ, காலத்தையே கனியச்செய்திடும் ஆற்றல் பெற்ற நீ, உன் கடமையைச் செய்வதிலே கண்ணுங் கருத்துமாக இருப்பாய் என்பதனை நான் நன்கு அறிவேன். எனினும் அண்ணன் என்ற உரிமையுடன் உனக்கு அந்தக் கடமையை நினைவுபடுத்துவது எனக்கோர் மகிழ்ச்சி தந்திடுவது போல உனக்கும் மகிழ்ச்சி தந்திடும் என்பதிலே ஐயப்பாடு இல்லை.

என்னைப் பொறுத்த மட்டிலே தம்பி! நலிவைத் தாங்கிக்கொண்டபடி என்னால் இயன்றதைச் செய்துகொண்டு வருகின்றேன். **உண்மைதான்! வலி இருக்கத்தான் செய்கிறது - ஆனால் தம்பிக்கல்லவா** கடிதம் எழுதுகிறேன்; அது தனியானதோர் சுவையைத் தருகிறது. **மகிழ்ந்திரு! விழா நடத்திடு! வேலை மிகுதி இருக்கிறது என்ற நினைவுடன்.**

(பேரறிஞர் அண்ணா அவர்கள்
1969 'காஞ்சி' பொங்கல் மலரில் எழுதிய கடைசிக்
கடிதத்திலிருந்து, சில அரிய பகுதிகள்
தொகுத்துத் தரப்பட்டுள்ளன.)

தைப்பாவை

கவியரசர் கண்ணதாசன்

எந்தமிழர் கோட்டத் திருப்பார் உயிர்வளர
எந்தமிழர் உள்ளத் தினிமைப் பொருள்மலர

எந்தமிழர் கைவேல் இடுவெங் களஞ்சிவக்க
எந்தமிழர் நாவாழ் இளமைத் தமிழ்செழிக்க

எந்தமிழர் இல்லத் திலங்கும் ஒளிவிளங்க
முந்துதமிழ்ப் பாவாய் முன்னேற்றம் தான்தருவாய்!

தந்தருள்வாய் பாவாய் தைவடிவத் திருப்பாவாய்!
வந்தருள்வாய்! கண்ணால் வாழ்த்துரைப்பாய் தைப்பாவாய்!

எங்கள் சமுதாயம் ஏழா யிரமாண்டு
திங்கள்போல் வாழ்ந்து செங்கதிர்போல் ஒளிவீசும்!

மங்காத போர்க்களத்தும் மாளாத வீரர்படை
கங்குல் அகமென்றும் காலைப் புறமென்றும்

பொங்கி விளையாடிப் புகழேட்டில் குடியேறி
தங்கி நிலைத்துத் தழைத்திருக்கும் காட்சியினைக்

கண்காண வந்த கலைவடிவே நித்திலமே!
பொங்கற்பால் பொங்கிப் பூவுதிர்ப்பாய் தைப்பாவாய்!



வேழமே, உனக்கொரு வினா?

– கவிஞர் மதிவண்ணன்

(தமிழ்நாடு அரசின் 1997க்கான 'பாரதியார் விருது' பெற்றவர்)

கரியபெரும் பாறையொன்று கால்கள் பெற்றுக்
கண்முன்னே தோன்றுதல்போல் அசைந் தசைந்து
வருகின்ற சதைமலையே! தொங்கும் கையை
வாகாக நீவளைத்து நெற்றி வைத்தால்
ஒருபெரிய வினாக்குறியின் வடிவம் தோன்றும்!
உவகையுடன் 'இனிக்கின்ற மூங்கில்' என்னும்
கரும்பை நீ துதிக்கையால் வாங்கி, சின்னக்
கடலையைப்போல் உண்கையிலோ வியப்புத் தோன்றும்!

சேம்பின்இலை சிறுகாற்றில் ஆடு தல்போல்
செவியிரண்டு! எறும்பளவில் உனக்குக் கண்கள்!
ஆம்! உன்றன் கம்பீர உருவிற் கேற்ப
அமைய வில்லை விழி; எனினும் அழகாய் உள்ளாய்!
காம்புவிட்டுக் காய்பறிக்கும் என்கை! உன்றன்
கைவலிமை மரத்தினையே பறித்து வைக்கும்!
வீம்புக்குச் சொல்லவில்லை! சைவம் உண்ணும்
விலங்கதனால் ஆற்றலிலும் விளங்கு கின்றாய்!

இலங்குகின்ற அஃறிணைக்குள் எழில்ஆண் பால்தான்!
இனிக்கின்ற கனற்கொண்டை பெட்டைக் கில்லை!
விளங்குகின்ற தோகை,பெண் மயிலுக் கில்லை!
வீணைஇசைத் தேன்குரல், பெண் குயிலுக் கில்லை!
அலங்காரப் பிறைவளைவாய் வெண்மைத் தந்தம்
ஆண்யானை உன்றனுக்கே உண்டு! மாறித்
தலைகீழாய் உயர்திணையில் தாழ்ந்தோம் ஆண்கள்!
தனிக்கவர்ச்சிப் பெண்கள்தான் அழகில் தேன்கள்!

கடலழகும், நிலவழகும் பார்க்கப் பார்க்கக்
கண்களுக்குக் களிப்பூட்டும் விதம்போல் உன்றன்
உடலழகும், நடையழகும் உண்டே! ஓசை
உனக்கும்முன் ஊர்க்குவரும்! யானையே என்
அடையாளம் தெரிகிறதா? நினைவாற் றல்தான்
அதிகமுண்டே உன்றனுக்கு! அல்லிக் கேணி
நடைபோட்ட பாரதியின் பேரன் நான்தான்!
நட்புகொள்ள விரும்புகிறேன்! நம்ப லாமா?

மருத்துவத் துறையின் சாதனைகள்

பொதுச் சுகாதாரம்:

- கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளை விரிவாக்கும் வகையில் புதியதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.14.94 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கட்டடப்பணிகள் நடைபெறுகின்றன.
- மேலும் மருத்துவமனைக் கட்டடங்களைப் பராமரிக்கவும், துப்புரவாக வைத்துக்கொள்ளும் பொருட்டும், கடந்த 2 ஆண்டுகளில் ரூ.14 கோடி அரசு ஒதுக்கீட்டில், மருத்துவமனைகள் பராமரிக்கப்பட்டு அவைகளின் தரம் உயர்த்தப்படுகின்றன.
- மேலும் மொத்தத் தொகையாக ரூ.250 இலட்சங்கள் மருத்துவமனை மேம்பாட்டிற்காகக் குறிப்பாக வெளிநோயாளிகள் பிரிவு, அறுவைசிகிச்சை அரங்குப் பிரிவுகள் போன்றவற்றிற்காக நடப்பு நிதி ஆண்டில் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.
- காச நோய் தடுப்புப் பணிகளுக்காகச் சிறப்புத் தொகையாக ரூ.424 இலட்சங்களை அரசு ஒதுக்கீடு செய்து அதில் 11 மாவட்ட காசநோய்த் தடுப்பு மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.330 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- இதய நோய்ச் சிகிச்சை கிராமங்களுக்கும் எட்டிடும் வகையில், 6 தாலுக்கா மருத்துவமனைகளில் இருதய சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் உள்ள எல்லா அரசு மருத்துவமனைகளிலும் ஆம்புலன்ஸ் வாகன வசதிகளை உருவாக்கிட முடிவெடுத்து இந்த நிதியாண்டில் ரூ.445.00 இலட்சம் செலவில் 127 புதிய ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்கப்பட்டு மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.
- நோயாளிகளுக்கு நவீன முறையிலும் விரைவிலும் நோய் ஆய்வுப் பரிசோதனை செய்யும் பொருட்டு 38 மருத்துவமனைகளுக்கு ரூ.92.50 இலட்சம் செலவில் Semi Auto Analyser என்ற நவீன உபகரணங்கள் இந்த நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளன.
- 600 மருத்துவப் பட்டதாரிகள், அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- திருச்சியில், கி.ஆ.பெ.விசுவநாதம் பெயரில் புதிய மருத்துவக்கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது; அடுத்த ஆண்டு மேலும் 4 புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படவுள்ளன.
- பயிற்சி மருத்துவர்கள், மருத்துவப்பட்ட மற்றும் பட்டய மேற்படிப்பு மாணவர்கள் - மாத உதவித்தொகையை உயர்த்தியும், அரசுப்பணியில் இருந்து கொண்டே மேற்படிப்புப் பயில்பவர்களுக்கு அகவிலைப்படியுடன் முழுமாதச் சம்பளத்தையும் வழங்கிடவும், ஆக ரூ.6.34 கோடி நிதி ஒதுக்கி **முதலமைச்சர் கலைஞர்** ஆணையிட்டுள்ளார்.
- மருத்துவக்கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மருத்துவமனைகளுக்கு ரூ.20 கோடியில் புதிய கருவிகள் - உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.
- ஊரகப்பகுதியிலுள்ள 100 ஆரம்பச் சுகாதார நிலையங்களை பெரிய தொழிற்சாலைகள் தத்தெடுத்துக் கொண்டு இக்கிராமப்புற மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்திடும் புதிய திட்டம் - இந்தியாவுக்கே வழிகாட்டும் புதுமைத் திட்டத்தை **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார்.

- 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.18 கோடியில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும், ரூ.31.68 கோடி செலவில் 352 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.
- கடந்த 1½ ஆண்டுகளில், கிராமப்புற மக்களுக்கு அவசர சிகிச்சை கிட்டிடும் வகையில் **கலைஞரின்** ஆணையால் 250 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்படுகின்றன. அடுத்து வரும் ஆண்டுகளில் தமிழகத்திலுள்ள அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் செயல்படுமெனக் **கலைஞர்** அறிவித்துள்ளார்.
- வட்டார சுகாதார நிலையங்களுக்கு இவ்விரண்டு நிதி ஆண்டுகளில் ரூ.8.34 கோடி செலவில் 224 அவசர ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.
- இவை தவிர்த்து, சித்த, ஆயுர்வேத, யுனானி, ஓமியோபதி, இயற்கை வைத்தியம் - யோகா போன்ற பிரிவுகளின், கல்வி வசதி, மருத்துவ வசதி உருவாக்கத்திற்கென கடந்த 2 நிதியாண்டுகளில் ரூ.31 கோடி செலவிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
- பாரம்பரியச் சித்த மருத்துவர்களது ஓய்வூதியத்தை ரூ.150லிருந்து ரூ.500 ஆக உயர்த்தி வழங்கிடக் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.
- பிறப்பு விகிதத்தைக் குறைக்கவும், பிறந்த குழந்தைகளைப் பேணுவதுமாகிய, குடும்பநலத் திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ.70.76 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பூவைமேல் எத்தனை பூ

முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்

மகளிர் அழகை இலக்கியங்கள் அழகுறப் பேசுகின்றன. பெண்ணழகைப் பாடாத கவிஞரே இல்லை எனலாம். பெண்டிரை வெறுத்துப் பாடியவர்கள் கூட, அவர்களுடைய அழகை விரிவாக எடுத்துரைத்து, இப்படிப்பட்ட அழகில் மயங்காதிருக்க வேண்டும் எனச் சொல்லும் வகையில் பெண்ணழகைச் சிறப்பிக்க மறந்ததில்லை. பெண்டிரின் அடி முதல் முடி வரையிலான அழகை விவரித்துக் கூறும் பாடல்கள் பல உண்டு. மங்கையின் முகத்தை நிலவாகவும் கையைத் தாமரையாகவும் கற்பனை செய்து பாடுவதுண்டு. மலர் தொடுத்துக் கொண்டிருந்த மணிமேகலை தன் தந்தைக்கு நேர்ந்த துயர் கேட்டுக் கண்ணீர் வடிக்கிறாள். அவள் தாய் மாதவி தன் அழகான கைகளை மணிமேகலையின் முகத்தில் வைத்துக் கண்ணீரைத் துடைத்துவிடுகிறாள். மாதவியின் கை, மணிமேகலையின் முகத்தில் சேர்ந்த தோற்றம், செந்தாமரை மலர் ஒன்று குளிர்ந்த நிலவைச் சேர்ந்தது போல இருந்ததெனப் பாடுகிறார் **கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.**

'மாதவி மணிமே கலைமுகம் நோக்கித்
தாமரை தண்மதி சேர்ந்தது போலக்
காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றி'

- என்பன அக்காட்சியைக் கூறும் பாடல் அடிகள். மணிமேகலையின் முகம் மதியாகவும், மாதவியின் கை தாமரையாகவும் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

அழகிய முகம் வேண்டுமென்று ஆசைப்படாதவர் உண்டா? 'எழிலார்ந்த முகம் ஒரு சிறந்த பரிந்துரைக் கடிதம் (A good face is the best letter of recommendation) என்றார், இங்கிலாந்து நாட்டு அரசி முதலாம் எலிசபெத். ஒளி பொருந்திய முகத்தினை எல்லோரும் விரும்புவர். அதனால்தான் நகைமுகம், வான்முகம், திருமுகம் என்றெல்லாம் அடைமொழி கொடுத்து அழைக்கப்படுகின்றன.

குளிர் பொங்கும் நிலவைக் காணும் ஒருவன் அதனைத் தன் காதலியின் முகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறான். வானத்திலுள்ள மீன்களெல்லாம் அங்குமிங்குமாக அலைகின்றனவாம்! "நிலவொடு இருக்கும் அம் மீன்கள் வானத்திலுள்ளதா அல்லது இந்த முகமா? இவற்றுள் எது நிலவு என்று தெரியாமல் மயங்கி அங்கும் இங்கும் ஓடி அலைந்து பார்த்து மயங்குகின்றன" எனத் தன் காதலியின் முகம் நிலவைப் போல் இருப்பதாகப் புகழ்கிறான் அக் காதலன். இதனை,

'மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்'

- எனக் குறள் குறிப்பிடுகின்றது. அக் காதலன் மேலும் கூறுகிறான்: "முகமா நிலவா என்றறிய மீன்கள் இவ்வளவு கலங்க வேண்டியதில்லையே! நிலாவுக்குக் களங்கம் (மறு) உண்டு; என் காதலியின் முகத்தில் களங்கம் ஏது? இந்த வேறுபாட்டைக் கொண்டு எது நிலவு, எது முகம் என எளிதில் கண்டிருக்கலாமே?" என்கிறான். முதலில் தன் காதலியின் முகம் நிலவைப் போன்றது என்று சொன்னவன், பின்னர் முகம் நிலவைவிடச் சிறந்தது என்றும் பாராட்டுகிறான்.

நிலவை முகத்துக்கும் கையைத் தாமரைக்கும் ஒப்பிடுகின்ற இந்த இரண்டையும் இணைத்து ஒரு புலவர் அருமையானதொரு கற்பனையை உருவாக்குகிறார். பெண் ஒருத்தி மலர்வனம் சென்றாள். அங்கே வண்டு ஒன்று தரையில் கிடந்தது. அதை எடுத்துக் கையில் வைத்தாள். வண்டு உடனே பறந்துவிட்டது. நிகழ்ச்சி இவ்வளவுதான். அதைப் புலவர் எப்படிப் பாடுகிறார் தெரியுமா? பெண் ஏன் வண்டினைக் கையில் எடுத்தாள் என்ற வினாவை எழுப்பிக் கொள்கிறார். அவ்வண்டு உருண்டையானது; கறுப்பு நிறமுடையது; மினுமினுப்பது. ஆகவே அது நாவற் பழமோ எனும் மயக்கத்தால் மங்கை அதனைக் கையில் எடுத்தாளாம்! கைக்கு வந்த வண்டுக்கு ஒரு மயக்கம்! அது கையைக் கை என்று நினைக்கவில்லை. கையின் சிவந்த நிறத்தையும் மென்மைத் தன்மையும் கண்டு, அதனைத் தாமரைப் பூவோ என்று எண்ணிவிட்டது! பூவைக் கண்டால் வண்டு விடுமா? தேன இருக்கிறதா எனத் துழாவிப் பார்க்கிறது. பூவாக இருந்தால்தானே தேன் இருப்பதற்கு? கையில் ஏது தேன்? தேனில்லாத தாமரையாக இருக்கிறதே; என்ன புதுமை இது என மேலே அண்ணாந்து பார்த்தது. மங்கையின் முகம் தெரிந்தது.

வண்டுக்கு மீண்டும் மயக்கம். முகத்தை முகம் என நினையாமல் அதனை முழு நிலா எனக் கருதிவிட்டது! உடனே அதற்கு அச்சம். "நாம் இருக்கிறோம் தாமரைப் பூவிலே; அதோ விண்ணிலே நிலவு தோன்றி விட்டது; நிலா தோன்றினால்

தாமரை மூடிக் கொள்ளுமே! தாமரை மூடிக் கொண்டால் விடியும் வரை நாம் இதற்குள் சிறைப்பட்டல்லவா கிடக்க வேண்டும்; வேண்டாம் இந்தத் துன்பம்; உடனே நாம் இதனை விட்டு அகன்றுவிடுவோம்" என வேகமாகப் பறந்து விட்டதாம்! இவ்வருமையான கற்பனையை உள்ளடக்கிய பாடல் இதோ:

'நாவலங் கனி என்று எண்ணி
நங்கைதன் கையிற் கொண்டாள்;
மேவிய வண்டோ, கையைக்
கமலம் என்றுஉண்ண, மங்கை
ஆவலோடு அதனைக் காண,
அவள்முகம் மதிஎன்று அஞ்சிப்
பூஇனிக் குவியும் என்றே
பொள்ளெனப் பறந்தது அம்மா !'

வண்டு பறந்ததற்கான காரணத்தைக் கற்பனை நயம் மிளிரச் சொல்லுகின்றது இப்பாடல். இது கவிஞனின் அழகியல் பார்வை.

இவ்வாறே பெண்களின் உறுப்புகளையெல்லாம் அழகியல் நோக்கில் பாடுகின்ற பாக்கள் தமிழில் ஆயிரமாயிரம் உண்டு.

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்' என்கிறது குறுந்தொகை. காந்தள் மலரின் இதழ்கள் போன்ற அமைப்பும் மென்மையும் கொண்டுள்ளமையால் கைக்குக் காந்தள் மலர் உவமையாகக் கூறப்படுகிறது.

குவளை மலரைப் பெண்ணின் கண்ணுக்கு உவமையாகக் கூறுவர். குவளை மலர் நேரே விண்ணை நோக்கிப் பூக்கும் இயல்புடையது. குவளையைக் காணும் ஒரு காதலன் கூறுகிறான், "இந்த மலர் இன்னும் என் காதலியைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் அவளுடைய கண்களைப்போல நாம் அழகாக இல்லையே என்பதைத் தெரிந்து வெட்கத்தால் தலை குனிந்து கீழ் நோக்கியல்லவா பார்த்துக் கொண்டிருக்கும்" என்கிறான்.

'காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாண்இழை கண்ஒவ்வேம் என்று'

குவளை மலர் கண்ணுக்கு ஈடாகாது என்பதைத் திருக்குறள் இவ்வாறு குறிப்பிடுகிறது.



பெண்களின் மூக்கு எள் பூவைப் போன்றது என்று சிறப்பிப்பர்.

'எள்ளிளஞ் சிறிய பூவை
எடுத்துவைத் திட்ட மூக்கு'

- என்று பாடுகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

வள்ளைப் பூங்கொடி வளைந்து நீண்டு வளருமாதலின் இதனை மகளிரின் காதுக்கு உவமையாகக் கூறுவதுண்டு.

மகளிரின் வெள்ளிய கூர்மையான பற்களுக்கு முல்லை மலர் உவமையாகிறது. 'துளசிக்கு மணமும் முல்லைக்குக் கூர்மையும் முளைக்கும் போதே தெரியும்' என்பது நாட்டுப்புற மொழி. 'முல்லைச் சிரிப்பாலே என் மூர்க்கம் தவிர்த்திடுவாய்' என்பார் பாரதியார்.

மென்மையாலும் சிவப்புத் தன்மையாலும் மகளிரின் உதட்டிற்கு இலவ மலரின் இதழ் உவமையாக்கப்படுகிறது. 'இலவு இதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்' என்பது சங்கப்பாடல்.

வடிவாலும் வண்ணத்தாலும் ஒத்திருப்பதால் மகளிரின் மூக்கைக் குமிழ மலர் என்பர். இரண்டு கண்களுக்கும் இடையே மூக்கு இருக்கும் தன்மையை,

'இருகருங் கயலோடு இடைக்குமிழ் எழுதி'

- என்பார் இளங்கோவடிகள்.

கோங்கு, மலைப்பாங்கில் வளரும் ஒரு மரம். இதன் பொன்னிற அழகிய மொக்கினை மகளிரின் கொங்கைக்கு ஒப்பாகக் கூறுவர்.

'விரிந்த கோங்கின் முகைவனப்பு ஏந்திய
முற்றா இளமுலை'

- எனப் புறநானூறு குறிப்பிடுகிறது.

முருக்க மலர் பிறைவடிவில் சிவந்திருப்பதைக் காணுகின்ற புலவர் அதனைச் சிவப்பு நிறம் ஊட்டிய மகளிரின் கைந்நகம் போன்றிருப்பதாகக் கூறுகிறார்.

இளம் மங்கையர்க்கு இன்பப் பூரிப்பால் மார்பிடங்களில் படரும் தேமலுக்கு வேங்கைப்பூ உவமையாகக் கூறப்படுகிறது. காதலன் பிரிவால் காதலிக்குத் தோன்றும் நிறவேறுபாடு பசலை எனப்படும்; அது பீர்க்கம் பூப்போலத் தோன்றும் என்பர்.

முகமும் சிவந்த அடிகளும் தாமரை மலரை ஒத்தன என்பதைக் கூறாத புலவரே இல்லை.

மென்மையான அனிச்ச மலரை விடப் பெண் மென்மையுடையவள் எனப் பெண்ணின் மென்மையைத் திருக்குறள் குறிப்பிடுகிறது.

இவ்வாறாக, காந்தள், குவளை, தாமரை, எள், முல்லை, இலவம், குமிழம், கோங்கம், வள்ளை, முருக்கு, வேங்கை, பீர்க்கு, அனிச்சம் ஆகிய இத்தனைப் பூக்களையும் பெண்களுடைய உறுப்புகளோடு ஒப்பிட்டுக் கூறமுடிகிறது. பூவைப்போல் இருத்தலால்தான் மகளிர் பூவையர் என்று அழைக்கப்படுகின்றனர்.

ஒரு பூவைமேல்தான் எத்தனை பூ?

பெண் ஒருத்தி மலர்கொய்ய வனம் செல்கிறாள். அதைப் பார்க்கும் ஒரு புலவர் "எல்லாப் பூக்களும்தான் உன்னிடமே பூத்துள்ளனவே; அப்படியிருக்க நீ ஏன் கால் நோவ நடந்து சென்று வனத்தில் பறிக்கவேண்டும்?" என்று கேட்கிறார்.

இத்துணை அழகாகப் பாடியிருப்பினும் இன்றைய சமூக நிலையில் பாடலில் கூறப்பட்டுள்ள அளவுக்கு வளப்பமும் வனப்பும் பெற்றுமா பெண்கள் திகழ்கிறார்கள்? வாழ்க்கை வளமாக இருந்தால்தானே இந்த வனப்பு?

கவியரசு கண்ணதாசன் தன் 'தென்றல்' இதழில் வெண்பாப் போட்டி ஒன்றை நடத்திவந்தார். ஒரு முறை 'பூவை மேல் எத்தனை பூ' (பெண்ணின் மேல் எத்தனை பூ) எனும் ஈற்றடியைத் தந்து கவிதை எழுதுமாறு கேட்டிருந்தார். பலரும், 'பெண்ணே! உன் மேலேயே அத்துணை பூக்களும் இருக்கின்றனவே' என்ற வகையில்தான் எழுதியிருந்தனர். ஒருவர் எழுதினார்: 'சமூகத்தில் எல்லாப் பெண்களும் பூச்சூடிப் பூரிப்புடன் வாழும் வாழ்க்கையா இருக்கிறது?'

'அவள் கூந்தலிலே தேய்த்துக்கொள்ள அவளிடம் எண்ணெய் சிறிதுமில்லை; எண்ணெய் கிடைத்துத் தேய்த்துக் கொண்டாலும் கூந்தலை வாரிவிட்டுக் கொள்ளச் சீப்பு இல்லை; வாரி முடித்துக் கொண்டாலும் வைத்துக்கொள்ள ஒரு சாண் பூ வாங்க வழி இல்லை; வறுமை வாட்டியெடுக்கத் தேய்ந்து துரும்பாகிச் சாகிறாள்! செத்த அவளைப் பாடையிலே சுமந்து போகும் போது அவள் உடலின் மேல் பூக்களைப் போடுகிறார்களே! உயிரோடு வாழும்போது ஒரு சாண் பூவுக்கு வழியற்று வாழ்வை முடித்துக் கொண்டபின் சுடுகாட்டுக்குச் செல்லும் போது பூவா? இது என்ன சமூகக்கொடுமை!'- எனக் குமுறி எழுதுகிறார்:

'எண்ணெய்இலை ஏற்றபூச் சூடவகை ஏதுமிலை
பெண்கூந்தல் இந்நிலையில் பேன்பிடிக்க - மண்மீதில்
சாவை அவள்அண்டிச் சாய்ந்துவிட்டாள் பின்அந்தப்
பூவைமேல் எத்தனை பூ !'

இலக்கியம் காட்டும் இன்ப வளப்பம், வாழ்க்கை நடைமுறையில் இல்லை. இலக்கியம் வேறு வாழ்க்கை வேறாக உள்ளது. இலக்கியங்களில் காணுமாறு வாழ்க்கையை இன்பமுள்ளதாக ஆக்க வேண்டுமென்னும் எண்ணத்தைத் தூண்டும் வகையில் இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டும். இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியில்லாமல் செய்வதே நம் கடமையாக வேண்டும்.

✿ ✿ ✿

உழுவோர் உயர்க !

கவிஞர் முடியரசன்

மலர்தனில் பனிநீர் குந்தும் - அது
மனமகிழ் அழகினைச் சிந்தும்!
உயரிய விழிநீர் சிந்தின் - என்
உளமோ கடல்எனப் பொங்கும்!

விரித்திடும் தோகைக் கண்கள் - காணின்
விளைத்திடும் என்மனம் பண்கள்!
தரித்திடும் ஆடையில் கண்கள் - காணின்
தலைக்கொளும் ஆயிரம் புண்கள்!

முழுமதி வடிவம் குறையும் - அது
மூன்றாம் பிறையாய் மறையும்!
உழுபவன் வடிவம் குறையின் - என்
உள்ளம் கனலாய்ப் புகையும்!

பசியும் நலிவும் மிகுத்தால் - மனம்
பாயும் புலியாய்ச் செருக்கும்!
இசையா உலகம் படைப்பின் - இதை
எப்படி என்மனம் பொறுக்கும்?

முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து முதலமைச்சர் கலைஞரின்

மனிதநேய உதவிகள்

ஆட்சிப் பொறுப்பேற்ற
இந்த
ஒன்றரையாண்டு
காலத்தில்
ஏழை எளியோர்க்கு...
இயற்கைச் சீற்றத்தால்
பாதிக்கப்பட்டோருக்கு...
நோய்க்கொடுமை
போன்றவற்றால்
நலிவுற்றோருக்கு
ஆற்றிய உதவிகள்
அளவற்றவை; அவற்றுள் சில

- ★ மூவலூர் மூதாட்டியார் இராமிர்தத்தம்மையார் நினைவு ஏழைப்பெண்கள் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.10,000 வழங்கும் திட்டத்திற்கென முதலமைச்சர் கலைஞரின் வேண்டுகோளிற்கிணங்க இதுவரை வந்து குவிந்துள்ள நிதி உதவி ரூ.5 கோடியே, 19 இலட்சத்து 12 ஆயிரத்து 9 ஆகும்.
- ★ கடந்த 1½ ஆண்டுகளில் ஏழை, எளியவரின் உயிர்காக்கும் அறுவைச் சிகிச்சைக்கென முதலமைச்சர் கலைஞரால் அருட்கொடையாக வழங்கப்பட்ட தொகை 3 கோடியே 8 இலட்சத்து 22 ஆயிரத்து 160 ரூபாய்; பயனடைந்தோரின் எண்ணிக்கை 1935 ஆகும். விபத்தில் இறந்தோர் மற்றும் காயமுற்றோர் நிவாரணமாக 349 பேருக்கு ரூ.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ இயற்கைச் சீற்றங்களின் போது சிறப்பின நிவாரணமாகவும், மனிதாபிமான அடிப்படையில் கடந்த ஆண்டில் ஆந்திரா, பாண்டிச்சேரி மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நிவாரண உதவிகளாகவும், பாரதப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியின் கீழும் வழங்கப்பட்ட தொகை ரூ.2.47 கோடியாகும்.
- ★ சாதிக்கலவரத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும், காவல் நிலையப் பாதுகாப்பில் இறந்தோர் குடும்பங்களுக்கும் நிவாரண உதவிகளாக 3,286 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.90.6 இலட்சம், மீனவர்களுக்கு ஆபத்து நிவாரணமாக 2.91 இலட்சம்,பயனாளிகளுக்கு ரூ.43.53 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ மூடப்பட்ட தொழிற்சாலைகளால்,வேலையின்றி அல்லலுறும் ஆலைத் தொழிலாளிகள் 36,500 பேருக்கு ரூ.2.14 கோடி கருணைத் தொகையாக வழங்கப்பட்டது.
- ★ அடையாறு புற்று நோய் நிலையத்தில், ஏழைகளின் இலவச சிகிச்சைக்கு ரூ.7½ இலட்சமும், மானியமாகவும், இளங்குழந்தைகள் இதய அறுவை சிகிச்சைக்கு, மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு ரூ.37 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

- ★ முன்னாள் முதலமைச்சர் பக்தவச்சலத்தின் உதவியாளராக அவருடனேயே கடைசிவரை பணியாற்றி வந்த திரு. பாலு அவர்களுக்கு, மனிதாபிமான அடிப்படையில், அவருக்கு 3½ இலட்சத்தில் இலவசமாக இல்லம் அளிக்கப்பட்டுள்ளது.
- ★ பெங்களூரில் இந்திரா காந்தி இண்டர் நேஷ்னல் பள்ளியில் இலங்கைத் தமிழ்ச் சிறார் பராமரிப்பிற்கு ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.
- ★ தீ விபத்தால் பாதிக்கப்பட்ட 3,000 குடும்பங்களுக்குத் தீப்பிடிக்காத கூரைகள் அமைக்க ரூ.1.65 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- ★ காட்டங்குளத்தூர் சிவானந்த குருகுலத்தில் உள்ள அனாதைச் சிறுவர்கள் பராமரிப்பிற்கு ரூ.298 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- ★ தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகத்தின் போது ஏற்பட்ட தீ விபத்தில் இறந்தோர் குடும்பம் மற்றும் காயமுற்றோர்களுக்கு நிவாரணமாகவும், கோவில் சிதிலத்தைச் செப்பனிடவும் ரூ.71.43 இலட்சம் வழங்கப்பட்டது.
- ★ இவை தவிர்த்து பிற நிதியுதவிகளாக ரூ.12.65 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

9-வது ஐந்தாண்டுத் திட்டம்:

- ★ தமிழ்நாட்டிற்கான ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு குறித்து **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் டெல்லி சென்று திட்டக்குழுத் துணைத்தலைவரிடம் நேரடியாக விவாதித்ததின் விளைவாக 1996-97ஆம் ஆண்டின் 'விலைவாசிப்படி அடிப்படையில்' ரூ.25,000 கோடி என உறுதி செய்யப்பட்டுள்ளது. இது 8-வது ஐந்தாண்டுத்திட்டத்திற்கு ஏற்பளிக்கப்பட்ட தொகையை விட **37.42% அதிகம்** என்பது குறிப்பிடத்தகுந்ததே.
- ★ 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், நீர்வள ஆதாரம் மேம்படுத்தப்படும்; ஏழை - எளிய மக்களின் வருமானத்தை உயர்த்திட வகை செய்யப்படும்; அனைவருக்கும் கல்வி வாய்ப்பளித்தல், ஒருங்கிணைந்த சுகாதார மேம்பாடு, சாலை வசதிகளில் மேம்பாடு, சிறிய துறைமுகங்களின் நிலை உயர்த்தல் ஆகியவை மேற்கொள்ளப்படும். பெண்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் நிதி நிறுவனங்களின் மூலம் செயற்படுத்துதல், **அண்ணா மறுமலர்ச்சி, நமக்கு நாமே** திட்டங்களை விரைந்து செயற்படுத்துதலின் வாயிலாகக் கிராமங்களின் அடிப்படை வசதிகள் நகரங்களுக்கொப்ப மேம்படுத்தப்படும். **முதலமைச்சர் கலைஞர்** அவர்களின் அரிய வழிகாட்டுதலில் மேற்கூறிய திட்டச் செயலாக்கங்கள் மற்றும் தமிழகத்தைத் தொழில் மயமாக்கும் கொள்கை ஆகியவற்றின் வாயிலாக, இந்தியாவின் **"தலைசிறந்த மாநிலமாகத் தமிழகம்"** திகழும் என்பது உறுதியே.

குறள் காட்டும் வாழ்வு

- முத்தமிழ்க் காவலர் **கி.ஆ.பெ. விசுவநாதம்**

வாழ்வு பல வகை. குறள் காட்டும் வாழ்வு ஒரு தனி வகை. அதை உலக மக்களுக்குக் காட்டியவர் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் தமிழகத்துச் சான்றோர்களுள் ஒருவர். அவர் பிறந்து இன்றைக்கு 2011 ஆண்டுகளாயின். அவர் பிறந்து வளர்ந்தது வாழ்ந்தது அனைத்தும் பாண்டி நாடு; மதுரை.

மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் மக்களாகவே வாழ வேண்டும் என்பது அவரது பேராசை அல்ல, மிகப் பெரிய ஆசை. அதன் விளைவே திருக்குறள். அது காட்டும் வாழ்வே குறள் காட்டும் வாழ்வு. வாழ்வாங்கு வாழ்தல் என்று அது கூறுகிறது. இது வாழவேண்டிய முறைப்படி வாழ்தல் எனப் பொருள்படும்.

வாழ வேண்டிய முறை என்பது தனக்காக, தன் குடும்பத்துக்காக என்று வாழாமல் பிறருக்காவும் வாழ வேண்டும் என்பதாகும். இவ்வாழ்வு முறையைத் திருக்குறள் கீழ்க்கண்டவாறு பல வகையாக நமக்குக் காட்டுகிறது.

எது மக்கள் வாழ்வு?

ஒருவரை ஒருவர் அடித்துத் துன்புறுத்தி வாழ்வது விலங்கு வாழ்வு. தன்னலங்கொண்டு உயரப் பறப்பது பறவை வாழ்வு. தீமை செய்தவருக்குத் தீமை செய்து வாழ்வது தேள், பாம்புகளின் வாழ்வு. தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்களின் வாழ்வு. தீமை செய்தவர்களை மன்னித்து விடுவது மட்டுமன்று, அவர்களுக்கு நன்மையைச் செய்தும் வாழ்வதே மக்கள் வாழ்வு எனக் குறள் கூறுகிறது.

வாழ்வுக்குப் பத்து உடைமைகள்

உடலுக்குச் சில உடைமைகளை அணிவது போல உள்ளத்திற்கும் சில உடைமைகளை அணிந்து வாழ்வதே குறள் காட்டும் வாழ்வு ஆகும். அவை அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, ஆள்வினையுடைமை, ஒழுக்கமுடைமை, ஊக்கமுடைமை, நாணமுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன. இப் பத்து உடைமைகளையும் பத்துத் தலைப்புகளில் நூறு குறள்களாக்கி மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இவற்றைத் தம் உள்ளத்தில் அணிந்து வாழ்ந்தாக வேண்டும் எனக் குறள் நல்வாழ்வுக்கு வழி காட்டுகிறது.

ஒன்பது கட்டளைகள்

பொய்யைச் சொல்லாதே! புலாலை உண்ணாதே! கள்ளைக் குடியாதே! களவை நினையாதே! காமங்கொள்ளாதே! கொலையைச் செய்யாதே! சூதை விரும்பாதே! புறங்கூறாதே! பொறாமையடையாதே! பேராசை கொள்ளாதே! என்ற பத்துக் கட்டளைகளும் நல்வாழ்வு வாழக் குறள் இடும் கட்டளைகளாகும்.

பழிக்கு அஞ்சி வாழ்தல்

நம் முன்னோர்களாகிய நூலோர்கள் தொகுத்துக் கூறியவற்றுள் எல்லாம் தலையாய அறங்கள் இரண்டு. அவை பகுத்து உண்ணல் ஒன்று. பல்லுயிர் ஓம்புதல் மற்றொன்று. ஆனால், வாழ்வாங்கு வாழ அவை இரண்டு மட்டும் போதாது. ஒழுக்கமாகவும் நடந்தாக வேண்டும் எனக் குறள் ஒரு புதுவழியைக் காட்டுகிறது. இதைப் 'பழியஞ்சு! பகுத்து உண்!" என்ற குறள் நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

விரும்பி வாழ நான்கு

நகை, ஈகை, இன்சொல், இகாழமை ஆகிய நான்கையும் விரும்பிக் கைக்கொள். அது உன் வாழ்வை வளமாக்கும் என்பதே குறள் காட்டும் வாழ்வு. இந்த நான்கை வரிசைப்படுத்தியிருப்பதிலும் ஒரு அழகு தோன்றுகிறது. அவை நல்வாழ்வுக்கு எப்போதும் இனிய முகத்தோடு இருத்தல் வேண்டும். அது முடியாவிடில் இயன்றவரை ஏதாவது கொடுத்து அனுப்பிவிட வேண்டும். அதுவும் முடியாவிடில் இனிய சொற்களையாவது சொல்லி அனுப்பி விட வேண்டும். அதுவும் முடியாவிடில் அவர்களை இகழ்ந்து கூறாமலாவது இருக்க வேண்டும் என்பன. எப்படி குறள் காட்டும் வாழ்வு?

வெறுத்து வாழ நான்கு

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன அவை. பிறரைக் கண்டு பொறாமைப்படாதே! பிறர் பொருளின் மீது ஆசை வைக்காதே! எவர் மீதும் சினம் கொள்ளாதே! எப்போதும் கடும் சொற்களைச் சொல்லாதே! இந்நான்கும் நம் வாழ்வுக்கு ஒளிவீசும் எனக் குறள் கூறுகிறது.

வழங்கி வாழ நான்கு

அன்பு உள்ளம் கொண்ட சான்றோர்கள் தம் குருதியை, நரம்பை, தோலை மட்டுமல்ல; தன் எலும்பையும் பிறருக்கு வழங்கி வாழ்வர் என்ற கருத்தை 'எலும்பும் உரியர் பிறர்க்கு' என்ற குறட் சொற்றொடர் கூறிக் கொண்டிருக்கிறது.

வாழ்வுக்கு வேண்டிய நட்பு

நட்பு நல்வாழ்வுக்குத் தேவை. ஆகவே, நட்பை கைக்கொள்! அதையும் ஆராய்ந்து கொள்! தீ நட்பு கொள்ளாதே! பழமையைத் தள்ளாதே! சிற்றினம் சேராதே! பெரியோரை வெறுக்காதே! என்ற ஏழு தலைப்புகளில் எழுபது குறள்களைக் கூறி வாழ்வுக்கு வழி காட்டுகிறது குறள்.

கற்றபடி நிற்றல்

படி! எல்லாவற்றையும் படிக்காதே! படிக்க வேண்டியவற்றைப் படி! அதையும் பிழையறப் படி! மனதில் உள்ள கசடு அறும்படி படி! கற்றிலன் ஆயினும் கேள்! கற்றவற்றையும் கேட்டவற்றையும் சிந்தித்து உணர்! அந்த அளவோடு விட்டுவிடாதே. அதன்படி நட! எனக் குறள் நல்வாழ்வுக்கு வழி காட்டுகிறது.

உள்ளத்தை உயர்த்தி வாழ்

நல்வாழ்வு வாழ வேண்டுமானால் உள்ளத்தை உயர்த்தி வாழ். சிறியன சிந்தியாதே. எப்போதும் பெரியதையே எண்ணு. அப்படியே ஆவாய்! வெள்ளம் உயர உயர மலர் உயர்வதைப் போல உன் உள்ளம் உயர்வதைப் போல் நீ உயர்வாய்! நல் வாழ்வு வாழ உள்ளத்தை உயர்த்து! எனக் கூறுகிறது குறள்.

யார் பெரியார்?

நாம் ஒரு காலத்தில் பணக்காரர், நிலக்காரர், முதல்காரர் ஆகியவர்களைப் பெரியார் என நினைத்திருந்தோம். அடுத்து, படித்தவர், பட்டம் பெற்றவர், பதவியிலிருப்பவர் என எண்ணினோம். பின், வயதில் முதிர்ந்தோர் பெரியோர் எனக் கருதினோம். இப்பொழுது எழுத்தர்களையும் பேச்சர்களையும் பெரியோர் என எண்ணுகிறோம். குறள் இவற்றை ஒப்பவில்லை. யார், பெரியார்? என்ற கேள்விக்கு குறள் கூறும் விடை எழுத்தரல்ல, பேச்சரல்ல 'செய்வர் பெரியர்' என்பதே. இதிலிருந்து மலையளவு பேசுவதை விடக் கடுகளவு செய்து வாழ்வதே நல்லது எனத் தெரிகிறது.

நா நலம் என்னும் நலமுடைமை

"நா நலம் என்னும் நலமுடைமை" என்பது அரைக்குறள். அடுத்த அரைக் குறளும் கூட 'அந்த நலம் வேறு எந்த நலத்திலும் இல்லை' என்பதே. அது மட்டுமன்று, 'நாநலம் என்பதே நலமுடைமை' என்பதுதான், இதுதான் அதன் உண்மையான பெயர் என்றும் குறள் கூறிக் கொண்டிருக்கிறது.

அளவோடு பேசுதல், ஆராய்ந்து கூறுதல், சொன்னபடி நடத்தல், சொல்லியபடி இருத்தல், இனியவை கூறுதல், எவரையும் வையாதிருத்தல் ஆகியவை அனைத்தும் நாநலத்தின்பாற் பட்டவை என்று குறள் கூறுகிறது. இதையே, கண்டு ஒன்று சொல்லேல்! களிக்கச் சொல்லேல்! சொற்சோர்வு படேல், பழிப்பன பகரேல், மிகைப்படச் சொல்லேல், வெட்டெனப் பேசேல், வாது முற்கூறேல், ஓரஞ் சொல்லேல்! என ஔவையும் கூறுகிறார். இவற்றால் நல்வாழ்வுக்கு ஏற்றது நாநலமே என்று குறள் கூறுகிறது.

தோற்றத்தைக் கண்டு மயங்காதே

கருப்பாக இருக்கிறது. கோணலாக இருக்கிறது. நாரும் நரம்புமாக இருக்கிறது என்று வெறுத்து விடாதே 'வீணையை'. நீ இன்பத்தை இழந்து விடுவாய்! சிவப்பாக இருக்கிறது, அழகாக இருக்கிறது, நேராக இருக்கிறது என்று நெஞ்சில் வைத்துவிடாதே 'அம்பை'. அது உன்னைக் கொன்றுவிடும். இவை இரண்டு மட்டுமல்ல, வேறு எதனையும் தோற்றத்தைக் கண்டே மயங்கி விடாதே, வாழ்வு பாழாகிவிடும் என எச்சரிக்கை செய்கிறது குறள்.

பொருள் தேடும் வழி

பெற்ற தாயின் வயிறு பசிக்கக் காண்பது பிறந்த மகனுக்கு இழிவு. எப்பாடுபட்டேனும் அத்தாயின் வயிற்றுப் பசியைப் போக்க வேண்டியது பிறந்த மகனின் கடமை. ஏனெனில், அது அவன் குடியிருந்த கோயில். என்றாலும், அந்த நிலையிலும் ஒருவன் தவறான வழியில் பொருளைத்தேடிவந்து தாயின் பசியைப் போக்க எண்ணுவது தவறு. எண்ணினால் அத்தகையவரைச் சான்றோர் பழித்து ஒதுக்கி விடுவர் எனப் பிறந்த மகனின் வாழ்வுக்கும் வழி கூறுகிறது குறள்.

வினைத்திட்பம்

ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு வேண்டியது பொருளுதவி அல்ல, நண்பர்களின் துணை அல்ல, மனைவி மக்களின் ஒத்துழைப்பல்ல, அரசாங்கத்தின் ஆதரவு அல்ல, வேறு எதுவுமே அல்ல. அவனுக்கு வேண்டியது மன உறுதி ஒன்றே. இதை 'வினைத் திட்பம்' என்பது 'மனத்திட்பம்' என்ற குறள் காட்டுகிறது.

மேன்மையடைய வழி

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' என்பது அரைக்குறள். இதற்கு மூன்று பொருள்கள் உள்ளன. ஆடை, அணி, பொன், மணி, பட்டம், பதவி முதலியவற்றால் எவரும் மேன்மையடைய முடியாது; ஒழுக்கம் ஒன்றினாலேயே உயர்ந்து விட்ட ஒருவன் பின் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்ய நேர்ந்தாலும் உலகம் அதை நம்பாது. அப்போதும் அவன் மேன்மையையே அடைவான் என்பது மற்றொன்று. ஒழுக்கத்தினால் உயர்ந்த ஒருவர் பின் வறுமையால் தாழ்ந்து போனாலும் கண்டோர் அவரை 'நன்றாக வாழ்ந்தவர்' என்றே உயர்வாகக் கூறி மகிழ்வர் என்பது மூன்று.

'இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்பது மறு பாதிக் குறள். இதற்கும் மூன்று பொருள்கள் உள்ளன. ஒன்று, ஒழுக்கம் தவறியவன் எல்லோராலும் பழிக்கப்படுவான் என்பது. மற்றொன்று, ஒழுக்கம் தவறியவன் பின்பு திருந்தி நல்ல காரியங்களைச் செய்தாலும் உலகம் நம்பாது. அவன் முன் செய்த பாவங்களைப் போக்கவே இவற்றைச் செய்கிறான், எனக் கூறிப் பலரும் பழி தூற்றுவர் என்பது. இன்னொன்று, அவன் செய்யாத - பிறர் செய்த தவறுக்கும் பழி ஏற்க நேரிட்டு விடும் என்பது. இந்த மூன்றாவது கருத்தை இக்குறளிலுள்ள 'எய்தாப் பழியையும் எய்துவர்' என்ற சொற்றொடர் நமக்கு விளக்குகிறது. எப்படி, குறள் காட்டும் வாழ்வு?

செயல் திட்டம்

நல்வாழ்வுக்கு வழி 'நற்செயல்களைச் செய்வது' என்பது திருக்குறளின் கருத்து. இதற்கு 120 குறள்களைப் பன்னிரண்டு தலைப்புகளின் கீழ் கூறுகிறார் வள்ளுவர். அவை :

ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, ஊக்கமுடைமை என அடிப்படை மூன்று, அடுத்து இடமறிந்து செய்தல், காலமறிந்து செய்தல், வலியறிந்து செய்தல் என அரைப் பகுதியில் மூன்று: தெரிந்து வினை செயல்வகை; வினைத் திட்பம், வினைத் தூய்மை என் இறுதியில் மூன்று; ஆகப் பன்னிரண்டு. இவை அனைத்தும் நல்லவற்றைச் 'செய்த நல்வாழ்வு வாழக் காட்டும் வழிகள். இதை அந்த அளவோடு அவர் விட்டுவிடவில்லை. 'செய்ய வேண்டியவற்றைச் செய்யாவிடினும் வாழ்வு கெடும். செய்யத் தகாதவற்றைச் செய்தாலும் வாழ்வு கெடும்' என எச்சரிக்கையும் செய்கிறது குறள்.

மேலல்லார் மேலல்லர்

ஒருவன் மேலேயிருக்கிறான் - நாம் பார்க்கிறோம். மற்றொருவன் கீழேயிருக்கிறான் - நாம் பார்க்கிறோம். குறள் இதை ஒப்புக் கொள்ளவில்லை. மறுக்கின்றது. உள்ளபடி மேலேயும் கீழேயும் பார்க்கின்ற நாம் இதை எப்படி நம்புவது ? நம்பாத நம்மையும் நம்ப வைக்கிறது குறள். ஒரு தராசை எடுத்து இடது தட்டில் ஒரு படிக்கல்லைப் போட்டுத் தராசைத் தூக்கிக் காட்டுகிறார் வள்ளுவர். ஒரு தட்டு தாழ்ந்து ஒரு தட்டு உயர்ந்தும் காணப்படுகிறது. வள்ளுவர் நம்மை நோக்கிக் கேட்கிறார். ஏன் இந்தத் தட்டு உயரத்தில் இருக்கிறது ? அதில் ஒன்றுமே இல்லை; அதனால் உயரத்தில் இருக்கிறது. இன்னொரு தட்டில் சரக்கிருக்கிறது. அதனால் தாழ்ந்து இருக்கிறது. இப்போது குறள் கேட்கிறது நம்மை - உயரத்தில் இருப்பதெல்லாம் உயர்ந்ததா ? என்று. இக்கருத்தை "மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர், கீழல்லர் கீழிருந்தும் கீழல் லவர்" என்ற குறள் விளக்குகிறது. இதனால் உலகிலுள்ள மக்களுள் அறிவில்லாத சிலரும் மேலே இருப்பர்; அறிவுடைய சிலரும் கீழே இருப்பர் என அறிந்து வாழ்வதே வாழ்வு என அறிவுறுத்துகிறது இக்குறள்.

குன்றின் அனையாரும் குன்றுவர்

திருக்குறளில் ஒரு சொற் குறள்கள் எனப் பல உள. அவற்றில் ஒன்று இது. இக்குறளில் நான்கு குன்றுகளைக் காணலாம். முதல் குன்று மலை. இரண்டாவது குன்று குறுகுதல். மூன்றாவது குன்று இழிசெயல். நான்காவது குன்று குண்டுமணி. குறள் இதுதான். "குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ குன்றி அனைய செயின்". மலைபோன்று உயர்ந்திருக்கும் மக்களும் கூடப் பழிக்கத் தகுந்த இழிசெயல்களை குண்டுமணி அளவு செய்தாலும் கூடக் குறுகிக் குன்றிப்போய் விடுவர் என்பது இதன் பொருள். நல்வாழ்வு வாழ விரும்புகிறவர்களுக்கு இக்குறள் காட்டும் எச்சரிக்கை மிகப் பெரியதாகும்.

சிதைவிடத்து ஒல்கார் உரவோர்

நற்செயல்களைச் செய்து நல்வாழ்வு வாழ முன்வருபவருக்கு மிகுந்த ஆற்றல் வேண்டும். அதற்குச் சில இடையூறுகளும் வரும். சிலர் தூற்றுவர். சிலர் துன்புறுத்துவர். இவற்றைக் கண்டு கலங்கிவிடக் கூடாது. காட்டில் வாழும் யானையானது தன் உடல் முழுவதும் வேடர்களின் அம்புகளால் தாக்கப் பெற்றுக் குருதி ஒழுகிக் கொண்டிருந்தபோதும் அஞ்சி நடுங்காமல், பீடு நடை நடந்து தன் பெருமையை நிலை நிறுத்தும். அதைப்போலவே 'மன உரம் படைத்த மக்களும் துன்பம் வந்த காலத்துச் சோர்வு அடையமாட்டார்கள்' என்ற கருத்தை, "புதையம் பிற் பட்டுப் பாடுன்றும் களிறு" எனக் காட்டானையைக் காட்டி நம்மை நிமிர்ந்து வாழச் செய்கிறது இக்குறள்.

மனிதனா ? தெய்வமா ?

வாழ வேண்டிய முறைப்படி வாழ்பவனே மனிதன் எனவும், அவன் மனிதனாயினும் மற்றவர்களால் தெய்வமாகக் கருதப்படுவான் எனவும், அவன் இம் மண்ணுலகில் வாழ்ந்தாலும் அது விண்ணுலகாகக் கருதப்படும் எனவும் ஒரு குறள் கூறுகிறது. அது

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்பது.

இவ்வாறு வாழ முடியாதவர்கள் வாழ்வதைவிடச் சாவது நல்லது என வாழ்வுக்கு வழி காட்டிய குறள் சாவுக்கும் வழி காட்டுகிறது. அவை : விருந்தினர் வீட்டில் வந்திருக்க அவருக்கு வழங்காமல் நீ மட்டும் உண்ணாதே. அது சாவா மருந்தாக இருப்பினும் நீ அதை உண்டு வாழ்வதை விட உண்ணாமல் சாவது நல்லது.

உன்மீது அன்புள்ளவர்கள் உன் நிலையைப் பார்த்து நஞ்சைக் கொடுத்து உண்ணச் சொன்னாலும் அதை மறுக்காது உண்டு சாவதே நல்லது.

'மானத்தை இழப்பதா உயிரை இழப்பதா' என்ற நிலை உனக்கு வந்து விட்டால் மானத்தை இழவாமல் உயிரை இழந்து மடிவது நல்லது.

உன்னைப் புரந்தவர்களும், உன்னால் புரக்கப் பெற்றவர்களும் கலங்கிக் கண்ணீர் வடித்துக் கதறி அழும்படியான ஒரு சாவு உனக்கு வருமானால் அதை அன்போடு ஏற்று மடி. அத்தகைய சாவு ஒன்று தானே வராவிடில் அதைப் பிச்சை எடுத்தாகிலும் ஏற்று மடிவது நல்லது.

பொய் பேசியும் புறங்கூறியும் வாழாதே. இவ்விரண்டையும் எப்போதும் செய்ய எண்ணாதே. 'பொய் பேசித்தான் வாழ வேண்டும், புறங்கூறித் தான் வாழ வேண்டும்' என்ற ஓர் நிலை வந்து விட்டால் நீ உயிர் வாழாமல் இறந்து விடுவதே நல்லது. அது அறங்கூறும் ஆக்கம் தரும்.

சாவைப் போலத் துன்பம் தருவது எதுவும் இல்லை என்றாலும் இரப்போர்க்கு எதுவும் ஈயமுடியாத போது வாழ்ந்து துன்பப்படுவதை விட இறந்து போவதே இனிதாக இருக்கும்.

வாழ முடியாதவர்கள் சாவதற்குப் பயப்பட வேண்டிய தில்லை. இறப்பதும் பிறப்பதும் உறங்குவதையும் விழிப்பதையும் போன்றது.

இதில் அஞ்சுவதற்கு ஒன்றுமில்லை எனக் கூறுகிறது ஒரு குறள். வாழ முடியாதவர்களுக்கு இந்த ஏழு குறள்களும் சாவுக்கும் வழி காட்டுகின்றன. இவை தமிழ் வாழ்வும் தமிழரின் வாழ்வும் தமிழகத்தின் வாழ்வுமாகும்.

இவையும் இவை போன்ற பிறவும் மக்களாய்ப் பிறந்தவர்கள் மக்களாக வாழ, குறள்காட்டும் நெறிகளாகும். இவற்றைப் படித்து மகிழ்வதை விடப் பயன்படுத்தி வாழ்வது நல்லது.

வாழட்டும் தமிழகம்!

வளரட்டும் குறள்நெறி!



போகியோ போகி

- கவிஞர் ஈரோடு தமிழன்பன்

☐ ஒடுக்கும் பனி
ஓடி மறைந்ததென்று
அறிக்கை வெளியிட்டது - கிழக்கு
அச்சகம்

☐ கையில்
அதைத் தாங்கிவந்து
தமிழர் வீட்டுக் கதவுகளைத்
தட்டுகிறாள் தை

☐ இதுவரை
நடுங்கிய பொழுதுகள் இனி,
பருகப்
பகல் கிண்ணத்தில்
சுடச்சுட வெப்பம்.

☐ முடங்கிக் கிடந்த காற்று
சூரியத் தணலில்
குளிர் காய்ந்து புறப்பட்டு வருகிறது.

☐ மாதங்களில் சிறந்தது
மார்கழி என்றார்கள்...புரிகிறது
அதுதானே
தவமிருந்து பெற்றெடுத்தது 'தை'யை.

☐ களத்து மேட்டுப்
பதர்க் குப்பை அவள்
ஆடையெல்லாம்...
உதறிவிட நேரமின்றி அப்படியே
ஓடிவந்துள்ளாள்
உடனே அணைத்துக் கொள்வோம்!

☐ அகிலும் சந்தனமும் -
நிகராகுமா இந்தக் குப்பைக்கு ?

☐ அழகாய்ச்
சிரிக்கத் தெரிந்தவர்கள்
ஆளுக்கொரு
புன்முறுவல் தந்தால்
அவளுக்கு மாலை கட்டலாம்.

☐ ஆளுக்கொரு
அலை கொடுத்தால்
அவளுக்கு நதிசெய்து வைக்கலாம்.
'தை' மகளின்
அந்தரத் தோணி - நல்லொரு
துறைக்கும் போகும்.

☐ கூட இருந்தே குழிவெட்டும்
நிபுணர்களின்
கூடாரத்தைச் சேராதவர்கள்
ஆளுக்கொரு புள்ளி
அள்ளிக் கொடுத்தால் - வாசலில்
போட்டு வைக்கலாம்
பூக்கோலம்

☐ இது
உழைப்புக்கு உற்சவ நாள்!
கைதட்டிக் கைதட்டியே
காலை வாரிவிடும் கலையில்
வல்லவர் நாம்! - எனவே
உழைப்பைப் பாராட்ட
உதடுகளால் உத்தியோகம்
பார்க்கவேண்டாம்.
வேர்வைகளை அதற்கு
அனுப்பி வைப்போம்.

☐ உழைப்பதே
உண்மையில், உழைப்பைப்
போற்றுவதாகும்.

☐ பாட்டாளி கரங்கள் - இந்தப்
பார்பெற்ற வரங்கள்
வேர்வையைப் பாராட்டிப்
பட்டங்கள்
தரவேண்டாம். அந்தக்
காகிதச் சொப்பனங்கள்
கஞ்சிக்கு'வழிசெய்யுமா ?

☐ பாட்டாளிக்கே
உலகம் சொந்தமென்று
பட்டா போட்டுக் கொடுப்போம்.

☐ நகம்
வளரும் விரல் - அல்ல
அவன் விரல் - உலகின்
சுகம் வளரும் விரல்!



❑ அவன்
கை மடங்கினால் - உலகின்
மெய் முடங்கிப்போகும்!

❑ விளக்குகள்
உற்பத்தி செய்தவன்-தொடர்ந்து
இருட்டிலேயே கிடந்தால்
அந்த
விளக்குகளே வெடித்துச் சிதறும்.

❑ பயிர் செய்தவனுக்குப்
பட்டினி என்றால்...தமது
கருப்பையை - வயல்கள்
கழற்றி எறிந்துவிடும்.

❑ போகி நெருப்பு...
வத்திப் பெட்டியின் வயிற்றில்
பிறந்த தல்ல....
ஒவ்வாமைகள்மேல்
உறுமும் சினத்தில்
உரசிப் பற்றியது!
தண்டிக்கப்பட்ட தீ - புகை
சுருட்டு நுனியில்!
சபிக்கப்பட்ட தீ...
மதவெறியர் கண்களில்!

❑ வெறுக்கப்பட்ட தீ....
சுயநல வேள்விகளில்!
போற்றப்பட்ட தீ
போகிப் பண்டிகையில்!

❑ கொண்டை அடுப்புக்குக்
கோபம் புரியும் முன்-
அடுப்பாசனத்தில்-புதுப்பானை
பதவி ஏற்கும் முன்-
வெள்ளையடித்து-வீட்டிற்குள்
வெளிச்சத்திற்குப்
பாய்விரிக்கும் முன்-
வேண்டாப் பழைமைகளுக்கு
விடை கொடுக்க வேண்டாமா?

❑ வாசல்
பெருக்காவிட்டால்
குப்பையிலே போட்ட கோலம்
கோவென்று அழாதா?

❑ புதிய தளிர்களை
ஏற்கச்
சருகுகளை உதிர்க்கத்
தயங்குவதில்லை வனங்கள்!
சபை வைத்துச்
சருகுகள் பாடும் சங்கீதத்தால்
ஓய்வதில்லை - மனித மனங்கள்
கிழடு தட்டிய சரீரங்களில்
கீர்த்தனை வீக்கங்கள்!

❑ ஆகாத பழைமைக்கு
இன்னும் என்ன அழுகல்?

❑ புதியன
புகவிடுவோம் - ஆனால்
பழையன கைவிடோம்!

❑ அஞ்ஞானத்தை - இடுப்பில்
முடிந்து வைத்துக்கொண்டு
அறிவின்
பிரசாதத்துக்குக்
கையை நீட்டுகிறோம்!

❑ ஆகா! என்ன சமரசம்!
தூக்கத்திற்கும் விழிப்புக்கும்
அதே நேரத்தில்
தொட்டில் கட்டுகிறோம் கண்களில்!

❑ குதிரைகள்,
நத்தைகள் மனத்தைக்
குத்தகை ஏற்றுக்கொண்டால்
ஓடும் கால்களால்
உபயோகம் உண்டா?

❑ முதுமக்கள் தாழியை உடைத்து
உள்ளத்தை
விடுவிக்கா விட்டால்
விஞ்ஞான தரிசனத்தால் என்ன பயன்?

❑ கைகளில் கணினி
காட்டுக் குகைகளில்
மணம்!
புதுமை என்பது
குகைக்கு வர்ணம் பூசுவதல்ல...
புரட்சி என்பது
இருக்கும் குகையை இடித்துவிட்டுப்
புதிய குகையைக் கட்டுவதல்ல...

❑ மாற மறுக்கும்
மனிதனுக்குள்
பூர்வீக விலங்குகளைத் தேடிப்போன
டார்வின்கள்
தோல்வியோடு திரும்பினர்.
விலங்குகள் கூட
மாறிவருவதை விளங்கிக் கொண்டனர்.

❑ தின்றதையே
தின்பவன் வீட்டில் - ஒருநாள்
சமையல் அறையே
தீக்குளித்துக்கொள்ளும்.

❑ கந்தலாய் நாறிய
பழைய காலுறைக்குப் பதிலாகப்
புதிய காலுறை போட்டுக்கொண்டது
போற்றத்தக்கது - ஆனால்
காலில் நாறிய
பழையதை
பழச்சாறு வடிக்கப் பயன்படுத்தலாமா?

❑ கடவுளர் முகங்களே
கறுத்துப் போயின அயோத்திச்
சம்பவத்தால்

❑ தேசத்தைக்
காட்டு மிராண்டிக் காலத்திற்குத்
திருப்பும் கைகளில் -
தேம்பும் சரித்திரம்.

❑ மதங்கள் வேறு வேறு
கடவுள் ஒருவனே!
மதங்கள் வேறு வேறு
மானுடம் ஒன்றே!
மதமிலா மனிதனும்
மனிதனே!

❑ நரித்துவம்
நடத்திய சதியே - சாதிகள்!

❑ நரகம் தூவிய விதைகள்
சமூகம் தோன்றிய பள்ளங்கள்!
விழுந்தவர் எழுந்தால்
விரட்டுவதற்காகவே மேடுகள்!

❑ போகி நெருப்பு - இவற்றை
எரிக்கப் புறப்படுமுன்
கந்தக சபையைக்
கலந்தாலோசிக்க வேண்டும்!
ஏனெனில்
எரிக்கப் புறப்பட்ட
எத்தனையோ நெருப்புகள்
ஏமாந்து விட்டன!

❑ கவிழ்த்தாலும்
நிமிர்ந்தே எரியும் நெருப்பின் குணத்தைக்
கவலைப் படுவோர்க்கெல்லாம்
எடுத்துச் சொல்வோம்!

❑ அழுக்கைக் கழுவும்
தண்ணீர் - அழுக்காகிப் போகும்!
மாசை எரிக்கும் நெருப்பு
மாசாவதே இல்லை!

❑ நமது
எழுத்துக்களின், உச்சியில் -
இதயத்தையே திரியாய் இட்டு - இந்தக்
கம்பீர நெருப்பில்
கவிதைகள் ஏற்றுவோம்!

❑ போகி நாள் - எனது
கவிதை
புறப்பட்டு வருகிறது உங்கள்
வாசலுக்கு!

❑ பொன்னும் மணியும்
பொருளும் வேண்டாம்!
உங்களிடத்தில்
குப்பைகள் இருந்தால்
கொடுத்தனுப்புங்கள்!
குப்பையைக் கொடுக்கக்கூட
நம்ப மாட்டீர்களா – என்ன?

எதிர்காலத்தை நம்பிக்கையோடு நோக்கும் தமிழகத்தில் உலகளாவிய தொழில் ஒத்துழைப்புகள் தொடரும் !

★ தொழில் ஒத்துழைப்பு மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் வரவேற்புரை ★

சென்னை நேரு ஸ்டேடியத்தில் 8.1.98 அன்று தொடங்கிய தொழில் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் (பார்ட்னர்ஷிப் சம்மிட்) முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆங்கிலத்தில் ஆற்றிய வரவேற்புரையின் தமிழாக்கம் வருமாறு :-

"உங்கள் அனைவருக்கும் உளம் நிறைந்த வரவேற்பை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியத் தொழில்கள் கட்டமைப்பு 1955 - ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தொழில் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டை (பார்ட்னர்ஷிப் சம்மிட்) நடத்திவருகிறது. நாடு சுதந்திரப் பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த ஆண்டு இந்த மாநாட்டிற்கான இடமாகச் சென்னை தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனவே, இந்த மாநாடு சிறப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த மாநாட்டிற்கு வருபவர்களை வரவேற்கும் நிலையில் இருப்பதற்குச் சென்னையில் உள்ள நாங்கள் சிறப்புரிமை பெற்றதாக உணர்கிறோம்.

தமிழக மக்களின் சார்பாக, பிரதமர் ஐ.கே.குஜ்ரால் அவர்களுக்கும், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்து இங்கே குழுமியிருக்கும் மற்ற முக்கியப் பிரமுகர்களுக்கும் என்னுடைய இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தாலி நாட்டின் பிரதமர், போலந்து நாட்டின் அதிபர் மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து வந்துள்ள பல்வேறு அமைச்சர்கள் ஆகியோரை வரவேற்கும் நிலையில் சென்னை இருப்பது எங்களுக்குப் பெரும் மனநிறைவை அளிப்பதாகும்.

வர்த்தகத்திற்கும், சர்வதேச ஒத்துழைப்பிற்கும் சென்னை ஒரு முக்கிய மையமாகும். இந்த நகரம், உண்மையில் இந்த மாநிலம் முழுவதுமே உலக வர்த்தகத்தில் உயர்வான வரலாற்றைக் கொண்டதாகும். உலகின் பல்வேறு பகுதிகளுடனும் இம்மாநிலத்திற்கு வலுவான தொடர்புகள் இருந்தன. இந்தத் தொழில் ஒத்துழைப்பு உச்சி மாநாடு உலக மயமாக்குதலில் சென்னை மற்றும் தமிழ்நாட்டின் ஆற்றல் மிக்க பங்கை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறது.

தொழில் மயமாக்கலில் இப்போது தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. சில மிகவும் பெருமைக்குரிய தொழிற்சாலைகள் இந்த மாநிலத்தில் அமைந்துள்ளன. பல தொழிற்சாலைகள் உலகத் தரத்தில் சிறப்பாகச் சாதனைகளைப் படைத்துள்ளன. இந்தத் தொழிற்சாலைகள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் விரிந்த அளவிலான உற்பத்திப் `பொருட்களையும், சேவைகளையும் ஏற்றுமதி செய்வதன் மூலம் சிறந்த பெயரைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் தொழில்துறை நல்ல நிர்வாகக் கலாச்சாரம், சுமுகமான தொழில் உறவுகள், மனித வள மேம்பாட்டில் தீவிர கவனம், வலுவான வாடிக்கையாளர் உருவாக்கம் போன்ற சில முக்கியத் தரங்களையும் வெளிப்படுத்தியுள்ளது.

இன்று, நாடு தானாகவே மாறிக்கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு புதிய உந்துதல் ஏற்பட்டுள்ளது. தனது முதலீட்டாளருக்கு நட்புறவான தொழில் கொள்கையின் மூலம் மாநில அரசால் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஆரோக்கியமான மற்றும் ஆக்கபூர்வமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்துள்ளது. உலகளாவிய அமைப்புகளான அமெரிக்காவின் ஃபோர்டு மோட்டார்ஸ், கொரியாவின் ஹுண்டாய் ஆகிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பெரும் தொழிற் சாலைகளை அமைத்துள்ள நிறுவனங்களில் இடம் பெற்றிருப்பது வியப்புக்குரியதல்ல. நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் செய்தி தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இம்மாநிலம் மிகவும் கவர்ந்திழுக்கும் ஒன்றாக மாறிவருகிறது.

புவியியல் நோக்கில் தமிழ்நாடு மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. உலக வர்த்தகத்தை எளிதாக்கும் அற்புதமான கடலோரத்தை அது பெற்றுள்ளது. தென்கிழக்கு ஆசியா மற்றும் தூரக் கிழக்கு ஆசிய நாடுகளுடன் இந்தியா தொடர்பு கொள்வதற்கு இம்மாநிலம் ஒரு வாயிலாக அமைந்துள்ளது. ஆஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் வட சென்னையிலிருந்து எட்டக் கூடிய தொலைவிலேயே உள்ளன.

தொழில் நுட்பக் கல்வித் திட்டத்திற்குக் கணிசமான முக்கியத்துவம்

தமிழ்நாட்டில் எங்களுடைய நிகழ்ச்சி நிரலில் உள்கட்டமைப்பு மேம்பாடு உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. நல்ல நிலையிலான உயர் தொழில் நுட்பக் கல்விக்கான கல்லூரிகள் மற்றும் பயிற்சி நிலையங்களுடன் வலுவான கல்வி உள் கட்டமைப்பு ஒன்றை மேம்படுத்தும் திட்டத்திற்குக் கணிசமான முக்கியத்துவத்தையும் நாங்கள் வழங்கி வருகிறோம்.

இம் மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், ஆகியவை ஒவ்வொரு ஆண்டும் அற்புதமான பயிற்சி பெற்ற மனித சக்தியை வழங்கிவருகின்றன.

அதேபோன்று, மாநிலத்தில் உள்ள தொடக்கக் கல்வி முறை பொதுமக்களுக்குச் சிறப்பான சேவையாற்றி வருகிறது. வளரும் குழந்தைக்குத் தேவையான அத்தியாவசிய அடிப்படை அறிவை அது வழங்குகிறது.

மற்றொரு முனையில் இம் மாநிலத்தில் சில சிறந்த சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களையும் நாங்கள் பெற்றுள்ளோம். மக்களுக்குச் சுகாதாரப் பராமரிப்பு ஒரு அடிப்படைத் தேவை என்று நாங்கள் நம்புகிறோம்.

எதிர்காலத்தை மிகுந்த நம்பிக்கையோடு நோக்குகிறோம்

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல சர்வதேச வர்த்தகத்திற்கும் தமிழ்நாடு புதியதொரு மாநிலம் அல்ல. இது ஏற்கெனவே தொழில் மற்றும் உள் கட்டமைப்புத் துறைகளில் ஏராளமான வெளிநாட்டுக் கூட்டுறவுகள் இருப்பதில் சிறப்பாகப்பிரதிபலிக்கிறது. தானியங்கி வாகனத் தொழில் ரசாயனம் மற்றும் ஜவுளித்துறைகள், எலக்ட்ரானிக் தொழில் ஆகியவை, வெளிநாட்டுக் கூட்டுறவுகள் வரவேற்கப்பட்டு, தொழில் ஒத்துழைப்புகள் முற்றிலும் வெற்றிகரமாக இயங்கி வருவதற்குச் சில உதாரணங்களாகும்.

இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தயாரிப்புகள் எங்கள் நாட்டில் உள்ள ஒவ்வொரு மூலை முடுக்குக்கும் சென்றடைவதோடு, உலகம் முழுவதும் அவை பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு எதிர்காலத்தை மிகுந்த நம்பிக்கையோடு நோக்குகிறது. பல துறைகளில் புதிய உலக அளவிலான தொழில் ஒத்துழைப்புகள் உருவாகி வரும் நிலைமை எங்கள் மாநிலத்தில் தொடர்ந்து நடைபெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தத் தொழில் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காக, நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தொழிலதிபர்கள், தொழில் முனைவோர் மற்றும் வர்த்தகர்கள் இங்கே சென்னைக்கு வருகை தந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வந்துள்ள தொழில் அதிபர்கள் மற்றும் வர்த்தகர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வர். இந்த மாநாட்டை நடத்தும் மாபெரும் வாய்ப்பை, சென்னை மாநகரம் பெற்றிருப்பதற்காக நான் மிகவும் மகிழ்கிறேன்.

புராதனப் புகழ்பெற்றிருந்த போதிலும் நவீன மாநிலமாகவும் திகழும் தமிழ்நாட்டுக்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் நான் மீண்டும் ஒருமுறை வரேவற்கிறேன். இங்கே தங்கியிருக்கும் காலம் உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமானதாகவும், பயனுள்ளதாகவும் அமைய வாழ்த்துகிறேன்".

CII
e Partnership Summit
Networking Global Partner

தமிழ்நாட்டுக்கு வந்து முதலீடு செய்ய வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் தொழிலதிபர்களை அழைக்கிறேன். தொழில் ஒத்துழைப்பு மாநாட்டில் முதலமைச்சர் வேண்டுகோள்.

சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற தொழில் ஒத்துழைப்பு மாநாட்டில் தமிழ்நாடு பற்றிய கூட்டத்தில் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

இந்தியத்தொழில் கூட்டமைப்பின் தொழில் ஒத்துழைப்பு மாநாட்டில் மீண்டும் ஒருமுறை உங்களோடு கலந்து கொள்வதில் நான் பெருமளவு மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாநாட்டின் மூலம் இந்த மாநாடு நடைபெறும் மாநிலம் ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பைப் பெற்றுள்ளது. அம் மாநிலம் தன்னுடைய பொருளாதார மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும் முன்னிலைப்படுத்த ஒரு வாய்ப்பைப் பெறுகிறது.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் மாநிலங்களின் பங்கு குறித்து ஏராளமாகக் கூறப்பட்டுள்ளது. அவற்றுடன் கூடுதலாக நான் கூற விரும்புவது, பொருளாதார முன்னேற்றத்தில் தங்கள் நிலைக்காக மாநில்ங்கள் பெருமை கொள்ளக் கூடிய ஒரு மாறுபட்ட காட்சியை இந்தியா சந்திக்கும் என்பதுதான். உண்மையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைவர்கள் கூட, தொழில் வளர்ச்சியில் மாநிலங்களுக்கு, பிரதம பங்கு அளிப்பதை எதிர்த்து நின்றனர். கடந்த 50 ஆண்டுகளில் சூழ்நிலை வேறு விதமாக மாறியிருக்கிறது என்பது வேறு விஷயம். ஆனால், எதிர் காலத்தில் பொருளாதார வளர்ச்சியையும், நாட்டின் முன்னேற்றத்தையும் மாநிலங்கள் தலைமையேற்று நடத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழக அரசைப் பொறுத்த வரையில் இம் மாநிலத்தை முன்னணிக்குக் கொண்டு வர மிகவும் தீவிரமாகச் செயல்பட, நாங்கள் உறுதிபூண்டுள்ளோம் என்பதை நான் உறுதியாகக் கூற முடியும். மாநில மக்களுக்கும், நாட்டு மக்கள் அனைவருக்கும் விரைவாகப் பலன்கள் கிடைக்கும் வகையில் பெருமளவிலான முதலீடுகளுக்கும் வலுவான வளர்ச்சிக்கும் உரிய சூழ்நிலையை உருவாக்க நாங்கள் முயற்சிகளை மேற்கொள்வோம்.

பாரம்பரியமாகப் பின்பற்றிவரும் முற்போக்குக் கொள்கை

பாரம்பரியமாகவே தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கான முற்போக்குக் கொள்கையைப் பின்பற்றி வருகிறது. இந்த மாநாட்டில் நிலவிவரும் தொழில் அடித்தளத்தின் தரத்திலும் முதிர்ச்சியிலும் அது பிரதிபலிக்கிறது. உதாரணமாக, வாகன உற்பத்தியாளர்கள், டிராக்டர் உற்பத்தியாளர்கள், வாகன உதிரி பாகங்கள் உற்பத்தியாளர்கள் ஆகிய ஆட்டோமோடிவ் தொழிலில் நாங்கள் வல்லுநர்களைப் பெற்றிருக்கிறோம். அவர்கள் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றி வருகின்றனர். அதேபோல, பெட்ரோ கெமிக்கல் துறையிலும் நாங்கள் பேசுவதற்கு நிறைய விஷயங்களைப் பெற்றிருக்கிறோம்.

ஜவுளி எந்திரத் தொழில், ஜவுளித் தொழில், உலோக வார்ப்படத் தொழில், உலைக்களத் தொழில் ஆகியவற்றிலும் முக்கியமானவர்களைப் பெற்றிருக்கிறோம். சமீப காலத்தில் சேவைத் தொழிலில் - குறிப்பாக செய்தித் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலில் மனதைத் தொடக்கூடிய வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளன.

மூலதனத்தைக் கவர்ந்திழுப்பதில் மாநிலங்களுக்கிடையே போட்டி நிலவுகிறது

முதலீடுகளைக் கவர்ந்திழுப்பது இன்று மாநிலங்களிடையே மிகவும் போட்டி நிரம்பிய பணியாக மாறிவிட்டது. வெளிநாட்டு மூலதனம் மற்றும் தொழில் நுட்பம், உற்பத்தி முறைகளைக் கவர்ந்திழுப்பதில் ஒவ்வொரு மாநிலமும் மற்ற மாநிலத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறது. போட்டி என்பது தவறானதல்ல. நான் மற்ற முதலமைச்சர்களின் வெற்றிகளைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் சிறப்பாகச் செயல்பட வாழ்த்துகிறேன். உண்மையில் தமிழ்நாடு பல வாய்ப்புகளைப் பெற்றுள்ளது என்று நான் நம்புகிறேன். ஒரு முதலீட்டாளர் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

எங்களுடைய பலங்களில் சில, பொறுப்புள்ள மாநில அரசின் ஆதரவோடு செயல்பட்டு வரும் வர்த்தகத்திற்கு நட்புறவான கொள்கைகள், ரயில்வே இணைப்புகள், துறைமுகங்கள், சாலைகள் மற்றும் தொலைத்தொடர்புச் சாதனங்களின் அற்புதமான இணைப்புகள், தொழிலாளர் கிடைக்கும் நிலை, அமைதியான தொழில் உறவுகள் ஆகியவை ஆகும். எங்கள் மாநிலத்தில் செய்யப்படும் மூலதனங்கள் விரைவாக உற்பத்தியைத் துவக்கக் கூடியவையாகவும், இலாபம் அளிக்கக் கூடியதாகவும் இருக்கும் என்பதை நாங்கள் உறுதி செய்வோம்.

தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்த நடவடிக்கை

தொழில் வளர்ச்சிக்கு நெடுஞ்சாலை என்பது ஒரு முக்கியமான உள்கட்டமைப்பு. எனவே சென்னை-பெங்களூர் மற்றும் சென்னை-கன்னியாகுமரி ஆகிய இரு தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்துவதற்கான பயனளிக்கும் நடவடிக்கைகளை நாங்கள் ஏற்கெனவே எடுத்துள்ளோம். அவற்றைத் தொழில் துறைத் தாழ்வாரங்களாக மாற்றுவது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

பௌதிக உள்கட்டமைப்பு என்பது எந்த ஒரு முதலீட்டாளருக்கும் பிரதான கவலையாக எப்போதும் உள்ளது. இதை நாங்கள் முழுமையாகப் புரிந்துகொண்டு பாராட்டுகிறோம். உயர்ந்த தரத்துடன் கூடிய கூடுதலான உள்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்வதில் கணிசமான நேரத்தையும், சக்தியையும் அர்ப்பணித்து நாங்கள் செயல்பட்டு வருகிறோம். அதன் அடையாளங்கள் ஊக்கமளிக்கும் வகையில் உள்ளன. உதாரணமாக, மின்சாரத் துறையில், உற்பத்தித் திறன் 8.35 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. பரிமாற்றம் மற்றும் வழங்கலில் ஏற்படும் இழப்பு தேசிய சராசரியை விட மிகவும் குறைவாக உள்ளது. தொழிற்சாலை சுமையின் அளவு 76.1 சதவிகிதமாக உள்ளது.

பிறநாடுகளின் வர்த்தகத்திற்குப் பொருத்தமான இடம்

எங்கள் மாநிலத்தில் நாங்கள் 12 துறைமுகங்களைப் பெற்றுள்ளோம். சரக்குகள் கையாளப்படுவதிலும், சரக்குகள் போக்குவரத்திலும் அவற்றின் பங்கு உயர்வாக உள்ளது. சமூக உள்கட்டமைப்பும் சிறப்பாக உள்ளது. தொடக்கப்பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள், உயர்தரத் தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் என்று அவை அற்புதமாக இணைந்துள்ளன. இந்நாட்டின் மிகச் சிறந்த சுகாதார நல அமைப்புகளில் சில எங்கள் மாநிலத்தில் உள்ளன. பௌதீக நிலையில் தமிழகம் அமைந்துள்ள இடம், தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுவதிலும், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளிலும் கூட வர்த்தகத்தை மேம்படுத்திக் கொள்ள மிகப் பொருத்தமான இடமாக உள்ளது.

> **“நல்ல எண்ணங்களைத்**
> **தூவினால்தான் அவை நல்ல**
> **பலனைத்தரும். பகுத்தறிவால்**
> **பண்படாத எந்த உள்ளத்தில்**
> **நல்ல எண்ணத்தை**
> **விதைத்தாலும் அது நல்ல**
> **விளைவைத் தராது.”**
>
> **- பேரறிஞர் அண்ணா.**

இப்போது எனது நிர்வாகத்தின் தத்துவத்தை நான் வலியுறுத்துகிறேன். நாங்கள் விரைவான, வெளிப்படையான முடிவுகளை எடுத்து அறிவிக்க விரும்புகிறோம். ஊக்கமளிக்கும் ஒரு சூழ்நிலையை அளிக்கவும் ஒரு பண்பாட்டை உறுதி செய்யவும் நாங்கள் விரும்புகிறோம். இவை உற்பத்தித் திறனையும், இலாபம் அளிக்கும் நிலையையும் உத்திரவாதப்படுத்தும். நாங்கள் உங்களுக்குப் பாரம்பரியமும், நவீனமும் அற்புதமாக இணைந்த நிலையை வழங்குகிறோம். கொள்கைகளில் ஸ்திரத்தன்மைக்கு நாங்கள் வாக்குறுதி அளிக்கிறோம்.

முதலீட்டுக்குச் சிறந்த மாநிலங்களில் தமிழகத்திற்கு மூன்றாவது இடம்

“பிசினஸ் டுடே” பத்திரிகை நடத்திய ஒரு கணக்கெடுப்பின்படி, முதலீடு செய்வதற்குச் சிறந்த மாநிலங்களில், தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது என்பதை நினைவூட்டுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே நடைபெற்றுவரும் தொழில் ஒத்துழைப்பு மாநாடு தனது கூட்டங்களை மிகத் தீவிரமாக நடத்திக் கொண்டிருந்த போதும், தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக் கழகம், பல

தொழிலதிபர்களுடன் கூட்டுறவுத் துறை தொழில் ஒப்பந்தங்களைக் கொண்டுள்ளது.

கடந்த 7ஆம் தேதி உருவான ஒப்பந்தங்கள்

7.1.98 அன்று என் முன்னிலையில் 250கோடிக்கு மேற்பட்ட முதலீட்டுடன் கூடிய 5 திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

பயனீர் பரீடிங்பார்ம்ஸ் லிமிடெட் மூலம் 100 சதவிகித ஏற்றுமதி நோக்கம் கொண்ட கோழிக்கறி பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று.

ஸ்ரீராம் குரூப் நிறுவனங்களுடன் ஒரு புதிய வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

குவைத்தைச் சேர்ந்த ஆர்.சி.சுரேஷ் அண்ட் அசோசியேட்ஸ் நிறுவனத்துடன் பிரஞ்சு புரோசன் பிரைஸ் திட்டம் ஒன்று.

மார்குப் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் காகிதம் மற்றும் காகித அட்டை எந்திரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று.

வாகன உதிரிபாகங்கள், அலுமினியம் டைஸ் காஸ்டிங்க்ஸ், கிரீன் ஹவுஸ் துணைப் பொருட்கள் ஆகியவற்றை பெங்களூர் - டைமேடிக் குரூப் நிறுவனங்கள் மூலம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று.

9-ஆம் தேதி கையெழுத்தான ஒப்பந்தங்கள்

9.1.98 அன்று மூன்று ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

2,650 கோடி செலவில் நாகார்ஜுனா குரூப் நிறுவனங்கள் மூலம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத்திட்டம் ஒன்று.

பி.ஓ.எஸ்.ஹூண்டாய் ஸ்டீல் மேனுபேக்சரிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் 44 கோடி செலவில் காயில் சென்டர் திட்டம் ஒன்று.

தொடக்க நிலை முதலீடான ரூ.30 கோடியில் மும்பை-ஆனந்த் நிறுவனத்துடன் மேண்டோ பிரேக் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலை ஒன்று.

இந்தச் செய்திகள் தமிழ் நாளேடுகள் அனைத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கில ஏடுகளில் அது வெளியிடப்பட்ட இடங்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு, தொழில் வளர்ச்சியில் வீறு நடைபோட்டு வருகிறது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் பல்வேறு நாடுகளிலிருந்தும் வர்த்தகர்களும் தொழிலதிபர்களும் இங்கே வந்துள்ளனர். நாட்டின் பிற பகுதிகளைச் சேர்ந்த தொழிலதிபர்களும் இங்கு வந்துள்ளனர். உங்கள் அனைவரையும் தமிழ்நாட்டுக்கு வந்து முதலீடு செய்யுங்கள் என்று நான் வரவேற்கிறேன். நாங்கள் மேற்கொண்டிருக்கும் மகிழ்ச்சி யளிக்கும் பயணத்தில் நீங்களும் ஒரு பகுதியாக மாறுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

◆ ◆ ◆

பொங்கல் விழா

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

உழவே தலைஎன் றுணர்ந்த தமிழர்
விழாவேஇப் பொங்கல் விழாவாகும் காணீர் !
முடிவு முழங்கிற்றுப் புதுநெல் அறுத்து
வழங்கும் உழவோர்தான் வாழ்த்துகின்றாரே !

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்என்ற சொல்லிற்
பழுதுண்டோ ? காணீர் பழந்தமிழர் "நாங்கள்
உழவரே" என்றுவிழா ஒப்பி மகிழ்ந்தாரே !

இன்றும் நாளையும்

- பிரபஞ்சன்

அப்பாவிடம் ஒரு பட்டு வேஷ்டி இருந்தது. அப்பாவிடம் வெண் பட்டும், பொன்னிறப்பட்டு வேஷ்டிகளும் நிறைய இருந்தாலும் கூட, குழந்தைகளாகிய எங்களுக்கு அவருடைய சிவப்புப் பட்டு வேஷ்டியே அற்புதமானதாகத் தோன்றியது.

சிவப்பென்றால் சுத்த சிவப்பும் இல்லை. குங்கும வண்ணமும் இல்லை. செப்புப் பாத்திரத்தைப் புளிப்போட்டு விளக்கி படிக்கல்லில் வைத்துவிட்டுக் குளிப்பார்களே, அப்போது பார்த்திருக்கிறீர்களா, நீங்கள்! உதயகாலத்துச் சூரிய ரேகைகள் பட்டு தகதகக்குமே. அந்தச் செப்புப் பாத்திரம் - அது மாதிரியான வேஷ்டி அது.

முழுவதும் செப்புக் கலரும் இல்லை. கரை பச்சை நிறம். நாலுவிரல் அகலம். கரையில் சரிகை வேலைப்பாடுகள், சரிகை வேலைப்பாடு என்ன என்கிறீர்கள்? வாத்துகள் ஒன்றன் பின் ஒன்றாய் அணிவகுத்துச் செல்கிற சித்திரம். அவை வாத்துகள் அல்ல, அன்னப்பறவைகள் என்றாள், அம்மா... நாங்கள் அன்னப் பறைவைகளை நிஜத்தில் பார்த்ததில்லை. அந்த வேஷ்டியின் கரையில்தான் பார்த்திருக்கிறோம். எதுவானால்தான் என்ன? உயிருள்ள ஜீவராசிகள்.

அந்த வேஷ்டி சாதாரணமாகக் கண்களில் காணக் கிடைப்பதில்லை. அப்பா, அதை அவருடைய ஆளுயர, மிக அகலமான அலமாரியில் வைத்திருப்பார். அந்த மாதிரி அலமாரிகள் எல்லாம் இப்போது கிடைப்பதில்லை. ஒற்றை ஆள் அகலம்தானே இப்போதைய அலமாரிகள். அதுவோ மூன்று அலமாரிகளைப் பக்கம் பக்கமாக நிறுத்தி வைத்தது போல் இருக்கும்.

அப்பா அலமாரியில் இருந்து, அதை எடுக்கப்போகும் நேரம் எங்களுக்குத் தெரியும். எனக்கும் என் தங்கை ராஜேஸ்வரிக்கும், பண்டிகை மற்றும் தாத்தாவுக்கு தெவஷம் முதலான நாள்களில்தான் அது வெளிவரும். அந்த நாள்கள்தான் எங்களுக்கு முந்தியே சொல்லப்பட்டிருக்குமே! அப்பா குளித்துவிட்டு வந்து அந்த வேஷ்டியைத்தான் எடுத்து உடுத்துவார். அப்பா எப்போது குளித்துவிட்டு வருவார் என்று தவம் கிடப்போம், அலமாரிக்கு முன்னால்.



அப்பாவுக்குக் குளிக்க ஒரு மணி நேரம் அவசியப்படும். அநியாயத்துக்கு ஏன் அவர் தாமதம் பண்ணுகிறார் என்று இருக்கும். அது குழந்தைப் பருவம். கேள்விகளால் மட்டுமே ஆன பருவம். இப்போது தெரிகிறது. குளிப்பது அழுக்குப் போகவா? அழுக்குப்போக குளித்தது யார்? குளிப்பது ஒரு சுகம். உச்சந்தலையில் விழுந்த குளிர்ச்சி வழிந்து வழிந்து பாதத்துக்கு வருகிற இன்பதுக்குத்தானே குளிப்பது... குளித்த பின் ஏற்படுகிற புத்துணர்ச்சிக்குத்தானே குளிப்பது? அப்பா ஒரு மணி நேரம் எடுத்துக்கொண்டது நியாயம் என்றே தோன்றுகிறது.

சரி! குளித்ததும் சட்டுப்புட்டென்று வந்து வேஷ்டியை எடுப்பார் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. குளித்ததும், கோமணத்தோடுவாசலுக்கு வந்து நின்றுவிடுவார். ஈரத்தைப் பாதி தானும், மீதி சூரியனும் துடைக்க வேணும். நாங்களும் அப்பாவையே பார்த்துக்கொண்டு இருப்போம். நீர் முத்துக்கள் அவர் முதுகில் கோடு கிழித்துக் கொண்டு இறங்குவதைப் பார்க்க வியப்பாய் இருக்கும். அவர் முதுகே ஒரு பெரிய தாமரை இலையாகவும், நீர்கள் முத்துக்களாகவும் தோணும். நிதானமாகவும், அங்குலம் அங்குலமாகவும் ஈரம் போக்குவார்.

அப்பாவின் உடம்பு சிவந்து போய்விடும். ஏற்கெனவே அவர் சிவப்பு. குளித்த பின், உடம்பு பழுத்துவிட்டது மாதிரி இருக்கும்.

'மணியாகுது.. சீக்கிரம் வந்து படைச்சா என்ன?' என்பாள் அம்மா. இதைக் கோபமாகவும், குற்றச்சாட்டாகவும் சொல்வாள் என்கிறீர்களா! இல்லை! இன்னும் கொஞ்ச நேரம்தான் ஆகட்டுமே என்று அப்பாவை தட்டிக் கொடுப்பது போல் இருக்கும். கூரை எரவானத்தில் ஒரு கையை வைத்து குனிந்து, வாசலில் நிற்கும் அப்பாவைப் பார்த்து சிரித்துக் கொண்டு அம்மா இதைச் சொல்கையில் எங்களுக்குக் கோபம் கோபமாய் வரும்.

அப்பாடா! ஆச்சு... ஒருவழியாகக் குளித்து முடித்து துவட்டிய துண்டை இடையில் கட்டிக்கொண்டு கோமணத்தை உருவி, பிழிந்து, பத்து தடவை ஈரத் தூசி பரக்க உதறி உதறி வாசலில் கட்டியிருக்கும் கொடியில் காயப் போடுவார். அது காற்றில் பறந்து விடாமல் இருக்க, முனைகள் இரண்டையும் பிடித்து முடிச்சுப்போடுவார். அப்புறம் தலை முடியை, தலையைக் கவிழ்த்து தட்டித் தட்டி ஈரம் போக்குவார். தெரிக்கும் நீர் தூசுகள். சின்னஞ்சிறுக் கொசுக்கூட்டம் மாதிரி இருக்கும்.

அப்புறம் கூடத்திற்கு வருவார். அப்பா. சடாரென்று வந்தால் தேவலையே! அதுதான் இல்லை. கூடத்து மிதியடியில் காலை இப்படி அப்படி போட்டு புறட்டிப் புறட்டி நன்கு மணல், மண் துடைப்பார். காலில் ஒரு துளி அழுக்கு இருக்காது. அழுக்கு அவரது ஜென்ம பகை ஆச்சே!

எங்களுக்குத் தெரியுமே! அப்புறம்தான் அலமாரியைத் திறப்பார் அப்பா.

அந்தக் கணம் ஒரு அபூர்வமான கணம். கதவைத் திறந்ததும், குபீரென்று பச்சைக் கற்பூர வாசனை வந்து தாக்குமே, சிலிர்க்க அடிக்குமே உடம்பை, அந்த கணம். அதற்காகத்தானே காத்திருக்கிறோம். இத்தனை நாழி காத்திருக்கிறோம். நாங்கள் மூக்கு, வாய் இரண்டையும் கரை மீன் திறப்பது போல திறந்து திறந்து மூடி அந்த வாசனையை அனுபவிப்போம். அலமாரிக்குள் ஒரு சின்ன ஜாதிக்காய் பெட்டி வைத்திருப்பார். அந்தப் பெட்டிக்குள்ள என்ன இருக்கும்?

ஒரு நாள், 'அப்பா... அப்பா... அந்தப் பெட்டியை எனக்கு காட்டுப்பா!' என்றேன். அப்பா ,சிரித்துக்கொண்டே என்னைத் தூக்கிப் பெட்டியண்டைக் காட்டினார். ஒரு வெள்ளைத் துண்டில் சுற்றி வைக்கப்பட்ட காகிதம். (பத்திரங்கள் என்று பின்னாளில் தெரிந்து கொண்டேன்) ராணி, ராஜா படம் போட்ட நோட்டுகள், தங்க காசுகள் அப்பாவுடைய சிவப்புக்கல், வெள்ளைக் கல் மோதிரங்கள் எல்லாம் இருந்தன. ராஜி பொறுத்துக் கொள்வாளா என்ன? நானும் பார்க்கணும்பா... என்றாள். அப்பா அவளையும் பெட்டி தரிசனம் பண்ணி வைத்தார்.



அப்பா இப்போது அந்தப் பெட்டியைத் திறந்தார். ஜாக்கிரதையாக அந்த சிவப்பு வேஷ்டியை எடுத்துக் கொண்டு, அறைக்குள் போனார். துவைத்துக் காயப்போட்ட அன்டிராயர்கள் அப்பா அறையில், கொடியில் தொங்கும். அவைதான் எவ்வளவு பெரியவை! ஒன்றை வெட்டி ராஜிக்கு பாவாடையும், சட்டையும் தைக்கலாம் என்று இருக்கும். அப்பா முட்டிவரை நீளும் அந்த அன்டிராயரைப் போட்டுக் கொண்டு, அதன் மேல் வேஷ்டியைக் கட்டிக் கொண்டால்தான் அப்பாவுக்கு நிறக்கும்!

அப்பா வேஷ்டியைக் கட்டிக் கொண்டு வெளியே வருவார். அடடா... நெருப்பைச் சுற்றிக் கொண்டு வருவது போல் அல்லவா இருக்கும்... அந்த வேஷ்டியில்தான் அப்பா எவ்வளவு அழகாகத் தெரிந்தார். அவரால் அந்த வேஷ்டிக்கு மகிமையா, அல்லது அந்த வேஷ்டியாலா? அப்பாவை அப்போது கட்டிக்கொள்ள வேண்டும் போல் இருக்கும். கட்டிக்கொள்வேன். பச்சைக் கற்பூரத்தின் வாசனையோடு, அந்தப் பட்டு சில்லென்று குளிர்ச்சியாய், பாப்பாவின் கன்னம்போல மிருதுவாய் இருக்கும். அதைத் தடவித் தடவிச் சந்தோஷம் கொள்வேன்.

அந்த வேஷ்டியோடுதான் பண்டிகை மற்றும் விசேஷ நாட்களில் தெவஷத்தின் போது அப்பா பூஜை எல்லாம் செய்வார். பூஜை என்றாலே எனக்கு நினைவில் நிற்பவை இரண்டு விஷயங்கள்தான். ஒன்று சாப்பாடு. அன்றைக்கு சீக்கிரம் ஆகாது. தாமதம் ஆகும். வடை, பாயசம் என்று பட்டியல் நீள்வதால் அப்படி, ரெண்டாவது, அந்த நாட்களில் இனிப்பு பட்சணங்கள் கட்டாயம் இருக்கும். தவிர சொந்தக்காரர்கள் நிறையப் பேர் வருவார்கள். மரம் ஏறிய கையோடு குடுக்கையும், வடமுமாகச் சிலர் வருவார்கள். தென்னை மரத்தைத் தேய்த்து ஏறிய காரணமாகவும், கள்ளுக்குப் பாளை சீவியதின் காரணமாகவும், அவர்கள் மேல் கள் நெடி அடிக்கும். கள் வாசனை, பூவைப் போலவே நல்ல வாசனைதான். சாப்பிட உட்காருவதற்காகக் குடுக்கையை சுவர் ஓரம் சாய்த்து வைப்பார்கள். அதில் உள்ள அரிவாளின் பளபளப்பு என்னைக் கவர்ந்த ஒன்று. அதைக் கையில் எடுத்துப் பார்க்கும் தைரியம்தான் இன்றுவரை ஏற்படவில்லை. அந்த அரிவாளின் கூர்மையும் பட்டின் பளபளப்பும் சமம்.



இளமைக்காலத்தில் எனக்குள் ஒரு லட்சியம்தான். பெரியவர்கள், 'நீ பெரியவன் ஆனதும் என்ன செய்யப் போகிறாய்?' என்று கேட்பார்கள். அப்பாவும் அம்மாவும் எனக்கு உருவேற்றி இருந்தார்கள். டக்கென்று பதில் சொல்வேன். 'நான் டாக்டராவேன்' - இல்லையெனில், 'நான் இன்ஜினீயர் ஆவேன்' என்று சமயத்தில் ஞாபகத்துக்கு வந்ததைச் சொல்வேன். கேட்டவர்கள் திகைத்துப் புருவத்தை மேலே உயர்த்தி என்னைப் பார்ப்பார்கள். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பெருமை நிலை கொள்ளாது.

ஆனால், இந்த டாக்டர் பெருமையும், இன்ஜினீயர் பெருமையும் என் மனசுக்குள் இல்லை. பெரியவர்களுக்கு முன் நான் பொய்தான் சொன்னேன். இந்தப் பொய் ரசிக்கத்தக்க பொய். பெரியவர்கள் துண்டமாக்கிக் கொடுத்திருந்த இதை அவர்களிடமே திரும்பவும் நான் வீசினேன். சந்தோஷமாக வாலை ஆட்டிக்கொண்டு அவர்கள் அதை விழுங்கிக் கொண்டார்கள்.

இதைச் சொல்ல வெட்கம் என்ன? எனக்குப் பெரியவன் ஆனதும் அப்பாவின் வேஷ்டியைக் கட்டிக்கொள்ள வேண்டும்! இதுவே என் லட்சியமாக இருந்தது. நான் பெரியவன் ஆக ஆசைப்பட்டதும் இதற்காகத்தான். பெரியவன் ஆனால் அப்பாவைப்போல மீசை முளைக்குமே! மார்பில் சுருள் சுருளாக முடி முளைக்குமே... முக்கியமான விசேஷ நாட்களில், அந்தச் சிவப்பு பட்டு வேஷ்டியைக் கட்டிக் கொண்டு நான் சாமி கும்பிடுவேனே... நான் பெரியவன் ஆக வேண்டுமே!

மடித்தே வைக்கப்பட்டுக் கிடந்ததால், அந்த வேஷ்டி எப்போதும் மடிப்புக் குலையாமல் இருக்கும். மடிப்புகள் பிரிக்க முடியாதவனவாக இருக்கும். கடைசி வரை அன்னங்கள் முழுமையாகவே இருந்தன. சரிகைக்கரை இற்று விழவில்லை. நெசவு நேர்த்தி அப்படி. அது அந்த காலத்துக் கை வேலைத்திறன். அவசர வாகன யுகம் தோன்றுமுன்பே தோன்றிய ஒரு நெசவுக் கலைஞனின் கைநேர்த்தி அப்படி உருவாகி இருந்தது. 'இதை எங்கு வாங்கியது?' என்று அப்பாவிடம் கேட்டு வைத்துக் கொள்ளவில்லை நான். காவிரிக் கரையில், சோற்றுக்குப் பஞ்சமில்லாத - வெற்றிலைப் பாக்கைப் போட்டுச் சிவந்த, உடம்பில் இளஞ்சூடு பரவிய திருப்தியில் ஒரு மனிதன் தன் மனைவியோடு சேர்ந்து நெய்த வேஷ்டியாக இது இருக்க வேண்டும். மாயவரம், கூரை நாடு, திருபுவனம் என்று ஏதாவது ஒன்றாய் இருக்கக் கூடும். பிறப்பிடம், மூலம் எதானால் என்ன? பிறந்த பயனை, கர்மாவைக் குறைவர பரிபூரணமாக செய்தது, அது என்பது சத்தியம்.

எனக்குக் கல்யாணங்களுக்குப் போவதில் அந்தக் காலத்தில் பெருத்த ஆர்வம் இருந்தது. காரணம் இதுதான். மாப்பிள்ளை பட்டுடுத்திக் கொண்டிருப்பார். பட்டு வேஷ்டியைப் பார்ப்பது இன்பமயமான அனுபவமாக இருக்கும். எத்தனை, எத்தனை வகையான பட்டுடுத்திப் பெண்கள் கல்யாணங்களுக்கு வருகிறார்கள். பட்டுப் புடவைகளை வைத்துக் கொண்டு கல்யாணங்களுக்கு ஏங்குகிறார்கள் பெண்கள். கல்யாணங்களே உலகில் இல்லாது போனால், இந்தப் பெண்கள் கண்ணீர் வடிப்பார்கள். பட்டுடுத்தி யாரிடம் காட்டிப் பரவசப் பட்டுக் கொள்வது?

என் கனவுகள் கூட அந்தக் காலத்தில் பட்டாயிருந்தன. கனவுகளில் அன்னப் பறவைகள் அணிவகுத்து வரும். ஆகாயம் செம்புக் கலரில், கத்தியாய் மின்னும். அந்த செம்புக் கலரில் ஊடே, பச்சை நிறத்தில் ஒரு நீளமான ஆறு. அந்த ஆற்றில் அந்த அன்னங்கள் நீந்தின. அந்த வேஷ்டியை அப்பா துவைத்து நான் இரண்டு முறை பார்த்திருக்கிறேன். குழந்தை பாப்பாவை குளிப்பாட்டுவது மாதிரியே இருக்குமே! அதற்கு சுடு தண்ணீர் ஆகாது. பச்சை தண்ணீரில்தான் குளிர்விப்பார். சவுக்காரம் அதற்கு ஆகாதாம். ஆகவே சந்தனச் சோப்பைத்தான் அப்பா உபயோகிப்பார். அப்பா குளித்தது மைசூர் சந்தனச் சோப்பில். அதற்கு முன்பு கதம்ப சோப்பில். பிரான்சில் இருந்து வந்த 'கதம்' சோப். நாங்கள் கதம்ப சோப் என்போம். இறக்குமதி நின்றுபோன உடன் மைசூர் சந்தன சோப். அதைத்தான் அதற்கு போடுவார். சோப் போடுவது தடவிக் கொடுப்பது மாதிரி இருக்கும். அம்மா எங்களுக்கு எண்ணைத் தேய்த்துவிடுகிற முரட்டுத்தனம் இருக்காது. அவ்வளவு மெது. கசக்கிப் பிழியமாட்டார். மெதுவாக நீரில் அகல வாக்கில் வேஷ்டியினை முனைகளைப் பிடித்துக்கொண்டு அலசுவார். பிறகு, தண்ணீர்த் துளி எங்கள் மேல் தெறிக்க, உதறுவார். ரொம்பவும் உதறக்கூடாது. நாள் பட்டத்துணி கிழிந்துவிடக் கூடும். உதறும்போது, மழைச்சாரலில் நிற்பதுபோல் இருக்கும் எங்களுக்கு. அப்புறம் நிழலில் காயப்போடுவார். வெயில் பட்டால் நிறம் வெளுக்கக் கூடும். காய்ந்ததும் அப்பாவுக்கு சொல்ல வேண்டியது எங்கள் பொறுப்பு. நாங்கள் மாற்றி மாற்றி 5 நிமிஷத்துக்கு ஒரு முறை துணியை தொட்டுப் பார்த்துக்கொண்டே இருப்போம். காய்ந்துவிட்டதா என்று பார்ப்பதற்காகத்தான். எங்களுக்கு இந்த ஒரு சாக்கு. அந்த சாக்கில் வேஷ்டியை தொட்டுப் பார்த்துக்கொண்டே இருக்கலாமே!

சாயங்காலம் வாக்கில் வேஷ்டி காய்ந்துவிட்டிருக்கும். அப்பாவிடம் சொல்ல ஓடுவோம். அப்பாவே வந்து, நிதானமாக அதைக் கொடியிலிருந்து எடுத்து, மூள்ள பிசிரில்லாமல் இழுத்து மடித்து மீண்டும் அந்த பெட்டிக்குள் வைத்துவிடுவார். இனி அதன் உபயோகம் அடுத்த நல்ல நாளில்தான்.

நாளடைவில் எனக்கும் மீசை முளைத்து ஒரு சினேகிதன் சகோதரிக்கு லவ் லட்டரும் கொடுத்தேன். உதை வாங்கினேன். நியாயம்தானே! அப்புறம் கல்லூரிக்குச் சென்றேன் என்னமோ படித்தேன். என் மூளையை ஆக்கிரமித்துக்கொள்ள எவ்வளவோ விஷயங்கள் இருந்தன. என் கவனத்தைக் கவர எவ்வளவே நிகழ்ச்சிகள், நடப்புகள், உல்கம் ஜீவத்துடிப்போடு ஒவ்வொரு கணமும் அல்லவா பிறந்து இறந்து, பிறந்து இறந்து தன்னை புதுப்பித்துக் கொள்கிறது. என் மனசில்தான் எத்தனை ஆவா கனங்கள்... கம்பன் கதை சொல்லிகள்! கொடி மரத்து மூலை வக்கீல் ஜெகந்நாதையர் மகள் உமா மகேஸ்வரி எல்லோரும் சேர்ந்து என்னை உருமாற்றி அடித்து விட்டார்களே. கம்பியை நகையாக்குவது போல...! இடையிடையே அந்த செப்புப் பட்டு வேஷ்டியும் என் நினைவில் ஆடும். நீ எங்கு எவ்வாறு இருக்கிறாய் ?



அதைப் போற்றிக் கொண்டாடி பயன் துய்க்க அப்பா இல்லை. பெட்டியுள் இருக்கும் பாம்பென உயிர்த்துக் கொண்டிருக்கும் அது என்பது எனக்குத் தெரியும். ஆண்டுகள் பல கழித்து ஒருமுறை சொந்த ஊருக்கு வந்தபோது, ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அப்போது விநாயக சதுர்த்தி வந்தது. நன்றாக நினைவு இருக்கிறது, ராஜி கல்யாணம் செய்து கொண்டு போய்விட்டிருந்தாள். நான்தான் பிள்ளையார் வாங்கி வந்தேன். அச்சுப் பிள்ளையார்தான். மூக்கும், முழியும் கன கச்சிதம். இந்த சாமிதான் என்ன அழகான கற்பனை! என்னையே படைக்கச் சொன்னாள் அம்மா.

மனசுக்குள் ஒரு படபடப்பே எனக்கு ஏற்பட்டுவிட்டது. அந்தப் பெட்டிக்குள் இருக்கும் வேஷ்டியை நினைத்துத்தான். சுயநினைவின்றித் தான் குளித்தேன். ஈரம் போகாமல் துவட்டிக்கொண்டு, அப்பாவின் அலமாரியைத் திறந்தேன். அந்தப் பச்சைக் கற்பூர வாசனை இன்னும் இருந்தது. வாசனை போகாது போலும்! அனுபவித் தேன். உடன் ராஜீ இல்லையே என்று வருத்தமாய் இருந்தது. ஜாக்கிரதையாகப் பெட்டியையும் திறந்தேன். அப்பாவின் மோதிரங்களைத் தவிர மற்றவை அனைத்தும் அங்கு இருந்தன. மோதிரங்கள். என் கல்லூரிக் கட்டணமாகவும், சாப்பாட்டுச் செலவாகவும் ஏற்கெனவே மாற்றம் அடைந்திருந்தன.

வேஷ்டியை வெளியே எடுத்தேன். அதன்மேல் சுற்றிய துண்டை நீக்கினேன். அதே குழந்தையின் மென்மை. அதே கத்திரியின் பளபளப்பு. அதே வாசனை. கொஞ்சம் கூட நிறம் மங்கல் இல்லை.

இடுப்பில் சுற்றிக்கொண்டேன். மனசு அப்பாவை நினைத்துக் கொண்டது. மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. வாழை இலையைச் சுற்றிக் கொண்டது போல் இருந்தது. அவ்வளவு மழமழப்பு.

மனைப்பலகையை எடுத்துப் போட்டுக் கொண்டு பிள்ளையாருக்கு முன் அமர்ந்தேன். ஒரு ஓசை. முனகலோடு வேஷ்டி உயிரை விட்டது. என் பின் பக்கத்து மடிப்புகள் தோறும் நீளம் நீளமாகக் கிழிந்திருந்தது. எழுந்து நின்று கொண்டேன். இருட்டில் குழந்தையின் கையை மிதித்துவிட்டாற் போல் இருந்தது.

அடுப்பங்கரையிலிருந்து அம்மா கொழுக்கட்டைப் பாத்திரத்தோடு வந்தாள்!

"என்னடா, கிழிஞ்சுப்போச்சா... போவட்டும்... அப்பா காலத்து வேஷ்டி! உனக்கு எப்படி உழைக்கும்... போயி, உன் வேஷ்டியைக் கட்டிக்கொண்டு வந்து காரியத்தைப் பாரு!" என்றாள் அம்மா.

நான் என் டெரிகாட்டன் வேஷ்டியை எடுதது கட்டிக் கொண்டு, பிள்ளையாருக்கு முன் உட்கார்ந்தேன். டெரிகாட்டன் வேஷ்டிதான் எனக்குச் சரி என்று பட்டது. ஆனாலும் மனசுக்குள் எங்கோ வருத்தமாகத்தான் இருந்தது!

★ ★ ★

தழைத்தோங்கும் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை

ஆந்திர மாநிலம், ஆர்.மா. குப்பம் என்ற இடத்தில் திராவிடப் பல்கலைக் கழகம் அமைக்க முதற்கட்டமாக ரூ.50.00 இலட்சம் முதலமைச்சர் கலைஞரின் ஆணையில் வழங்கப்பட்டுள்ளது.

பிற மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடப்படும் நூல்களுக்கு ரூ.25,000 அல்லது அச்சிடும் செலவில் 60% இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப்படும். 1996 - 97 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.5.00 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு நூல்கள், வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பட்டு ரூ.1,13,141 வழங்கப்பட்டுள்ளது.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 441 பேருக்கும் நலிந்த கலைஞர்கள் 4267 பேருக்கும் திங்கள்தோறும் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.1500ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்மொழிக் காவலர் நிதியுதவிக் திட்டத்தின் கீழ் திங்கள்தோறும் வழங்கப்படும் நிதியுதவி . ரூ.400லிருந்து ரூ.500 ஆகவும், பின்னர் ரூ.500 லிருந்து ரூ.1500 ஆகவும் உயர்த்தப்பட்டுத் தற்போது . ரூ.3000 ஆக உயர்த்தி 1935 பேருக்கு வழங்கப்படுகிறது.

மொழி ஞாயிறு தேவநேயப் பாவணர் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது. மறைமலையடிகளாரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது குடும்பத்திற்கு, காப்பு நிதியாக ரூ.20 இலட்சம் வழங்கப் பட்டது.

தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தும் நோக்காக 500 தமிழ்த் தட்டச்சு பொறிகள் தலைமைச் செயலகத்தில் வாங்க ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டது.

சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 43.75 இலட்ச ரூபாய் இந்த அரசு வழங்கியிருக்கிறது.

ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திற்குத் தமிழ் தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளுக்காக 96-97 ஆம் ஆண்டில் 19.57 இலட்ச ரூபாயும், 97-98 ஆம் ஆண்டில் இருபது இலட்ச ரூபாயும் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

மதுரை தமிழ்ச்சங்க மேம்பாட்டிற்கு நிதி உதவி

மதுரை தமிழ்ச் சங்க மேம்பாட்டிற்காகத் தேவர் பேரவையின் கோரிக்கைகளை ஏற்று, கழக அரசு 45 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கின்றது.

ஆந்திர மாநிலத்திலுள்ள திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு இந்த அரசு 50 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியிருக்கிறது.

மறைமலை அடிகள் நூலகத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த மான்ய உதவி பத்தாயிரம் ரூபாயை ஒரு இலட்ச ரூபாயாக உயர்த்தி இந்த அரசு வழங்கத் தொடங்கியிருக்கிறது.

திருவான்மியூரில் உள்ள உ.வே.சாமிநாத அய்யர் நூலகத்திற்கு வழங்கப்பட்டு வந்த 60 ஆயிரம் ரூபாய் மான்ய உதவியை இந்த ஆண்டு முதல் 1 இலட்ச ரூபாயாக உயர்த்தி வழங்கியதும் இந்த அரசுதான்.

புதுதில்லி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் திருவள்ளுவர் கலையரங்கத்திற்கு கூடுதல் வசதிகள் செய்வதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ரூ.10 இலட்சம் நன்கொடை வழங்கப்பட்டது.

சென்னையில் இயங்கும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் 25 ஆண்டுகளைக் கடந்து 'வெள்ளி விழா'க் கொண்டாடும் இத்தருணத்தில், இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகளுக்குக் கூடுதலாக ரூ.14.42 இலட்சம் சிறப்புத் தொகையாக அரசு வழங்கியுள்ளது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தின் கீழ் உயிரெழுத்துக்கள் வரிசையில் 'அ' கரம் முதல் 'ஔ' காரம் வரையிலான . மூன்றாவது பகுதி விரைவில் வெளியிடப் படவுள்ளது.

திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளிக்கு இதுவரையில் நன்கொடையாக ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு இத்தொகையை ரூ.10 இலட்சமாக முதலமைச்சர் கலைஞரின் ஆணையில் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இந்துமாக் கடல் நாடுகளின் கடலாய்வு குறித்து பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்று, 1997 பிப்ரவரியில் சென்னையில் தொல்பொருள் ஆய்வுத் துறையும், இணைந்து முதல்முறையாக நடத்தப்பட்டது. பூம்புகார் கடல் அகழாய்வில் வெளிப்படுத்தியிருக்கிற பொருட்கள் பற்றியும், அவற்றை வெளிக்கொண்டு வருவது குறித்தும், பாதுகாப்பு முறை குறித்து கலந்துரையாடவும் உள்நாட்டிலிருந்து வருகை புரிந்த அறிஞர் பெருமக்கள் உணர்ந்து கொள்ளவும் இது ஏதுவாக அமைந்தது.

அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகத்தில் ரூ.25.66 இலட்சத்தில் நுண்படப் பிரிவு அமைக்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவாரூர், சேலம், திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களில் ரூ.25 இலட்சம் செலவில் இசைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 98-99ம் ஆண்டில் ஐந்து மாவட்டங்களில் புதிதாக இசைப் பள்ளிகள் தொடங்கப்படவுள்ளன.

திருநெல்வேலி, உதகமண்டலம், கோயம்புத்தூர், கடலூரர், தஞ்சாவூர், சேலம், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் ஜவகர் சிறுவர் இல்லம் தொடங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் விரைவில் தொடங்கப்பட உள்ளது. 1998. 99ம் ஆண்டில் மேலும் ஐந்து மாவட்டங்களில் ஜவகர் சிறுவர் இல்லங்கள் தொடங்கப்படவுள்ளன.

மக்களிடையே கலை பண்பாட்டு வளர்ச்சி தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நலிந்து வரும் கிராமியக் கலைகளையும், கலைஞர்களையும் பேணிப் பாதுகாக்கவும் ஊக்கமளித்திடவும் காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர் மற்றும் விருதுநகர் ஆகிய 4 மாவட்டங்களில் கலை பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ★

நீரின்றி அமையாது உலகு

சென்னை மாநகர் - புறநகர்ப்பகுதிகளின் குடிநீர்ப்பிரச்சினைகளை அறவே தீர்த்திடும் வகையில் 'கிருஷ்ணா நதிநீர்த்திட்டம்' இவ்வரசு பதவியேற்றதும் முழுவீச்சில் முடுக்கிவிடப்பட்டு, சென்னைக்கு - கிருஷ்ணா நதிநீர் கொண்டு வரப்பட்டுள்ளது.

- ★ பல ஆண்டுகளாக அதிக முதலீட்டில் செயலாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் சரிவரப் பராமரிக்கப்படாமல் இருந்த நிலையில் தமிழ்நாடு அரசு 1996 மே திங்களில் பதவியேற்றவுடன் - ரூ.39 கோடி செலவில் 96-97ஆம் ஆண்டில் 3,200 கிராமக் குடிநீர்த் திட்டங்களையும் 225 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் போர்க்கால அடிப்படையில் செம்மையுறச் சீரமைத்துள்ளது; 'நீரின்றி அமையாது உலகு' என்பதுணர்ந்து பயன்பெற வழிவகை செய்துள்ளது. நகர்ப்புறக் குடிநீர்த் திட்டங்களுக்கும் இதே கொள்கை அடிப்படையில் 97-98ஆம் ஆண்டில் புனரமைப்புப் பணிகள் 258 திட்டங்களுக்கு ரூ.13 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, நவம்பர் 97 வரை 221 நகரங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- ★ தமிழக முதலமைச்சராகக் கலைஞர் அவர்கள் பதவியேற்றவுடன், குடிநீர்த் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள். 9வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் சுமார் 2200 கோடி ரூபாய் இதற்கெனச் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ★ கிராமப்புறக் குடிநீர்த் திட்டங்களில் 10 லிட்டர் வரையில் குடிநீர் வசதி பெறும் சுமார் 10,000 குடியிருப்புகளுக்கு 97-98, 98-99 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 40 லிட்டர் குடிநீர் வசதி செய்து தரத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சுமார் 20,000 குடியிருப்புகளில் (11-39 லிட்டர்) அடுத்த மூன்று ஆண்டுகளில் 40 லிட்டர் குடிநீர் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ★ நகர்ப்புறத் திட்டங்களில் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ள தொடர் திட்டங்களை (Spill over schemes) முடிக்க முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஐந்து நகராட்சி குடிநீர்த் திட்டங்களும் பதினெட்டு (18) நகரப் பேரூராட்சிக் குடிநீர்த் திட்டங்களும் குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்படும்.
- ★ கடற்கரையைச் சார்ந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் பாரத கன மின் நிறுவனம் மூலமாக 11 இடங்களில் மிகத் தாமதமாக நடந்துகொண்டிருந்த 'உவர்நீரை - நன்னீராக்கும் திட்டப்பணி' முடுக்கிவிடப்பட்டுள்ளன; அவற்றில் 6 திட்டங்கள் (பெருங்குளம், கீழாம்பல், கிடாதிருக்கை, உரத்தூர், உத்திரகோசமங்கை, கிழப்புருத்தியூர் ஆகிய ஊர்களில்) நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 இடங்களில் வேலைகள் விரைவுபடுத்தப்பட்டு, வருகின்ற மார்ச் 98க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ★ பழுதடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைச் சீர்செய்யவும், கூடுதல் தேவைகளுக்குப் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டவும், 97-98ஆம் ஆண்டில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் திட்டம் மேற்கொள்ளப்பட்டு 970க்கான பணிகள் தொடங்கி அவற்றில் 253 முடிக்கப்பட்டுள்ளன.
- ★ தேசிய நதி நீர் மாசுக்கட்டுப்பாடு திட்டத்தின் மூலமாக ரூ.3 கோடி மதிப்பீட்டில் திட்ட வேலைகள் ஈரோடு, பள்ளிபாளையம், கொமாரபாளையம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ★ தருமபுரி மாவட்டத்திலுள்ள குடியிருப்புகளுக்குச் சுமார் ரூ.630 கோடி செலவில் ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் திட்டம் மேற்கொள்ள ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ★ இந்த அரசின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில், கிராமங்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், 97-98ஆம் ஆண்டில் 1828 குடியிருப்புகளில் ரூ.60.90 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ★ பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் ஊரகத்துப்புரவு முகாம்கள் நடத்த நடப்பாண்டில் (1997-98) ஈரோடு, தருமபுரி, இராமநாதபுரம், திண்டுக்கல் ஆகிய நான்கு மாவட்டங்களில் ரூ.1.36 கோடியில் கல்வி-தகவல் தொடர்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- ★ நாகப்பட்டினம் மாவட்டத்தில் 8 கடலோர ஒன்றியங்களில் உள்ள 279 குடியிருப்புகளில், உவர்ப்புத்தன்மையின் காரணமாகக் குடிநீர் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இப்பகுதிகளில் வாழும் 5,47,000 மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தாராளமாக வழங்க, வழிவகுக்கும் வகையில், கொள்ளிடம் ஆற்றுப்படுகையிலிருந்து நீரெடுத்து மிகப்பெரிய அளவிலான, கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு, ரூ.98.75 கோடி ஒதுக்கி, முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். ★



வீட்டு வசதி வாரியம்

வீட்டு வசதி வாரியம்

- ★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - 20,500 வீடுகளை ஒரே ஆண்டில் கட்டிமுடித்து ஒப்பற்ற சாதனை புரிந்துள்ளது; 'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்னும் உயரிய குறிக்கோளில் ரூ.700 கோடியில் வீடுகட்டும் பணிகள் விரைந்து செயல்படுத்தப்படும் என முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார். பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கென 5162 வீடுகளும், குறைந்து வருவாய்ப் பிரிவினருக்கென 4216 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கென 5976 வீடுகளும், உயர் வருவாய்ப் பிரிவினருக்கென 4647 வீடுகளும் - ஆகமொத்தம், ஒரே ஆண்டில் 20,500 வீடுகள் கட்டி வெற்றிச் சரிதம் படைக்கப்பட்டுள்ளது. மேலும் 31 நகர மையங்களை வளர்ச்சி மையங்களாக தெரிவு செய்து 10,234 குடியிருப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டு இதுவரை 7,561 குடியிருப்புகள் முடிக்கப்பட்டுள்ளன.
- ★ சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் திருப்பூர் ஆகிய 10 நகரங்களில் உலக வங்கியின் நிதிஉதவியுடன் ரூ.246.41 கோடி செலவில் 70,000 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டது.
- ★ நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 70,000 மனைகளை முன்னதாகவே முடிக்கப்பட்டதால் மேலும் கூடுதலாக 18728 மனைகளை உருவாக்கி அதன் மொத்த இலக்காக 88728 மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- ★ 31 நகரமையங்களை வளர்ச்சி மையங்களாகத் தெரிவு செய்து, 10,234 குடியிருப்புகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 7561 குடியிருப்புகள் முடிக்கப்பட்டுள்ளன.
- ★ மாநிலத்தில் உள்ள 12 சிறிய மற்றும் வாரிய நகரங்களில் 4503 குடியிருப்புகளை ரூ.40.83 கோடி செலவில் உருவாக்கப்படும்.
- ★ தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருமழிசையில் 2000 ஏக்கர் நிலத்திலும், ஜமீன் பல்லாவரத்தில் 600 ஏக்கர் நிலத்திலும், சார்புநகரம் உருவாக்கப்படுகிறது.
- ★ சோளிங்கநல்லூரில் 500 ஏக்கர் நிலத்தில் 10,000 குடியிருப்புகளும் மகாபலிபுரத்தில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் 2500 குடியிருப்புகளும் கட்டப்படும்.
- ★ திரு.வி.க.நகர் மற்றும் சர்மா நகரில் வீடு ஒன்றுக்கு ரூ.9600 என்று சலுகை விலையில் தொழிலாளர்களுக்கான வீட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 210 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனை ஏற்பாவணங்களும் வழங்கப்பட்டது. ஒதுக்கீடுதாரர்களின் விருப்பத்திற்கிணங்க, தமிழ்நாட்டில் இதைப்போல மற்ற நகரங்களில் உள்ள வீடுகளின் விற்பனை ஏற்பாவணம் வழங்கப்படும்.

சென்னை மாநகரைச் சுற்றிச் சார்பு நகரம் அமைத்தல்

- ★ சென்னை மாநகரத்தில் உள்ள இட நெருக்கடியைக் குறைப்பதற்காகத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சென்னையை சுற்றி உள்ள முக்கிய பெருவழிச் சாலைகளை யொட்டி சார்பு நகரங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.
- ★ சென்னைக்குத் தெற்கே சோழிங்கநல்லூர் (525 ஏக்கர் பரப்பு), மாமல்லபுரம் ((220 ஏக்கர் பரப்பு) மற்றும் ஜமீன் பல்லாவரம் (416 ஏக்கர் பரப்பு) ஆகிய இடங்களில் மூன்று சார்பு நகரங்கள் உருவாக்கப் படவுள்ளன. மேற்கு திசையில் திருமழிசை வட்டத்தில் அடங்கியுள்ள செம்பரம்பாக்கம் (525 ஏக்கர் பரப்பு), குத்தம்பாக்கம் (873 ஏக்கர் பரப்பு), பார்வதி இராஜபுரம் (165 ஏக்கர் பரப்பு), வெள்ளவேடு (64 ஏக்கர் பரப்பு) மற்றும் நரசிங்கபுரம் (85 ஏக்கர் பரப்பு) ஆகிய இடங்களில் சார்பு நகரங்கள் அமைக்கப்படவுள்ளன. வடமேற்குத் திசையில் பருத்திப்பட்டில் (683 ஏக்கர் பரப்பு) சார்பு நகரம் உருவாக்கப்படவுள்ளது. மேற்கூறிய சார்பு நகரங்களை உருவாக்குவதற்கான நிலம் கையகப் படுத்தும் சட்டத்தின்படி நிலத்தை கையகப்படுத்துவற்கான வழிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன.
- ★ சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், ஈரோடு, வேலூர், திருநெல்வேலி, திருப்பூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் மலிவு விலையில் பொருளாதாரத்தில் நலிவுற்றோர் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு வீட்டுமனைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- 70,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் 36 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் குடியிருப்புகள் உருவாக்கப்படவுள்ளன.
- சென்னை-அரசினர் தோட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான 240 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 10 மாடிகள் கொண்ட 4 கோபுர வளாகங்களாக ரூ.45 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெறுகின்றன.
- 1997-98ஆம் ஆண்டில் கோவைக்கருகில் பெரியநாயக்கன் பாளையத்தில் ரூ.26.91 கோடி மதிப்பீட்டில் மனைகள் உருவாக்கப்படுகின்றன.
- கரூர், நாகப்பட்டினம், திருவாரூர், நாமக்கல், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய புதிய மாவட்டத் தலைநகரங்களில் ரூ.23.68 கோடி மதிப்பீட்டில் 738 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அரசு ஊழியர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- அரசு ஊழியர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், சென்னை அரசினர் தோட்டத்தில், 250 குடியிருப்புகள் கொண்ட பல அடுக்கு மாடி கட்டடடங்கள் ரூ.16 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன.

ஆலய மேம்பாடு

திருக்கோயில்களின் நிர்வாகம் - வருவாய் பெருக்கம்

- திருக்கோயில்களின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் சமயச் சான்றோர்கள் தமிழறிஞர்கள் ஆகியோர் அடங்கிய ஆலோசனைக்குழு ஏற்படுத்தப்பட்டு அக்குழுவின் ஆலோசனையின் அடிப்படையில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களைச் சீராகப் பேணி பாதுகாத்து அவற்றிலிருந்து பெறப்படுகின்ற வருவாயைக் கணிசமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. பசலி 1405-ல் ரூ.2231.67 இலட்சங்களாக இருந்த கேட்பு, பசலி 1407-ல் ரூ.3501.92 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களைத் திருக்கோயில் மேம்பாட்டிற்குப் பயன்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் அர்ச்சனை

- திருக்கோயில்களில் தமிழ் அர்ச்சனையை ஒரு இயக்கமாகவே செயல்படுத்த வேண்டும் என்று கருதி சமய அறநெறிகளில் ஈடுபாடு கொண்ட தமிழ் அறிஞர்களைக்கொண்ட ஓர் குழு நியமிக்கப்பட்டு, அக்குழுவின் இரு கூட்டங்களில் முதற்கட்டமாக, பல கடவுள்களுக்கும் 108 போற்றிகள் தயாரிக்கப்பட்டு, குழுவின் பரிசீலனையில் உள்ளது.



- ஆதிதிராவிடர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் வாழ்கின்ற கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த கோயில்களுக்கு 1997-98ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்தவாறு, ரூ.25,000 வீதம் ஆண்டு ஒன்றுக்கு 50 திருக்கோயில்களுக்குத் திருப்பணிக்காக, திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணிகள் நிதியிலிருந்து வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- 60 வயதடைந்த ஓய்வு பெற்ற கிராமத் திருக்கோயில்களின் பூசாரிகளுக்கு மாதம் ரூ.500 உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

> **இலட்சக் கணக்கானோர் வியர்வை வடிக்க வேண்டும்; ஒரு சிலர் அந்த வியர்வைத் துளிகளைப் பன்னீராக மாற்றி அதிலே குளிக்க வேண்டும் என்ற நிலை மாற்றப்பட்டாலன்றி ஒரு நாடல்ல; உலகமே கூட ஒழுங்காக வாழ முடியாது.**
>
> **- கலைஞர்**

நெஞ்சை அள்ளும் தஞ்சை ஓவியம்!

- எம்.நல்லசிவம்

தஞ்சை ஓவியம் என்று கூறப்படும் வண்ண ஓவியம் 18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் தமிழகத்தில் தஞ்சை நகரத்தில் ஒரு புது வகையான ஓவியக்கலையாக, தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் ஆதரவால் வளரத் தொடங்கியது. தஞ்சையில் வளர்ந்த காரணத்தால் இக்கலை உலக முழுவதும் அது பிறந்த இடத்தை வைத்து தஞ்சை ஓவியம் என்று அழைக்கப்படுகிறது. கடந்த இரண்டு நூற்றாண்டுகாளாக இந்தத் தஞ்சை ஓவியத்தை மன்னர்கள், பெரும் செல்வந்தர்கள் பெரிய பணியில் இருப்பவர்கள் தங்களது மாளிகைகளில் தங்களது சமூகப் பெருமைக்கு ஒரு சாட்சியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய ஓவியத் துறையின் பலவேறு கூறுகள். தற்காலத் தாகத்திற்குத் தக்க பலவேறு கோணங்களில் மாறி வளர்ந்து வருகின்றன. ஆனால் தஞ்சை ஓவியங்கள் பிறந்த காலத்திலிருந்து ஓவிய இலக்கணப்படியே பழமையின் தொன்மையை இன்றும் கடுகளவு கூட மாறாமல் காத்து வருகிறது. தஞ்சை நாடு ஆடல் கலைக்கும், இசைக் கலைக்கும் பிறந்த இடம் ஆகும். மேலும் காலம் வளர வளர அதன் தொன்மையைப் பாதுகாக்கும் வண்ணம் அதன் இலக்கண முறையும் கலையும் வளர்ந்து உலகப் புகழ் பெற்று வருவதைப் போல அங்கு பிறந்த தஞ்சை ஓவியம் தஞ்சை நாட்டுக் கலைஞர்களால் பாதுகாக்கப்பட்டும், வளர்க்கப்பட்டும் வருவதால் தஞ்சை நாடு தமிழ்க்கலைகளின் தாய்நாடு என்றே கூறவேண்டும். இன்றைய தஞ்சை ஓவியங்கள் பல புகழ்பெற்ற ஓவியர்களால் வளர்க்கப் பட்ட கலை ஆகும். இதற்குச் செல்வந்தர்களின் ஆதரவு பெருமளவு இருந்ததால் அதன் புகழ் இன்று உலகளவில் பரவியுள்ளது. பழைய ஓவியங்கள் இன்று பெரும் செல்வப் பொருளாகக் கருதப்பட்டு, அருங்காட்சியகங்களாலும் தனிநபர்களாலும் காக்கப்படுகின்றன.



பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து ஆலிலை கிருஷ்ணா, தர்பார் கிருஷ்ணா, வெண்ணெய் தாழி கிருஷ்ணா, யசோதா கிருஷ்ணா, புல்லாங்குழல் கிருஷ்ணா, ராமர் பட்டாபிஷேகம் போன்ற ஓவியங்கள் ஓவியர்களால் படைக்கப்பட்டு வருகின்றன.

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் புத்தர், ஏசுநாதர், பிள்ளையார் பட்டி வினாயகர் போன்ற புதுத் தெய்வங்களின் திருஉருவங்களை, ஓவியர்கள், தங்களின் திறமையை வெளிப்படுத்தும் வண்ணம் தஞ்சை ஓவியங்களில் படைத்து வருகிறார்கள்.

முன்னோர்கள் பின்பற்றி வந்த முறையைத் தொடர்ந்து இன்று வண்ணக் கலவையில் நீர் வண்ணங்களைக் கொண்டு, ஓரங்களில் சிறு டிசைன்களை மாற்றம் செய்து தனித்தன்மையோடு படைக்கிறார்கள். மனதைக் கவரும் தஞ்சை ஓவியத்தைப் படைக்கும் பல நிலைகளையும் செய் முறைகளையும் இங்கே பார்ப்போம்.

முந்தைய காலத்தில் பலா மரப்பலகையின் மேல் புளியங் கொட்டைப் பசையைத்



தடவிஅதன் மேல் பழுப்புத்தாள், Brown Paper ஒட்டப்பட்டது. தற்காலத்தில் Fevicol தடவி Brown Paper ஒட்டப்படுகிறது. அதன் பின் வெள்ளைக் காடாத் துணியை ஒட்ட வேண்டும். பிறகு சாக்பவுடரில் பெவிக்கால் கலக்கி தூரிகை உதவியுடன் பூசச் (Coating) செய்ய வேண்டும். காய்ந்த பின் உப்புக் காகிதத்தால் தேய்க்க வேண்டும். பின் படத்தின் அவுட் லைன் போட வேண்டும். பிறகு மண்டபம், நகை போன்ற இடங்களில் ஜெய்பூர் கற்களைப் பதிக்க வேண்டும் சாக்பவுடர் வேலான் பிசின் கலந்து ஆபரணங்கள், உடைகள், மண்ட பங்கள் போன்ற இடங்களில் டிசைன்போட வேண்டும். காய்ந்த பின் (22 காரட தங்க ரேக்குகளை 22 Cr Gold Rags ஒட்ட வேண்டும்.) தங்க ரேக்குகள் ஒட்டிய இடம் தவிர மற்ற இடங்களில் போஸ்டர் கலர் தீட்ட வேண்டும். முந்தைய காலத்தில் இயற்கை வண்ணங்களைக் கொண்டு செய்தனர். தங்க ரேக்குகளின் மீது,(Water Proof Ink) நீர் புகா மை தீட்ட வேண்டும். மடிப்புகளில் டிசைன் வரைய வேண்டும். தஞ்சை ஓவியப் பாரம்பரியம் தொடர ஓவியத்தைப் பாதுகாப்பாகத் தேக்கு பிரேம் மூலம் பொருத்த வேண்டும்:

உன்னதக் கலையைக் காக்க, பரம்பரையாக மிகப்பெரிய வீடுகளில் இன்றும் தஞ்சை ஓவியம் காணப்படுவது வழக்க மாக உள்ளது. அதனுடைய மதிப்பு அறிந்தும் அறியாதும் பராமரித்து வருகின்றனர். இருப்பினும் இந்த ஓவியங்கள் தீட்டப்படுகின்ற முறை, ஓவியத்தில் பொதிந்துள்ள பொருட்கள் இவற்றைப் பற்றி ஓவிய உரிமையாளர்களுக்கு, செய் நுட்பத் திறனை அறியப் படுத்தினால், ஓவியங்களைப் சிறப்புடன் பராமரித்து மேலும் பல்லாண்டுகள் வைத்திருக்க ஏதுவாக இருக்கும்.

இந்த உன்னதக் கலையை வளர்க்க அரசு ஆண்டுதோறும் பூம்புகார் கைவினைக் கழகத்தின் மூலம் (State Award) தலை சிறந்த கலைஞர்களுக்குப்பாராட்டுப் பத்திரமும், ரொக்கப் பணமும் வழங்கி கலைஞர்களை ஊக்கப்படுத்துகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

சாதனைத் துளிகள்

- ❑ அனைத்து நிர்வாக நடைமுறைகளிலும் தமிழ் மொழியை முழு அளவில் பயன்படுத்து வதற்கும், 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற நிலை உருவாகவும், தமிழ் ஆட்சி மொழித்துறை அமைச்சகம் கலைஞரால் உருவாக்கப்பட்டுள்ளது.
- ❑ சென்னை மருத்துவக்கல்லூரி, நிகர்நிலைப் பல்கலைக்கழகமாகக் கலைஞர் அவர்களால் நிலை உயர்த்தப்பட்டுள்ளது.
- ❑ கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பண்டங்க ளைத் தேவையின் அடிப்படையில் வினியோகிப்ப தற்கு ஏற்றவகையில் 2000 புதிய நியாய விலைக் கடைகள் - பகுதிநேர நியாய விலைக்கடைகள் கலைஞர் ஆட்சியில் புதிதாகத் திறக்கப் பட்டுள்ளன.
- ❑ அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே, கலைஞர் அவர்களால் ஒதுக்கப் பட்ட ரூ.50 கோடியையும் சேர்த்து ரூ.156 கோடியில் பணிகள் நடைபெறு கின்றன.
- ❑ மீனவர்களுக்கு தமிழக அரசு வழங்கும் டீசல் மானியம், லிட்டருக்கு 7 காசிலிருந்து 17 காசாக உயர்த்தி வழங்கக் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.
- ❑ 1996லிருந்து 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ-மாணவியருக்கு இலவச பஸ்பாஸ் வழங்கும் திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சிப் பணிகள்

10, 15 ஆண்டுகளாகத் தேர்தல்களே நடத்தப்படாம லிருந்த நிலையில் கலைஞரின் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதும், மக்களாட்சி முறையை ஊராட்சி வரை நடை முறைப்படுத்திடும் வகையில், தமிழகத்திலுள்ள 6 மாநகராட்சிகள், அவ்ற்றின் 474 வார்டுகள்; 102 நகராட்சிகள் அவற்றின் 33,9992 வார்டுகள்; 634 பேரூராட்சிகள் - அவற்றின் 10,170 வார்டுகள்; 28 மாவட்ட ஊராட்சிகள் - அவற்றின் 649 வார்டுகள்; 384 ஊராட்சி ஒன்றியங்கள் - அவற்றின் 6504 வார்டுகளுக்கும், 12,584 கிராமப்பஞ்சாயத் துகளுக்கும் அவற்றின் 40,714 வார்டுகளிலுள்ள 97,026 உறுப்பினர்களுக்கும், ஆகமொத்தம் 1,62,681 பதவிகளுக்கும் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் ஒரே கால கட்டத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கதாகும். பெண்களுக்குச் சமவாய்ப்பபு எனும் அடிப்படையில், அண்ணல் காந்தியடிகள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகிய பெருந்தகை யாளர்களின் இலட்சிய நோக்கில், அதாவது 'பொதுப் பணியாற்றுவதில் பெண்களுக்கு உரிய வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்' என்ற கனவு நனவாகும் வகையில், உள்ளாட்சி அமைப்புக்ளில் ஒட்டு மொத்தமாகச் சற்றேறக் குறைய 44,143 பெண்கள் பதவி வகிக்கின்றனர் என்பது - ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

- ★ கடந்த 18 மாதங்களில், முடிக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகள் : 2,62,255, இதில் 1,50,000 தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது ஓர் அகில இந்தியச் சாதனையாகும்.
- ★ 3164 கி.மீ. தூரமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச்சாலைகள் தார்ச்சாலைகளாக உருவாக்கப் பட்டுள்ளன.
- ★ ஏழை, எளிய ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட பிற இனத்தவர்க்கு 12,018 பாசனக் கிணறுகளுக்கு நிதிமானிய உதவிகள் அளிக்கப்பட்டுள்ளது.
- ★ ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்திடும் வகையில், 2,60,868 பயனாளிகளுக்கு ரூ.125.13 கோடி மானியமாக வழங்கப் பட்டுள்ளது. ஊராட்சிகளுக்கு முக்கியத் துவம் அளித்திடும் வகையில், இத்திட்டம் ஊராட்சிகளுக்கு 65%, ஒன்றியங்களுக்கு 15%, ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு 20% என மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
- ★ கடந்த 1½ ஆண்டுகளில், 16,758 ஊரக இளைஞர்களுக்கு ரூ.10.12 கோடி செலவில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. தற்போது 14,056 இளைஞர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

- ★ கிராமப்புற மகளிர் மற்றும் சிறார் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் 6,182 ஆதிதிராவிடர் உட்பட 14,277 கிராம மகளிர்கள் சுயவேலை வாய்ப்புப் பெற்றிடும் வண்ணம் ரூ.4.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ★ முதலமைச்சர் கலைஞரால் தொடங்கப் பட்ட 'அண்ணா மறுமலர்ச்சித் திட்ட'த்தின் மூலம், 234 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள 212 ஊரக, 22 நகர்ப்புறங்களில் ரூ.51.86 கோடி மதிப்பீட்டில் 32045 பணிகள் நடைபெறுகின்றன.
- ★ முதலமைச்சர் கலைஞரின் சிந்தையில் உதித்த 'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ், 1958

கிராமங்களில், 3263 திட்டங்கள், பொது மக்கள் பயனடையும் வகையில், முழு ஈடுபாட்டுடன் மக்களாட்சியின் மாண்புறு செயலாக்கங்களாகச் செயல்படுத்தப் படுகின்றன.

- ★ கடந்த ஆட்சியில், வேலையிலிருந்து நீக்கப்பட்ட 12,044 மக்கள் நலப்பணியாளர்களை மீண்டும் பதவியிலமர்த்தி முதலமைச்சர் கலைஞர் ஆணை; இதில் 4814 பெண்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.
- ★ சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தொகுதிக்கு ரூ.25 இலட்சம் வீதம் ரூ.58.75 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெறுகின்றன.
- ★ மக்களாட்சியின் மகத்தான சாதனையாக, ஊராட்சிகளின் ஒருமித்த வளர்ச்சிக்கென, வறுமை ஒழிப்பு, குடிநீர், பொதுப்பகிர்வு, சாலை-பாலங்கள் அமைத்தல், கதர் கிராம வளர்ச்சி, நூலகம், ஊரக மின் மயமாக்கல், ஒன்றியப்பள்ளிகள் உள்ளிட்ட 17 அதிகாரங்களை ஊராட்சிகளுக்கு வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்; மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்களைப் பரவலாக்கிட, அனைத்துக் கட்சி உறுப்பினர்களடங்கிய குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.
- ★ ஊரகப்பகுதிகளின் வளர்ச்சிப் பணிகளை முடுக்கிவிட, 384 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ரூ.12.97 கோடி செலவில், 384 புதிய வாகனங்கள் முதலமைச்சர் கலைஞரால் விழங்கப்பட்டுள்ளன.
- ★ பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இருளில் மூழ்கிக் கிடந்த ஊராட்சிப் பகுதிகளில் ரூ.7.28 கோடி செலவில், 20,000 தெரு மின்விளக்குகள் மூலம் ஒளியூட்டப்பட்டுள்ளன.
- ★ உள்ளாட்சி நிர்வாகங்களின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்துத் திட்டமிட வழிவகுத்திடும் வகையில் 28 மாவட்டங்களிலும், புதிதாக 'மாவட்டத் திட்டக் குழுக்கள்' உருவாக்கப்பட்டுள்ளன.
- ★ உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் நிதிவசதியளித்து 10 வகை அடிப்படைப் பணிகளை மேற்கொள்ள மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியாக ரூ.790 கோடி வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் வருவாயில் 8 விழுக்காடு ஒதுக்கீடாக ரூ.364.44 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.



உண்மையான ஒழுக்கம், நாணயம் வேண்டுமானால் தேவை குறைய வேண்டும்; அவசியம் குறைய வேண்டும். தேவையும், அவசியமும் அதிகமாக அதிகமாக நாணயக் கேடும் ஒழுக்கக் கேடும் வளர்ந்துகொண்டுதான் போகும்.

- தந்தை பெரியார்

- ★ இது தவிர, மாநில அரசின் வரி வருவாயிலிருந்து ரூ.360 கோடி மானியமும் வழங்கப்பட்டுள்ளது.
- ★ இவைகளோடு, வீட்டு வரி சமன்பாட்டு நிதி, மின்கட்டண மானியம், கூட்டுக் குடிநீர்ப் பராமரிப்புச் செலவினம், நலிவுற்ற ஊராட்சிகளுக்கென மானியம் என மேலே கூறப்பட்ட அனைத்து ஊராட்சிகளின் அடிப்படை வளர்ச்சிப் பணிகளுக்கும் ஆண்டுதோறும் ரூ.1408 கோடி நிதிஉதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

பேரூராட்சிகள்

- ★ அடிப்படை வசதித்திட்டம், பொதுக் கழிப்பிடங்களுக்குத் தண்ணீர் வசதி, சோடியம் ஆவி விளக்கமைத்தல், தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்கிடும் வகையில், 24,968 பணிகளுக்கென ரூ.64 கோடியும் செலவிடப்பட்டு வருகின்றன. மேலும் சாலை, வடிகால், குடிநீர் வினியோகம், தெருவிளக்கு போன்ற 5036 பணிகள் ரூ.20.76 கோடி செலவிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ★ மேலும், பேரூராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்கிடும் வகையில், கேளிக்கை வரி பங்குத் தொகை 65லிருந்து 90% உயர்த்தி வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. 1996-97 நிதியாண்டில், விற்பனை வரி மீதான மிகு வரியாக ரூ.16 கோடி வழங்கப்பட்டது. சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.4.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில், ரூ.96.23 கோடியும், 15% சமன்பாடு ஊக்க நிதியாக ரூ.15.11 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பேரூராட்சிகளின் வளர்ச்சிப் பணிகள் விரைந்து செயலாக்கம் பெறுகின்றன.

நாளொரு திட்டம் பொழுதொரு சாதனை

சமூக நலம் தூக்கும் அரசு:

1995-96ஆம் ஆண்டுவரை 4000 ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன. 96-97-லிருந்து எல்லா ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கும் இலவசமாகப் புத்தகங்கள் வழங்கப்படும்.

பெண் கல்வி கற்றால், அது சமுதாயத்தை அறிவார்ந்த நிலைக்கு உயர்த்திடுமென்ற உயரிய இலட்சியத்தின் அடிப்படையில், பெண்கள் குறைந்தபட்சம் 8ஆம் வகுப்பு வரையிலாவது படிக்க வேண்டுமென்பதை வலியுறுத்திடும் வகையில், முதலமைச்சர் கலைஞரால் உருவாக்கப்பட்ட மூவலூர் இராமமிர்தத் தம்மையார் நினைவுத்திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ், இதுவரையில் தலா ரூ.10,000 வீதம் 48,000 ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு நிதி உதவியாக ரூ.48 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் நலன் காப்பதில் உற்றுழி உதவிகள்:

முதலமைச்சர் கலைஞரின் ஆணையின்படி, மிகவும் ஊனமுற்றுள்ள நபர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மாதாந்திர பராமரிப்புத்தொகை ரூ.100லிருந்து ரூ.150 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், 2,900 ஊனமுற்றோர் பயனடைகின்றனர். ஒரு கையோ, ஒரு காலோ இல்லாதவரை மணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபருக்கு ரூ.5000 ஊக்கத் தொகையாக வழங்கும் திட்டம் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, 28 மாவட்டங்களிலும் ரூ.138 கோடி செலவில் ஊனமுற்றோர் மறுவாழ்வு மையங்கள் புதிதாக உருவாக்கப்படுகின்றன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாடு:

இவ்வாண்டில் 70,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு 'இலவச வீட்டு மனைப்பட்டா'க்களை வழங்கிட ஏதுவாக ரூ.17 கோடி ஒதுக்கீட்டில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அகில இந்தியச் சாதனையாக கடந்த 18 மாதங்களில், 1,33,087 இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

சமத்துவபுரம்

ஆதிதிராவிடர்களும் ஏனைய சமுதாயத்தினரும் ஒன்றாக இணைந்து நல்லிணக்கத்தோடு ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிவகுக்கும் வகையில் இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சமத்துவபுரத் திட்டத்தின்படி, 100 வீடுகள் கொண்ட சமத்துவபுரங்கள் 50 இடங்களில் உருவாக்கப்படும். இதில் 40% ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும். வீடு ஒன்றிற்கு அரசின் மானியமாக ரூ.35,000 வழங்கப்படும். அடிப்படை வசதிகளான - குடிநீர், சாலை, தெருவிளக்கு, சமுதாயக்கூடம்,



நியாயவிலைக்கடை, கல்வி வசதி, மருத்துவ வசதி போன்றவைகளும், பொதுச்சுடுகாடு - இடுகாடும் அரசின் செலவில் உருவாக்கப்படும். ரூ.5 கோடி இதற்கென முதல்கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்ன பிற சாதனைகள்:

விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி அனைத்துப் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கும் அடிப்படை வசதிகள் அளிக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார். 1785

மலைப்பகுதி குடியிருப்புகளுக்கும், குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி, இணைப்புச்சாலை வசதி, ஆரம்பக் கல்வி வசதி, மருத்துவ வசதி, சத்துணவுக் கூட வசதி, குடிமைப் பொருள் அங்காடி வசதிகள் உருவாக்கப்படவுள்ளன.

ஆதிதிராவிடர் நலனுக்கென நடப்பு ஆண்டில், ரூ.334 கோடி ஒதுக்கீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தாட்கோ மூலம் சுத்திகரிப்புப் பணியாளர்கள் பொருளாதார மேம்பாட்டு - மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ், 14,489 பயனாளிகளுக்கு ரூ.962.09 இலட்சம் மான்யமாகவும், ரூ.336.53 இலட்சம் தொழில் விளிம்புத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் 5367 இத்தகு இளைஞர்களுக்கு ரூ.113.27 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்கள் 5,000 பேருக்கு, நபருக்கு ஒரு ஏக்கர் என விவசாய நிலம் இவ்வாண்டில் இலவசமாக வழங்கப்படுகிறது.

தேசிய ஆதிதிராவிடர்-பழங்குடியின நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத் திட்டத்தின்படி தொழில் முனைவோர்களை உருவாக்கிட நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.456.65 இலட்சங்களில், இதுவரை மினிபஸ், லாரி, டாக்ஸி, டராக்டர் போன்ற போக்குவரத்து வாகனங்கள் வாங்க 124 பயனாளிகளுக்கு ரூ.409.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.

சர்க்கரை ஆலையையொட்டியுள்ள பகுதிகளில் வாழும் 1,000 இளைஞர்களுக்கு 1,000 லாரிகள் வாங்கிட மானியம் வழங்கப்படும்.

ஆதிதிராவிட மாணவ- மாணவிகளின் கல்விக்கென மட்டும் இவ்வாண்டில் ரூ.152.48 கோடி செலவிடப்படும். இதில், கல்வி உதவித்தொகை, ஊக்கத்தொகை, பரிசுத்தொகை ஆகியவற்றிற்கென மட்டும் ரூ.36 கோடியும், இலவச விடுதிகளுக்கென ரூ.8.50 கோடியும், இலவசச் சீருடைகள் வழங்க ரூ.8.14 கோடியும், இலவசப் பாடப்புத்தகங்களை வழங்கிட ரூ.8 கோடியும் செலவிடப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் உள்ள ஆதிதிராவிட பெண் குழந்தைகள் வறுமையின் பொருட்டு பள்ளியை விட்டு நின்றுவிடும் சூழ்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு மூன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை தொடர்க் கல்வியினைப் பெற்றிட வருடத்திற்கு ரூ.500 வீதம் வழங்க படுகிறது. ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆறாம் வகுப்பு செல்லும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1000 வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.447.40 இலட்சம் செலவில் 69520 பெண் குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர்.

சாதி-பேதமற்ற சமுதாயம் அமைக்கும் நோக்கில், அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமண நிதி உதவித்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதி உதவி ரூ.10,000லிருந்து ரூ.20,000 ஆக உயர்த்தி வழங்கிட **முதலமைச்சர் கலைஞர்** ஆணையிட்டுள்ளார்.

மீனவர் நலன்

இலவச வீடுகள்

சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 5 ஆண்டுகளில் ஆண்டுக்கு ஒரு மின்விளக்குடன் கூடிய 4,000 வீடுகள் கட்டப்படுமென, **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. மீனவர் நலம்பேணும், இம்மகத்தான திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டில் 4,000 வீடுகள் கட்ட ரூ.12.80 கோடியும், நடப்பு நிதியாண்டில் அதே போன்று 4,000 வீடுகள் கட்ட ரூ.12.80 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 8,000 மீனவக் குடும்பங்களுக்கு இலவச வீடு கட்டித்தரப்படும். 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டித் தரப்பட்ட வீடுகளைப் பழுது நிவர்த்தி செய்ய வழி செய்யும் முன்னோடித் திட்டம் ஒன்று முதலைமச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு ரூ.1 கோடி இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள், 'பயனீட்டாளர் மீனவர் கூட்டுறவு சங்கங்களின்' மூலம் நடைபெறுகின்றன. இதே போன்று சென்ற ஆண்டும், இவ்வாண்டும் 323 மீனவக் குடியிருப்புகளின், இருளகற்றி ஒளியூட்டும் வகையில், ரூ.1 கோடி ஒதுக்கீட்டில், மின்சார வாரியத்தின் மூலம், 2248 தெரு விளக்குகள் அமைக்கப்படுகின்றன. 34 மீனவக் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

> தனிமனிதனின்
> பண்பாட்டைவிடப்
> பொது மக்களின்
> நலன்தான் முக்கியம்.
> தனிமனிதனுக்குப் பண்பாடு
> தேவைதான்; தனி
> மனிதனின் பண்பாட்டைக்
> கருதிப் பொதுமக்களின்
> நலனைக் கவனிக்காமல்
> இருப்பது கூடாது!
> - **தந்தை பெரியார்**

பிற சலுகைகள்

மீனவர் குழுக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூ.35,000 முதலமைச்சர் கலைஞரால் ரூ.15,000 உயர்த்தப்பட்டு விபத்து நிவாரணமாக ரூ.50,000 வழங்கப்படுகிறது. மீன் பிடிப்பில்லாத 4 மாதங்களுக்கு 1,19,087 மீனவர்களுக்கு ரூ.8.57 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர, மீனவர்களால் பயன்படுத்தப்படும் கட்டுமரம், வள்ளம் ஆகியவற்றில் இயந்திரங்கள் பொருத்தும் திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டில் 8151 இயந்திரங்கள் ரூ.11 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பாண்டில், சென்னை, கடலூர், சின்ன முட்டம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த மீனவர்களுக்கு, நவீனத் தகவல் தொடர்பு சாதனங்களாக 1500 வி.எச்.எப் கருவிகளை மானியத்தில் வழங்க ரூ.75 இலட்சம் **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கட்டுமர-வள்ளங்களில் இயந்திரம் பொருத்த, மீன் பிடி வலைகள், பல்வகை வள்ளங்கள், விரைவுப் படகுகள் போன்றவற்றை வழங்க 5,000 இத்தகு மீன்பிடி அலகுகளுக்கென, 13 கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்களுக்கு ரூ.48.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இராமேஸ்வரத்தில், ரூ.38.30 கோடி செலவில், ஒரு மீன் பிடி துறைமுகம் அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசு அலுவலர்களின் நலன் பேணப்படுகிறது:

தமிழக அரசு ஊழியர்களின் குடும்பநல நிதி உதவி ரூ.60 ஆயிரத்திலிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழக அரசு ஊழியர்களுக்கு, ஊதியக்குழுவின் நிலுவைத் தொகையில் இடைக்கால நிவாரணமாக ரூ.4000 வழங்கப்பட்டது.

சி,டி-பிரிவு ஊழியர்களுக்கு கடந்த ஆண்டில் போனஸாக வழங்கப்பட்ட 25 நாள் சம்பளத்தை இந்த ஆண்டு 27 நாள் சம்பளத்திற்கு இணையாகவும், ஏ,பி-பிரிவு அலுவலர்களுக்கு ரூ.625 லிருந்து, ரூ.725 ஆகவும் சிறப்பு போனஸ் உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெறுவோர்க்கு ரூ.100லிருந்து ரூ.150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரிவோர், தொகுப்பூதிய - மதிப்பூதியம் பெறுவோர்க்கும் தினக்கூலி அடிப் படையில் 240 நாட்களுக்கு மேல் பணிபுரிவோர் உட்பட, சிறப்பு போனஸ் வழங்கப்படும்.

அரசு ஊழியர்களுக்கு, இடைக்கால நிவாரணம் அறிவித்ததைப் போன்று, தமிழ்நாட்டிலுள்ள U.G.C., A.I.C.I.T., ஊதிய விகிதம் பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் ரூ.4,000 ஊதியக் குழுவின் நிலுவைத் தொகையில் முன்கூட்டியே வழங்கப் படும்.

ஓய்வூதியதாரர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், ஊதியக்குழுவின் நிலுவைத் தொகையில் ரூ.1000 முன்கூட்டியே வழங்கப்படும்.

தொகுப்பூதியம், மதிப்பூதியம் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும், சத்துணவுப் பணியாளர்கள், கிராம உதவியாளர்கள் போன்ற இதரப் பணியாளர்களுக்கும், ஊதியக்குழுவின் நிலுவைத் தொகையில் ரூ.500 முன்கூட்டியே வழங்கப்படும்.

○ ○ ○

பொன்னான நாளில் நமது சூளுரை

- கலைஞர்

கதிர்முகம் காட்டிக் கனகமணிச் சுடர்காட்டிப்
புதுவிழி காட்டிப் புறப்படும் செங்கதிரோன்
கீழ்வானில் எழுவான் - அவன்
கேடெல்லாம் களைவான்!

திங்கள் முகமும் செவ்வாய் இதழும்
பொங்கும் சிரிப்பும் பொறுப்பின் உணர்வும்
மங்கல அணியும் படைத்த மகளிர்
செங்கதிர்ச் சுடரோன் எழுந்திடும் முன்னே
கன்னல் மஞ்சள் இஞ்சியி னுடனே
செந்நெல் குவித்த குவியலி னுடனே
மின்னல் ஒளியை மேனியில் நிறுத்தி
எண்ணில் இன்பம் இதயத் திருத்தி
அறுவடைப் பொருள்கள்
செறிந்தினி திலங்க
நிறைவுடன் நினைத்துப்
பொறையுடன் போற்றும்
ஒப்பற்ற திருநாள் - தமிழ்

உலகு கண்ட பெருநாள்
பொங்கல் எனும் நன்னாள் - அதன்
பெருமை மிகும், சொன்னால்!

விழா நாட்களில் விழாத சூளுரைகள்
எழாதிருப்பது எவ்வாறு இயலும்?

அன்னையர் தந்தையர் அன்புடைக்
குழவியர்
என்னரும் நாட்டினில் வதிவோர் யாவரும்
இன்றைய நாளில் சூளுரை எடுப்போம்
சென்றிட்ட நாட்களின் சாதனை முடித்தும்
- இன்னும்
குன்றுபோல் உள்ள பணிகளை முடிக்க
ஒன்றாய்ச் சேர்வோம் - இங்கு
ஒப்புறவு கொள்வோம்.
ஏழ்மை வறுமை என்னும் கொடுமை
தோழமை கொள்ளச் சிறிதும்
இடங்கொடோம்!

அன்புநெறி பண்புமனம்
நன்றுநிறை பெரும்பணிகள்
கல்லார்க்குக் கல்விநலம்
எல்லார்க்கும் நல்வாழ்வு
சொல்லாலே செய்திடுவோம் - என
நன்னாளில் சூளுரைப்போம் - இது
பொன்னாளென நாமுரைப்போம்!

(- கலைக்கதிர் - 1973)

பொதுப்பணித் துறையின் சாதனைகள்

- ★ சென்னை, மதுரை, பொள்ளாச்சி மற்றும் திருச்சி ஆகிய நான்கு மண்டலங்களிலுள்ள 200 ஏரிகளில் தூர் வார ரூ.19.91 கோடி ஒதுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ★ இராமநாதபுரம் மாவட்டம் - கமுதி, முதுகுளத்தூர் ஆகிய பகுதிகளில் ஆண்டாண்டுகளாக வறண்டு கிடந்த 22,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற ரூ.7½ கோடி நிதி ஒதுக்கி, **முதலமைச்சர் கலைஞர்** ஆணையிட்டுள்ளார்.
- ★ தமிழ்நாட்டிலுள்ள நீர்வள ஆதார அமைப்புகளை மேம்படுத்தவும், புனரமைக்கவும், உலக வங்கி நிதி உதவியில், ரூ.807.49 கோடி செலவில் பொதுப்பணித்துறையின் மூலம் திட்டங்கள் தொடங்கப்பட்டு பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

கட்டட அமைப்புப் பணிகள்

- ★ கடந்த நிதியாண்டில் 296 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.18 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.
- ★ உலக வங்கி நிதி உதவியில் 7 இடங்களில் ரூ.10.60 கோடியில், மாவட்ட மருத்துவமனைகளில் கண்புரை நோய் வார்டுகள் கட்டப்படுகின்றன.
- ★ நீதித்துறையைச் சார்ந்த 7 நீதிமன்றக் கட்டடப்பணிகள் ரூ.23.32 கோடியில் நடைபெறுகின்றன.
- ★ பள்ளி, கல்லூரிகளுக்கு ரூ.12.34 கோடியில் வகுப்பறைகள், ஆய்வுக்கூடாரங்கள் போன்ற கட்டடங்கள் கட்டப்படுகின்றன.
- ★ கரூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் ஆகிய 3 மாவட்டத் தலைநகர்களில் தலா ரூ.2½ கோடி வீதம், ரூ. 7½ கோடியில் பெருந்திட்ட வளாகங்கள் அமைக்கப்படுகின்றன. விழுப்புரத்தில் ரூ.3 கோடியில் பெருந்திட்ட வளாகப் பணிகள் நடைபெறுகின்றன.
- ★ நினைவுச் சின்னங்கள், நினைவக மேம்பாட்டுப் பணிகள் ரூ.1.71 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.
- ★ நடப்பு நிதியாண்டில், தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கத்திட்டத்தின் கீழ் 241 கட்டடப் பணிகள் ரூ.37.10 கோடி மதிப்பீட்டில் நடைபெறுகின்றன.
- ★ நீர்வள ஆதாரத்திட்டத்தின்கீழ் ரூ.49.34 கோடி மதிப்பீட்டில் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

நீர்வள ஆதார அமைப்புப் பணி

- ★ பக்கிங்காம் கால்வாயில் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளைச் சரிசெய்திடும் வகையில் ரூ.190 இலட்சம் செலவில் இக்கால்வாயின் 0 முதல் 4 கி.மீ. தூரத்திற்கு அதாவது இக்கால்வாயுடன் கூவம் ஆறு கலக்கும் இடத்திலிருந்து லஸ் இராமகிருஷ்ண மடம் சாலையிலுள்ள பாலம் வரை உள்ள பகுதியில் இக்கால்வாயில் படிந்துள்ள சேறு சகதிகளை அகற்றி, பழைய படுகை மட்டத்தைக் கொண்டு வரும் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.



- ★ நீர்வள ஆதார அமைப்பின் கீழ் டூம்மாநிலத்தின் நீர் பங்கீட்டு நிர்வாகம் வடிநில வாரியாகப் பிரித்து பரவலாக்கப்பட்டு முறையே சென்னை, திருச்சி, பொள்ளாச்சி, மதுரை என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலமும் ஒரு வடிநில மேலாளர் என்பவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இவர் தலைமைப் பொறியாளர் பதவி நிலையில் பணியாற்றுகிறார்.
- ★ தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டமானது உலக வங்கியின் நிதி உதவியுடன் ரூ.1140 கோடி செலவில் அக்டோபர் 1995ல் எடுத்துக் கொள்ளப்பட்டு 7 வருடங்களில் முடிக்கப்படவுள்ளது.
- ★ **முதலமைச்சர் கலைஞர்** ஆட்சியில், நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இடர்ப்பாடுகளைக் களைய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1996 ஜூன் முதல் 1997 ஜனவரிக்குள் இத்திட்டத்தின் பல்வேறு பணிகளுக்கான 13 மதிப்பீடுகள் ரூ.137.91 கோடியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1997-98ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.173 கோடியாகும்.
- ★ தமிழ்நாட்டிலுள்ள 40 முதல் 400 ஹெக்டேருக்குட்பட்ட பாசனப் பரப்பைக் கொண்ட மழை நீரால் பயன்பெறும் 2500 சிறு பாசன ஏரிகளைப் புனரமைக்கும் திட்டம் ரூ.270 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, இத்திட்டங்களை ஜப்பான் நாட்டுப் பொருளாதாரக் கூட்டு நிதியிலிருந்து நிதிஉதவிபெற ஒரு பெருந்திட்ட ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

புதிய வீராணம் திட்டம்:

- ★ வீராணம் ஏரியின் மேடுகளகற்றி அதன் கொள்ளளவை அதிகப்படுத்திடவும், வீராணம் ஏரியின் கரைகளை வலுப்படுத்திடவும், கொள்ளிடத்திலிருந்து நீர்கொணரும் வடவாறுக் கால்வாயை சீர்செய்திடவும், முதலில் ரூ.60 கோடி ஒப்பளிக்கப்பட்டிருந்தது. வடவாறு, வீராணம் ஏரியின் ஆயக்கட்டுப் பகுதிகளான 56,034 ஏக்கர் விவசாய நிலங்களுக்குத் தங்குதடையின்றி பாசனநீர் கிடைத்திட ரூ.110.95 கோடி **கலைஞர்** அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ், நாளொன்றுக்கு 190 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கிட ஏதுவாகத் திட்டப் பணிகளை நிறைவேற்றிடும் வகையில், ரூ.464 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1996-97ஆம் ஆண்டின் அரசு சாதனைகள்:

- ★ 1996-97ஆம் ஆண்டில் வாணியம்பாடியில் செண்பகத் தோப்பு நீர்த்தேக்கத் திட்டம்.
- ★ உசிலம்பட்டியில் கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல்.
- ★ வாணியம்பாடியில், ஆண்டியப்பனூரில் ஓடைத் திட்டம்.
- ★ தென்காசியில், வரட்டாறு - குப்பத்து ஓடைத் திட்டம்.

மேற்கூறிய இந்நான்கு திட்டங்களுக்கும் ரூ.8220 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள்நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 4495 எக்டேர் நிலப்பரப்பு புதிதாகப் பாசன வசதி பெறும்.

மேலும், 13 சிறப்பு சிறு பாசனத் திட்டங்களுக்கு 292.67 இலட்சம் மதிப்பீட்டிற்கு 412 எக்டேர் பயன் அடையும் பொருட்டு ஒப்புதல் அளித்துள்ளது.

1997-98ஆம் ஆண்டின் அரசு சாதனைகள்

1997-98ஆம் ஆண்டின் அரசு கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியது.

- ★ தர்மபுரி மாவட்டத்தில், அரூர் வட்டம்-வரட்டாறு-வள்ளிமதுரை நீர்த்தேக்கத் திட்டம்.
- ★ குடியாத்தம் வட்டம் - பந்தலபள்ளி - மலட்டார் நீர்த்தேக்கத் திட்டம்.
- ★ செங்கம் வட்டம் - குப்பாநத்தம் நீர்த்தேக்கத் திட்டம்.
- ★ சாத்தான்குளம் வட்டம் - சடயநேரி வாய்க்கால் - அகலப்படுத்துதல் மற்றும் நீட்டித்தல்.
- ★ பெரம்பலூரில், கல்லாறு ஆற்றின் குறுக்கே மலையாளப்பட்டி கிராமம் அருகே - புதிய குளம் அமைத்தல்.

மேற்காணும் 5 திட்டங்கள் ரூ.106 கோடியில் செயற்படுத்தப்படுவதன் வாயிலாக 5,213 ஹெக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி உருவாக்கப்படுகிறது.

கடலரிப்பு தடுப்புத் திட்டங்கள்

- ★ நாகப்பட்டினம் - தரங்கம்பாடியில் - கருங்கற்களைக் கொண்டு ரூ.56 இலட்சத்தில் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டுதல்.
- ★ பூம்புகாரில் - கருங்கற்களைக் கொண்டு ரூ.86.54 இலட்சம் செலவில் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டுதல்.
- ★ 1997-98ஆம் ஆண்டு பகுதி-2 திட்டங்களின் கீழ் அரசு 12 சிறப்பு சிறு பாசனத் திட்டங்களுக்கு ரூ.35.30 இலட்சம் மதிப்பீட்டில் 1641 எக்டேர் நிலங்கள் பயனடையும்.

இவைகளோடு, காவிரி டெல்டாப் பகுதியில், கனரக இயந்திங்களைக் கொண்டு தூர் வாரவும், நீர்வரத்தைத் தடுக்கும் காட்டா மணக்குச் செடிகளை அப்புறப்படுத்திடவும், ரூ.10 கோடி செலவிடப்பட்டுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



> உழைத்து வாழ்பவனே வணங்கத்தக்கவன்; வாழ்த்துக்குரியவன். அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்.
>
> **- அறிஞர் அண்ணா**

2|6671

முதலமைச்சர் கலைஞரின் முனைப்புமிகு வழிகாட்டுதலில் - தமிழகம், தொழில் வளர்ச்சியில் முன்னணி வகிக்கிறது

காலதாமதத்தைத் தவிர்த்து, அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்திட விரைவான முடிவுகளெடுத்திடும் வகையில், நடைமுறை விதிகளைக் குறைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி 'ஒரு முனை ஒப்புதல்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது; வெளி முதலீட்டாளர்களை ஈர்க்கும் வண்ணம் தொழில்நேயம் கொண்ட வெளிப்படையான கொள்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், தமிழகம் தொழில் வளர்ச்சியில் ஒரு புதிய பரிமாணத்தை அடைந்துள்ளது.

முதலமைச்சர் கலைஞரின் வெளிப்படையான நிர்வாகக் கலாச்சாரம் - சுமுகமான தொழில் உறவுகள் - உயர் தொழில்நுட்ப மனித வளமேம்பாடு - வலுவான வாடிக்கையாளர்கள் உருவாக்கம்

முதலீட்டாளர்களுக்கு நட்புறவான அணுகு முறை ஆகிய இத்தகு தொழிற்கொள்கையின் விளைவாகத் தமிழகம் தொழில் மயமாகிறது.

பதினெட்டே மாதங்களில் ரூ.35,000 கோடி முதலீடு

			ரூ. (கோடியில்)
1.	மின் உற்பத்தி	-	20,700
2.	அடிப்படை வசதி	-	7,285
3.	வாகன உற்பத்தி	-	5,100
4.	தகவல் தொழில்நுட்பம்	-	820
5.	உணவு பதனீட்டுத் தொழிற்சாலைகள்	-	200

தமிழகத்தைத் 'தொழில்மயமாக்கல்' என்ற உயரிய குறிக்கோளின் அடிப்படையில், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஒப்பற்ற முயற்சியால் உலகளாவிய அமைப்புகளின் உதவியுடன் புதிதாகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்:

★ ரூ.2,950 கோடி மதிப்பீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் கொரிய நாட்டின் ஹுண்டாய் மோட்டார் தொழிற்சாலை.

★ ரூ.450 கோடி மதிப்பீட்டில் திருப் பெரும்புதூரில் பிரான்சு நாட்டின் செயிண்ட் கோபைன் மிதவைக் கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலை.

★ ரூ.600 கோடி மதிப்பீட்டில் தென் கொரியாவைச் சேர்ந்த கும்ஹோ நிறுவனத்தின் மோட்டார் வாகன டயர்த் தொழிற்சாலை.

★ ரூ.320 கோடி மதிப்பீட்டில் திருவள்ளூரில் ஜப்பான் நாட்டின் மிட்சுபிஷி நிறுவனத்தின் கார் உற்பத்தித் தொழிற்சாலை.

★ ரூ.2,650 கோடி மதிப்பீட்டில் கடலூரில் பென்னார் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை உருவாக்கம்.

★ ரூ.6,000 கோடி மதிப்பீட்டில் நெல்லை மாவட்டம் நாங்குனேரியில் அமெரிக்க நிறுவனங்களுடன் இணைந்து உயர் தொழில்நுட்பப் பூங்கா.

★ ரூ.320 கோடி மதிப்பீட்டில், சென்னை தரமணி மற்றும் நந்தனத்தில் கம்ப்யூட்டர் தொழில்நுட்பப் பூங்கா.

★ ரூ.720 கோடி மதிப்பீட்டில் எண்ணூரில் பெட்ரோ கெமிக்கல் பூங்கா.

★ ரூ.8,000 கோடி மதிப்பீட்டில் மின் உற்பத்தித் திட்டங்கள்.

★ ரூ.6,000 கோடி மதிப்பீட்டில் ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரி மின்உற்பத்தித் திட்டம்.

★ ரூ.7,500 கோடி மதிப்பீட்டில் LNG மின் உற்பத்தித் திட்டம்.

★ ரூ.115 கோடி மதிப்பீட்டில் இங்கிலாந்து நாட்டின் பில்கிங்டன் நிறுவனத்தின் மிதவைக் கண்ணாடித் தொழிற்சாலை.

★ ரூ.59 கோடி மதிப்பீட்டில் ஜப்பான் நாட்டின் மட்சுஸிடா நிறுவனத்தின் குளிர்சாதனப் பெட்டி உற்பத்தி.

★ ரூ.2,000 கோடி மதிப்பீட்டில் பிரெஞ்சு நாட்டின் ட்ரான்ஸ்ரூட் நிறுவனத்தின் நெடுஞ்சாலைகள் அமைக்கும் பணி.

★ ரூ.31 கோடி மதிப்பீட்டில் கோவை மாவட்டம் பொங்கலூரில் பயனீர் நிறுவனத்தின் கோழி இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை.

★ ரூ.32 கோடி மதிப்பீட்டில், மேட்டுப்பாளையத்தில் குவைத் நாட்டின் உருளைக் கிழங்கு பதப்படுத்தும் தொழிற்சாலை.

★ இப்புதிய தொழிற்சாலைகள் மூலம் சுமார் 3½ இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டிடவுள்ளன.

சிறுதொழில் வளர்ச்சியிலும் சிறப்புமிகு சாதனைகள்:

★ டிக் நிறுவனம் மூலம் கடந்த 1½ ஆண்டுகளில் 7,755 புதிய சிறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.588 கோடி கடனுதவியளித்துள்ளது. இதன்மூலம், 75,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ சிட்கோ நிறுவனம் கடந்த 1½ ஆண்டுகாலத்தில் ரூ.7.41 கோடியில் 195 தொழிற்கூடங்களையும், ரூ.2.02 கோடியில் 263 மேம்படுத்தப்பட்ட தொழில் மனையிடங்களையும் உருவாக்கியுள்ளது. மேலும் ரூ.100 கோடி மதிப்பில் 45,000 மெட்ரிக் டன் மூலப்பொருட்களை விநியோகித்துள்ளது.

★ 18 மாதங்களில் 5,248 சிறுதொழில் முனைவோருக்கு ரூ.31.24 கோடி சிறு தொழில் மானியமாக வழங்கிச் சாதனை நிகழ்த்தப்பட்டது; இது கடந்த 5 ஆண்டுக்கால (60 மாதங்கள்) ஆட்சியில் வழங்கப்பட்ட சிறுதொழில் மானியத்தை விட அதிகமாகும்.

★ கடந்த 1½ ஆண்டுகளில், 45,866 சிறுதொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன் மூலம், 2.75 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

★ மாவட்ட அளவில், ஏற்கெனவே இயங்கிவரும் ஒற்றைச் சாளரக்குழு மற்றும் ஆலோசனைக் குழுவின் பணிகளை மேலும் வலுப்படுத்தி - ஒருமுகப்படுத்திடும் வகையில் 'ஒற்றைச் சாளர-சிறுதொழில் குறை தீர்க்கும் குழு'வாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.• இதனால் சிறுதொழில் முனைவோர்க்கு பல்துறை அனுமதிகள் விரைவாகவும், எளிதாகவும் வழங்கிட வழி செய்யப்பட்டுள்ளது.

★ படித்து வேலையில்லா இளைஞர்கள் - பெண்களுக்கு ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டிடும் வகையில், கிண்டியில் 'தொழில் முனைவோர் வளர்ச்சி மையம்' ஒன்று கலைஞரின் ஆணையின்படி அரசால் உருவாக்கப்பட்டுள்ளது.

★ முதல் தலைமுறைப் பெண்தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், திட்டத்துவக்க முதலீட்டில் 10% அதாவது அதிகபட்சம் ரூ.50,000 வரை மானியம் வழங்கப்படும்.

★ 375 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ரூ.32 கோடிக்கு

விற்பனையாகியுள்ளவை; இதன்மூலம் 1 இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

- ★ கோவை மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில், 289 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.5.52 கோடியில், 'அறிஞர் அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டை' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
- ★ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 81148 புதிய தொழிற்கூடங்களுக்கு ரூ.3430 கோடி கடனுதவி வழங்கிச் சாதனை படைத்துள்ளது. 71617 பேருக்கு இதனால் வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது.
- ★ 15 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் ரூ.44.14 கோடிக்குத் தேயிலை விற்பனை செய்துள்ளன. இவற்றில் 14,011 பேர் பணியாற்றுகின்றனர். ஈப்பநாடு, பித்தர்காட்டில் முறையே ரூ.2.30 கோடியிலும், ரூ.2.40 கோடியிலும் புதிய தேயிலைத் தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன. தும்மனட்டியில் ரூ.1.80 கோடியில் புதிய தேயிலைத் தொழிற்சாலை விரைவில் கட்டப்படும்.
- ★ தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் கடந்த ஆண்டில் ரூ.5.11 கோடிக்கு தோல் பொருள் உற்பத்தி செய்துள்ளது. நடப்பு ஆண்டில், ரூ.5.76 கோடி உற்பத்தி இலக்கில் உற்பத்திகள் நடைபெற்று வருகின்றன.

சிப்காட் :

- ★ நடுத்தர மற்றும் பெருந்தொழில்களுக்குத் தேவையான மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கிடும் வகையில், தற்பொழுது சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும் புதூர், நெமிலி, வடமங்கலம், இராணிப் பேட்டை, ஒசூர், கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய ஊர்களில் 5870 எக்டேர் நிலத்தைக் கையகப்படுத்தி தொழில் வளாகங்களை உருவாக்கி வருகிறது.
- ★ மேலும், ஒரகடம், மாமண்டூர் - பழமத்தூர், வரதராஜபுரம், எருமையூர் - பழந்தண்டலம், சிலம்பி மங்களம், ஊத்துக்கோட்டை ஆகிய இடங்களில் 6756 எக்டேர் நிலம் சிப்காட் மூலம் கையகப்படுத்தப்படுகிறது.
- ★ இவைகளுடன், கடலூர், குளச்சல் ஆகிய இடங்களில் சிறு துறைமுகங்களை நிர்மாணித்திட சிப்காட் முயன்று வருகிறது.

எல்காட்:

- ★ 'தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பத் தொழிற் கொள்கை' ஒன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- ★ எல்காட்டின் சார்பில், கேளம்பாக்கத்தில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ1,000 கோடி மதிப்பீட்டில் 'தகவல் தொழில் நுட்பப் பூங்கா' அமைக்கப் படுகிறது.
- ★ கார் - ரேடியோ மற்றும் ஸ்டீரியோ உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ரூ.3 கோடி மதிப்பீட்டில் ஹூண்டாய் நிறுவனத்துடன் இணைந்து செயற் படுத்தப்படும்.

புதிய சர்க்கரை ஆலைகள்:

- ★ தமிழ்நாட்டில் 15 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், 3 பொதுத்துறையிலும், 16 தனியார் துறையிலும் ஆக 34 சர்க்கரை ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. கள்ளக்குறிச்சி, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 2 கூட்டுறவு சாக்கரை ஆலைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. மேலும், திருக்கோயிலூர், கீழ்பெண்ணாத்தூர், ஆத்தூர், திருவிடைமருதூர், சங்கராபுரம், அறந்தாங்கி, வலங்கை மான், அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் புதிய சர்க்கரை ஆலைகளுக்கு இசைவுக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆

மனித உரிமை:

மக்கள் சாசனம்

- ★ தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், நலிவுற்ற பிரிவினரின்பால் நாட்டம் கொண்டு அடக்கப்பட்டு கிடக்கின்ற மக்களுக்குச் சமத்துவத்தை, சமூக அமைப்பிலும், பொருளாதார அடிப்படையிலும் உருவாக்கிட, நாளுக்கொரு புதிய திட்டமாக அறிமுகப்படுத்தியும், நடைமுறைப்படுத்தியும் வருகிறார். அவைகளை, மக்கள் எளிதாக அறிந்து, தெளிந்து, பயனடைய அவர்களுக்கு உரிமை உண்டு என்ற புரட்சிகர இலட்சிய நோக்கில், மக்களாட்சியின் மாண்பிற்கு 'மீண்டும் மெருகூட்டு'கின்ற வகையில் 'மக்கள் சாசனம்' ஏற்படுத்த முதலமைச்சர் கலைஞர் ஆணை பிறப்பித்துள்ளார்.
- ★ மனித உரிமைகள் மீறல் பற்றிய புகார்களை விசாரணை செய்ய 'மாநில மனித உரிமைகள் ஆணையம்' 17-4-97 முதல் தமிழ்நாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.



காவல்துறை நவீன மயம்!

- ★ காவல்துறையை நவீனமயமாக்கிடும் வகையிலும், சட்டம். ஒழுங்கைப் பராமரித்தலில் விரைந்து செயலாற்றிடவும், இவ்விரண்டு ஆண்டுகளில் ரூ.18.33 கோடி முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு நவீன மயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ★ காவலர்களின காவலராகத் திகழும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், காவல்துறைப் பணியாளர்கள் பலனடையும் வகையில் தமிழ்நாடு காவல்துறை சேமநல நிதிக்கு அரசு வழங்கி வந்த மானியத்தொகை ரூ.10 இலட்சத்தை ரூ.25 இலட்சமாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார். அதேபோன்று பயணப்படி, சீருடைப் படி, உணவுப்பொருள் மானியத் தொகை, உணவுப்படி, காவல் பதக்கம் பெறுவோர்க்கான பரிசுத் தொகை. மாதாந்திரப்படி ஆகியவைகள் உயர்த்தப்பட்டுள்ளன.
- ★ வீரமரணம் அடையும் காவல்துறையிருக்கு ரூ.2 இலட்சமும், ஊனமுற்றவர்களுக்கு ரூ.50,000மும், பலமான காயமடைந்தவர்களுக்கு ரூ.10,000மும் மற்றும் சிறு காயமடைவோருக்கு ரூ.5,000மும் கருணைத்தொகை வழங்க முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். இத்திட்டத்தின் . மூலம் இத்தகு சிறைத்துறை . தீயணைப்புத் துறை பணியாளர்களும் பயனடைவார்கள்.
- ★ காவல்துறைப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் வகையில் ரூ.13 கோடி செலவில், 2500 குடியிருப்புகள் கட்டவும், ஏற்கெனவே உள்ள காவலர் குடியிருப்புகளில் ரூ.5 கோடி செலவில் 2751 நவீன கழிப்பறை வசதிகள் செய்து தரவும், காவலர் குடியிருப்புகளுக்கு எனத் தனியாக 13,932 மின் மீட்டர்க் கருவிகள் வழங்கவும் அரசு அனுமதியளித்துள்ளது.
- ★ காவலர்களாகப் பணிபுரிய கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்படாது விடப்பட்ட 10,000 பேர்களில் முதல்கட்டமாக 6553 பேர் இரண்டாம் நிலைக் காவலர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்; இரண்டாம் கட்டமாக 5,700 பேர் பயிற்சி பெறுகின்றனர்; 1989. 90ல் தேர்வு செய்யப்பட்ட 1023 பேர் காவல் பயிற்சி பெறுகின்றனர்.
- ★ சீருடைப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 10,000 காவலர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.
- ★ கடந்த ஆட்சியில் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படாத 500 சார். ஆய்வாளர்கள் பயிற்சி முடிந்து பணிநியமிக்கப்பட்டுள்ளனர்; மேலும் 1418 பேர் சார். ஆய்வாளர் பயிற்சி பெறுகின்றனர்.
- ★ சட்டம். ஒழுங்கைக் காப்பதிலும், கொலை. கொள்ளை முயற்சிகளையும், சாதி. மதக்கலவரங்களையும் விரைந்து சென்று ஒடுக்கிடும் வகையிலும், காவல்துறைக்கென கடந்த 1½ ஆண்டுகளில் ரூ.8.80 கோடியில் 500 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- ★ திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய 3 மாநகர்களில் ரூ.8.04 கோடி ஒதுக்கீட்டில் புதிதாகக் காவல் ஆணையகங்கள்



உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு "காவல் சரக துணைத் தலைவர் அலுவலகம்" ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ *இந்த ஆண்டிற்கான தமிழக முதலமைச்சர் விருது காவலர், தலைமைக் காவலர் பணியில் சிறந்த சேவை புரிந்தோருக்கு வழங்கப்படுகிறது. இதேபோல், 'தீயணைப்புத் துறை விருது' அத்துறையில் சிறந்த சேவை புரிந்த தீயணைப்பு வீரர், தலைமை வீரர் 74 பேருக்கும், அதேபோலும், சிறைத்துறையைச் சேர்ந்த 20 பேருக்கும் முதலமைச்சர் விருதுகள் வழங்கப்பட்டன.*

★ *இந்த விருதுகளைப் பெறுவோர், வரும் பிப்ரவரி மாதத்திலிருந்ந்து சிறப்பு ஊதியமாக அவரவர் தகுதிக்கேற்ப மாதந்தோறும் ரூ.40. லிருந்து ரூ.50 வரை பெறுவர்.*

புதிய கட்டடங்கள்:

★ *சென்னை . காமராசர் சாலையிலுள்ள, காவல்துறை இயக்குநர் அலுவலகம் புதுப்பிக்கும் பணிகளும், வேலூரில் சரகத் துணைத் தலைவர். மாவட்டக் காவல் அ.லுவலகம், கோவையில் காவல் ஆணையக அலுவலகம், நாகர்கோவிலில் மாவட்ட காவல் அலுவலகம், பல்வேறு ஊர்களில் 81 காவல் நிலையங்கள்ஆகியவற்றின் புதிய கட்டடப்பணிகளும் ரூ.21.34 கோடி மதிப்பீட்டில் நடைபெறுகின்றன.*

புதிய காவல் நிலையங்கள்:

★ *கடந்த இரண்டு ஆண்டுகளில், 26 புதிய காவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன; அதோடு, 36 புறக்காவல் நிலையங்கள், காவல் நிலையங்களாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.*

• • • • • • • • • •

போக்குவரத்தில் மேம்பாடு



☆ *21 அரசுப் போக்குவரத்துக்கழகங்களைச் சீரமைக்கும் வகையில், 7 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.*

☆ சென்னை மாநகரில் 100 நெரிசல் நேரப் பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 50 தொலைதூர அதிசொகுசு விரைவுப் பேருந்துகள் ஒலி/ஒளி வசதியுடன் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின் பேரில் ஒவ்வொரு தொகுதிக்கும் 2 வழித்தடங்களை இயக்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 340 வழித்தடங்கள் இயக்கப் பட்டுள்ளன. 30-11-97 வரை 2215 புதிய பேருந்துகள் புதிய வழித்தடங்களுக்காகவும் பழைய பேருந்துகளை மாற்றிடும் வகையிலும் இயக்கப்பட்டுள்ளன.

☆ பொன்விழாக் காணும் நெடுஞ்சாலைத்துறையின் புதிய திட்டங்களாக, தமிழகத்தில் ரூ.150 கோடி செலவில் 50 புதிய பாலங்கள் கட்டப்படும்; சென்னையை நோக்கி வரும் பல்வேறு சாலைகள் 50 கி.மீ. தூரத்திற்கு ரூ.150 கோடி செலவில் அகலப்படுத்தி சீரமைக்கப்படும்; தாம்பரத்திலிருந்து மதுரவாயில் வரை ரூ.75 கோடி செலவில் புறவழிச் சாலை அமைக்கப்படும்; திண்டிவனம் முதல் மதுரை வரை 4 வழிச் சாலை அமைக்க நடவடிக்கை விரைந்து எடுக்கப்படுகிறது.

☆ ஏற்கெனவே தொடர்ந்து நடைபெற்று வருகின்ற சாலைச் சீரமைப்புப் பணிகளுக்கு 'நபார்டு' மூலம் ரூ.250 கோடியும், பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள ரூ.150 கோடியும், ஆகமொத்தம் ரூ.400 கோடியில் தமிழகத்தில் சாலை சீரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன என்று முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

☆ 2001-ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முக்கியச் சாலைகளும் நவீன இயந்திரங்களின் மூலம், தரமான சாலைகளாக உருவாக்கம் பெறும் என முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

☆ சென்னையிலிருந்து திருவான்மியூர், கோவளம், மாமல்லபுரம், மரக்காணம், புதுவை வழியாகக் கடலூர் வரை செல்லும் சாலையைப் பன்னாட்டுத் தரம் வாய்ந்த இருவழிச் சாலையாக மாற்றிட ரூ.102 கோடி செலவில் - ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் பணிகள் முடிந்து பொங்கல் திருநாளன்று (14.1.98) போக்குவரத்திற்குத் திறந்துவிடப்பட்டது.

☆ மழைவெள்ளத்தால் பெரும் பாதிப்புக்குள்ளாகிப் பழுதடைந்துள்ள சாலைகளைத் துரிதமாகச் சீரமைத்திட ரூபாய் 55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு வருகின்றன. ★

தமிழ்ப் பொழில்

முனைவர் க. பூரணச்சந்திரன்



'இதழ்கள்' என்பது தமிழில் ஒரு பொதுச் சொல்லாக இருக்கிறது. தினசரிப் பத்திரிக்கைகள், வாரப் பத்திரிக்கைகள், மாதமிருமுறை, மாதம் ஒருமுறை என்று பல்வேறு வித கால அவகாசங்களில் வெளிவரக்கூடிய வெளியீடுகள் 'ஜர்னல்' (JOURNAL) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் அறிவார்த்தமான ஏடுகள் - இவை அனைத்தையும் 'இதழ்கள்'(அல்லது 'பத்திரிகைகள்') என்ற ஒரே சொல்லால் குறிப்பது நியாயமாகாது என்றே கருதலாம். மேற்கூறிய வகைகளுள் தமிழ்ப் பொழில் என்பது 'ஜர்னல்' எனப்படும் வகையைச் சேர்ந்தது.

இதனை, இங்கே குறிப்பிட முக்கியக் காரணம், இம்மாதிரி வகைகளுக்குள்ளாக பெரும் வேறுபாடுகள் உண்டு. இவற்றை ஆராயும் முறைகளும் வேறுவேறு. ஒரு 'செய்தித்தாளை' ஆராய்வது போன்ற முறையில் ஆய்வுக்கட்டுரைகளைத் தாங்கிவரும் ஒரு அறிவியல் இதழை மதிப்பிட, ஆராய முடியாது. ஒன்றில் இதழியல் கூறுகளான செய்தியமைப்பு முறை, தலையங்கம் வரைதல், பக்க அமைப்பும், பொதுப் புனைவும் போன்றவை முக்கியத்துவம் பெறலாம்; மற்றதிலோ இவை கவனிக்கப்படவே தேவையற்ற அம்சங்களாக இருக்கலாம். ஒன்றில் வெளிவரும் கட்டுரைகள் போற்றிப் பாதுகாத்து சேமித்து வைக்க வேண்டியவையாகப் படலாம்; மற்றொன்றில் படித்துவிட்டு எறிந்துவிடும் முறையிலிருக்கலாம். ஆகவே பொதுவாக 'இதழ்கள்' என்று கூறாமல் வேறுபடுத்திக் காண்பது இம்மாதிரி ஆய்வரங்குகளில் அடிப்படைத் தேவையாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்,
சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ் இலக்கியத் துறையும்,
டாக்டர். மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையமும்
இணைந்து நடத்திய
'இந்திய விடுதலைக்கு முன்
வெளிவந்த இதழ்கள்' கருத்தரங்கில்
படிக்கப்பட்ட கட்டுரை.

'தமிழ்ப்பொழில்' என்னும் இதழ், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒரு வாய்க்கருவியாக (mouthpiece) அமைந்த இதழ். ஆகவே தமிழ்ப் பொழிலைப் பற்றிக் காணும் முன்னர், கரந்தைத் தமிழ்ச்சங்கம் பற்றிய ஒரு சிறு பார்வை பயனுடையதாகும்.

ஆங்கில ஆட்சியும் கல்வியும் பொதுவாக இந்திய மொழிகளிலும் மறுமலர்ச்சியை உண்டாக்கியது என்பது வரலாற்றாசிரியர் கருத்து. தமிழைப் பொறுத்தவரை, நிறுவன அமைப்பு என நோக்கும் போது, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றமே ஒரு புதிய திருப்புமுனையாகுமென நம்பி ஆரூரன் குறித்துள்ளார். இச்சங்கம், 'நான்காம் தமிழ்ச் சங்கம்' என்னும் உணர்வோடு பாண்டித்துரைத் தேவரால் 1901ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதினான்காம் நாளன்று தொடங்கப்பட்டது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் உடன் விளைவே கரந்தை தமிழ்ச்சங்கம் ஆகும். இதன் தொடக்கவிழா 14-5-1911 அன்று ந.மு. வேங்கடசாமி நாட்டார் தலைமையில் நிகழ்ந்தது. இச்சங்கத்தின் குறிக்கோள் தொடர் 'தொண்டு-தமிழ்-முன்னேற்றம்' என்பது.

> *"இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், ஆரிய மொழியின் ஆதிக்கத்தாலும், ஆங்கிலேயர் ஆட்சியாலும், தமிழ் பெருமை குன்றி நின்றது. உயர்ந்த பதவிகளில் இருந்தவர்கள், தமக்குத் தமிழ் தெரியாது என்று பெருமையோடு சொல்லிக் கொண்ட காலம் அது. தூய தமிழைப் பேசவோ, எழுதவோ தெரியாத நிலையில், பெரும் பான்மைத் தமிழர் இருந்தனர்".*

இந்நிலையில்தான், கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ் வளர்க்கவெனத் தோன்றியது என்று விளக்கும் த.வே.உமாமகேசுவரன், இச்சங்கத்தின் குறிக்கோள், 'உலக மக்களிடையே தமிழரின் பெருமையைப் பரப்புவது' என்றும் சொல்கிறார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் குறிக்கோள்களைச் சங்கத் தலைவராக இருந்த செ.தனகோடி என்பார் பின்வருமாறு தொகுத்துரைக்கிறார்:

1. வேற்றுமொழி விரவாத தூய தமிழில் மக்கள் பிழையின்றிப் பேசுமாறும், எழுதுமாறும் செய்தல்;
2. தமிழ்ப் பெரும்புலவர்களை ஒன்று கூடச் செய்தலும், வெளியுலகிற்கு அறிமுகப் படுத்தலும்;
3. தமிழ் இலக்கியங்களைப் பரப்புதல்;
4. தமிழின் இசைநாடகப் பகுதிகளைத் தக்காங்கு வளர்த்தல்;
5. தமிழ்மொழி பயில்வோர்க்கு ஊக்கமளித்து, மக்களிடையே தமிழ்ப் பற்றை வளர்த்தல்.

'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' என்னும் தொடரிலுள்ள 'கரந்தை' என்பதை தஞ்சாவூரைச் சேர்ந்த கருத்தட்டாங்குடி அல்லது கருந்திட்டைக்குடி என்பதன் மரூஉவாக நிற்கிறது. ஆனாலும் அதன் இலக்கணச் சார்புப் பொருள் தெளிவு. புறத்திணைகளில் 'வெட்சி' என்னும் ஆநிரை கவரும் போருக்குப் பதிலடி தரும் தற்காப்புப் போர்த் திணைதான் 'கரந்தை' என்பது யாவரும் அறிந்ததே. இதிலுள்ள 'தற்காப்பு' (DEFENCE) என்னும் உட்குறிப்பு நோக்கத்தக்கது.

தமிழ்ச்சங்கத்தின் பணிகளாகச் சிலவற்றை இங்கே குறிக்கலாம்:

1. சங்க ஆண்டுவிழா, சங்கம் தொடங்கி ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்புறக் கொண்டாடப் பட்டு வந்தது. இவ்விழா, பெரும் புலவர்களின் சந்திப்புக் கூடமாய் அமைந்தது. பேரறிஞர்கள், இவ்விழாக்களுக்குத் தலைமை

தாங்குமாறு அழைக்கப் பட்டனர். கா.நமசிவாயர், தி.செல்வக் கேசவராயர், ச.சோமசுந்தர பாரதியார், பா.வே.மாணிக்க நாயக்கர், கா.சுப்பிரமணிய பிள்ளை, இரா.இராகவையங்கார், மு.இராக வையங்கார், உ.வே.சா மிநாதையர், பண்டிதமணி மு.கதிரேசஞ் செட்டியார், மறைமலையடிகள், விபுலாநந்தர், ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆகியோர் ஆண்டு விழாக்களில் தலைவர்களாக அமர்ந்து சிறப்பித்த ஒருசில தமிழ்ச்சான்றோராவர். இவர்களது ஆண்டுவிழாத் தலைமையுரைகள், பல புத்தம்புதுக் கருத்துகளை மக்களுக்குத் தெரிவிப்பனவாகவும் தமிழுணர்ச்சியைத் தூண்டு வனவாகவும் அமைந்தன.

2. தமிழ்ப்பல்கலைக் கழகம் ஒன்று நிறுவ வேண்டும் என்பதற்காகக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பெருமுயற்சி செய்தது. (ஆண்டு 1925)
3. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இழிவுற்றிருந்த தமிழாசிரியர்களின் நிலையை உயர்த்தப் போராடியது. பிறதுறை ஆசிரியர்களுக்குச் சமமாக, தமிழாசிரியர்கள் மதிப்புப் பெறுவதற்குப் பெருமுயற்சி செய்தது.
4. இந்தி ஆதிக்க எதிர்ப்பு இயக்கத்திற்குத் துணை நின்றது. 1938ஆம் ஆண்டு தஞ்சையிலிருந்து சென்னை சென்ற எதிர்ப்புப் பேரணிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரான ஐ.குமாரசாமிப் பிள்ளை தலைமை தாங்கிச் சென்றார்.
5. தமிழிசை இயக்கத்திற்குத் துணை செய்தது; தமிழிசை ஆராய்ச்சிக்கு ஆதரவு தந்தது; சுவாமி விபுலாநந்தரின் 'யாழ்நூல்' கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரின் தூண்டுதலினாலேயே இயற்றப்பட்டு, சங்கத்தினாலேயே வெளியீடு செய்யப்பட்டது.
6. கலைச் சொல்லாக்கத்திற்குத் தூண்டுகோல் அளித்தது. 'தமிழ்ப் பொழில்' இதழ் வாயிலாக நல்ல கலைச் சொல்லாக்கங்களை வெளியிட்டது; கலைச்சொல்லாக்கம் செய்ய ஆலோசனைகள் வழங்கியது. கலைச் சொல்லாக்கக் குழுக்கள் சரிவர இயங்காத போதும், வடமொழிச் சொற்கள் வரம்பின்றிக் கலைச்சொற்களாகப் புகுத்தப்பட்ட போதும் எதிர்த்தது.
7. தமிழகம், தமிழினம், தமிழ்மொழி சார்பான எந்தச் சிக்கல் நேரிடும்போதும் அவற்றை வாசகர்களுக்கு எடுத்துவிளக்க முயற்சி செய்தது.
8. இவற்றிற்கெல்லாம் ஒரு கருவியாகத் தான் 'தமிழ்ப்பொழில்' என்னும் திங்களிதழ் 1925ஆம் ஆண்டு ஏப்ரல் (குரோதன ஆண்டு-சித்திரைத் தொடக்கம்) முதல் வெளியிடப்பட்டு வருகிறது.

இப்பணிகள், தமிழில் படைப் பாற்றலை - புதிய முயற்சிகளைத் தூண்டுவனவாக இருந்தன என்பதைவிடத் 'தற்காப்பு' முயற்சிகளே என்பதும் தெளிவு. ஆகவே 'கரந்தை' என்னும் அடைமொழிக்குப் பொருத்த மாகவே இதன் பணிகள் அமைந்ததும் தெளிவு.

"நமது தமிழ்ப்பொழிலின் நறுமண நுகர்வினை நமது சங்க அன்பர்கள் பலர் பன்னெடு நாட்களாக அவாவி வந்தனர். எனினும் 'அடுத்து முயன்றாலும் ஆகு நாளன்றி ஆகா'வாகலின் திருவருட்பேற்றிற்கு இலக்காகிய இந்நாளே, இப்பொழிற் றிறப்பு விழாவினைக் கூட்டி அன்பர்கட்குப் பொழிலின் நுகர்ச்சியை இயலுவேமாயினம்"

- என்று தமிழ்ப்பொழில் என்னும் இதழைத் தொடங்கப் பல நாட்களாகச் சங்கத்தினர் முயன்று வந்ததைக் கரந்தைக் கவியரசு ஆர்.வேங்கடாசலம் பிள்ளை கூறுகின்றார். மேலும், 'தமிழ்ப்பொழில்' எனப் பெயரிட்டமைக் கான காரணத்தையும் குறிப்பிடுகிறார்:

"தனது பசுநிறத்தால், வண்டொலியால், தீங்கனியால், மலர் மணத்தால், பைம்புற்றரையால், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் பேரன்பினைத் தன்பால் எய்தும் எத்திறத்தோர்க்கும் எஞ்ஞான்றும் தரவல்லது பொழில் ஒன்றேயன்றோ! எனவே இங்ஙனம் ஒப்பும் உயர்வுமில்லாத சிறப்பினதாகிய பொழிலின் பொற்பினையுணர்ந்தே இந்தத் திங்களிதழிற்குத் 'தமிழ்ப் பொழில்' எனப் பெயரிட்டனம்".

மறைமலையடிகள்

'பொழில்' என்னும் உருவகமும், பசுமை பற்றிய படிமமும் இங்கே கவனிக்கத் தக்கவை. மேலும், முதற்பகுதியில் காணப்படும் சைவமணம் கமழும் நடையும் கவனிக்க வேண்டுவது. மதுரைத் தமிழ்ச்சங்கம் போன்ற அமைப்பாக கரந்தைத் தமிழ்ச்சங்கம் உருவானது போலவே, 'செந்தமிழ் போன்றே தமிழ்ப்பொழில் அமைய வேண்டும்' என்றும் எண்ணி உருவாக்கப்பட்டது. 1923ஆம் ஆண்டு திருநெல்வேலிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வெளியீடாக செந்தமிழ்ச்செல்வி புறப்பட்டது. பலநாளாய் இதழ் ஒன்றைத் தொடங்க எண்ணியிருந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்க்கு இது ஓர் உந்து சக்தியாயிற்று.

மேலும் கூறுகின்றார்
ஆர்.வேங்கடாசலம் பிள்ளை:

"இவ்விதழ் ஓர் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடு என்னும் தகுதிக்கேற்ப, தமிழ் வளர்ச்சியும், தமிழர் மேம்பாடும் பற்றிய அருமைக் கட்டுரைகளையே தன்னகத்துக் கொண்டுவரும். தமிழ்மொழி வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்ச் சொல்லாக்கம், தமிழ்நூல் ஆராய்ச்சி, பழந்தமிழ் நூல் வெளியீடு, தமிழ்நூல் மதிப்புரை, தமிழ்ச்சங்கச் செய்திகள், முதலிய எண்ணில் பல்வகையானவையும் சிறந்த கட்டுரைகள், ஆங்கிலம் ஆரியம் தமிழ் மொழிகளில் வள்ளலார் பலரால் கற்றாரேயன்றிக் கற்போர்க்கும் பயனுறத்தக்க நெறியில் தெள்ளிய (இனிய) தீந்தமிழ் நடையில் எழுதப் பெறும்"

என்று இதில் இடம் பெற வேண்டிய பொருட்களை வரையறுக்கிறார். மேலும்,

1. கட்டுரைகள் தெள்ளத் தெளிந்த தீந்தமிழ் நடையில் விழுமிய பொருளை விளக்கமுற எழுதப் பெற்றனவாதல் வேண்டும்.
2. தமிழ்ப்பொழில் பக்கம் நான்கிற்கு மேல் தொடராது கட்டுரை முடிவுபெற்றிருக்க வேண்டும். நீண்ட பொருளாயிருக்கு மானால் இக்கூறிய அளவில் முடியும் வண்ணம் சிறு பிரிவுகளாக எடுத்து எழுதப்பெறுதல் வேண்டும்"

ந.மு.வேங்கடசாமி நாட்டார்

- என வரையறை விதிக்கப்பட்டது. ஆனால் இந்த வரையறை பின்னாட்களில் தளர்வுக்குள்ளானதாகவே தெரிகிறது.

'பொழில்' என்று பெயரிட்டதற்கேற்ப, தமிழ்ப்பொழில் ஆசிரியர், 'பொழிற் றொண்டர்' எனப்பட்டார். முதலில் பணியாற்றிய பொழிற்றொண்டர்கள், ஆர்.வேங்கடாசலம் பிள்ளை, நீ.கந்தசாமிப் பிள்ளை, எல்.உலகநாத பிள்ளை, த.வே.உமாமகேசுவரன் போன்றோர் தமிழ்மீது பற்றுக் கொண்டிருந்தோர் என்பதேயன்றி, ஓரளவேனும் படைப்புத் திறனும் கைவரப் பெற்றவர்கள். பின்னர் வந்த பொழிற்றொண்டர்கள் - கோ.சி.பெரிய சாமிப்புலவர், அ.கணபதிப் பிள்ளை, ச.சுயம்பிரகாசம், செ.தனக்கோடி போன்றவர்கள் சங்கத் தலைமை என்பதால் மட்டுமே வந்தவர்களே. எனவே, இவர்களுக்குப் பின்னணியில் புலவர் க.வெள்ளைவாரணன் இருந்து பொழிற்றொண்டராகப் பணியாற்ற வேண்டி வந்தது. 1947 முதல் இம்மாதிரி மாற்றம் ஏற்பட்டது. வெள்ளை வாரணனுக்குப் பின் ச.பாலசுந்தரம் இப்பணியைத் தொடர்ந்தார்.

"பொழிற்றொண்டர் என்ற பெயரில் சிறந்த ஆராய்ச்சியாளரும், ஞானியார் அடிகளின் மாணவருமான க.வெள்ளை வாரணர் எழுதும் இலக்கியக் கட்டுரைகளையும் வேறு பலர் எழுதும் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளையும் நல்ல தமிழில் வெளியிட்டு வருகிறது"

- என்று 'தமிழ் இதழ்கள்' என்னும் நூலில் ' சோமலெ ' குறிப்பிடுகிறார். மேற்கூற்றை அவர் எழுதிய சமயத்தில் 'பொழிற்றொண்டர்' என இதழ் அட்டையில் இடம் பெற்றிருந்தவர் அரங்க.வேசுப்பிரமணியன்.

சுருங்கச் சொன்னால் த.வே.உமா மகேசுவரன் காலம் வரை தமிழ்ப்பொழில் பின்னாளிலிருந்ததைவிட மேலதிகமான தகுதி பெற்றிருந்தது என்பதுதான் விஷயம். பின்னாளில், ஐம்பதாம் துணர் முதற்கொண்டு ஓர் ஆசிரியர் குழு அமைக்கப்பெற்றுவிட்டது.

தமிழ்ப்பொழில் பல சமயங்களில் பொருளாதார இடர்ப்பாட்டினூடும் இயங்கி வந்துள்ளது. அதன் அமைப்பு, பக்கப்புனைவு போன்றவை பற்றி அதிகமாக அதன் 'தொண்டர்கள்' அவ்வளவாகக் கவனம் செலுத்தவில்லை என்றே தெரிகிறது. இதுவரை ஐந்தாறு வகையாக அட்டை அமைப்பு மாறியிருப்பினும் அளவும் அச்சமைப்பும் ஏறத்தாழ ஒரே தன்மைத்தாகத்தான் அமைந்துள்ளன. கட்டுரைகளையும் செய்திகளையும் தொகுத்துப் பிழையின்றி வெளியிடுதல் என்பவையே பொழிற் றொண்டர்களின் ஆர்வமாக இருந்திருக் கிறதேயன்ற இதழமைப்பில் ஆர்வம் என்பது குறைவாகவே தெரிகிறது.

தமிழ்ப்பொழிலில் இடம் பெற்ற மொத்தப் படைப்புகளையும் பின்வருமாறு பகுத்துக் காணலாம்: 1.தமிழ்ச்செய்திகள்; 2.புதுப்படைப்புகள்; 3.தமிழியற் கட்டுரைகளும் பதிப்புகளும் என்பவை இவை. இவற்றைப் பற்றி சற்றே விரிவாகக் காணலாம். இவற்றைக் காண்பது தமிழ்ப் பொழிலின் கட்டமைப்பை விளங்கிக் கொள்ள உதவும்.

1. தமிழ்ச்செய்திகள்:

இவை நான்கு வகை. அ. கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்புள்ளவை; ஆ. பிற செய்திகள்; இ. பொழிற்றொண்டர் கருத்துரைகள்; ஈ. பொழிற்றொண்டர் நூன்மதிப்புரைகள்.

அ. கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்புள்ள செய்திகள்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரால் நடத்தப்பெறும் இராதாகிருட்டினத் தொடக்கப் பள்ளி, உமாமகேசுவரர் மேல்நிலைப்பள்ளி, கரந்தைப் புலவர் கல்லூரி, திக்கற்ற மாணவர் இல்லம் போன்ற நிறுவனங்கள் பற்றிய செய்திகள், விளம்பரங்கள் ஆகியன தமிழ்ப்பொழிலில் இடம் பெற்றுள்ளன. மேலும் கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாக்கள், கலைமகள் விழாக்கள், இளங்கோவடிகள் தமிழ்க்கழக விழாக்கள் பற்றிய செய்திகளும் அடங்கியுள்ளன.

கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாக்களில் அறிஞர்கள் சொற்பொழிவாற்ற வரும்போது அவர்களுக்களித்த வரவேற்புரைகள், வாழ்த்துரைகள், வாழ்த்துப்பாக்கள் ஆகியனவும் வெளியிடப்பெற்றுள்ளன. கரந்தைத் தமிழ்ச்சங்கம் தொடர்புடையோர் உயர் பதவிகள், பட்டங்கள், சிறப்புகள் முதலியன பெறும்போது 'மகிழ்ச்சி' என்னும் தலைப்பில் செய்திகள் இடம்பெறுவது வழக்கம். சங்கத் தொடர்புடையோர் எவரேனும் மறைந்தால் 'துயரம்' அல்லது 'கையறவு' என்னும் தலைப்பில் செய்திகள் இடம்பெறும். கையறுநிலைப்பாக்களும் இடம்பெறுவது வழக்கம்.

சிறப்புப்பெற்ற சமயங்களில் தமிழறிஞர்கள், புரவலர்கள் ஆகியோர்தம் நிழற்படங்களும் இடம்பெறுவதுண்டு. கரந்தைத் தமிழ்ச்சங்க விழாக்களில் பங்கேற்ற அறிஞர்கள்தம் சொற்பொழிவுச் சுருக்கங்களையும், பொழிற்றொண்டர், குறிப்புகளாக வெளியிடுவதுண்டு.

ஆ. பிற செய்திகள்:

ஏனைத் தமிழ்ச் சங்கங்கள், தமிழ் வளர்ச்சி அமைப்புகள், தமிழாசிரியர் கழகங்கள் போன்ற அமைப்புகள் தரும் செய்திகள் இதில் அடங்கும். இவை ஆற்றும் தமிழ்ப்பணிகள், இவற்றின் அறிவிப்புகள், விளம்பரங்கள் போன்றவையும் இதன்கண் அடங்கும்.

இ. பொழிற்றொண்டர் கருத்துரைகள்:

தமிழ் ஆக்கம் தொடர்பான செய்திகள், தமிழகம் பற்றிய செய்திகள், இந்தியா உலக நடப்புப் பற்றிய குறிப்புகள் என எவை பற்றியும் பொழிற்றொண்டர் வரையும் கருத்துரைகள் (பிற இதழ்களின் 'தலையங்கம்' போல) இதன்கண் அடங்கும்.

ஈ. பொழிற்றொண்டர் நூன்மதிப்புரைகள்:

தமிழ்ப்பொழிலில் வெளிவந்த நூல் மதிப்புரைகள் இருவகைப்படும். பொழிலாசிரியர், தாமே நூல் மதிப்புரை வரைவதுண்டு. பிறர் எவராயினும் அப்போது வெளிவந்த சிறந்த நூலுக்கு மதிப்புரைகள் வரைந்து, கட்டுரைகள் அல்லது குறிப்புரைகள் அனுப்புவதும் உண்டு. பொழிற்றொண்டர் தரும் நூன்மதிப்புரைகள், இரண்டு மூன்று வரிகள் முதலாகப் பெரும்பாலும் ஓரிரு பத்திகள் வரை செல்லும். இவற்றில் நூல் மதிப்பீடு இடம் பெறுவதில்லை. நூலினை வெளியிட்டோர் பற்றிய குறிப்பு, ஆசிரியர், விலை, நூல் நுவலும்பொருள் ஆகியவை மட்டுமே இடம்பெறும் ('வரப்பெற்றோம்' என்னும் பகுதிபோல).

2. புதுப்படைப்புகள்

தமிழ்ப்பொழிலில் இடம் பெற்ற கவிதைகள், நாடகங்கள், படைப்புக் கட்டுரைகள், அறவுரைக் கட்டுரைகள், வாழ்வியற் கட்டுரைகள், தமிழ்நேயக் கட்டுரைகள், அறிவியற் கட்டுரைகள் ஆகியன அனைத்தும் 'புதுப்படைப்புகள்' எனலாம்.

தமிழ்ப்பொழிலில் கவிதைகள் (சராசரியாக ஒரிதழுக்கு நான்கு எனக்கொள்ளலாம்) இடம்பெற்றன. குறிப்பாக,பாவலர் ச. பாலசுந்தரத்தின் 'கரந்தைக்கோவை' என்னும் கவிதைப் படைப்பையும், 'புலவர் உள்ளம்', 'புரவலர் உள்ளம்', 'பாரி', 'வஞ்சப்போர்' முதலிய செய்யுள் நாடகங்களையும் சொல்லலாம். ஈரோடு தமிழன்பனின் (ந. செகதீசன் என்னும் பெயரில் எழுதிய) தொடக்க காலக் கவிதைகள் சிலவற்றையும் காணலாம். தொடக்க காலத்தில் க. வெள்ளைவாரணன் எழுதிய 'காக்கைவிடு தூது' என்னும் அங்கதச் செய்யுளும், சுவாமி விபுலாநந்தரின் எளிய இனிய (ஈசனுவக்கும் இன்மலர்கள் போன்ற) பாடல்களும் சிறப்பானவை.

பெரும்பாலான கவிதைகள் தமிழ் தமிழ் என்று, திரும்பத்திரும்பக் கூறியது கூறலாகப், போற்றுதற் பாணியிலுள்ளன. இவற்றைக் கவிதைகள் என்று சொல்வது, ஆழ்ந்த இலக்கிய மதிப்பீட்டு நோக்கில் கண்டால், உபசார வழக்கே எனத் தோன்றும்.

உரைநடையிலும் கதை, கட்டுரை, நாடகம் எனப் பல்வேறு வகைகள் இடம் பெற்றுள்ளன. இலக்கியத்தன்மை இவற்றில் குறைவு. அறுவடை மிகுதி; நமது கவனத்தில் முக்கிய இடம்பெற வேண்டுவன தமிழியற் கட்டுரைகளும் பதிப்புகளுமே. இவை மூன்றாவது வகை.

3. தமிழியற் கட்டுரைகளும் பதிப்புகளும்

தமிழ்ப்பொழிலில் வெளிவந்த தமிழியற் கட்டுரைகளை ஐந்து வகைகளாகப் பகுக்கலாம். 1) இலக்கியக் கட்டுரைகள்; 2) இலக்கணக் கட்டுரைகள்; 3) தமிழக வரலாற்றுக் கட்டுரைகள்; 4) தமிழ்ப் பண்பாட்டுக் கட்டுரைகள்; 5) கலைச் சொல்லாக்கக் கட்டுரைகள். பதிப்புகளை அ) பழைய நூல்/பாடற் பதிப்புகள்; ஆ) கல்வெட்டு வெளியீடுகள் என இரண்டாகப் பகுக்கலாம்.

பொதுவாக, தமிழ்ப்பொழிலில் வெளிவந்துள்ள கட்டுரைகள், ஆழ்ந்ததேடலின்றி, மேம்போக்காக, ஆசிரியர் கருதிய கருதுகோளையே ஒரு சிறு கட்டுரையாகத் தருவனவாக உள்ளன; இன்னும்சில சமயங்களில், கருதுகோளை நிறுவுகின்ற சான்றுகளும் போதிய அளவின்றி, ஓரிரு சான்றுகளோடு கருத்தை முன்வைத்துச் சென்றுவிடுவதுண்டு. பெரும்பாலும் தமிழ்பொழில் ஆய்வுக் கட்டுரைகள் நான்கு பக்க அளவின. இன்னும் குறைந்த பக்க அளவிலும் அமைவதுண்டு.

திரு.வி.க.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியோரும், இதிலிருந்த தமிழறிஞர்களும், இதன் புரவலர்களும் அக்காலத்தே நீதிக்கட்சியில் பெரும் செல்வாக்குப் பெற்றவர்களாகவே இருந்தனர். சங்கத் தலைவர் த.வே. உமாமகேசுவரன், தஞ்சைப்பகுதி நீதிக்கட்சியின் தூணாக விளங்கியவர்; புரவலர் ஏ.டி. பன்னீர் செல்வம், மாநில நீதிக்கட்சியின் தலைவர்களுள் ஒருவர். பல அரசு உயர் பதவிகளை வகித்தவர். இவர்களுடைய பாதுகாப்பில் இருந்த கரந்தைத் தமிழ்ச்சங்கம், பார்ப்பனரல்லாதார் இயக்கம், தனித்தமிழ் இயக்கம் ஆகியவற்றுடன் சார்பு கொண்டே விளங்கியது. தமிழ்பொழில் இதழும் நீதிக்கட்சி, திராவிடர் இயக்கம், தனித்தமிழ் இயக்கம், இந்தி ஆதிக்க எதிர்ப்பு, கலைச்சொல்லாக்கம், தமிழிசை இயக்கம் போன்ற பல இயக்கத் தொடர்புகள் கொண்டது. இச்சார்புகளின்றி தமிழ்ப்பொழிலின் ஆய்வுக் கட்டுரைகளைப் பிரிக்க முடியாது. இச்சமூக நிகழ்வுகள், தமிழ்ப்பொழிலின் 'ஆய்வுக்' கட்டுரைகள் வாயிலாகவும் வெளிப்பாடு பெற்றுள்ளன. ஆகவே இம்மாதிரி இதழ்களை ஆராய்வதன் ஒரு முக்கியப் பயன், இச்சமூக நிகழ்வுகள், இவ்விதழின் வழிஇலக்கிய, இலக்கண, வரலாற்று, பண்பாட்டுக் கட்டுரைகள் வழி ஆய்வுப்போக்கினை எவ்விதம் ஆட்சிசெய்கின்றன என்று காண்பது தான். தமிழ்ப்பொழில் வெறும் இதழன்று; இது ஓர் சமூக நிகழ்வு. இதன்வழி தமிழ்ச் சமூகம். எழுபதாண்டுகளில் இலக்கிய சமூக நிலைகளில், கருத்தியலில் அடைந்த மாற்றங்களைக் காண்பது தமிழ்ச் சமூகத்தைப் பற்றிய நமது அறிவை மேம்படுத்த உதவும். செந்தமிழ் இதழின் தொடக்ககாலத் தொகுப்புகளை அடைவுபடுத்தி பா.ரா. சுப்பிரமணியன் கூறுகின்றார்.

"செந்தமிழ் இதழின் தொடக்ககாலத் தொகுப்புகளை அடைவுபடுத்துவது என்பது ஒருவகையில் ஒரு மாயப் பெட்டியைத் திறப்பது போன்றது! இந்தத் தொகுப்புகளில் அடங்கியுள்ள பொருட்கள் படிப்போரை மெய்சிலிர்க்கச் செய்யும்; எழுச்சியூட்டும்; இவற்றை அடைவு படுத்துவதே பெரிது. மதிப்பீடு என்பது பின்னால் வருவது"

தமிழ்ப்பொழிலின் துணர்களை (ஆண்டுத்தொகுப்புகளை)ப் பார்க்கும் ஒருவருக்கும் இதேமாதிரியான உணர்ச்சிகள்தாம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்ப்பொழிலின் ஆய்வுப் பணி பற்றிச் சற்றே விரிவாகப் பார்ப்போம்;

இலக்கிய வரலாற்றாய்வு

தமிழ்ப்பொழில் தொடங்கிய 1925ஆம் ஆண்டளவிலேயே சங்க இலக்கியங்களின் காலம், சிலப்பதிகார காலம், திருக்குறளின் காலம், மணிமேகலையின் காலம், பக்தி இலக்கியங்களின் காலம், கம்பர்காலம்; சேக்கிழார் காலம் போன்ற முதன்மையான காலப்பகுதிகள் அனைத்தும் ஆராயப்பட்டிருந்தன. பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் காலமுதலாகவே இவ்வகைக் கால ஆராய்ச்சியே தமிழில் முதன்மை பெற்றது. செந்தமிழ் தொடக்க கால இதழ்களிலும் இவ்வகை ஆய்வே முதன்மை பெற்றிருந்தது. இது தமிழ்ப்பொழிலிலும் தொடர்ந்தது.

வரலாற்றுச் சான்றுகள் அருகேயுள்ள பழமையான ஒரு மொழியில், ஒரு நூலின் மேல் எல்லை கீழ் எல்லை நிறுவுதலே போதுமானது என்பார் கமில் சுவலபில். மிகச் சரியான இன்ன நூல் இத்தனையாம் ஆண்டில் எழுந்தது என நிறுவ மிகநுட்பமான சான்றுகள் தேவை.

''பல தமிழ் நூல்கள் வரலாற்று நோக்கில் எழுதப்பட்டவை அல்ல என்பதனால், மேலைநாட்டு நூல்களின் தோற்றக் காலத்தை ஆராய்தல் போன்ற நுட்பமான ஆராய்ச்சி இங்குத் தேவையில்லை"

எனக் கருதுகின்றார் கமில் சுவலபில். தமிழிலக்கியங்களின் காலம் ஓரளவு ஆராயப்பட்டு பல்வேறு கருத்துகளும் முன்வைக்கப்பட்டுவிட்ட நிலையில்தான் தமிழ்ப்பொழில் எழுந்தது. எனவே, பழந்தமிழ் இலக்கியங்களின் கால ஆய்வில், இது விவாதங்களில் பங்கு என்ற அளவில் இருந்தது. வடமொழி எதிர்ப்பு, தமிழ்ப் பொழிலின் அடிப்படைக் கொள்கையாக இருந்துள்ளது. கல்வெட்டுகளின் வாயிலாகப் பல புலவர்களை அறிய தமிழ்ப்பொழில் உதவியது.

தமிழ்ப்பொழிலின் உண்மையான இலக்கிய வரலாற்றுப்பணி, பிற்பட்ட சான்றோர்களைப் பற்றி அறிய மிகவும் உதவியதே எனலாம். குமரகுருபரர், படிக்காசுப் புலவர், சர்க்கரைப் புலவர் வழியினர், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், சரவணப்பெருமாளையர், கால்டுவெல், பண்டிதர் சவரிராயர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, திரு.வி.க., விபுலாநந்தர், மாகறல் கார்த்திகேய முதலியார், பேராசிரியர் நமச்சிவாயர், வ.உ.சி., நாடகக் கலை முன்னோடி இராமசாமி ராஜு போன்ற பலர் வரலாற்றுக் குறிப்புகளை அறிய தமிழ்ப்பொழில் துணைசெய்துள்ளது. சாலை. இளந்திரையனின் 'புதுத்தமிழ் முன்னோடிகள்' 'புதுத்தமிழ் முதல்வர்கள்' நூற்கட்டுரைகள் தமிழ்ப்பொழிலில் வெளியானவையே

> ''தமிழன் வாழவேண்டிய நல்வாழ்வு தன்னை மட்டும் வாழ்வித்துக் கொள்ளக் கூடியதல்ல; தமிழன் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பது, மற்றவர்களை வாழ வைக்க வேண்டும் என்பதுதான்.''
>
> **அறிஞர் அண்ணா**

இலக்கியக் கொள்கை ஆய்வுகள்

தமிழ்ப்பொழிலின் கொள்கையைப் பின்வருமாறு சுருங்கச் சொல்லலாம்: ''முதலில் தமிழில் அடிப்படை இலக்கியங்கள் அமைந்தன; பின்னர் ஆரியர் கொள்கைகள் கலப்புற்றபின் மாறுதல்கள் உண்டாயின. ஆரியர் கலப்பு ஒரு திருப்புமுனை. தமிழிலக் கியங்களும் தமிழ்மொழியும் வட மொழிபால் (சமஸ்கிருதத்தால்) சீரழிந்தே வந்துள்ளன. எனவே மொழிக்கலப்பை விலக்க வேண்டும்". இக்கருத்துகளை ஏற்போர் தமிழ்ப்பொழிலைச் சிறந்த ஆய்விதழ் என்று பாராட்டியுள்ளனர். இக்கோட்பாடுகளை ஏற்காதோர், தமிழ்ப்பொழிலை இனவாத இதழ் என்றும் மதிப்பிட்டுள்ளனர்.

தமிழ்ப்பொழில் இதழில் இலக்கியக் கொள்கைகள் என்பது சிலப்பதிகாரத்தின் இலக்கியக் கொள்கை, பாரதிதாசனின் இலக்கியக்கொள்கை ஆகிய இரண்டு மட்டுமே ஆராயப் பெற்றன.

இலக்கியத் திறனாய்வு

தமிழ்ப்பொழில் தோன்றிய முதல் பத்துப் பதினைந்து ஆண்டுகளில், தனித்தனிப் பாடல்களின் பொருள் மாறுபாடுகள், பொருள் விளக்கங்கள் ஆகியவற்றைக் காண்பதே இலக்கிய ஆய்வாக இருந்துள்ளது. பிறகு இந்த மரபு மாறி, நலம்பாராட்டலுக்கு இடமளித்தது. பாடற்பொருள் காணல், பாடவேறுபாடு காணல், நலம் பாராட்டல் ஆகியவற்றைச் செய்வதில் தவறில்லை. இவையாவும் திறனாய்வுக்கான அடிப்படைகளே அன்றி, இவை மட்டுமே திறனாய்வு ஆகா; மேலும், இவற்றுடன் அழகியல் - சமூகவியல் நோக்குகள் இணையும்போதே அவை உண்மையான ஆய்வாகின்றன. தனிப் பாடல் பொருள்நோக்கு நிலையைத் தாண்டி சங்க இலக்கிய ஆய்வு செல்லவில்லை. திருக்குறள் கட்டுரைகளோ, சொல்லாய்வுகள் அல்லது சொற்பொருள் ஆய்வுகளே.

சிலப்பதிகாரத்தைப் பொறுத்தவரை, வையாபுரிப்பிள்ளையின் சிலப்பதிகாரக் கால ஆய்வுக் கருத்துகளுக்கு மறுப்புவரைதல் முதன்மையான முயற்சியாயிற்று. எனினும் அண்மைக் காலங்களில் சிலப்பதிகாரக் கட்டமைப்பு பற்றிய கேள்விகள் எழுப்பப் பெற்றுள்ளன; அது வரலாற்றுக் காப்பியமே என நம்பி, அதில் கண்ணகி பயணம் செய்த வழி கூறப்பெற்றுள்ளது என நினைத்து, கண்ணகி கோட்டம் எது எனக் காணச் செய்த முயற்சி. கம்பம் பகுதியைச் சேர்ந்த மங்கலா தேவிக் கோட்டமே முதன்முதலாக எழுப்பப்பெற்ற கண்ணகிக் கோட்டம் என்பது இந்த முயற்சியில் கண்டறிந்த முடிபு. ''இக்கருத்து, இன்னும் ஆணித்தரமாக நிறுவப்பெற வேண்டும், சான்றுகள் போதா" என்பர் மயிலை. சீனி. வேங்கடசாமி.

காப்பியங்களில், சில பாத்திரப் படைப்புகள் பற்றிய குறிப்புகளோடு ஆய்வு முடிந்துவிட்டது. பக்திப் பனுவல்கள் ஆய்வும், பாடற்பொருள் காணல், பாடவேறுபாடு காணல், நலம் பாராட்டல் என்னும் இவற்றோடு நின்றுவிட்டது. பிற்காலப் புராணங்களோ, தனிப்பாடல்களோ, சிற்றிலக்கிய வகைகளோ தொடப்படவே இல்லை. தற்கால இலக்கியங்களில் பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவை, மனோன்மணீயம், பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள் ஆகியவை மட்டுமே. ஓரளவு இலக்கியப்பொருண்மை பற்றிய ஆய்வு நிகழ்ந்துள்ளது. 'தமிழ்ப் புலவருக்கு நிலவியல் அறிவுண்டா?' என்பது முதல் 'இலக்கியத்தில் மகளிர் விளையாட்டுக்கள்' என்பதுவரை இவ்வகையின. இவை ஒரு வகையில், வரலாற்றாய்வின் வேறு தோற்றங்களே.

ஒரு நூலை இலக்கியம் என்றோ இலக்கியம் அன்று என்றோ கொள்ளவோ, தள்ளவோ தேவையான அடிப்படைகள் எதுவுமே தமிழ்ப்பொழிலில் பேசப்பட்டது கிடையாது. பல்கலைக் கழகங்களிலும், இலக்கியம் சார்ந்த சிற்றிதழ்களிலும் விவாதிக்கப்பட்டு, ஒருவரை நல்ல

படைப்பாளி என்று பிறர் ஏற்றபிறகு, பத்திருபது ஆண்டுகள் கழித்து அவரைப் பற்றிய கட்டுரை ஏதேனும் தமிழ்ப்பொழிலில் இடம்பெறல் இயலும். அவ்வளவு பாதுகாப்பு உணர்ச்சி (அல்லது மரபுணர்ச்சி!)

தொடக்க கால இலக்கண ஆய்வுகள்

மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு தொடர் கட்டுரை, இத்துறையில் ம.நா.சோமசுந்தரம் பிள்ளை என்பாரால் எழுதப்பட்டது. 1930ஆம் ஆண்டு, 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு' என்னும் நூல் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியாரால் எழுதி வெளியிடப்பட்டது.

இந்நூலுக்கு ம.நா. சோமசுந்தரம் பிள்ளை, ஏழாம் துணரில் (ஆண்டுப் பகுதியில்) தொடங்கி, பதின்மூன்றாம் துணர்வரை (ஆறு ஆண்டுகள்!) ஒரு மறுப்புரை எழுதினார். (மொத்தம் 285 பக்கங்கள்). இக்கட்டுரையின் முதற் பகுதி ஏழாம் துணரில் வெளியான போதே, இதற்கு மறுப்பாக பி.எஸ். வேதாசலய்யர் என்பவர் 'சொல்லதிகார ஆராய்ச்சி மறுப்பின் மறுப்பு' என்னும் ஓர் கட்டுரையினைத் தொடராக எழுத முற்பட்டார். உடனே ஔவை துரைசாமிப் பிள்ளை 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பாராய்ச்சி என்னும் தலைப்பில் இரு கட்டுரைகள் வரைந்ததோடு, மா.நா. சோமசுந்தரம் பிள்ளையின் மறுப்புக்கு பிறர் வரையும் மறுப்புகளை வெளியிடலாகாது என்று பொழிற்றொண்டருக்கு ஒரு கடிதமும் வரைந்தார். வேதாசலய்யரின் கட்டுரைக்கு மறுப்பு ஒன்றினை ம.நா.சோமசுந்தரம் பிள்ளை 'வித்துவான் வேதாசலய்யர் என்பாரின் போலி மறுப்பு' என்னும் தலைப்பில் இருபது பக்க அளவினதாக வரைந்தார்.

ஏறத்தாழ 1935 முதல் 1955 வரை சொல்லாய்வுகள் (வேர்ச்சொல் ஆய்வுகள்) சொற்பொருள் ஆய்வுகள் தரப்பட்டுள்ளன. 1955க்குப் பின்னர் சிறிது சிறிதாக மொழியியல் நோக்குகள் இடம் பெறலாயின. அப்போதும் தமிழ்ப்பொழில் இலக்கிய மொழியின் அமைப்பை ஆராய்வதில்தான் கவனம் செலுத்தியுள்ளதே தவிர, பேச்சுமொழி அவ்வளவாக ஆராயப்படவில்லை என்றே கருதலாம். இம்மாதிரி ஆய்வுகளின் பலனும் தமிழ்ப் பொழிலின் நோக்கிற்கு உகந்ததாகவே அமைந்தது. தொல்காப்பியத்தின் அறிவியல் அடிப்படை நிறுவப்பெற்றது. தொல்காப்பியர் உலகின் சிறந்த மொழியியல் அறிஞர்களுள் ஒருவர் என்பது கொஞ்சம் கொஞ்சமாக நிலைபெறலாயிற்று. இதனை வேர்ச்சொல்லாய்வினா வினாலோ சொற்பொருளாய்வினாலோ செய்திருக்கவே இயலாது. மொழியியல் ஆய்வில், இலக்கண வடிவங்களின் உருபனியற் கூறுகள் ஆராயப்படும் போதே, அவற்றின் சொல்லியல் தொடரியல் அமைப்புகளும் பண்புகளும் ஆராயப் பட்டதனால் இது சாத்திய மாயிற்று.

இப்படி ஆரம்ப காலத்தில் ஓரளவு தருக்கநெறி ஒன்றையே நம்பி வந்த இலக்கண ஆராய்ச்சி, பிற்காலத்தில் மொழியியல் சார்ந்த ஆய்வாக மலர்ந்தது.

வரலாற்றாய்வு

தமிழ்நாடு என்பது இந்தியாவின் ஒரு பகுதியேயாயினும், தன்னளவில் ஒரு தனி நாட்டுக்குரிய இயல்புகளைக் கொண்டது. மேலும், இந்தியாவிலேயே வடமொழி (சமஸ்கிருத)ச் செல்வாக்கினின்றும் தன்னைப் பாதுகாத்துக் கொண்ட ஒரே மொழி தமிழே. இந்தியாவில் ஆரியர் வருவதற்கு முன்னர் இருந்துவந்த திராவிடர் என்னும் இனத்தாரின் எச்சங்களாக இன்று இருப்பவரும் தமிழரே என்பர். எனவே, தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழ்ப் பண்பாடு என்பன தனித்தன்மைகள் கொண்டனவாகவே இருந்து வந்துள்ளன. ஆயினும் இன்றுவரை, தமிழகத்தின் வரலாற்றுக்கும் பண்பாட்டிற்கும் இந்திய வரலாற்றில் போதிய இடமளிக்கப் படவில்லை. இதற்காகத் தமிழறிஞர் வருந்தினர். ஆகவே இந்த நூற்றாண்டு முதலாகத் தமிழ்நாட்டின் வரலாற்றை ஆராய்ந்து வரைவதில் ஆர்வம் தோன்றியது. செந்தமிழ், தமிழ்ப்பொழில் போன்ற இதழ்கள் இவ்வார்வத்தினை வெளிக்காட்டுகின்றன.

தமிழ்ப்பொழில் வாயிலாக வெளிப்பட்ட வரலாற்றாய்வாளர் என்று தி.வை. சதாசிவப்பண்டாரத்தாரை மட்டுமே கூற இயலும். சதாசிவப் பண்டாரத்தாரின் பாண்டியர் வரலாறு, முதற்குலோத்துங்க சோழன் போன்ற நூல்கள் தமிழ்ப் பொழிலில் தொடர்கட்டுரைகளாக எழுதப்பெற்றவை. வை.சுந்தரேச வாண்டையாரும் கல்வெட்டுகள் பற்றியும், ஊர்களின், தலங்களின் வரலாற்றுக் குறிப்புகள் பற்றியம் மிகுதியாக எழுதியிருக்கிறார்.

பண்பாட்டாய்வு

தமிழ்ப்பொழில் தந்த பண்பாட்டுக் கட்டுரைகளில், சிறப்பு வாய்ந்தவை தமிழிசை பற்றிய ஆய்வுகளே எனலாம். சுவாமி விபுலாநந்தரின் ஈடுபாட்டினால் இசைத்தமிழ் ஆய்வு தமிழ்ப் பொழிலில் இடம்பெற்றுவந்தது. இக்கட்டுரைகளே பின்னர் தொகுக்கப்பெற்று யாழ்நூலாக உருப்பெற்றன. அந்த நூலும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாகவே வெளியிடப்பெற்றது. தமிழிசை இயக்கம் தொடங்கப்பெற்ற அக்காலத்தில், அந்த இயக்கத்திற்கு அறிவுக்களம் அமைத்துத் தந்தவை விபுலானந்தரின் கட்டுரைகளேயாம். பழந்தமிழிசையின் சிறப்பு, யாழ் என்னும் இசைக்கருவியின் மீட்டுருவாக்கம், பழந்தமிழிசைக்கும் இன்றைய கருநாடக இசைக்குமான ஒப்பீடு ஆகிய மூன்று கூறுகளைக் கொண்டது அவரது ஆய்வு. ஒருவகையில் இதுவும், மீட்புவாதமே.

விபுலாநந்தர் மறைந்தபின், குடந்தை ப. சுந்தரேசன், இசை பற்றிய கட்டுரைகளைத் தமிழ்ப்பொழிலில் தொடர்ந்தார். ஆனால் அவரது கட்டுரைகள் அவ்வளவாகத் தனிச் சிறப்பு வாய்ந்தவையாக அமையவில்லை.

தஞ்சைப் பகுதியிலுள்ள கோயில்களின் கல்வெட்டுகளை ஆராய்ந்து அக்கோயில்கள் பற்றிய செய்திகள் பலவற்றைத் தொகுத்து வெளியிட்டவர்கள் சதாசிவப் பண்டாரத்தாரும், சுந்தரேச வாண்டையாரும், ஜே.எம். சோமசுந்தரம் பிள்ளையின் கட்டுரைகள் குறைவேயாயினும் சோழர்காலக் கலைச் சிறப்புகளை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

பதிப்புப் பணிகள்

தமிழ்ப்பொழிலின் பதிப்புப் பணி இருவகை என்று முன்னரே சொல்லப் பெற்றது. ஒன்று, நூல்பதிப்பு; மற்றது கல்வெட்டுகள் பதிப்பு. நூல் பதிப்புகள் 1947 வரை மிகுதியாக உள்ளன. பின்னர் அருகிவிட்டன. பதின்மூன்றாம் ஆண்டுவரை, எல். உலகநாத பிள்ளை என்பவரது முயற்சியால் நெல்லை பள்ளேசல், சித்திரந்தாதி என்னும் நூல்கள் பதிப்பிக்கப்பெற்றன. பதிபசுபாசம், பதிபசுபாசப்பனுவல் போன்ற சைவசித்தாந்த நூல்களையும் இவரே பதிப்பித்தார். இலக்கணத்துறையில், சுவாமிநாதம், இலக்கண தீபம் ஆகியவை பதிப்பிக்கப்பெற்றன. இவற்றுள், சுவாமிநாதத்தை, செ.வை. சண்முகம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வாயிலாகத் திருந்திய பதிப்பாகக் கொணர்ந்தார்.



தி.வை. சதாசிவப்பண்டாரத்தார்

பதிப்பிக்கப்பட்ட பிற நூல்கள், பட்டமதன வித்தார மாலை, சேலம் செழியதரையன் மஞ்சரி, ஆறைநாட்டுலா ஆகியவற்றின் சில பகுதிகள். சிராமலை அந்தாதி, திருமலை வெண்பா என்னும் நூல்களும் அறிமுகநோக்கிலேயே ஒரு சில பாடல்கள் மட்டும் வெளியிடப் பட்டன. வெள்ளைவாரணர், அரபத்த நாவலரின் 'பரத சாத்திரத்'தை உரையோடு வெளியிட்டார்.

கல்வெட்டுக்களைக் கண்டறிந்து வெளியிடுவதிலும் தமிழ்ப்பொழில் ஓரளவு துணைபுரிந்தது. 1947 வரை இருபத்துநான்கு புதிய கல்வெட்டுகள் கண்டறிந்து வெளியிடப்பட்டன.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்-தமிழ்ப்பொழிலின்-முக்கியமான பணி, முதல் இராசேந்திரசோழனின் கரந்தைச் செப்பேடுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தியதே ஆகும். சதாசிவப் பண்டாரத்தார் இதற்குக் குறிப்புரை அளித்தார். இச்செப்பேடுகள் தனிச் சிறப்புவாய்ந்தவை. ஆகவே மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தால் அண்மையில் வெளியிடப்பெற்றுள்ளன.

அறிவூட்டற் பணி

தமிழ்ப்பொழில் வெளியிட்ட இலக்கண இலக்கியக் கட்டுரைகள் பெருமளவு ஆய்வு என்று சொல்லப்பட முடியாவிட்டாலும், அவை புதிதாக இலக்கிய இலக்கணம் பயில்வோர்க்குப் பயனுடையவையாக இருந்தன என்பது அவற்றின் சிறப்பு. தமிழ் நேயக் கட்டுரைகள், அல்லது தமிழுணர்வுக் கட்டுரைகள் என ஒரு தனி வகையே உண்டு. இவை பயில்வோர்க்குத் தமிழ் உணர்வினை ஊட்ட எழுதப்பட்டவை.

இலக்கியமே அன்றி, கல்வி, மருத்துவம், இயற்பியல், வேதியியல், உடல்நலவியல், உளவியல், சமூகவியல் என்னும் பலதுறைகள் சார்ந்த சில கட்டுரைகளை தமிழ்ப்பொழிலிற் காணலாம். இவையன்றிப் புலவர் வரலாறுகள், அறிவியலார் வரலாறுகள், பிறமொழி இலக்கியக் கதைகள் எனப் பலவும் உண்டு. இவை அரிய சொல்திறனும், கலைச் சொல்லாக்கங்களையும் தம்மகத்தே கொண்டவை.

தமிழ்ப்பொழிலின் கலைச்சொல்லாக்கப் பகுதிகளிலும், அறிவியற் கட்டுரைகளிலும் ஆளப்பட்ட கலைச்சொற்கள் சிறப்பானவை. இவற்றில் ஆளப்பட்ட பல கலைச்சொற்கள், இன்று ஏற்கப்பட்டு, தமிழகத்தில் வழங்குகின்றன.

கலைச்சொல்லாக்கம் பற்றிய கட்டுரைகள், 1940இல் அமைக்கப்பட்ட சீனிவாச சாத்திரியார் குழுவின் செயல்பாட்டை எதிர்த்தும், பின்னர் 1947இல் சென்னை அரசு அமைத்த கலைச் சொல்லாக்கக் குழுவை எதிர்த்தும் பெரும்பாலும் எழுதப்பட்டவை.

சீனிவாச சாத்திரியார் குழுவினர் மிகுதியாக வடமொழியாக்கமே செய்திருந்தனர். சான்றுக்கு இவர்கள் வெளியிட்ட கலைச்சொற்களுக்குள் சில:

Insecticide	-	பூதிநாசினி;
Basic	-	க்ஷாரமான;
Similar	-	ஸஜாதீய;
Electralysis	-	வித்யுத் வியோகம்;
Triangle	-	திரிபுஜை

இம்முறையில் அமைந்த கலைச்சொற்கள், தமிழ்ப்பற்றுடையவர்களுக்கு எரிச்சல் ஊட்டின. 1940-50 காலப் பகுதியில் தமிழ்ப்பொழில் மிகுதியாக கலைச்சொல்லாக்கக் கட்டுரைகளை வெளியிட்டது; சரியான கலைச் சொற்களை அமைக்கும் முறை, தவறாக அமைக்கப்பட்ட கலைச்சொற்களை மதிப்பிடல், கண்டித்தல் ஆகிய பணிகளில் தமிழ்ப்பொழில் ஈடுபட்டது. கணித ஆசிரியராக விளங்கிய சாமி.வேலாயுதம் பிள்ளை என்பார், அறிவியற் கலைச்சொற்களைத் தொடர்ந்து ஆக்கி வெளியிட்டு வந்தார்.

> *சோறு இல்லாதவனுக்குச் சோறும், உடை இல்லாதவனுக்கு உடையும், வீடு இல்லாதவனுக்கு வீடும் கொடுக்கப்பட வேண்டியது எவ்வளவு அவசியமோ, எவ்வளவு நியாயமோ - அதுபோலக் கல்வி இல்லாதவனுக்குக் கல்வி கொடுக்க வேண்டும்.*
>
> - தந்தை பெரியார்.

இப்படி அருமையான சொற்கள் ஆக்கப்படினும், 1947ஆம் ஆண்டு சென்னை அரசு அமைத்த குழு பழையபடியே அல்ல, இன்னும் மோசமான முறையில் சமஸ்கிருதச் சொற்களைத் தொகுத்துக் கலைச்சொற்கள் என வெளியிட்டது.

Hydrogen	-	அப்ஜனகம்;
Spinal chord	-	கசேரு லதை;
Indeterminate	-	அநிஷ்கர்ஷித;
Census	-	கலஸ்திரீ பாலபுருஷ விருத்த ஆய்வய்ய பரிமாணம்;
Protein	-	ஓஜஸ் திரவியம்;
Revolution	-	சத்ராக்ருதி;
Carpel	-	கர்ப்ப பத்ரம்

இக்குழுவின் கலைச்சொல்லாக்கப் பாங்கினைக் காட்ட மேற்கண்ட உதாரணங்கள் போதுமானவை. இதனைத் தமிழ்ப்பொழில் வன்மையாகக் கண்டித்தது. தமிழ்ப்பொழிலின் முயற்சிகளின் விளைவாக, 1948இல் இரா.பி.சேதுப்பிள்ளை, இ.மு.சுப்பிரமணிய பிள்ளை, சேலம் அமுத்தைய ஆகியோர் அடங்கிய கலைச் சொல்லாக்கக்குழு உருவாகியது. 1938-52 காலப்பகுதிதான் தமிழ்ப் பொழிலில் கலைச்சொல்லாக்க முறைகளும்,, கலைச்சொற்களும் ஆராயப்பட்ட காலம்.

தமிழ்நேயப்பணி:

தமிழ்ப்பொழிலின் தமிழ்நேயப் பணிகள் பல திறத்தவை முன்பே சுட்டிக் காட்டியவாறு, முதன் முதல் தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்ற ஓர் எழுச்சி தமிழகத்தில் 1925இல் தோன்றியபோது, தமிழ்ப்பொழில் தனது தலையங்கங்கள், செய்திக் குறிப்புகள் வழி அதனை ஆதரித்தது.

அவ்வியக்கம் மறைந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்றப் பெற்றது. அது அக்காலத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகமாகவே கருதப்பட்டது. அது, தமிழ்ச் சார்பான பல்கலைக் கழகம் என்பதை நிலைநிறுத்த, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாளர் ஒருவரும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாளர் ஒருவரும் அதன் ஆட்சிக் குழுவில் இடம்பெற்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்ச்சிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாளர்கள் பேருதவி புரிந்தனர். சான்றாகத் தமிழிசை, அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரியில் முதன்மை பெற்றது

இவர்களாலேயே இது பற்றிய குறிப்புகள் தமிழ்ப்பொழிலில் இடம் பெற்றுள்ளன. இப்பல்கலைக் கழக ஆட்சிக்குழு தனது நடைமுறைகளைத் தமிழ்வாயிலாகவே நடத்த வேண்டும் என்பதற்காகக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் போராடி வெற்றிபெற்றது. வித்துவான் என்னும் பட்டம், புலவர் பட்டமாக மாறியது.

தமிழக எல்லைச் சிக்கல், இந்தித் திணிப்பு ஆகியவற்றில் தமிழ் மக்கள் சார்பாக நின்று அவர்களது உணர்ச்சிகளை வெளிப்படுத்தியது. கலைச்சொல்லாக்கம், இந்தி ஆதிக்க எதிர்ப்பு, தமிழிசை இயக்கம் ஆகியவற்றைத் தடைசெய்ய முயன்றோரையும் எதிர்த்தோரையும் சாடியது. தமிழ்ப்பொழிலின் 'தமிழ்ச் செய்திகள்', தமிழ் தலைமைக்கு வர முயன்ற போராட்டங்களை நன்கு வெளிப்படுத்தும் கருவூலம். இவ்வாறே தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழாக்களில் அறிஞர்கள் பேசிய உணர்வூட்டும் உரைகள், தமிழ்ப்பொழில் வாயிலாக வெளிப்பட்டன. இவை சிறந்த தமிழ்நேயக் கட்டுரைகளாகும். இவற்றில் வரலாற்றுச் செய்திகள், சமகாலச் செய்திகள், அக்காலத்தில் தமிழின் நிலை, பிற மொழியினருடன் ஒப்பீடு, தமிழின் தனித்தன்மை, தமிழர் பண்பாடு, ஆரியர் பண்பாடும் இந்தியும் எதிர்க்கப்பட வேண்டியவை என்பதற்கான காரணங்கள்- போன்ற பல செய்திகள் காணப்படுகின்றன.

தமிழ்ப்பொழில் வெளியிட்ட கவிதைகள் யாவுமே தமிழ்நேய வெளிப்பாடுகளே. குறிப்பாக, 'தமிழரசி குறவஞ்சி' என்னும் வரதநஞ்சைய பிள்ளையின் நூலும், 'கரந்தைக்கோவை' என்னும் ச.பாலசுந்தரத்தின் நூலும் மிகுதியாகத் தமிழ் நேயக் கருத்துகளைக் கொண்டுள்ளன.

'பொழிற்றொண்டர் கருத்துரைகள்' பகுதியும் மிக முக்கியமான தமிழ்நேயப் பகுதியாகும். 'இந்தியை ஏன் எதிர்க்க வேண்டும் ?' 'தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் தேவையா ?' 'தமிழ்க் கல்லூரிகளின் எதிர்காலம் என்ன ?' 'சமயங்கள் இன்று தேவைதானா ?' போன்ற பல கேள்விகள் பொழிற்றொண்டர் கருத்துரைகளில் ஆராயப் படுகின்றன.

தமிழ்நேயக் கட்டுரைகள் பல, தமிழ்ப்பொழில் வாயிலாக வெளியிடப் பட்டுள்ளன. 'திருவள்ளுவர் திருநாளை எந்த நாளன்று கொண்டாடுவது ?' என்று ஆராய்வதிலிருந்து 'வாதாபி கொண்ட நாளை தமிழர்கள் தேசியத் திருநாளாகக் கொண்டாட வேண்டும்' என்பதுவரை, 'பல்கலைக்கழகங்களில் தமிழ் செம்மையாகக் கற்பிக்கப்பட என்ன செய்யவேண்டும்' எனபது வரை தமிழ் உணர்வூட்டுகின்ற கட்டுரைகள் பல.

தமிழ்நேயக் கட்டுரைகளும், பொழிற்றொண்டர் குறிப்புரைகளும் தமிழ் உணர்வூட்டுகின்ற பணியைச் சிறப்பாக ஆற்றியபோதும், பெரும்பாலும் அவை பழமைவாத மீட்புவாத நோக்கிலேயே அமைந்துள்ளன.

1950க்குப் பின்னர், ஒரு சமயச் சார்பற்ற இதழாகவே தமிழ்ப்பொழில் மாறிவிட்டது எனலாம்.

ஞானியாரடிகளின் பொன்விழாவைப் பாராட்டித் தமிழ்ப் பொழில் சார்ந்த அறிஞர்கள் பேசிய உரைகள் தமிழ்ப்பொழிலில் வெளியாகியுள்ளன. தமிழ்ப்பொழில் ஆசிரியராகப் பணிபுரிந்த வெள்ளை வாரணர், ஞானியாரடிகளின் மாணவர்.

இனி, கட்டுரையின் முடிவுப் பகுதிக்கு வரும்போது தமிழ்ப்பொழிலின் அனைத்து அம்சங்களையும் தொகுத்து நோக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த அம்சங்களைக் கவனிக்கும்போது சில ஈரடித் தன்மைகள் புலானாகின்றன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி போன்ற பெயர்களிலுள்ள செம்மை பற்றியும் தமிழ்ப்பொழிலின் பசுமை என்ற படிமம் பற்றியும் முன்னரே குறிப்பிடப்பட்டது. செம்மை என்பது ஒரு குறிப்பிட்ட விதித் தொகுதிகளின்படி இயங்கும் தன்மையைக் காட்டுவது. பசுமை, வளம், படைப்பாற்றல் சார்ந்தது. முரணான இப்படிமம், ஒரு காலத்திலே தமிழ்ப்பொழில், தமிழ்வளத்துக்குப் பாடுபடி வேண்டிய இதழாக மலரவேண்டும் என்ற ஆசிரியர்களின் அபிலாஷையைக் காட்டுவதாகிறது.

த.வே.உமாமகேசுவரன்

ஏறத்தாழ தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தபோதே அறிஞர் அண்ணா அவர்களால் 'தமிழ்நாடு' என அதற்குப் பெயர் மாற்றம் நிகழ்ந்தபோதே வரலாற்று ரீதியாகத் தமிழ்ப் பொழிலின் பணி ஓரளவிற்கு வெற்றி கண்டது.

சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள், திருக்குறள் போன்ற அறநூல்கள்- இவற்றையெல்லாம் தமிழ்ப்பொழில் ஆராய்ந்துள்ளது. வடமொழியும் வடமொழி இலக்கியங்களுமே இந்திய மண்ணில் சிறந்தவையாகக் கருதப்பட்ட ஒரு காலத்தில், அதனை எதிர்கொள்ள, தமிழறிஞர்கள் தமது பண்டை இலக்கியங்களின் காலத்தை மிக முன்னதாகக் காட்டவேண்டிய அவசியமிருந்தது. அவற்றின் சிறப்புகளை மட்டுமே விதந்துரைக்க வேண்டிய கட்டாயம் இருந்தது.

தமிழ்ப்பொழில் தனது தொடக்க காலத்திலேனும் தமிழின உணர்வைத் தூண்டி ஒரு புத்தெழுச்சியை உண்டாக்கியது. தொடக்க காலத்தில் நீதிக்கட்சியின் வரையறையையே, தமிழர் என்பதற்குத் தமிழ்ப்பொழிலின் வரையறையாகக் கொள்ளலாம். தமிழ்ப்பொழில் வெளிப்படையாகச் சைவ இதழாகத் தன்னைக் காட்டிக் கொண்டது குறைவு, 'நடுநிலை' இதழாகவே காட்டிக் கொண்டது என்று முன்பு சொன்னோம். ஆனால் அதே சமயம் பெரியாரின் திராவிடக் கழகம் சார்பாகவும் அது இல்லை.

தமிழ் மீட்பு வாதம் என்ற அடிப் படையில் நோக்கும் போது,

தமிழ்ப்பொழில்-
தமிழிசை முயற்சி-
தமிழ்க் கலைச் சொல்லாக்கம் -
தமிழ்நாட்டு வரலாற்றுக்கு (அரசர்
வரலாற்றுக்கு)
முக்கியத்துவம் அளித்தல் - தமிழ்
இலக்கிய இலக்கணங்களின்
தொன்மையைப் பரப்புதல்-
ஆகியவற்றிற்குப் பங்களித்துள்ளது.

☐

கல்வி வளர்ச்சியில் பொற்காலம்

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முனைப்புமிகு திட்டங்கள்

- **1996ல்** கல்வித்துறை, தலைமைச் செயலக அளவில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, உயர் கல்விக்கெனத் தனித்துறை, **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் உருவாக்கப் பட்டது. கடந்த 2 ஆண்டுகளில் சுயநிதி அடிப்படையில் 59 கலை-அறிவியற் கல்லூரிகள் தொடங்கப்பட்டன; அதேபோன்று 49 சுயநிதி பொறியியற் கல்லூரிகள் தொடங்கிட அனுமதிக்கப்பட்டு 10,000 மாணவர்கள் கூடுதலாகப் பொறியியற் கல்வி பெற வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. திருச்சியில், கி.ஆ.பெ.விசுவநாதம் மருத்துவக்கல்லூரி இவ்வாண்டு தொடங்கப்பட்டது. அடுத்த ஆண்டு தமிழகத்தில் மேலும், 4 மருத்துவக் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்படுமென **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார்.
- **உயர்கல்விக் குழுவொன்று** அமைக்கப்பட்டு, இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், **'ஒற்றைச்சாளர முறை'யில்**, வெளிப்படையான அறிவிப்புகளுடன் பொறியியற் கல்லூரிகளில் **இடைத்தரகர் எவருமின்றி** ஏறத்தாழ 17,000 மாணவர்கள் **விரும்பிய கல்லூரிகளில்**, விரும்பிய பாடத்தைக் கூடுதல் செலவினமின்றிப் பெற்றிட வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது. இவ்வாண்டில், **விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்கும்** பொறியியற் படிப்பில் இடங்கிடைத்தது என்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.
- 10,12ஆம் வகுப்புகளில், முதல் 3 நிலைகளை மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்களின் **உயர்கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும்** புதிய திட்டம்.
- பட்டதாரி இல்லாக் குடும்பங்களைச் சேர்ந்த 10 முதல் நிலை மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியர்க்கு - பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், பல் மருத்துவம் ஆகிய தொழிற்கல்விகளில் பயிலும் அத்தகு மாணவ-மாணவியர்களின் **கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும்** என்ற ஏற்றமிகு திட்டம். **முதலமைச்சர் கலைஞரால்** அறிவிக்கப்பட்டு கடந்த இரண்டாண்டுகளில் 100 மாணவ-மாணவியர்கள் இப்புதிய திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.
- அடுத்த ஆண்டு முதல், சட்டம், சித்த மருத்துவம் ஆகிய கல்விகளுக்கும், இத்திட்டம் விரிவுபடுத்தப் படுமென **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார்.
- மேலும், இவ்வாண்டில் பொறியியற் கல்லூரிகளில், **கிராமப்புற மாணவர்களுக்கென, 15 சதவிகித ஒதுக்கீடு** செய்யப்பட்டது. அடுத்த ஆண்டு முதல், இத்திட்டத்தின்படி, மருத்துவக் கல்வி போன்ற பிற தொழிற்பட்டப் படிப்புகளிலும், **கிராமப்புற மாணவர்கட்கு 15 சதவிகிதம் ஒதுக்கீடு** செய்யப் படுமென **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார்.
- **பெண் கல்வி:**

பெண்கள் கல்லூரிகள் இல்லாத பகுதிகளிலுள்ள அரசுக் கல்லூரிகளில், பெண்கள் கல்லூரிகளில்



அதிக அளவில் படித்திடும் வகையில், 30% இடம் ஒதுக்கப்படுமென்று முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார். அதேபோன்று, ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு நிதியுதவியின் கீழ், ரூ.24,000 வருட வருமானத்திற்குக் கீழுள்ள ஏழைப் பெண்கள், எம்மதம், எப்பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், ஏழைப் பெண்கள்பட்டப்படிப்பு மேற்கொள்ளும் வகையில், கல்விக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

★ **புதிய பல்கலைக்கழகங்கள் - அறக்கட்டளைகள்:**

நாட்டுக்கு உழைத்த பெருந்தலைவர்களின் பெயரால் ரூ.5.25 கோடி ஒதுக்கீட்டில் அறக்கட்டளைகள் எட்டுப் பல்கலைக்கழகங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன.

★ சேலத்தில் தந்தை பெரியார் பல்கலைக்கழகம் 17-9-97 மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

★ டாக்டர் அம்பேத்கர் பெயரால் இந்தியாவிலேயே முதல் சட்டப் பல்கலைக்கழகம் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இடையறா முனைப்பின்பயனாக, 25-9-97 அன்று, சென்னை - வள்ளுவர் கோட்டடத்தில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் கே.ஆர். நாராயணன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

பள்ளிக்கல்வியில் பல்கிப் பெருகிடும் சாதனைகள்:

★ கடந்த 1½ ஆண்டுகளில் 253 ஆரம்பப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. 62 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 170 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 160 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளில் ரூ.13 கோடியில் வகுப்பறைகளும், ரூ.14 கோடியில் உயர், மேனிலைப் பள்ளிகளில், அறிவியற்கூடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ரூ.3.75 கோடி செலவில், 18,750 ஆரம்பரப் பள்ளிகளுக்கு மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன. ரூ.4.75 கோடி செலவில் 1000 ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளுக்குத் தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ விழுப்புரத்தில் ரூ.27.50 இலட்சத்தில் மாவட்ட அளவிலான விளையாட்டரங்கம் கட்டப்பட்டுள்ளது. நெல்லையில் - ஆக்கி, கூடைப்பந்து, விளையாட்டு அரங்கங்கள் கட்ட ரூ.11.60 இலட்சமும், வேலூரில் - சத்துவாச்சாரியில் பளு தூக்கும் பயிற்சி அரங்கம் கட்ட ரூ.11.87 இலட்சமும், சென்னை நேரு ஸ்டேடியத்தில் டென்னிஸ், ஆக்கி அரங்கம் கட்ட ரூ.10 இலட்சமும், ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

★ இவ்வாண்டில் 200 அரசு பெண்கள் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கழிப்பறை கட்ட, ஒரு கழிப்பறைக்கு ரூ.72,000 வீதம் ரூ.1.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ மாநிலத்தில் கல்வித் திறனை மேம்படுத்துவதற்காக மாநில அளவில் இடைநிலைக் கல்வி/மேல்நிலைக் கல்வி பொதுத்தேர்வுகளில் முதலாவதாக வரும் மூன்று மாணவர்களுக்கு மேற்படிப்பு செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமென கலைஞர் அவர்களால் அறிவிக்கப் பட்டது. மேலும் இத்திட்டம் 1996-97 முதல் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

★ தமிழகம் முழுவதும், ஏறத்தாழ 25,000 ஆசிரியர்கள் வேலை வாய்ப்புப் பணிமூப்புப் பட்டியலின் அடிப்படையில், இடைத்தரகர் எவருமின்றி, பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ உலக வங்கி திட்டத்தின்கீழ் மாவட்ட ஆரம்பப் பள்ளித் திட்டம் இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் பெரம்பலூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் செயற்படுத்தப்படுகிறது.

* * *

பொங்கல் ஏக்கம்!

★ ‘போகி’யே! குளிர்மூட் டத்தைப்
பொசுக்கிடும் நெருப்பு நாளே!
ஆகாத பொருளை யெல்லாம்
அழிக்கின்றாய்! நன்றி! இன்னும்
போகாத ‘சாதிப் பே’யைப்
பொய்‘மத வெறித்த ன’த்தை
ஆகுதி ஆக்கும் அந்த
அரியநாள் வந்தி டாதா ?

★ ‘பொங்க’லே! தமிழர் வீட்டில்
பூரிப்பை விளைக்கும் நாளே!
எங்கெங்கும் உன்பிறப்பால்
எழில், எழில்! இன்பம், இன்பம்!
இங்குள்ள ஏழை கூட
ஏப்பத்தை உன்னால் காண்பான்!
தங்கிடும் இம்ம கிழ்ச்சி
தழைக்காதா நிலைத்தே என்றும் ?

★ ‘மாட்டுப்பொங் கல்’ நன் னாளே!
வயிறெலாம் வாழ வைக்கக்
காட்டுரை வயலூர் ஆக்கும்
காளைக்கா நன்றி சொன்னாய் ?
மேட்டுரார் தாழ்வூ ராரை
வேதனை மாடாய் எண்ணும்
தீட்டெலாம் தேய்த்தே மாயத்
தேதியைக் குறிப்பா யா, நீ ?

★ ‘காணும்பொங் க’ற்பொன் னாளே!
கனிவுடன் கண்டே அன்பைப்
பேணுதல் வேண்டு மென்றே
பேசவா வந்தாய் ? நெஞ்சில்
வீணுக்குப் பேதம் தன்னை
விதைப்போரைத் திருத்து வாயா ?
காணும்எம் தமிழர் வாழ்வு
ககனத்தை மிஞ்சி டாதா ?

– கவிஞர் கா. வேழவேந்தன்



தனித்தமிழ்ச் சொல்லாக்கம்

வீ. சந்திரன்

இயக்குநர், தமிழ்ப்பிரிவு,
சட்டத்துறை

1968 ஆம் ஆண்டில் தாய்த் தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட்ட பின், 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கோட்பாட்டினை, நடைமுறைப்படுத்திடும் முகத்தான் - ஆட்சிமொழிச் சட்டத்தைச் செயற்படுத்தும் வகையில், "ஆட்சி மொழிக்குழு அதனடிப்படையில், அரசால் உருவாக்கப்பட்டது. தமிழ் ஆட்சிமொழியாகிவிட்டது என்று சட்டமியற்றப்பட்டு விட்டதாலேயே, அது முழுமைப்படுத்தப்பட்டதாக ஆகிவிடாது; ஏனெனில், ஆட்சிமொழி என்கிற போது, சட்டம், நிர்வாகம், நீதி ஆகியவை உரிய முறையில் தமிழாக்கம் செய்யப்பட்டு, முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதில் **கலைஞர்** அவர்கள் மிகுந்த முனைப்புக்காட்டி வருகிறார் என்பதற்கு எண்ணிலடங்காச் சான்றுகளை இயம்பிட இயலும்.

நவீன முத்தமிழ்:

இயல், இசை, நாடகம் என்ற மூன்று நமது முன்னோரின் கொடையாக முத்தமிழ் என வர்ணிக்கப்பட்டுள்ளது; ஆனால், 'சட்டத்தமிழ், நிர்வாகத்தமிழ், நீதித்தமிழ்' என்பதை நவீன முத்தமிழாகக் கொள்ளலாம். எனவே தான்**கலைஞர்** அவர்கள் இம்மூன்றையும் முறையாக, முதலாவதாகத் தமிழ்ப்படுத்தி நடைமுறைப்படுத்திடுவதற்கென ஆட்சிமொழிக் குழுவின் தலைவராகத் தானே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

நம் மொழியில் இல்லாத ஒரு சொல்லை, பிறமொழியிலிருந்து மொழிபெயர்த்துச் சொல்லாக்கி ஏற்பது அல்லது வேற்று மொழிகளில் இருந்து நேரடியாக, சொற்களைப் பெறுவது என்பது கலைச்சொல்லாக்கத்தில் ஒரு வகையாகும். வேற்று மொழியிலுள்ள அச்சொல்லை ஒலிபெயர்த்தோ அல்லது மொழி பெயர்த்தோ தேவைக்கேற்பப் புதுச்சொற்களை படைத்துக் கொள்வது என்பது மற்றொரு வகையாகும்; ஒரு மொழியின் சிறப்பியல்பை வெளிப்படுத்த இவற்றில், ஏதுவாக இருப்பது மொழி பெயர்ப்பாகும். தவிர்க்க இயலாதபோது நடைமுறைக்கேற்ப கலைச்சொற்களைப் புனைவது என்பது இன்றியமையாத ஒன்றாகும்.

பிற மொழிச் சொற்கள் அனைத்தையும் மொழிபெயர்த்திடல் வேண்டுமென்பது அவ்வளவாக வேண்டியதில்லை; அதே நேரத்தில், பிற மொழிச் சொற்களை அப்படி அப்படியே பெற்று, முழுமையாகக் கையாள்வதும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உகந்ததாகாது.

கலைச் சொற்களைத் தரப்படுத்துதல்:

தற்போதைய சூழ்நிலையில், கலைச் சொற்கள் தரப்படுத்தப்படாது பலராலும் பலவகையிலும் கட்டுப்பாடு இன்றிப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் அவர்கள் கூறுவது போல், அவற்றைத் தரப்படுத்தும்போது சில நெறிமுறைகளை வரையறுத்துக் கொள்ளவேண்டியது மிக்க அவசியமாகும்.

Public Functionary என்ற ஆங்கில வாசகத்திற்கு, (1) பொதுப்பதவியர், (2) பொதுப்பதவியலாளர், (3) பொதுப்பணிமாந்தர் - என்றெல்லாம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. இதைக் கண்ணுற்ற **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள், **'பொது வாழ்வினர்'** என்ற ஓசை நயமிக்க பொருள் பொதிந்த சொற்றொடரைக் கையாளுமாறு கூறினார்கள். இதே போன்று Confidential என்ற சொல்லுக்கு; (1) இரகசியம் (2) மந்தணம் என்று, அரசுக் கோப்புகளிலும் குறிப்புகளிலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், **1989-90ல் முதலமைச்சர் கலைஞர் Confidential** என்பதற்கு, **'மறை பொருள்'** என்ற வாசகத்தைப் பயன்படுத்தலாம் என்று பரிந்துரை செய்தார் (1989-90).

மந்தணமா ? மந்தனமா ?

ஒரு சொல், இலக்கியத்தில் கையாளப்பெறும்போது, ஒரு வகையான குறிப்பையும் ஆட்சித் தமிழ் வழக்கிலே வருகின்றபோது, வேறு ஒரு தொனிப் பொருளையும் கொண்டிலங்குவது சிறப்பாகும். தமிழக அரசு வெளியிட்டுள்ள ஆட்சிச் சொல்லகராதி - நான்காம் பதிப்பு-பக்கம் **63-இல் Confidential** என்ற சொல்லுக்கு, **'மந்தணம்'** என்று பொருள் கூறுகிறது. சென்னைப் பல்கலைக் கழக ஆங்கில - தமிழ் அகராதி பக்கம் **219இல் Confidential** என்பதற்கு **'இரகசியம்'** என்று பொருள் தருகிறது. **Strictly Confidential** என்பதற்கு **'கடும் மந்தணம்'** அல்லது **'பரம இரகசியம்'** என்றும் கோப்பில் பயன்படுத்துகின்றனர். தமிழ் நீதி நூல்களில் இலக்கிய நயமும் சட்டம் போன்ற பொருட் செறிவும் கொண்டது திருக்குறள். இதில் பல நயங்களைக் காணலாம். திருக்குறளில் இரகசியத்தைக் கீழ்மக்களிடம் கூறலாகாது என **வள்ளுவர்** கூற முற்பட்டு,

> *"அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட*
> *மறைபிறர்க்கு உய்த்துரைக் கலான்"*

-என்றார்.

அதிலும் அலுவலியல் இரகசியக் காப்புச் சட்டத்தில் கண்டபடி, அரசு இரகசியத்தைப் பிறருக்குத் தெரிவித்தல் ஆகாது. ஆம் இரகசியத்தைப் பிறருக்குத் தெரிவித்தல் ஆகாது. ஆனால், சிலருக்குத் தெரிந்த செய்தியை வெளியில் போய் தம்பட்டம் போட்டுப் பகிரங்கப்படுத்தாவிட்டால் தூக்கம் வராது. அவர்கள் சொன்ன சேதியை, 'உய்த்து' என்ற சொல்லால் எடுத்துரைக்கிறார். இதில், 'மறை' என்று இரகசியம் பேசப்படுகிறது. இதே மறையைத்தான் வேதம் - மந்திரம் என்கிறோம். மந்திரம் என்றால் மந்தணமாகும். ஆக மந்தணம், என்றால் இரகசியம் என்பது தெளிவு. இதே 'மந்தணம்' என்பதை **திருமூலர்** கையாண்ட விதமே வேறு.



> *"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்*
> *மடக்கொடியாரொடு 'மந்தணம்' கொண்டார்*
> *இடப்பக்கமே இறை நொந்ததே என்றார்*
> *கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே."*

இப்பாடலில், 'மந்தணம்' என்றால் இன்பம் துய்த்தல் என்று பொருள். ஆனால் அலுவலகத்தில் தட்டச்சில் 'மந்தணம்' என்பதற்குப் பதில் 'மந்தனம்' என்று தட்டச்சு செய்தார் தட்டச்சர். அப்படியென்றால் 'மந்தனம்' என்பது என்ன பொருள் ? 'மந்தனம்' - அழித்தல், ஆலோசனை, கடைதல், புகழ், யானைமுகபடாம். மந்தணம் - மந்திரம் - இரகசியம் என்று பொருள் இருப்பதைக் கழகத் தமிழ் அகராதியைக் காட்டி தட்டச்சர் செய்த பிழையைச் சுட்டிக் காட்டினார் அதிகாரி.

16.10.1996 அன்று எழும்பூர் அருங்காட்சியகத்தில், நடைபெற்ற சென்னை மாவட்டத் தமிழ் ஆட்சிமொழி வளர்ச்சிக் கருத்தரங்கில், தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத் துறை, மாண்புமிகு அமைச்சர் **முனைவர் தமிழ்க்குடிமகன்** அவர்கள், தற்போது **Confidential** என்பதற்கு **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், **'கமுக்கம்'** என்ற சொல்லை, இனிப் பயன்படுத்துமாறு ஆணை பிறப்பித்ததாகத் தெரிவித்தார். Confidential என்பதற்கு கமுக்கம், Secrecy என்பதற்கு மந்தணம், Strictly Confidential என்பதற்கு கடும் மந்தணம் / கமுக்கம், Esoteric என்பதற்கு மறைபொருள் என இச்சொல்லாக்க வளர்ச்சியில், 'இரகசியம்' என்ற வேற்றுமொழிச் சொல், கைவிடப்பட்டு 'உரிய தமிழ் வார்த்தை பயன்படுகிறது' என்பது பெருமைப்படத் தக்கதன்றோ ?

ஒருமுறை, மதுவிலக்குச் சட்ட முன்வடிவு மொழி பெயர்ப்பில் Animal என்ற சொல்லுக்கு விலங்கு என்று பயன்படுத்தப்பட்டது, இதைக் கண்ட **கலைஞர்** அவர்கள் Animal என்ற சொல்லுக்குக் **'கால்நடை'** என்ற சொல்லை பயன்படுத்தலாமே எனப் பகன்றுள்ளார். **'கால்நடை'** பெருவழக்காகித் தற்பொழுது அது முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. Cattle என்பதற்கு **விலங்கு** என்று பயன்படுத்தப்படுகிறது. ஆக சட்ட மொழிபெயர்ப்புகளில் ஒரு சொல்லை வடிவமைப்பது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல.

முன்பொருமுறை **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் ஆட்சிச் சொல், சட்டச் சொல் பற்றிய அறிஞர் பெருமக்கள் குழுவில் தலைமை ஏற்று, தமிழாக்கம் பற்றிய சொல்லாய்வில் பங்கேற்றபோது, 'Divorce' என்ற சொல்லிற்கு, ஆட்சிச் சொல் அகராதி தயாரிக்கும் போது, 'விவாகரத்து' என்ற பிறமொழிச் சொல் கையாளப்பட்டிருந்தது கண்டு இதைவிட நல்ல தமிழ்ச் சொல்லைப் பயன்படுத்தலாமென்றார். அவையிலிருந்த, தமிழறிஞர் ஒருவர் **'Divorce'** என்பதற்கு **'விடுமுறி'** என்ற சொல்லைக் **கவிமணி** அவர்கள், தமது 'மருமக்கள்வழி மான்மியம்', என்ற நூலில் பயன்படுத்தி இருப்பதாகக் கூறினார். உடனே **கலைஞர்** அவர்கள் **விடுமுறி** சற்றுக் கடுமையாக உள்ளது; எனவே **'மணமுறிவு'** என்ற நல்லதொரு தமிழ்ச்சொல்லை உடனடியாக எடுத்தியம்பினார். அற்புதமான அவ்வருமைத் தமிழ்ச்சொல் கேட்டு அவையோர் உடனே வியந்து நின்றனர் என்ற செய்தியை முன்னாள் இணைச் செயலாளர் திரு. கோ. முத்துப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார். இதேபோன்று, இன்னொரு நிகழ்வில் - அதாவது, உயர்மட்டக் குழு ஒன்று **கலைஞர்** தலைமையில்

நடைபெற்றபொழுது, 'Deep Research Knowledge' என்பதற்கு அங்கு பேசிய அலுவலர் உடனடியாகத் தமிழில் எடுத்து விளக்கத் தடுமாறிய போது, `Deep Research Knowledge' என்பதற்கு **'ஆழ்ந்த ஆராய்ச்சி அறிவு'** என்ற நல்ல தமிழாக்கத்தை அக்கணத்திலேயே எடுத்துக் கொடுத்த **கலைஞரின்** தமிழாற்றல் கண்டு வியந்ததாக ஓய்வு பெற்ற சார்புச் செயலாளர் திரு. எல்.வி. சுப்பிரமணியம் என்பார் நினைவுகூர்ந்தார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சித் தமிழுக்காற்றிய தொண்டுகள் - பங்களிப்புகள் அளப்பரியன. சட்டத் தமிழ் வளர்ச்சியிலும் சொல்லாட்சியிலும், சொல்லாக்கத்திலும் கலைஞருக்கு மிக்க ஈடுபாடுண்டு. பல காலமாக Bill, Act, Law - என்ற ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு தேவையென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். "இதுவரை நீதிமன்றங்களில் தமிழில் - முழுமையான முறையில் தீர்ப்பு அளிக்கப்படவில்லை. இத்துறையில் தமிழ் மொழி நன்கு வளர வேண்டும். தமிழில் - சட்டத்துறையில், தமிழ்ச்சொற்கள் குறைவாகவே இருக்கின்றன. இன்னும் அதிகச் சொற்களைத் தனித்தனித் தமிழ்ச் சொற்களைச் சட்டத்துறையிலே ஆக்கவேண்டிய கடமை சட்ட வல்லுநர்களுக்கும், சட்டத்துறையிலே இருப்பவர்களுக்கும் உண்டு. 'நம்முடைய ஆட்சியை நாம் தமிழிலேயே நடத்த முடியுமா ?' என்று இன்று எவரும் வினா எழுப்புவதில்லை. காரணம் நாம் செயல்வடிவிலேயே "தமிழால் முடியும்" என்பதை நடைமுறைப்படுத்திக் காட்டி வருகிறோம்.

இன்றைய அளவில் ஆட்சி முறைகளுக்கு - தமிழால் இயலும் என்ற நிலையில், அது தழைத்தோங்கி வளர்வதால் அதிலும் குறிப்பாக, Administrative Language எனும் ஆட்சிமொழியிலும், Legal Language எனும் சட்ட மொழியிலும், தமிழாக்கம் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியுள்ளது என்றே கருதலாம்.

மொழி பற்றிக் கூற வந்த பிரான்சிஸ் பேக்கன் கூறுகிறார்:

"மனிதர்கள் நினைப்பதுண்டு நாம்
மொழியை ஆள்கிறோமென்று - ஆனால்
மொழிதான் அவர்களை ஆள்வதாக
அடிக்கடி நான் கண்டிருக்கிறேன்".

"மனிதக் கண்டுபிடிப்புகளில் முதன்மையானது மொழி, காரணம் அது ஒரு தொடர்பு சாதனம் என்பதை விட மனிதச் சிந்தனைக்கு ஒரு வடிகால் என்பதாலேயே" என்கிறார் கிளான் வில்லியம்ஸ்.

''மொழியின் ஓர் அலகுதான் சொல். இச்சொல் அது எழுதப்பட்டவுடன், பேசப்பட்டவுடன் முழுவதுமாக ஒரு பொருளை உணர்த்துவதில்லை. குறிப்பிட்ட ஒரு சொல் ஏதேனும் ஒரு பொருளையோ ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களையோ காட்டுவதற்கு ஓர் அறிகுறியாக, அடையாளமாகவே அமைகின்றது'' என்கிறார் பேராசிரியர் டாக்டர் ம. ரா. போ. குருசாமி.

சாமான்ய மக்கள் பேசும் - எழுதும், சொல்லைவிடச் சட்ட மொழியில் கையாளப்படும் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் பொருள் பொதிந்த ஒன்றாகும். எனவே அச் சட்ட மொழி குழப்பமின்றி அமைவதைத்தான், சட்டத்தை வரைவோர் மிகுந்து விழைகிறார்கள். அக்குழப்பம் தவிர்க்கவே சாதாரண உரைநடையில் வரையப்படும் சட்டச் சொற்களை அளந்து பயன்படுத்துகின்றனர். எனவேதான், (Legal Language, which must aim above all things at removing every possible ambiguity - சட்டமொழியாக்கமானது வேறெவற்றையும் விட, இயன்ற வரையில் வரம்பைக் கடந்து முயலப்பட வேண்டியதாகும் என்கிறார் ஏர்னல்டு கோவர்ஸ்.

தமிழ்நாடுஆட்சி மொழி (சட்ட) ஆணையத்தின் தலைவரும் முன்னாள் சட்டமன்றத் துறைச் செயலருமான மா.சண்முக சுப்பிரமணியம் அவர்கள் சட்டத் தமிழ் விற்பன்னராவார். அவர் கூறுகிறார், ''மொழி பெயர்ப்பு என்பது ஒரு கலை. அதை மொழிபெயர்ப்பு (Translation) என்று கூறுவதை விட மொழியாக்கம் (Transcreation) என்று குறிப்பதே பொருத்தமாகும், ஒரு மொழியின் சொல்லின் பொருளை மறுமொழியில் கூறுவது மொழிபெயர்ப்பு. ஒரு மொழியின் சொல் சுட்டும் கருத்தினை வேறு மொழியில் அமைப்பது மொழியாக்கம்.

கலைவாணர் சொன்ன கதை

அமெரிக்காவில் ஒரு தொண்ணூறு மாடிக்கட்டிடத்தில் உள்ள லிஃப்ட் கெட்டுப் போய்விட்டது. அக்கட்டிடத்தில் 80வது மாடியிலுள்ள தங்கள் அறைக்கு மூன்று பேர் நடந்தே போகவேண்டியதாகிவிட்டது. எனவே, எண்பதாவது மாடிக்கு ஏறிப் போகும்போது சிரமம் தெரியாமலிருக்க அவர்கள் ஒரு நிபந்தனை செய்து கொண்டார்கள்.

முதல் இருபத்தைந்தாவது மாடிவரை ஒருவர் நகைச்சுவைக் கதை சொல்ல வேண்டும். அடுத்த ஐம்பதாவது மாடிவரை ஒருவர் காதல் கதை கூறவேண்டும். அடுத்த எண்பதாவது மாடிவரை ஒருவர் சோகக் கதை கூறவேண்டும்.

முதல் இருபத்தைந்து மாடி ஏறும் வரை ஒருவர் நகைச்சுவைக் கதை சொன்னார். அடுத்த ஐம்பதாவது மாடி வரை ஒருவர் காதல் கதை கூறினார். சோகக் கதை கூறவேண்டிய மூன்றாமவர் மௌனமாயிருந்தார்.

ஏனைய இருவரும் சோகக் கதையைக் "கூறு" என்றார்கள். சொல்லுகிறேன் என்று பெருமூச்சுவிட்டார். இரண்டு படிகள் ஏறியும் அவர் சோகக் கதை கூறவில்லை. சொல்லப்பா உன் சோகக்கதையை என்று வற்புறுத்தினர்.

''உம்! சொல்லுகிறேன் என் சோகக்கதையை;" நம் அறைச் சாவியைக் கீழே வைத்துவிட்டு வந்துவிட்டேன் என்றார் அவர்.

ஆக, இந்த வரையறைகள் - இலக்கண வரம்புகளோடு Bill, Act, Law - என்ற சொற்களின் தமிழாக்கம் என்ன? என்பதை இனி ஒவ்வொன்றாகக் காண்போம்.

'Bill' பற்றிய மொழிபெயர்ப்பை சட்டக் கண்ணோட்டத்தில் காண்போம். இன்றும் சட்டச் சொற்களுக்கு ஆதாரமாக ஆங்கிலச் சட்டச் சொற்களின் வரையறையை வைத்தே சரியான பொருளை உறுதி செய்ய வேண்டியுள்ளது.

"Bill Means A measure submitted to either House of Legislature for the purpose of being passed into Law" - அதாவது சட்டமாகும் பொருட்டு சட்டமன்றத்தின் ஏதேனும் ஓர் அவையின் முன்வைப்பது என்பதாகும்; இது முன்பு 'மசோதா' என்று கூறப்பட்டது.

முந்தைய ஆட்சிக் காலத்திலும் முதலமைச்சர் பொறுப்பிலிருந்த கலைஞர் அவர்கள் ஆட்சிச் சொல், சட்டச்சொல் பற்றிய அறிஞர் பெருமக்கள் குழுவில் தலைமை ஏற்று, 'Bill' என்பதன் தமிழாக்கம் பற்றிய சொல்லாய்வில் புழக்கத்திலிருந்த 'மசோதா' என்பதற்கான நல்ல தமிழ்ச் சொல்லாக, 'சட்ட முன் வடிவு' என்ற சொல்லைப் புனைந்ததாக, தமிழ்நாடு ஆட்சி மொழி (சட்ட) ஆணையத்தின் பகுதி நேர உறுப்பினரும், ஆட்சி மொழி வல்லுநருமான திரு. கீ. இராமலிங்கனார் நினைவுகூர்கிறார்.

அடுத்து Law என்ற சொல் என்ன பொருள் படும்? Law is the system of authoritative materials for grounding or guiding judicial and administrative action recognised or established in a poltically Law organised society (Roscoepound). அரசியல் நெறியோடு அமையப்பெற்ற சமூக அமைப்பில், 'சட்டம்' என்பது நிர்வாக - நீதி நடவடிக்கைகளுக்கு அடித்தளமாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகிறது.

Bill, Law என்பனவற்றிற்கு அடுப்படியாக உள்ளது Act என்பது. சட்டமன்றத்தில் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டதும், ஒரு நிலை தாண்டி சட்டமாகிறது. முன்னதை Bill என்ற சட்டமுன்வடிவென்றும் பின்னதை Act என்பதைச் சட்டம் என்றும் கூறுவர். Act என்பது போன்று Enactment என்றும் Statute என்றும் ஆங்கிலத்தில் கூறுவார்கள். இதையடுத்து, 'Code' என்ற தொகுப்புச் சட்டமும் உண்டு. Act என்றால் சட்டம் Enactment என்றால் இயற்றுச் சட்டம் Statute என்றால் செய்சட்டம் Law என்றால் சட்ட நெறி, Ordinance என்றால் அவசரச் சட்டம் எனச் சட்டத் தமிழ்ச் சான்றோர் கூறுவர். Bill, Act, Law என்ற சொற்கள் மேற்போக்காகப் பார்த்தால் எளிமையாகத் தெரியும். ஆனால் தமிழ்ச் சொல் தேடும் போதுதான் அதில் சிக்கல் இருப்பது தெரிகிறது. எனவேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவற்றிற்குத் தமிழ்ச் சொல் தேவை என வலியுறுத்தும் நுட்பம் புரிகின்றது.

"சட்டம் ஓர் இருட்டறை;அதில் வழக்கறிஞரின் வாதமே விளக்கு" - என்று விளக்கிய அறிஞர் அண்ணா அவர்களின் கூற்றைக் கூர்ந்து நோக்கும் பொழுது சட்ட வரைவுகளின் தன்மையும் அமைப்பும் எத்தகையன என்பது நமக்கு நன்கு புலப்படும்.

கலைச் சொல்லாக்கத்தில் எழும்பிய பிரச்சினைகள்:

1989-90ல் ஒருமுறை சட்டமன்றத்தில், பல்கலைக்கழக அளவில் 'Chancellor' என்ற சொல்லின் தமிழாக்கம் குறித்து சுவைமிகு விவாதம் ஒன்று நடந்தது. அதில் Chancellor - வேந்தராகவும், Pro-Chancellor - இணை வேந்தராகவும், Vice-Chancellor - துணை வேந்தராகவும், பயன்பாட்டில் உள்ளது; ஆனால், மேற்கு ஜெர்மனியில், 'Chancellor' என்றால், ஒரு மாநில முதல்வரின் பதவியைக் குறிக்கிறது. அதே 'Chancellor' என்ற சொல் ஆங்கிலேய நாட்டில், 'He is the Chairman of the House of Lords' - அதாவது Chancellor - Exchequer என அழைத்தால் அது அமைச்சர் எனப் பொருள்படுகிறது. அதுவே, British Embassy Official Secretary - Chancellor என்றாகிறது.

இவ்விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருகிற வகையில், அவை முன்னவரான - கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், வேந்தன் - என்ற சொல் பழங்காலத்தில், ஆட்சிக்குத் தலைமையேற்ற மன்னவனைக் குறிப்பதாக இருந்தது. தற்காலத்தில், அத்தகைய வேந்தர் (மன்னர்) எவருமிலர்; எனவே, 'ஆட்சிக்குத் தலைமை ஏற்பவர் என்ற பொருளில், அதாவது பல்கலைக்கழக ஆட்சிக்குத் தலைமை ஏற்பவரை' Chancellor வேந்தர் என்று அழைப்பதில் தவறில்லை; ஏனெனில், பல்கலைக்கழக விவகாரங்களில் குறை இருக்குமானால், அவற்றைக் களைந்திடும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு வாய்ப்பைப் பெற்றவர் என்பதனால், Chancellor வேந்தர் என்ற சொல்லைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்று எடுத்தியம்பியது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும்.

தமிழன்னைக்கு உயரிய சிம்மாசனம் அமைப்பதில், முதலமைச்சர் கலைஞரின் இடையறா முனைப்பு:

ஆட்சிமொழியாக, நிர்வாக மொழியாக, சட்டமொழியாக அன்னைத்தமிழுக்கு உரிய இடத்தைப் பெற்றுத்தருவதில், ஆக்கமும் - ஊக்கமும் தருவதோடல்லாமல், புதிய சொல் புனைவதில் தன்னுடைய பங்களிப்பையும் **கலைஞர்** அவர்கள் கொடையாக்கித் தரத்தவறியதில்லை; அதோடு, **கலைஞர்** அவர்கள் எடுக்கின்ற முயற்சி எதுவாக இருப்பினும், அது எத்துறையைச் சார்ந்ததாக இருப்பினும், அவருடைய அறிவிப்புகள், திட்டங்கள் எத்தன்மை வாய்ந்ததாக இருப்பினும், அது எதிர்கால நோக்கில் அடித்தளமாய் அமைகின்ற எத்தனிப்புகளாகவே பரிணமிக்கின்றன என்பது பலநூறு சான்றுகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அதே அடிப்படையில்தான், தன்னுடைய முழுமுதற் கடமையாக, **உயிரனைய இலட்சியமாகத் தாய்த்தமிழை** அரியாசனத்தில் அமர்த்துவதைக் கொண்டுள்ளார்; எனவே தான் அதற்கு அடித்தளம் அமைத்திடும் வகையில், 'தமிழ்வழிக் கல்வி' என்பதை உறுதியாக நிறைவேற்றி வருகிறார். புகுமுக வகுப்பு வரை இருந்த தமிழ்க்கல்வியை, பட்டப்படிப்பு வரை விரிவாக்கினார்; தமிழ்வழிக் கற்போர்க்கு ஊக்கத்தொகைகள், உதவித்தொகைகள் உரியவாறு அரசின் சார்பில், அளித்திட வழிவகை செய்துள்ளார். கலை-அறிவியற் பட்டப்படிப்பு என்ற அளவோடு நின்றுவிடாமல், மருத்துவம், பொறியியற் பட்டப்படிப்புகளிலும் அன்னைத் தமிழைப் பாடமொழியாக்கிட அயராது முயன்று வருகிறார்.

எனவே,

அரசினரின் மொழியாக,
அரசியலார் மொழியாக
அரசியல்சார்
வரிசையுறு சட்டமன்றின்
மொழியாக, வையம்அறி
மொழியாகத்
திருமலிந்த தமிழ்மொழிதான்
ஆகும் வரை நம்புலவர்
சேர்ந்து தொண்டு
புரிக என வேண்டுகின்றோம் !
பொழிக என வேண்டுகின்றோம்
பொன்மழை தான் !

என்ற பாவேந்தரின் இப்பாடல் வரிகள்; **புரட்சிக்கவிஞரின் இப்புனிதக் கனவுகள், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரிய வழிகாட்டுதல்கள் - அயராத முனைப்புகளின் பயனாக நனவாகிடும் நாட்கள் வெகுதொலைவில் இல்லை; 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்ற இலட்சியம் ஈடேறிடும் என்பது திண்ணமே!**



தைத் திருநாள் !

- கவிஞர் இளந்தேவன்

'உழவர்கள் மேலோர் உழைப்பவர்
மேலோர் !' என்றது தைத்திருநாள் !
'உலகவர் யார்க்கும் தமிழ்த்தாய்
சொந்தம் !' என்றது தைத்திருநாள் !
'அழகிய பெண்மையும் ஆண்மையும்
வெல்க !' என்றது தைத்திருநாள் !
'அங்கம் முழுவதும் இன்பம்
நிரம்புக !' என்றது தைத்திருநாள் !

பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டு

பேராசிரியர் முனைவர் சரளா இராசகோபாலன்

(தமிழ்நாடு அரசின் 1997க்கான 'புரட்சிக்கவிஞர் விருது' பெற்றவர்)

"இந்த நூற்றாண்டில் இருவர் பார்ப்பனர்
செந்தமிழ்ப் பற்றுடை யார்கள்;
முந்து பாவலன் பாரதி மற்றவன்
முத்தமிழ் வல்லவன் பரிதிமாற் கலைஞன்
நாடகத் தமிழ் இலக்கணம் மறைந்ததே
ஈடுசெய் வேனோ என்று துடித்தான்
இயன்ற மட்டும் சிற்சில கொடுத்தான்" (தேனருவி)

- என்று பாவேந்தர் பாரதிதாசனாரால் புகழப்பெற்றவர் பரிதிமாற் கலைஞர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் ***பரிதிமாற் கலைஞர். சூரிய நாராயண சாஸ்திரியார்*** *என்ற இயற்பெயர் கொண்ட இவர்* ***பரிதிமாற் கலைஞர்*** *எனப் புனைபெயர் பூண்டார். இவர் தமிழ் பயில்வோரிடம் இருந்த அறியாமை இருளையோட்டிய பரிதி; தமிழ்ப்பகைவர் என்னும் அரக்கரை வென்ற திருமால், இயற்றமிழ் மாணவர்க்குத் தமிழறிவுறுத்திய கலைஞர்; அந்தணர் குலத்தில் பிறந்த அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரிது.*

"பரிதிமாற் கலைஞர் தனிப்பட்ட முறையில் சாதித்தவை ஒருபுறம் இருக்க, நவீன காலத்துப் பிரச்சினைகளும் போக்குகளும் உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் அவர்நோக்கிலும், போக்கிலும் காணப்படுவதால், நவீன தமிழிலக்கிய வரலாற்றாராய்ச்சிக்கு அவர் வாழ்க்கைச் சரிதத்தையும் நூல்களையும் கற்றல் இன்றியமையாதது என்பது போதரும்" - என்று கலாநிதி க.கைலாசபதி குறித்துள்ளார்.

பரிதிமாற் கலைஞரின் தமிழ்அறிவு அவரது தந்தையால் விதைக்கப்பட்டது. சபாபதி முதலியாரால் வளர்ந்தது. மில்லரால் நீர்பாய்ச்சப் பெற்றது. இவர், தன் இருபதாம் அகவைக்குள் ஆழ்ந்த புலமை பெற்றார். இனிமை வாய்ந்த தமிழ்ச் செய்யுட்களை மிகவும் விரைவாய்ப் பாடும் ஆற்றல் பெற்றார். இவர் தன் 19ஆம் வயதில் ***'மாலா பஞ்சகம்'*** *என்ற நூலை இயற்றினார். இவருடைய, இளமையில் தோன்றிய. தமிழார்வம் இறுதிவரை நிலைத்தது. கிறித்துவக் கல்லூரி முதல்வர் மில்லர் இவருக்குத் தத்துவப் பேராசிரியர் பதவி தர விரும்பிய போது, இவர் மறுத்து, தமிழ் உதவிப் பேராசிரியர் பதவியைப் பெற்றமை, இவருடைய தமிழ்க் காதலைக் காட்டுகிறது.*

அவரே முன்னோடி

இவருடைய மொழிக் கொள்கையைக் கலாநிதி க.கைலாசபதி, "அவர் தமிழ்மொழியைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் அக்காலத்தவர் பலர் கொண்டிருந்த கருத்துகளினின்றும் வேறுபட்டன. மூன்று அம்சங்கள் இங்கு கவனிக்கத்தக்கவை. செந்தமிழைத் தனது பேச்சிலும் எழுத்திலும் பெருமளவு பயன்படுத்தியமை, தனித்தமிழ் என்ற கோட்பாட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தமை, தாய்மொழி மூலம் கல்வி என்ற கொள்கையை வலியுறுத்தியமை" என்று குறித்துள்ளார்.

தனித்தமிழ் இயக்கம் தோன்றுவதற்கு முன்பே, இவர் தன் பெயரான ***சூரிய நாராயண சாஸ்திரியார்*** *என்பதைப் 'பரிதிமாற்* ***கலைஞர்****' என மாற்றிக்கொண்டார். பரிதிமாற்* ***கலைஞரின்*** *இப்பெயர் மாற்றமானது தமிழரிடையே ஒரு பரபரப்பை எழுப்பியது.* ***"தனித்தமிழ் இயக்கத்திற்கு அவரே முன்னோடியாவார்"*** *என்று ஞா.தேவநேயப் பாவணர் தன் 'தமிழர் வரலாற்றில்' (ப.333) குறித்துள்ளார்.*

இவர், மாணவப் பருவத்திலிருந்தே சங்கத் தமிழ் பேசினார், எழுதினார். மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கம் காண்பதற்கு முன்பே இந்நடையைக் கொண்டுள்ளார். பரிதிமாற் கலைஞரின் சங்கத்தமிழ் கண்டு வியப்புற்ற தாமோதரம் பிள்ளை அவர்கள், ***'திராவிட சாஸ்திரி'*** *என்று இவரைப் பாராட்டியுள்ளார்.*

''சூரிய நாராயண சாஸ்திரியாரிடத்தில் சிறந்து விளங்கிய இயல்புகள் பல உண்டு. அவைகளுள் சிறந்தது எங்கும் எப்பொழுதும் எக்காரணம் பற்றியும் ***கொச்சைத் தமிழ் பேசாமை''*** *என்று* ***திரு.வி.க.*** *குறித்துள்ளார் (வாழ்க்கைக் குறிப்புக்கள் - ப.88).*

பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டு பன்முகம் கொண்டது; மிகக் குறுகிய வாழ்நாள் கொண்ட அவர் சிறந்த பேராசிரியர்; கவிஞர்; நூலாசிரியர்; பதிப்பாசிரியர்; கட்டுரையாளர்; மொழிபெயர்ப்பாளர்; வாழ்க்கை நூலாசிரியர்; மொழி நூலறிஞர்; சொற்பொழிவாளர்; புதின ஆசிரியர்; நாடக ஆசிரியர்; பத்திரிகாசிரியர் என்று, பல நிலைகளில் தமிழ்த் தொண்டு புரிந்தார்.





பேராசிரியர்

1893-இல் கிறித்துவக் கல்லூரியில், உதவித் தமிழாசிரியராகப் பணியேற்ற பரிதிமாற் கலைஞர், 1895இல் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். அவர் பணியாற்றிய அக்காலத்தில் அவரால் பேராசிரியர் பதவி சிறப்படைந்தது.

பேராசிரியரின் சொல்லாற்றல், வேறு வகுப்பு மாணவர்களையும் ஈர்த்தது. இவர் பொதுவாக வகுப்பில் கையாளும் நடையே பண்டைய உரையாசிரியர்களுடைய உரைநடைதான். இது இவருக்கு இயல்பாக அமைந்திருந்தது. உயரிய செந்தமிழ் நடையிலேயே இவருடைய வகுப்பு நடக்கும்; ஒரு மணி நேரமும் அந்நடை யிலேயே பேசும் திறமையைக் கண்டு வியவாத மாணவர்களோ, ஆசிரியர்களோ இல்லை.

பேராசிரியர் தன் மாணவர்கள் கல்வியில் வல்லவர்களாகவும் கல்வி வேட்கையும் ஒழுக்கமும் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஒருமுறை இவர் நடத்திய பாடத்தை மாணவர் ஒருவர் கவனிக்காமல் இருந்தபோது, "நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இவணிருந்து எழுவாய், நீ ஈண்டு இருத்தலால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை; இவணிருந்து உன்னாற் செயப்படு பொருளிலை; ஆதலால் வகுப்பினின்று வெளியேறுக" என்று கூறி அம்மாணவரை வகுப்பினின்று அப்புறப்படுத்தினார். இப்படி இலக்கணத்தைச் சமயத்திற்கேற்ற முறையில் பேசியமை சிறப்பாக அமைகிறது.

நூலாசிரியர்

பரிதிமாற் கலைஞர் 12 நூல்களை எழுதியுள்ளார். ரூபாவதி - கலாவதி, மானவிஜயம், தனிப்பாசுரத் தொகை, பாவலர் விருந்து - முதல் நாள், நாடகவியல், மதிவாணன், தமிழ் மொழியின் வரலாறு, மணிய ' சிவனார் சரித்திரம் ஆகியவை ஆசிரியரால் வெளியிடப்பட்டவை. சூர்ப்பனகை, முத்திராராட்சசம், உமை திருமணம், இன்னுமா ?, அவ்வைக்காட்சி ஆகியன இவருக்குப் பின்னால் வெளியிடப்பட்டவை.

கவிஞர்

சித்திரகவி எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்த பரிதிமாற் கலைஞர் 'சித்திரகவி விளக்கம்' என்னும் நூலை எழுதினார். உதடு ஒட்டாமல் பாடும் நீரோட்டக் கவிதைகளையும் பாடினார். தான் பாடிய தனிப்பாடல்களைத் தொகுத்து 'பாவலர் விருந்து - முதல் நாள்' என்ற கவிதை நாடகம் எழுதினார். வேறொரு கவிதை நூலான 'மாலா பஞ்சகம்' இன்று எங்கும் கிடைக்கவில்லை. மேல் நாட்டுக் கவிதையான 'ஸானெட்' அமைப்பைப் பின்பற்றி எழுதி, 'தனிப்பாசுரம்' என்ற பெயரில் வெளியிட்டார்.

பரிதிமாற் கலைஞர் தொடக்க காலப் புதின ஆசிரியர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இவர் மதிவாணன் என்ற புதினத்தையும் 'இன்னுமா' என்ற முற்றுப்பெறாத புதினத்தையும் எழுதினார். மதிவாணன் என்னும் புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க்கதை சி.வை.தாமோதரம்பிள்ளையவர்களின் வேண்டுகோளின்படி எழுதப்பட்டது. கடினமாகவும், சங்ககால நடை உடையதாகவும் இருந்த அது, அவருடைய வசன நடையின் திறனைக் காட்ட எழுதப்பட்டது.

நாடகத் தமிழுக்கு இவர் ஆற்றிய தொண்டு குறிக்கத்தக்கது. இவர் நாடகத்திற்குப் பின்வருநிலைகளில் தொண்டாற்றியுள்ளார்.

1. நாடகவியல் என்ற இலக்கண நூலை எழுதினார்.
2. ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் என்ற நாடக நூல்களை எழுதினார்.
3. நாடகங்களில் ஆசிரியரே தலைவியாக நடித்தார்.
4. பிறமொழி நாடகத்தை மொழிபெயர்த்தார்.

பரிதிமாற் கலைஞர் வாழ்ந்த காலகட்டத்தில் பலதுறைகளில் முன்னோடியாகத் திகழ்ந்து தமிழர்களுக்கு வழிகாட்டியுள்ளார். சங்க மரபையொட்டி இயற்கையைப் போற்றிப் பல பாடல்களை இயற்றினார். மேனாட்டுக் கவிதை முறையைப் பின்பற்றியும் பாடல்கள் புனைந்தார். தமிழுக்கு 'நாடகவியல்' என்னும் நாடக இலக்கண நூல் கொடுத்தார். ஆராய்ச்சி முறையை மேற்கொண்டு தமிழ்மொழி வரலாற்றை எழுதினார். இந்நூல் இவருடைய தமிழ்ப்பற்றை நிறுவுகிறது. தன் பெயரைத் தமிழ்ப்படுத்தி தனித்தமிழ் இயக்கத்திற்கு வழிகாட்டினார். தமிழில் முதன்முதலில் தீயிறுதி நாடகத்தை எழுதினார் (மானவிஜயம்) அறிவியல் ஆர்வம் கொண்டு அறிவியல் கட்டுரைகளை எழுதினார். 'தமிழ் உயர்தனிச் செம்மொழி' என்று முதலில் நிலைநாட்டியவர் இவரே. ●

தமிழ்நாடு இளைஞர் நலக் கொள்கை - தமிழக அரசால் உருவாக்கப்படும் !

தேசிய இளைஞர் விழாத் தொடக்க விழாவில் முதல்வர் கலைஞர் அறிவிப்பு

ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற தேசிய இளைஞர் விழாவின் தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :

முதலில் இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மத்திய அமைச்சர்கள் திரு.எஸ்.ஆர். பொம்மை, திரு.தனுஷ்கோடி ஆதித்தன் ஆகியோரை நான் பாராட்ட விரும்புகிறேன். நான் உங்கள் அனைவருக்கும் இனிய வரவேற்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்; என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் வாழ்வில் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன். புராதனமான புகழ்பெற்ற மாநிலமான தமிழ்நாட்டில் நீங்கள் கூடியிருப்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த மாநிலம் சர்வதேச சகோதரத்துவம் என்ற கொள்கையை உலகுக்கு வழங்கியது. இங்குதான் கணியன் பூங்குன்றனார் என்ற தமிழ்ப்புலவர்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

- என்று உலகத்திற்கு அறிவித்தார்.

இங்குதான் பெரும்புலவர் திருவள்ளுவர்,

"யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

- என்ற குறள் மூலம் கற்றறிவாளர்கள் ஒவ்வொரு நாட்டையும் தங்கள் சொந்த நாடாக்கிக் கொள்வர், ஒவ்வொரு நகரிலும் தங்களுக்கு ஒரு வீட்டைக் காண்பர் என்று உலகிற்கு அறிவித்தார்.

வரலாற்றிலும், புராணங்களிலும் கதாநாயகர்கள் அவர்கள் இளைஞர்களாக, இருந்தபோது செய்த சாதனைகளுக்காகவே நினைவுகூரப்படுகின்றனர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் இளைஞனாக இருந்த போதுதான் தலையாலங்கானத்தில் ஒரே நேரத்தில் ஏழு அரசர்களுடன் போரிட்டு வென்று 'தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்' என்ற பெயர் பெற்றான்.

குருச்சேத்திர யுத்தத்தில் இளைஞனான அபிமன்யு அர்ஜுனனை விட மிகுந்த வீரத்தை வெளிப்படுத்தினான்.

துரோணரின் சீடராக இருந்த போது தான் அர்ஜுனன் புகழ்பெற்ற போர் வீரனாக உருவானான்.

இராமாயணத்தில் இளைஞனாக இருந்த இந்திரஜித் மற்ற எந்தப் பாத்திரத்தையும் விட அதிக வீரச் செயல்களைப் புரிந்தான்.

இளமைக் காலத்தில் பொது வாழ்வில் நுழைந்த தலைவர்கள்

உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள், நவீன காலத் தலைவர்களான டாக்டர் அம்பேத்கர், பண்டித நேரு, பெரியார், அண்ணா, காமராஜர் ஆகிய எல்லோரும் அவர்கள் இளைஞர்களாக இருந்த போது தான் பொது வாழ்வில் நுழைந்தனர்.

> ***உலகின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பறவைகள் தமிழ் நாட்டில் உள்ள வேடந்தாங்கலில் கூடுவதைப் போல், இந்தியா முழுவதிலும் உள்ள பிரதிநிதிகள் இந்த விழாவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இங்கே கூடியுள்ளனர். நட்பு, சமாதானம் மற்றும் வளர்ச்சிதான் அந்த நோக்கங்கள்.***

இராமாயணத்திலிருந்து ஒரு கதையை நினைவூட்ட விரும்புகிறேன். இராமர், லெட்சுமணன், பரதன், சத்ருகனன் ஆகிய நால்வரும் சிறுவர்களாக ''துணிப்பந்தைப்'' பயன்படுத்தி வில்லையும், அம்பையும் வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவ்வாறு அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது ஒரு துணிப்பந்து கூனியின் முதுகைத் தாக்கிவிட்டது. அதைப் பார்த்து சிறுவர்கள் சிரித்தனர். இந்த அவமான நிகழ்ச்சியின் காரணமாகக் கூனி இராமர் மீது வெறுப்பை வளர்க்கத் தொடங்கினாள்.

கூனியின் பழிவாங்கும் உணர்வையும் அதைத் தொடர்ந்து அந்த இதிகாசத்தில் நடந்த சம்பவங்களையும் நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்தச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து ஒரு பழமொழி உருவானது. அதுதான்

"விளையாட்டு வினையானது !"

ஆனால் விளையாட்டு எப்போதும் வினையாகி விடுவதில்லை. அது ஆரோக்கியத்தையும் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டது. அதனால்தான் கவிஞர் பாரதி

"ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா"

- என்று குழந்தைகளை அழைத்தார்.

உங்களில் ஒரு சிறிய, அழகிய இந்தியாவைக் காண்கிறேன்.

இந்தியாவின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த இளைஞர்கள் இங்கே உள்ளனர். ஐக்கிய இந்தியா மீது நாம் கொண்டுள்ள உறுதியை மீண்டும் உறுதி செய்வதற்காக நீங்கள் வந்திருக்கிறீர்கள். சாதி, ஏற்றத் தாழ்வு, மொழி ஆகிய வேறுபாடுகளை நீங்கள் புதைத்து விட்டீர்கள், உங்களில் நான் ஒரு சிறிய அழகான இந்தியாவைக் காண்கிறேன்.

சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாளில் தேசிய இளைஞர் திருவிழா கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமாகும். இந்தியாவை உயர்ந்த நிலைக்குக் கொண்டுசெல்வதில் இளைஞர்கள் மீது அவர் பெரும் நம்பிக்கை வைத்திருந்தார்.

நாகரீகம் இந்தியாவில் ஆழமாக வேரூன்றியுள்ளது. நம்முடைய தாய்நாடு மற்றவர்களுக்கு நாகரீகத்தையும் பண்பாட்டையும் கற்பித்து, புராதன காலத்தில் தமிழகத்தைச் சேர்ந்த கடற்பயணம் செய்வோர், கிழக்கிலும் மேற்கிலும் நீண்ட தொலைவுக்குப் பயணம் செய்தனர்.

தமிழ்மொழி சிறந்த மொழிகளில் ஒன்று. அது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. அது எங்கள் அறிவுடைமை மேம்பாட்டிற்கு ஆதாரமாகத் திகழ்கிறது.

இந்தியா விஞ்ஞானத்திலும் கலைகளிலும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகிறது. நாம் நம்முடைய பாரம்பரியம் பற்றிப் பெருமை கொள்ள முடியும்.

"பாரத நாடு பழம் பெரும் நாடு
நீரதன் புதல்வர் இந் நினைவகற்றாதீர்"

- இவை கவிஞரும் சுதந்திரப் போராட்ட வீரருமான பாரதியின் தங்கச் சொற்கள். இந்தச் சொற்கள் நம்முடைய கடமையை நமக்கு நினைவூட்ட வேண்டும். புகழ் பெற்றிருந்த கால நிலைக்கு இந்தியாவை மீண்டும் கொண்டு செல்வதுதான் அந்தப் பணி.

இங்கே கூடியிருக்கும் நீங்கள், நாங்கள் எல்லாம் சுதந்திரம் பெற்றதற்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவர்கள். நீங்கள் சுதந்திரத்தின் பலன்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். நாம் சுயநலமின்மையாலும் தியாகத்தினாலும் சுதந்திரத்தைப் பெற்றோம். கடுமையாகப் போராடிப் பெறப்பட்ட, அந்தச் சுதந்திரத்தை நாம் காப்பாற்றுவதுடன் கடந்த காலத்தின் புகழ்பெற்ற நிலைமையை மீண்டும் உருவாக்க வேண்டும்.

அதற்கு ஓய்வில்லாத முயற்சிகள் தேவை. நாம் அமைதியாகவும் துணிவோடும் அதற்காகப் பணியாற்றுவோம். தேவையற்ற விஷயங்களில் நாம் நம்முடைய காலத்தையும் சக்தியையும் விரயமாக்காமல் இருப்போம்.

உலகின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பறவைகள் தமிழ் நாட்டில் உள்ள வேடந்தாங்கலில் கூடுவதைப் போல், இந்தியா முழுவதிலும் உள்ள பிரதிநிதிகள் இந்த விழாவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இங்கே கூடியுள்ளனர். நட்பு, சமாதானம் மற்றும் வளர்ச்சிதான் அந்த நோக்கங்கள். மனித குலத்தைச் சேர்ந்த அனைவரையும் சமமாக நடத்தும் போதுதான் இந்த கொள்கைகளை நிறைவேற்ற இயலும்.

இத்தகைய விழாக்கள் ஒன்றுபட்ட மனப் பான்மையை உருவாக்க வேண்டும்.

அடிப்படை மனித மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாவிட்டாலும் நீடித்த நட்புறவைச் சாதிக்க முடியாது. இந்த வகையான ஒரு விழா இந்தியர்களிடையே ஒன்றுபட்ட மனப்பான்மையை உருவாக்க வேண்டும். வளர்ச்சியின் பலன்கள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைய வேண்டும்.

குறிப்பாக, நலிந்த பிரிவினரை அவை சென்றடைய வேண்டும். அத்தகைய நலிந்த பிரிவினருக்கு நீங்கள் அனைவரும் உதவி செய்ய வேண்டும் என்பதே என்னுடைய உண்மையான வேண்டுகோளாகும். சக்தியும் முயற்சிகளும் ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஏழைகளின் நலனை மேம்படுத்த அரசாங்கங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இது துணைபுரியும்.

இளமை அற்புதமான சக்தியையும் ஆற்றலையும் பெற்றுள்ளது. நாட்டை உருவாக்குவதில் பயனளிக்கும் நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபட வேண்டும். திடநம்பிக்கையுடன் கூடிய துணிவு இருக்கும்போது முன்னேற்றப் பாதையில் உள்ள இடையூறுகள் நீர்க்குமிழிகள் போல் மறைந்துவிடும். தற்காலிகக் கவர்ச்சி உங்களுடைய முன்னேற்றத்திற்கான பயணத்திலிருந்து உங்களைத் திசை திருப்பிவிடக் கூடாது. தற்காலிக லாபங்கள் சமாதானத்திற்கும் வளர்ச்சிக்கும் அழைத்துச் செல்லாது.

கிராமப்புற இளைஞர்களுக்காகப் பல்வேறு நலத்திட்டங்கள்

ஆற்றல் மிக்க உயிரோட்டமுள்ள நாடாக இந்தியாவை உருவாக்கும் இலட்சியத்தை நோக்கி இளைஞர்கள் உறுதி பூண்டு உழைக்க வேண்டும் என்பது என்னுடைய பெரும் விருப்பமாகும்.

இந்தியாவில் உள்ள மொத்த இளைஞர்களில் கிராமப்புற இளைஞர்கள் 78.4 சதவிகிதம் பேர் ஆவர். அதனால்தான் எங்கள் தமிழக அரசு கிராமப்புற இளைஞர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

இரண்டு ஆண்டுகளில் பணியமர்த்தப்பட்ட இளைஞர்கள்

கடந்த இரண்டு ஆண்டுகளில் இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட இளம் ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

சாலைகளைப் பராமரிப்பதற்காக 10 ஆயிரம் இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மக்கள் நலப் பணியாளர்களாகப் பதிமூன்றாயிரம் இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

அரசு மருத்துவமனைகளில் அறுநூறு இளம் டாக்டர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு மின்சாரவாரியத்தில், சுமார் ஆயிரம் இளைஞர்கள் தொழில் நுட்ப உதவியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களும், இளம் பெண்களும் எங்கள் மாநிலத்தில் உள்ள தமிழ்நாடு போலீஸ் படையில் சமீபத்தில் இணைந்தனர்.

மேலும் பத்தாயிரம் இளைஞர்களும், இளம் பெண்களும் எங்கள் போலீஸ் படையில் சேர்க்கப்படவுள்ளனர்.

> ***திடநம்பிக்கையுடன் கூடிய துணிவு இருக்கும்போது முன்னேற்றப் பாதையில் உள்ள இடையூறுகள் நீர்க்குமிழிகள் போல் மறைந்துவிடும். தற்காலிகக் கவர்ச்சி உங்களுடைய முன்னேற்றத்திற்கான பயணத்திலிருந்து உங்களைத் திசை திருப்பிவிடக் கூடாது.***

கிராமப்புற இளைஞர்களுக்கு 15 சதவிகித இடஒதுக்கீடு

பொறியியல், மருத்துவம், பல் மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம், சட்டம் மற்றும் சித்த மருத்துவம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளில் கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவிகித இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர்கள் சுதந்திர தீபத்தை இளைய தலைமுறையினரின் கரங்களில் ஒப்படைத்துள்ளனர். இதை ஒரு மெழுகுத் திரியாகக் கருதக் கூடாது. இது கோடிக்கணக்கான மக்களுக்கு ஒளி கொடுக்கும் ஒரு தீபம். அந்தப் பணியைச் சாதிக்க, சுதந்திரப் பொன்விழா கொண்டாடும் இவ்வேளையில் நாம் உறுதி ஏற்போம்.

இந்த மகிழ்ச்சியான வேளையில் எங்கள் அரசு ''தமிழ்நாடு இளைஞர் நலக் கொள்கை''யை உருவாக்கி வருகிறது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இங்கே கூடியுள்ள அனைவரும் இந்த விழாக் காலத்தில் இங்கே மகிழ்ச்சியுடன் தங்கியிருக்க வாழ்த்துகிறேன்.

விவேகானந்தரின் பிறந்தநாள் என்பதால் அவருடைய புகழ்பெற்ற சொற்களான,

"எழு, விழி, இலட்சியத்தை
எட்டும்வரை நில்லாதே"

- என்ற சொற்களைக் கூறி என் உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். ★

புத்தாண்டே வருக !

மா.சு.சம்பந்தன்

(தமிழ்நாடு அரசின் 1997க்கான 'திரு.வி.க. விருது' பெற்றவர்)

இப்பூவுலகம், பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு செஞ்ஞாயிற்றிடமிருந்து தெறித்துவிழுந்த ஒரு துண்டாகும். இது முதலில் அனற் பிழம்பாய் எரிந்தும் கொதித்தும் கனலை உமிழ்ந்தும் சுமார் ஒரு நூறு கோடி ஆண்டுகளாய்க் கிடந்தது. இதற்குப் பின்பு ஒரு கோடி ஆண்டு வரை தணிந்து தணிந்து இறுகத் தொடங்கியது. இறுகி இறுகி மலைகளும் கடல்களும் தோன்றின. இம்மலைகளிலும் கடல்களிலுந்தான் முதன்முதலில் உயிர்கள் உண்டாயின. அவ்வுயிர்கள் பிறகு ஓரறிவு முதல் ஆறறிவு வரை வளர்ந்தன. ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுடன் மனமும் சேர்ந்து மனிதன் தோன்றினான்.

மேற்சொன்ன முறையில் இவ்வுலகில் முதன்முதலில் சூடு குறைந்து இறுகிய பகுதி தென்னிந்தியாவை (நாவலம்) உள்ளடக்கியிருந்த லெமூரியாக் கண்டந்தான். ஏனெனில், அன்றைய தென்னிந்தியா (லெமூரியா) நில நடுக்கோட்டிற்கு (Equator) அருகில் இருந்தது. இன்றுள்ள ஆஸ்திரேலியாவும் ஆப்பிரிக்காவும் அன்று லெமூரியாக் கண்டத்துள் அடங்கியிருந்தன.

உயிர் வகைகள் படிப்படியாக வளர்ந்து, சிறந்து குரங்குக்கு அடுத்தபடியான லெமூர் (Lemur) என்னும் காட்டு மாந்தனிடமிருந்து மனிதன் தோன்றினான். அவன் பேசிய மொழியே உலகத்தின் மிகப் பழமையான தமிழ் மொழியாகும். இந்த லெமூரியாக் கண்டத்தின் பகுதியே **'உலக நாகரிகத்தின் தொட்டிலாக'**க் கருதப்படுகிறது.

(The Tamils themsleves or their historian, to be more exact, believed that in the remote past the Tamil homeland was situated in the Southern part of Nawalan, a large island that was one of the first land masses to rise near the equator, and that Lemuria, a lost continent considered to be the cradle of civilization, was part of the same region - See Alexander Kondrators "The Riddles of Three Oceans", published by Progress Publishers, Moscow in 1974. Page 122).

மனித நாகரிகமே மலைப்பகுதியிலிருந்துதான் துவங்கியுள்ளது. குகை வாழ்வே குடும்ப வாழ்வாக மலர்ந்தது. தமிழர் முதலில் மலையும் மலை சார்ந்த பகுதியான குறிஞ்சி நிலத்திலிருந்து பசியெடுத்தபோது காய்கனிகளை உண்டனர்; வேட்டையாடி விலங்குகளைக் கொன்று தின்று காலங்கழித்தனர். இப்போது இவர்கள் குறவர் எனப்பட்டனர். இக்குறிஞ்சி வாழ்க்கை கற்காலத்தைச் சேர்ந்ததாகும். பின்னர் அவர்கள் காடும் காடுசார்ந்த பகுதியான முல்லை நிலத்தில் தங்கி வாழ்ந்தனர். இங்கு அவர்கள் வேட்டைக்கு உதவியான விலங்குகளைப் பிடித்து வளர்த்து வந்ததால் ஆயர் எனப்பட்டனர். ஆடு மாடுகளைப் பெருத்த அளவில் உடையவன் கோன் (தலைவன்) ஆனான். பின்னர் இது அரசுக்கு அடிகோலியது. இவ்விடத்திலிருந்து கடலும் கடல் சார்ந்த பகுதியுமான நெய்தல் நிலத்திற்கு வந்தனர். விலங்கு வேட்டைக்குப் பதில், கடல் வேட்டையாடியதால், இங்கு மக்கள் பரதவர் எனப்பட்டனர். இதுவரை - தனித்தனியாகவும் நாடோடியர்களாகவும், வாழ்க்கை நடத்தி வந்த தமிழர்கள் இறுதியாக வயலும் - வயல்சார்ந்த பகுதியுமான மருதநிலத்திற்கு வந்த பிறகே தமக்கென ஒரு குடும்பம் ஏற்படுத்திக் கொண்டு ஓரிடத்தே நிலைத்து நின்று உழுது பயிரிட்டு வாழமுற்பட்டனர்.

இதற்கு மருதநில வாழ்க்கை என்று பெயர். இம்மருத நிலத்திலே முதன்முதலாகக் குடியாட்சி ஏற்படத் துவங்கியது. மேற்சொன்ன குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என்னும் நால்வகை நிலத்திணைகளைத் தமிழரின் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் அழகாகவும் நுட்பமாகவும் எடுத்துரைக்கின்றன.

கரடு முரடாக இருந்த நிலத்தைச் சீர்திருத்திப் பயன்படுத்திப் பயிர் செய்வதற்கு ஏற்ற விளைநிலமாக மாற்றுவதற்கு மக்கள் பெரும்பாடுபட்டனர். அவர்கள் தொடக்கத்தில், மழையையே பெரிதும் நம்பிப் பயிர்த்தொழிலைச் செய்ய முற்பட்டனர்; ஏரிகளை அமைத்தனர்; வாய்க்கால்களை உண்டாக்கி வேளாண்மைக்கு ஏற்றவகையில் அமைத்துக்கொண்டனர்.

வானம் பார்த்த - *மானாவாரிப்* பயிர்களான தினை, வாகை, கொள்ளு போன்றவற்றைப் பயிரிட உழைப்புக் குறைவு; அதற்கேற்றபடி ஊதியமும் குறைவாகவே கண்டு முதலாயிற்று; கிணறும், குளமும் ஏரியும் அணைக்கட்டும் பயிர்த்தொழிலுக்குப் பலவழிகளில் பயன்படுபவையாக இருந்தன; இருக்கின்றன.

எக்காலத்தில் எதை விதைத்தால் சீக்கிரத்தில் பலன் கிட்டும் என்ற பட்டறிவு வேளாண் மக்களுக்கு நாளாவட்டத்தில் ஏற்பட்டது. அதன் விளைவாகவே குறுகிய காலப் பயிர்களை மக்கள் பயிர் செய்ய முற்பட்டனர். இதனால் வானம் பொய்த்தாலும், பாடுபட்டுப் பயிரிட்டவைகளைப் பக்குவமாகக் காப்பாற்றி விளைச்சலைக் காணமுடிந்தது.

தமிழர்கள் ஓராண்டை 12 மாதங்களாகப் பிரித்தனர். அவற்றுள் சித்திரை வைகாசி மாதங்களை இளவேனிற் காலமாகவும், ஆனி, ஆடியை முதுவேனிற்காலமாகவும், ஆவணி புரட்டாசியைக் கார்க்காலமாகவும், ஐப்பசி, கார்த்திகையைக் குளிர்காலமாகவும் , மார்கழி, தையை முன்பனிக்காலமாகவும், மாசி, பங்குனியைப் பின்பனிக்காலமாகவும் 'ஆறு பெரும்பிரிவு'களைப் பொழுதுகளாகப் பிரித்துக் கொண்டனர்.

தமிழர்கள் காலத்தை - நொடி, நாழிகை, நாள், கிழமை, மாதம், ஆண்டு, ஊழி என்று வானியல் முறைப்படி வரையறை செய்துள்ளனர். 60 நாழிகையை ஒரு நாளாகவும், ஒரு நாளை - வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என்று ஆறு சிறுபொழுதுகளாகவும் கொண்டுள்ளனர்.

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று ஏழு நாட்களை ஒருவாரமாக ஏற்றுள்ளனர். இவர்கள் தமது **ஆண்டின் தொடக்கத்தைத் தைத்திங்களில்** இருந்து ஆரம்பித்துள்ளனர்.

ஞாயிறு (சூரியன்) போற்றுதல் சிலப்பதிகார காலத்திற்கு முன்பே போற்றப்பட்டு வருகிறது. ஞாயிறே தனது வெப்பத்தின் மூலம் நீர்நிலைகளிலுள்ள நீரை ஆவியாக்குகிறது. பின்னர் அந்நீராவியே மேகமாகக் குளிர்ந்து மழையாகப் பொழிகிறது; அம்மழையே நீர்நிலைகளை நிரப்புகிறது. புல், பூண்டு மரஞ்செடிகளை வளர்க்கிறது. **'விசும்பின்துளி வீழினல்லால் பசும்புல் தலை காண்பதரிது'** என்கிறது திருக்குறள்.

யூத இனத்தினர் கி.மு.3761 ஆண்டிலிருந்து தமது ஆண்டைக் கணக்கிட்டு வருகின்றனர். எகிப்தியர் கி.மு.4236லிருந்தும் கிறிஸ்துவ ஆண்டு கி.பி.1997லிருந்தும் தொடங்குகிறது. இஸ்லாமியர் தமது ஹிஜ்ரா ஆண்டை கி.பி.622லிருந்து தொடர்ந்து கணக்கிட்டு வருகின்றனர். மலையாளிகள் கொல்லம் ஆண்டைத் தொடக்கமாக ஏற்றுள்ளனர். கன்னடத்தினரும், தெலுங்கர்களும் யுகாதியைத் தமது ஆண்டின் தொடக்கமாகக்

கொண்டுள்ளனர். தமிழ்ச்சான்றோர்கள் திருவள்ளுவர் ஆண்டை கி.மு.31 முதல் தொடக்கமாக நிர்ணயித்துள்ளார். திருவள்ளுவர் ஆண்டையே தமிழக அரசும் ஏற்றுப் பின்பற்றி நடைமுறைப்படுத்தி வருகிறது. திருவள்ளுவர் ஆண்டை ஏற்றுக்கொண்டுள்ள தமிழர் அனைவரும், சென்னை நகரையே மத்திய கணிப்பு இடமாகக் கொள்ள வேண்டும். மத்திய அரசும் இதனை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்த வேண்டும். அப்போதுதான் மாத ஆரம்பத்தில் ஏற்படும் குறைகளும், குளறுபடியும் நீங்கும்.

தமிழர் திருநாளான தைத்திங்கள் முதல் நாள் அறுவடைத் திருநாளாகும். ஆண்டு முழுவதும் பயிரிட்டுப் பாடுபட்டு விளைச்சல் கண்டு மகிழ்ச்சி அடையும் நாளாகும். அறுவடை நாளில், பாடுபட்ட மக்கள், தாம் உழைத்த உழைப்பின் பின்விளைவைக் கண்டு மகிழ்வுறும் திருநாளாகும். உழைப்பின் பெருமையை உணர்த்தி உள்ளக் கணிப்பைப் பொங்குவிக்கும் - பகுத்தறிவுக்கு ஒத்த பெருமை பெருநாளாகும். புத்தம் புதிய அரிசியைப் புதுப்பானையில் இட்டுப் பொங்கி, இனிப்புக் கலந்து, பலவித காய்கறிகளைச் சுவையுடன் சமைத்துத் தொடு பதார்த்தங்களாகக் கொண்டு, புத்தாடை பூண்டு தமது இனிய மக்களுடன், இல்லாளுடன், உற்றார், உறவினருடன் மகிழ்ந்து உண்டு களிப்புக் கொள்ளும் பெருநாளாகும்.

தான் உழுது பயிரிட்டதற்கு உற்ற உதவியாக இருந்த மாடு, கன்றுகளைக் குளிப்பாட்டி, அணிகலன்களைப் பூட்டி, அழகுபடுத்தி அவைகளையும் உற்ற உதவியாளர்களாகக் கொண்டு, கொண்டாடும் திருநாளே - மாட்டுப் பொங்கல் விழாவாகும். தனக்கு உதவிபுரிந்த துணைவர்களுக்கு உற்ற உடைகளை அன்பளிப்புத் தந்து அவர்களையும் பெருமைப்படுத்தும் 'காணும்பொங்கலாகும்'. அறுவடைத் திருநாளான பொங்கலைத் தமிழக நாட்டுப் புறங்களில் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர். தமிழக நகரங்களிலும் பொங்கல் திருநாளைக் கூட்டங்கூட்டி, சிறப்புரை ஆற்றி, பெருமைப்படுத்துகின்றனர் தமிழ் மக்கள்.

தை முதல் நாளை - பொங்கல் திருநாளை - ஆண்டுத் தொடக்கமாக விஞ்ஞானபூர்வமாகக் கண்டறிந்து தமிழ்ச் சான்றோர்களும், பல்வேறு கட்சியினரும் தமக்குரிய திருநாளாக மகிழ்ச்சியோடு பெருமையாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர்.

தைத்திருநாள் முத்தமிழ்ப் பெருவிழாவாக - இயல், இசை, நாடக விழாவாக - அறிஞர் அண்ணா, புலவர் கா.கோவிந்தனுடன் காஞ்சிப் பகுதியிலும், பிற இடங்களிலும் கொண்டாட வழிவகுத்துச் சென்றுள்ளார். தைத்திருநாளில், இன்னிசை நிகழ்ச்சிகளும், இலக்கியச் சிறப்பு நிகழ்ச்சிகளும், நாடெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றன. தைத்திருநாளில் திருவள்ளுவர் விருது அளித்தும், பெரியார் விருது அளித்தும் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி பெருமை கூட்டிவருகிறார். ஆண்டுதோறும் தை மாதத் தொடக்கம் திருவள்ளுவராண்டு கொண்டாடப்பட்டுவரும் திருநாளாகும். கற்றவர்களும், கட்சிக்காரர்களும் அரசியலாரும், பொதுமக்களும் தனித்தும் இணைந்தும் தங்கள் தங்கள் சக்திக்கு ஏற்றவகையில் கொண்டாடப்பட்டு வரும் - தமிழ்த்தேசியப் பெருவிழாவாகும். இது தமிழகம் கடந்து, தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரும் உலக விழாவாகும். ★

அறிவொளி இயக்கம்

- கோ. சண்முகம்

பட்டி தொட்டிப் பாமரரும்
படித்துப் பலவும் தெரிந்திடவே
பலருக்கும் அறிவுக்கண் திறப்பது
எங்கள் கொள்கையாம் அறிவொளியே.

சுற்றிவரும் சுடர்த்தீபம்
பற்றிடவேண்டும் பாரெங்கும்
அதனால் பெற்றிடவேண்டும் அறிவுத்தீபம்
அதுவே எங்கள் சுடர்த்தீபம்!

நாடு நல்ல நாடு
நல்லறிவு பெற்றதெங்கள் நாடு
கூடி வாருங்கள் கற்பதற்கே
கோடி நன்மை பெறுவதற்கே,

கருத்தாய் நாமும் கற்பதனால்
நாடும்வீடும் உயர்ந்திடுமே
அறிவொளி அனைவரும் பெற்றிடுவோம்
அன்பாய் நாமும் இருந்திடுவோம்.

கைம்மண் அளவு கற்பதனால்
நம்மொழி பெற்றிடும் முதிர்ச்சி
செவிக்கோ அது இன்ப அதிர்ச்சி
இதுவே நம்நாட்டின் வளர்ச்சி

அறிவொளி இயக்கம் -
இது அறிவுக்கு விருந்து
அறியாமைக்கோ மருந்து!



அவர்தான் பெரியார்

திரு. 'தவமணிராசன்'

(1997ஆம் ஆண்டின் 'பெரியார் விருது' பெற்றவர்.)

1942லேயே பகுத்தறிவுச் சிந்தனைகள் பரவிட மாணவர் அமைப்பு உருவாக வித்திட்டவர்களில் ஒருவர் என்ற பெருமைக் குரியவர்.

என் அப்பா முனிசிபல் கமிஷனராக இருந்தார். அவர் பெயருக்கு 'விடுதலை' பத்திரிகை தபாலில் வரும் அதைப் படிப்பேன். அதிலிருந்து ஆழ்ந்த ஈடுபாடு ஏற்பட்டது.

கும்பகோணம் அரசு கலைக் கல்லூரியில் நான் பி.ஏ. படித்தபோது எம்.ஆர்.ராதா ஒரு நாடகம் நடத்தினார். 'விமலா அல்லது விதவையின் கண்ணீர்' என்ற சுயமரியாதைக் கருத்து நாடகம். ராதாவைப் பாராட்ட, அண்ணாவை அழைத்து வந்து நிகழ்ச்சி நடத்தினேன். அப்போதுதான் திராவிடர் மாணவர் கழகம் சார்பில் விழா நடத்தினேன்.

குடந்தையில் ஒரு பள்ளியில் பிராமணர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தண்ணீர் பானையில் பிராமணர் அல்லாத மாணவர் தண்ணீர் மொண்டு குடித்ததால் அபராதம் விதிக்கப்பட்டது. இச் சம்பவத்தால் குடந்தை திராவிடர் மாணவர் கழகம் தோன்றியது. நான் அதன் தலைவன். திராவிடர் கழகம் என்பது பின்னால்தான் ஏற்பட்டது.

கல்லூரியில் படிக்கும்போது பெரியாரை அழைத்து ஒரு பொதுக்கூட்டம் நடத்தினோம். அதில் தமிழாசிரியர் ஜானகிராமன் என்பவர் வாழ்த்துக் கவிதை படித்தார். கல்லூரி நிர்வாகம் எங்கள் இரண்டு பேருக்கும் காரணம் கேட்டு நோட்டீஸ் கொடுத்தது.

அப்போதெல்லாம் செலக்ஷன் தேர்வு எழுதிவிட்டுப் பிறகுதான் பி.ஏ. தேர்வு எழுத முடியும். நான் செலக்ஷன் தேர்வில் வெற்றி பெற்றுவிட்டதால், இக்கல்லூரி என்னை மாணவன் என்ற முறையில் கட்டுப்படுத்தாது என்று நோட்டீசுக்குப் பதில் கொடுக்கச் செய்தேன். கல்லூரி முதல்வர் என்னைச் சமாதானம் செய்தார். 'பெரியாரை நம் கல்லூரிக்கு அழைக்க வேண்டும்' என்றேன். அவரோ, 'பெரியார் வரலாம், ஆனால் பேசக்கூடாது' என்று நிபந்தனை விதித்தார்.

நானும் பெரியாரை அழைத்து வந்தேன். தேநீர் விருந்து கொடுத்தோம். பெரியார் என்றால் அவர்தான் பெரியார். நன்றி சொல்லாமலேயே விடைபெற்றார்.

'அதான் நான் பேசக்கூடாதே!' என்றார்.

அண்ணாவை அழைத்துவந்து, கல்லூரியின் ஆங்கிலப் பேரவையில் பேசவைத்தேன்.

ஆங்கிலப் பேரவையின் தலைவராக இருந்த மாணவர் பிராமணர். அவர் அறிமுக உரையில் சொன்னார். அண்ணாதுரை தமிழகத்தில் நன்கு அறிமுகமானவர். பேச எடுத்த தலைப்பை மட்டும் நியாயமாகப் பேசுவார். (Annadurai is well known person in Tamilnadu. I hope he will speak judiciously on the subject) அரசியல் பேசாதே என்று இதற்கு அர்த்தம். அண்ணா பேசும்போது, "நான் நன்கு அறியப்பட்டவன் அல்ல; பல பகுதிகளில் தவறாக அறியப்பட்டவன். நியாயம் பேச நான் வழக்குரைஞன் அல்ல" என்று பதிலடி கொடுத்தார். (Annadurai is not well known; but ill-known in manyquarters . I am not a lawyer to speak judiciously...) அதுமட்டுமல்ல; 'மாணவர்களை அனுப்பி வையுங்கள். நான் பயன்படுத்திக் கொள்கிறேன்' என்று பேச்சை முடித்தார்.

கல்லூரிப் படிப்பு முடித்த பின்னர் பெரியார் கொள்கைகளை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்தேன்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் சேலம் மாநாட்டில் பெரியாரை நீதிக்கட்சியிலிருந்து நீக்கவேண்டும் என்ற திட்டம் இருந்தது. இதை அறிந்த பெரியார், 'அண்ணாவின் தீர்மானங்கள்' என்று 'குடியரசு' பத்திரிகையில் செய்தி வெளியிட்டார். அது உண்மையில் ஐயா (பெரியார்) எழுதிய தீர்மானங்கள்தான். அந்தத் தீர்மானங்களால் சேலம் மாநாட்டில் பெரியாரை நீக்கும் எண்ணம் ஈடேறவில்லை. அந்த மாநாட்டுக்கு நானும் போயிருந்தேன். குடந்தை கே.கே.நீலமேகம் என்னைப் பெரியாரிடம் அழைத்துப் போய், இவன் உங்களுடனே இருக்க ஆசைப்படுகிறான் என்றார். பெரியாரிடம் ஒரு நல்ல பழக்கம். யாரையும் "வா" என்றும் சொல்லமாட்டார். "போ" என்றும் சொல்ல மாட்டார். நாங்களாகத்தான் போனோம்; நாங்களாகத்தான் வந்தோம்.

பெரியாருடன் ஈரோட்டில் இருந்தபோது 'குடியரசு' பத்திரிகையில் வேலை செய்தேன். அவருடன் எல்லா இடங்களுக்கும் போவேன். பெரியாரிடம் பைசா எல்லாம் கிடைக்காது. சாப்பாடு மட்டும்தான் கிடைக்கும். அறிவுக்கு நிறையத் தீனி கிடைக்கும். கவிஞர் கருணானந்தம், கருணாநிதி (முதல்வர்) எல்லாரும் எனக்கு அங்குதான் நண்பர்களானார்கள். கருணானந்தம், சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி வேலை கிடைத்துச் சென்றார். ஏ.எஸ்.ஏ.சாமி அழைப்பின் பேரில் திரைக்கதை எழுதக் கருணாநிதியும் சென்றார். நானும் சர்வீஸ் கமிஷன் எழுதினேன். வேலை கிடைத்தது.

சீர்காழியில் தாலுகா ஆபீஸ் கிளார்க்காக இருந்தேன். அங்கு நான் நடத்திய ஒரு பொதுக்கூட்டத்தால் என்னை வேலைநீக்கம் செய்து உத்தரவு வந்தது.

மீண்டும் ஈரோடு வந்தேன். சில ஆண்டுகள் பெரியாருடன் இருந்தேன். மணியம்மை திருமணத்துக்கு எதிராகக் கையெழுத்துப் போட்டவர்களில் நானும் ஒருவன். அதன் பிறகு கோவை நீலகிரி கூட்டுறவு வங்கியில் வேலைக்குச் சேர்ந்துவிட்டேன்.

அதற்காகப் பெரியார் என்னை விட்டுவிடவில்லை. புத்தர் மாநாடு நடத்தியபோது என்னை அழைத்து நிதி திரட்டும் பணியில் ஈடுபடுத்தினார்.

எங்களுக்கு எப்போதும் பெரியார் மேல் மரியாதை உண்டு. ஐயா இடத்தை யாரும் நிரப்ப முடியாது. ஐயா காலத்தில் இருந்த வளர்ச்சி இப்போது கட்சியில் இல்லைதான். பெரியார் இடத்தை நிரப்புவது சிரமம்.

பெரியார் ரொம்ப சிக்கனக்காரர். பைசா பெயராது.

இவரோட பெட்டி படுக்கைகள், புத்தக மூட்டை எல்லாவற்றையும் தூக்க போர்ட்டர் அதிகம் கேட்பான். இவர் அவனுடன் சண்டை போடுவார். கடைசியில் அவர் ஒரு பெட்டியை எடுத்துக்கொண்டு நடப்பார். மணியம்மை ஒரு பெட்டியை எடுத்துக் கொள்வார். வேறுவழியில்லாமல் நானும் மீதி இருப்பதை எடுத்துக்கொண்டு பின்னால் செல்வேன்...

ஒரு சமயம் சேலம் குகையிலிருந்து சென்னைக்கு ரயிலில் போனோம். குகையிலிருந்து சென்னைக்கு எத்தனை மைல் என்று கணக்குப் போட்டு, "ஒன்றரை அணா கூடுதலா கட்டணம் வாங்கியிருக்கான். என்னன்னு கேளு" என்று என்னை அனுப்பினார். சார்ட்டில் உள்ள கட்டணம்தான் என்று சொல்லிவிட்டார்கள். அவர் விடவில்லை. இதைக் குறித்துக் கொள். ஊருக்குப் போய் ரயில்வேக்குக் கடிதம் போடுவோம் என்றார்.

ஒன்றரை அணாவுக்கு இவ்வளவு கணக்குப் பார்த்த பெரியார்தான், மதுவிலக்குக்காகத் தனது தென்னந்தோப்புகளை வெட்டி அழித்தவர். கொள்கைக்காக எதையும் செய்வார்.

காமராஜர் மீது பெரியார் மதிப்பு வைத்திருந்தார். காமராஜர் இரட்டைவாக்குத் தொகுதியில் (திருவண்ணாமலை) போட்டியிட்டபோது பெரியார் மிகவும் தயங்கினார். காமராஜர் வெற்றி பெறுவாரா, மாட்டாரா என்று கவலை. காமராஜர் நேர்மையான அரசியல்வாதி. வெற்றிவாய்ப்புள்ள தொகுதியில் யாரையாகிலும் ராஜிநாமா செய்ய வைத்து, தான் நின்றிருக்கலாம். அப்படிச் செய்யாமல் அந்த நேரத்தில் காலியாக இருந்த திருவண்ணாமலை தொகுதியில் போட்டியிட்டார்.

காங்கிரஸார் அழைக்காமலேயே பெரியார் தன் சொந்தச் செலவில் திருவண்ணாமலை தொகுதி முழுவதிலும் காமராஜருக்காகப் பிரச்சாரம் செய்தார். காமராஜர் வெற்றி பெற்றார். பின்னர் காமராஜர் அழைத்த கூட்டத்தில் கலந்து கொண்டு "பச்சைத்தமிழன் காமராஜர் வாழ்க. காங்கிரஸ் ஒழிக" என்று பேசினார். நல்லவர் என்றால் எதையும் செய்வார்.

மீரான் சாகிப் தெரு வீட்டுச் சாவியை பெரியாரிடம் கொடுக்க வேண்டும் என்று சம்பத் என்னை அழைத்தார். அதற்காகப் போனேன். அங்கே மணியம்மை திருமணத்துக்கு எதிராகக் கையெழுத்து வாங்கிக் கொண்டிருந்தார்கள். அண்ணா என்னிடம் அரைமணி நேரம் வாதாடி கையெழுத்து வாங்கினார். கடைசியாக, நான் கையெழுத்துப் போட்டாலும், 'திராவிட நாடு' இதழில் என் பெயர் 5வது இடத்தில் வந்தது.

மீரான் சாகிப் இல்லத்துக்குப் பெரியார் வந்ததும், "ஐயா நான் கல்யாணத்துக்கு. எதிராகக் கையெழுத்துப் போட்டுவிட்டேன், கிளம்பறேன்" என்றேன். "அயோக்கியப் பசங்க" என்று திட்டினார். "சரி, நீ பத்து நாள் இருந்துட்டுப் போ" என்றார். நானும் 10 நாள் தங்கிவிட்டுப் புறப்பட்டேன். ஒரு நாளும் நான் கையெழுத்துப் போட்டது பற்றி என்னிடம் அவர் கேட்டதில்லை.

சாதிக் கலவரங்களை ஒழிக்க கலப்புத் திருமணங்கள் அவசியம். பெயருக்குப் பின்னால் இருக்கும் சாதி என்ற வாலை வெட்டவேண்டும். பெயரை வைத்து சாதியின் அடையாளத்தை யாரும் அறியமுடியாதபடி செய்ய வேண்டும். இந்த வகையில்தான் என் பெண்களுக்கு நூர்ஜகான், எலிசபெத், செல்வி என்று பெயர் வைத்தேன். மகனுக்குப் பிரபு என்று பெயரிட்டேன்.

என் திருமணத்தில் நான் என் மனைவிக்குத் தாலிகட்டினேன். என் மனைவி எனக்குத் தாலி கட்டினார். இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்டோம். என் திருமணத்தில் மேளம், ஊர்வலம் கிடையாது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் வந்திருந்து வாழ்த்தினர். என் திருமணமும் என் மகன், மகள்கள் திருமணமும் புரோகித மறுப்புத் திருமணமாகவே நடந்தன. எந்தவிதமான சடங்குகளும் கிடையாது.

மகன் பிரபுவின் திருமணத்தில் ஒரு ஹிந்து தலைமை வகிக்க, கிறிஸ்துவ நண்பரின் துணைவியார் நடத்தி வைத்தார். முஸ்லிம் பெண்மணி ஜீனத் வாழ்த்துரை வழங்கினார்!

●●●

மின்வெட்டென்பது அறவே இல்லை!



- ★ மின்வெட்டே இல்லாமல் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. முதலமைச்சர் கலைஞரின் முயற்சியால் 5,355 மெ.வா.மின் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட, 7 தனியார் மின் திட்டங்களுக்கான மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.
- ★ விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுகிறது.
- ★ காற்றாலை மூலம் மின் உற்பத்தி மற்றும் சூரியசக்தி போன்ற மரபுசாரா எரிசக்தி மூலம் 311.160 மெ.வா.கூடுதல் மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- ★ 5 சர்க்கரை ஆலைகளில் 76 மெகாவாட் மின்உற்பத்தித்திறன் கொண்ட இணைமின் உற்பத்தித் திறனமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது ஓர் அகில இந்தியச் சானையாகும்.
- ★ துணி, காகிதம், ரசாயனம், சர்க்கரை ஆலைகள் போன்ற தொழில் நிறுவனங்கள், தங்களுக்கு வாய்ப்புள்ள எரிபொருள்களைப் பயன்படுத்தித் தாங்களே மின்னாக்கிகள் மூலம் மின் உற்பத்தி செய்து கொள்ளும் அத்தகைய நிறுவனங்களுக்கு வரிவிலக்குகள் 5 ஆண்டுகள் வரை தரப்பட்டன. 23-9-96 முதல் மேற்குறிப்பிட்ட வகைகளோடு, காற்று, சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்து கொள்ளும் நிறுவனங்களுக்கும் சேர்த்து, நிரந்தரமாக வரிவிலக்குச் சலுகை கலைஞர் அரசால் வழங்கப்பட்டுள்ளது.
- ★ 71,046 தெருவிளக்குகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டு கிராமப் பஞ்சாயத்துக்கள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஒளியூட்டப்பட்டுள்ளன.
- ★ இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தமிழ்நாட்டில்தான் அதிகபட்சமாக, காற்று சக்தி மூலம் ஏற்கெனவே அடைந்துள்ள மின் உற்பத்தித் திறனுடன் 133 மெ.வா. மின் சக்தி உற்பத்தித் திறன் கூட்டப்பட்டுள்ளது.
- ★ இத்தகு புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் தொழில் நுட்பமே வரும் நூற்றாண்டின் செயல்முறைத் திட்டமாகும். தமிழகம் தற்பொழுது முதலே இதில் வழிகாட்டியாகத் திகழ்கிறது.
- ★ மின்சார வாரியத்தில், 1000 இளைஞர்கள் தொழில்நுட்ப உதவியாளர்களாகப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



அந்த மரம் ரத்தம் வடிக்கவில்லை

-கவிஞர் அப்துல் ரகுமான்

தருவதற்காகவே
கைகளை வளர்த்த மரத்தை
வெட்டி வீழ்த்தியவனே!
நீ செய்த படுகொலையை
நீயே அறிய மாட்டாய்.

நீ மரத்தை வெட்டவில்லை;
உனக்குப் பாலூட்டிய
தனத்தை அறுத்தெறிந்திருக்கிறாய்!

நிழலை, நறுமணத்தை,
சுவையை, அழகைக்
கொன்றிருக்கிறாய்!
மேகங்களைக் காற்றைக்
கொலை செய்திருக்கிறாய்.
உன் சந்ததிகளைப்
படுகொலை செய்திருக்கிறாய்;
நீ செய்தது கொலை அல்ல;
தற்கொலை!

அந்த மரம்
ரத்தம் வடிக்கவில்லை;
கண்ணீர் சொரியவில்லை;
முறையிடவும் இல்லை.

‘பிதாவே!
இவன் என்ன செய்கிறோம்
என்று தெரியாமல் செய்தான்;
இவனை மன்னியும்’ என்று
நான் பிரார்த்திக்க மாட்டேன்.
ஏனெனில், நீ
பிரார்த்தனையையே
கொன்று விட்டாய்!

ஓர் இலக்கியப் பார்வை!

கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்

“இன்று குழந்தைகள் நீங்கள். நாளை இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்கள்” என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

“இளைஞர்கள் இந்த நாட்டின் சுட்டி முனைகள்” என்றார் பேரறிஞர் அண்ணா.

ஒரு நாட்டின் இன்றைய தலைமுறையினர் எப்படி உருவாகுகிறார்களோ , உருவாக்கப்படுகிறார்களோ, அதனையொட்டித் தான் ஒரு நாட்டின் எதிர்காலம் அமைய முடியும்.

நமது தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்தவரை பண்டைக் காலந் தொட்டு, இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தே யாத்தளிக்கப்பட்டு வருகின்றன.

“இன்றைய செய்தி நாளைய வரலாறு; இன்றைய இளைஞர்கள் நாளை நாடாளப் போகிறவர்கள்; இளைஞர்களுடைய நோக்கும் போக்கும் எப்படி அமைகின்றனவோ அப்படித் தான் எதிர்காலம் அமையும். எதிர்கால நல்வாழ்வுக்குப் பண்டை இலக்கியங்களோ, இன்றைய இலக்கியங்களோ, வழிகாட்ட இயலுமா என்பது ஒரு கேள்வி.

இளைய தலைமுறையின் ஐயம்

இந்தக் கேள்வி இன்றைய இளைய தலைமுறையினரிடையே பெரிதும் தலை தூக்கி நிற்கக் காண்கின்றோம். அவர்கள் இந்த ஐயப்பாட்டினைக் கொள்வதற்கு நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

கற்காலத்திலிருந்து மாந்தர் தம் வாழ்க்கை தொடங்கி அணுமின்விசை வரை, மனிதன் செய்கின்ற வேலைகள் எல்லாம் கணிப்பொறி செய்து விடுகின்ற இக்காலம் வெறும் இலக்கியத்தை,இலக்கியஏடுகளாகப் புரட்டிக் கொண்டு இருப்பதால் பயன் என்ன? என்ற வினா இன்றைய இளைஞர்களிடையே எழுவது இயல்புதான்.

ஆனால் இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பதை மறந்து விடுவதற்கில்லை. இலக்கியங்கள் படைக்கப்பட்டதால்தான் பண்டைக் கால வாழ்க்கை முறையை, வரலாற்றை நாம் தெரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருகின்றோம்.

காலத்தால் அழியாத இலக்கியம்

இலக்கியம் கடந்த காலத்தைப் பற்றி மட்டுமன்றி, எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாகவும் விளங்குகிறது. இலக்கியப் படைப்புகள் காலத்தை வென்று நிலைத்திருப்பதற்கு இதுவே காரணம். திருக்குறள் போன்ற வாழ்க்கை நெறி விளக்க இலக்கியங்கள் காலத்தால் அழியாதவை; எக்காலத்தும் ஏற்றிப் போற்றப்பட வேண்டியவை. இவற்றையெல்லாம் ஒதுக்கி விட முடியுமா?

அறிவியலையும் பொறியியலையும் மட்டும் அறிந்து கொண்டால் போதுமென்ற மனப்பான்மை இன்றைய இளைய தலைமுறையினரிடம் இருந்து வந்த போதிலும், நம்முடைய வாழ்க்கை எதிர்காலத்தில் செம்மையாக அமைய வேண்டுமானால், நமது பண்பாடு நிலைக்க, நம்முடைய மொழியைப் பேணிக் காக்க இலக்கியங்கள் இன்றியமையாதவையாகும். அறிவியல் வளர்ச்சியில் முன்னிலையில் இருக்கும் மேலை நாடுகளில் கூட இலக்கியங்களைக் கடலில் வீசி எறிந்து விடவில்லை. இருக்கும் இலக்கியங்களைப் பேணிக் காப்பதிலும், புதுப் புது இலக்கியங்கள் படைப்பதிலும் அவர்கள் தயக்கம் காட்டுவதில்லை.

எதிர்காலம் ஒளிமயமாகும்!

நமது நாட்டு இளைஞர்களோ, இலக்கியங்கள் இக்காலத் தேவையை நிறைவேற்றக் கூடியவை அல்ல என்ற கண்ணோட்டத்தை விடுத்து, இக்கால தேவைக்கு ஏற்ற இலக்கியங்களைப் படிக்கவோ படைக்கவோ முற்படுவார்களேயானால், எதிர்காலம் ஒளிமயமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

சந்திர மண்டலத்துக்கு இன்று மனிதன் போய் வந்திருக்கிறான். “சந்திர மண்டலத்தை எட்ட முடியுமா?” என்று, சந்திர மண்டலத்தில் மனிதன் காலடி எடுத்து வைக்கும் வரை ஒவ்வொரு மனிதனும் கேட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அது நடந்து விட்ட பின்னர் வியப்பிலே ஆழ்ந்து மூக்கிலே விரலை வைக்கின்ற மனிதர்களைக் கண்டோம். இதனை அன்றே வடலூர் இராமலிங்க அடிகள் கற்பனையாகப் பாடவில்லையா?

“நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே
அங்கே
நானும் வரவேண்டுகின்றேன்
வெண்ணிலாவே!”

-என்று வடலூர் வள்ளலார் பாடினாரே! அவர் பாடியது கற்பனையன்று; நடக்கக் கூடிய காரியம் தான் என்பதை இன்று உலகம் மெய்பித்து விட்டது.

“காசியில் இருக்கும் புலவர்கள் பேசுவதைக் காஞ்சியில் இருப்பவர்கள் கேட்க ஒரு கருவி செய்வோம்” என்று அன்றைக்கே பாரதியார் சொல்லவில்லையா?



அன்று பாரதியார், சொல்லியபடி இன்று வானொலியும், தொலைக் காட்சியும் வந்து விட வில்லையா?

அன்று கவிஞன் கற்பனையாகச் சொன்னது இன்று நடைமுறைக்கு வந்திருக்கிறது. இது கவிஞனின் கனவு அல்லவா? இலக்கியத்தினால் எற்பட்ட உந்து சக்தியல்லவா?

அறிவியலும், பொறியியலும் முன்னோடி

வானொலி வடிவெடுத்தது மேலை நாட்டிலே என்றாலும் கீழை நாட்டிலே உள்ள கவிஞனும் இப்படி ஒரு கற்பனை செய்திருக்கிறான் அல்லவா? இன்றைய இளைஞர்கள் ஆர்வம் காட்டாமல் இல்லை. அவர்களுடைய நோக்கம் புரிகிறது; தாக்கமும் புரிகிறது. வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் இன்றைய தலைமுறையினரோ இலக்கியம் அதற்கு உதவவில்லையே என்று ஆதங்கப்படுவதும் நமக்குப் புரியாமல் இல்லை. ஆனாலும், அறிவியலுக்கும் பொறியியலுக்கும் இலக்கியந்தான் முன்னோடி என்பதை மறுப்பதற்கில்லை.

'மானிடம் என்றொரு வாளும் - அதை
வசத்தில் அடைந்திட்ட உன்இரு
தோளும்
வானும் வசப்பட வைக்கும்'

- என்றார் பாவேந்தர் பாரதிதாசன். வானொலியை வசப்படுத்தி, வையத்தையே அடக்கி, மனிதன் படைத்து வரும் அறிவியல் சாதனைகளையெல்லாம் ஒரே வரியில் அன்றே சொல்லிவிட்டார் பாரதிதாசன்.

இன்னும் சொல்லுகிறார் . ..

'மானிடம் என்பது புல்லோ ? - அன்றி
மரக்கட்டைகளைக் குறிக்க வந்த
சொல்லோ ?
கானிடை வாழ்ந்ததும் உண்டு - பின்னர்
கடலை வசப்படச் செய்ததும் அதுதான் !'

இவையெல்லாம் இலக்கியங்கள் மனிதனுக்கு வழங்கும் தன்னம்பிக்கை வரிகள் அல்லவா?

வேகமும் விவேகமும் தேவை

வேகமாகவும், விரைந்தும் முன்னேறிக் கொண்டிருக்கிறது இந்த உலகம். அந்த வேகத்துக்கு ஏற்றவாறு இன்றைய இளைய தலைமுறையினர் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்கின்ற அறிவுரை ஒருபுறமிருந்தாலும், உருப்படியான முன்னேற்றத்திற்கு வழிகாட்டக் கூடியதாக இருக்க வேண்டும் அல்லவா? வேகமும் விரைவும் இருக்க வேண்டும். அத்துடன் விவேகமும், அறிவுத் தாகமும் இருந்தாக வேண்டும். பெறப்படுகின்ற அறிவு நாட்டுக்குப் பயன்படுவதாக அமைய வேண்டும்.

நடையிலே, உடையிலே, பழக்க வழக்கங்களிலே, பண்பாட்டிலே பிற நாட்டினரைப் பின்பற்றுவதில் நம் நாட்டு இளைய தலைமுறையினர் காட்டுகின்ற ஆர்வம், எங்கே நம் தமிழ்ப் பண்பாட்டை, நாகரீகத்தை, இலக்கிய உணர்வை மறக்கச் செய்துவிடுமோ என்கின்ற அச்சமும், ஐயப்பாடும் முதியோர்களிடையே இருக்கத்தான் செய்கின்றன.

படிப்பதில் கூட ஆழ்ந்து படிக்க இன்றைய தலைமுறையினர் விரும்புவதில்லை; மேலோட்டமாக நுனிப்புல் மேய்வது போலத்தான் படிக்கிறார்கள்.

தமிழ் இலக்கியங்களைப் படிக்கும் வழக்கம் இன்றைய இளைய தலைமுறையினரிடையே அவ்வளவாக இல்லை என்றே சொல்லாம். திரைப்படம் பார்ப்பதிலே, உள்ள ஆர்வம், தீந்தமிழ் இலக்கியம் சுவைப்பதிலே அவர்கள் காட்டுவதில்லை.

"கிரிக்கெட்" விளையாட்டைப் பார்ப்பதிலே, அதைப் பற்றிக் கேட்டறிவதிலே காட்டும் ஆர்வம், இலக்கியக் கூட்டங்களுக்குப் போவதிலே, இலக்கியச் சொற்பொழிவைக் கேட்பதிலே அவர்கள் காட்டுவதில்லை.

ஒவ்வோர் இனத்துக்கும் மொழி விழியைப் போன்றது. அதுவே வாழ வழியைக் காட்டுவது என்னும் உண்மை நெஞ்சத்திலே, பதிந்தாக வேண்டும். இலக்கியம் என்பது யாரோ சில புலவர்களுக்கே உரியது என்று கருதிவிடக் கூடாது.

நாட்டில் பெரும் புரட்சியை உருவாக்கிய இலக்கியங்கள் உண்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய இலக்கியங்கள் உண்டு. அடிமைத் தளையிலிருந்து நாட்டை விடுவிக்கப் படைக்கப்பட்ட இலக்கியங்கள் உண்டு. ஆண்டான்-அடிமை முறையை ஒழித்துக் கட்ட, எழுதப்பட்ட இலக்கியங்கள் உண்டு.

ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும்? நாடாள்வோரின் இலக்கணம் என்ன? ஆட்சி முறை எப்படி அமைய வேண்டும் என்பனவற்றையெல்லாம் எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய வகையில் எடுத்துச் சொல்லும் மாபெரும் இலக்கியம் நமக்குச் சொந்தமாக இருக்கின்ற திருக்குறள் அல்லவா?

என்னதான் பிறநாட்டுப் பண்பாட்டுத் தாக்கல்களுக்கு நாம் ஆட்பட்டு விட்டாலும், நமது மொழியை பண்பாட்டை, இலக்கியச் செல்வங்களை இழந்துவிட முடியாது. இழந்துவிடக் கூடாது.

'தமிழன் என்றோர் இனமுண்டு -
தனியே அவற்கோர் குணமுண்டு'

என்று நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் பாடிய கவிதை வரிகள் இன்றைய இளைய தலைமுறையினர் காதில் எப்போதும் ஒலித்துக்கொண்டே இருக்கவேண்டும்.

"பழைய இலக்கியங்கள் எல்லாம் கதைக்குதவா" என்னும் எண்ணத்தைத் தவிர்க்க வேண்டும். நீதியை, நெறியை, ஒழுக்கத்தைக் கற்பிக்க இலக்கியங்களால்தான் முடியும்.

ஒரு நாட்டின் தன்மையை அளவிட, அந்த நாட்டு இலக்கியமே அளவுகோலாக அமைகிறது. எனவே, இன்றைய இளைய தலைமுறையினர்க்குக் கொஞ்சம் இலக்கிய நெஞ்சம் தேவை. இலக்கியப் பார்வை இலக்கிய நெஞ்சத்தோடு அமைய வேண்டும். அறிவியல் பார்வை உடனடியாகப் பயன்தரக் கூடியது தான். ஆனால் இலக்கியங்களும் அறிவியல் அடிப்படையில் அமைந்து விட்டால் இன்னும் நல்லது.

அப்படிப்பட்ட இலக்கியங்களைப் படைக்க இன்றைய தலைமுறையினர் முன் வரவேண்டும். எதையும் எடுத்த எடுப்பிலே அப்பட்டமாகச் சொல்லுவது என்பது வேறு; அதையே இலக்கிய நயம்பட எடுத்துரைப்பது என்பது வேறு.

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்"

என்று அன்றைய சங்க இலக்கியப் புலவர் கணியன் பூங்குன்றனார் பாடினார். இந்த ஒரு வரி இன்று உலகம் முழுவதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

அரும் பெருங் கருத்தை உள்ளடக்கிய இந்தப் பா வரியை இந்திய நாட்டுத் தலைமையமைச்சராக விளங்கிய திருமதி. இந்திரா காந்தி அம்மையார் சோவியத்து நாட்டுக்குச் சென்றிருந்தபோது பெருமையாக எடுத்துரைத்தார். இது தமிழன் கண்ட இலக்கியமல்லவா?

இப்படிச் சங்க இலக்கியங்களிலே எத்துணை எத்துணை அறிவார்ந்த, செறிந்த கருத்துகள் பொதிந்த வரிகள் இருக்கின்றன! அவற்றையெல்லாம் இன்றைக்கு மேடையிலே எடுத்துரைப்பதோடு இளைஞர்கள் நின்றுவிடுகிறார்கள். இப்படிப்பட்ட வரிகள் இன்றைக்கு மட்டுமின்றி எந்தக் காலத்துக்கும் பயன்படக்கூடிய வைரவரிகள் நமது இலக்கியங்களில் இருக்கின்றன!



அன்றைக்குத் திருவள்ளுவர் படைத்த இலக்கியந்தானே இன்றைக்கும் நாட்டுக்கு வழி காட்டிக் கொண்டிருக்கிறது! அதைப் போல ஓர் இலக்கியத்தை, பிற்காலத்தில் வந்த தலைமுறையினரால் படைக்க முடிந்ததா என்றால் இல்லை. இன்னும் வருகிற தலைமுறையினரால் படைக்க முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏன் நம்மால் முடியாது? என்கின்ற வினாவை அறைகூவலாக இன்றைய தலைமுறையினர் எடுத்துக் கொள்ள வேண்டும். திருவள்ளுவர் அப்படிப்பட்ட இலக்கியம் படைத்தாரா, இதோ பாருங்கள், நாங்கள் ஓர் இலக்கியத்தை, காலத்துக்கேற்ற புதுமை இலக்கியத்தைப் படைத்துக் காட்டுகிறோம் என்று சொல்லக் கூடிய துடிதுடிப்பு இன்றைய தலைமுறையினருக்கு ஏற்பட வேண்டும். அப்படி ஏற்பட்டால்தான் அறிவியல் உலகத்தில், நாம் எந்த அளவுக்கு முன்னேற வேண்டும் என்று நினைக்கிறோமோ, அந்த அளவுக்கு நம் மொழியில், நம்முடைய பண்பாட்டில், நம்முடைய நாகரிகத்தில் முன்னேற நம்மால் முடியும்.

நம்முடைய தமிழ் மொழியில் பரந்து கிடக்கின்ற இலக்கியங்களில் எத்தனையோ, செய்திகள், எத்தனையோ பழமொழிகள், எத்தனையோ சீரிய கருத்துக்கள் நிறைந்து கிடக்கின்றன. ஏனோ தெரியவில்லை. நம்முடைய இளைஞர்கள் ஆனாலும் சரி, பெரியவர்களானாலும் சரி, ஒரு மேடையிலோ அல்லது ஒரு கட்டுரையிலோ, மேற்கோள் காட்ட வேண்டுமானால், பிறமொழி இலக்கியங்களிலிருந்து குறிப்பாக ஆங்கிலத்திலிருந்து இரண்டு வரிகளைத் தான் சொல்கிறார்கள். மேலை நாட்டுப் பழமொழிகளை, மேலை நாட்டுக் கவிஞர்களின் கவிதை வரிகளை எடுத்தாள்பவற்றையே பெருமையாக நினைக்கிறார்கள்.

நம்மைப் பொறுத்த வரையில்

நம்முடைய இலக்கியங்களிலே எத்துனை வரிகள் உள்ளன?

நம்முடைய திருக்குறளிலேயிருந்து இரண்டு வரிகளை எடுத்துச் சொன்னால் என்ன? நமது சங்க இலக்கியங்களான புறநானூற்றில், அகநானூற்றில் கருத்துகள் இல்லையா? சித்தர்களுடைய மொழிகள் எல்லாம் எவ்வளவு சிந்தனையை உலுக்கக் கூடியவை! அவற்றையெல்லாம் நாம் எடுத்தாண்டால் எவ்வளவு பெருமையாக இருக்கும்! இதிலே நம்முடைய இளைஞர்கள் ஈடுபாடு காட்ட வேண்டும்.

அதாவது, நம்முடைய மொழியிலே உள்ளவற்றை எடுத்துக் காட்டுகளாகக் கூறுவது என்பது சாதாரணம். மேலை நாட்டுப் பழமொழிகளைக் கூறினால் தான் மற்றவர்களுக்கு அது புதுமையாக இருக்கும் என்று அவர்களெல்லாம் நினைக்கிறார்கள் போலும்!

அப்படியல்ல; நம்முடைய மொழியில் உள்ள இலக்கியச் செல்வங்களை மேலை நாட்டினர் மொழி பெயர்த்து அதைப் பயன்படுத்துகிற அளவுக்கு இருக்கும்போது; நம்மிடையே பலர் இன்னும் பாமரர்களாக, படிக்காதவர்களாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு அது எட்டும் வகையில் நம்முடைய மொழிச் செல்வத்தை நாட்டிலேயும், வீட்டிலேயும் பயன்படுத்தினால் என்ன? அது இன்றைய தலைமுறையினர்க்கு மட்டுமல்லாது, அடுத்து வரும் தலைமுறையினர்க்கும் பயன்படும் என்பதாலே, இலக்கிய ஈடுபாடு இன்றைய தலைமுறையினர்க்கு இன்றியமையதாதது என்பதை உணர வேண்டும். நம்நாட்டுக் குடிமக்கள் நல்ல பொது மக்களாக நல்ல குடி மக்களாக உருவாக வேண்டுமானால் அதற்கு இலக்கியம் நல்லமுறையில் பயன்படுத்தபட வேண்டும். ❑

பல்லாண்டு வாழ்க!



பொங்குக பொங்கல் பொங்குக எங்கணும்
பொங்குக பொங்கல், இன்பமே எய்துக!

பொங்கற் புதுநாள் போந்தது போந்தது
எங்கணும் எவர்க்கும் இன்பமே எய்துக!

பொங்குக பொங்கல், பொங்குக பொங்கல்!
பொங்குக பொங்குக பொங்குக பாலும்!

ஒக்கலும் மக்களும் உவந்துடன் உண்க!
மக்கள் அனைவரும் மகிழ்ந்தே உண்க!

புத்துடை உடுமின் புத்தணி அணிமின்!
பத்தி கொண்டே பரமனைப் பணிமின்!

நந்தம் தமிழ்மொழி நலம்பெற் றோங்கிட
எந்தக் காலும் இன்புற வாழ்த்துக!

தண்கடல் பரப்பில் சாரும் மணலினும்
பண்புற வானில் பரவும் மீனினும்

வாழ்க அனைவரும் வாழ்கபல் லாண்டு!
வாழ்க பல்லாண்டு வளமெலாம் படைத்தே!

- பேராசிரியர் கா.நமச்சிவாயனார்

உணவு உற்பத்தியில் உன்னதச் சாதனை

கடந்த ஆட்சியில், 1995-96ல் 67.96 இலட்சம் மெட்ரிக் டன் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உயரிய வழிகாட்டுதலில், உரிய நேரத்தில் வழங்கப்பட்ட இடுபொருட்களினாலும், நவீனமயமாக்கும் உயர்தர தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்தியதாலும், 1996-97ல், 76.45 இலட்சம் மெட்ரிக் டன் உணவுப் பொருள் உற்பத்தி செய்து சாதனை படைக்கப் பட்டுள்ளது. மேலும் நடப்பு ஆண்டில் 1997-98ல், 95 இலட்சம் மெட்ரிக் டன் எனக் குறியீடு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது; தொடர் மழையால், பல மாவட்டங்களில் உற்பத்திச்சேதாரம் ஏற்பட்டிருப்பினும் கூட, 5-1-98 வரை 84.66 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் உணவு உற்பத்தி எய்தப் பட்டுள்ளது. இன்னும், சம்பா, நவரை அறுவடை முடிவுற்றதும், 95 இலட்சம் மெட்ரிக் டன் என்ற குறியீடு விஞ்சப்பட்டு, வரலாற்றுச் சாதனை நிகழ்த்தப்படும் என்பது உறுதியே.

டிசம்பர் '96ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10,05,166 விவசாயிகளின் துயர்துடைக்கும் பொருட்டு, ரூ.47,987 கோடி விளைபொருள் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

நவம்பர் '97ல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத்தொகையாக தலா ரூ.1000 வீதம் வழங்கிட ரூ.15.81 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மழைவளத்தைப் பெருக்கவும், சுற்றுப்புறச் சுகாதாரத்தைச் சீரமைக்கவும், "மக்கள் நலம் காக்கும் மழைவளத்துக்கு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம்" எனும் மகத்தான திட்டத்தின்கீழ் சாலையின் இருமருங்கிலும் 75 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.7.35 கோடி செலவில் 1875 கி.மீ. நீளத்திற்கு மரக்கன்றுகள் நடத் திட்டமிடப்பட்டு நவம்பர் '97 வரையில் ரூ.208.94 இலட்சம் செலவில் 882.06 கி.மீ.தூரத்திற்கு மரம் நடப்பட்டுள்ளது.

காவிரி டெல்டாப் பகுதிகளில், குறிப்பாக, தஞ்சை, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பாசன வாய்க்கால்களில் நீர்ப்போக்கிற்கு இடையூறாகஉள்ள காட்டாமணிச் செடியினை அகற்ற 2384 எக்டேர் பரப்பில் 2-4டி என்ற களைக்கொல்லி தெளித்து காய்ந்த இலைகளை அகற்றி எரிக்கப்பட்டது. இதற்கென ரூ.102.13 இலட்சம் செலவிடப்பட்டது.

12,000 எக்டேர் பரப்பளவில் களர், உவர் நிலச்சீர்திருத்தத்தினைத் தஞ்சை, திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் வருடத்திற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா 500 எக்டேர் வீதம் 3 வருடத்தில் 1,500 எக்டேர் நிலச் சீர்திருத்தம் செய்ய ரூ.404.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.122.62 இலட்சம் முதலாண்டில் செலவிட நிதி ஒப்பளிப்புச் செய்யப் பட்டுள்ளது.

முதல் நிலையாக மதுராந்தகம், சேலம், முசிறி, திருவாரூர் மற்றும் மேலூர் வேளாண் கோட்டங்களில் கோட்டத்திற்கு 30,000 உர அடையாள அட்டை வீதம் 1,50,000 அடையாள அட்டைகள் அச்சடித்து விநியோகிக்கப் படவுள்ளன. பின்பு படிப்படியாக பிற கோட்டங்களுக்கும், மாநிலம் தழுவிய வகையில், உரஅடையாள அட்டைகள் வழங்கப்படும்.

தர்மபுரி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உயர் வருவாய் ஈட்டும் பயிர்களைப் பயிரிட ரூ.2.3 கோடி செலவில் திட்டம்

தயாரித்துத்தர இஸ்ரேல் நாட்டின் 'தஹால்'ஆலோசனை நிறுவனத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (அரிசி) 500 உழுவை இயந்திரங்கள் ரூ.1.50 இலட்சம் செலவில் விநியோகிக்கப்பட்டது. விசை உழுவை ஒவ்வொன்றிற்கும் அரசு மானியமாக ரூ.30,000 வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித்திட்டம் ரூ.117 இலட்சத்திலும், மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் ரூ.55 இலட்சத்திலும், தேயிலை வாசனைப் பயிர் சாகுபடி ரூ.165 இலட்சத்திலும், மத்திய நிதிஉதவியில் முந்திரி, பழப்பயிர் மற்றும் வாசனைத்திரவியங்கள் சாகுபடிக்கென ரூ.108 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

2½ இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடையும் வகையில், குறைந்தபட்ச விலையாக 1 டன் கரும்பிற்கு ரூ.660 எனவும், சர்க்கரை ஆலைகளால் வழங்கப்படும் ரகமானியம், வாகன வாடகை மானியம் ரூ.35-யையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்குக் குறைந்தபட்சம் ரூ.695-ம், அதிகபட்சம் ரூ.881-ம் ஆகச் சராசரியாக ரூ.765-ம் கிடைத்திட வழிவகுத்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

காய்கறிகள், காளான், மலர்களைப் பதனிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வழிவகுத்திடும் வண்ணம், தேசிய ஊரக வளர்ச்சி வேளாண் வங்கியுடன் தமிழ்நாடு அரசும் இணைந்து 'உயர் தொழில்நுட்ப நிதி உதவி நிறுவனம்' புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது.

* * * * * * * * * * * *

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலன் காக்கும் அரசு

- சமூக நீதியின் காவல் அரணாகத் திகழும் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரிய முயற்சியால் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 69% ஒதுக்கீடு தொடர்ந்து, நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென 1996-97ல் ரூ.64.32 கோடி ஒதுக்கப்பட்டது. இவ்வாண்டில் ரூ.80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- மூன்று நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், மூன்று உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டு, 107 புதிய விடுதிகள் துவங்கப்பட்டுள்ளன. விடுதிகளில் உணவுக் கட்டணம் ஒரு மாணவனுக்கு ரூ.135லிருந்து ரூ.180 ஆக உயர்த்தவும், கல்லூரி தொழிற்பயிற்சி விடுதிகளில் உணவுக்கட்டணம் ஒரு மாணவனுக்கு ரூ.300 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன. விடுதிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பை ரூ.15,000-ஐ, ரூ.50,000 ஆக உயர்த்தியும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.
- மாணவர்கள் நலனுக்கென பல்வேறு படிப்புதவித் தொகைகள், இலவசக் கல்வித் திட்டங்கள் போன்ற சலுகைகள் பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000-ஐ, ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டது. கணினிப்பயிற்சியில் மாணவர்கள் எண்ணிக்கை 175லிருந்து 1000 ஆகவும், கனரக வாகனம் ஓட்டுநர் பயிற்சியில் மாணவர்கள் எண்ணிக்கை 250லிருந்து 2000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதலில் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி, இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2 கோடியை ரூ.10 கோடியாக உயர்த்தியும், கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் சொந்த வீடில்லா பிற்படுத்தப்பட்டோர் மற்றும் முன்னேறிய வகுப்பினருக்கும் இலவச மனைப்பட்டாக்கள் வழங்க ரூ.8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- உல்மா ஓய்வூதியம் 3.9.96 முதல் மாதமொன்றுக்கு ரூ.400லிருந்து ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுமரபினர் நலனுக்கென 1996-97ல் ரூ.64.32 கோடி செலவிடப்பட்டது. 1997-98ல், ரூ.80 கோடி பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலனுக்கெனச் செலவிடப்படுகிறது.

* * * * * * * * * * * *

- தமிழகத்தில் சுமார் 22,699 சதுர கிலோ மீட்டர் பரப்பில் வனவளம் நிறைந்துள்ளது. இது மொத்த தமிழக நிலப்பரப்பில் 17.45 விழுக்காடாகும்.
- வனவளம் பெருக்கிடும் வகையில் கடந்த ஆண்டில் வனப்பணித் திட்டங்கள் ரூ.6110.42 இலட்சத்தில், 51456 எக்டோரில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- **நீர்ப்பிடிப்புப்பகுதி மேம்படுத்துதல்**

  தமிழகத்தில் 32 ஆறுகள், 11 பெரும் நீர்த்தேக்கங்கள், 2679 கால்வாய்கள், 38863 ஏரி குளங்கள் உள்ளன. இவைகளின் பெரும்பாலான நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வனங்களில் உள்ளன. நீர் வளத்தினை நிலப்பகுதிகளில் வளப்படுத்தவும், நில வளத்தினைச் சீராக ஒழுங்குபடுத்தவும், மலை மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை திட்டத்தின் மூலமும், நிலவளப் பாதுகாப்பு மேட்டூர் ஸ்டான்லி மற்றும் வைகை நீர்பிடிப்புத் திட்டங்கள் மூலமும் 5,281 எக்டர் நிலப்பரப்பில் ரூ.716.57 இலட்சத்தில் இத்திட்டம் செயல்முறைப் படுத்தப்பட்டுள்ளது.
- **உற்பத்தி வனவியல்**

  உற்பத்தி வனவியல் மூலம் கிராம மக்களின் தேவையினை வனவளங்கள் மூலம் பூர்த்தி செய்தலும் முக்கிய நோக்கமாகும். இப்பணிகள் பல்வேறு திட்டங்கள் மூலம் 17,405 எக்டேர் பரப்பில் ரூ.1104.41 இலட்சத்தில் செயல் முறைப்படுத்தப்பட்டுள்ளது.
- **சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

  இத்திட்டங்கள் மூலம் தரிசு நிலங்களிலும் மரங்களின் அளவினை அதிகப்படுத்துவதற்கு தடிமரங்கள், மென்மரங்கள் மற்றும் இதர சிறுவனப் பொருட்கள் தேவைகளை பூர்த்தி செய்தலும் இதன் முக்கிய நோக்கமாகும். இத்திட்ட காலத்தில் 6,885 எக்டேரில் ரூ.2241.71 இலட்சத்தில் இப்பணி செயல்முறைப்படுத்தப் பட்டுள்ளது.
- **வன ஒருங்கிணைப்பு மற்றும் வனப்பாதுகாப்பு .**

  வன ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் ஒதுக்குக்காடுகளை அளவை செய்து எல்லைக்கற்கள் ரூ.8.85 இலட்சத்தில் நடப்பட்டுள்ளன. வனப்பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் அட்டவணை மரங்கள் உள்ளிட்ட மதிப்புமிக்க வனப்பொருட்கள் சமுதாய எதிரிகளால் கள்ளத்தனமாக கடத்தப்படுவதைத் தடுக்கவும் எதிர்த்து போராடவும் அரசுத் துறையில் தகுந்த உள்ளமைப்பு மற்றும் நவீன சாதனங்களைக் கொண்டு வலுப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்ட காலத்தில் ரூ.105.07 இலட்சங்களில் இப்பணி செயல்முறைப் படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல் முறைப்படுத்தப்பட்டு, இவ்வாண்டில் ரூபாய் ரூ.10.59 கோடியில் 21,545 எக்டேர் நிலப்பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- **வன ஆராய்ச்சி**

  முன்னர் உருவாக்கப்பட்ட வன நுட்பவியலில் தற்போதைய மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப நடைமுறைகாலத்திற்கேற்பவும்,,வருங்காலத் தேவைகளையும் நிறைவு செய்யும் வண்ணம் மேம்பாட்டுத் திட்டங்களையும் நல்முகப் படுத்துதலும் ஆராய்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணியானது ரூ.126.56 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- **வன உயிரினப் பாதுகாப்புத் திட்டங்கள்**

  தமிழ்நாடு வளமிக்க உயிரினப் பரவல்களைக் கொண்டிருக்கிறது. மாநிலத்தின் மொத்த பரப்பளவில் 2,833 சதுர கி.மீ. அல்லது 12.6 விழுக்காட்டில் 5 தேசிய பூங்காக்கள், 6 வன உயிரின சரணாலயங்கள் மற்றும் 9 பறவைகள் சரணாலயங்கள் உள்ளடக்கிய வன உயிரினப் பாதுகாப்புப் பகுதியாகும். இவைகளைப் பராமரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் ரூ.289.17 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது.
- பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் அடிப்படை உள்ளமைப்பு வசதிகள் வழங்கவும் பல பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. ரூ.125.73 இலட்சம் செலவில் 418 எக்டேர் பரப்பில் பழங்குடியினர் மேம்பாடு திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. ❑

பொன்விழா ஆண்டில் புகழ்மிகு சாதனைகள்

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழாவை 1997 ஆகஸ்டுத் திங்கள் முதல் 1998 ஆகஸ்டுத் திங்கள் முடிய ஓராண்டுக் காலத்திற்கு மாநிலம் முழுவதும் சிறப்பான முறையில் கொண்டாடிடும் வகையில் **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தலைமையில், 32 உறுப்பினர்களடங்கிய உயர் மட்டக் குழுவும், 6 துணைக் குழுக்களும், ஒரு உயர்நிலை செயற்பாட்டுக் குழுவும் அமைக்கப்பட்டன. இதே போன்று மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், அலுவல் மற்றும் அலுவல் பற்றற்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களும் அமைக்கப்பட்டன.

தமிழகம் முழுவதும் உயர்மட்டக் குழுவின் அறிவுரை மற்றும் துணைக் குழுக்களின் பரிந்துரைகளின்படி பல்வேறு நிகழ்ச்சிகளும் - விழாக்களும் நடத்தப்பட்டன.

மேதகு ஆளுநர் நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி அவர்கள், 15.7.97 அன்று, சென்னை ஆளுநர் மாளிகையில் தேசபக்திப் பாடல்கள் கொண்ட ஒலி நாடாக்களை வெளியிட்டார்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து வேதாரண்யம் வரை சென்ற **‘உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நினைவு கூரும் யாத்திரை’**யை, 8.8.97 அன்று, **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** தொடங்கி வைத்தார்.

‘சுதந்திரத் திருநாள்
பொன்விழா ஆண்டு’
இது என்பதனால்
இந்திய விடுதலைக்காக
அல்லல் பல ஏற்றோர்...
உயிர்த்தியாகம் புரிந்தோர்...
உற்றார் உறவினரை
மட்டுமன்றி
உடைமைகளைப்
பறிகொடுத்தோர்
போன்றோரைப்
பெருமிதத்தோடு
பெருமைப்படுத்தி
வருபவர்
முதலமைச்சர் கலைஞர்

மாண்புமிகு கல்வியமைச்சர் **பேராசிரியர் க. அன்பழகன்** அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் **திரு வ. முல்லைவேந்தன்** அவர்கள் முன்னிலையிலும் **‘வெள்ளையனே வெளியேறு’** முழக்கம் எழுந்த நாள் நினைவுப் பேரணி நடத்தப்பட்டது. இதில் 5,000 மாணவ, மாணவிகள் பங்கு பெற்றனர். 9.8.97 அன்று, ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டத்தில் பங்கேற்ற தியாகிகள் சிறப்பிக்கப்பட்டனர். தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி மாண்புமிகு அமைச்சர்கள் முன்னிலையில் அனைவராலும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

11.8.97 அன்று, புதுடெல்லியில் பேரணியில் கலந்துகொள்வதற்காகச் சென்ற தியாகிகள், கதராடை மற்றும் ரூ.1,000 அடங்கிய பொற்கிழியும் **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் வழங்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டனர்; அன்று இரவு, சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து மாண்புமிகு அமைச்சர்களால் வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

சுதந்திரத்திருநாள் பொன்விழாத் தொடக்க விழா

14.8.97 அன்று, மாநிலம் முழுவதும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பொன்விழாத் தொடக்க விழா நிகழ்ச்சிகள் **மேதகு ஆளுநர் நீதிபதி செல்வி மீ.பாத்திமா பீவி** அவர்களால் நேரு விளையாட்டரங்கில் தொடங்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர், **பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களும், மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர், **திரு.வ.முல்லைவேந்தன்** அவர்களும், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் **திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத் துணைத் தலைவர் **திரு.ப. சிவந்தி ஆதித்தன்** அவர்களும் கலந்துகொண்டனர். நாதசுரம், தேசியப் பாடல்கள், கிராமியப் பாடல்கள் மற்றும் பிரபல திரைப்பட இசையமைப்பாளர்கள் வழங்கிய இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர்.

சுதந்திரத் திருநாள் பொன்விழா

சுதந்திரத் திருநாள் 15.8.97 அன்று, காலை - சென்னை கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்துச் சுதந்திரப் போராட்டத் தியாகிகளைச் சிறப்பித்தார். மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து ஆங்காங்குள்ள தியாகிகளை அரசின் சார்பில் சிறப்பித்தனர். மேலும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் சார்பில் ‘கண்காட்சி’ - தலைமைச் செயலக வளாகத்தில் - செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திரு. எஸ்.இராஜரெத்தினம், இ.ஆ.ப., அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

சுதந்திரத் திருநாள் அன்று மாலை மெரினா கடற்கரையில் **மேதகு ஆளுநர், நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி** அவர்கள் தலைமையிலும், **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் முன்னிலையிலும், 5,000 மாணவ, மாணவியர் பங்குகொண்ட கலை நிகழ்ச்சிகள், தென் மண்டல கலாச்சார மையத்தால் நடத்தப்பட்டன.

தீண்டாமை ஒழிப்பு வாரம்

தமிழகம் முழுவதும் 15.8.97 முதல் 31.8.97 வரை **'தீண்டாமை ஒழிப்பு'** வாரங்களாக அனுசரிக்கப்பட்டன. இந்நாட்களில் ஆதிதிராவிடர் மக்கள் வாழும் பகுதிகளிலும், ஆலயங்களிலும் **சமபந்தி விருந்துகள்** நடத்தப்பட்டன.

இந்நாட்களில், சென்னையில் பல்வேறு அரங்குகளில், சென்னை மாநகராட்சியின் சார்பில், வணக்கத்திற்குரிய மாநகர மேயர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் அறிஞர் பெருமக்கள், தமிழ்ச்சான்றோர்கள் பங்கேற்ற கவியரங்குகள், கருத்தரங்குகள் நடைபெற்றன.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 19.8.97 அன்று, ரிப்பன் மாளிகையில் மாநகராட்சியின் சார்பில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் பொன்விழா நிகழ்ச்சியில், பொன்விழா நினைவுத்தூணுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் **திரு.கோ.சி.மணி** அவர்களும், வணக்கத்திற்குரிய மாநகர மேயர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களும் விழாவில் பங்கேற்றனர்.

'சுதந்திரப் போராட்டத்தில் தகவல் தொடர்பு சாதனங்களின் பங்கு' என்ற தலைப்பில் கருத்தரங்கம், மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் **திரு.வ. முல்லைவேந்தன்** அவர்கள் தலைமையில் சென்னைப் பல்கலைக் கழக செனட் மண்டபத்தில் 25.8.97 அன்று நடைபெற்றது. சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற மூத்த பத்திரிகையாளர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

29.8.97 & 30.8.97 அன்று, 'சுதந்திரத் திருநாள் பொன்விழா விளையாட்டுப் போட்டிகள்' மதுரையில், விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்டன.

சுதந்திரத் திருநாள் பொன்விழா - மதுரையில் 'தீண்டாமை ஒழிப்பு மாநாடு'

31.8.97 அன்று, காலையில் - திருப்பரங்குன்றிலிருந்து மதுரை-புதூர் வரையில் 15 கி.மீ. தூரத்திற்கு, நல்லிணக்கத்தை வலியுறுத்தி மாபெரும் **'மனிதச் சங்கிலி'** நடைபெற்றது. **மாண்புமிகு முதலமைச்சர்** 5 இடங்களில் மாணவ - மாணவியருடன் **'மனிதச்சங்கிலி'**யில் பங்கேற்றார். அன்று மதியம் - அருள்மிகு **மீனாட்சி** - சுந்தரேசுவரர் திருக்கோயில், மேலமாசி வீதியிலுள்ள கிறித்துவத் தேவாலயம், கோரிப்பாளையம் மசூதி ஆகிய 3 இடங்களிலும் **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும், சமயப்பெரியோர்களும் கலந்து கொண்ட **'சமபந்தி விருந்துகள்'** நடைபெற்றன. அன்று மாலை - சுதந்திரப் **போராட்டத் தியாகி கக்கன் சிலையை முதலமைச்சர் கலைஞர்** மதுரையில் திறந்து வைத்தார்.

அதன் பின்னர், **தீண்டாமை ஒழிப்பு மாநாடு** மதுரை தமுக்கம் மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும், சமயச் சான்றோர்களும் கலந்து கொண்டனர்.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவையொட்டி, மதுரையில் நடந்த 'தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில்', "ஆதிதிராவிடர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்களை நிரப்பப்படுவதை முறையாகக் **'கண்காணிக்கக் குழு'** ஒன்று அமைக்கப்படும் என்றும், கோட்ட அளவில், நல்லிணக்கக் குழுக்கள், தமிழகம் முழுவதும் அமைக்கப்படுமென்றும், அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித்திட்டத்தில் வழங்கப்பட்டு வந்த ரூ.10,000 - நிதிஉதவியை, மணமகனோ அல்லது மணமகளோ ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால் ரூ.20,000ஆக உயர்த்தி வழங்கப்படும்" என்றும் **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்தார்.

அரவிந்தரின் 125வது பிறந்த தினம் சென்னை கலைவாணர் அரங்கில் 19-12-97 அன்று கொண்டாடப்பட்டது. மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு **வ. முல்லைவேந்தன்** அவர்களும், பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் திரு.வெங்கட சுப்பிரமணியம், பத்திரிகையாளர் திரு.மாலன் ஆகியோரும் பங்கேற்றனர்.

26.1.98 அன்று நடைபெற்ற குடியரசு நாள் அலங்கார அணி வகுப்பில் சுதந்திரப் பொன்விழா நிகழ்ச்சிகள் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கையை விளக்கும் அலங்கார ஊர்திகள் பவனி வந்தன. இந்நிகழ்ச்சியில், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் 5 சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்குக் கதராடை அணிவித்துச் சிறப்பித்தார்கள். இதுபோன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐந்து தியாகிகளுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறப்புச் செய்து கௌரவித்தனர்.

உப்புச்சத்தியாக்கிரகத் தியாகி வேதாரண்யம் வேதரத்தினம் பிள்ளையின் நினைவாக தபால் தலை ஒன்று வெளியிட வேண்டுமென்று **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரது தபால் தலையை வெளியிட இந்திய அரசு ஒப்புதல் தெரிவித்துள்ளது.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவினையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ள முத்தான மூன்று திட்டங்கள்:

★ **சமத்துவபுரம்:**

ஆதிதிராவிடர் உட்பட அனைத்து சமூகத்தினரும் நல்லிணக்கத்தோடு ஒரே குடியிருப்பில் ஒற்றுமையாக வாழும் வகையில் 'சமத்துவபுரம்' என்ற பெயரில் 100 வீடுகளைக் கொண்ட 50 குடியிருப்புகள் தமிழகம் முழுவதும் உருவாக்கப்படும். இதில் 40 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கும், 60 வீடுகள் பிற சமூகத்தினருக்கும் ஒதுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு கட்டுவதற்காக 5 செண்ட் நிலம் இலவசமாக வழங்கப்படுவதுடன், ரூ.35,000 முழு மானியமாகவும், குறைந்த வட்டியில் கடனுதவியும் வழங்கப்படும். குடிநீர் வசதி, சாலை வசதி, மின் வசதி, மருத்துவமனை, பள்ளி, நியாயவிலைக் கடை, சமுதாய நலக் கூடம் (எல்லோருக்கும் பொதுவான கூடம்), எல்லா மதத்தினர்க்கும் பொதுவான இடுகாடு மற்றும் சுடுகாடு ஆகிய அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.

★ மூன்றாண்டு சிறப்புத் திட்டத்தின் கீழ் 1785 மலைப்பகுதியைச் சார்ந்த கிராமங்களுக்கும் - குக்கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

★ நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் மிகவும் பின்தங்கியுள்ள ஒரு குடிசைப் பகுதியைத் தேர்வு செய்து, அவற்றை அனைத்து அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்த, தேசிய குடிசைப் பகுதி வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.38.46 கோடி செலவிடப்படும்.

தியாகிகளுக்கு உதவித்தொகை உயர்வு :

சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டினையொட்டி, நாடு சுதந்திரமடைவதற்காக ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து அறவழியில் போராடிச் சிறையேகி, இன்னல்களை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்ட தியாகிகளைப் போற்றிடும் வகையில், மத்திய அரசு ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு மாநில அரசின் பங்காக வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத்தை ரூ.250லிருந்து ரூ.500 ஆக உயர்த்தி வழங்கவும், மாநில அரசின் ஓய்வூதியம் பெற்றுவந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் ஓய்வூதியத் தொகையான ரூ.1500-ஐ ரூ.3000 ஆகவும், மாநில அரசு தொடர் ஓய்வூதியம் பெறுவோர்களது ஓய்வூதியத் தொகையினை ரூ. 750லிருந்து ரூ.1500 ஆக இரண்டுமடங்காக உயர்த்தியும், மத்திய அரசுக்கு இணையாகத் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கவும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். இதே போன்று, மருது பாண்டிய சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர நிதிஉதவித்

தொகையான ரூ.150/-ஐ மாதம் ரூ.500 ஆக உயர்த்தியும், வீரபாண்டிய கட்டப்பொம்மன் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையான ரூ.300ஐ, மாதம் ரூ.500 ஆக உயர்த்தியும் வழங்கப்படுகிறது. வீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு **ஒட்டப்பிடாரம் - கவர்னகிரியில்** ரூ.1 கோடி மதிப்பீட்டில் **'புதிய நகரியம்'** ஒன்று அமைக்கப்படுகிறது.

தியாக சீலர்களுக்கு நினைவுச்சின்னங்கள் - சிலைகள்:

நாட்டு நலனுக்கு நற்பணியாற்றிய தலைவர்களைப் போற்றிச் சிறப்பித்திடும் வகையில், **நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ்** திருவுருவச்சிலை, **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் 15-12-97 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சென்னையில் போர் நினைவுச் சின்னத்தின் அருகில் **'பொன் விழா நினைவுச் சின்னம்'** **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் 31-12-97 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரிப்பன் மாளிகையில் மாநகராட்சியின் சார்பில் பொன்விழா நினைவுத்தூண் ஒன்று அமைக்கப்படுகிறது.

பெருந்தலைவர் காமராசர் நினைவில்ல முகப்பில் பெருந்தலைவர் காமராசரின் மார்பளவுச்சிலையும், **பாரத ரத்னா எம்.ஜி.ஆர் சமாதியில் எம்.ஜி.ஆரின் மார்பளவுச் சிலையும்** அரசின் சார்பில் அமைக்கப்பட்டு **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

சென்னை, கிண்டியில் பக்தவச்சலம் நினைவில்லம், நாகர்கோவிலில் தோழர் ப. ஜீவானந்தம் நினைவில்லம், மதுரை - திருமங்கலத்தில் தியாகி விசுவநாததாஸ் நினைவில்லம், நெல்கட்டும்செவலில் பூலித்தேவன் நினைவில்லம் ஆகியவை அரசால் அமைக்கப்படுகின்றன. திருவல்லிக்கேணியில் **பாரதியார் வாழ்ந்த இல்லம்** அரசால் புதுப்பிக்கப்பட்டுள்ளது; எட்டயபுரத்தில் **பாரதியார் பிறந்த இல்லம்** புதுப்பிக்கப்படுகிறது. சென்னையில், தியாகிகள் மணிமண்டபம் ரூ.30 இலட்சம் செலவில் உருவாக்கப்படுமென **முதலமைச்சர் கலைஞர்** அறிவித்துள்ளார்.

216691

* * *

செய்திப்படம் உருவாக்கிய தமிழர்

இந்தியாவில் முதன்முதலில் செய்திப்படம் உருவாக்கியவர் என்னும் பெருமையினைப் பெற்றிருப்பவர் ஒரு தமிழர். 'உலகம் சுற்றிய தமிழர்' என்னும் பட்டம் பெற்ற ஏ.கே.செட்டியார் தான். அவருடன் இணைந்து இப்பணியில் ஈடுபட்டவர் பி.வி.பதி. இவர்கள் இருவரும் சேர்ந்து உருவாக்கிய படத்திற்குப் பெயர் 'காந்தியின் வாழ்க்கையும் பண்பும்' என்பது தான். ஏ.கே.செட்டியார் 'குமரி மலர்' என்றோர் பத்திரிகையும் நடத்தி வந்தார். காந்தியார் படத்தை அவர் பிடித்த விதம், அதற்காகப் பட்ட பாடு பற்றி அவர் எழுதிய ஒரு கட்டுரை மிகவும் பிரசித்தம்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி: 568926, 568927, 564906



அச்சாக அப்பாவைப் போல்...

உங்கள் மகனாக அவன் பிறந்தபோது, உறவினர் "அச்சாக அப்பாவைப்போல்" என்றார்கள். உங்கள் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அவன் தவழ்ந்த போது, தளர் நடை பயின்றபோது, மழலை பேசியபோது நீங்களும் உங்கள் மனைவியும் உலகையே மறந்தீர்கள். உங்கள் உலகமாக அவனை நினைத்தீர்கள்.

உங்கள் மகனைப் பற்றிய கனவுகளால் மனதை நிறைத்துக் கொண்டீர்கள்.

ஆனாலும்.... உங்கள் வாழ்வின் உயிர்த்துடிப்பான உங்கள் மகனை மறந்து, சில நிமிடத் தடுமாற்றங்களால் தகாத உறவுகளைத் தேடிப்போவது நியாயம்தானா? எய்ட்ஸ் என்னும் கொடிய நோயை விலை கொடுத்து வாங்குவது தேவைதானா?

எங்கோ சுகம் தேடுமுன்
ஒரு நொடி சிந்தியுங்கள்

ஆணுறை - குடும்ப நலம் காக்கும்.
எய்ட்ஸ் பயம் போக்கும்.

தமிழ்நாடு எய்ட்ஸ்
கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600 008.
தொலைபேசி: 825 5467/825 5261/825 4917.
24 மணி நேர ஹாட்லைன்: 825 6882/825 6864

SASI-163-97



பெரியார் பல்கலைக்கழகம் · சேலம்

பேரறிஞர் அண்ணா
சிலை அமைப்பு
[illegible] புது [illegible]
நாள்: 3-2-1998

தமிழரசு

பிப்ரவரி 1-15, 1998 ரூ.3

Licence [illegible]

◆

தூய
பட்டு

தூய
சரிகை

◆

◆

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

◆

கோ-ஆப்டெக்ஸ்

"கலையுலகத்திற்குத் தமிழக அரசு தொடர்ந்து பாடுபடும்!"

திரைப்பட விருது வழங்கும் விழாவில் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

*1996 ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்-நடிகையர் மற்றும் கலைத்துறை வித்தகர்களுக்கு விருதுகளை வழங்கி **முதலமைச்சர் கலைஞர்** உரையாற்றியதாவது:*

தேர்தல் வந்தால் அதற்கு முன்பு இதுபோன்ற திரைப்பட விருது வழங்குகின்ற விழா வருகிறதென்று பஞ்சு அருணாசலம் சொன்னார். அது உண்மையல்ல. நாங்கள் விருது வழங்குகின்ற விழா வைத்தாலே தேர்தல் வந்துவிடுகிறது. அதுதான் உண்மை.

இந்த விருதுகள் வழங்குவதற்காகப் படங்கள் கடந்த ஐந்தாறு மாத காலமாக நீதியரசர் கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே பார்வையிடப்பட்டு, பரிசுகள் எல்லாம் யார் யாருக்கு என்று வகுக்கப்பட்டு - அந்தப் பட்டியல் எல்லாம் தயாரிக்கப்பட்டு - வெளியிடப்படுகின்ற நேரத்திலேதான் தேர்தல் அறிவிப்பு வந்தது. இதுவும் ஒரு தேர்தல் தானே ? விருதுகள் யார் யாருக்கு வழங்கப்படுவது என்று தேர்ந்தெடுப்பதும் ஒரு தேர்தல்தானே ? அந்தத் தேர்தலும் இந்தத் தேர்தலும் ஒட்டி வந்திருக்கின்றன.

அந்தத் தேர்தலை முன்னிட்டு இந்தத் திரைப்பட விருது வழங்கும் விழா நடைபெறவில்லை. அது தேர்தலுக்குப் பயன்படக்கூடாது என்பதற்காகத்தான் தேர்தல் ஆணையத்தினுடைய விருப்பப்படி–அல்லது உத்தரவுப்படி இன்றைக்கு வழங்கப்பட வேண்டிய எம்.ஜி.ஆர். விருது வழங்கப்படவில்லை. ஏனென்றால் தேர்தலிலே வேட்பாளராக நிற்கின்ற ஒரு அரசியல்வாதிக்கு அரசு விழாவிலே விருது வழங்கக் கூடாது என்று தேர்தல் ஆணையம் விதி வகுத்திருக்கின்ற காரணத்தால் - எம்.ஜி.ஆர். விருது யாருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதோ அவர் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெயரைச் சொல்வது கூட ஒருவேளை தேர்தல் விதிமுறைக்கு விரோதமாக இருக்குமோ என்பதால்தான் அரசியல் நாகரிகத்தோடு பெயரையும் சொல்லாமல் விடுகிறேன்.

இந்தியன் படத்திற்கு முதல் பரிசு

சிறந்த படங்கள் என்ற வரிசையிலே "இந்தியன்" படம் முதல் பரிசைப் பெற்றிருக்கிறது. நான் அந்தப் படத்தைப் பார்த்தேன். தம்பி கமல் அவர்கள் அதனைப் பார்க்குமாறு எனக்கு அன்புக் கட்டளை பிறப்பித்தார். படத்தைப் பார்த்தேன். அந்தப் படத்தோடு ஒன்றிப் போகின்ற - மெய்மறந்த நிலைக்கு ஆளானேன். அந்தப் படம் முதல் பரிசைப் பெற்றிருப்பதில் வியப்பு ஏதும் இல்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

"காதல் கோட்டை" நான் பார்க்கவில்லை. வயது 74 - அதனால் பார்க்கவில்லை. அந்தப் படம் இரண்டாவது பரிசு பெற்றிருக்கின்றது. பாராட்டுகிறேன். "புருஷன் பொண்டாட்டி" மூன்றாவது பரிசைப் பெற்றிருக்கின்றது.

கலைஞானி கமல் - விஜய்காந்துக்கு விருது

"கருவேலம்பூக்கள்" சிறப்புப் பரிசு பெற்றிருக்கின்றது. பெண்களைப் பற்றிய சிறந்த கதை என்பதற்காக மற்றொரு சிறப்புப் பரிசை "கோகுலத்தில் சீதை" என்ற திரைப்படம் பெற்றிருக்கின்றது.

சிறந்த நடிகர் என்பதற்கான விருது கலைஞானி கமல் அவர்களுக்குக் கிடைத்திருப்பதும் ஆச்சரியமான ஒன்றல்ல.

அதைப்போலச் சிறந்த நடிகருக்கான சிறப்புப் பரிசு தம்பி விஜய்காந்துக்குக் கிடைத்திருப்பதும் ஆச்சரியமான ஒன்றல்ல.

திரைப்பட இயக்குநர்களின் புரட்சிகரமான படங்களை எதற்கும் துணிந்து தணிக்கைக்குப் பயப்படாமல், தணிக்கையின் காரணமாகவே தடைப்படுத்தப்பட்டாலும் பரவாயில்லை என்ற இலட்சிய நோக்கோடு படம் தயாரிக்கின்ற - இயக்குகின்ற தம்பி ஆர்.கே.செல்வமணி திரைப்பட இயக்குநர்களுக்கு வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்த ராஜா சாண்டோ விருதினைப் பெற்றிருக்கிறார்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல - பஞ்சு அருணாசலம், கவிஞர் கண்ணதாசன் விருதினைப் பெற்றிருக்கிறார்.

அண்ணா விருது தம்பி லியாகத் அலிகானுக்குக் கிடைத்திருக்கிறது. அவர் எழுத்தாளர் என்ற முறையிலே அந்த விருதினைப் பெற்றிருக்கிறார். நானும் ஒரு எழுத்தாளன் என்ற முறையிலே அவர் இந்த விருதினைப் பெற்றதற்காக - பெருமையடைகிறேன்.

நகைச்சுவை நடிகர் சார்லி -
இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான்

தம்பி சார்லி, நகைச்சுவை எப்படி இருக்கவேண்டும், நகைச்சுவையோடு எப்படி கருத்துக்களை குழைத்துத் தர வேண்டும் என்பதற்கான இலக்கணமாகத் திகழ்ந்த மறைந்த கலைவாணர்-யாருடைய பெயரால் இந்த அரங்கம் அமைந்திருக்கின்றதோ அந்தப் பெயருக்குச் சொந்தக் காரரான கலைவாணர் விருதினைப் பெற்றிருக்கிறார்.

தமிழகத்திலே மாத்திரமல்லாமல், இந்தியத் திருநாட்டிலே மாத்திரமல்லாமல், அனைத்துலக நாடுகளிலும் இசை வெள்ளம் பாய்ச்சிக் கொண்டிருக்கின்ற தம்பி ஏ.ஆர்.ரகுமான் அவர்களுக்கு சிறந்த இசை அமைப்பாளர் என்கின்ற விருது கிடைத்திருப்பது பற்றி உங்களோடு சேர்ந்து நானும் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த இயக்குநராக அகத்தியன் விருது பெற்றிருக்கிறார். நான் கேள்விப்பட்டேன் - அவருடைய இயற்பெயர் கருணாநிதி என்பதாக. அவர் ஒருவேளை இரண்டாவது கருணாநிதி வேண்டாம் என்பதற்காகப் பெயரை மாற்றிக் கொண்டாரோ என்னவோ தெரியாது. அவர் சிறந்த இயக்குநர் என்பதற்கான விருதினைப் பெற்றிருக்கிறார்.

சிறந்த உரையாடல் ஆசிரியர் விருதினை விக்ரமன் பெற்றிருக்கிறார். அவருடைய உரையாடல்கள் பலவற்றை நான் சுவைத்து மகிழ்ந்தவன் என்ற முறையில், அவருக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறந்த நடிகை சுருதி - சிறப்புப் பரிசு தேவயானி

சிறந்த நடிகையாக செல்வி சுருதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறந்த நடிகை என்பதற்கான சிறப்புப் பரிசை செல்வி தேவயானி பெற்றிருக்கின்றார். அவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த கதாசிரியர் என்பதற்கான விருதை களஞ்சியம் பெற்றிருக்கிறார். அவருக்கு என் வாழ்த்தும் பாராட்டும் உரியதாகுக.

திரைப்படங்களிலே நல்ல பாடல்கள் எழுதியவர் என்பதற்காகத் தம்பி பிறைசூடன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். என்னுடைய வாழ்த்துக்கள்.

சிறந்த வில்லன் நடிகர் பிரகாஷ்ராஜ் - அவர் இங்கே விருது வாங்கும்போது இந்த அரங்கத்திலே ஒரு ஆனந்தம் - ஒரு மகிழ்ச்சி - ஒரு குதூகலம். காரணம் எனக்குத் தெரியும். எங்கள் இருவருக்கும் தெரியும். ஆம், "இருவரு"க்குத் தெரியும்.

சிறந்த நகைச்சுவை நடிகர் வடிவேலு

சிறந்த நகைச்சுவை நடிகராக வடிவேலு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். வடிவேலு நகைச்சுவையாக நடிக்கத் தேவையில்லை. வந்து நின்றாலே போதும் - நகைச்சுவை தானாகவே கிடைக்கும். ஒவ்வொரு அசைவிலும் நகைச்சுவையை வெளிப்படுத்தக் கூடிய நல்ல நடிகர். அவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரைப்பட உலகத்தில் வெற்றி என்பது அதிலே பங்கு பெறுகிற ஒருவரால் மாத்திரம் கிடைத்து விடுவதல்ல. ஒரு இயக்குநராலோ அல்லது ஒரு நடிகராலோ, ஒரு நடிகையாலோ, அல்லது ஒரு வசனகர்த்தாவாலோ அல்லது ஒரு இசை அமைப்பாளராலோ அல்லது ஒரு பின்னணிப் பாடகராலோ யாராலும் தனிப்பட்ட ஒருவரால் ஒரு வெற்றியைப் பெற்றுவிட முடியாது.

> சுதந்திரம் - விடுதலை என்றால், சட்ட சம்பந்தமான சொற்களின் மாற்றம் என்றல்ல வாலிபன் எண்ணுவது. புதிய நிலை - புது அழகு - புது உருவம் - புதிய மகிழ்ச்சி - நாடு புதுக்கோலம் கொள்வது என்றே கருதுகிறான்! உண்மையும் அதுதான்!
>
> - அறிஞர் அண்ணா

உதாரணமாக, ஒரு சிலையை ஒரு சிற்பி வடிப்பதற்கு ஒருவரே போதும். அந்தச் சிற்பிக்கு ஒரு உளி; ஒரு கல் இருந்தால் போதும் - ஒரு சிலையை அந்தச் சிற்பி வடிவமைத்துக் கொடுக்க முடியும். அதுபோல ஒரு ஓவியன் கொஞ்சம் சாந்து, வண்ணம், தூரிகை மாத்திரம் இருந்தால் போதும் - ஒரு ஓவியத்தைத் தீட்டித் தர முடியும். ஆனால், திரைப்படம் என்பது பலருடைய முயற்சியினால், பலருடைய உழைப்பினால் வெளிவர வேண்டியது; வெற்றியினை வழங்கவேண்டியது. அப்படிப்பட்ட அந்தப் பெரும் முயற்சியிலே எல்லோரும் கூடி ஒன்றாக இணைந்து ஒத்துழைப்பு தந்தால்தான் ஒப்பற்ற வெற்றியைப் பெற முடியும் என்பதை அனுபவ ரீதியாக நாம் பெற்றுவருகிறோம்.

எனது வீடு

அந்த வகையிலே திரைப்படத் துறையிலே இருக்கின்ற உங்களையெல்லாம் இந்த மண்டபத்திலே காணுகின்ற நேரத்தில் எனக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சி, தம்பி கமல் குறிப்பிட்டதைப் போல் - நான் இருந்த வீடு என்று கமல் சொன்னார் - நான் இருக்கின்ற வீடும்தான் - ஏனென்றால் அதற்குள் எனக்குக் கலையுலகத்திலிருந்து ஓய்வு கொடுத்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நாள்தோறும் எழுதிக் கொண்டிருப்பவன் நான். நான் எழுதாத நாளே இல்லை. நான் எழுதுவதே எனக்கு ஏற்படுகின்ற களைப்பைப் போக்கிக் கொள்ளத்தான். அரசியல் துறையிலே எனக்கு ஏற்படுகின்ற கஷ்டங்கள், துன்ப துயரங்கள், களைப்பு, சோர்வு இவற்றையெல்லாம் போக்கிக் கொள்ள காலையிலே உலாவி முடித்த பிறகு நான் கைக்கொள்கின்ற முதல் முயற்சி எழுதுவதுதான். ஒவ்வொரு நாளும் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். எனவே இருந்த வீடு என்று சொல்லாதீர்கள் - இருக்கின்ற வீடு - இதுவும் ஒன்றுதான் என்பதை நீங்கள் தயவுசெய்து மறந்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலே இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி என்னிடம் தனியாகவும் கூறியிருக்கிறார்கள். தனியாகச் சொன்னால் ஊருக்குத் தெரியாமல் போய்விடும் என்பதற்காக உங்களையெல்லாம் கூட்டி வைத்தும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் திரையுலகப் பிரச்சினையை இங்கே பக்கத்திலே அமர்ந்திருப்பவர்களே ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு தீர்த்துவிடலாம். தம்பி கலைஞானி கமலும், நம்முடைய

> சுதந்திரம், சமத்துவம்,
> சகோதரத்துவம் ஆகியவற்றை
> அடிப்படையாகக் கொண்ட
> ஒரு சமூக அமைப்பே
> என்னுடைய இலட்சியம்.
>
> **- டாக்டர் அம்பேத்கர்**

புரட்சிக் கலைஞர் தம்பி விஜயகாந்தும் இங்கே நான் பேசிக் கொண்டிருக்கின்ற இதே நேரத்திலேயே இருவரும் - ஒருவர் காதிலே ஒருவர் பேசி - இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டிட முடியும். இருந்தாலும் அவர்கள் கருணாநிதி தீர்த்துவைத்தார் என்ற பெருமை, தங்களுடைய அண்ணனுக்குக் கிடைக்கவேண்டுமே என்பதற்காக இதைத் தூக்கி என் தலையிலே போட்டிருக்கிறார்களே அல்லாமல் வேறல்ல.

கலையுலகம் வேறு அரசு வேறல்ல!

இருந்தாலும்கூட நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இங்கே பஞ்சு அருணாசலம் குறிப்பிட்டார். இந்தத் தேர்தல் முடிந்தபிறகு இந்தப் பணியை நான் கவனிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டினார். நிச்சயமாகத் தேர்தல் முடிந்த பிறகு பிப்ரவரி மாத இறுதிக் கட்டத்தில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு இறுதித் தீர்ப்பை - நல்ல தீர்ப்பை நாம் காண்போம் என்ற நம்பிக்கையை இந்த விழாவிலே நான் தெரிவித்து - தொடர்ந்து வழக்கம் போல் கலையுலகத்திற்கு இந்த அரசு பாடுபடும் - சாதனைகளை நிகழ்த்தும் - ஏனென்றால் கலையுலகம் வேறு, அரசு வேறு என்றில்லாமல் நடைபெறுகின்ற அரசு இது. கலையுலகத்திலிருந்து வருகின்ற வருமானம் - அரசின் சார்பில் நிறைவேற்றப்படுகின்ற பல திட்டங்களுக்கு இன்று பயன்படுகின்றது. கலையுலகத்தின் மூலமாகக் கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்கு வருவாயாக வருகிறது என்பதை நான் மறந்துவிடவில்லை.

எனவே, அந்த நன்றி உணர்வோடு நானும் அங்கும் இருப்பவன், இங்கும் இருப்பவன் என்ற முறையிலே, நிச்சயமாக உங்களோடு ஒத்துழைப்பேன், உங்களுடைய பிரச்சினைகளுக்கு நல்ல பரிகாரம் காண்பேன் என்ற உறுதிமொழியை இங்கே தெரிவித்து, இங்கே வழங்கப்பட்ட விருதுகளை விட - பரிசுகளை விட, இந்த உறுதிமொழி சிறந்தது என்று நீங்கள் கருதுவீர்கள் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

★ ★ ★ ★

'கத்தாளங் கருங்கப்'

- எஸ்.எஸ். போத்தையா

போன தலைமுறையில் சிறுவர்கள் ஆடிய விளையாட்டுகளையும், பாடிய பாட்டுகளையும், பழக்க வழக்கங்களையும் இந்தத் தலைமுறை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. வறண்ட குடிதண்ணீர்க் கம்மாய்க்கு நடுவில், இன்று 'கிரிகெட்' ஆட்டம் நடக்கிறது. உலகளாவிய கலாச்சாரம் என்ற ஒன்று, நம் விளையாட்டு முதல் ஒவ்வொன்றாய் எல்லாவற்றையும் கழுவித் துடைத்துக் காலி செய்து வருகிறது.

பொழுதோடு பொழுதாய் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் தவம் கிடக்கும் இக்காலச் சிறுவர், சிறுமியர்களுக்கு இந்த விளையாட்டுக்கள் தெரிந்திருக்க நியாயமில்லை. நம்முடைய குழந்தைகள், பிள்ளைப் பருவத்தை, ஏழைகளானால் தொழிற்சாலைகளிலும், வசதி படைத்தவர்களானால் தொலைக் காட்சிப் பெட்டியிலும் தொலைத்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்குப் பிள்ளை வயது உண்டு. பிள்ளைப் பருவம் இல்லை.

நாட்டுப்புற மக்களுக்கு வாழ்க்கை இசையாக இருக்கிறது. இசையிலிருந்து தொடங்குகிறது. ஏடறியா, எழுத்தறியா மக்களுக்கு அறிவு வளர்ச்சி, புதியன தேடும் வேட்கை, நினைவாற்றல் என்பவை இசை சேர்ந்த சொற்கள் மூலம் நிகழ்கிறது. (எ-கா.)சொலவடை, நாட்டுப்பாடல்.

நாட்டுப்பாடல் என்பது அவர்களின் ஏடு; ஞாபகசக்தி அவர்களின் கல்வி. அனுபவங்களின் வெடிப்பில் அந்த ஏட்டைத் திறந்து அவர்கள் படித்துக் கொள்கிறார்கள்.

ஒரு கிராமத்தில் நாட்டுப் பாடல்கள் தேடி அலைந்தபோது, தன் வீட்டு வழியே போன இன்னொரு பெண்ணைப் பார்த்து, ஒரு பெண் சொன்னாள் ''இந்தா போறாளே, இவ ஒரு 'வண்டி' பாட்டு வச்சிருக்கா, இவளை உலுக்கினா பொல, பொலன்னு உதிரும்'' என்று.

அவர்களுடைய கல்வி சிறுபிராயம் முதலே, பாடல் இசையில் தொடங்குகிறது. பழமொழி என்பதும் ஒரு இசைதான். அவர்கள் சொலவடை போடும்போது, அது மழையின் இசை; கடலின் ஆழம்.

ஓடி விளையாடும்போதுகூட ஒரு பிள்ளை சாணி, சகதி, கழிவு போன்றவற்றில் மிதித்துவிட்டால் அந்தப் பிள்ளை தங்களைத் தொட்டுத் தீட்டாக்கிவிடக்கூடாது என்ற உணர்வில் மற்ற பிள்ளைகள் –

"என்பேர் மானம்
என்னையத் தொட்டா பாவம்"

என்று கூவிக்கொண்டே எச்சிலைத் தொட்டுத் தொப்புளில் வைத்துக் கொள்வார்கள்.

("குமரி மாவட்டத்தில் ஒரு இலையைப் பறித்து வைத்துக்கொண்டால் தீட்டு ஏற்படாது என்பார்கள்'' - பொன்னீலன்) விளையாட்டின் போது ஆடை அவிழ்ந்து விட்டாலோ, வேறு இடைஞ்சல்கள் ஏற்பட்டலோ - தற்காலிகமாக விளையாட்டி லிருந்து விலகி நிற்க ''தூச்சிய்யான்'' என்பார்கள்.

மொட்டைத் தலையைப் பார்த்துவிட்டால் பிள்ளைகளுக்கு விளையாட்டாகவும், கேலியாகவும் இருக்கும்.

"மொட்ட மண்டை மொளகு சாறு
கேப்ப ரொட்டி டமாஸ்"

என்று பாடிக்கொண்டு மொட்டைத் தலைப் பையன்களைத் தொட்டும், தடவியும் கிண்டல் செய்வார்கள்.

சிறுவயதில் பல்விழுந்து முளைப்பது இயற்கை. ஒட்டைப் பல்லைப் பார்த்துவிட்டால் ஒரே கும்மாளம். அதற்கென்று ஒரு பாட்டு

"ஒட்டப்பல்லுச் சங்கரா
ஒருத்தரு வீட்டுக்கும் போகாதே
ஆப்பம் வாங்கித் திங்காதே
அடிவாங்கிச் சாகாதே!"



விதம்விதமான தட்டான்களைப் பிடிப்பதில் குழந்தைகளுக்கு உற்சாகம். வேலி முள்ளில் உட்கார்ந்திருக்கும் தட்டானை சப்தம் செய்யாமல் மெதுவாகச் சென்று பிடிக்க முயற்சிப்பார்கள். இதைப் பொறாமையோடு பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு பிள்ளை தட்டானைக் கலைப்பதற்காக இப்படிக் கத்தும்:

"காத்தட்டான், கள்ளத்தட்டான்
கள்ளனுக்கு அம்புடாதே
உன்னை ஒருத்தன் பிடிக்க வாரான்
ஓடிப்போ, ஓடிப்போ!"

இதையே ஒளிந்து விளையாடும் விளையாட்டு விளையாடுகையில் ஒருவன் கண்ணைப் பொத்திவிட்டு, மற்ற பிள்ளைகள் ஒளிந்துகொள்ளச் சொல்லி விளையாடும் போதும் பாடுவார்கள். இன்றைக்கு இந்த விளையாட்டு ''Hide and Seek'' என்று ஆங்கிலத்தில் சொன்னால்தான் புரியும் என்றால், கேவலம்தான்.

குதிரை வாலித்தானியத்தை அவித்துக் காயப் போட்டிருப்பார்கள். இது தினை மாதிரி அளவிலும், குதிரைவால் மாதிரி இந்தக் கதிர் விளைந்து இருக்கும் என்பதால் இந்தப் பெயர் வந்தது. "குதிரை வாலிச் சோறும் கோழிக்கறியும்" என்பது சொலவடை. அவ்வளவு ருசி.

காயப் போட்டிருக்கையில் காக்காய்கள் வந்து வாய் நிறைய அள்ளிச் செல்லும். காக்காயை விரட்டக் குழந்தைகளைக் காவல் வைத்து விடுவார்கள். கையில் சிறு தகரத்துடன் தட்டிக் கொண்டே சுற்றிச் சுற்றி வர வேண்டும். காக்காய்கள் பிள்ளைகளைப் பாடாய்ப் படுத்திவிடும். ஏமாற்றுக்காரக் காக்காயையே ஏமாற்ற நினைக்கிறது பிள்ளையின் பிஞ்சு மனம்.

"காக்கா வீட்டுல தீ யெரியுது.
கள்ளப் பிராந்தே சொல்லாதே!"

- என்று பாடுவார்கள்.

கீழே சிதறிக் கிடக்கும் கடலை, பயறு போன்றவற்றைப் பொறுக்கித் தின்னும் ஒரு குழந்தையை மற்ற குழந்தைகள் -

"ஒட்டுப் பொறுக்கி
ஊரெல்லாம்
பீய்ப்பெருக்கி"

என்று கேலிசெய்யும். இவர்களுக்கும் பொறுக்கித் திங்க ஆசைதான். அந்தக் குழந்தை முந்திக்கொண்டது. அவ்வளவுதான்!

வேண்டுமென்றே ஒரு குழந்தை மற்றோர் குழந்தையின் தலையில் அதற்குத் தெரியாமல் ஒரு துரும்பையோ, காகிதத் துண்டையோ போட்டுவிட்டு –

"ஒரு ஆளு தலையில
வெள்ளாடு மேயுதாம்..."

என்று மாறி மாறிச் சொல்லிச் சிரிக்கும். நம் தலையில்தான் ஏதோ கிடக்கிறதாக்கும் என்று எல்லாப் பிள்ளைகளும் தம் தம் தலையைத் தடவிப் பார்த்துப் பரக்க பரக்க முழிப்பது வேடிக்கையாய் இருக்கும்.

கைகள் இரண்டையும் பக்கவாட்டில் நீட்டிக்கொண்டு -

"கிறு கிறு மாம்பழம்
கிய்யா கிய்யா மாம்பழம்"

என்று பலமுறை வேகமாய்ச் சுற்றிக் கீழே விழுந்து - வானமும், பூமியும் சுற்றுவது போலான உணர்வை, கிரக்கத்தை ரசிப்பது ஒரு விளையாட்டு.

இரண்டு பேர் எதிர் எதிர் நின்று கைகளைக் கோர்த்து - அப்படியே ஒரு கையை நீட்டியும், மறு கையை மடக்கியும், பிடறியில் போட்டுக்கொண்டு, கிறு கிறு மாம்பழம் சுற்றுவது போல, முடிந்த அளவு வேகத்துடன் சுற்றிக் கொண்டு -

"ராட்டு பூட்டு
ராவணன் சீட்டு"

என்று பாடுவார்கள்.

நாட்டுப்புற மக்களுக்கு
வாழ்க்கை இசையாக
இருக்கிறது;
இசையிலிருந்து
தொடங்குகிறது!

இரண்டு சிறுவர்கள் ஒரே திசையைப் பார்த்து நின்று கொண்டு கையைக் கோர்த்துக் கொள்வார்கள். மூன்றாவது ஒருவன் இவர்களுக்குப் பின்னால் நின்று கோர்த்த கைகளில் தனது ஒரு காலை மடித்து வைத்து, இரு கைகளையும் நிற்பவர்களின் தோள்களில் ஆதரவாகப் போட்டுக் கொள்வான். இவனுக்குப் பின்னால் ஒருவன் தரையில் ஊன்றி நிற்கும் ஒரு காலை கரண்டைக்கால் பாதத்தோடு பிடித்துத் தூக்கிக் கொள்வான். குதிரைச் சாரட்டுப் போலச் சவாரி புறப்படும்.

"கால் தூக்கிக் கணக்கப்
பிள்ளைக்கு
மாதம் பத்து ரூபா"

என்று சொல்லிக் கொண்டு ஓடுவார்கள். சவாரி செய்பவனுக்குப் படுகுஷியாக இருக்கும்.

மூன்று பேர் அதுபோல் வெளிப் புறமாகப் பார்த்து நெருங்கி நின்று கைகளைக் கோத்துக் கொள்வார்கள். ஒருவன் தனது ஒரு காலைப் பின்புறமாக வளைத்து மற்ற இரண்டு பேர் கோத்துக் கொண்டுள்ள கைகளில் வைப்பான். இரண்டாவது பையன் தனது ஒரு காலை அதே போல் தூக்கி மடக்கி முதல் பையன் கால் மேல் போட்டுக் கொள்வான். மூன்றாமவனும் தனது ஒரு காலைத் தூக்கி வளைத்து மற்ற இருவரது கால்களின் மேலாகவும், ஊடாகவும் நுழைத்துக் கொள்வான். இப்போது மூன்று பேர்களும் கோர்த்திருந்த கைகளை விலக்கிவிட்டு ஒரு காலில் நின்று நொண்டியடித்துக் கொண்டு கைகளைத் தட்டிக் கொண்டு வட்டமாய்ச் சுற்றி வந்து இப்படிப் பாடுவார்கள்.

''தைத் தக்கா தை
ஒரு பக்கா நெய்
வாத்தியாரு சொன்னதெல்லாம்
பொய், பொய், பொய்!''

யதார்த்தம் என்ற ஒன்று இருக்கும் போது தான் கருத்தும் கற்பனையும் அதை ஒட்டிப் பிறக்கின்றன. கால் கற்பனை, அரைக் கற்பனை, முழுக்கற்பனை எதுவாக இருந்தாலும் யாதார்த்தத்திலிருந்து தான் முளைக்கிறது. அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை கற்றுக் கொடுப்பவர்கள், போதகர்கள், வாத்திமார்கள் வாக்கு ஒன்றும் சொல் ஒன்றுமாக இருப்பதைத் தான் இந்தப் பாட்டு தெரியப்படுத்துகிறது.

சில சிறு பிள்ளைகள் உடுப்பு இல்லாமல் அம்மணமாய்த் திரிவார்கள். அதைப் பார்க்கும் மற்றப் பிள்ளைகள் –

"அம்மணக் குண்டி
ஆட்டாம் புளுக்கை
தென்ன மரத்துல
தேரோட்டம்"

என்று பாடிக் கேலி செய்வார்கள். "தெற்குத் தெருவுல தேரோட்டம்'' என்றும் சொல்வார்கள்.

வெயில் அடிக்கும்போது மழையும் பெய்தால் ''நாய்க்கும் பூனைக்கும் கல்யாணம்" என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

விளையாட்டில் - உதாரணமாக நொண்டியடித்து விளையாடுவதில் நொண்டிக் கொண்டே மற்ற பிள்ளைகளைத் தொட வேண்டும். நொண்டியடிப்பது கடினம். அகப்படாமல் ஓடுவது லேசு; இப்படியே ஒவ்வொரு விளையாட்டிலும் உண்டு. வெகு நேரம் அகப்படாமல் ஓடி விளையாடிய பிள்ளை அகப்பட்டுக் கொள்கிறது என்று வைத்துக்கொள்வோம். நொண்டியடிக்கும் சிரமத்திற்குப் பயந்து ''நேரமாகிவிட்டது.. எங்க அம்மா சத்தம்

போடும் நான் வரவில்லை" என்று ஓடும். இதைப் பார்க்கும் மற்ற பிள்ளைகள்,

"என் ஆட்டைக்கு வராதவ
எண்ணைக்காரன் பெண்டாட்டி"

- என்று சொல்லி திட்டுவார்கள்.

வீடுகட்டி, சோறு பொங்கி பொண்ணு மாப்பிள்ளை வைத்து விளையாடுவதும் உண்டு. போன தலைமுறையில் பால்யவிவாகம் சர்வ சாதாரணம். கல்யாணமான சிறுமிகளை அவர்களது கணவர் பெயரைச் சொல்லிக் கேலி செய்வார்கள்.

கணவர் பெயரின் முதல் எழுத்தை எடுத்துக்கொண்டு அத்துடன் "மூனாதண்டட்டி" என்று சேர்த்து - பின் பெயரைச் சொல்லி பொண்டாட்டி - என்று சேர்த்துக் கொள்வார்கள்.

சானாமுனா தண்டட்டி,
சண்முகராசு பொண்டாட்டி,
கானாமுனா தண்டட்டி,
கணபதி ராசு பொண்டாட்டி,
ரானா முனா தண்டட்டி,
ராமுக் கொத்தன் பொண்டாட்டி.

- இப்படி எல்லாப் பெயர்களுக்கும் சொல்லலாம்.

நான்கு பேர் மூலைக்கு ஒருவராய் நின்று கொள்வார்கள். ஐந்தாவது குழந்தை இட்து கையைத் தலையில் வைத்துக்கொண்டு வலது கையை நீட்டிய வண்ணம், உள்பக்கமாக -

"என் தலைக்கு எண்ண ஊத்து
எரும மாட்டுக்குப் புல் போடு"

என்று பாடிக்கொண்டே சுற்றிவருவாள். அப்போது நான்கு மூலையிலும் நிற்பவர்கள் வலதுபுறமாக இடம் மாறி ஓடி நிற்பார்கள். அப்படி இடம் மாறும்போது பாடி வருபவள் அவர்களைத் தொடவேண்டும். அப்படித் தொட்டுவிட்டால் தொடப்பட்டவள் பாடிவர வேண்டும்.

ஒரு சின்னக் குழந்தையைச் செல்லமாகப் பக்கத்தில் வைத்துக் கொண்டு கொஞ்சுவது போல் பாவனை காட்டி மற்றவர்களிடத்தில் -

"நான் வளர்த்த பூனைக்
குட்டியைத்
தொட்டுரு பார்ப்போம்"

- என்பார் ஒருவர்.

ஒருவன் "இந்தா நான் தொட்டுட்டேன்" என்று அந்தக் குழந்தையைத் தொடுவான்.

முதல் ஆள் "அப்ப, எனக்கு சர்க்கரையா" என்று சொல்லி குழந்தையைச் சற்றுப் பலமாக அடிப்பார்.

இப்படி மாறி மாறி நடக்கும். அகப்பட்டுக் கொண்ட குழந்தையின் பாடு திண்டாட்ட மாய்ப் போய்விடும். முதலில் குழந்தை நம்மைக் கொஞ்சுகிறார்கள் என்று நம்பி, பின்பு அடி விழ, அடி விழ தப்பித்துக் கொண்டால் போதும் என்ற நிலைக்கு வந்துவிடும். மற்றவர்களுக்கு வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் இருக்கும்.

ஒரு பிள்ளை இரண்டு உள்ளங் கைகளையும் விரல்களையும் பிரித்த நிலையிலுள்ள கையில் ஒவ்வொரு குத்தாகக் குத்துவான். "பிடி கொளக்கட்ட" என்று சொல்லிக் குத்தும்போது, குத்துகிற கையைப் பிடிக்கவேண்டும். பாட்டைப் பார்ப்போம்.

"மாக் கொளக்கட்ட
மஞ்சக் கொளக்கட்ட
பிள்ளையார் கோயில்ல
பிடி கொளக்கட்ட"

குன்னாங் குன்னாங் குர்

மே காற்றுக் காலத்தில் குழந்தைகள் ஓலையில் முள்ளைக் குத்தி காற்றாடி செய்து விளையாடும். காற்றாடி சரியாகச் சுற்றாவிட்டால் ஓலையின் இரு ஓரங்களையும் பிடித்துத் திருகி - காதின் பக்கத்தில் வைத்துக் கொண்டு -

குன்னாங் குன்னாங் குர்ர்
கோழி முட்டை சுர்ர்
ஒங்கப்பன் ஆட்டுக்கிடையில்
செத்துக் கிடக்கான்
பேட்ரீலைட்டுக்
கொண்டா டோய்!"

என்று ராகமாய்ச் சொல்லுவார்கள். இதைக் கேட்டு செத்துக் கிடக்கும் காற்று எழுந்துவந்து காற்றாடியைச் சுற்ற வைக்குமாம். அல்லது திடுக்கிட்டு காற்றாடி சுற்றலாம். உண்மையில் ஓலையின் இரு ஓரங்களையும் வளைத்து விடுவதால் அதன் மீது காற்று பட்டு காற்றாடி சுற்றும். காற்றாடி போல் சுற்றிக் கொண்டிருக்கும் மண்ணின் குழந்தைகளுக்கு அதுக்கும் ஒரு பாட்டு.

வெள்ளாமைக் காலத்தில் கம்பங் காட்டிற்குக் காவலுக்குப் போக வேண்டும். குருவிகள் படை படையாக வந்துவிடும். தகரத்தைத் தட்டி விரட்ட வேண்டும். பாதை மேல் பிஞ்சை என்றால் போகிறவர்கள் வருகிறவர்கள் கதிரை ஒடிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லை என்றால் போகிறதும் வர்றதும் ரெண்டு 'கருதை' நசுக்கி உமி ஊதி வாயில் போட்டுக் கொண்டு போய்விடும். விளைந்த பச்சை மாறாத கருது அவ்வளவு மணமாகவும் ருசியாகவும் இருக்கும்.

"கம்மங் கருதைக் கண்டால் கை சும்மா இருக்காது. மாமியா மகளைக் கண்டால் வாய் சும்மா இருக்காது" என்பது சொலவடை. ஆள் காவலுக்கு இருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்ள ஓயாமல் சத்தம் போட்டுக் கத்தவேண்டும்.

"கருத ஒடியாத
கக்கத்துல வைக்காத
மானத்தப் பாராதே
வயிறாதிச் சாகாதே
கழுதேஏஏ... கழுதே"

என்று தகரத்தைத் தட்டிக் கொண்டே பாடுவார்கள்.

மெதுவான குரலில் சாடையாக ஒரு பிள்ளையின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது, அந்தப் பிள்ளை "என்னைக் கூப்பிட்டாயா?" என்று கேட்கும். "நான் உன்னையா கூப்புட்டேன். காரவீட்டுக் கருத்த நாயைக் கூப்பிட்டேன்" என்று சொல்லிச் சிரிப்பது.

ஏதாவது ஒரு பொருளைக் கையில் மறைத்து வைத்துக்கொண்டு கையை உயர்த்தி "யாருக்கு வேட்டை" என்று ஒரு பிள்ளை கேட்கும். ஆசைப்பட்ட ஒரு பிள்ளை "எனக்கு வேட்டை" என்று கையை உயர்த்திக் கேட்கும். அதற்கு "ஒங்க மாமியா பல்லோட்டை" என்று பதில் வரும். மற்ற பிள்ளைகள் ஏமாற்றமடைந்த பிள்ளையைப் பார்த்து "ஆசைப்பட்ட, ஊசிப்போச்சி" என்று சொல்லி சிரித்துக் கேலி செய்வார்கள்.

விளையாட்டில் அழிச்சாட்டங் காட்டுவதும் கண்ணிலடித்துப் பொய்ச் சத்தியம் செய்வதும் சர்வ சாதாரணம். கோட்டை மிதித்துவிட்டு - மிதிக்கவில்லை என்று வாயடியடித்துச் சில பிள்ளைகள் சாதித்து விடும். மறு தடவை மறுக்கமுடியாத அளவுக்கும் மறைக்க முடியாத அளவுக்கும் அதே பிள்ளை ஒரு தவறு செய்து ஆட்டையை இழந்துவிடும். முதலில் பாதிக்கப்பட்ட குழந்தை -

"அழிச்சாங் காட்டுனா சாமி
தொழிச்சாங் காட்டுது"

என்று கூறிச் சந்தோசப்படும். தெய்வ தண்டனையில் குழந்தைகளுக்கு அவ்வளவு நம்பிக்கை! தப்பு செய்தா சாமி தண்டிக்கும், பகவான் இருக்கிறான் பார்த்துக் கொள்வான். 'அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்' போன்ற சமுதாயத்தில் நடமாடும் கருத்தாக்கங்கள் சிறுவர் நம்பிக்கையிலும் நடப் பட்டிருக்கின்றன.

ஆடு, மாடு மேய்க்கும் சிறுவர்கள் கோடைக் காலத்தில் மூன்று நான்கு மைல் தூரம் அலைந்து எங்கோ குளம், குட்டையில் கிடக்கும் - தண்ணீரை ஆடுமாடுகள் குடிக்கும்படி செய்வார்கள். அப்போது

"நாளைக்கு இந்நேரம்
தண்ணி காட்டினாலும் காட்டுவேன்
காட்டாட்டாலும் இல்லை
கொம்புக்கு குருணித் தண்ணி
குடிச்சுக்கோ ஒ..."

என்று கூவுவார்கள். பாவம் வாயில்லாச் சீவன்கள்.

குச்சுக் குச்சு ராக்கம்மா

பெண் தேடிச் செல்லும் ஒரு விளையாட்டுத்தான் "குச்சுக்குச்ச ராக்கம்மா".

கிராமிய விளையாட்டில் பாடும் ஒரு வரியை 'சினிமாவில் எப்படியெல்லாமோ மாற்றிப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்கள் இரண்டு சோடிகளாக 30 அடி தூரத்தில் எதிர் எதிராக நின்று கொண்டு, முதலில் ஒரு சோடி இப்படி பாடிக்கொண்டு மற்றோர் சோடியைச் சுற்றி வரும் -

"குச்சுக் குச்சு ராக்கம்மா
பொண்ணுண்டோ
கூசாலி ராக்கம்மா
பொண்ணுண்டோ
சாதி சனமெல்லாம்
பொண்ணுண்டோ
உங்க சம்பந்த வழியெல்லாம்
பொண்ணுண்டோ"

> *மனிதருக்குள்*
> *பேதத்தையும்,*
> *அச்சத்தையும்*
> *மூட்டக்கூடிய,*
> *வளர்க்கக்கூடிய எந்த*
> *ஏற்பாடும் சுதந்திரத்தின்*
> *பரம விரோதிகளே !*
> *- அண்ணா*

இதற்கு மறுதரப்பிலிருந்து சுற்றி வந்து இப்படி பதிலளிப்பார்கள் - "குச்சுக் குச்சு ராக்கம்மா பொண்ணில்ல கூசாலி ராக்கம்மா பொண்ணில்ல சாதி சனமெல்லாம் பொண்ணில்ல - எங்க சம்பந்த வழியெல்லாம் பொண்ணில்ல!"

முதலில் சுற்றி வந்த சோடி மீண்டும் அந்தப் பாட்டில் "பொண்ணுண்டோ" என்ற சீருக்குப் பதில் 'பத்து ரூபா' என்ற சொல்லைச் சேர்த்து 'குச்சு குச்சு ராக்கம்மா பத்து ரூபா' என்று பாடி வரும்.

இதற்கு 2-வது சோடி 'பொண்ணில்ல' என்ற சீருக்கு பதில் 'அது வேண்டாம்' என்ற சீரைச் சேர்த்து, 'குச்சுக் குச்சு ராக்கம்மா, அது வேண்டாம்' என்று பாடிச் சுற்றிவரும்.

பத்து ரூபா, நூறு ரூபா, லட்ச ரூபா, பட்டுச்சேலை, ஒட்டியாணம், பதக்கம், சங்கிலியென்று கற்பனைக்கு எட்டு மட்டும் பரிசம் போடுவதாய்ச்சொல்லும். எதிர்த்தரப்பு கடைசி வரை "அது வேண்டாம்" என்றே சாதிக்கும். பெண்ணிற்கு அவ்வளவு கிராக்கி. அது ஒரு காலம்!.

சமுதாயச் சக்தி

வரலாற்றின் தலைச் சக்தியாக பெண் இருந்தாள். இயக்கிச் செல்லும் 'சமுதாயச் சக்தியாக' அவள் இருந்தாள். ஆணாதிக்கம் மேல் கை எடுத்து பெண்ணை ஒருபொருளாக மாற்றிவிட்ட போது, பெண்ணுக்கு விலை பேசும் வில்லங்கம் மேலெழுந்தது. தாய் வழிச் சமுதாயமாக இருந்தது வரை பெண்ணுக்குப் பொன் கொடுத்து மதிக்கப்பட்டாள். பெண்ணுக்குப் பொன் கேட்பதெல்லாம் இப்போது 'வந்த கேவலம்!'

விளையாட்டுப் பாடல்கள் வரலாற்றுச் சுழற்சியை விவரிக்கும் சாட்சியங்களாகவும் கலாச்சார மாறுதல்களைப் பதிவு செய்யும் ஏடுகளாகவும் திகழ்கின்றன.

மன்னர் ஆட்சிக்காலத்தில் குடியானவர்கள் பட்ட கஷ்டங்களைக் கோடிட்டுக் காட்டுவது இந்த விளையாடடு. ராசா வீட்டில் விசேஷம் என்றால், அதற்கு வேண்டிய பொருட்களைக் குடியானவன் இனாமாகக் கொடுக்கவேண்டும். ஒரு சில வேலை செய்யவேண்டும்.

ராசா மாதிரி ஒருவன் உட்கார்ந்து கொள்வான். அவனுக்குப் பக்கத்தில் ஒருவன் சேவகன் போல் நின்று கொள்வான்.

சற்றுத் தள்ளி ஒருவர் பின் ஒருவராகக் காலை நீட்டி மடியில் உட்காருவது போல் உட்கார்ந்து கொள்வார்கள். முன்னால் உட்கார்ந்திருப் பவர்களைப் பிடித்துக் கொள்வார்கள். முதலில் உட்கார்ந்திருக்கும் குழந்தைதான் தோட்டக்காரன்.

சேவகன் தோட்டக்காரனிடம் வந்து "ராசா மகளுக்குக் கல்யாணமாம்-ஒரு பூசணிக்கா வேணுமாம்" என்பான். அதற்குத் தோட்டக்காரன் "இப்பதான் விதை ஊனி இருக்கு" என்பான். இதை அப்படியே சேவகன் ராசாவிடம் சொல்வான். ராசா 'அதையும் வாங்கிட்டு வா' என்பான். சேவகன் தோட்டக் காரனிடம் வந்து 'அதையும் கொடுப்பியாம்' என்பான். 'இப்பத்தான் ஒரு இலை விட்டிருக்கு' என்பான். இதைச் சேவகன் ராசாவிடம் சொல்ல - 'ராசா' 'அதையும் வாங்கிட்டு வா' என்பான்.

கால் கற்பனை, அரைக் கற்பனை, முழுக் கற்பனை எதுவாக இருந்தாலும் யதார்த்தத்திலிருந்துதான் முளைக்கிறது!

இப்படியே பத்து இலை வரை சொல்லி, கொடி வீசியிருக்கு, பூப்பூத்திருக்கு, காய் காச்சிருக்கு என்று தோட்டக்காரன் சொல்ல ராசா 'அதையும் வாங்கிட்டு வா' என்று சொல்வான்.

முடிவாக 'தண்ணீர் பாய்ச்சி' வேலியடைத்துவிட்டு, ஒரு காய் பிடுங்கிக் கொண்டு போ என்பான். சேவகன் தண்ணீர் பாய்ச்சுவது போல உட்கார்ந்திருக்கும் பிள்ளைகளைத் தாண்டுவான். வேலியடைப்பது போல பிள்ளைகளைச் சுற்றி நொண்டியடிப்பான். பிள்ளைகள் அவனை விரட்டுவது போல் குரைப்பார்கள். ஒரு பிள்ளை சேவகனின் காலில் நறுக்கென்று கிள்ளிவிடும். தேள் கொட்டிவிட்டதாய் சேவகன் அழுவான். ''ஒம்பீயையும், ராசா பீயையும் குழப்பிப் போடு, தாவலாய்ப் போகும்'' என்று கூறி எல்லோரும் சிரிப்பார்கள்.

கடைசியில் உட்கார்ந்திருப்பவன் தான் பூசணிக்காய். அவனது இடுப்பைப் பிடித்து சேவகன் தூக்குவான். அவன் முன்னால் உட்கார்ந்திருப்பவனைப் பிடித்துக்கொண்டு விடமாட்டான். ஒரு வழியாக அவைனை பூசணிக் காயாகத் தூக்கி ராசாவிடம் கொண்டு போய்ச் சேர்ப்பான். 'இந்தக் காய் அழுகிப் போச்சு, இன்னொரு காய் வாங்கிட்டு வா என்பான் ராசா. இப்படி மாறி மாறி நடக்கும்!.

உத்தி கட்டிவருதல்

விளையாட்டில் இரண்டு குழுக்களாகப் பிரிப்பதற்கான வழிமுறையே மிகவும் சுவாரஸ்யமாய் இருக்கும். சோடி சோடியாய் உத்திகட்டி வருவார்கள். குழுத்தலைவர்களிடம் ''உத்தி யார்? உரி யார்?'' என்று கேட்பார்கள். தலைவர்களில் ஒருவன், ''நான்தான் உத்தி, நீதான் உரி'' என்பான். அதற்கு உத்தி கட்டி வந்தவர்களில் ஒருவன்,

> *''மானத்த வில்லா வளைச்சவன் வேணுமா?*
>
> *மணலைக் கயிராத் திரிச்சவன் வேணுமா?''*

என்று கேட்பான். தலைவன் ஏதாவதொன்றைக் கேட்க அந்தப் பெயருக்குரியவன் அந்தக் குழுவில் சேர்ந்து கொள்வான். மறு உத்திவரும் போது, கேட்கும் உரிமை இரண்டாவது குழுத் தலைவனிடம் போய்விடும். இப்படி மாறி மாறி வரும்.

உத்தி கட்டி வருபவர்கள்,

> *''வேலியத் தாண்ட்ற வெள்ளக் குதுர வேணுமா?*
>
> *மானத்தத் தாண்ட்ற மயிலக் குதுர வேணுமா?''*

என்றும்,

> *''பனைமரத்து மேலிருந்து பாட்டுப் படிக்கிறவன் வேணுமா?*
> *உடமரத்து மேலிருந்து*
> *உசுவடிக்கிறவன் வேணுமா?''*

என்றும் பலவிதமாகக் கேட்பார்கள்.

சாவுச் சடங்கையும் சிறுமிகள் ஒரு விளையாட்டாக்கிக் கொள்வார்கள். ஆடி மாதம் 10, 12 வயதுப் பெண்கள் துணியில் பொம்மை செய்து அது இறந்து விட்டதாய்ப் பாவித்து தண்ணீர்க் கரையில் கொண்டு போய், ஒப்பு வைத்துக் கட்டி அழுவார்கள்.

> *''வாயைக்கட்டி வயித்தைக்கட்டி*
> *வளர்த்தனடி பொம்மை .*
> *உன்னை*
> *வைப்பாத்துத் தண்ணியில*
> *விட்டனடி பொம்மை''*

(''வாய்க்காலுத் தண்ணியில விட்டனடி பொம்மை'' என்றும் கூறுவதுண்டு)

ஒப்பாரி வைத்து பொம்மையை எரித்து - சாம்பலை நீரில் கரைப்பார்கள்.

விளையாட்டுகளில் இன்னும் விவரிக்கப்பட வேண்டியவை ஏராளம். திரி திரி பொம்மக்கா, தெல்லு, கோலி, கிட்டிக்குச்சி, பேப்பந்து, பிள்ளையார் பந்து, குழிப்பந்து, ஒச்சிய்யான், வண்ணான் பொதி, கித்தான் மந்தி, தவிட்டுக்குஞ்சி, சடுகுடு, கிளித்தட்டு, எட்டாளந்தட்டு, நிலாப்பூச்சி, கண்ணாம்பூச்சி, தாயம், தட்டாங்கல், பன்னாங்குழி, பூச்சொல்லி விளையாடுவது, மாட்டுக்கால் விளையாட்டு, ஒத்தையா ரெட்டையா, பம்பரம், மதியம், சுண்டி, நீர் விளையாட்டுக்கள் இப்படி ஏராளம் ஏராளம். இவ்விளையாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் அவற்றிற்கேயுரிய சில சொற்கள் ஆராயப்பட வேண்டியவை. சிலவற்றில் சமுதாய, வரலாற்றுச் செய்திகளுக்குச் சாட்சியங்களைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு குடம் தண்ணீ ஊத்தி, ஒரு பூப்பூத்தது என்று பத்து வரை சொல்லி - கடைசியில் ''வாரவனைக் கண்ணி போட்டுப் பிடிச்சுக்கோ'' என்பான். ஒருவனைப் பிடித்துக் கொண்டபின் - பிடிபட்டவனின் கட்சித் தலைவன், ''இம்புட்டுப் பணம் தாரேன், விடுடா துலுக்கா'', என்பான். பதிலுக்கு ''விடமாட்டேன் மலுக்கா'', என்பான் எதிர்க்கட்சித் தலைவன்.

சடுகுடு விளையாட்டில் வெற்றி பெற்றதை 'எல்லை வைத்தோம்' என்றும், கிந்தான், தாயம் விளையாட்டுகளில் வெற்றி பெற்றதை 'பழம்' என்றும், தட்டாங்கல் விளையாட்டில் வெற்றியைக் ''கட்டைவைத்தேன்'' என்றும் கூறுவர். சுண்டி, ஒத்தையா ரெட்டையா, தெல்லு விளையாட்டுகளில்,''மொத்தீட்டான்'', ''தோத்துட்டான்'' என்றும் சொல்லுவார்கள்.

விளையாட்டு முடிவு

வெகுநேரம் விளையாடியாய் விட்டது. வீட்டிற்குப் போகும் நேரமாய் விட்டது. இருப்பதில் பெரிய பிள்ளை இப்படிக் கூறி விளையாட்டை முடித்து வைக்கும் -

> *''அவுகவுக வீட்டுக்கு*
> *அவரக்கஞ்சி குடிக்கப் போங்க*
> *பிள்ளப் பெத்த வீட்டுக்குப்*
> *புளியங் கஞ்சி குடிக்கப்*
> *போங்க''*

கல்யாணம், திருவிழா, பொங்கல் காலங்களில் சிறுவர், சிறுமியர் ஓரிடத்தில் இரவு நேரத்தில் தங்க நேரிடும். அப்போது உற்சாக மிகுதியில் பேசிச் சிரித்துக் கேலி செய்வதும், கதை சொல்லியும் கும்மாளம் போடுவார்கள். நேரம் ஆக ஆகச் சில பிள்ளைகளுக்குத் தூக்க உணர்வு மேலிடும். சில பிள்ளைகள் பலமாகச் சிரித்தும், பேசியும் தூங்கவிடாமல் தொந்தரவு செய்யும். இது அளவு மீறிப் போகும் போது, ஒரு பெரிய பிள்ளை தலையிட்டு, ''சரி, போதும் தூங்குவோம். யாரும் பேசக்கூடாது ''கத்தாளங் கருங்கப்'' என்று சொல்லும். இதற்கு மேல் யாரும் பேசமாட்டார்கள். பேசக்கூடாது.

நாமும் இதற்கு மேல் கதையை வளர்த்தாமல் இத்துடன் நிறுத்திக் கொள்வோம்?

''கத்தாளங் கருங்கப்!''

● ● ●

"கலையுலகத்திற்குத் தமிழக அரசு தொடர்ந்து பாடுபடும்!"

திரைப்பட விருது வழங்கும் விழாவில் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

*1996 ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்-நடிகையர் மற்றும் கலைத்துறை வித்தகர்களுக்கு விருதுகளை வழங்கி **முதலமைச்சர் கலைஞர்** உரையாற்றியதாவது:*

தேர்தல் வந்தால் அதற்கு முன்பு இதுபோன்ற திரைப்பட விருது வழங்குகின்ற விழா வருகிறதென்று பஞ்சு அருணாசலம் சொன்னார். அது உண்மையல்ல. நாங்கள் விருது வழங்குகின்ற விழா வைத்தாலே தேர்தல் வந்துவிடுகிறது. அதுதான் உண்மை.

இந்த விருதுகள் வழங்குவதற்காகப் படங்கள் கடந்த ஐந்தாறு மாத காலமாக நீதியரசர் கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே பார்வையிடப்பட்டு, பரிசுகள் எல்லாம் யார் யாருக்கு என்று வகுக்கப்பட்டு - அந்தப் பட்டியல் எல்லாம் தயாரிக்கப்பட்டு - வெளியிடப்படுகின்ற நேரத்திலேதான் தேர்தல் அறிவிப்பு வந்தது. இதுவும் ஒரு தேர்தல் தானே? விருதுகள் யார் யாருக்கு வழங்கப்படுவது என்று தேர்ந்தெடுப்பதும், ஒரு தேர்தல்தானே? அந்தத் தேர்தலும் இந்தத் தேர்தலும் ஒட்டி வந்திருக்கின்றன.

அந்தத் தேர்தலை முன்னிட்டு இந்தத் திரைப்பட விருது வழங்கும் விழா நடைபெறவில்லை. அது தேர்தலுக்குப் பயன்படக்கூடாது என்பதற்காகத்தான் தேர்தல் ஆணையத்தினுடைய விருப்பப்படி—அல்லது உத்தரவுப்படி இன்றைக்கு வழங்கப்பட வேண்டிய எம்.ஜி.ஆர். விருது வழங்கப்படவில்லை. ஏனென்றால் தேர்தலிலே வேட்பாளராக நிற்கின்ற ஒரு அரசியல்வாதிக்கு அரசு விழாவிலே விருது வழங்கக் கூடாது என்று தேர்தல் ஆணையம் விதி வகுத்திருக்கின்ற காரணத்தால் - எம்.ஜி.ஆர். விருது யாருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதோ அவர் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெயரைச் சொல்வது கூட ஒருவேளை தேர்தல் விதிமுறைக்கு விரோதமாக இருக்குமோ என்பதால்தான் அரசியல் நாகரிகத்தோடு பெயரையும் சொல்லாமல் விடுகிறேன்.

இந்தியன் படத்திற்கு முதல் பரிசு

சிறந்த படங்கள் என்ற வரிசையிலே "இந்தியன்" படம் முதல் பரிசைப் பெற்றிருக்கிறது. நான் அந்தப் படத்தைப் பார்த்தேன். தம்பி கமல் அவர்கள் அதனைப் பார்க்குமாறு எனக்கு அன்புக் கட்டளை பிறப்பித்தார். படத்தைப் பார்த்தேன். அந்தப் படத்தோடு ஒன்றிப் போகின்ற - மெய்மறந்த நிலைக்கு ஆளானேன். அந்தப் படம் முதல் பரிசைப் பெற்றிருப்பதில் வியப்பு ஏதும் இல்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

"காதல் கோட்டை" நான் பார்க்கவில்லை. வயது 74 - அதனால் பார்க்கவில்லை. அந்தப் படம் இரண்டாவது பரிசு பெற்றிருக்கின்றது. பாராட்டுகிறேன். "புருஷன் பொண்டாட்டி" மூன்றாவது பரிசைப் பெற்றிருக்கின்றது.

கலைஞானி கமல் - விஜய்காந்துக்கு விருது

"கருவேலம்பூக்கள்" சிறப்புப் பரிசு பெற்றிருக்கின்றது. பெண்களைப் பற்றிய சிறந்த கதை என்பதற்காக மற்றொரு சிறப்புப் பரிசை "கோகுலத்தில் சீதை" என்ற திரைப்படம் பெற்றிருக்கின்றது.

சிறந்த நடிகர் என்பதற்கான விருது கலைஞானி கமல் அவர்களுக்குக் கிடைத்திருப்பதும் ஆச்சரியமான ஒன்றல்ல.

அதைப்போலச் சிறந்த நடிகருக்கான சிறப்புப் பரிசு தம்பி விஜய்காந்துக்குக் கிடைத்திருப்பதும் ஆச்சரியமான ஒன்றல்ல.

திரைப்பட இயக்குநர்களின் புரட்சிகரமான படங்களை எதற்கும் துணிந்து தணிக்கைக்குப் பயப்படாமல், தணிக்கையின் காரணமாகவே தடைப்படுத்தப்பட்டாலும் பரவாயில்லை என்ற இலட்சிய நோக்கோடு படம் தயாரிக்கின்ற - இயக்குகின்ற தம்பி ஆர்.கே.செல்வமணி திரைப்பட இயக்குநர்களுக்கு வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்த ராஜா சாண்டோ விருதினைப் பெற்றிருக்கிறார்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல - பஞ்சு அருணாசலம், கவிஞர் கண்ணதாசன் விருதினைப் பெற்றிருக்கிறார்.

அண்ணா விருது தம்பி லியாகத் அலிகானுக்குக் கிடைத்திருக்கிறது. அவர் எழுத்தாளர் என்ற முறையிலே அந்த விருதினைப் பெற்றிருக்கிறார். நானும் ஒரு எழுத்தாளன் என்ற முறையிலே அவர் இந்த விருதினைப் பெற்றதற்காக - பெருமையடைகிறேன்.

நகைச்சுவை நடிகர் சார்லி - இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான்

தம்பி சார்லி, நகைச்சுவை எப்படி இருக்கவேண்டும், நகைச்சுவையோடு எப்படி கருத்துக்களை குழைத்துத் தர வேண்டும் என்பதற்கான இலக்கணமாகத் திகழ்ந்த மறைந்த கலைவாணர்-யாருடைய பெயரால் இந்த அரங்கம் அமைந்திருக்கின்றதோ அந்தப் பெயருக்குச் சொந்தக் காரரான கலைவாணர் விருதினைப் பெற்றிருக்கிறார்.

தமிழகத்திலே மாத்திரமல்லாமல், இந்தியத் திருநாட்டிலே மாத்திரமல்லாமல், அனைத்துலக நாடுகளிலும் இசை வெள்ளம் பாய்ச்சிக் கொண்டிருக்கின்ற தம்பி ஏ.ஆர்.ரகுமான் அவர்களுக்கு சிறந்த இசை அமைப்பாளர் என்கின்ற விருது கிடைத்திருப்பது பற்றி உங்களோடு சேர்ந்து நானும் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த இயக்குநராக அகத்தியன் விருது பெற்றிருக்கிறார். நான் கேள்விப்பட்டேன் - அவருடைய இயற்பெயர் கருணாநிதி என்பதாக. அவர் ஒருவேளை இரண்டாவது கருணாநிதி வேண்டாம் என்பதற்காகப் பெயரை மாற்றிக் கொண்டாரோ என்னவோ தெரியாது. அவர் சிறந்த இயக்குநர் என்பதற்கான விருதினைப் பெற்றிருக்கிறார்.

சிறந்த உரையாடல் ஆசிரியர் விருதினை விக்ரமன் பெற்றிருக்கிறார். அவருடைய உரையாடல்கள் பலவற்றை நான் சுவைத்து மகிழ்ந்தவன் என்ற முறையில், அவருக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறந்த நடிகை சுருதி - சிறப்புப் பரிசு தேவயானி

சிறந்த நடிகையாக செல்வி சுருதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறந்த நடிகை என்பதற்கான சிறப்புப் பரிசை செல்வி தேவயானி பெற்றிருக்கின்றார். அவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த கதாசிரியர் என்பதற்கான விருதை, களஞ்சியம் பெற்றிருக்கிறார். அவருக்கு என் வாழ்த்தும் பாராட்டும் உரியதாகுக.

திரைப்படங்களிலே நல்ல பாடல்கள் எழுதியவர் என்பதற்காகத் தம்பி பிறைசூடன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். என்னுடைய வாழ்த்துக்கள்.

சிறந்த வில்லன் நடிகர் பிரகாஷ்ராஜ் - அவர் இங்கே விருது வாங்கும்போது இந்த அரங்கத்திலே ஒரு ஆனந்தம் - ஒரு மகிழ்ச்சி - ஒரு குதூகலம். காரணம் எனக்குத் தெரியும். எங்கள் இருவருக்கும் தெரியும். ஆம், "இருவரு"க்குத் தெரியும்.

சிறந்த நகைச்சுவை நடிகர் வடிவேலு

சிறந்த நகைச்சுவை நடிகராக வடிவேலு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். வடிவேலு நகைச்சுவையாக நடிக்கத் தேவையில்லை. வந்து நின்றாலே போதும் - நகைச்சுவை தானாகவே கிடைக்கும். ஒவ்வொரு அசைவிலும் நகைச்சுவையை வெளிப்படுத்தக் கூடிய நல்ல நடிகர். அவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரைப்பட உலகத்தில் வெற்றி என்பது அதிலே பங்கு பெறுகிற ஒருவரால் மாத்திரம் கிடைத்து விடுவதல்ல. ஒரு இயக்குநராலோ அல்லது ஒரு நடிகராலோ, ஒரு நடிகையாலோ, அல்லது ஒரு வசனகர்த்தாவாலோ அல்லது ஒரு இசை அமைப்பாளராலோ அல்லது ஒரு பின்னணிப் பாடகராலோ யாராலும் தனிப்பட்ட ஒருவரால் ஒரு வெற்றியைப் பெற்றுவிட முடியாது.

> **சு**தந்திரம் - விடுதலை என்றால், சட்ட சம்பந்தமான சொற்களின் மாற்றம் என்றல்ல வாலிபன் எண்ணுவது. புதிய நிலை - புது அழகு - புது உருவம் - புதிய மகிழ்ச்சி - நாடு புதுக்கோலம் கொள்வது என்றே கருதுகிறான்! உண்மையும் அதுதான்!
>
> - அறிஞர் அண்ணா

உதாரணமாக, ஒரு சிலையை ஒரு சிற்பி வடிப்பதற்கு ஒருவரே போதும். அந்தச் சிற்பிக்கு ஒரு உளி; ஒரு கல் இருந்தால் போதும் - ஒரு சிலையை அந்தச் சிற்பி வடிவமைத்துக் கொடுக்க முடியும். அதுபோல ஒரு ஓவியன் கொஞ்சம் சாந்து, வண்ணம், தூரிகை மாத்திரம் இருந்தால் போதும் - ஒரு ஓவியத்தைத் தீட்டித் தர முடியும். ஆனால், திரைப்படம் என்பது பலருடைய முயற்சியினால், பலருடைய உழைப்பினால் வெளிவர வேண்டியது; வெற்றியினை வழங்கவேண்டியது. அப்படிப்பட்ட அந்தப் பெரும் முயற்சியிலே எல்லோரும் கூடி ஒன்றாக இணைந்து ஒத்துழைப்பு தந்தால்தான் ஒப்பற்ற வெற்றியைப் பெற முடியும் என்பதை அனுபவ ரீதியாக நாம் பெற்றுவருகிறோம்.

எனது வீடு

அந்த வகையிலே திரைப்படத் துறையிலே இருக்கின்ற உங்களையெல்லாம் இந்த மண்டபத்திலே காணுகின்ற நேரத்தில் எனக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சி, தம்பி கமல் குறிப்பிட்டதைப் போல் - நான் இருந்த வீடு என்று கமல் சொன்னார் - நான் இருக்கின்ற வீடும்தான் - ஏனென்றால் அதற்குள் எனக்குக் கலையுலகத்திலிருந்து ஓய்வு கொடுத்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நாள்தோறும் எழுதிக் கொண்டிருப்பவன் நான். நான் எழுதாத நாளே இல்லை. நான் எழுதுவதே எனக்கு ஏற்படுகின்ற களைப்பைப் போக்கிக் கொள்ளத்தான். அரசியல் துறையிலே எனக்கு ஏற்படுகின்ற கஷ்டங்கள், துன்ப துயரங்கள், களைப்பு, சோர்வு இவற்றையெல்லாம் போக்கிக் கொள்ள காலையிலே உலாவி முடித்த பிறகு நான் கைக்கொள்கின்ற முதல் முயற்சி எழுதுவதுதான். ஒவ்வொரு நாளும் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். எனவே இருந்த வீடு என்று சொல்லாதீர்கள் - இருக்கின்ற வீடு - இதுவும் ஒன்றுதான் என்பதை நீங்கள் தயவுசெய்து மறந்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலே இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி என்னிடம் தனியாகவும் கூறியிருக்கிறார்கள். தனியாகச் சொன்னால் ஊருக்குத் தெரியாமல் போய்விடும் என்பதற்காக உங்களையெல்லாம் கூட்டி வைத்தும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் திரையுலகப் பிரச்சினையை இங்கே பக்கத்திலே அமர்ந்திருப்பவர்களே ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு தீர்த்துவிடலாம். தம்பி கலைஞானி கமலும், நம்முடைய புரட்சிக் கலைஞர் தம்பி விஜயகாந்தும் இங்கே நான் பேசிக் கொண்டிருக்கின்ற இதே நேரத்திலேயே இருவரும் - ஒருவர் காதிலே ஒருவர் பேசி - இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டிட முடியும். இருந்தாலும் அவர்கள் கருணாநிதி தீர்த்துவைத்தார் என்ற பெருமை, தங்களுடைய அண்ணனுக்குக் கிடைக்கவேண்டுமே என்பதற்காக இதைத் தூக்கி என் தலையிலே போட்டிருக்கிறார்களே அல்லாமல் வேறல்ல.

> சுதந்திரம், சமத்துவம்,
> சகோதரத்துவம் ஆகியவற்றை
> அடிப்படையாகக் கொண்ட
> ஒரு சமூக அமைப்பே
> என்னுடைய இலட்சியம்.
>
> - டாக்டர் அம்பேத்கர்

கலையுலகம் வேறு அரசு வேறல்ல!

இருந்தாலும்கூட நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இங்கே பஞ்சு அருணாசலம் குறிப்பிட்டார். இந்தத் தேர்தல் முடிந்தபிறகு இந்தப் பணியை நான் கவனிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டினார். நிச்சயமாகத் தேர்தல் முடிந்த பிறகு பிப்ரவரி மாத இறுதிக் கட்டத்தில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு இறுதித் தீர்ப்பை - நல்ல தீர்ப்பை நாம் காண்போம் என்ற நம்பிக்கையை இந்த விழாவிலே நான் தெரிவித்து - தொடர்ந்து வழக்கம் போல் கலையுலகத்திற்கு இந்த அரசு பாடுபடும் - சாதனைகளை நிகழ்த்தும் - ஏனென்றால் கலையுலகம் வேறு, அரசு வேறு என்றில்லாமல் நடைபெறுகின்ற அரசு இது. கலையுலகத்திலிருந்து வருகின்ற வருமானம் - அரசின் சார்பில் நிறைவேற்றப்படுகின்ற பல திட்டங்களுக்கு இன்று பயன்படுகின்றது. கலையுலகத்தின் மூலமாகக் கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்கு வருவாயாக வருகிறது என்பதை நான் மறந்துவிடவில்லை.

எனவே, அந்த நன்றி உணர்வோடு நானும் அங்கும் இருப்பவன், இங்கும் இருப்பவன் என்ற முறையிலே, நிச்சயமாக உங்களோடு ஒத்துழைப்பேன், உங்களுடைய பிரச்சினைகளுக்கு நல்ல பரிகாரம் காண்பேன் என்ற உறுதிமொழியை இங்கே தெரிவித்து, இங்கே வழங்கப்பட்ட விருதுகளை விட - பரிசுகளை விட, இந்த உறுதிமொழி சிறந்தது என்று நீங்கள் கருதுவீர்கள் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

★ ★ ★ ★

2\6691

'கத்தாளங் கருங்கப்'

- எஸ்.எஸ். போத்தையா

போன தலைமுறையில் சிறுவர்கள் ஆடிய விளையாட்டுகளையும், பாடிய பாட்டுகளையும், பழக்க வழக்கங்களையும் இந்தத் தலைமுறை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. வறண்ட குடிதண்ணீர்க் கம்மாய்க்கு நடுவில், இன்று 'கிரிகெட்' ஆட்டம் நடக்கிறது. உலகளாவிய கலாச்சாரம் என்ற ஒன்று, நம் விளையாட்டு முதல் ஒவ்வொன்றாய் எல்லாவற்றையும் கழுவித் துடைத்துக் காலி செய்து வருகிறது.

பொழுதோடு பொழுதாய் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் தவம் கிடக்கும் இக்காலச் சிறுவர், சிறுமியர்களுக்கு இந்த விளையாட்டுக்கள் தெரிந்திருக்க நியாயமில்லை. நம்முடைய குழந்தைகள், பிள்ளைப் பருவத்தை, ஏழைகளானால் தொழிற்சாலைகளிலும், வசதி படைத்தவர்களானால் தொலைக் காட்சிப் பெட்டியிலும் தொலைத்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்குப் பிள்ளை வயது உண்டு. பிள்ளைப் பருவம் இல்லை.

நாட்டுப்புற மக்களுக்கு வாழ்க்கை இசையாக இருக்கிறது. இசையிலிருந்து தொடங்குகிறது. ஏடறியா, எழுத்தறியா மக்களுக்கு அறிவு வளர்ச்சி, புதியன தேடும் வேட்கை, நினைவாற்றல் என்பவை இசை சேர்ந்த சொற்கள் மூலம் நிகழ்கிறது. (எ-கா.)சொலவடை, நாட்டுப்பாடல்.

நாட்டுப்பாடல் என்பது அவர்களின் ஏடு; ஞாபகசக்தி அவர்களின் கல்வி. அனுபவங்களின் வெடிப்பில் அந்த ஏட்டைத் திறந்து அவர்கள் படித்துக் கொள்கிறார்கள்.

ஒரு கிராமத்தில் நாட்டுப் பாடல்கள் தேடி அலைந்தபோது, தன் வீட்டு வழியே போன இன்னொரு பெண்ணைப் பார்த்து, ஒரு பெண் சொன்னாள் ''இந்தா போறாளே, இவ ஒரு 'வண்டி' பாட்டு வச்சிருக்கா, இவளை உலுக்கினா பொல, பொலன்னு உதிரும்'' என்று.

அவர்களுடைய கல்வி சிறுபிராயம் முதலே, பாடல் இசையில் தொடங்குகிறது. பழமொழி என்பதும் ஒரு இசைதான். அவர்கள் சொலவடை போடும்போது, அது மழையின் இசை; கடலின் ஆழம்.

ஓடி விளையாடும்போதுகூட ஒரு பிள்ளை சாணி, சகதி, கழிவு போன்றவற்றில் மிதித்துவிட்டால் அந்தப் பிள்ளை தங்களைத் தொட்டுத் தீட்டாக்கிவிடக்கூடாது என்ற உணர்வில் மற்ற பிள்ளைகள் —

"என்பேர் மானம்
என்னையத் தொட்டா பாவம்"

என்று கூவிக்கொண்டே எச்சிலைத் தொட்டுத் தொப்புளில் வைத்துக் கொள்வார்கள்.

(குமரி மாவட்டத்தில் ஒரு இலையைப் பறித்து வைத்துக்கொண்டால் தீட்டு ஏற்படாது என்பார்கள்'' - பொன்னீலன்) விளையாட்டின் போது ஆடை அவிழ்ந்து விட்டாலோ, வேறு இடைஞ்சல்கள் ஏற்பட்டலோ - தற்காலிகமாக விளையாட்டிலிருந்து விலகி நிற்க ''தூச்சிய்யான்'' என்பார்கள்.

மொட்டைத் தலையைப் பார்த்துவிட்டால் பிள்ளைகளுக்கு விளையாட்டாகவும், கேலியாகவும் இருக்கும்.

"மொட்ட மண்டை மொளகு சாறு
கேப்ப ரொட்டி டமாஸ்"

என்று பாடிக்கொண்டு மொட்டைத் தலைப் பையன்களைத் தொட்டும், தடவியும் கிண்டல் செய்வார்கள்.

சிறுவயதில் பல்விழுந்து முளைப்பது இயற்கை. ஓட்டைப் பல்லைப் பார்த்துவிட்டால் ஒரே கும்மாளம். அதற்கென்று ஒரு பாட்டு

"ஓட்டப்பல்லுச் சங்கரா
ஒருத்தரு வீட்டுக்கும் போகாதே
ஆப்பம் வாங்கித் திங்காதே
அடிவாங்கிச் சாகாதே!"



விதம்விதமான தட்டான்களைப் பிடிப்பதில் குழந்தைகளுக்கு உற்சாகம். வேலி முள்ளில் உட்கார்ந்திருக்கும் தட்டானை சப்தம் செய்யாமல் மெதுவாகச் சென்று பிடிக்க முயற்சிப்பார்கள். இதைப் பொறாமையோடு பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு பிள்ளை தட்டானைக் கலைப்பதற்காக இப்படிக் கத்தும்:

"காத்தட்டான், கள்ளத்தட்டான்
கள்ளனுக்கு அம்புடாதே
உன்னை ஒருத்தன் பிடிக்க வாரான்
ஓடிப்போ, ஓடிப்போ!"

இதையே ஒளிந்து விளையாடும் விளையாட்டு விளையாடுகையில் ஒருவன் கண்ணைப் பொத்திவிட்டு, மற்ற பிள்ளைகள் ஒளிந்துகொள்ளச் சொல்லி விளையாடும் போதும் பாடுவார்கள். இன்றைக்கு இந்த விளையாட்டு ''Hide and Seek'' என்று ஆங்கிலத்தில் சொன்னால்தான் புரியும் என்றால், கேவலம்தான்.

குதிரை வாலித்தானியத்தை அவித்துக் காயப் போட்டிருப்பார்கள். இது தினை மாதிரி அளவிலும், குதிரைவால் மாதிரி இந்தக் கதிர் விளைந்து இருக்கும் என்பதால் இந்தப் பெயர் வந்தது. ''குதிரை வாலிச் சோறும் கோழிக்கறியும்'' என்பது சொலவடை. அவ்வளவு ருசி.

காயப் போட்டிருக்கையில் காக்காய்கள் வந்து வாய் நிறைய அள்ளிச் செல்லும். காக்காயை விரட்டக் குழந்தைகளைக் காவல் வைத்து விடுவார்கள். கையில் சிறு தகரத்துடன் தட்டிக் கொண்டே சுற்றிச் சுற்றி வர வேண்டும். காக்காய்கள் பிள்ளைகளைப் பாடாய்ப் படுத்திவிடும். ஏமாற்றுக்காரக் காக்காயையே ஏமாற்ற நினைக்கிறது பிள்ளையின் பிஞ்சு மனம்.

"காக்கா வீட்டுல தீ யெரியுது.
கள்ளப் பிராந்தே சொல்லாதே!"

- என்று பாடுவார்கள்.

கீழே சிதறிக் கிடக்கும் கடலை, பயறு போன்றவற்றைப் பொறுக்கித் தின்னும் ஒரு குழந்தையை மற்ற குழந்தைகள் -

"ஒட்டுப் பொறுக்கி
ஊரெல்லாம்
பீய்ப்பெருக்கி"

என்று கேலிசெய்யும். இவர்களுக்கும் பொறுக்கித் திங்க ஆசைதான். அந்தக் குழந்தை முந்திக்கொண்டது. அவ்வளவுதான்!

வேண்டுமென்றே ஒரு குழந்தை மற்றோர் குழந்தையின் தலையில் அதற்குத் தெரியாமல் ஒரு துரும்பையோ, காகிதத் துண்டையோ போட்டுவிட்டு —

"ஒரு ஆளு தலையில
வெள்ளாடு மேயுதாம்..."

என்று மாறி மாறிச் சொல்லிச் சிரிக்கும். நம் தலையில்தான் ஏதோ கிடக்கிறதாக்கும் என்று எல்லாப் பிள்ளைகளும் தம் தம் தலையைத் தடவிப் பார்த்துப் பரக்க பரக்க முழிப்பது வேடிக்கையாய் இருக்கும்.

கைகள் இரண்டையும் பக்கவாட்டில் நீட்டிக்கொண்டு -

"கிறு கிறு மாம்பழம்
கிய்யா கிய்யா மாம்பழம்"

என்று பலமுறை வேகமாய்ச் சுற்றிக் கீழே விழுந்து - வானமும், பூமியும் சுற்றுவது போலான உணர்வை, கிரக்கத்தை ரசிப்பது ஒரு விளையாட்டு.

இரண்டு பேர் எதிர் எதிர் நின்று கைகளைக் கோர்த்து - அப்படியே ஒரு கையை நீட்டியும், மறு கையை மடக்கியும், பிடறியில் போட்டுக்கொண்டு, கிறு கிறு மாம்பழம் சுற்றுவது போல, முடிந்த அளவு வேகத்துடன் சுற்றிக் கொண்டு -

"ராட்டு பூட்டு
ராவணன் சீட்டு"

என்று பாடுவார்கள்.

நாட்டுப்புற மக்களுக்கு வாழ்க்கை இசையாக இருக்கிறது; இசையிலிருந்து தொடங்குகிறது!

இரண்டு சிறுவர்கள் ஒரே திசையைப் பார்த்து நின்று கொண்டு கையைக் கோர்த்துக் கொள்வார்கள். மூன்றாவது ஒருவன் இவர்களுக்குப் பின்னால் நின்று கோர்த்த கைகளில் தனது ஒரு காலை மடித்து வைத்து, இரு கைகளையும் நிற்பவர்களின் தோள்களில் ஆதரவாகப் போட்டுக் கொள்வான். இவனுக்குப் பின்னால் ஒருவன் தரையில் ஊன்றி நிற்கும் ஒரு காலை கரண்டைக்கால் பாதத்தோடு பிடித்துத் தூக்கிக் கொள்வான். குதிரைச் சாரட்டுப் போலச் சவாரி புறப்படும்.

"கால் தூக்கிக் கணக்கப்
பிள்ளைக்கு
மாதம் பத்து ரூபா"

என்று சொல்லிக் கொண்டு ஓடுவார்கள். சவாரி செய்பவனுக்குப் படுகுஷியாக இருக்கும்.

மூன்று பேர் ஆஃதுபோல் வெளிப் புறமாகப் பார்த்து நெருங்கி நின்று கைகளைக் கோத்துக் கொள்வார்கள். ஒருவன் தனது ஒரு காலைப் பின்புறமாக வளைத்து மற்ற இரண்டு பேர் கோத்துக் கொண்டுள்ள கைகளில் வைப்பான். இரண்டாவது பையன் தனது ஒரு காலை அதே போல் தூக்கி மடக்கி முதல் பையன் கால் மேல் போட்டுக் கொள்வான். மூன்றாமவனும் தனது ஒரு காலைத் தூக்கி வளைத்து மற்ற இருவரது கால்களின் மேலாகவும், ஊடாகவும் நுழைத்துக் கொள்வான். இப்போது மூன்று பேர்களும் கோர்த்திருந்த கைகளை விலக்கிவிட்டு ஒரு காலில் நின்று நொண்டியடித்துக் கொண்டு கைகளைத் தட்டிக் கொண்டு வட்டமாய்ச் சுற்றி வந்து இப்படிப் பாடுவார்கள்.

"தைத் தக்கா தை
ஒரு பக்கா நெய்
வாத்தியாரு சொன்னதெல்லாம்
பொய், பொய், பொய்!"

யதார்த்தம் என்ற ஒன்று இருக்கும் போது தான் கருத்தும் கற்பனையும் அதை ஒட்டிப் பிறக்கின்றன. கால் கற்பனை, அரைக் கற்பனை, முழுக்கற்பனை எதுவாக இருந்தாலும் யாதார்த்தத்திலிருந்து தான் முளைக்கிறது. அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை கற்றுக் கொடுப்பவர்கள், போதகர்கள், வாத்திமார்கள் வாக்கு ஒன்றும் சொல் ஒன்றுமாக இருப்பதைத் தான் இந்தப் பாட்டு தெரியப்படுத்துகிறது.

சில சிறு பிள்ளைகள் உடுப்பு இல்லாமல் அம்மணமாய்த் திரிவார்கள். அதைப் பார்க்கும் மற்றப் பிள்ளைகள் —

"அம்மணக் குண்டி
ஆட்டாம் புளுக்கை
தென்ன மரத்துல
தேரோட்டம்"

என்று பாடிக் கேலி செய்வார்கள். ''தெற்குத் தெருவுல தேரோட்டம்'' என்றும் சொல்வார்கள்.

வெயில் அடிக்கும்போது மழையும் பெய்தால் ''நாய்க்கும் பூனைக்கும் கல்யாணம்'' என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

விளையாட்டில் - உதாரணமாக நொண்டியடித்து விளையாடுவதில் நொண்டிக் கொண்டே மற்ற பிள்ளைகளைத் தொட வேண்டும். நொண்டியடிப்பது கடினம். அகப்படாமல் ஓடுவது லேசு; இப்படியே ஒவ்வொரு விளையாட்டிலும் உண்டு. வெகு நேரம் அகப்படாமல் ஓடி விளையாடிய பிள்ளை அகப்பட்டுக் கொள்கிறது என்று வைத்துக்கொள்வோம். நொண்டியடிக்கும் சிரமத்திற்குப் பயந்து ''நேரமாகிவிட்டது.. எங்க அம்மா சத்தம்

போடும் நான் வரவில்லை" என்று ஒடும். இதைப் பார்க்கும் மற்ற பிள்ளைகள்,

"என்ஆட்டைக்கு வராதவ
எண்ணைக்காரன் பெண்டாட்டி"

- என்று சொல்லி திட்டுவார்கள்.

வீடுகட்டி, சோறு பொங்கி பொண்ணு மாப்பிள்ளை வைத்து விளையாடுவதும் உண்டு. போன தலைமுறையில் பால்யவிவாகம் சர்வ சாதாரணம். கல்யாணமான சிறுமிகளை அவர்களது கணவர் பெயரைச் சொல்லிக் கேலி செய்வார்கள்.

கணவர் பெயரின் முதல் எழுத்தை எடுத்துக்கொண்டு அத்துடன் "மூனாதண்டட்டி" என்று சேர்த்து - பின் பெயரைச் சொல்லி பொண்டாட்டி - என்று சேர்த்துக் கொள்வார்கள்.

சானாமுனா தண்டட்டி,
சண்முகராசு பொண்டாட்டி,
கானாமுனா தண்டட்டி,
கணபதி ராசு பொண்டாட்டி,
ரானா முனா தண்டட்டி,
ராமுக் கொத்தன் பொண்டாட்டி.

- இப்படி எல்லாப் பெயர்களுக்கும் சொல்லலாம்.

நான்கு பேர் மூலைக்கு ஒருவராய் நின்று கொள்வார்கள். ஐந்தாவது குழந்தை இட்து கையைத் தலையில் வைத்துக்கொண்டு வலது கையை நீட்டிய வண்ணம், உள்பக்கமாக -

"என் தலைக்கு எண்ண ஊத்து
எருமமாட்டுக்குப் புல் போடு"

என்று பாடிக்கொண்டே சுற்றிவருவாள். அப்போது நான்கு மூலையிலும் நிற்பவர்கள் வலதுபுறமாக இடம் மாறி ஓடி நிற்பார்கள். அப்படி இடம் மாறும்போது பாடி வருபவள் அவர்களைத் தொடவேண்டும். அப்படித் தொட்டுவிட்டால் தொடப்பட்டவள் பாடிவர வேண்டும்.

ஒரு சின்னக் குழந்தையைச் செல்லமாகப் பக்கத்தில் வைத்துக் கொண்டு கொஞ்சுவது போல் பாவனை காட்டி மற்றவர்களிடத்தில் -

"நான் வளர்த்த பூனைக்
குட்டியைத்
தொட்டுரு பார்ப்போம்"

- என்பார் ஒருவர்.

ஒருவன் "இந்தா நான் தொட்டுட்டேன்" என்று அந்தக் குழந்தையைத் தொடுவான்.

முதல் ஆள் "அப்ப, எனக்கு சர்க்கரையா" என்று சொல்லி குழந்தையைச் சற்றுப் பலமாக அடிப்பார். இப்படி மாறி மாறி நடக்கும். அகப்பட்டுக் கொண்ட குழந்தையின் பாடு திண்டாட்ட மாய்ப் போய்விடும். முதலில் குழந்தை நம்மைக் கொஞ்சுகிறார்கள் என்று நம்பி, பின்பு அடி விழ, அடி விழ தப்பித்துக் கொண்டால் போதும் என்ற நிலைக்கு வந்துவிடும். மற்றவர்களுக்கு வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் இருக்கும்.

ஒரு பிள்ளை இரண்டு உள்ளங் கைகளையும் விரல்களையும் பிரித்த நிலையிலுள்ள கையில் ஒவ்வொரு குத்தாகக் குத்துவான். "பிடி கொளக்கட்ட" என்று சொல்லிக் குத்தும்போது, குத்துகிற கையைப் பிடிக்கவேண்டும். பாட்டைப் பார்ப்போம்.

"மாக் கொளக்கட்ட
மஞ்சக் கொளக்கட்ட
பிள்ளையார் கோயில்ல
பிடி கொளக்கட்ட"

குன்னாங் குன்னாங் குர்

மே காற்றுக் காலத்தில் குழந்தைகள் ஓலையில் முள்ளைக் குத்தி காற்றாடி செய்து விளையாடும். காற்றாடி சரியாகச் சுற்றாவிட்டால் ஓலையின் இரு ஓரங்களையும் பிடித்துத் திருகி - காதின் பக்கத்தில் வைத்துக் கொண்டு -

குன்னாங் குன்னாங் குர்ர்
கோழி முட்டை சுர்ர்
ஒங்கப்பன் ஆட்டுக்கிடையில்
செத்துக் கிடக்கான்
பேட்ரிலைட்டுக்
கொண்டா டோய்!"

என்று ராகமாய்ச் சொல்லுவார்கள். இதைக் கேட்டு செத்துக் கிடக்கும் காற்று எழுந்துவந்து காற்றாடியைச் சுற்ற வைக்குமாம். அல்லது திடுக்கிட்டு காற்றாடி சுற்றலாம். உண்மையில் ஓலையின் இரு ஓரங்களையும் வளைத்து விடுவதால் அதன் மீது காற்று பட்டு காற்றாடி சுற்றும். காற்றாடி போல் சுற்றிக் கொண்டிருக்கும் மண்ணின் குழந்தைகளுக்கு, அதுக்கும் ஒரு பாட்டு.

வெள்ளாமைக் காலத்தில் கம்பங் காட்டிற்குக் காவலுக்குப் போக வேண்டும். குருவிகள் படை படையாக வந்துவிடும். தகரத்தைத் தட்டி விரட்ட வேண்டும். பாதை மேல் பிஞ்சை என்றால் போகிறவர்கள் வருகிறவர்கள் கதிரை ஒடிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லை என்றால் போகிறதும் வர்றதும் ரெண்டு 'கருதை' நசுக்கி உமி ஊதி வாயில் போட்டுக் கொண்டு போய்விடும். விளைந்த பச்சை மாறாத கருது அவ்வளவு மணமாகவும் ருசியாகவும் இருக்கும்.

"கம்மங் கருதைக் கண்டால் கை சும்மா இருக்காது. மாமியா மகளைக் கண்டால் வாய் சும்மா இருக்காது" என்பது சொலவடை. ஆள் காவலுக்கு இருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்ள ஓயாமல் சத்தம் போட்டுக் கத்தவேண்டும்.

"கருத ஒடியாத
கக்கத்துல வைக்காத
மானத்தப் பாராதே
வயிறூதிச் சாகாதே
கழுதேஏஏ... கழுதே"

என்று தகரத்தைத் தட்டிக் கொண்டே பாடுவார்கள்.

மெதுவான குரலில் சாடையாக ஒரு பிள்ளையின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது, அந்தப் பிள்ளை "என்னைக் கூப்பிட்டாயா?" என்று கேட்கும். "நான் உன்னையா கூப்புட்டேன். காரவீட்டுக் கருத்த நாயைக் கூப்பிட்டேன்" என்று சொல்லிச் சிரிப்பது.

ஏதாவது ஒரு பொருளைக் கையில் மறைத்து வைத்துக்கொண்டு கையை உயர்த்தி "யாருக்கு வேட்டை" என்று ஒரு பிள்ளை கேட்கும். ஆசைப்பட்ட ஒரு பிள்ளை "எனக்கு வேட்டை" என்று கையை உயர்த்திக் கேட்கும். அதற்கு "ஒங்க மாமியா பல்லோட்டை" என்று பதில் வரும். மற்ற பிள்ளைகள் ஏமாற்றமடைந்த பிள்ளையைப் பார்த்து "ஆசைப்பட்ட, ஊசிப்போச்சி" என்று சொல்லி சிரித்துக் கேலி செய்வார்கள்.

விளையாட்டில் அழிச்சாட்டங் காட்டுவதும் கண்ணிலடித்துப் பொய்ச் சத்தியம் செய்வதும் சர்வ சாதாரணம். கோட்டை மிதித்துவிட்டு - மிதிக்கவில்லை என்று வாயடியடித்துச் சில பிள்ளைகள் சாதித்து விடும். மறு தடவை மறுக்கமுடியாத அளவுக்கும் மறைக்க முடியாத அளவுக்கும் அதே பிள்ளை ஒரு தவறு செய்து ஆட்டையை இழந்துவிடும். முதலில் பாதிக்கப்பட்ட குழந்தை -

"அழிச்சாங் காட்டுனா சாமி
தொழிச்சாங் காட்டுது"

என்று கூறிச் சந்தோசப்படும். தெய்வ தண்டனையில் குழந்தைகளுக்கு அவ்வளவு நம்பிக்கை! தப்பு செய்தா சாமி தண்டிக்கும், பகவான் இருக்கிறான் பார்த்துக் கொள்வான். 'அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்' போன்ற சமுதாயத்தில் நடமாடும் கருத்தாக்கங்கள் சிறுவர் நம்பிக்கையிலும் நடப்பட்டிருக்கின்றன.

ஆடு, மாடு மேய்க்கும் சிறுவர்கள் கோடைக் காலத்தில் மூன்று நான்கு மைல் தூரம் அலைந்து எங்கோ குளம், குட்டையில் கிடக்கும் - தண்ணீரை ஆடுமாடுகள் குடிக்கும்படி செய்வார்கள். அப்போது

"நாளைக்கு இந்நேரம்
தண்ணி காட்டினாலும் காட்டுவேன்
காட்டாட்டாலும் இல்லை
கொம்புக்கு குருணித் தண்ணி
குடிச்சுக்கோ ஓஓ..."

என்று கூவுவார்கள். பாவம் வாயில்லாச் சீவன்கள்.

குச்சுக் குச்சு ராக்கம்மா

பெண் தேடிச் செல்லும் ஒரு விளையாட்டுத்தான் "குச்சுக்குச்சு ராக்கம்மா".

கிராமிய விளையாட்டில் பாடும் ஒரு வரியை சினிமாவில் எப்படியெல்லாமோ மாற்றிப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பெண்கள் இரண்டு சோடிகளாக 30 அடி தூரத்தில் எதிர் எதிராக நின்று கொண்டு, முதலில் ஒரு சோடி இப்படி பாடிக்கொண்டு மற்றோர் சோடியைச் சுற்றி வரும் -

"குச்சுக் குச்சு ராக்கம்மா
பொண்ணுண்டோ
கூசாலி ராக்கம்மா
பொண்ணுண்டோ
சாதி சனமெல்லாம்
பொண்ணுண்டோ
உங்க சம்பந்த வழியெல்லாம்
பொன்னுண்டோ"

மனிதருக்குள்
பேதத்தையும்,
அச்சத்தையும்
மூட்டக்கூடிய,
வளர்க்கக்கூடிய எந்த
ஏற்பாடும் சுதந்திரத்தின்
பரம விரோதிகளே !
- அண்ணா

இதற்கு மறுதரப்பிலிருந்து சுற்றி வந்து இப்படி பதிலளிப்பார்கள் - "குச்சுக் குச்சு ராக்கம்மா பொண்ணில்ல கூசாலி ராக்கம்மா பொண்ணில்ல சாதி சனமெல்லாம் பொண்ணில்ல - எங்க சம்பந்த வழியெல்லாம் பொண்ணில்ல!"

முதலில் சுற்றி வந்த சோடி மீண்டும் அந்தப் பாட்டில் "பொண்ணுண்டோ" என்ற சீருக்குப் பதில் 'பத்து ரூபா' என்ற சொல்லைச் சேர்த்து 'குச்சு குச்சு ராக்கம்மா பத்து ரூபா' என்று பாடி வரும்.

இதற்கு 2-வது சோடி 'பொண்ணில்ல' என்ற சீருக்கு பதில் 'அது வேண்டாம்' என்ற சீரைச் சேர்த்து, 'குச்சுக் குச்சு ராக்கம்மா, அது வேண்டாம்' என்று பாடிச் சுற்றிவரும்.

பத்து ரூபா, நூறு ரூபா, லட்ச ரூபா, பட்டுச்சேலை, ஒட்டியாணம், பதக்கம், சங்கிலியென்று கற்பனைக்கு எட்டு மட்டும் பரிசம் போடுவதாய்ச்சொல்லும். எதிர்த்தரப்பு கடைசி வரை "அது வேண்டாம்" என்றே சாதிக்கும். பெண்ணிற்கு அவ்வளவு கிராக்கி. அது ஒரு காலம்!

சமுதாயச் சக்தி

வரலாற்றின் தலைச் சக்தியாக பெண் இருந்தாள். இயக்கிச் செல்லும் 'சமுதாயச் சக்தியாக' அவள் இருந்தாள். ஆணாதிக்கம் மேல் கை எடுத்து பெண்ணை ஒருபொருளாக மாற்றிவிட்ட போது, பெண்ணுக்கு விலை பேசும் வில்லங்கம் மேலெழுந்தது. தாய் வழிச் சமுதாயமாக இருந்தது வரை பெண்ணுக்குப் பொன் கொடுத்து மதிக்கப்பட்டாள். பெண்ணுக்குப் பொன் கேட்பதெல்லாம் இப்போது 'வந்த கேவலம்!'

விளையாட்டுப் பாடல்கள் வரலாற்றுச் சுழற்சியை விவரிக்கும் சாட்சியங்களாகவும் கலாச்சார மாறுதல்களைப் பதிவு செய்யும் ஏடுகளாகவும் திகழ்கின்றன.

மன்னர் ஆட்சிக்காலத்தில் குடியானவர்கள் பட்ட கஷ்டங்களைக் கோடிட்டுக் காட்டுவது இந்த விளையாடடு. ராசா வீட்டில் விசேஷம் என்றால், அதற்கு வேண்டிய பொருட்களைக் குடியானவன் இனாமாகக் கொடுக்கவேண்டும். ஒரு சில வேலை செய்யவேண்டும்.

ராசா மாதிரி ஒருவன் உட்கார்ந்து கொள்வான். அவனுக்குப் பக்கத்தில் ஒருவன் சேவகன் போல் நின்று கொள்வான்.

சற்றுத் தள்ளி ஒருவர் பின் ஒருவராகக் காலை நீட்டி மடியில் உட்காருவது போல் உட்கார்ந்து கொள்வார்கள். முன்னால் உட்கார்ந்திருப் பவர்களைப் பிடித்துக் கொள்வார்கள். முதலில் உட்கார்ந்திருக்கும் குழந்தைதான் தோட்டக்காரன்.

சேவகன் தோட்டக்காரனிடம் வந்து "ராசா மகளுக்குக் கல்யாணமாம்–ஒரு பூசணிக்கா வேணுமாம்" என்பான். அதற்குத் தோட்டக்காரன் "இப்பதான் விதை ஊனி இருக்கு" என்பான். இதை அப்படியே சேவகன் ராசாவிடம் சொல்வான். ராசா 'அதையும் வாங்கிட்டு வா' என்பான். சேவகன் தோட்டக்காரனிடம் வந்து 'அதையும் கொடுப்பியாம்' என்பான். 'இப்பத்தான் ஒரு இலை விட்டிருக்கு' என்பான். இதைச் சேவகன் ராசாவிடம் சொல்ல - 'ராசா' 'அதையும் வாங்கிட்டு வா' என்பான்.

இப்படியே பத்து இலை வரை சொல்லி, கொடி வீசியிருக்கு, பூப்பூத்திருக்கு, காய் காச்சிருக்கு என்று தோட்டக்காரன் சொல்ல ராசா 'அதையும் வாங்கிட்டு வா' என்று சொல்வான்.

முடிவாக 'தண்ணீர் பாய்ச்சி' வேலியடைத்துவிட்டு, ஒரு காய் பிடுங்கிக் கொண்டு போ என்பான். சேவகன் தண்ணீர் பாய்ச்சுவது போல உட்கார்ந்திருக்கும் பிள்ளைகளைத் தாண்டுவான். வேலியடைப்பது போல பிள்ளைகளைச் சுற்றி நொண்டியடிப்பான். பிள்ளைகள் அவனை விரட்டுவது போல் குரைப்பார்கள். ஒரு பிள்ளை சேவகனின் காலில் நறுக்கென்று கிள்ளிவிடும். தேள் கொட்டிவிட்டதாய் சேவகன் அழுவான். ''ஒம்பீயையும், ராசா பீயையும் குழப்பிப் போடு, தாவலாய்ப் போகும்'' என்று கூறி எல்லோரும் சிரிப்பார்கள்.

கடைசியில் உட்கார்ந்திருப்பவன் தான் பூசணிக்காய். அவனது இடுப்பைப் பிடித்து சேவகன் தூக்குவான். அவன் முன்னால் உட்கார்ந்திருப்பவனைப் பிடித்துக்கொண்டு விடமாட்டான். ஒரு வழியாக அவனை பூசணிக் காயாகத் தூக்கி ராசாவிடம் கொண்டு போய்ச் சேர்ப்பான். 'இந்தக் காய் அழுகிப் போச்சு, இன்னொரு காய் வாங்கிட்டு வா என்பான் ராசா. இப்படி மாறி மாறி நடக்கும்!.

உத்தி கட்டிவருதல்

விளையாட்டில் இரண்டு குழுக்களாகப் பிரிப்பதற்கான வழிமுறையே மிகவும் சுவாரஸ்யமாய் இருக்கும். சோடி சோடியாய் உத்திகட்டி வருவார்கள். குழுத்தலைவர்களிடம் ''உத்தி யார்? உரி யார்?'' என்று கேட்பார்கள். தலைவர்களில் ஒருவன், ''நான்தான் உத்தி, நீதான் உரி'' என்பான். அதற்கு உத்தி கட்டி வந்தவர்களில் ஒருவன்,

> ***''மானத்த வில்லா வளைச்சவன் வேணுமா?***
>
> ***மணலைக் கயிராத் திரிச்சவன் வேணுமா?''***

என்று கேட்பான். தலைவன் ஏதாவதொன்றைக் கேட்க அந்தப் பெயருக்குரியவன் அந்தக் குழுவில் சேர்ந்து கொள்வான். மறு உத்திவரும் போது, கேட்கும் உரிமை இரண்டாவது குழுத் தலைவனிடம் போய்விடும். இப்படி மாறி மாறி வரும்.

உத்தி கட்டி வருபவர்கள்,

> ***''வேலியத் தாண்டற வெள்ளக் குதுர வேணுமா?***
>
> ***மானத்தத் தாண்டற மயிலக் குதுர வேணுமா?''***

என்றும்,

> ***''பனைமரத்து மேலிருந்து பாட்டுப் படிக்கிறவன் வேணுமா?***
> ***உடமரத்து மேலிருந்து***
> ***உசவடிக்கிறவன் வேணுமா?''***

என்றும் பலவிதமாகக் கேட்பார்கள்.

கால் கற்பனை, அரைக் கற்பனை, முழுக் கற்பனை எதுவாக இருந்தாலும் யதார்த்தத்திலிருந்துதான் முளைக்கிறது!

சாவுச் சடங்கையும் சிறுமிகள் ஒரு விளையாட்டாக்கிக் கொள்வார்கள். ஆடி மாதம் 10, 12 வயதுப் பெண்கள் துணியில் பொம்மை செய்து அது இறந்து விட்டதாய்ப் பாவித்து தண்ணீர்க் கரையில் கொண்டு போய், ஒப்பு வைத்துக் கட்டி அழுவார்கள்.

> ***''வாயைக்கட்டி வயித்தைக்கட்டி***
> ***வளர்த்தனடி பொம்மை .***
> ***உன்னை***
> ***வைப்பாத்துத் தண்ணியில***
> ***விட்டனடி பொம்மை''***

(''வாய்க்காலுத் தண்ணியில விட்டனடி பொம்மை'' என்றும் கூறுவதுண்டு)

ஒப்பாரி வைத்து பொம்மையை எரித்து - சாம்பலை நீரில் கரைப்பார்கள்.

விளையாட்டுகளில் இன்னும் விவரிக்கப்பட வேண்டியவை ஏராளம். திரி திரி பொம்மக்கா, தெல்லு, கோலி, கிட்டிக்குச்சி, பேப்பந்து, பிள்ளையார் பந்து, குழிப்பந்து, ஒச்சிய்யான், வண்ணான் பொதி, கித்தான் மந்தி, தவிட்டுக்குஞ்சி, சடுகுடு, கிளித்தட்டு, எட்டாளந்தட்டு, நிலாப்பூச்சி, கண்ணாம்பூச்சி, தாயம், தட்டாங்கல், பன்னாங்குழி, பூச்சொல்லி விளையாடுவது, மாட்டுக்கால் விளையாட்டு, ஒத்தையா ரெட்டையா, பம்பரம், மதியம், சுண்டி, நீர் விளையாட்டுக்கள் இப்படி ஏராளம் ஏராளம். இவ்விளையாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் அவற்றிற்கேயுரிய சில சொற்கள் ஆராயப்பட வேண்டியவை. சிலவற்றில் சமுதாய, வரலாற்றுச் செய்திகளுக்குச் சாட்சியங்களைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு குடம் தண்ணீ ஊத்தி, ஒரு பூப்பூத்தது என்று பத்து வரை சொல்லி - கடைசியில் ''வாரவனைக் கண்ணி போட்டுப் பிடிச்சுக்கோ'' என்பான். ஒருவனைப் பிடித்துக் கொண்டபின் - பிடிபட்டவனின் கட்சித் தலைவன், ''இம்புட்டுப் பணம் தாரேன், விடுடா துலுக்கா'', என்பான். பதிலுக்கு ''விடமாட்டேன் மலுக்கா'', என்பான் எதிர்க்கட்சித் தலைவன்.

சடுகுடு விளையாட்டில் வெற்றி பெற்றதை 'எல்லை வைத்தோம்' என்றும், கிந்தான், தாயம் விளையாட்டுகளில் வெற்றி பெற்றதை 'பழம்' என்றும், தட்டாங்கல் விளையாட்டில் வெற்றியைக் ''கட்டைவைத்தேன்'' என்றும் கூறுவர். சுண்டி, ஒத்தையா ரெட்டையா, தெல்லு விளையாட்டுகளில்,''மொத்தீட்டான்'', ''தோத்துட்டான்'' என்றும் சொல்லுவார்கள்.

விளையாட்டு முடிவு

வெகுநேரம் விளையாடியாய் விட்டது. வீட்டிற்குப் போகும் நேரமாய் விட்டது. இருப்பதில் பெரிய பிள்ளை இப்படிக் கூறி விளையாட்டை முடித்து வைக்கும் -

> ***''அவுகவுக வீட்டுக்கு***
> ***அவரக்கஞ்சி குடிக்கப் போங்க***
> ***பிள்ளப் பெத்த வீட்டுக்குப்***
> ***புளியங் கஞ்சி குடிக்கப்***
> ***போங்க''***

கல்யாணம், திருவிழா, பொங்கல் காலங்களில் சிறுவர், சிறுமியர் ஓரிடத்தில் இரவு நேரத்தில் தங்க நேரிடும். அப்போது உற்சாக மிகுதியில் பேசிச் சிரித்துக் கேலி செய்வதும், கதை சொல்லியும் கும்மாளம் போடுவார்கள். நேரம் ஆக ஆகச் சில பிள்ளைகளுக்குத் தூக்க உணர்வு மேலிடும். சில பிள்ளைகள் பலமாகச் சிரித்தும், பேசியும் தூங்கவிடாமல் தொந்தரவு செய்யும். இது அளவு மீறிப் போகும் போது, ஒரு பெரிய பிள்ளை தலையிட்டு, ''சரி, போதும் தூங்குவோம். யாரும் பேசக்கூடாது ''கத்தாளங் கருங்கப்'' என்று சொல்லும். இதற்கு மேல் யாரும் பேசமாட்டார்கள். பேசக்கூடாது.

நாமும் இதற்கு மேல் கதையை வளர்த்தாமல் இத்துடன் நிறுத்திக் கொள்வோம்?

''கத்தாளங் கருங்கப்!''

● ● ●

சாத்தன் - சாஸ்தா - ஐயனார்!

நடன. காசிநாதன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

சாத்தன் என்னும் பெயர் சாத்து என்ற வேர்ச்சொல்லில் இருந்து வந்திருக்கலாம். சாத்து என்னும் சொல்லுக்குச் சாத்துகை, சாத்துமுறை, வாணிகக் கூட்டம், குதிரைச் சேவகர் என்ற பொருள்கள் காணப்படுகின்றன.

வடமொழியில், 'சார்த் என்னும் சொல்லுக்கு ஒரு வணிகத் தொகுதி, தொகு என்று பொருள்கள் தரப்பட்டுள்ளது. தமிழ்ச் சொல்லான 'சாத்து', 'சார்த்' என்றாயிற்றா அல்லது வடமொழிச் சொல்லான 'சார்த்' என்பது தமிழ்ச் சொல்லாயிற்றா என்பது விளங்கவில்லை.

ஐயன் பெயர்களாகக் காரி, புறத்தவன், கடல்வண்ணன், சாத்தா, பூரணைகேள்வன், யோகி, புட்கலைமணாளன், மாசாத்தன், செண்டாயுதன், வெள்ளையானையூர்தி, ஆரியன், அறத்தைக் காப்போன், அரிகரகுமரன் என்று சூடாமணி நிகண்டில் குறிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் சாத்தனுக்கு ஐயன் அல்லது ஐயனார் என்ற பெயர் ஏற்பட்டது பிற்காலத்தில்தான் என்று தெரிகிறது. ஐயன் என்பது ஆரியன் என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஹரி ஹரபுத்திரன் என்ற வழக்கும் பிற்காலத்தியதே.

சாத்தன் என்னும் வழக்கு சங்ககாலம் தொட்டு காணப் படுகிறது. சங்காலப் புலவர் களில் குறிப்பிட்டுக் கூறும் படியான எண்ணிக்கையில் சாத்தன் என்ற பெயர் சூட்டப்பட்டிருப்பது கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

பங்குனி முயக்கம் என்னும் விழா உறையூரையொட்டிய காவிரியாற்றின் மணல் நிறைந்த பகுதியில் தேன் நாறும் கோவையில் கொண்டாடப் பெற்றதாக அகநானூறு புலப்படுத்துகிறது. இவ்விழா பங்குனித் திங்களில் உத்தரமும் நிறைமதியும் கூடிய நன்னாளைப் பங்குனி முயக்கம் என்பர். இக்குறிப்புக் கொண்டு சாத்தனை வழிப்பட்டதாக உரையாசிரியர்கள் கருதியுள்ளனர். அவர்களது கருத்து ஏற்புடைத்தாயின் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி உத்திரத்தின்போது சாத்தனுக்கு விழா எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. பல்லவர் காலத்தில் வணிகர்கள் தங்களது குலப் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்வதற்கென "சாத்தகணம்" என்ற அமைப்பைக் கொண்டிருந்தனர் என்றும் அவ்வமைப்பில் உறுப்பினராய் இருந்தவர் "சாத்தகணத்தார்" என்னும் சாத்தப் பெருமக்கள் என்றும் அழைக்கப் பெற்றுள்ளனர். மேலும் பிற்காலச் சோழர் காலத்து இலக்கியமான தக்கயாகப் பரணியில்

> ***"மிக்கு அள்ளும் கறி அருந்த மிடாப் பலவும்***
> ***தடாப்பலவும்***
> ***எக்கள்ளும் ஒரு பிள்ளை மடுத்தாட***
> ***எடுக்குதியே***

என்று ஆளப்பெறும் வரிகள் சாத்தனாகிய பிள்ளை கள் குடித்துவிட்டு ஆடுவார் என்பதைத் தெரிவிக்கிறது.

மேற்காணும் ஆதாரங்களை வைத்துப் பார்க்கையில் சாத்தன் என்ற சொல்தான் ஐயனாருக்கு ஏற்பட்ட பழமையான சொல் என்றும், அச்சொல் 'சாத்து' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியிருக்கக் கூடும் என்று நாம் உணரலாம்.

'சாத்து' என்பது வணிகத் தொகுதியையும் குதிரை வீரனையும் குறிப்பதால் சாத்தனார் என்னும் தெய்வம் வணிகர்களில் முழு முதல் தெய்வமாக இருந்திருக்கலாம். சங்க காலத்தில் தமிழகத்தில் வணிகர்கள் அரசர்க்கு அடுத்த நிலையில் இருந்தவர் ஆவர்.

தரை வழிப்பயணம் மேற்கொண்டு வணிகம் செய்தவர் சாத்துவர் என்றும் கடல் வழிப்பயணம் மேற்கொண்டு வணிகம் செய்தவர் 'நாயக்கர்' என்றும் அழைக்கப்பட்டனர். தரைவழி வாணிகம் நடத்திய வணிகர்களுக்குக் காவல் தெய்வமாக விளங்கியவர்தான் 'சாத்தன்'. ஆதலால் தான் இத்தெய்வம் பெரும்பாலும் பெருவழிகளின் அருகில் காணப்படுகிறது.

வணிகர்கள் தங்கள் வணிகம் காரணமாக வெளியூர் செல்ல நேர்கையில் தங்களைப் பாதுகாத்து வருவதற்கென 'அத்திகோசாத்தார்' மற்றும் 'வீரகோசத்தார்' என்ற படைகளைக் கொண்டிருந்தனர். வணிகர்களது படைவீரர்கள், முனை வீரர், பெருநீராவியார், கொடிவீரர், செட்டி வீரர், எறிவீரர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். மேலும் தாங்கள் பயணம்

'மேற்கொள்ளும் பெருவழிகளில் சாத்தன் (ஐயனார்) சிலையும் அமைத்து வழிப்பட்டிருக்கின்றனர். சிறப்பு வாய்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்கருகிலேயே, முதல் பராந்தகன் காலத்தில் திசையாயிரத்தைஞ் ஞூற்றுவர் ஐயனாருக்குச் சிலை அமைத்து வழிப்பட்ட செய்தி தெரிவிக்கும் கல்வெட்டும், அவ்வையனார் சிலையும் உள்ளன. பூலாங்குறிச்சியில் திசையாயிரத்தை ஞூற்றுவர் வாழ்ந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

மேற்காணும் கருத்திலிருந்து திசையாயிரத்தைஞ் ஞூற்றுவர் போன்ற வணிகர்கள் எங்கெங்கு வாழ்ந்தார்களோ அவ்விடங்களுக்கருகிலெல்லாம் சாத்தன் கோயில் இருந்திருக்கும். இக்கருத்துக்கு வலிவூட்டுவதாகப் பெரும் வணிகர்கள் வாழ்ந்த பூம்புகாரில் புறம்பணையான் (சாத்தன்) கோயில் இருந்திருப்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது. மேலும் அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்டுள்ள பழமையான ஐயனார் சிற்பங்கள் அனைத்தும் வணிகர்கள் வாழ்ந்திருந்த நகரங்களுக்கு அருகிலேயே கிடைத்திருக்கின்றன.

ஆலகிராமம் (திண்டிவனம் அருகில்) 2 ஐயனார் சிற்பங்களும், எசாலம் (விழுப்புரம் அருகில்) என்னுமிடத்தில் ஒரு ஐயனார் சிற்பமும், நாகத்தி (குஞ்சாவூர் அருகில்)யில் ஒரு ஐயனார் சிற்பமும், சூணாம்பேடு (மரக்காணம் அருகில்) என்னுமிடத்தில் ஒரு ஐயனார் சிற்பமும் கிடைத்துள்ளன.

வணிகர்கள் பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சாத்தனாரைத் தங்கள் முக்கியத் தெய்வமாக வழிபட்டிருக்கிறார்கள். ஆதலால் தான் சாத்தனுக்கு அருகன், புத்தன், ஆரியன், அரியரன், புத்திரன் என்ற பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன. அவலோகதீசுவரர் என்ற மானிடபுத்தர் 'மகாசத்வர்' என்று வணங்கப்பட்டார். வடமொழி நிகண்டான 'அமரகோஸம்' புத்தர் பெருமானை சாத்தன் என்றும் கூறுகிறது.

சாத்தன் வழிபாடு கேரள மாநிலத்திம் மற்றும் குமரி மாவட்டத்திலும், சாஸ்தா வழிபாடு என்றும், தமிழ் மாநிலத்தின் பிற பகுதிகளில் 'ஐயனார்' வழிபாடு என்றும் தற்காலத்தில் வழிபடப்பட்டு வருகிறது. கேரள மாநிலத்தில் முக்கியக் கோயில்களிலேயே திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் சாஸ்தாவுக்கெனச் சிற்றாலயங்கள் உள்ளன. தமிழகத்தில் முக்கியக்கோயில்களில் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் விநாயகர்களுக்குத்தான் சிற்றாலயம் உள்ளது. ஐயனாருக்கென முக்கியக் கோயில்களில் இடம் கிடையாது. ஐயனாரைக் காவல் தெய்வங்களுள் ஒன்றாக ஊரின் புறத்தேதான் வழிபடுகின்றனர். ஆதலால்தான் சிலம்பு கூட புறம்பணையான் கோயில் என்று தெரிவித்துள்ளது.

மேலும் கேரளத்தில் சாஸ்தா கோயிலின் வழிபாட்டையும் முக்கிய ஆலயப் பூசாரி தான் நடத்துகிறார். ஆனால் தமிழ்நாட்டில் ஐயனார் கோயில் வழிபாட்டைப் பிராமணரல்லாத 'கிராமப் பூசாரிகள்தான்' செய்து வருகின்றனர். தொன்றுதொட்டே ஐயனார் இந்து மதத்தின் முக்கியக் கடவுளர்களுள் ஒருவராக மதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நாட்டை ஆண்ட மன்னர்கள் வழிபடாமல் அவர்களுக்கு அடுத்த நிலையிலிருந்த வணிகர்கள் வழிபட்டதால் அவ்வாறு இருந்திருக்கலாம்.

ஐயனார் வழிபாடு வட இந்தியாவில் சிறப்பான இடத்தைப் பெற்றதாகத் தெரியவில்லை. அங்கு வணிகர்கள் [illegible] வழிபாட்டை முக்கிய வழிபாடாகக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

சாத்தனுக்குச் சங்க காலத்திலேயே கோயில் இருந்திருக்கும். ஆனாலும் சாத்தான் கோயில் பற்றிய செய்தி முதன் முதலில் சிலப்பதிகாரத்தில்தான் காண முடிகிறது. சிலப்பதிகாரக் காலத்தில் சாத்தான் வழிபாடு இந்துமதக் கடவுளர் கூட்டத்தில் இணைந்துவிட்ட நிலையைப் பெற்றிருக்கிறது.

ஹரிஹரபுத்திரன் தோற்றம் பற்றி முதன் முதலில் ஸ்ரீபாகவதம் தெரிவிக்கிறது. சுப்ரபேதாகமும் இவ்வரலாற்றைக் கூறுகிறது. பத்மஸம்ஹித என்னும் நூல், ஹரிஹரபுத்திரனுக்கு . பூசையை 'பாரஸவா' என்பார் நடத்த வேண்டும் என்கிறது. பாரஸவா என்பார் கலப்புமணத் தம்பதியருக்குப் பிறந்த குலத்தவர் என்று பிற சான்றுகளிலிருந்து தெரிகிறது.

சாத்தனின் உருவம் முதலில் சாதாரண ஒரு மனிதன் போன்று தான் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இரு கரங்கள் தான் பழமையான சிற்பங்களில் காணப்படுகின்றன. சாத்தனின் உருவ அமைதியை விவரிக்கும் சுப்ரபேதாகமம், சாஸ்தா இரண்டு கரங்களுடனும், இரு கண்களுடனும், கருத்த நிறத்துடனும் வடிவமைக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. மேலும் நாய்கள், ஆடுகள் மற்றும் பறவைகளுடனும் விளையாடிக் கொண்டிருப்பவர் போன்று தோற்றமளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கிறது. வலக்கரத்தில் செண்டும், இடக்கரத்தில் பழங்களும், இலைக்கொழுந்துகளும் காணப்பெறுதல் வேண்டும் எனறும் மதனா மற்றும் வர்ணணி என்னும் தம் மனைவியர் இரு பக்கங்களிலும் காணப் பெறுதல் வேண்டும் எனவும், சாஸ்தாவின் இடப்புறத்தில் தமனகா என்னும் அழகற்ற உருவம் இருத்தல் வேண்டும் எனவும் அதேநூல் விவரிக்கிறது.

தஞ்சை மாவட்டக் கலம்காரி ஓவியம் !

இயற்கையாகக் கிடைக்கும் வண்ணங்களைக் கொண்டு ஓவியம் துணியில் வரைவதற்குக் கலம்காரி முறை என்று பெயர். கலம்காரி ஓவியம் தீட்ட ஏற்றது காடாத் துணிதான். அதனைச் செம்மறியாட்டின் சாணப் பாலில் நனைத்து ஊறவைத்து, அவ்வாறு ஊறிய துணியை மூன்று தடவை சுத்தம் செய்து காய வைப்பர்.

கடுக்காயை நசுக்கி, ஊறவைத்து அதைப் பொடி பண்ணி எருமைப்பாலில் கலந்து ஊற வைப்பர். பிறகு நன்றாக உதறி மறுபடியும் எருமைப்பாலில் நனைத்து, ஐம்பது விழுக்காடு எருமைப்பாலோடு மூன்றுநாள் காயவைத்து, பிறகு நிழலிலே ஒரு நாள் ஆறப் போட்டு கொட்டாப் புளியால் இருபக்கமும் அடிப்பர். ஓவியம் வரைய பச்சைப் புளிய விளாறைக் கொளுத்திய துண்டு வைத்து 'ஸ்கெட்ச்' பண்ணி, வண்ணம் தீட்ட ஆரம்பிக்கும்போது, மூங்கில் குச்சியைக் கூராகச் சீவி அதன் நுனியிலே பச்சை நூலால் கட்டி வண்ணத்தில் பஞ்சை நனைத்து எங்கே கறுப்பு வண்ணம் வரவேண்டுமோ அங்கே பஞ்சைப் பிழிவர். கறுப்பு நிறம் தீட்டிய பிறகு மறுபடியும் துணியைக் காய வைத்துப் பின் மேல்பாரம் வைத்து அழுத்துவார்கள்.

கொட்டாப் புளியால் கால் பாகம் அளவு அடித்து உதறிக் கொடியில் போட்டுக் காய வைப்பர். வீட்டிற்குள் ஒரு நாள் நிழலில் உலர்த்துவர். ஒவ்வொரு வண்ணம் தீட்டிய பின் இவ்வாறு செய்வர். பிறகு சுத்தித் தலைப்பிற்கு வண்ணம் தீட்டுதலுக்கு 'ஜமுல் அடித்தல்' என்று பெயர். இம்முறையினால் வெயிலாயிருந்தாலும், மழையில் நனைந்தாலும் கலம்காரி ஓவியம் கலையாது. இந்த ஓவியம் ஒரு துணியில் வரைய முப்பதிலிருந்து நாற்பது நாட்கள் ஆகும். இவ்வோவியத்திற்குப் புகழ் பெற்ற ஊர் சிறுகநாயக்கன் பேட்டை. இது குடந்தைக்கும், கீழ் அணைக்கட்டிற்கும் இடையில் திருப்பணந்தாளிலிருந்து சில கல் தூரத்தில் உள்ளது.

காரணாகமும் சாஸ்தாவுக்கு இரு கரங்களையும், இரு கண்களையும் கருத்த நிறத்தையும்தான் குறிப்பிடுகிறது. மேலும் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் இடக்காலைத் தொங்கவிட்டு, வலக்காலைக் குத்திட்டு வைத்து, வலக்கால் மீது வலக்கை முட்டிபடும்படி நீட்டி வைத்துக்கொண்டு இடக்கையில் சாட்டையைப் பிடித்தபடி இருத்தல் வேண்டும் என்று தெரிவிக்கிறது. சாஸ்தாவின் வாகனம் யானையென்றும், கொடியில் யானையின் உருவமோ அல்லது சேவலின் உருவமோ இருக்கும் என்றும் கூறுகிறது. ஆனால் அம்சுபத்பேதாகமம் சாஸ்தாவுக்கு நான்கு கரங்களைக் குறிப்பிடுகிறது. இவ்வுருவம், சாத்தன் தெய்வம் இந்து மதத் தெய்வங்களின் கூட்டுக்குக் கொண்டு வந்த பிறகு ஏற்படுத்தப்பட்டதாக இருக்கலாம். இதன் மூலம் மற்றொரு செய்திக்கும் வழி ஏற்படுகிறது. அதாவது அம்சுபத்பேதாகமம், சுப்ரதோகமத்துக்கும் காரணாகமத்துக்கும் பிற்பட்ட நூலாக இருக்கலாம் என்பதேயாகும்.

தமிழகத்தில் அண்மைக்காலங்களில் கிடைத்துவரும் சாத்தன் சிற்பங்களைக் கொண்டு பார்க்கையில், தொடக்க காலத்தில், அதாவது கி.பி. 6,7 ஆம் நூற்றாண்டளவில், சுப்ரபேதாகமத்தில் கூறப்பட்டுள்ளவாறு தான் சாத்தன் உருவம் வடிவமைக்கப்பட்டது என்பது தெரிய வருகிறது. விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்துக்கு அருகில் உள்ள ஆலக்கிராமத்தில் கிடைத்துள்ள சாத்தன் சிற்பம் சுப்ரபேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள விளக்கத்திற்கேற்ப காணப்படுகிறது. சாத்தன் பீடத்தின் மீது வலக்காலைக் குத்திட்டு வைத்து, இடக்காலைப் பீடத்தின் கீழ் தொங்கவிட்டு, வலக்கரத்தின் முட்டி வலக்கால் முட்டி மீது படும்வண்ணம் கரத்தை நீட்டி வைத்து, இடக்கரத்தைத் தொடை மீது ஊருகரமாக வைத்து அமர்ந்திருக்கும் திருக்கோலமாக உள்ளது வியப்பளிக்கிறது. சாத்தனின் வலப்பக்கத்தில் குதிரை மீது ஊர்ந்து செல்லும் வீரன், வலப்பக்கத்தில் இடப்பக்கத்தில் அழகான பெண்ணொருத்தி வலக்கரத்தில் கலசத்தைத் தூக்கி நிற்கும் கோமலம் வலக்கரத்தின் கீழ் குரங்கோ அல்லது புலியோ தன் குட்டிகளுடன் விளையாடும் அழகு, இடக்காலுக்குக் கீழ் முன்னங்காலைக் குத்திட்டு வைத்து அமர்ந்திருக்கும் நாய், குரங்கு அல்லது புலிக்குட்டிகளுக்கும், நாய்க்கும் நடுவில் சேவல் ஆகிய விலங்கினக் கூட்டம், நிற்கும் நிலையில் ஒரு அழகற்ற ஆண் உருவம் ஆகியவை சுப்ரபோதக வரிகளுக்கு அணி சேர்க்கின்றன.

இதே ஊரில் கிடைத்துள்ள மற்றொரு சாத்தன் சிற்பத்தில் இரு பக்கங்களிலும் இரு பெண்கள் நின்ற நிலையிலும் வலக்கரத்துக்குக் கீழ் நாய், இடக்காலுக்குக் கீழ் குதிரை மற்றும் வீரன் உருவங்கள் காணப்பெறுகின்றன.

விழுப்புரம் வட்டம் எசாலம் காஞ்சீபுரம் வட்டம், சூணாம்பேடு ஆகிய இடங்களில் கிடைத்துள்ள சாத்தன் சிற்பங்களில் நாய் உருவம் மட்டுமே துணை உருவங்களாகக் காட்டப்பட்டுள்ளன. விழுப்புரம் வட்டம் நெடி என்னும் ஊரில் கண்டறியப்பட்டுள்ள சாத்தன் சிற்பத்தோடு குதிரை உருவமும் நாய் உருவமும் காணப்படுகின்றன. மேற்காணும் இச்சிற்பங்கள் கி.பி.6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8, 9 நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்தவைகளாக இருக்கலாம்.

ஆலக்கிராமத்தில் கிடைத்துள்ள சாத்தன் சிற்பங்கள் போன்று தஞ்சை மாவட்டம் நாகத்தி என்னும் சிற்றூரிலிருந்தும் ஒரு சிற்பம் கிடைத்துள்ளது.

இந்தச் சிற்பத்தைப் பைரவர் சிற்பம் என்று மறைந்த பேராசிரியர் டிவி. மகாலிங்கம் எழுதியுள்ளார். இச்சிற்பம் முற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார். இச்சிற்பத்தின் உருவ அமைதியையும், பிற இடங்களில் கிடைத்துள்ள முற்காலச் சாத்தன் சிற்பங்களையும் பார்க்கும் போது இதுவும் சாத்தன் சிற்பமாகவே இருத்தல் வேண்டும் என்று கருத இடமேற்படுகிறது. நாகத்தி சிற்பத்திலும், சாத்தன் பீடத்தின் மீது வலக்காலைக் குத்திட்டு வைத்து, இடக்காலைப் பீடத்தின் கீழ் தொங்கவிட்டு அமர்ந்துள்ளார். வலக்கரம் வலக்கால் முட்டியைத் தொட்டவாறு நீண்டு செல்கிறது. இடக்கரம் பீடத்தின் மீது ஊன்றியவாறுள்ளது. சாத்தனின் இடப்பக்கத்தில் பூரணி நின்ற நிலையில் இரு கரங்களுடன் காணப்படுகிறார். இருவரின் ஆடை அணிமணிகளும் நன்கு செதுக்கப்பட்டிருக்கின்றன. சாத்தனின் வலக்கரத்துக்குக் கீழ் நாய் முன்னங் கால்களைக் குத்திட்டு வைத்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. ஆலக்கிராம சாத்தனின் சிற்பத்தில்

காண்பது போன்று தடித்த புரிநூல் இச்சாத்தனையும் அணி செய்கிறது.

பிற்காலச்சோழர் காலத்திலிருந்து ஐயனாரின் உருவம் பீடத்தின் மீது வலக்காலுக்கு மாறாக இடக்காலைக் குத்திட்டு வைத்து, இடக்காலுக்குப் பதிலாக வலக்காலைப் பீடத்தின் கீழ் தொங்கவிட்டு அமர்ந்திருக்கும் வண்ணம் காண முடிகிறது. முற்காலச் சோழர் காலம் முடிய ஐயனார் அருகில் நிற்கும் வண்ணம் காணப்பெற்ற பூரனை, புஷ்கலை உருவங்கள் ஐயனாரோடேயே பீடத்தில் பக்கத்துக்கொருவராக அமர்ந்த கோலத்தில் காணப்படுகின்றனர்.

முற்காலச் சோழர் காலம் முதல் ஐயனாரின் வலக்கரத்தில் காணப்பெறாத செண்டு (சாட்டை) பிற்காலச் சோழர் கால ஐயனார் உருவத்தில் உள்ளது. மேலும் அதுவரை காணப்பெறாத யோகப்பட்டமும் சில ஐயனார் உருவங்களில் சேர்க்கப்பட்டு யோக சாஸ்தாவாகவும் தோற்றமளிக்கிறார். சபரிமலை சாஸ்தா திருமேனி இருகால்களையும் பத்மாசனத்தின் மீது குத்திட்டு வைத்துள்ள நிலையில் யோக பட்டத்துடன் காட்சி தருகிறது. இவ்வுருவத்திலும் இடக்கால் முட்டி மீது இடக்கரம்முட்டி படும்படியாக நீட்டித்தே காணப்படுகிறது. வலக்கரத்தில் சாட்டையில்லாமல் அபய முத்திரை காட்டி அருள் பாலிக்கும் வண்ணத்தில் விளங்குகிறது.

சுப்ரபேதாகமம் சாஸ்தாவின் வாகனமும், கொடியும் யானை என்று கூறினாலும், யானையின் உருவத்தை முற்காலச் சாத்தன் உருவங்களில் காண இயலவில்லை.. கி.பி. 14ம் நூற்றாண்டு முதல் தான் சாத்தன் உருவம் யானை மீது அமர்ந்திருப்பதாகக் காணப்பெறுகிறது. தஞ்சை மாவட்டம் தோகூரிலும், வழுவூரிலும் ஐயன் யானை மீது அமர்ந்திருப்பதாகக் காணப்படுகிறது. கேரளாவில் திருவனந்தபுரத்தில் உள்ள சாஸ்தான் கோட்டை என்னும் கோயிலில் சாஸ்தா வலக்கையில் அம்பையும், இடக்கையில் வில்லையும் ஏந்தியவராய் நிற்கும் நிலையில் தோற்றமளிக்கிறார். தமிழகத்தில் இதுவரை நிற்கும் தோற்றத்தில் உள்ள சாத்தன் உருவம் கண்டறியப்பட்டதாகத் தெரியவில்லை.

சங்க காலத்தில் 'சாத்தன்' என்று வழிபட்ட இத்தெய்வம் முற்காலச் சோழர் காலத்திலிருந்து ஐயனார் என்று வழிபட்டதாகத் தெரிகிறது. புதுக்கோட்டை மாவட்ட பூலாங்குறிச்சியில் காணப்பெறும் முதலாம் பராந்தகன் காலத்தியக் கல்வெட்டின்படி திசையாயிரத்தைஞ் ஞூற்றுவர் ஐயனாருக்குச் சிலை அமைத்து வழிப்பட்டிருக்கின்றனர். திருச்சி மாவட்டம் குண்டூரில் கண்டறியப்பட்டுள்ள ஒரு ஐயனார் சிற்பத்தின் பீடத்தில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு அவ்வையாரைக் குலாவன் சாத்தன் என்பான் கொடையாக வழங்கியதைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு கி.பி.10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. விழுப்புரம் மாவட்டம் அகரத்தில் ஐயனாருக்குத் தனிக்கோயில் எழுப்பப்பட்டிருந்தது முதலாம் இராசராசன் கல்வெட்டால் புலனாகிறது. திருச்சி மாவட்டம் முசிறி வட்டம் திருப்பத்தூரிலும் ஐயனாருக்குக் கோயில் அமைக்கப் பெற்றிருக்கிறது.

பாண்டிய மன்னர் காலத்தில் 'சாஸ்தா' என்ற பெயரில் ஐயனார் வழிபடப்பட்டிருக்கிறார் என்பது மற்றொரு கல்வெட்டால் உணர முடிகிறது.

தொடக்கக் காலத்தில் வணிகர்களால் காவல் தெய்வமாக மட்டுமே வழிபடப்பட்ட சாத்தன் பின்னர் அரியரபுத்திரனாக ஆக்கப் பெற்று இந்துக் கடவுளர் கூட்டத்தில் இணைந்த பின்னர் அனைத்துத் தரப்பு மக்களாலும் வழிபடப்படும் தெய்வமாக ஆகியிருக்கிறார். பாண்டிய நாட்டில் 'சாஸ்தா' என்று பெயரில் பின்னாளில் வழிபடப்பட்டவர் தொடர்ந்து இந்நாள் வரை கேரள மாநிலத்தில் சாஸ்தா என்னும் ஐயப்பனாகவும் தமிழகத்தில் ஐயனார் என்னும் காவல் தெய்வமாகவும் பெரும் புகழோடு தொழப்படுகிறார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★



கைத்தறித்துறை

- ★ 5 இலட்சம் நெசவாளர் குடும்பங்களின் துயர்துடைத்திட, கைத்தறித்துணிக்கு ஆண்டு முழுவதும் விற்பனையில் 20 சதவிகிதம் தள்ளுபடி செய்து முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- ★ பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, தமிழகத்திலுள்ள ஏழை, எளிய மக்களுக்கு, 72.75 இலட்சம் இலவசச் சேலைகளும், 68 இலட்சம் இலவச வேட்டிகளும், சுமார் ரூ.95 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.
- ★ பள்ளி சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், தேவைப்படும் சீருடைகள் உற்பத்தி செய்யும் பணி மார்ச் '98க்குள் முடிவடைந்து, துணிகள் தயார் நிலையில் இருக்கும் என்பதுடன், சீருடைகள் பள்ளி சிறார்களுக்கு 1998-99ஆம் கல்வி ஆண்டு துவக்கத்திலேயே விநியோகம் செய்யப்படும்.
- ★ சென்னை எழும்பூரில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் வளாகத்தில் புதிதாக "கைத்தறி விற்பனை வளாகம்" ஒன்று 27.10.97 அன்று முதலமைச்சர் கலைஞரால் திறந்துவைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

எங்கள் ஊர் பிரச்சினை

😐 **பிரச்சினை :**

தருமபுரி மாவட்டம் அரூர் தாலுக்காவைச் சேர்ந்த சட்டையம்பட்டி எங்கள் ஊர். ஊத்தங்கரையிலிருந்து தீர்த்தமலைக்கு யூ6 (U6) என்ற நகரப் பேருந்து இரண்டு நடை மட்டும் (காலை 9.15 க்கும், மாலை 3.40க்கும்) வருகிறது. எங்களுக்கு ஊத்தங்கரைக்குப் போகவோ அல்லது தீர்த்தமலைக்குப் போய் வரவோ சிரமமாக இருக்கிறது. எனவே, மதியம், இரவு என இன்னும் இரண்டு நடை கூடுதலாகப் பேருந்தை இயக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

- இரா. செல்வம்
சட்டையம்பட்டி, தருமபுரி மாவட்டம்

😊 **தீர்வு :**

யூ6 (U6) நகரப் பேருந்து 4 வழித்தடங்களில் கீழ்க்கண்டவாறு இயங்கிவருகிறது.

1. ஊத்தங்கரை	- ஈ. அக்ரஹாரம்	4 நடைகள்
2. ஊத்தங்கரை	- தீர்த்தமலை	6 நடைகள்
3. ஊத்தங்கரை	- அ. பள்ளத்தூர்	2 நடைகள்
4. ஊத்தங்கரை	- செட்டிப்பட்டி	2 நடைகள்

ஊத்தங்கரை - தீர்த்தமலை தடத்தில் 4 நடைகள் இயக்கப்பட்டு வந்த நகரப்பேருந்து தடம் எண். யூ6 பொது மக்களின் கோரிக்கைக்கிணங்க கடந்த 13.8.97 முதல் ஊத்தங்கரையில் இரவு (7.25) மணிக்குப் புறப்பட்டு தீர்த்தமலை சென்று வரும்படி இரவு கூடுதல் நடை இயக்கப்பட்டு வருகிறது.

தற்போது இயக்கப்படும் 6 நடைகளும் மக்கள் பயணிக்கும் அளவு 40 விழுக்காடு தான் உள்ளது. இந்நிலையில் மேலும் கூடுதல் நடை இயக்கிட இயலாது. பயணிகளின் உபயோகிக்கும்கொள்ளளவு அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் நடைகள் இயக்கிட பரிசீலனை செய்யப்படும் எனத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- பை. கிருஷ்ண செட்டி, வட்டாட்சியர்
அரூர், தருமபுரி மாவட்டம்.

😐 **பிரச்சினை :**

எங்கள் ஊர் எடுத்துக்காட்டி சாத்தனூர், செம்பொனார் கோயில் ஒன்றியம், நாகை காயிதே மில்லத் மாவட்டம். இங்கிருந்து செம்பொனார் கோவில் செல்வதற்கு சோழன் போக்குவரத்துக் கழக நகரம், பேருந்து தடம் எண்.30, 30ஏ மட்டும் செல்கிறது. இந்த இரண்டு பேருந்துகளும் சரியான நேரத்திற்கு வருவதில்லை. இதனால் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்குச் செல்லும் அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் எங்கள் ஊரின் பக்கத்துக் கிராமமான திருக்களாச்சேரியில் மேல்நிலைப்பள்ளி உள்ளது. அங்கு படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இந்த குறிப்பிட்டநகரப் பேருந்துகளில் தான் இலவச பஸ் பாஸ் அனுமதிக்கப்படுகிறது. இந்தப் பேருந்துகள் சரிவர வராததால் மாணவ மாணவிகள் ஏமாற்றம் அடைகிறார்கள்.

ஆயப்பாடி, திருக்களாச்சேரி, எடுத்துக்காட்டி சாத்தனூர், சங்கரன் பந்தல் கிராம மக்கள் செம்பொனார் கோயில் செல்வதற்கு 30, 30ஏ பேருந்துகள் மட்டும் நம்ப வேண்டியிருப்பதால் அதனைச்சரியான நேரத்திற்கு இயக்குமாறும் மேற்கண்ட வழித் தடங்களில் மேலும் ஒரு பேருந்தினை இயக்கி உதவி புரியும்படியும் அன்புடன் வேண்டுகிறோம்.

- ஏ. ராஜ்குமார்,
எடுத்துக்காட்டி சாத்தனூர்
தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

😊 **தீர்வு :**

எடுத்துக்காட்டி சாத்தனூர் வழியாகக் கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயங்கி வருகின்றன.

1. மயிலாடுதுறை - பொறையார் (வழி) செம்பொனார் கோவில், அரும்பாக்கம், சங்கரன்பந்தல்	நகரத்தடம் எண். 30, 30ஏ	24 நடைகள்
2. மயிலாடுதுறை - ஆயப்பாடி (வழி) மங்கநல்லூர், பெரம்பூர், சங்கரன்பந்தல்	தனியார் நகரப் பேருந்து எண்.15	12 நடைகள்
3. மயிலாடுதுறை - பொறையார் (வழி) செம்பொனார் கோவில், அரும்பாக்கம், சங்கரன்பந்தல்	தனியார் புறநகர் பேருந்து	4 நடைகள்
4. நாகப்பட்டினம் - மயிலாடுதுறை (வழி) காரைக்கால் - பொறையார், சங்கரன்பந்தல் பெரம்பூர், மங்கநல்லூர்	கழகப் புறநகர் 5 பேருந்துகள்	30 நடைகள்
5. பொறையார் - கும்பகோணம் (வழி) சங்கரன்பந்தல், பெரம்பூர், மயிலாடுதுறை	தனியார் பேருந்து	6 நடைகள்

மேற்கண்ட பேருந்தில் நடைகளைப் பயன்படுத்தி அப்பகுதி வாழ் மக்கள் பயணம் செய்யலாம் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது மேலாளர் (இயக்கம்),
அரசு போக்குவரத்துக் கழகம், தஞ்சாவூர் மாவட்டம்.

பிரச்சினை :

எங்கள் ஊர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோத்திராப்பட்டி ஆகும். இங்கு பேருந்து வசதி இல்லை. பேருந்திற்காக எல்லை சுற்றி சுமார் 8 கிலோமீட்டர் செல்ல வேண்டி உள்ளது. இதற்காகப் பல அதிகாரிகளிடம் மனு கொடுத்தும் ஒன்றும் பயனில்லை. எனவே தாங்கள் இப்பிரச்சினை தீர, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

- ப.சி. அழகப்பெருமாள்
கோத்திராப்பட்டி அஞ்சல், இலுப்பூர் வழி,
புதுக்கோட்டை மாவட்டம்

தீர்வு :

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, கோத்திராப்பட்டி கிராமம். கொடும்பாளூர், இலுப்பூர் பிரதான சாலையில் அமைந்துள்ளது. மேற்படி கோத்திராப்பட்டி வழியாகத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் குடந்தை கோட்டம், 4 பேருந்து இரண்டு நடைகளும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், குடந்தை கோட்டம் - 2 நகரப் பேருந்து ஒரு நடையும் இயக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- க. சண்முகம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
புதுக்கோட்டை மாவட்டம்.

பிரச்சினை :

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம் வட்டம் சத்திரப்பட்டி என்ற ஊரில் தனியார் பள்ளி சீனிவாசன் மேல்நிலைப்பள்ளி சுமார் 8 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு சுமார் 900 மாணவியர்கள் பயில்கின்றனர். குறிப்பாக ப்ளஸ்டு-வில் 150 மாணவியர் பயில்கின்றனர். இந்தப் பள்ளியில் முதுநிலை பட்டதாரி ஆசிரியை 7 பேர் பணியாற்றுகின்றனர். இவர்கள் 8 ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றனர். இதுவரை இவர்களுக்கு நிர்வாகம் சம்பளம் வழங்காததால் இந்த ஆசிரியர் 7 பேர்களும் வேலை நிறுத்தம் செய்து கொண்டு வகுப்புக்குச் சென்று +2விற்கு பாடம் எடுப்பதில்லை. மாணவியர்கள் சிறுசிறு போராட்டம் செய்து பார்த்தனர். நிர்வாகம் அவர்களைச் சமாதானப்படுத்தி வகுப்புக்கு செல்ல வைத்து விடுகிறது. குறிப்பாக +2 மாணவியர்களுக்குப் பொதுத்தேர்வு நடந்தால் இவர்கள் பயிலாமல் ஆசிரியர்கள் பாடம் சரிவர நடத்தாமல் எப்படி தேர்வு எழுத முடியும்? தாங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- பெற்றோர் சார்பாக, பி. தங்கராஜன்
வீரலப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்

தீர்வு :

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி சீனிவாசன் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டு, ஆசிரியர்களால் பாடம் சரியாக நடத்தப்பட்டு, பள்ளி நன்றாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்டம்.

பிரச்சினை :

சிதம்பரத்தின் மிகவும் முக்கியமான வீதிகளில் ஒன்று வடக்கு வீதியாகும். காரணம் இங்கு தலைமை அஞ்சல் நிலையம், நகராட்சிப் பள்ளிகள் மற்றும் வெளியூர்களில் இருந்து வரும் எல்லாப் பேருந்துகளும், இந்த வடக்கு வீதி வழியாகத்தான் செல்லும். அவ்வளவு போக்குவரத்து நிறைந்த வீதியில் இரு புறங்களிலும் கடந்த 4 ஆண்டுகளாக லாரிகள் நிற்பதால் தினசரி விபத்து ஏற்பட்ட வண்ணம் உள்ளது. சாலையில் செல்லும் பொதுமக்கள், சாலை ஓரம் ஒதுங்கக்கூட இடம் இல்லாததால் பலமுறை உயிர்ப்பலி ஏற்பட்டபடி உள்ளது. எனவே, இதுகுறித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

- சீதாராமன், சிதம்பரம்

தீர்வு :

சிதம்பரம் வடக்கு வீதியில் தற்போது லாரிகள் நிறுத்தப்படாமல் போக்குவரத்துக் காவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதன் மூலம் தற்போது வடக்கு வீதியில் லாரிகள் நிறுத்தப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- செ. சைலேந்திரபாபு, இ.கா.ப.,
காவல்துறை கண்காணிப்பாளர்,
கடலூர் மாவட்டம்.

பிரச்சினை :

எங்களது வட்டாரத்தில் சுமார் 10 சிற்றூர்கள் தன்னகத்தே சுமார் 12000 மக்கள்தொகையைக் கொண்டுள்ளது. எங்களுக்கு ஒரு கிளை நூலகம் பிக்கட்டியில் பொது மக்களால் 0.10 சென்ட் பூமி இனமாக கொடுக்கப்பட்டு சுமார் 4 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் சொந்தமாகக் கட்டடமும் அரசால் கட்டப்பட்டு தரப்பட்டுள்ளன. மேற்படி கிளை நூலகமாவது 1510 அங்கத்தினர்களுடன் சுமார், 12,000 புத்தகங்களுடன் 10 தினசரிகளுடனும் மற்றும் 30 வார மாத இதழ்களுடனும் இயங்கிக் கொண்டு வருகிறது. தினந்தோறும் 150 வாசகர்களுடன் 40க்கு மேல் புத்தகங்கள் வெளியில் கொடுத்தும் இயங்கிக் கொண்டு இருக்கிறது. பொதுமக்களிடத்தில் 12 புரவலர்களையும் ரூ.14,060-க்கான நன்கொடை பொருள்களையும் பெற்றுள்ளது. இவ்வளவு சௌகரியம் இருந்தும் ஒரே ஒரு நூலக அலுவலர் இருப்பதால் விடுப்பு நாட்களில் நூலகம் மூடிக் கிடக்கும், அவல நிலை ஏற்படுகிறது மற்றும் நூலகத்திற்குச் சுற்றிலும் நாலாபுறமும் தடுப்புச் சுவர் இல்லாததினால் பல விதமான அசுத்தங்கள் ஏற்பட ஏதுவாகிக் கொண்டுள்ளது. எனவே, தாங்கள் எங்களது நூலகத்திற்கு மேலும் நூலக உதவியாளர் ஒருவரையும், நூலகத்தைச் சுற்றிச் சுத்தமாக இருக்க ஒரு தடுப்புச் சுவரோ அல்லது தடுப்புக் கம்பி வேலியோ அமைத்துக் கொடுக்க சம்பந்தப்பட்ட துறையினருக்குத் 'தமிழரசு' இதழின் மூலம் அணுகி ஆவன செய்து கொடுக்கவேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

- பீஎம். கணேசன்
புரவலர் மற்றும் தலைவர்,
பிக்கட்டி கிளை நூலக வளர்ச்சிக்குழு
பிக்கட்டி அஞ்சல், நீலகிரி.

தீர்வு :

பிக்கட்டி கிளை நூலகத்திற்கு நூலகர் ஒருவர் மட்டுமே பணியாற்றுகிறார். அரசால் நூலகர் பணியிடம் மட்டுமே இக்கிளை நூலகத்திற்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது. நூலகர் ஈட்டிய விடுப்பு / மருத்துவ விடுப்பில் செல்லும்போது இந்நூலகம் செயல்பட மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. நூலகர் தற்செயல் விடுப்பில் முன்னறிவிப்பின்றிச் செல்லும் சமயத்தில் நூலகம் மூடும் நிலை உருவாகின்றது. பிக்கட்டி கிளை நூலகத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டும் பணி விரைவில் துவங்கப்படுமென பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர்

பிரச்சினை :

மழைக் காலம் வந்துவிட்டால், திருச்சி மாவட்டம் பீமநகரில் உள்ள பழைய அஞ்சல் நூலகம் சாலை, மேட்டுத் தெரு, தெற்கு யாதவதெரு, அமெரிக்கன் மருத்துவமனை பின்புறம் ஆகிய இடங்களில் 5 அடி ஆழம் நீர் தேங்கிவிடுகின்றது. இதனால் அங்குள்ள குடிசை வீடுகள் எல்லாம் மழைநீர் உள்ளே புகுந்துவிடுகிறது. மழைநீர் மட்டுமானாலும் பரவாயில்லை. மழைநீருடன் சேர்ந்து, சாக்கடைத் தண்ணீர், மனிதக்கழிவுகள் ஆகியவையும் சேர்ந்து வீட்டிற்குள் புகுந்து நாங்கள் படும் வேதனை சொல்லிமாளாது. எனவே போதிய சாக்கடை வசதி செய்து, எங்களின் இந்த நெடுநாள் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். இதைக் குறித்து பல மனுக்கள் அனுப்பியும் எவ்வித பலனுமில்லை.

- பொதுமக்கள்
பீமநகர், திருச்சி.

தீர்வு :

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பீமநகர் அஞ்சலகச் சாலை, மேட்டுத்தெரு, தெற்கு யாதவ தெரு, அமெரிக்கன் மருத்துவமனை பின்புறம் ஆகிய இடங்களில் மழை நீரினால் சாக்கடைக்குள் தேங்கி இருக்கும் மண்ணை அப்புறப்படுத்தி தடையின்றித் தண்ணீர் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்ட பணிக்கு ரூ.23,000/-க்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் இப்பணி முடிக்கப்படும்.

- பி. முத்துவீரன், எம்.எஸ்ஸி.,
ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி - 1

பிரச்சினை:

எங்கள் ஊர் வேலூர் மாவட்டம், ஆர்க்காடு வட்டம், விளாப்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட சின்ன உப்புப்பேட்டை கிராமம். இக்கிராமத்தில் கடந்த 6 மாத காலமாக 7-ல் 3 தெருவிளக்குகள் எரிவதில்லை. இது குறித்து, நேரில் சொல்லியும், மனுக்கொடுத்தும் எவ்விதப் பலனும் இல்லை. தற்பொழுது மழைக்காலம் ஆகையால், இரவில் பாம்பு மற்றும் விஷப்பூச்சிகளின் தொந்தரவு அதிகமாக உள்ளது. தெரு விளக்குகள் இருந்தும் எரியாததால் குழந்தைகள், நோயாளிகள், வயதானவர்கள், மற்றும் வேலைக்குச் செல்லும்

பெண்கள் எனப் பலரும் "கும்" இருட்டில் நடமாடப் பயப்படுகிறார்கள். எனவே, எரியாத விளக்குகளை எரியச் செய்து எங்கள் கிராமத்திற்கு ஒரு விளக்கு ஏற்றத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி தங்களை மிகத் தாழ்மையுடன் வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

-கிராமப் பொது மக்கள்,
சின்ன உப்புபேட்டை, வேலூர் மாவட்டம்

☺ தீர்வு:

வேலூர் மாவட்டம், விளாப்பாக்கம் பேரூராட்சி மதுரா சின்ன உப்புப்பேட்டை கிராமத்தில் 40 வீடுகள் உள்ளன. இங்கு சோடியம் ஆவி விளக்கு-1, மற்றும் 4' குழல் விளக்குகள் 6 ஆக மொத்தம் 7 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் எரியாமல் இருந்த 4' குழல் விளக்குகளில் மேற்படி வார்டு உறுப்பினர் முன்னிலையில் பொருத்தப்பட்டு எரிய வைக்கப்பட்டது. தற்போது சின்ன உப்புப்பேட்டை கிராமத்தில் உள்ள அனைத்துத் தெருவிளக்குகளும் நல்ல நிலையில் எரிகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

-எஸ்.திருஞானசம்பந்தன்,
பேரூராட்சிகள் உதவி இயக்குநர்,
வேலூர் மண்டலம்,
வேலூர்-9.

😐 பிரச்சினை:

பெரியார் மாவட்டம் தாராபுரம் வட்டம் குண்டடத்தில் கிளை நூலகம் ஒன்று உள்ளது. கடந்த 36 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்திலேயே செயல்பட்டுவருகிறது. குண்டடம் கிராமத்தில் சுமார் 10,000 பேர் வசிக்கின்றனர். குண்டடம் மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து வாசகர்கள் குண்டடம் கிளை நூலகத்திற்கு வந்து பயன் பெறுகின்றனர். நூலகத்தில் போதுமான இடவசதி இல்லை.

தற்போது தமிழக அரசு குண்டடம் பஸ்நிலையம் அருகே உள்ள கால்நடைத் துறையைச் சேர்ந்த இடத்தில் 5 செண்ட் நிலத்தை நூலகத்துறை வழங்கியுள்ளது. அவ்விடத்தில் உடனடியாகக் கட்டடம் கட்டி குண்டடம் கிராம நூலக வாசகர்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

-அன்பு கார்த்திகேயன்,
குண்டடம்.

☺ தீர்வு:

பெரியார் மாவட்டம் தாராபுரம் வட்டம் குண்டடத்தில் உள்ள கிளை நூலகத்திற்குக் கட்டடம் நன்கொடையாகப் பெற, மாவட்ட நூலக அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-இரா.கண்ணன்,
பொது நூலக இயக்குநர், சென்னை

😐 பிரச்சினை:

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் தாலுகா ஆடுதுறைக்கு நேர் கிழக்கே 3 கி.மீ. தொலைவில் சாத்தனூர் கிராமம் உள்ளது. எங்கள் கிராமம் மற்றும் உள் கிராமங்களான மல்லார் பேட்டை, கரைகண்டம், பேராவூர், கல்லூர், ஆரியங்கூத்தலூர், திருக்குலம்பியம் போன்ற பல ஊர்களுக்கு நேரடி பஸ் வசதி இல்லை. கோமல் ஆடுதுறை மெயின்ரோடில் சென்று கொண்டிருந்த டவுன் பஸ் எண் 53ல் சில நாட்களாக பேருந்துகள் மாற்றம் செய்யப்பட்டு ஒன்றுவிட்ட நடைகள் மங்கநல்லூர் சென்றுவருவதால் நடைகள் குறைக்கப்பட்டுள்ளது. இடைப்பட்ட நேரங்களில் தனியார் வண்டிகள் பயணிகளை அதிகக் கட்டணத்திற்கு ஏற்றி வருகிறார்கள். இதனைத் தவிர்க்க, ஆடுதுறை-கும்பகோணம் செல்லும் எண் 1 நகர பேருந்துகளைக் கோமல் அல்லது பேராவூர் வரை இயக்கினால் மேற்கண்ட குக்கிராம மக்கள் அனைவரும் நகரத்திற்குச் சென்றுவர ஏதுவாகும். எனவே, மேற்கண்ட நகரப் பேருந்துகளை இயக்கித்தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- கிராமப்பொதுமக்கள்,
சாத்தனூர்

☺ தீர்வு:

கும்பகோணம் நகரத் தடம் எண் 53ல் கும்பகோணம்-கோமல் தடத்தில் 12 நடைகள் இயக்கப்பட்டு வந்தது. தற்போது, கோரிக்கைக்கிணங்க கும்பகோணம் - மங்கநல்லூர் (வழி) கோமல் 8 நடைகளும், கும்பகோணம் - கோமல் 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, கோமலுக்கு இயக்கப்பட்ட நடைகள் குறைக்கப்படவில்லை. மேலும், கும்பகோணம்-பேராவூர்-கோமல் வழியாகப் பொறையார் வரை ஒரு புறநகர் பேருந்தும் இயக்கப்பட்டு வருகிறது.

- பொது மேலாளர் (இயக்கம்) ,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
கும்பகோணம்.

> எமது நோக்கம் - கலையைக் கெடுத்தலுமன்று, இலக்கியத்தை அழித்தலுமன்று; கலைப்புரட்சி மூலம் இன எழுச்சி, இன விடுதலை கோருவதேயாகும்!
>
> - **பேறிஞர் அண்ணா**

சேவலும் செயிழையும்

- கவிஞர் சாமி பழனியப்பன்

"கடலே இரையாதே
காற்றே நீ வீசாதே
நிலவே எரியாதே - என்
நீலவண்டார் வருமட்டும் !"

- என்று, பிரிவுத்துயருக்கு உள்ளான பெண் ஒருத்தி, கடலுக்கும் காற்றுக்கும், நிலவுக்கும் கட்டளையிட்டதாக நாட்டுப் பாடல் ஒன்று நிலவுகிறது. இலங்கை மட்டக் களப்புப் பகுதியில்! கடலும், காற்றும், நிலவும் அந்தக் காதலியின் கட்டுப்பாட்டுக்கு - ஆணைக்கு உட்பட்டனவா?

இந்தக் கடலுக்கு உறக்கமிருக்காதா? ஏன் இப்படி சொல்லுகிறது? இந்த இரைச்சல் அடங்காதா? என் காதலரின் பிரிவால், ஆலையிட்ட கரும்பாக அவதியுறும் இந்த இரவுப் பொழுது விடியாதா? பொழுதின் விடியலை உணர்த்துகிற - நான் வளர்த்த இந்தக் கோழி கூவ மறுக்கிறதே! அந்தக் கோழியின் வாயை மண்ணாங் கட்டி அடைத்துக் கொண்டதோ?

"ஆழிவாய்ச் சத்தம்
அடங்காதோ நான் வளர்த்த
கோழிவாய் மண்கூறு
கொண்டதோ ?........"

- எனப் பிரிவுத் துயருக்கு உள்ளான பெண் ஒருத்தி பேசுவதாகத் "தனிப்பாடல்" ஒன்று உண்டு.

இப்படிப் பிரிவுத் துயருக்கு உள்ளான பேதைப்பெண் கடலின் இரைச்சலை வெறுக்கிறாள் - காதலன் வராமையால் கோழி கூவவில்லையே என்று வேதனைப் படுகிறாள்.

ஆனால், தம் காதலனோடு இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டிருக்கும் போது, அந்தக் காதலியர், அந்த இன்ப இரவு நீடிக்க வேண்டும் - பொழுது விடிந்துவிடக்கூடாது; அந்தப் பொழுதின் விடிவை நமக்கு உணர்த்துகிற கோழி கூவாமலேயே தூங்கிக் கிடக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அப்படி, கோழி கூவிவிட்டால், அந்தக் கோழியின் மீது எவ்வளவு கோபம் வரும் தெரியுமா? அப்போது, "இந்தக் கோழியைக் கொல்லுங்கள், - சுட்டுத் தள்ளுங்கள் - அடுத்த ஆண்டு விடியும் வரை இந்த இரவுப் பொழுது விடியாமலே நீடிக்கட்டும்" என்கிறார்கள். இதனை -

"எப்பொழுதுமே
கூவிக்கொண்டிருக்கும்
கோழியைக் கொல்லுங்கள்;
பொழுது புலர்வதை
முன்னரே தெரிவிக்கும்
கோழியைச் சுட்டுத் தள்ளுங்கள் -
அடுத்த ஆண்டு விடியும் வரை
இரவு தடைப்படாமலிருக்கும் படியாக !"

- என்று சீனாவின் தென்பகுதியிலே வழங்குகிற பிரபலமான நாட்டுப்பாடல் ஒன்று.

தெலுங்கு இலக்கியத்திலே, இத்தகைய நயமான அகத்துறைப் பாடல் ஒன்று உண்டு.

காதலனும், காதலியும் இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர்; பொழுது புலர்ந்ததையே அவர்கள் அறியவில்லை; சேவல் கூவுகிறது. காதலன் துணுக்குற்று, காதலியை இறுக அணைத்துக் கொள்ளுகிறான். அந்தக் காதலி பேசுகிறாள். : "ஏன் இப்படித் துணுக்குறுகிறீர்கள்? இப்பொழுது நீங்கள் வேறொருத்தியின் வீட்டிலா இருக்கிறீர்கள்? உங்கள் வீட்டில்தான் இருக்கிறீர்கள்! இது உங்கள் வீடுதான்!" என்று நயமாக . கேலியாகச் சொல்லுகிறாள்.

"சேவல் கூவியதும்
துணுக்குற்று அணைத்துக் கொள்கிறீர் !
இப்போது நீர்
எவளோ ஒருத்தியின்
இல்லத்தில் இல்லை !
இது உங்கள் வீடுதான்"

- என்பது, தெலுங்கு இலக்கியத்தில் உள்ள அகத்துறைப் பாடல்.

இத்துறையில், தமிழ் இலக்கியத்தில் ஒரு தனிப் பாடலைப் பார்க்கலாம்.

தமிழ்நாட்டுப் பெண் ஒருத்தி; அவளது காதலன் எத்தகைய சிறப்புடையவன் என்பதை அவளே சொல்லுகிறாள். "தா" என்று கேட்டவர்க்கு இல்லையென்னாது அள்ளித் தருகின்ற வள்ளன்மை - உடையவன் -



அத்தகைய வனுடன் இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டு, இன்பநலம் துய்க்கின்றாள். அந்த இன்ப இரவு, வரையாது நீடிக்க வேண்டும் என்று அவள் விரும்புகிறாள்.

திடீரென்று கோழி கூவத் தொடங்கிவிட்டது. இன்று போனாலென்ன, நாளை இருக்கிறதே என்றா அந்த நேரத்தில் அமைதி கொள்ளமுடியும்?

கோழியின் மீது அடங்காத கோபம்! இது அழகியதொரு வண்ணச் சேவல்! எதுவாக இருந்தால் என்ன? கோபம் கோபந்தான்! பொழுது விடிந்தது விடிந்ததுதான்.

மறுநாள் காலை, தன் மனத்துக்குள்ளேயே இந்த நிகழ்ச்சியைக் கூறி ஆறுதல் பெற முயற்சிக்கிறாள். எனினும், அவளது கோபமும் அடங்கவில்லை - தாபமும் அடங்கவில்லை.

"இன்ப இரவைப் போவென்று சொல்லிச் சிறகடித்துக் கூவி, காலைப் பொழுதை வாவென்று அழைப்பதற்காகவா நான் இந்த வண்ணச் சேவலை அருமையாக வளர்த்தேன்? எவ்வளவு கொடுமை!

"தா" . என்றவர்க்குத் தருகின்ற எனது காதலரின் மலைமீது கொண்டுபோய் வைத்து, இந்தச் சேவலின் வாயைக் கிழித்துவிடுவேன். ஆனால், இதனை இவ்வளவு அருமையாக அன்பாக வளர்த்தோமே என்பதால்தான் அவ்வாறு செய்யாமல் பொறுத்துக் கொண்டேன் என்கிறாள். தலைவியின், பல்வேறு உணர்வுகளையும் படம் பிடித்துக் காட்டும் பாடல் இதோ,

"போவென் றிரவைச்
சிறகால் அடித்துப்
பொழுதை இங்கே
வாவென் றழைப்பதற்
கோவளர்த் தேன் இந்த
வண்ணச் சேவலை ?
தாவென் றவர்க்குத்
தருமென் தலைவன்
தடஞ் சிலம்பில்
ஆவென்ற வாய்கிழிப்
பேன்பொறுத் தேன்வளர்த்
தேனென் பதால் !"

இத்தகைய வேதனை உணர்வுகளும், அதனை வெளிப்படுத்தலும் பெண்பாலரிடத்து மட்டும் தான் என்பதில்லை; ஆண் பாலரிடத்தும் உண்டு என்பதை 'The Sun Rising' என்ற ஆங்கிலப்பாடல் நமக்கு உணர்த்துகிறது. அதுவும், சேவல் மீது மட்டுமல்லாமல், காலையில் உதித்தெழும் கதிரவன் மீதும் அவனுக்குக் கோபம் வருகிறது.

பள்ளியறைச் சாளரத்தின் வழியே பகலவன் தனது பொற்கதிர்களைப் பாய்ச்சுகிறான். இதைக் கண்ட காதலனின் உள்ளம் கனன்றெழுகிறது. உடனே, அந்தப் பொற்சுடரை 'முட்டாள்' என்றும், 'கட்டுக்கடங்காத பயல்' என்றும், 'முரட்டு வீணன்' என்றும் வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்க்கிறான். அவ்வளவுதானா? அதற்கு அறிவுரையும் கூறுகிறான். 'நீ பள்ளிச் சிறுவரையும், கிராமப்புறத்து எறும்புகளையும் போய் எழுப்பு' என்கிறான். 'காதலரின் நேரம் எதற்கும் கட்டுப்பட்டதன்று; காதலர்க்கு நாழிகையும், நாளும், வாரமும், மாதமும் ஏது?' என்று கேட்கிறான். மிகச் சிறந்த நாடகக் காட்சி போன்றில்லையா? இது.

'ஓய்வற்று உழலும் முட்டாளே !
கட்டுப்படாத கதிரவனே !
ஏனிப்படி சாளரத்தின் ஊடேவந்து
நேரத்தை நினைவூட்டுகிறாய் !
விதிப்படி ஆடும் முரட்டு வீணனே !
தாமதமாகப் பள்ளிசெல்லும்
சிறுவரைப் பார்த்து விரட்டு !
வேட்டைக்காரனைத் தட்டியெழுப்பி
வேந்தருடன் அனுப்பிவை !
நாட்டு எறும்புகளை
அறுவடைக் களத்திற்கு அனுப்பிவை !
ஆனால்,
காதலரின் நேரம் உனக்குக்
கட்டுப்பட்டதன்று
காதலர்க்கு நாழி ஏது ? நாளேது ?
மாதம் ஏது ?'

இவற்றிற்கெல்லாம் மேலாக - காலத்தால் முத்த சங்க காலத்துப் பாடல் ஒன்றை நாம் காணலாம்.

வாழ்க்கைக்குத் தேவையான பொருளைத் தேடும் பொருட்டுக் காதலியைப் பிரிந்து சென்ற தலைவன் தன் காதலியிடம் வாக்குறுதி கொடுத்துப் போனவன், குறித்த நாளில் திரும்பிவரவில்லை. விரைவில் திரும்பி வருவதாகக் கூறிப்போன தலைவனை இன்னும் காணவில்லையே என்று அவள் ஏக்கமுற்று, வீட்டுக் கதவைத் திறந்து வெளியே வந்து தன் தலைவன் வருகிறானா என்று பார்த்து, அவன் வராததால் மீண்டும் கதவை மூடிக் கொள்வதுமாக இருந்த நிலை மிகமிகப் பரிதாபமாக இருந்தது. அவனுந்தானென்ன? அவளைக் கண்டு, காதலின்பத்தில் மூழ்கித் திளைக்கும் ஆவலில்லாமலா இருப்பான்? என்ன செய்ய முடியும். அங்கொருவர் இங்கொருவர் ஆன மழைக்காலம். எனினும், எதிர்பாராதவிதமாக அவன் மேலும் சில நாட்கள் தங்கவேண்டியதாகி விட்டது.

பின்னர், தலைவன் திரும்பி வருகிறான். ஆம். தலைவியைக் காணும் ஆவலோடு விரைந்து வருகிறான். ஆனால், தலைவியிடம் நாம் கொடுத்த வாக்குறுதிப்படி திரும்ப முடியவில்லையே. இப்போது, நாம் காலம் தாழ்த்திப் போவதால் அவள் நம்மோடு ஆவலோடு பேசுவாளோ? அல்லது நம்மோடு பேசாமலே பிணங்கிக் கொள்ளுவாளோ என்றெல்லாம் பலவாறாக அவன் ஏக்கத்தோடு குழப்பமுற்றான். தலைவன் ஊருக்குள் திரும்பினான். அவள் வீட்டை நெருங்க நெருங்க அவன் உள்ளம் படபடத்தது.

பெரிதும் ஏமாற்றமுற்ற தலைவியோ, 'இப்படி நம்மிடம் பொய் சொல்லி, ஏமாற்றிப் பிரிவுத் துயரால் நம்மைப் பித்துப் பிடிக்கும்படி செய்துவிட்டு, அவர் அங்கே சுகமாக இருக்கிறாரே; அவர் திரும்பி வரட்டும். வந்தால் அவரோடு பேசக்கூடாது என்று தீர்மானத்தோடுதான் இருந்தாள்.

தலைவன் வீட்டுக்குள் நுழையும்போதே, 'கண்ணே எதிர்பார்க்காமல் தாமதிக்க நேர்ந்தது' என்று கூறிக்கொண்டே நுழைந்தான். அவனோடு பேசக்கூடாது என்ற தீர்மானத்தோடு இருந்த தலைவியோ, உடனே விரைந்து எழுந்து அவனை ஆரத்தழுவிக் கொண்டாள். ஆம். அவனைக் கண்டதும் எல்லாம் மறந்துபோனது. வேறு நினைவே இல்லை. அவள் உள்ளமும் பெண்ணுள்ளந்தானே.

பின், ஒருவாறாக இருவரும் ஏதேதோ பேசத் தொடங்கினர். அவள் உணவு தயாரிக்க அடுக்களைக்குப் போனாள். அவனோ வீட்டிலேயே வேறு சில வேலைகளைப் பார்க்கத் தொடங்கினான்.

உணவு தயாரானது. இருவரும் சாப்பிட்டு முடித்தனர். சிறிதுநேரத்தில் நிலா முற்றத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். வந்த களைப்பில் அவனால் அதிகநேரம் பேசிக்கொண்டிருக்க முடியாமல்

'அன்பே! நேரமாயிற்று. எனக்குத் தூக்கம் வருகிறது' என்றான். தலைவி தலைவனின் குறிப்பறிந்தாள். இருவரும் படுக்கையறை நோக்கிப் பறந்தனர்.

எத்தனை நாட்கள் இருவரும் பிரிந்திருந்தனர். கொள்ளை! இன்பமோ கொள்ளை! கொள்ளை! பொழுது விடிந்ததே தெரியவில்லை.

சேவல் கூவிற்று! அது அவளுக்கு இடியொலி போல ஒலித்தது.

சட்டென்று அவள் கண்கள் சினந்தது.

அந்தச் சேவல் மீது ஆராத சினம் கொண்டாள். சினத்தின் மிகுதியால் அந்தத் தலைவி பேசுவதைப் பாருங்கள். :

'குவிந்த - சிவந்த கொத்துக்களையுடைய
செங்காந்தள் மலர் போன்ற ஒளிபொருந்திய
அழகிய பூவைப் போலச் சிவந்த
கொண்டையை உடைய சேவலே !
கூட்டத்தோடு பொருந்தி வாழும் ஏ, சேவலே !
நல்ல விளைவின் பயனை அனுபவித்து
வாழுகின்றவர்களை
உடைய இவ்வூரைச் சேர்ந்த என் தலைவனோடு
இன்பத்தைத்
தரும் காதற்களிப்பில் நாங்கள் மயங்கித்
திளைத்துக் கிடந்தபோது,
எம்மை எழுப்பி, எங்கள் இன்பத்தைக் கெடுத்துத்
தொலைத்துவிட்டாயே !

வீட்டிலுள்ள எலிகளைப் பிடித்துத் தின்பதற்காக
இங்குவந்து, அவற்றைத் தேடி அலைகின்ற
காட்டுப் பூனையிடம் நீ சிக்கி, அந்தப் பூனையின்
குட்டிக்குச்
சிலநாள் வைத்திருந்து உண்ணும் உணவாகி,
நீ மிக்க துன்பத்தை அடைவாயாக !'

அவள், தங்கள் இன்பத்திற்கு இடையூறு செய்த சேவல் உயிர்வதைப்பட்டுச் சாகவேண்டும் என்று பேசுவதென்றால் - அவள் இதில் எவ்வளவு துன்பமுற்றிருக்க வேண்டும்! அந்தத் துன்பத்தால் ஏற்பட்ட சினத்தின் சிகரத்திலிருந்து தலைவி பேசுவதாகக் கூறும் பாடல்தான் எவ்வளவு நயமாக உள்ளது! இந்தப் பாடல், குறுந்தொகையில் மதுரைக் கண்ணனார் பாடியுள்ளது.

அந்தக் குறுந்தொகைப் பாடல் இதோ;

'குவிமிணர் தோன்றி ஒன்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத்து இல்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்கிரை யாகிக்
கடுநவை படீஇயரோ; நீயே நெடுநீர்
யான ரூரன் தன்னொடு வதிந்த
ஏம இன்றுயில் எடுப்பி யோயே !

இப்படிப்பட்ட பாடல்கள் தெவிட்டாத தேன்சுவைப் பாடல்கள், சங்க நூல்களில் ஏராளம்! ஏராளம்! படித்துச் சுவைப்போமாக! ★

சங்க காலத்தில் கல்வி

சங்க இலக்கியம் 2,279 செய்யுட்களை உடையது. இவற்றை 473 புலவர்கள் இயற்றியுள்ளனர். சங்கச் செய்யுள்களின் காலத்திய பெண் பாற்புலவர்கள் 50 பேர். இவர்களன்றி 102 பெயர் தெரியாத கவிஞர்கள் உள்ளனர். சங்கச் செய்யுள்களின் கால எல்லை கி.மு.6க்கு முன் தொடங்கி கி.பி.2ஆம் நூற்றாண்டு வரை என்று கொள்ளலாம். சங்கச் செய்யுட்கள் அனைத்தும் இலக்கியத் தரத்தின் கொடுமுடியை எட்டியவை என்பதில் ஐயமில்லை. எனவே தமிழில் ஆழ்ந்து எண்ணவும் எடுத்துரைக்கவும் செய்யுளாக வடிக்கவும் உரிய உயர் கல்வி அறிவை அற்றைப் புலவர்கள் எய்தி இருந்தனர் என்பது தெளிவாகிறது.

சங்க இலக்கியங்கள் வானைப் பற்றிய அறிவியலுக்குப் பிறழ்ச்சி இல்லாத செய்தியைத் தெரிவிக்கின்றன. இக்குறிப்புகள் தமிழர் சிறந்த கணக்கறிவைப் பெற்றிருந்தனர் எனக் காட்டுகின்றன.

சங்க இலக்கியப் பாக்கள் ஒரு குலத்தாராலோ அல்லது மேல் குலத்தாராலோ மட்டும் செய்யப்பட்டன அல்ல, பல்வேறு குலத்தாரும் இனத்தாரும் சிறந்த இலக்கியங்களைப் படைத்துள்ளனர். கபிலர், நக்கீரர் போன்ற வேளாளப் பார்ப்பார்கள், கூல வாணிகன், அறுவை வாணிகன் முதலான வணிகர்கள், கோவூர் கிழார் போன்ற வேளாளர், மருத்துவன், கணியன், கொல்லன் வண்ணக்கன் முதலான பல தொழில் அறிஞர்கள், கோப்பெருஞ்சோழன் நெடுஞ்செழியன் போன்ற மன்னர்கள், பூதபாண்டியன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டு முதலான அரசியர், பாரிமகளிர் போன்ற குறுநில மன்னருடைய பெண்மணிகள் பேய்மகள் இளவெயினி போன்ற வேட்டுவ மகளிர் காவற்பெண்டு போன்ற செவிலித்தாயர், வெண்ணிக்குயத்தி போன்ற குயத்தியர், காக்கைப் பாடினியார் போன்ற பாடினிப் பெண்பாற் புலவர்கள், தமிழ்க் கூத்தனார் போன்ற கூத்துக் கலைஞர்கள் அற்றை நாளில் தமிழில் எழுதிச் சிறந்துள்ளனர்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர் பாலாசிரியர் என்றும், உயர் கல்வி ஆசிரியர் கணக்காயர் என்றும் பண்டை நாளில் குறிக்கப்பட்டனர். நூலையோ செய்யுளையோ படைத்தவர் ஆசிரியர் அல்லது ஆசான் என்று அழைக்கப்பட்டனர்.

மேலே காட்டிய குறிப்புகள், கல்வி ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் பொதுவாக இருந்தது என்பதையும், அனைத்துத் தொழில் வழிக் குலத்தினர்க்கும் உரியதாக இருந்தது என்பதையும் தெளிவுறுத்துகின்றன.



அரசர்கள் புலவர்களை மிகவும் மதித்தனர். புலவர்க்குப் புரவலன் கவரி வீசியதாக வரும் மோசிகீரனார் செய்யுளும் மாங்குடி மருதன் தன்னைப் பாடாது விலக்கும் பழிவரக்கூடாது என்று நெடுஞ்சினம் மொழியும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டும், இன்ன பிறவும், புரவலர் புலவர்பால் கொண்ட, அரசர் அறிஞர் மேல் கொண்ட மதிப்பைப் புலப்படுத்துகின்றன. அறிஞர் ஆசிரியர் மேல் உள்ள மிகு மதிப்பே பிற்காலத்து அவரைத் தெய்வம் எனப் போற்றும் நிலையை உருவாக்கியது.

சான்று: "மாதா பிதா குரு தெய்வம்".

அரசர், அறிஞர் மேல் கொண்டிருந்த பெரும் மதிப்பிற்குப் பல சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒரு சில ஒரு புலவனுக்கு 500 ஊர்களை அரசன் அன்பளித்தான் என்று பதிற்றுப்பத்து மொழிகிறது. கபிலரைச் சேர அரசன் ஒருவன் மலைமுடிக்கு அழைத்துச் சென்று, கண்ணுக்கு எட்டிய தூரம் உள்ள ஊர்களை அன்பளித்தான். பட்டினப்பாலை என்ற இலக்கியத்தைப் படைத்ததற்காக உருத்திரங் கண்ணனார் என்ற புலவனுக்கு 16 இலட்சம் பொன் காசுகள் மன்னனால் வழங்கப்பட்டன. மலை நாட்டில் உள்ள தோட்டி மலையில் இருந்த குறுநில மன்னன் தன்னை அணுகிய புலவருக்குத் தன் கழுத்தில் இருந்த பொன் மாலையைப் பரிசிலளித்தான். குமணன் என்ற வள்ளல் தன் தலையையே பெருந்தலைச் சாத்தன் என்ற புலவனுக்கு அளித்தான் (புறம் 165).

முனைவர் க.ப.அறவாணன்

சில புலவர்கள் சில மன்னர்களின் அணுக்கத் தோழர்களாக வாழ்ந்தமையைச் சங்க இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஔவை - அதியமான்; கபிலன் - பாரி; மோசி - ஆய், பொய்கையார் - சேரமான் கணைக்கால் இரும்பொறை; மாங்குடி மருதன் - பாண்டியன் நெடுஞ்செழியன்; பிசிராந்தை - கோப்பெருஞ் சோழன், பரணர் - பேகன்.

சில மன்னர்கள் சங்க இலக்கியத் தொகுப்பிற்குக் காரணர்களாக விளங்கினர். பாண்டியன் மாறன் வழுதி துணையால் நற்றிணை தொகுக்கப்பெற்றது. பூரிக்கோ ஆணையால் குறுந்தொகை தொகுக்கப் பெற்றது. பாண்டியன் உக்கிரப்பெருவழுதியின் உதவியால் அகநானூறு தொகுக்கப்பெற்றது. இளம்பெருவழுதி விருப்பிற்கு இணங்கப் பரிபாடல் தொகுக்கப்பெற்றது.

குறுந்தொகை 33ஆம் செய்யுள் மாணாக்கன் என்றே சுட்டுகிறது. பண்டைத் தமிழகத்துச் சிற்றூர்களில் இருந்த மன்றம் கற்குமிடமாக இருந்தது. மணிமேகலை கருத்துரையாடும் இடங்களைப் 'பட்டிமன்றம்' என்று போற்றுகின்றது (காதை 2:6:1). தமிழ்ச்சங்கம் பற்றிய குறிப்புகளும் பண்டைய கல்வி ஆர்வத்தைக் காட்டுவன.

தமிழர் கல்விக்கு மிகுமதிப்பு வைத்திருந்தனர் என்பதை ஓதற் பிரிவு பற்றிய தொல்காப்பிய நூற்பாவாலும், ஓதற் பிரிவை உணர்த்தும் சான்றோர் செய்யுளாலும் அறியலாம். இளமையில் கற்கவேண்டும் என்பதை வற்புறுத்தினர். (இளமையில் கல்) திருமணத்திற்குப் பின்னும் கூட ஆடவர்கள் கற்றனர் என்பதையும் கற்பதற்காக வெளியூர் பிரிந்து சென்றனர் என்பதையும் கற்பதற்காக மூன்று ஆண்டுகள் மனைவியைப் பிரிந்து இருந்தனர் என்பதையும் 'ஓதற் பிரிவு ஒரு மூன்று ஆண்டே' என்று தொல்காப்பியம் மொழிவதால் அறிகிறோம்.

சங்ககாலத்தில் இருந்த கல்வி அறிவு, கல்வி வாய்ப்பு, கல்வி ஆர்வம், சங்க காலத்தை அடுத்த மருவிய காலத்திலும் தொடர்ந்தன. இதனைச் சமண பௌத்தர் வரவாலும், உறவாலும் விளங்கிக் கொள்ளலாம். சமண முனிவர்கள் தனித்துத் தங்கி இருந்த இடங்கள் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன. இப்பள்ளிகளில் இருந்து கொண்டு சமணத் துறவியர் ஊர்ப்பிள்ளைகளுக்கு, மொழிப்பாடமும் சமயப்பாடமும் சொல்லிக் கொடுத்தனர். எனவேதான், கல்வி அறிவு பெறும் இடம் இப்பழக்கத்தை ஒட்டிப் பள்ளி என்றும் பள்ளிக்கூடம் என்றும் போற்றப்படலாயின. கல்வி கற்றலை ஊக்குவிக்கும் முகமாக சைன மதத்தில் சாத்திரதானம் என்ற ஓர் அறம் பின்பற்றப்பட்டது. இதன்படி சைனக் குடும்பத்தினர் அனைவரும் சமய சாத்திரக் கல்வி வளர்ச்சிக்காக அறம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

சுதந்திரத் திருநாள், விழாக்கோலத்தோடு நின்றுவிடாமல் - வேதனை தீர, வாட்டம் நீங்க, வேலையில்லாத் திண்டாட்டம் விலக, வறுமை ஒழிந்திட, விலைவாசி ஏற்றம் தாழ்ந்திட அனைவரும் பாடுபடுவோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வோமாக!

- கலைஞர்

சங்க காலத்தில் இருந்த கல்வி ஆர்வமும் அறிவும் சங்கம் மருவிய காலத்தில் வளர்ந்தன. வலுப்பெற்றன. இதனைத் திருக்குறள் தெளிவுபடுத்துகின்றது. திருக்குறளில் இடம் பெற்றுள்ள கல்வி (அதி 40), கல்லாமை (அதி 41), கேள்வி (அதி 42), அறிவுடைமை (அதி 43) ஆகிய நான்கு அதிகாரங்களும் அவற்றில் உரைக்கப்பட்ட செய்திகளும் எடுத்துரைக்கின்றன. வாழும் உயிர்க்கு எண்ணும் எழுத்தும் கண்கள் (குறள் 392, 393), கீழ்ப்பிறந்தும் கற்றாரே சிறந்தார் (குறள் - 409); அறிவிலார் என்னுடைய ரேனு மிலர் (குறள் - 430) ஆகிய குறள் செய்திகள் கல்வி அனைவர்க்கும் பொதுவாக இருந்ததைப் புலப்படுத்துகின்றன.

திருவள்ளுவரை ஒட்டியே நாலடியார் முதலான அற இலக்கியங்கள் தொடர்ந்து கல்வியைப் போற்றுகின்றன. இப்போற்றுதல் நூற்றாண்டு தோறும் தமிழ் நீதி இலக்கியங்களில் தொடர்ந்து இடம் பெற்றிருக்கின்றது. ★

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணிகள் அந்நாட்டின் மண்வளமும் மனவளமுமே ஆகும். மண்வளத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு மனவளமுள்ள உடல் மிகவும் இன்றியமையாதது. எனவேதான் மனிதவள மேம்பாட்டிற்குப் பல நாடுகள் அதிகக் கவனம் செலுத்திவருகின்றன. சமுதாயத்தில் வலிமை குன்றிய பிரிவினர் (Weaker Section) எனக் கருதப்படுபவர்கள் பெண்களும் குழந்தைகளும் ஆவர். ஆனால் இவர்கள்தான் மனித வளத்திற்கு அடிப்படை ஆணிவேர். இவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவது ஒளிமிக்க எதிர்காலத்தை உருவாக்க வழிவகுக்கும்.

பெண்களில், தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள். குழந்தைகளில் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்கள். இவர்களது உடல்வளத்தையும் மனவளத்தையும் சீராகவும் சிறப்பாகவும் திகழச்செய்வது நமது கடமை. இதனைத் தலையாய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருவதுதான் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டமாகும்.

1980ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி வட்டாரத்தில் உலக வங்கியின் உதவியோடு விதைக்கப்பட்ட இத்திட்டத்தின் வித்து முளைத்துச் செடியாகி, மரமாகி பத்து மாவட்டங்களுக்கு நிழல் தந்து கொண்டிருந்தது. தற்பொழுது இத்திட்டம் ஆழ வேரூன்றி 24 மாவட்டங்களிலுள்ள 318 வட்டாரங்களிலுள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்குப் பயன்பட்டு வருகின்றது.

திட்டத்தின் நோக்கமும் செயல்பாடும்:

திட்டத்தின் நோக்கங்கள் பல. அவற்றில் தலையாயன வருமாறு:

- ❑ கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்; அதன் மூலம் குழந்தை உயிர்வாழ்தல் மற்றும் அதன் வளர்ச்சியை உறுதி செய்தல்.
- ❑ 0-36 மாதக் குழந்தைகளுக்கு மாதந்தோறும் எடை எடுத்து வளர்ச்சியைக் கண்காணித்தல்.
- ❑ வயதிற்கேற்ற எடை இல்லாத குழந்தைகளுக்கு இணை உணவு வழங்குதல்.
- ❑ 3 வயது முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குவதுடன் அவர்களது உடலும் உள்ளமும் ஒரு சேர வளர பள்ளி முன்பருவக் கல்வி அளித்தல்.
- ❑ ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி மூலம் திட்டப்பணிகளின் அவசியத்தையும் தேவை உணர்வையும் உருவாக்குதல்; நல்ல மனப்பாங்கை உருவாக்கி நடைமுறையில் தேவையான மாற்றங்களைக் கொண்டு வருதல்.
- ❑ தனிநபர், குடும்பம், சமுதாயம் ஆகியோரின் செயல்திறத்தை மேம்படுத்தி அதன் மூலம் சமுதாயத்தின் நலத்தில் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை அடையச் செய்தல்.

மேற்கண்ட குறிக்கோள்களைச் செவ்வனே அடையப் பல்வேறு பணிகள் கிராமங்களில் மேற்கொள்ளப் படுகின்றன. கணக்கெடுத்தல், குழந்தைகளின் எடை எடுத்து வகைப்படுத்துதல், வயதிற்கேற்ற எடை இல்லாத குழந்தைகளுக்கு இணை உணவு வழங்குதல், தடுப்பூசி போடத் தயார் செய்தல், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு எடை எடுத்து, இரும்புச்சத்து மாத்திரை வழங்குதல் மற்றும் இணை உணவு வழங்குதல், அனைவருக்கும் ஊட்டச்சத்து-சுகாதாரக் கல்வி அளித்தல், பணியாளர்களின் அறிவையும் செயல்திறனையும் மேம்படுத்தப் பல்வேறு வகையான பயிற்சிகள் அளித்தல் ஆகியவை இத்திட்டத்தின் மூலம் செய்யப்படும் முக்கியப் பணிகளாகும்.

சமுதாய ஊட்டச் சத்து மையம்:

திட்டப்பணிகளைச் செயல்படுத்த ஒவ்வொரு கிராமத்திலும் 1500 மக்கள் தொகைக்கு ஒரு சமுதாய ஊட்டச்சத்து மையம் செயல்பட்டு வருகின்றது. இம்மையத்தில் பணியாற்றும் சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆகியோரின் சுகாதார, ஊட்டச்சத்து நிலையின் மேம்பாட்டிற்குப் பல்வேறு பணிகளைத் திறம்பட ஆற்றி வருகின்றார்.

பள்ளி முன்பருவக் கல்வி:

நகர்ப்புறங்களில் தனியார் மழலையர் பள்ளிகள் புற்றீசல்போல் பெருகிவருகின்றன. இதனை எண்ணி ஏக்கப் பெருமூச்சுவிட்ட கிராம மக்களின் ஏக்கத்தைப் போக்குகின்ற வகையில் கிராமங்கள் தோறும் குழந்தைகள் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

"அறிவை வளர்த்திட வேண்டும் - மக்கள்
அத்தனைப் பேருக்கும் ஒன்றாய்
சிறியாரை மேம்படச் செய்தால் - பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்!

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்".

- என்றார் பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி. பாரதி கண்ட கனவை முற்றிலும் நனவாக்கி வருகிறது தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.

மூன்று வயது முதல் ஆறு வயது வரையுள்ள குழந்தைப் பருவம் மிக முக்கியமான கட்டமாகும். மனவளர்ச்சியும் அதிவேகமாக வளர்கின்ற காலம். இந்த வயதில்தான் எதையும் அறிந்துகொள்ளவும் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் குழந்தைகளிடையே ஆர்வம் மிகுந்து காணப்படும். இக்காலக் கட்டத்தில் குழந்தைகளுக்கு அறிவுரையும் பள்ளி முன்பருவக் கல்வியும், உடல் வளர சத்துக்கள் நிறைந்த மதிய உணவும் வழங்கப்படுகின்றது.

வெவ்வேறு வகையான விளையாட்டுக்கள் மூலமாகவும் பல்வேறு வகையான பாடத்திட்டங்கள் மூலமாகவும் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. குழந்தைகளின் அறிவு, மனம், சமூகம், மொழி மற்றும் உடல் வளர்ச்சி போன்றவற்றில் அதிகம் அக்கறை காட்டப்படுகிறது. பள்ளிக்குச் செல்லக் குழந்தைகளைத் தயார்படுத்தும் முதல் நிலைதான் முன்பருவக் கல்வியாகும். குழந்தைகளுக்கு எண், எழுத்து, படிப்பு போன்றவற்றில் அடிப்படை அமைப்பதற்கும், நல்ல பழக்க வழக்கங்கள் கற்றுக்கொள்வதற்கும் பள்ளி முன்பருவக் கல்வி பெரிதும் ஊக்கம் அளிக்கிறது. இப்பணியைக் கிராம அளவில் குழந்தைகள் நல அமைப்பாளர் ஆற்றி வருகின்றார்.

கல்வி, செய்தித் தொடர்புப் பணிகள்:

"உடை மாறுவது முக்கியமல்ல;
உள்ளம் மாறுவதும் உயர்ந்த கருத்துக்கள்
உள்ளத்தில் பதிவதும்தான் மிகவும் முக்கியம்"

என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஆண்டாண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருவதாலேயே சில தவறான மூடப்பழக்க வழக்கங்கள் மனித வாழ்வில் தொடர்ந்து நிலைபெற்று விடுகின்றன. அப்பழக்க வழக்கங்களை மாற்றி மக்களை நல்வழிக்கு ஆற்றுப்படுத்துவது மிகவும் அவசியம். உணவு, உடை, உறையுள் மற்றும் நடைமுறை ஆகியவற்றில் அவ்வாறான செயல்களை நீக்கி உகந்த செயல்களை நடைமுறைப்படுத்த மக்களை ஊக்குவிப்பதே தகவல் தொடர்புப் பணிகளின் முக்கிய நோக்கமாகும். மக்களின் மனப்பாங்கில் மாற்றத்தைக் கொண்டு வரவும், நடைமுறையில் முன்னேற்றத்தைக் காணவும் தகவல் தொடர்புப் பணிகளில் பல உத்திகள் கையாளப்படுகின்றன.

புதுமணத் தம்பதிகளுக்கு பணியரங்கம், மாமியார்-மருமகள் கருத்தரங்கம், கிராமத் தலைவர்களுக்கு பயிற்சி முகாம், சுயஉதவிக் குழுக்களுக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் திட்டமிடல் பயிற்சி, சித்த ஓமியோபதி மருத்துவர்களைக் கல்விப்பணியில் ஈடுபடுத்துதல், பின்தங்கிய நலிவுற்ற பகுதிகளில் கல்வி முனைப்பு இயக்கங்கள் நடத்துதல், வானொலி, தொலைக்காட்சி மூலம் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து கருத்துக்களைப் பரப்புதல் போன்றவை ஊட்டச்சத்து திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கியத் தகவல் தொடர்புப் பணிகள் ஆகும்.

மக்கள் பங்கேற்பு:

இத்திட்டத்தில் மக்கள் பங்கேற்பு நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. எதிர்காலத்தில் மக்களே ஏற்று நடத்தும் திட்டமாக இது மலரும் என்பதில் ஐயமில்லை. திட்டமிடுவதிலும் பணிகளைச் செயல்படுத்துவதிலும், முறைப்படுத்துவதிலும் பல்வேறு நிலைகளில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஊராட்சி மன்றத் தலைவர்கள், உள்ளூர் பிரமுகர்கள், சமுதாயத் தொடர்புக் குழுக்கள் தொண்டு நிறுவனங்கள் ஆகியவை இயன்ற வகையெல்லாம் திட்டம் திறம்படச் செயல்பட உதவி வருகின்றனர். ஊட்டச்சத்து மையத்தைப் பழுது பார்த்தல், வெள்ளையடித்தல், விளம்பரப்பணிக்கு சுவரொட்டிகள்,

துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்துக் கொடுத்தல் குழந்தைகள் அமர பாய்கள் வழங்குதல், சுற்றுப்புறத்தைச் சுகாதாரமாக வைக்க உதவுதல் போன்ற பல வழிகளில் மக்கள் பங்கேற்று வருகின்றனர். சற்றேறக்குறைய ரூபாய் தொண்ணூறு லட்சம் மதிப்புள்ள பணிகளைத் திட்டத்தின் வளர்ச்சிக்கு மக்கள் ஆற்றியுள்ளனர்.

திட்டத்தின் பயன்கள்:

இத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள நன்மைகள் பல. ஏழ்மை நிலையில் இருக்கும் எண்ணற்ற தாய்மார்களும் குழந்தைகளும் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர். சுமார் 15 லட்சம் குழந்தைகளுக்கு மாதந்தோறும் எடை எடுக்கப்பட்டு அவர்களின் வளர்ச்சி சீராக உள்ளதா என கண்காணிக்கப்படுகிறது. அவர்களில் வயதிற்கேற்ற எடை இல்லாத சுமார் 3 லட்சம் குழந்தைகளுக்கு நாள்தோறும் ஊட்டச்சத்து உருண்டை வழங்கப்படுகிறது. கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அனைவருக்கும் சுகாதார, ஊட்டச்சத்து கல்வி அளிப்பதுடன் ஒவ்வொரு நாளும் சுமார் 2.90 லட்சம் தாய்மார்கள் ஊட்டச்சத்து உணவு பெற்று பயனடைகின்றனர். மூன்று வயது முதல் ஐந்து வயதிற்கு உட்பட்ட சுமார் 6 லட்சம் குழந்தைகளுக்குப் பள்ளி முன்பருவக் கல்வியும் மதிய உணவும் வழங்கப்படுகிறது.

திட்டத்தில் செயல்படுத்தி வரும் பல்வேறு ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள் காரணமாக சிசுமரண விகிதம் மற்றும் பேறுகாலத் தாய் மரண விகிதங்கள் கணிசமாக குறைந்துள்ளன. 1983ல் 1000க்கு 101ஆக இருந்த சிசுமரண நிலைமை 1996ல் 54.8 ஆகக் குறைந்துள்ளது. பேறுகாலத் தாய் மரண விகிதம் 1991ல் ஆயிரத்திற்கு 3-ஆக இருந்து, 1996ல் 1.27 ஆகக் குறைந்துள்ளது. 1983ல் கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையில் இருந்த குழந்தைகள் 12.3 சதவீதம். அது தற்போது 2.1 சதவீதமாகக் குறைந்துள்ளது. ஆறு உயிர்க்கொல்லி நோய்களிலிருந்து குழந்தைகளைக் காக்கும் தடுப்பூசித் திட்டம் ஊட்டச்சத்துப் பணியாளர்களின் ஒத்துழைப்பால் தமிழகத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பபட்டு வருகிறது. குழந்தைகளின் சராசரி பிறப்பு எடை 2.63 கிலோவாக உயர்ந்துள்ளது.

உலக வங்கியின் உதவியோடு செயல்பட்டு வந்த இத்திட்டத்தின் காலம் 1997, டிசம்பர் மாதத்தோடு முடிவுற்ற போதிலும் தற்பொழுது முழுச் செலவையும் தமிழக அரசே ஏற்று திட்டதைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

ஊட்டச்த்து திட்டப்பணிகள் கருவறையில் ஆரம்பித்து கடைசிக் காலம் வரை தொடர்கிறது. வயது முதிர்ந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படுகிறது. “வாடிய பயிரைக் கண்ட பொழுதெல்லாம் வாடினேன்” என்றார் வள்ளலார். குழந்தைகள் வாடுவது சமுதாயத்திற்கு இழுக்கு அல்லவா? வாட்டமுற்ற குழந்தைகளின் ஏக்கத்தைப்போக்கி ஊட்டமுள்ள உணவளித்து,ஒப்பற்ற கல்வி தந்து நாட்டின் வருங்காலத் தூண்களாம் மழலையர்க்கு வளமிக்க, ஒளிமிக்க எதிர்காலத்தை உருவாக்கிடப் பெரிதும் பாடுபட்டு வருகிறது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம். இத்திட்டத்திற்கு அனைத்துத் துறைகளைச் சார்ந்த பணியாளர்களும் தொண்டு நிறுவனங்களும் பொது மக்களும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை மேலும் தொடர்ந்து நல்குவது அவசியம்; ஒருங்கிணைந்து செயல்படும்போது, திட்டப்பணிகள் ஒப்பற்ற பயனைத்தருவது உறுதி. தாய்சேய் நலத்திலும் மனிதவள மேம்பாட்டிலும் ஊட்டச்சத்துத் திட்டப் பணிகள் ஓர் அமைதிப் புரட்சியை உருவாக்கி வருகிறது என்பது உண்மை.

ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்
அடையாறு, சென்னை 20

வீட்டுத்தோட்டம் !

கவிஞர் **எஸ்.இ.லோகநாதன்**

எங்கள் வீட்டுத் தோட்டம்பார்
எத்தனை அழகாய் இருக்கிறது
கண்களை மயக்கி அழைக்கிறது
காண்பவர் வியக்கத் தழைக்கிறது !

மல்லிகைப் பந்தல் இருக்கிறது
மணக்கும் ரோஜா சிரிக்கிறது
முல்லைக் கொடியும் படர்கிறது
கொல்லைப் புறமே மணக்கிறது !

கீரைச் செடிகள் இருக்கிறது
கிழங்கு வகையும் இருக்கிறது
நேரே தென்னை மா,முருங்கை
வாழை கொய்யா வளர்கிறது !

எல்லாம் நமக்கு உணவாகும்
மிச்சம் இருந்தால் பணமாகும்
உங்கள் வீட்டிலும் தோட்டத்தை
உடனே வைத்துப் போற்றுங்கள் !



எதிர்முனை

- சா. கந்தசாமி

கணியூர் உயர்நிலைப் பள்ளியின் உடற்பயிற்சி ஆசிரியர் வாசுதேவன். சுமார் நாற்பத்தைந்து வயது. ஆனால் தலையின் முன் மயிரெல்லாம் கொட்டி வழுக்கை விழுந்துவிட்டது. பின் மயிரை இழுத்துச் சீவி வழுக்கையை மறைத்துக்கொண்டு இருந்தார். திருகிவிட்ட மீசை. அப்புறம் சிகப்பேறிய கண்கள். எப்பொழுதும் கோபத்தில் இருப்பது மாதிரியே சிடுசிடுவென்று இருப்பார். பேச்சிலும் அந்த சிடுசிடுப்புத் தெரியும். இருந்தாலும் திறமையான ஆசிரியர். மாணவர்களுக்கு அவரைப் பிடித்தது. அவர் வந்த பிறகுதான் கணியூர் உயர்நிலைப் பள்ளி வாலிபால், உயரத்தாண்டுதல், இருநூறு மீட்டர் ஓட்டம் ஆகியவற்றில் மாவட்டத்திலேயே முதலாவதாக வந்து மூன்று தங்கப்பதக்கத்தைப் பெற்றது.

பரிசு கொடுக்க வந்த மாவட்ட ஆட்சியாளர் மூன்று தங்கப் பதக்கங்களைக் கொத்தாக வென்ற கணியூர் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பொன்.தனசேகரனை மேடைக்கு அழைத்து வெகுவாகப் பாராட்டினார். அவர் பேசினபோது இக்காலத்தில் படிப்பு என்பது வெறும் புத்தகப் படிப்பு மட்டுமல்ல, விளையாட்டும் ஒரு பாடம்தான். அதனை நன்கு புரிந்துகொண்டு கணியூர் பள்ளி செயல்படுவது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடியது. இன்று மாவட்ட அளவில் முதன்மை பெற்றுள்ள பள்ளி நாளை மாநில அளவிலும் அடுத்த நாள் இந்திய அளவிலும், பின்னர் ஒலிம்பிக் அளவிலும் போட்டியிட்டுத் தங்கப் பதக்கம் பெறவேண்டும் என்று வாழ்த்தினார்.

மாவட்ட ஆட்சியாளர் பேச்சு, தலைமை ஆசிரியருக்கு அவ்வளவாக மகிழ்ச்சியளிக்கவில்லை. விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் பெற்றதில் அவர் பங்கு ஒன்றுமில்லை. இன்னும் சொல்லப்போனால் விளையாட்டுக்கு அவர் நேர் எதிர். படிப்பு என்றால் புத்தகங்களைப் படித்து நிறைய மதிப்பெண் பெறவேண்டும் என்ற கொள்கை கொண்டவர். விளையாட்டிற்கான நேரத்தை எல்லாம் சிறப்பு வகுப்புக்கென்று நிறையப் பிடுங்கிக் கொண்டிருந்தார். அதற்காகத் தலைமையாசிரியர் அறைக்குள் வந்த வாசுதேவன் கத்தினார். கத்தினார் என்றால் நிஜமாகவே கத்தினார். அவர் போட்ட கூச்சல் பள்ளிக்கூடம் முழுவதும் கேட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும் வகுப்பைவிட்டு வெளியில் வந்து நின்று வேடிக்கைப் பார்த்தார்கள். தலைமையாசிரியர் அறையில் இப்படியொரு காட்சியைப் பார்ப்பது இதுதான் முதன் முறை. எனவே என்ன செய்வது என்று தெரியாமல் ஒவ்வொருவரும் திகைத்துப் போய் நின்றுகொண்டிருந்தார்கள். கோபத்திலும் வருத்தத்திலும் தலைமை ஆசிரியருக்குப் பேச்சே வரவில்லை.

தமிழ் ஆசிரியர் பாரிவள்ளல் அவசர அவசரமாகத் தலைமையாசிரியர் அறைக்குள் நுழைந்தார். அவரைப் பார்த்ததும் ஓரடி முன்னே எடுத்து வைத்து, “பாருங்க சார், இவர் தலைமையாசிரியர்ன்னா மாணவர்களின் விளையாட்டு நேரத்தைத் திருட ஒன்னும் உரிமை இல்ல சார்” என்று கத்தினார்.

“என்ன சார் இப்படியெல்லாம் பேசுறீங்க..” என்று பாரிவள்ளல் அவர் கையைப் பிடித்தார்.

“ரொம்ப நாளா இப்படித்தான் சார் இவர் திருடிக்கிட்டே இருக்கார். இதை நான் விடப்போறது இல்ல. முதலமைச்சர் வரைக்கும் கொண்டுக்கிட்டுப் போய் ரெண்டுல ஒண்ணு பார்த்துடப்போறேன்”.

“எல்லாம் பார்க்கலாம். நீங்க வாங்க சார்” என்று பாரிவள்ளல் அவர் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியில் வந்தார்.

“எதுக்கு சார், வீணா சண்டை” என்றார் கணக்கு ஆசிரியர் சிவானந்தம்.

“நீங்க வாய மூடிக்கிட்டு சும்மா இருங்க. என் நேரத்தைத் திருடினா என்னால சும்மா இருக்க முடியாது” என்று பெரிதாகக் கத்தினார். விளையாட்டுக்கான நேரத்தில் பெரும்பாலும் கணக்குதான் நடந்தது.

அதனால் கணக்கு ஆசிரியர் மேல் அவருக்குக் கோபம். கோபத்தோடு திருட்டு என்ற வார்த்தையை சார் பயன்படுத்தியது தலைமையாசிரியரை மட்டுமல்ல. தமிழ் ஆசிரியர் பாரிவள்ளலைக் கூட அதிர்ச்சியடைய வைத்தது. ஆனால் அவரை என்ன செய்வது என்று ஒருவருக்கும் தெரியவில்லை. யாருக்கும் அவர் கட்டுப்படுவதில்லை. எந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போட்டாலும் சண்டை; இரண்டு வருஷம் கூட சேர்ந்தாற் போல அவர் ஒரு பள்ளியிலும் இருந்ததில்லை.

மாவட்டக் கல்வி அதிகாரி வாசுதேவனை தன் அலுவலகத்துக்கு வரவழைத்து, ‘மூன்று வருடத்திற்குக் கணியூர் பள்ளியில் சண்டை போட்டுக் கொள்ளாது இருக்கவேண்டும்; தலைமையாசிரியர் ரொம்ப நல்ல மனிதர்’ என்று சொன்னார்.

“நான் என்ன சண்டைக்காரனா? எல்லா வகுப்பு மாதிரியும் விளையாட்டும் ஒரு வகுப்புதான். அதைப் புடுங்கினா எப்படி சார் விடுறது? என் வகுப்பைப் புடுங்கினா நான் சும்மா இருக்கமாட்டேன் சார்”.

அவர் பதிலொன்றும் சொல்லவில்லை. ஆனால் உலகம் தெரியாத ஆளாகவும், வாழத்

தெரியாத மனிதராகவும் இருக்கிறாரே என்று நினைத்துக் கொண்டார். பள்ளிக்கூடத்தில் படிப்பு என்றால் மார்க்குதான். மார்க்கு இல்லாத பாடமெல்லாம் மதிப்பு இல்லாததுதான். மதிப்பு இல்லாத வேலையில் இருந்துகொண்டு மதிப்பு வேண்டுமென்றால் முடியுமா ?

வாசுதேவனுக்கு இதையெல்லாம் புரியவைக்க முடியல. அவருக்குப் படவில்லை. அதோடு அவருக்கு வேறு வேலைகளும் இருந்தன. எனவே சிரித்தபடி வெளியில் அனுப்பிவைத்தார். பள்ளிக்கூடத்தில் மட்டுந்தான்அவர் அப்படி என்பது இல்லை. வீட்டில் அதற்கு மேல். தம்பிக்கும் அவருக்கும் பெரிய சண்டை. பேச்சு வார்த்தை இல்லை. அப்பா செத்துப் போன பிறகு சொத்தைப் பிரிப்பதில் சண்டை வந்தது. சொத்துப் பிரிவினை நடந்து கொண்டிருந்தபோது, ரொக்கப் பணத்திற்குச் சரியாகக் கணக்குக் காட்டவில்லை என்று கத்தினார். தம்பி இதுதான் என்று கறாராகச் சொன்னான். அப்படி என்றால் எல்லா சொத்தையும் நீயே வைத்துக்கொள் என்று எழுந்து வந்துவிட்டார்.

நான்கு மாதங்கள் கழித்து தம்பி ஆள்விட்டு அனுப்பினான். அவர் போகவில்லை. பெரிய மாமா நேரில் வந்தார். நண்டு, கறும்பு மீன் விருந்து சாப்பிட்டுவிட்டுக் கையைத் துடைத்துக்கொண்டு பெரிய மாமா, "தம்பி என்னமோ டில்லியில வீடு வாங்கப் போறானாம். அதுக்குப் பணம் குறையுதாம். பங்கப் பிரிச்சிக்கிட்டீங்கனா, அவனுக்கு வசதியா இருக்கும்" என்றார்.

"பெரிய மாமா, நீங்களா இருக்கறதால நான் கொஞ்சம் தனிஞ்சு பேசுறேன். எப்ப என்ன ஏமாத்தப் பார்த்தானோ, அப்ப அவன் எனக்குத் தம்பி இல்ல; நான் அவனுக்கு அண்ணன் இல்ல. எல்லாத்தையும் அவனே எடுத்துக்கிட்டு டில்லியில வீடு வாங்கிக்கிட்டு ராஜா மாதிரி இருக்கட்டும்".

"இது எல்லாம் சரியா ?"

"ஏன் சரி இல்ல, என்ன ஏமாத்தப் பார்த்தவன், எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு போய் நல்லா இருக்கட்டும்".

"இப்படி வயித்து எரிச்சலோட பேசக் கூடாது".

"எவனுக்கு வயித்து எரிச்ச ?" என்று பெரிய மாமா கன்னத்தில் பளார் என்று அறைந்தார். மாமா கன்னத்தைத் தடவி விட்டுக்கொண்டு திரும்பிப்பார்த்தார். சப்தம் கேட்டு அவர் மனைவி ராணி உள்ளே இருந்து ஓடி வந்தாள்.

"உனக்கு ரெண்டு காசு கிடைச்சி, நீ நல்லா இருக்கணுமேன்னு ஓடியாந்தேன் பாரு. அதுக்குக் கைநீட்டி என்ன அடிக்கற இல்ல; அந்தக் கை விளங்காமப் போயிரும்" என்றபடி வீட்டு வாசல்படி இறங்கினார்.

"என்ன சொன்னே?" முன்னே பாய்ந்தார்.

ராணி அவர் கையைப் பிடித்துப் பின்னால் இழுத்தாள். அவளை உதறிவிட்டு விட்டு சோபாவில் உட்கார்ந்து கால்மேல் கால் போட்டுக்கொண்டு, வெளியில் போகும் பெரிய மாமாவையே பார்த்தபடி இருந்தார்.

"எல்லாரும் ஒன்னா கூட்டுச் சேர்ந்துக்கிட்டு என்ன ஏமாத்தப் பார்க்கிறானுவோ... பணம் என்னடா பணம்... பெரிய இது... நீங்களே எடுத்துக்கிட்டுப் பெரிசா இருங்கடா" என்று கத்தினார்.

ராணி அவரையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். அவர் தலை நிமிர்ந்து பார்த்தார்.

"அது உங்க பணம்தான். எதுக்கு நீங்க வேணாமின்னு சொல்லுறீங்க?"

அவர் தலையசைத்தார்.

"அந்தப் பணம் வந்தா கஷ்டமெல்லாம் விடியும் இல்ல, சின்னதா ஒரு வீடு கட்டலாம்; பையனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுக்கலாம்".

"அடி செருப்பால" வாசுதேவன் சோபாவில் இருந்து துள்ளியெழுந்தார். "அந்தப் பணத்துக்கு பெரிய திட்டம் எல்லாம் போட்டு வச்சி இருக்கிறீயா ? எப்ப என்ன ஏமாத்தப் பார்த்தானோ, அப்பவே அவன் என் தம்பி இல்ல. அப்பா பணத்தில வாழுற அற்பன் இல்ல நான். எனக்கு ரெண்டு கை, காலு இருக்கு... ஜம்முன்னு உழைச்சி சம்பாரிச்சி மாளிகை கட்டுவேன்... பையனுக்கு சைக்கிள் என்ன மோட்டார் சைக்கிளே வாங்கிக் கொடுப்பேன்.. அந்த பணத்தப் பத்தி பேசின உன்ன ரெண்டா வெட்டிப் போட்டுடுவேன்.."

ராணி தலைநிமிர்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே சென்றாள்.

ஒருநாள் மாலைப்பொழுது வாசுதேவன் நாற்காலியில் உட்கார்ந்து கால்களை ஆட்டிக்கொண்டிருந்தார். சாதாரணமாக அவர் மாலைப்பொழுதில் வீட்டிற்கு வந்து உட்கார்கிற ஆள் இல்லை. பள்ளிக்கூடம் விட்டால் விளையாட்டு மைதானம். அப்புறம் சிநேகிதர்கள். எட்டரை ஒன்பது மணிக்குதான் மோட்டார் சைக்கிளை வாசலில் கொண்டு வந்து நிறுத்துவார். எதற்கு இந்த நேரத்தில் வந்திருக்கிறார் என்பதைத் தீர்மானிக்க முடியாதவளாக ராணி தேனீரை முன்னே நீட்டினாள். மேசை மீது வைக்கும்படி தலையை ஆட்டினார். மேசை மீது கப்பை வைத்துவிட்டு உள்ளே சென்றாள். அவர் வாசலைப் பார்த்தபடி தேனீரை எடுத்துக் குடிக்க ஆரம்பித்தார்.

அவர் பையன் சுந்தரராசன், ஒன்பதாவது படிக்கிறவன் வீட்டுக்குள் நுழைந்தான். அப்பாவைப் பார்த்ததும் கொஞ்சம் பயந்து போனான். நின்று லேசாகத் தலையை நிமிர்த்தி அப்பாவை ஒரு பார்வை பார்த்தான்.

"இப்பத்தான் பள்ளிக்கூடம் விட்டு வர்றியா ?"

"கணக்கு சார் கிளாஸ் எடுத்தார் அப்பா."

"பைய வச்சிட்டு சீக்கிரம் வா."

அவன் அவசர அவசரமாக உள்ளே சென்றான். போன வாரம் அவன் இலுப்பைத் தோப்பில் சைக்கிள் சுற்றுக் கொண்டிருந்தபோது அந்தப் பக்கமாக வந்தவர் மோட்டார் சைக்கிளை அரச மரத்தடியில் நிறுத்திக் கொண்டு ஒரு பார்வை பார்த்தார். அப்பாவைப் பார்த்ததும் பயத்தில் இடுப்பை நெளித்து நெளித்துக்கொண்டு சைக்கிள் ஓட்டிக்கொண்டு போனான். அவர் அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார். இரண்டாவது சுற்றுச் சுற்றிக்கொண்டு அரச மரம் பக்கமாக வந்தவன் அப்பாவைப் பார்த்துவிட்டு அவசர அவசரமாகக் கீழே இறங்கினான்.

"இங்கே வா" என்று கையைக் காட்டி கூப்பிட்டார். பயத்தோடு முன்னே சென்றான்.

"எதுக்குப் பயப்படுற, பயம் இல்லாம ஓட்டு".

அவன் தயங்கியபடியே நின்றுகொண்டிருந்தான். அவர், சைக்கிளை இடது கையால் பிடித்துக் கொண்டார். மேலே ஏறி உட்கார்ந்தான். சைக்கிளைத் தள்ளிவிட்டார். உடம்பை நெளித்து நெளித்து பெடலை மிதித்தான். முன்னே ஓடிப்போய் இடுப்பில் ஒரு அடி கொடுத்தார். அடி என்றால் லேசான அடியில்லை. உயிர் இருக்கும் வரையில் நினைவில் இருக்கும் அடி. அவன் கொஞ்சம் தடுமாறினாலும் சமாளித்துக்கொண்டு சைக்கிளை நேராக ஓட்டிக்கொண்டு சென்றான். மோட்டார் சைக்கிளில் சாய்ந்தபடி அவன் மரங்களுக்கு இடையில் சைக்கிளில் புகுந்து புகுந்து போவதையே பார்த்தபடி இருந்தார்.

உள்ளே சென்ற சுந்தரராசன் புத்தகப் பையை ஆணியில் மாட்டிவிட்டு கொல்லைப்பக்கம் சென்றான். அம்மா அரிசி புடைத்துக் கொண்டு இருந்தாள்.

"அம்மா, அப்பா கூப்பிடுறாங்க. வெளியில் போயிட்டு வர்றேன்" என்றான்.

சாதாரணமாக வாசுதேவன் பையனையோ, மனைவியையோ மோட்டார் சைக்கிளில்கூட்டிக் கொண்டு போற ஆள் இல்லை. பையனுக்கும் அப்பாவுக்கும் ஒரே பள்ளிக்கூடம் என்றாலும், மூன்று கிலோமீட்டர் தினமும் நடந்துதான் போகிறான். அது மட்டுமல்ல, வெளியில் போனாலும் சொல்லிக்கொண்டு போகிற ஆள் கூடயில்லை.

"கல்யாணமாகிவந்த புதிதில் ராணி, "நீங்க வெளியில போறத எங்கிட்ட சொல்லிட்டுப் போனாதானே யாராவது வந்து கேட்டால் சொல்ல முடியும் ?" என்றாள்.

"இன்னமே நான் போற ஒவ்வொரு இடத்தையும் உங்கிட்ட சொலலி பர்மிஷன் வாங்கிக்கிட்டுப் போறேன்.." என்றார்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"இதோ பார், நான் ஆம்பள; இஷ்டத்துக்குப் போவேன். இஷ்டத்துக்கு வருவேன். அங்க போறது இங்க போறது எல்லாத்தையும் உங்கிட்ட சொல்லிக்கிட்டுப் போகணுமென்னு ஆசைப்பட்டுக்கிட்டு பல்ல இளிச்சிக்கிட்டு பின்னால வந்து நிக்காதே" - அதில் இருந்து ராணி அவர் போவதைப் பற்றியோ அவர்

வருவதைப் பற்றியோ ஒன்றும் கேட்பதில்லை. அவரைத் தேடிக்கொண்டு யாராவது வந்தால், “பள்ளிக்கூடம் போயிருக்கிறாங்க” என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வாசுதேவன் வாசலில் நின்ற தன் மோட்டார் சைக்கிளை உதைத்துக் கிளப்பினார். முதல் உதையிலேயே வண்டி கிளம்பிவிட்டது. ஆக்ஸிலேட்டரை ஒருமுறை திருகி உட்கார்ந்தார். இவன் அப்பாவையே பார்த்தபடி இருந்தான். பின்னால் ஏறிக்கொள் என்பது மாதிரி தலையசைத்தார். ஏறி உட்கார்ந்து கொண்டு திரும்பிப் பார்த்தான். அம்மா, வாசல் பூவரசு மரத்தடியில் வந்து நின்றுகொண்டிருந்தாள்.

மோட்டார் சைக்கிள் புறப்பட்டு காவேரி ஆற்றுப் பாலத்தைத் தாண்டி இலுப்பைத் தோப்புக்குள் புகுந்து பெரிய முனி ஒற்றையடி பாதையிலேயே போய் அன்புச்செல்வம் மிதிவண்டி நிலையத்தின் முன்னே நின்றது. கடையில் உட்கார்ந்திருந்த அன்புச் செல்வம் - அவர் மாணவன்தான். இவரைப் பார்த்ததும் நாற்காலியில் இருந்து எழுந்து, “வாங்க சார்.. வாங்க” என்று வரவேற்றான்.

சுந்தரராசன் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி கடையின் முன்னே இருக்கும் விதவிதமான சைக்கிள்களைப் பார்த்தபடி இருந்தான்.

வாசுதேவன் தலையசைத்துக் கொண்டு முன்னே, சென்று நாற்காலியில் உட்கார்ந்து, “வியாபாரம் எப்படி... நீதான் சரியா ஓட மாட்டேன்னுட்ட, சைக்கிள் ஓடுதா ?...” என்று கேட்டார்.

“பரவாயில்ல சார்...”

“ஒரு நல்ல சைக்கிள் கொடு”.

“யாருக்கு சார், தம்பிக்கா...” என்று கேட்டான் சுந்தரராசனைப் பார்த்தபடி.

அவர் தலையசைத்தார்.

“போன வருஷமே வாங்கிக் கொடுத்து இருக்கணும் சார். பாவம் தம்பி.. தினம் ஆறு கிலோமீட்டர் நடக்குது”.

“எங்க பணம் வருது. இன்னிக்கி பிராவிடண்ட் பண்ட்ல லோன் வந்துச்சி... உடனே ஓடியாந்துட்டேன். நல்ல சைக்கிளா பார்த்துக் கொடு..”

“இப்ப எல்லாம் “ஹீரோதான் சார்... பையன்களுக்கு எல்லாம் அதான் பிடிக்கும். டி.வி.யில கூட நிறைய விளம்பரம் வருது சார்”.

“சரி.. அதையே கொடு.. என்ன விலை?

“ஆயிரத்து முன்னூறு ரூபா சார். உங்களுக்காக நூறு ரூபா குறைச்சிக்கிறேன் சார். நீங்க ஆயிரத்து இருநூறு கொடுங்க”..

“அதெல்லாம் வேணாம். நல்ல சாமானப் போட்டு ரெடி பண்ணிக்கொடு.. நூறு ரூபா குறைக்கறேன்னு மட்டமான சைக்கிளை தலையில் கட்டிடப் போற..”



“அப்படி எல்லாம் இல்ல சார்..” என்ற அன்புச்செல்வம் ஒரு ஆளைக் கூப்பிட்டு ஜாடை காட்டினான். அவன் கைகளைத் துடைத்தபடி வெளியில் சென்றான்.

சுந்தரராசன், தயராகும் பச்சை சைக்கிள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். ஒரு ஆள் ஒரு தட்டில் மூன்று காபி கொண்டு வந்தான். ஒரு காபி டம்ளரை எடுத்து அன்புச்செல்வம் அவர் பக்கம் நீட்டினான். காபியை வாங்கி ஒரு மிடறு குடித்தார்.

“சார்! வரும் சுதந்திர தினத்துக்கு இருபது கிலோ மீட்டர் சைக்கிள் போட்டி ஒன்று நடத்தலாமென்று இருக்கிறோம் சார். அதை நீங்கதான் வந்து துவக்கி வைக்கணும். நம்ம மாவட்ட எஸ்.பி. கூட வரேன்னு சொல்லிட்டாங்க..”

“உன் கடைக்கு வந்ததுந்தான், நான் நினைவுக்கு வருதா?”

“அப்படி எல்லாம் இல்ல சார். நானே நேர்ல வந்து கூப்பிடணுமென்னு இருந்தேன். ஆனா கடையை விட்டுட்டு வர முடியல”.

“உனக்கெல்லாம் போட்டி எதுக்கு? நீ கடையையே பார்த்துக்கிட்டு இரு...”

“என்ன சார் இப்படி சொல்லுறீங்க?...”

“ பின்ன! கண்ட இடத்தில கேட்டா அப்படித்தான்” என்றபடி சைக்கிளைப் பார்த்தார். சுந்தரராசன் ஸ்டூலில் உட்கார்ந்து சைக்கிளைப் பார்த்தபடி இருந்தான். பதினைந்து நிமிடத்துக்குப் பிறகு சைக்கிள் தயாரானது. பில்லை அவர் பக்கம் நீட்டினான். பணத்தைக் கொடுத்துவிட்டு, பில்லை மடித்து பையில் வைத்துக்கொண்டு சைக்கிள் சீட்டில் ஒரு தட்டுத் தட்டினார். பெல்லை அடித்தார். அது கணகணவென்று ஒலித்தது. அப்புறம் பெடலை நிமிர்த்தி, சக்கரத்தைச் சுற்றி பிரேக்கைப் பிடித்தார். எல்லாம் சரியாக இருப்பது மாதிரி இருந்தது.

அன்புச்செல்வம் கடையில இருந்து சைக்கிளை வெளியே தள்ளிக்கொண்டு வந்து சுந்தரராசனிடம் கொடுத்தான். அவன் சைக்கிள் ஹாண்டில்பாரைப் பிடித்தபடி அப்பாவைத் தலை நிமிர்ந்து பார்த்தான்.

“உன் சைக்கிள்தான். எடுத்துக்கிட்டு வீட்டுக்குப்போ...”

சுந்தரராசன் சந்தோஷத்தோடு தலையசைத்தான். கொஞ்ச காலம் சைக்கிளைத்தள்ளிக்கொண்டு போய் பூவரச மரத்தடியில் சைக்கிளில் ஏறி உட்கார்ந்து மிதித்தான். மண் சாலை, சக்கரம் மணலில் சிக்கி தடுமாறியது. ஹாண்டில்பாரை அப்படியும் இப்படியும் நெளித்து சரிப்படுத்திக்கொண்டு வேகமாக மிதிக்க ஆரம்பித்தான். சைக்கிள் பறப்பது மாதிரி இருந்தது. அவன் இன்னும் இன்னும் என்று வேகமாக மிதித்தான்.

“தம்பி நல்லாதான் சைக்கிள் ஓட்டுது” என்றான் அன்புச்செல்வம்.

அவர் பதிலொன்றும் சொல்லாமல் மோட்டார் சைக்கிளில் ஏறி உட்கார்ந்தார்.

சுந்தரராசன் வீட்டின் முன்னே சைக்கிளில் இருந்து இறங்கி மணி அடித்தான். உள்ளே இருந்து வந்த அம்மா, “ஏது [illegible]” என்று கேட்டாள்.



அவன், “அப்பா வாங்கிக் கொடுத்தது” என்றான். ஆச்சரியப்பட்டுப் போன அவள் அவசர அவசரமாக உள்ளே போய் திருநீறு, தூடம் எல்லாம் கொண்டுவந்து சைக்கிளுக்குப் பூசை போட்டாள். அவன் நெற்றியிலும் சைக்கிள் ஹாண்டில்பாரிலும் திருநீறு பூசிக் குங்குமப் பொட்டு வைத்தாள்.

“ரொம்ப விலையா இருக்கும். ஜாக்கிரதையா வைச்சிக்க” என்றாள்.

சுந்தரராசன் சைக்கிளை பத்திரமாக வைத்துக்கொண்டான். சாலையில் மேடுபள்ளமென்றால் ஓரமாக சைக்கிளை விட்டான். அடிக்கடி டயரில் காற்று இருக்கிறதா என்று அழுத்திப் பார்த்துக்கொண்டான். காலையில் பள்ளிக்கூடம் புறப்படுவதற்கு முன்னால் தேங்காய் எண்ணை போட்டு வெள்ளைத் துணியால் துடைத்தான். பச்சை வர்ணம் பளபளவென்று மின்னியது. பின் சக்கரத்துப் பூட்டுக் காணாது என்று முன்சக்கரத்திற்கும் ஒரு பூட்டு போட்டுக்கொண்டான். அப்பா அவன் சைக்கிள் துடைப்பதை ஒருநாள் நின்று பார்த்துவிட்டுப் போனார்.

ஞாயிற்றுக்கிழமை. மத்தியானம் சாப்பிட்டுவிட்டு அப்பா மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு போய்விட்டார். நான்கு மணி இருக்கும் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த இவனுக்குத் திடீரென்று ஒரு கணக்கில் சந்தேகம். மன்னூர் நாராயணன்தான் வகுப்பிலேயே கணக்கில் புலி. சொல்லியும் கொடுப்பான். அம்மாவிடம் மன்னூர் நாராயணன் வீட்டுக்குப் போவதாகவும், திரும்பி ஆறு மணிக்கெல்லாம் வந்துவிடுவதாகவும் சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

“சீக்கிரம் ஆறு மணிக்கெல்லாம், அப்பா வர்றதுக்கு முன்னால வந்துடு” என்று அம்மா வாசல் வரையில் வந்து வழியனுப்பி வைத்தாள்.



அம்மா அடிக்கடி கடிகாரத்தையே பார்த்தபடி இருந்தாள். மணி ஏழு அடித்தது. சுந்தரராசன் வரவில்லை. அம்மா, வாசல் பக்கம் வந்து நின்றாள். ஏழரை மணிக்கு மோட்டார் சைக்கிளில் வாசுதேவன் வந்து இறங்கினார். ராணியை வாசலில் பார்த்ததும் கோபம் வந்துவிட்டது.

“எதுக்கு இந்த நேரத்தில வாசல்ல நின்னுக்கிட்டிருக்க...” என்று அதட்டினார்.

“சுந்தர் ஆறு மணிக்கெல்லாம் வரேன்னு போனான். இன்னும் வர்ல...”

“சைக்கிள் இருக்கில்ல. ஊர் சுத்திக்கிட்டு இருப்பார். வரட்டும் நாலு வச்சா சரியா போயிடும்” அப்பா உள்ளே போனார். அம்மாவும் கூடவே சென்றாள்.

வாசுதேவன்பேண்டை அவிழ்த்துப் போட்டுவிட்டு வேட்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு டி.வி.யை போட்டுவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார். அம்மா உள்ளுக்கும் வாசலுக்குமாக நடந்தபடி இருந்தாள். டி.வி.யில் செய்தி வாசிக்க ஆரம்பித்தார்கள்.

“அவன் இன்னும் வர்ல?”

“இல்லீங்க” என்று சொல்லிவிட்டு, அம்மா அவசர அவசரமாக வாசல் பக்கம் வந்தாள். அவன் தலைகுனிந்தபடி வந்து கொண்டிருந்தான். அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். சைக்கிளைக் காணோம்.

“சுந்தர்... சுந்தர்” என்று அம்மா அவன் பின்னாலேயே வந்தாள். அப்பாவைப் பார்த்ததும் பயந்துபோய் அப்படியே நின்று விட்டான்.

“சைக்கிள் எங்க சுந்தர்?” என்று அம்மா அவன் பக்கமாக வந்தாள்.

“மன்னூர் நாராயணன் வீட்டு வாசல்ல பூட்டி வச்சிட்டு படிச்சிகிட்டு இருந்தேம்மா. அரை மணி நேரம் கழித்து பார்த்தா சைக்கிள் காணோம் அம்மா. அதுல இருந்து எல்லா இடத்திலேயும் தேடிபார்த்துட்டோம்” - அவன் கண்களை கசக்கிக் கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.

அப்பா நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்தார்.

“நிஜந்தாப்பா. சைக்கிள பூட்டி வச்சிட்டுத் தான் அப்பா படிச்சிக்கிட்டு இருந்தோம். சாவிகூட இருக்குப்பா..” சாவியை முன்னே நீட்டினான்.

அப்பா எட்டி அவன் கையைப்பிடித்து “சைக்கிள் காணாம போனா என்ன? அதுக்குப் போய் எதுக்கு அழற?”

அவன் இன்னும் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தான்.

அப்பா அவனை இழுத்து அணைத்துக் கொண்டார். அம்மா திகைத்துப் போய் அப்படியே நின்று கொண்டிருந்தாள். ★

மிச்சமிருக்கும் ஓரிரு தளிர்கள்

- இன்குலாப்



எழுத உட்கார்ந்தேன்
வனங்கள் குறித்து.

நினைவுச் சருகுகளில்
பசிய மரங்கள்;

முழங்கும் அருவியைக்
கிளைகளால் மூடும்
நெடிய மரங்கள்...

மழைபெய்த மறுநாள்
சிலிர்த்த புல்வெளிகள்

பசுமைத் தோழமை
பாராட்டி நின்ற
இளமையில் என்னுடன்
பழகிய மரங்கள்...

கிளிகளுக்கும்
எனக்கும்
விழுது ஊஞ்சல்களுடன்
பந்தல் விரித்த
ஆலமரங்கள்...

ஊருக்கு வெளியே
உட்கார்ந்து படிக்கக்
கிளைகளைத் தாழ்த்திய
இளைய வேம்புகள்...

முள்வேலியில் மட்டும்
நிழல்களை முடக்காது
சாலையிலும் பரப்பும்
பூவரச மரங்கள்...

தந்தையின் சமாதித்
தனிமையில் பேசச்
சருகுகள் உதிர்க்கும்
அரச மரங்கள்...

முடிவறியாத மனவெளி நிறைய
கிளைகள் விரித்து
இலைகள் அசைத்து
ஊர்வலம் வந்தன
தோழமை மரங்கள்...

அசோக இலைகளை
அசைத்த காற்று
மேசையில் இருந்த
தாளையும் அசைத்தது.

சுவரில் பூத்திருந்தது
மரச் சிற்பம் ஒன்று -
ஏதோ ஒரு பூவைப்
பூக்கக் கருதிய
ஏதோ ஒருமரத்தின்
ஏதோ ஒருகிளை!

எந்த மரத்தின்
எலும்புக் கூடு
இந்த மேசையும்
நாற்காலியும்?

சூரியக் கோல்கள்
வெயிலைத் தீட்டும்
இலைகள்...
இங்குத்
தாள்களால் அசையுமோ?

காணாமல் போகும் காடுகள்
எனது
கதவாய் மேசையாய்க்
கொஞ்சம் ஒதுங்கும்.

மாளிகையில்
உத்தரங்களாகவும்
விரிந்து நீளும்
விருந்து மேசைகளாகவும்
பெரிய இடங்களில்
இன்னும் பதுங்கும்.

பொய்மை விரிக்கும்
செய்தித் தாள்களால்
ஆபாசம் பிதுக்கும்
சுவரொட்டிகளாக
அரைக்கப்பட்ட காடுகள்
அலையும்
உலகெங்கும்.

சுள்ளி முறிக்கும்
சன்ன ஒலியையும்
எப்போதும் கேட்கும்
அதிகார வர்க்கம்...

கூட்டுப் பறவைகளின்
கூக்குரலோடு
வீழும் கானகத்தின்
மரண ஓலம்
மலைகளில் முட்டும்
வானம் எட்டும்
காதுக்குக் கேட்காது
கடைசிமட்டும்.

பக்கத்து வீட்டுச் சுவரில்
முட்டியதால்
கிளைகளை இழந்த
அசோகமரத்தின்
இளந்தளிர் ஒன்று
என் சன்னலில் உரசும்.

காகங்களோடும்
கிளிகளோடும்
இலைகள் பேசுவதை
என் செவி கேட்கும்:

"இளைய மானுடம்
தொட்டிலில் ஆடியது
நேற்றைய சகாராவின்
நெடுங்கிளை ஒன்றில்தான்.

பசிய காடுகள்
இயற்கையின் படைப்பு...
பாலைவனங்கள்
மனிதரின் படைப்பு...

புதைந்து போன
நதிகளுக்குப் பிறகும்...
கருகிப் போன
சோலைகளுக்குப் பின்பும்
மிச்சமிருக்கும்
ஓரிரு தளிர்களைக்
கோடரி வெறியிலிருந்து
காப்பாற்றுங்கள்.

"முதலா முடிவா!
எதுவாய் இருந்தாலும்
நட்பா பகையா
யாராய் இருந்தாலும்
உயிர்த்திருப்பது
உறுதிப்படுவது
காற்றினால்..."
என்று
கடைசியாய்க் கேட்டது! ★

ஊரக வளர்ச்சிப் பணிகளின் செயலாக்கத்தில், இந்தியாவிலேயே தமிழகத்திற்கு முதலிடம்!

மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களான ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம் ஆகிய திட்டங்களை 1997-98ல் சிறப்பான வகையில் தமிழகத்தில் செயல்படுத்தியதன் மூலம் இந்த திட்டங்களுக்கான மத்திய அரசின் இரண்டாவது தவணை நிதி விடுவிப்பை நவம்பர் மற்றும் டிசம்பர் 1997லேயே பெற முடிந்தது. கடந்த காலத்தில் தமிழ்நாட்டிலும் மற்றும் அநேகமாக ஏனைய மாநிலங்களிலும் மத்திய அரசிடமிருந்து இரண்டாவது தவணை நிதி விடுவிப்பு அந்த நிதியாண்டின் கடைசி காலாண்டிலேயே அதாவது ஜனவரி-மார்ச்சில் பெறப்பட்டது. ஆனால் நடப்பு நிதி ஆண்டில் (1997-98ல்) கலைஞர் தலைமையிலான அரசின் திட்டமிட்ட செயல்பாட்டின் காரணமாகத் தமிழக அரசு மத்திய அரசிடமிருந்து தமிழகத்தின் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த திட்டங்களுக்காக இரண்டாவது தவணைத் தொகையை பெற்றுத்தந்து அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று சாதனையை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும், மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்று செயல்படுத்தப்படுகிறது. 1997-98 ஆண்டுக்கு ரூ.175.47 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.150.13 கோடியும் மாநில அரசின் ரூ.25.99 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.176.12 கோடி நிதி இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. இதில் 22.5 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 76.61% செலவிடப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதியிருப்பில் 69.91% செலவிடப்பட்டுள்ளது. மனித சக்தி நாட்கள் குறியீடான 329.38 இலட்சத்தில் 31.12.97 முடிய இதுவரை 249.04 இலட்சம் எட்டப்பட்டுள்ளது.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும் மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது. 1997-98 ஆண்டுக்கு ரூ.101.37 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.94.71 கோடியும் மாநில அரசின் ரூ.42.80 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.137.51 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 98.35 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதியிருப்பில் 67.53 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்காக 46,046 வீடுகளும் மற்றவர்களுக்காக 8,719 வீடுகளும் ஆக மொத்தம் 54.765 வீடுகள் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

மில்லியன் கிணறுகள் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும் மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்று செயல்படுத்தப்படுகிறது. 1997 - 98 ஆண்டுக்கு ரூ.39.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.31.40 கோடியும், மாநில அரசின் ரூ.5.88 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.37.28 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 56.49 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதியிருப்பில் 56.16

எதிர்முனை

- சா. கந்தசாமி

கணியூர் உயர்நிலைப் பள்ளியின் உடற்பயிற்சி ஆசிரியர் வாசுதேவன். சுமார் நாற்பத்தைந்து வயது. ஆனால் தலையின் முன் மயிரெல்லாம் கொட்டி வழுக்கை விழுந்துவிட்டது. பின் மயிரை இழுத்துச் சீவி வழுக்கையை மறைத்துக்கொண்டு இருந்தார். திருகிவிட்ட மீசை. அப்புறம் சிகப்பேறிய கண்கள். எப்பொழுதும் கோபத்தில் இருப்பது மாதிரியே சிடுசிடுவென்று இருப்பார். பேச்சிலும் அந்த சிடுசிடுப்புத் தெரியும். இருந்தாலும் திறமையான ஆசிரியர். மாணவர்களுக்கு அவரைப் பிடித்தது. அவர் வந்த பிறகுதான் கணியூர் உயர்நிலைப் பள்ளி வாலிபால், உயரத்தாண்டுதல், இருநூறு மீட்டர் ஓட்டம் ஆகியவற்றில் மாவட்டத்திலேயே முதலாவதாக வந்து மூன்று தங்கப்பதக்கத்தைப் பெற்றது.

பரிசு கொடுக்க வந்த மாவட்ட ஆட்சியாளர் மூன்று தங்கப் பதக்கங்களைக் கொத்தாக வென்ற கணியூர் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பொன்.தனசேகரனை மேடைக்கு அழைத்து வெகுவாகப் பாராட்டினார். அவர் பேசினபோதே இக்காலத்தில் படிப்பு என்பது வெறும் புத்தகப் படிப்பு மட்டுமல்ல, விளையாட்டும் ஒரு பகுதிதான். அதனை நன்கு புரிந்துகொண்டு கணியூர் பள்ளி செயல்படுவது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடியது. இன்று மாவட்ட அளவில் முதன்மை பெற்றுள்ள பள்ளி நாளை மாநில அளவிலும் அடுத்த நாள் இந்திய அளவிலும், பின்னர் ஒலிம்பிக் அளவிலும் போட்டியிட்டுத் தங்கப் பதக்கம் பெறவேண்டும் என்று வாழ்த்தினார்.

மாவட்ட ஆட்சியாளர் பேச்சு, தலைமை ஆசிரியருக்கு அவ்வளவாக மகிழ்ச்சியளிக்கவில்லை. விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் பெற்றதில் அவர் பங்கு ஒன்றுமில்லை. இன்னும் சொல்லப்போனால் விளையாட்டுக்கு அவர் நேர் எதிர். படிப்பு என்றால் புத்தகங்களைப் படித்து நிறைய மதிப்பெண் பெறவேண்டும் என்ற கொள்கை கொண்டவர். விளையாட்டிற்கான நேரத்தை எல்லாம் சிறப்பு வகுப்புக்கென்று நிறையப் பிடுங்கிக் கொண்டிருந்தார். அதற்காகத் தலைமையாசிரியர் அறைக்குள் வந்த வாசுதேவன் கத்தினார். கத்தினார் என்றால் நிஜமாகவே கத்தினார். அவர் போட்ட கூச்சல் பள்ளிக்கூடம் முழுவதும் கேட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும் வகுப்பைவிட்டு வெளியில் வந்து நின்று வேடிக்கைப் பார்த்தார்கள். தலைமையாசிரியர் அறையில் இப்படியொரு காட்சியைப் பார்ப்பது இதுதான் முதன் முறை. எனவே என்ன செய்வது என்று தெரியாமல் ஒவ்வொருவரும் திகைத்துப் போய் நின்றுகொண்டிருந்தார்கள். கோபத்திலும் வருத்தத்திலும் தலைமை ஆசிரியருக்குப் பேச்சே வரவில்லை.

தமிழ் ஆசிரியர் பாரிவள்ளல் அவசர அவசரமாகத் தலைமையாசிரியர் அறைக்குள் நுழைந்தார். அவரைப் பார்த்ததும் ஓரடி முன்னே எடுத்து வைத்து, “பாருங்க சார், இவர் தலைமையாசிரியர்ன்னா மாணவர்களின் விளையாட்டு நேரத்தைத் திருட ஒன்னும் உரிமை இல்ல சார்” என்று கத்தினார்.

“என்ன சார் இப்படியெல்லாம் பேசுறீங்க..” என்று பாரிவள்ளல் அவர் கையைப் பிடித்தார்.

“ரொம்ப நாளா இப்படித்தான் சார் இவர் திருடிக்கிட்டே இருக்கார். இதை நான் விடப்போறது இல்ல. முதலமைச்சர் வரைக்கும் கொண்டுக்கிட்டுப் போய் ரெண்டுல ஒண்ணு பார்த்துடப்போறேன்”.

“எல்லாம் பார்க்கலாம். நீங்க வாங்க சார்” என்று பாரிவள்ளல் அவர் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியில் வந்தார்.

“எதுக்கு சார், வீணா சண்டை” என்றார் கணக்கு ஆசிரியர் சிவானந்தம்.

“நீங்க வாய மூடிக்கிட்டு சும்மா இருங்க. என் நேரத்தைத் திருடினா என்னால சும்மா இருக்க முடியாது” என்று பெரிதாகக் கத்தினார். விளையாட்டுக்கான நேரத்தில் பெரும்பாலும் கணக்குதான் நடந்தது. அதனால் கணக்கு ஆசிரியர் மேல் அவருக்குக் கோபம். கோபத்தோடு திருட்டு என்ற வார்த்தையை சார் பயன்படுத்தியது தலைமையாசிரியரை மட்டுமல்ல. தமிழ் ஆசிரியர் பாரிவள்ளலைக் கூட அதிர்ச்சியடைய வைத்தது. ஆனால் அவரை என்ன செய்வது என்று ஒருவருக்கும் தெரியவில்லை. யாருக்கும் அவர் கட்டுப்படுவதில்லை. எந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போட்டாலும் சண்டை; இரண்டு வருஷம் கூட சேர்ந்தாற் போல அவர் ஒரு பள்ளியிலும் இருந்ததில்லை.

மாவட்டக் கல்வி அதிகாரி வாசுதேவனை தன் அலுவலகத்துக்கு வரவழைத்து, ‘மூன்று வருடத்திற்குக் கணியூர் பள்ளியில் சண்டை போட்டுக் கொள்ளாது இருக்கவேண்டும்; தலைமையாசிரியர் ரொம்ப நல்ல மனிதர்’ என்று சொன்னார்.

“நான் என்ன சண்டைக்காரனா? எல்லா வகுப்பு மாதிரியும் விளையாட்டும் ஒரு வகுப்புதான். அதைப் புடுங்கினா எப்படி சார் விடுறது? என் வகுப்பைப் புடுங்கினா நான் சும்மா இருக்கமாட்டேன் சார்”.

அவர் பதிலொன்றும் சொல்லவில்லை. ஆனால் உலகம் தெரியாத ஆளாகவும், வாழத்

தெரியாத மனிதராகவும் இருக்கிறாரே என்று நினைத்துக் கொண்டார். பள்ளிக்கூடத்தில் படிப்பு என்றால் மார்க்குதான். மார்க்கு இல்லாத பாடமெல்லாம் மதிப்பு இல்லாததுதான். மதிப்பு இல்லாத வேலையில் இருந்துகொண்டு மதிப்பு வேண்டுமென்றால் முடியுமா?

வாசுதேவனுக்கு இதையெல்லாம் புரியவைக்க முடியல. அவருக்குப் படவில்லை. அதோடு அவருக்கு வேறு வேலைகளும் இருந்தன. எனவே சிரித்தபடி வெளியில் அனுப்பிவைத்தார். பள்ளிக்கூடத்தில் மட்டுந்தான்அவர் அப்படி என்பது இல்லை. வீட்டில் அதற்கு மேல். தம்பிக்கும் அவருக்கும் பெரிய சண்டை. பேச்சு வார்த்தை இல்லை. அப்பா செத்துப் போன பிறகு சொத்தைப் பிரிப்பதில் சண்டை வந்தது. சொத்துப் பிரிவினை நடந்து கொண்டிருந்தபோது, ரொக்கப் பணத்திற்குச் சரியாகக் கணக்குக் காட்டவில்லை என்று கத்தினார். தம்பி இதுதான் என்று கறாராகச் சொன்னான். அப்படி என்றால் எல்லா சொத்தையும் நீயே வைத்துக்கொள் என்று எழுந்து வந்துவிட்டார்.

நான்கு மாதங்கள் கழித்து தம்பி ஆள்விட்டு அனுப்பினான். அவர் போகவில்லை. பெரிய மாமா நேரில் வந்தார். நண்டு, கறும்பு மீன் விருந்து சாப்பிட்டுவிட்டுக் கையைத் துடைத்துக்கொண்டு பெரிய மாமா, "தம்பி என்னமோ டில்லியில வீடு வாங்கப் போறானாம். அதுக்குப் பணம் குறையுதாம். பங்கப் பிரிச்சிக்கிட்டீங்களா, அவனுக்கு வசதியா இருக்கும்" என்றார்.

"பெரிய மாமா, நீங்களா இருக்கறதால நான் கொஞ்சம் தனிஞ்சு பேசுறேன். எப்ப என்ன ஏமாத்தப் பார்த்தானோ, அப்ப அவன் எனக்குத் தம்பி இல்ல; நான் அவனுக்கு அண்ணன் இல்ல. எல்லாத்தையும் அவனே எடுத்துக்கிட்டு டில்லியில வீடு வாங்கிக்கிட்டு ராஜா மாதிரி இருக்கட்டும்".

"இது எல்லாம் சரியா?"

"ஏன் சரி இல்ல, என்ன ஏமாத்தப் பார்த்தவன், எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு போய் நல்லா இருக்கட்டும்".

"இப்படி வயித்து எரிச்சலோட பேசக் கூடாது".

"எவனுக்கு வயித்து எரிச்ச?" என்று பெரிய மாமா கன்னத்தில் பளார் என்று அறைந்தார். மாமா கன்னத்தைத் தடவி விட்டுக்கொண்டு திரும்பிப்பார்த்தார். சப்தம் கேட்டு அவர் மனைவி ராணி உள்ளே இருந்து ஓடி வந்தாள்.

"உனக்கு ரெண்டு காசு கிடைச்சி, நீ நல்லா இருக்கணுமேன்னு ஓடியாந்தேன் பாரு, அதுக்குக் கைநீட்டி என்ன அடிக்கற இல்ல; அந்தக் கை விளங்காமப் போயிரும்" என்றபடி வீட்டு வாசல்படி இறங்கினார்.

"என்ன சொன்னே?" முன்னே பாய்ந்தார்.

ராணி அவர் கையைப் பிடித்துப் பின்னால் இழுத்தாள். அவளை உதறிவிட்டு விட்டு சோபாவில் உட்கார்ந்து கால்மேல் கால் போட்டுக்கொண்டு, வெளியில் போகும் பெரிய மாமாவையே பார்த்தபடி இருந்தார்.

"எல்லாரும் ஒன்னா கூட்டுச் சேர்ந்துக்கிட்டு என்ன ஏமாத்தப் பார்க்கிறானுவோ… பணம் என்னடா பணம்… பெரிய இது… நீங்களே எடுத்துக்கிட்டுப் பெரிசா இருங்கடா" என்று கத்தினார்.

ராணிஅவரையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். அவர் தலை நிமிர்ந்து பார்த்தார்.

"அது உங்க பணம்தான். எதுக்கு நீங்க வேணாமின்னு சொல்லுறீங்க?"

அவர் தலையைசைத்தார்.

"அந்தப் பணம் வந்தா கஷ்டமெல்லாம் விடியும் இல்ல, சின்னதா ஒரு வீடு கட்டலாம்; பையனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுக்கலாம்".

"அடி செருப்பால" வாசுதேவன் சோபாவில் இருந்து துள்ளியெழுந்தார். "அந்தப் பணத்துக்கு பெரிய திட்டம் எல்லாம் போட்டு வச்சி இருக்கிறியா? எப்ப என்ன ஏமாத்தப் பார்த்தானோ, அப்பவே அவன் என் தம்பி இல்ல. அப்பா பணத்தில வாழற அற்பன் இல்ல நான். எனக்கு ரெண்டு கை, காலு இருக்கு… ஜம்முன்னு உழைச்சி சம்பாரிச்சி மாளிகை கட்டுவேன்… பையனுக்கு சைக்கிள் என்ன மோட்டார் சைக்கிளே வாங்கிக் கொடுப்பேன்.. அந்த பணத்தப் பத்தி பேசின உன்ன ரெண்டா வெட்டிப் போட்டுடுவேன்.."

ராணி தலைநிமிர்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே சென்றாள்.

ஒருநாள் மாலைப்பொழுது வாசுதேவன் நாற்காலியில் உட்கார்ந்து கால்களை ஆட்டிக்கொண்டிருந்தார். சாதாரணமாக அவர் மாலைப்பொழுதில் வீட்டிற்கு வந்து உட்கார்கிற ஆள் இல்லை. பள்ளிக்கூடம் விட்டால் விளையாட்டு மைதானம். அப்புறம் சிநேகிதர்கள். எட்டரை ஒன்பது மணிக்குதான் மோட்டார் சைக்கிளை வாசலில் கொண்டு வந்து நிறுத்துவார். எதற்கு இந்த நேரத்தில் வந்திருக்கிறார் என்பதைத் தீர்மானிக்க முடியாதவளாக ராணி தேனீரை முன்னே நீட்டினாள். மேசை மீது வைக்கும்படி தலையை ஆட்டினார். மேசை மீது கப்பை வைத்துவிட்டு உள்ளே சென்றாள். அவர் வாசலைப் பார்த்தபடி தேனீரை எடுத்துக் குடிக்க ஆரம்பித்தார்.

அவர் பையன் சுந்தரராசன், ஒன்பதாவது படிக்கிறவன் வீட்டுக்குள் நுழைந்தான். அப்பாவைப் பார்த்ததும் கொஞ்சம் பயந்து போனான். நின்று லேசாகத் தலையை நிமிர்த்தி அப்பாவை ஒரு பார்வை பார்த்தான்.

"இப்பத்தான் பள்ளிக்கூடம் விட்டு வர்றியா?"

"கணக்கு சார் கிளாஸ் எடுத்தார் அப்பா."

"பைய வச்சிட்டு சீக்கிரம் வா."

அவன் அவசர அவசரமாக உள்ளே சென்றான். போன வாரம் அவன் இலுப்பைத் தோப்பில் சைக்கிள் சுற்றுக் கொண்டிருந்தபோது அந்தப் பக்கமாக வந்தவர் மோட்டார் சைக்கிளை அரச மரத்தடியில் நிறுத்திக் கொண்டு ஒரு பார்வை பார்த்தார். அப்பாவைப் பார்த்ததும் பயத்தில் இடுப்பை நெளித்து நெளித்துக்கொண்டு சைக்கிள் ஓட்டிக்கொண்டு போனான். அவர் அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார். இரண்டாவது சுற்றுச் சுற்றிக்கொண்டு அரச மரம் பக்கமாக வந்தவன் அப்பாவைப் பார்த்துவிட்டு அவசர அவசரமாகக் கீழே இறங்கினான்.

"இங்கே வா" என்று கையைக் காட்டி கூப்பிட்டார். பயத்தோடு முன்னே சென்றான்.

"எதுக்குப் பயப்படுற, பயம் இல்லாம ஓட்டு".

அவன் தயங்கியபடியே நின்றுகொண்டிருந்தான். அவர், சைக்கிளை இடது கையால் பிடித்துக் கொண்டார். மேலே ஏறி உட்கார்ந்தான். சைக்கிளைத் தள்ளிவிட்டார். உடம்பை நெளித்து நெளித்து பெடலை மிதித்தான். முன்னே ஓடிப்போய் இடுப்பில் ஒரு அடி கொடுத்தார். அடி என்றால் லேசான அடியில்லை. உயிர் இருக்கும் வரையில் நினைவில் இருக்கும் அடி. அவன் கொஞ்சம் தடுமாறினாலும் சமாளித்துக்கொண்டு சைக்கிளை நேராக ஓட்டிக்கொண்டு சென்றான். மோட்டார் சைக்கிளில் சாய்ந்தபடி அவன் மரங்களுக்கு இடையில் சைக்கிளில் புகுந்து புகுந்து போவதையே பார்த்தபடி இருந்தார்.

உள்ளே சென்ற சுந்தரராசன் புத்தகப் பையை ஆணியில் மாட்டிவிட்டு கொல்லைப்பக்கம் சென்றான். அம்மா அரிசி புடைத்துக் கொண்டு இருந்தாள்.

"அம்மா, அப்பா கூப்பிடுறாங்க. வெளியில் போயிட்டு வர்றேன்" என்றான்.

சாதாரணமாக வாசுதேவன் பையனையோ, மனைவியையோ மோட்டார் சைக்கிளில்கூட்டிக் கொண்டு போற ஆள் இல்லை. பையனுக்கும் அப்பாவுக்கும் ஒரே பள்ளிக்கூடம் என்றாலும், மூன்று கிலோமீட்டர் தினமும் நடந்துதான் போகிறான். அது மட்டுமல்ல, வெளியில் போனாலும் சொல்லிக்கொண்டு போகிற ஆள் கூடயில்லை.

"கல்யாணமாகிவந்த புதிதில் ராணி, "நீங்க வெளியில போறத எங்கிட்ட சொல்லிட்டுப் போனாதானே யாராவது வந்து கேட்டால் சொல்ல முடியும்?" என்றாள்.

"இன்னமே நான் போற ஒவ்வொரு இடத்தையும் உங்கிட்ட சொலலி பர்மிஷன் வாங்கிக்கிட்டுப் போறேன்.." என்றார்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"இதோ பார், நான் ஆம்பள; இஷ்டத்துக்குப் போவேன். இஷ்டத்துக்கு வருவேன். அங்க போறது இங்க போறது எல்லாத்தையும் உங்கிட்ட சொல்லிக்கிட்டுப் போகணுமென்னு ஆசைப்பட்டுக்கிட்டு பல்ல இளிச்சிக்கிட்டு பின்னால வந்து நிக்காதே" - அதில் இருந்து ராணி அவர் போவதைப் பற்றியோ அவர்

வருவதைப் பற்றியோ ஒன்றும் கேட்பதில்லை. அவரைத் தேடிக்கொண்டு யாராவது வந்தால், "பள்ளிக்கூடம் போயிருக்கிறாங்க" என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வாசுதேவன் வாசலில் நின்ற தன் மோட்டார் சைக்கிளை உதைத்துக் கிளப்பினார். முதல் உதையிலேயே வண்டி கிளம்பிவிட்டது. ஆக்ஸிலேட்டரை ஒருமுறை திருகி உட்கார்ந்தார். இவன் அப்பாவையே பார்த்தபடி இருந்தான். பின்னால் ஏறிக்கொள் என்பது மாதிரி தலையசைத்தார். ஏறி உட்கார்ந்து கொண்டு திரும்பிப் பார்த்தான். அம்மா, வாசல் பூவரசு மரத்தடியில் வந்து நின்றுகொண்டிருந்தாள்.

மோட்டார் சைக்கிள் புறப்பட்டு காவேரி ஆற்றுப் பாலத்தைத் தாண்டி இலுப்பைத் தோப்புக்குள் புகுந்து பெரிய முனி ஒற்றையடி பாதையிலேயே போய் அன்புச்செல்வம் மிதிவண்டி நிலையத்தின் முன்னே நின்றது. கடையில் உட்கார்ந்திருந்த அன்புச் செல்வம் - அவர் மாணவன்தான். இவரைப் பார்த்ததும் நாற்காலியில் இருந்து எழுந்து, "வாங்க சார்.. வாங்க" என்று வரவேற்றான்.

சுந்தரராசன் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி கடையின் முன்னே இருக்கும் விதவிதமான சைக்கிள்களைப் பார்த்தபடி இருந்தான்.

வாசுதேவன் தலையசைத்துக் கொண்டு முன்னே, சென்று நாற்காலியில் உட்கார்ந்து, "வியாபாரம் எப்படி... நீதான் சரியா ஓட மாட்டேன்னுட்ட, சைக்கிள் ஓடுதா ?..." என்று கேட்டார்.

"பரவாயில்ல சார்..."

"ஒரு நல்ல சைக்கிள் கொடு".

"யாருக்கு சார், தம்பிக்கா..." என்று கேட்டான் சுந்தரராசனைப் பார்த்தபடி.

அவர் தலையசைத்தார்.

"போன வருஷமே வாங்கிக் கொடுத்து இருக்கனும் சார். பாவம் தம்பி.. தினம் ஆறு கிலோமீட்டர் நடக்குது".

"எங்க பணம் வருது. இன்னிக்கி பிராவிடண்ட் பண்ட்ல லோன் வந்துச்சி... உடனே ஓடியாந்துட்டேன். நல்ல சைக்கிளா பார்த்துக் கொடு.."

"இப்ப எல்லாம் "ஹீரோ தான் சார்... பையன்களுக்கு எல்லாம் அதான் பிடிக்கும். டி.வி.யில கூட நிறைய விளம்பரம் வருது சார்".

"சரி.. அதையே கொடு.. என்ன விலை?

"ஆயிரத்து முன்னூறு ருபா சார். உங்களுக்காக நூறு ருபா குறைச்சிக்கிறேன் சார். நீங்க ஆயிரத்து இருநூறு கொடுங்க"..

"அதெல்லாம் வேணாம். நல்ல சாமானப் போட்டு ரெடி பண்ணிக்கொடு.. நூறு ருபா குறைக்கறேன்னு மட்டமான சைக்கிளை தலையில் கட்டிடப் போற.."



"அப்படி எல்லாம் இல்ல சார்.." என்ற அன்புச்செல்வம் ஒரு ஆளைக் கூப்பிட்டு ஜாடை காட்டினான். அவன் கைகளைத் துடைத்தபடி வெளியில் சென்றான்.

சுந்தரராசன், தயராகும் பச்சை சைக்கிள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். ஒரு ஆள் ஒரு தட்டில் மூன்று காபி கொண்டு வந்தான். ஒரு காபி டம்ளரை எடுத்து அன்புச்செல்வம் அவர் பக்கம் நீட்டினான். காபியை வாங்கி ஒரு மிடறு குடித்தார்.

"சார்! வரும் சுதந்திர தினத்துக்கு இருபது கிலோ மீட்டர் சைக்கிள் போட்டி ஒன்று நடத்தலாமென்று இருக்கிறோம் சார். அதை நீங்கதான் வந்து துவக்கி வைக்கனும். நம்ம மாவட்ட எஸ்.பி. கூட வரேன்னு சொல்லிட்டாங்க.."

"உன் கடைக்கு வந்ததுந்தான், நான் நினைவுக்கு வருதா?"

"அப்படி எல்லாம் இல்ல சார். நானே நேர்ல வந்து கூப்பிடனுமென்னு இருந்தேன். ஆனா கடையை விட்டுட்டு வர முடியல".

"உனக்கெல்லாம் போட்டி எதுக்கு? நீ கடையையே பார்த்துக்கிட்டு இரு..."

"என்ன சார் இப்படி சொல்லுறீங்க?..."

" பின்ன! கண்ட இடத்தில கேட்டா அப்படித்தான்" என்றபடி சைக்கிளைப் பார்த்தார். சுந்தரராசன் ஸ்டூலில் உட்கார்ந்து சைக்கிளைப் பார்த்தபடி இருந்தான். பதினைந்து நிமிடத்துக்குப் பிறகு சைக்கிள் தயாரானது. பில்லை அவர் பக்கம் நீட்டினான். பணத்தைக் கொடுத்துவிட்டு, பில்லை மடித்து பையில் வைத்துக்கொண்டு சைக்கிள் சீட்டில் ஒரு தட்டுத் தட்டினார். பெல்லை அடித்தார். அது கணகணவென்று ஒலித்தது. அப்புறம் பெடலை நிமிர்த்தி, சக்கரத்தைச் சுற்றி பிரேக்கைப் பிடித்தார். எல்லாம் சரியாக இருப்பது மாதிரி இருந்தது.

அன்புச்செல்வம் கடையில இருந்து சைக்கிளை வெளியே தள்ளிக்கொண்டு வந்து சுந்தரராசனிடம் கொடுத்தான். அவன் சைக்கிள் ஹாண்டில்பாரைப் பிடித்தபடி அப்பாவைத் தலை நிமிர்ந்து பார்த்தான்.

"உன் சைக்கிள்தான். எடுத்துக்கிட்டு வீட்டுக்குப்போ..."

சுந்தரராசன் சந்தோஷத்தோடு தலையசைத்தான். கொஞ்ச காலம் சைக்கிளைத்தள்ளிக்கொண்டு போய் பூவரச மரத்தடியில் சைக்கிளில் ஏறி உட்கார்ந்து மிதித்தான். மண் சாலை, சக்கரம் மணலில் சிக்கி தடுமாறியது. ஹாண்டில்பாரை அப்படியும் இப்படியும் நெளித்து சரிப்படுத்திக்கொண்டு வேகமாக மிதிக்க ஆரம்பித்தான். சைக்கிள் பறப்பது மாதிரி இருந்தது. அவன் இன்னும் இன்னும் என்று வேகமாக மிதித்தான்.

"தம்பி நல்லாதான் சைக்கிள் ஓட்டுது" என்றான் அன்புச்செல்வம்.

அவர் பதிலொன்றும் சொல்லாமல் மோட்டார் சைக்கிளில் ஏறி உட்கார்ந்தார்.

சுந்தரராசன் வீட்டின் முன்னே சைக்கிளில் இருந்து இறங்கி மணி அடித்தான். உள்ளே இருந்து வந்த அம்மா, "ஏது [illegible]" என்று கேட்டாள்.

அவன், "அப்பா வாங்கிக் கொடுத்தது" என்றான். ஆச்சரியப்பட்டுப் போன அவள் அவசர அவசரமாக உள்ளே போய் திருநீறு, தூடம் எல்லாம் கொண்டுவந்து சைக்கிளுக்குப் பூசை போட்டாள். அவன் நெற்றியிலும் சைக்கிள் ஹாண்டில்பாரிலும் திருநீறு பூசிக் குங்குமப் பொட்டு வைத்தாள்.

"ரொம்ப விலையா இருக்கும். ஜாக்கிரதையா வைச்சிக்க" என்றாள்.

சுந்தரராசன் சைக்கிளை பத்திரமாக வைத்துக்கொண்டான். சாலையில் மேடுபள்ளமென்றால் ஓரமாக சைக்கிளை விட்டான். அடிக்கடி டயரில் காற்று இருக்கிறதா என்று அழுத்திப் பார்த்துக்கொண்டான். காலையில் பள்ளிக்கூடம் புறப்படுவதற்கு முன்னால் தேங்காய் எண்ணை போட்டு வெள்ளைத் துணியால் துடைத்தான். பச்சை வர்ணம் பளபளவென்று மின்னியது. பின் சக்கரத்துப் பூட்டுக் காணாது என்று முன்சக்கரத்திற்கும் ஒரு பூட்டு போட்டுக்கொண்டான். அப்பா அவன் சைக்கிள் துடைப்பதை ஒருநாள் நின்று பார்த்துவிட்டுப் போனார்.

ஞாயிற்றுக்கிழமை. மத்தியானம் சாப்பிட்டுவிட்டு அப்பா மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு போய்விட்டார். நான்கு மணி இருக்கும் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த இவனுக்குத் திடீரென்று ஒரு கணக்கில் சந்தேகம். மன்னூர் நாராயணந்தான் வகுப்பிலேயே கணக்கில் புலி. சொல்லியும் கொடுப்பான். அம்மாவிடம் மன்னூர் நாராயணன் வீட்டுக்குப் போவதாகவும், திரும்பி ஆறு மணிக்கெல்லாம் வந்துவிடுவதாகவும் சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

"சீக்கிரம் ஆறு மணிக்கெல்லாம், அப்பா வர்றதுக்கு முன்னால வந்துடு" என்று அம்மா வாசல் வரையில் வந்து வழியனுப்பி வைத்தாள்.

அம்மா அடிக்கடி கடிகாரத்தையே பார்த்தபடி இருந்தாள். மணி ஏழு அடித்தது. சுந்தரராசன் வரவில்லை. அம்மா, வாசல் பக்கம் வந்து நின்றாள். ஏழரை மணிக்கு மோட்டார் சைக்கிளில் வாசுதேவன் வந்து இறங்கினார். ராணியை வாசலில் பார்த்ததும் கோபம் வந்துவிட்டது.

"எதுக்கு இந்த நேரத்தில வாசல்ல நின்னுக்கிட்டிருக்க..." என்று அதட்டினார்.

"சுந்தர் ஆறு மணிக்கெல்லாம் வரேன்னு போனான். இன்னும் வர்ல..."

"சைக்கிள் இருக்கில்ல. ஊர் சுத்திக்கிட்டு இருப்பார். வரட்டும் நாலு வச்சா சரியா போயிடும்" அப்பா உள்ளே போனார். அம்மாவும் கூடவே சென்றாள்.

வாசுதேவன்பேண்டை அவிழ்த்துப் போட்டுவிட்டு வேட்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு டி.வி.யை போட்டுவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார். அம்மா உள்ளுக்கும் வாசலுக்குமாக நடந்தபடி இருந்தாள். டி.வி.யில் செய்தி வாசிக்க ஆரம்பித்தார்கள்.

"அவன் இன்னும் வர்ல?"

"இல்லீங்க" என்று சொல்லிவிட்டு, அம்மா அவசர அவசரமாக வாசல் பக்கம் வந்தாள். அவன் தலைகுனிந்தபடி வந்து கொண்டிருந்தான். அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். சைக்கிளைக் காணோம்.

"சுந்தர்... சுந்தர்" என்று அம்மா அவன் பின்னாலேயே வந்தாள். அப்பாவைப் பார்த்ததும் பயந்துபோய் அப்படியே நின்று விட்டான்.

"சைக்கிள் எங்க சுந்தர்?" என்று அம்மா அவன் பக்கமாக வந்தாள்.

"மன்னூர் நாராயணன் வீட்டு வாசல்ல பூட்டி வச்சிட்டு படிச்சிகிட்டு இருந்தேம்மா. அரை மணி நேரம் கழித்து பார்த்தா சைக்கிள் காணோம் அம்மா. அதுல இருந்து எல்லா இடத்திலேயும் தேடிபார்த்துட்டோம்" - அவன் கண்களை கசக்கிக் கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.

அப்பா நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்தார்.

"நிஜந்தாப்பா. சைக்கிள பூட்டி வச்சிட்டுத் தான் அப்பா படிச்சிக்கிட்டு இருந்தோம். சாவிகூட இருக்குப்பா.." சாவியை முன்னே நீட்டினான்.

அப்பா எட்டி அவன் கையைப்பிடித்து "சைக்கிள் காணாம போனா என்ன? அதுக்குப் போய் எதுக்கு அழற?"

அவன் இன்னும் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தான்.

அப்பா அவனை இழுத்து அணைத்துக் கொண்டார். அம்மா திகைத்துப் போய் அப்படியே நின்று கொண்டிருந்தாள். ★

மிச்சமிருக்கும் ஓரிரு தளிர்கள்

- இன்குலாப்



எழுத உட்கார்ந்தேன்
வனங்கள் குறித்து.

நினைவுச் சருகுகளில்
பசிய மரங்கள்,

முழங்கும் அருவியைக்
கிளைகளால் மூடும்
நெடிய மரங்கள்...

மழைபெய்த மறுநாள்
சிலிர்த்த புல்வெளிகள்

பசுமைத் தோழமை
பாராட்டி நின்ற
இளமையில் என்னுடன்
பழகிய மரங்கள்...

கிளிகளுக்கும்
எனக்கும்
விழுது ஊஞ்சல்களுடன்
பந்தல் விரித்த
ஆலமரங்கள்...

ஊருக்கு வெளியே
உட்கார்ந்து படிக்கக்
கிளைகளைத் தாழ்த்திய
இளைய வேம்புகள்...

முள்வேலியில் மட்டும்
நிழல்களை முடக்காது
சாலையிலும் பரப்பும்
பூவரச மரங்கள்...

தந்தையின் சமாதித்
தனிமையில் பேசச்
சருகுகள் உதிர்க்கும்
அரச மரங்கள்...

முடிவறியாத மனவெளி நிறைய
கிளைகள் விரித்து
இலைகள் அசைத்து
ஊர்வலம் வந்தன
தோழமை மரங்கள்...

அசோக இலைகளை
அசைத்த காற்று
மேசையில் இருந்த
தாளையும் அசைத்தது.

சுவரில் பூத்திருந்தது
மரச் சிற்பம் ஒன்று -
ஏதோ ஒரு பூவைப்
பூக்கக் கருதிய
ஏதோ ஒருமரத்தின்
ஏதோ ஒருகிளை!

எந்த மரத்தின்
எலும்புக் கூடு
இந்த மேசையும்
நாற்காலியும்?

சூரியக் கோல்கள்
வெயிலைத் தீட்டும்
இலைகள்...
இங்குத்
தாள்களால் அசையுமோ?

காணாமல் போகும் காடுகள்
எனது
கதவாய் மேசையாய்க்
கொஞ்சம் பதுங்கும்.

மாளிகையில்
உத்தரங்களாகவும்
விரிந்து நீளும்
விருந்து மேசைகளாகவும்
பெரிய இடங்களில்
இன்னும் பதுங்கும்.

பொய்மை விரிக்கும்
செய்தித் தாள்களால்
ஆபாசம் பிதுக்கும்
சுவரொட்டிகளாக
அரைக்கப்பட்ட காடுகள்
அலையும்
உலகெங்கும்.

சுள்ளி முறிக்கும்
சன்ன ஒலியையும்
எப்போதும் கேட்கும்
அதிகார வர்க்கம்...

கூட்டுப் பறவைகளின்
கூக்குரலோடு
வீழும் கானகத்தின்
மரண ஓலம்
மலைகளில் முட்டும்
வானம் எட்டும்
காதுக்குக் கேட்காது
கடைசிமட்டும்.

பக்கத்து வீட்டுச் சுவரில்
முட்டியதால்
கிளைகளை இழந்த
அசோகமரத்தின்
இளந்தளிர் ஒன்று
என் சன்னலில் உரசும்.



காகங்களோடும்
கிளிகளோடும்
இலைகள் பேசுவதை
என் செவி கேட்கும்:

“இளைய மானுடம்
தொட்டிலில் ஆடியது
நேற்றைய சகாராவின்
நெடுங்கிளை ஒன்றில்தான்.

பசிய காடுகள்
இயற்கையின் படைப்பு...
பாலைவனங்கள்
மனிதரின் படைப்பு...

புதைந்து போன
நதிகளுக்குப் பிறகும்...
கருகிப் போன
சோலைகளுக்குப் பின்பும்
மிச்சமிருக்கும்
ஓரிரு தளிர்களைக்
கோடரி வெறியிலிருந்து
காப்பாற்றுங்கள்.

“முதலா முடிவா!
எதுவாய் இருந்தாலும்
நட்பா பகையா
யாராய் இருந்தாலும்
உயிர்த்திருப்பது
உறுதிப்படுவது
காற்றினால்...”
என்று
கடைசியாய்க் கேட்டது! ★

ஊரக வளர்ச்சிப் பணிகளின் செயலாக்கத்தில், இந்தியாவிலேயே தமிழகத்திற்கு முதலிடம் !

மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களான ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம் ஆகிய திட்டங்களை 1997-98ல் சிறப்பான வகையில் தமிழகத்தில் செயல்படுத்தியதன் மூலம் இந்த திட்டங்களுக்கான மத்திய அரசின் இரண்டாவது தவணை நிதி விடுவிப்பை நவம்பர் மற்றும் டிசம்பர் 1997லேயே பெற முடிந்தது. கடந்த காலத்தில் தமிழ்நாட்டிலும் மற்றும் அநேகமாக ஏனைய மாநிலங்களிலும் மத்திய அரசிடமிருந்து இரண்டாவது தவணை நிதி விடுவிப்பு அந்த நிதியாண்டின் கடைசி காலாண்டிலேயே அதாவது ஜனவரி-மார்ச்சில் பெறப்பட்டது. ஆனால் நடப்பு நிதி ஆண்டில் (1997-98ல்) **கலைஞர்** தலைமையிலான அரசின் திட்டமிட்ட செயல்பாட்டின் காரணமாகத் தமிழக அரசு மத்திய அரசிடமிருந்து தமிழகத்தின் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த திட்டங்களுக்காக இரண்டாவது தவணைத் தொகையை பெற்றுத்தந்து அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று சாதனையை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும், மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்று செயல்படுத்தப்படுகிறது. 1997-98 ஆண்டுக்கு ரூ.175.47 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.150.13 கோடியும் மாநில அரசின் ரூ.25.99 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.17 .12 கோடி நிதி இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. இதில் 22.5 [illegible] தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 76.61% செலவிடப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதியிருப்பில் 69.91% செலவிடப்பட்டுள்ளது. மனித சக்தி நாட்கள் குறியீடான 329.38 இலட்சத்தில் 31.12.97 முடிய இதுவரை 249.04 இலட்சம் எட்டப்பட்டுள்ளது.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும் மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது. 1997-98 ஆண்டுக்கு ரூ.101.37 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.94.71 கோடியும் மாநில அரசின் ரூ.42.80 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.137.51 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 98.35 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதியிருப்பில் 67.53 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்காக 46,046 வீடுகளும் மற்றவர்களுக்காக 8,719 வீடுகளும் ஆக மொத்தம் 54.765 வீடுகள் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

மில்லியன் கிணறுகள் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும் மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்று செயல்படுத்தப்படுகிறது. 1997 - 98 ஆண்டுக்கு ரூ.39.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.31.40 கோடியும், மாநில அரசின் ரூ.5.88 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.37.28 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 56.49 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதியிருப்பில் 56.16



நமது அன்றாட
பழக்கவழக்கங்களால்,
எய்ட்ஸ் வராது.
அதற்கு நீங்களே
ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படி இல்லையே...

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23





தமிழரசு

16-28, 1998 ரூ.3


காப்பகம்
600 008
FIRST DAY COVER
SARDAR A.
25.2.98
CHENNAI 600
SALT SATYAGRAHA MEMORIAL PILLAR, VEDARANIYAM
SARDAR A. VEDARATNAM
200

இந்த இதழில்...

குறைமதி விடுத்து நிறைமதி கொள்வீர்! - கலைஞர் கவிதை 2
"தியாகிகளுக்கு நாம் செலுத்தும் மரியாதை, அமளி மூளாமல் நாட்டைக் காப்பதுதான்" - கலைஞர் உரை 3
சக்தித் தாண்டவம் - பொன்னீலன் 9
சாமிநாதர் சகாப்தம் - சோழராஜன் 13
சின்னச் சின்ன இழை பின்னிப்பின்னி வரும் சித்திரக் கைத்தறி 17
தமிழர் நேசன் - முனைவர் இராம. குருநாதன் 26
இந்த நகரத்தைத் தூங்க வைக்கவேண்டும்! - மனுஷ்ய புத்திரன் 30
கபிலர் குன்று - இராம. ஆநிரைக்காவலன் 32
சிறுகதைக்கோர் புதுமைப்பித்தன் - தொ.மு.சி. ரகுநாதன் 38
எங்கள் ஊர்ப் பிரச்சினை 42
மருத்துவம் 47

19 மார் 1998
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2029
மாசி
பிப்ரவரி 16 - 28, 1998
மலர் : 28 இதழ் : 16
விலை ரூ.3/-

குறைமதி விடுத்து நிறைமதி கொள்வீர்!

தீவிர வாதமெனும் தீக்கொள்ளி ஏந்திகளே!
ஈவிரக்கமெனும் ஒரு பொருளிலா விலங்குகளாய் ஆனீரோ?

மன்னிக்க வேண்டும் மதிப்புமிகு விலங்கினங்கள் என்னை,
விதிவிலக்குகள் அவற்றிடையும் கண்டு வியக்கின்றேன் நான்!

எத்தனை மலர்கள் எத்தனை அரும்புகள் எத்தனை தளிர்கள் -
பொத்தென உதிர்வது இத்தரை மீது?

உதிரும் மலரும் அரும்பும் உமது பெண்டு பிள்ளை எனில்
பதறும் நெஞ்சம் உமக்குப் பற்றி எரியாதோ?

யாரோ எவரோ அப்பாவி மக்கள் எனும் அலட்சியந்தானே
தீராத விளையாட்டாய்த் திடீர்க் குண்டு வைக்கின்றீர்!

சற்றே நிதானித்துச் சிந்தித்துப் பாரீர்,
சாகும் மக்களில் உம்முடன் சேர்ந்து பிறந்த

சகோதர - சகோதரிகள் இல்லாவிடினும்
சாவின் மடியில் உம்மால் சாய்ந்தோர் அனைவரும்

கூடப் பிறவாத, உம் குடும்பத்து உறுப்பினர் தானென்று
குறைமதி விடுத்து, நிறைமதி கொள்வீர்!

- கலைஞர்

"தியாகிகளுக்கு நாம் செலுத்தும் மரியாதை அமளி மூளாமல் நாட்டைக் காப்பதுதான்!"

சர்தார் வேதரத்தினம் பிள்ளை அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் கலைஞர் உரை

சர்தார் வேதரத்தின்ம் பிள்ளை அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில் பங்கேற்று, அஞ்சல் தலையினை வெளியிட்டு, 25.2.98 அன்று உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"இந்த நிகழ்ச்சி நம்மைப் பெருமைப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையிலே நாம் நடத்துகின்ற ஒரு நிகழ்ச்சியாகும். அன்பிற்குரிய மூப்பனார், அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்தில உத்தமர் காந்தியடிகள் வழி நின்று, அந்தப் போராட்டத்தில் நடைபெற்ற பல்வேறு கிளர்ச்சிகளில் - குறிப்பாக உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் தலைமையில் அன்றைக்கு போர்க்களம் புகுந்தவர்.

1930ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அவர் கலந்து கொண்டு புகழ் ஈட்டியதன் காரணமாக, அடுத்த ஆண்டு 31 ஆம் ஆண்டு - நெல்லையில் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில் அவருக்கு 'சர்தார் வேதரத்தினம் பிள்ளை' என்ற பட்டம் சூட்டப்பட்டது. அவருடைய நூற்றாண்டு பிறந்த நாளில் அஞ்சல்தலை வெளியிட வேண்டும் என்ற ககருத்தினை 17.7.96 அன்று சட்டப்பேரவையில், நிதிநிலை அறிக்கையில் வெளியிட்டேன்.

தமிழ்நாட்டுப் படேல்

அந்த வாசகத்தில், "அண்ணாவின் பண்பார்ந்த மொழியை மனதில் கொண்டு அனைத்து இயக்கங்களின் மறைந்த தலைவர்களுக்கு மரியாதை செலுத்துவதை இந்த அரசு என்றுமே மறந்ததில்லை. அந்தத் தமிழ்ப்பண்பாடு ஒளிவிடும் முத்தார வரிசையில் ஒன்றாகத்தான் 'தமிழ்நாட்டுப் படேல்' எனப்படும் சர்தார் வேதரத்தினம் அவர்களின் நூற்றாண்டு விழா 25.2.97ல் வரும்போது, அவர் நினைவாக அஞ்சல்தலை வெளியிடுமாறு மைய அரசுக்கு எழுதியுள்ளோம்" - என்று பட்ஜெட் உரையிலே நான் குறிப்பிட்டேன்.

15.7.96ல் கடிதம் எழுதி விட்டுத்தான் 17-ந் தேதி பட்ஜெட் உரையிலே அதைக் குறிப்பிட்டேன். ஆனால் எந்த அரசாங்கம் இருந்தாலும் - "சிகப்பு நாடாமுறை" என்ற ஒன்று இருப்பதை இன்னும் யாரும் முழுமையாகத் தவிர்க்கவில்லை என்பதற்கு அடையாளமாக 97-ல் வெளியிடப்பட்டிருக்க வேண்டிய அந்த அஞ்சல் தலை 98-ல்தான் வெளியிடப்படுகிறது.

மத்திய அரசுக்குக் கடிதம்

இந்த அரசின் சார்பில் மீண்டும் ஒரு கடிதம் 12.3.97ல் மத்திய அரசின் செய்தித்துறை அமைச்சர் பெனி பிரசாத் வர்மா அவர்களுக்கு எழுதப்பட்டது. உடனடியாக அவர் பதில் எழுதினார். "இது பற்றிப் பரிசீலித்து கவனிக்கப்படும்" என்று எழுதினார். பின்னர் மீண்டும் ஒரு நினைவூட்டல் கடிதம் 17.6.97ல் நானே எழுதினேன். அதற்குப் பிறகு 16.7.97ல் மற்றொரு கடிதம் எழுதினேன். பிறகு 10.9.97ல் மற்றொரு கடிதம் எழுதினேன். பிறகு 6.10.97ல் மற்றொரு கடிதம் எழுதினேன்.



இப்படி 'முறை[illegible] கடிதம் எழுதுவதைப்போல [illegible] அரசுக்கு நாள்தோறும், வார[illegible] கடிதம் எழுதி, பிறகு இப்பொழு[illegible] "25.2.98ல் இந்த நிகழ்ச்சியை [illegible] கொள்ளுங்கள்" என்று எனக்கு முதன்மை அஞ்சல் துறைத் தலைவர் மூலமாக அரசுக்கு ஒரு தாக்கீது வந்தது. உடனடியாகப் பெரிய அளவில் விழா நடத்த முடியாது. ஏனென்றால், தேர்தல் நேரத்தில் அரசு விழாக்களைப் பெரிய அளவில் நடத்தக்கூடாது என்கின்ற ஒரு விதிமுறை இருக்கின்ற காரணத்தால் - என்ன செய்வது என்று எண்ணியபோது, எனது வீட்டிலேயே அஞ்சல் தலையை வெளியிட்டுவிடலாம் என்று சொன்னார்கள்.

விழா நடத்தப் பொருத்தமான இடம்

"இல்லை, இல்லை அந்த அளவிற்குச் சிக்கனம் இருக்கலாம். ஆனால் கஞ்சத்தனம் கூடாது" என்று அவர்களிடத்திலே குறிப்பிட்டு - "இதற்குப் பொருத்தமான இ[illegible] மண்டபம்தான். ஏனென்றால், ராஜாஜி தலைமையில் [illegible] உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில்தான் வேதரத்தினம் பிள்ளை புகழ் பெற்றார். எனவே, ராஜாஜி மண்டபத்திலே இந்த விழா நடைபெற வேண்டும்" என்று நான் குறிப்பிட்டு, அவ்வாறு இந்த விழா நடைபெறுகிறது.

நேற்று, காலையில்தான் விளம்பரம் செய்யப்பட்டு, அழைப்பிதழ்கூட முறையான அழைப்பிதழாக இல்லாமல், அவரவர்களுக்கும் குறிப்புக்கள் அனுப்பப்பட்டு, தொலைபேசிச் செய்தி சொல்லப்பட்டு இந்த மண்டபம் நிரம்புகின்ற அளவிற்கு நீங்களெல்லாம் வந்திருப்பதற்காக நான் என்னுடைய சார்பிலும், அரசின் சார்பிலும், வேதரத்தினம் பிள்ளை அவர்களின் குடும்பத்தார் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒன்றை உங்களுக்கு நான் நினைவுபடுத்த வேண்டும். நான் 1957ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்று, குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றிருந்தபோது, என்னோடு நான்கு ஆண்டு காலம் சட்டமன்றத்திலே பணியாற்றியவர்கள் - மன்னிக்க வேண்டும் - அவரோடு நான்காண்டு காலம் சட்டமன்றத்திலே பணியாற்றியவன் நான். அப்போது எனக்கும் அவருக்கும் நெருக்கமான பழக்கம் உண்டு. சட்டை அணியாமல் துண்டு மாத்திரம் அணிந்துகொண்டு அந்நாளில் சட்டமன்றத்திலே கலந்துகொண்டவர் அவர்.

வழிகாட்டியாகத் திகழ்ந்த வேதரத்தினம் பிள்ளை

இன்னொரு சிறப்பு என்னவென்றால்; சட்டமன்றம் நடைபெறுகிற எந்த நாளிலும், ஒருநாள் கூட தவறாமல் மன்றத்திற்கு வரக்கூடியவர்களில் வேதரத்தினம் பிள்ளை ஒருவர் என்று சொன்னால் - அது மிகையாகாது. அது மற்றவர்களுக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய ஒன்றாக இருந்தது. அவர்கள் 61ஆம் ஆண்டு மறைந்தார்கள். மறைவதற்கு இரண்டு நாளைக்கு முன்புகூட, அவருக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்தபோது கூட, அவர் மருத்துவமனையில் இருந்து வந்து சட்டமன்ற நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொண்டார். அப்படிப்பட்ட பெரிய உள்ளம் படைத்தவர் - சமுதாயத்திற்காகத் தொண்டாற்ற வேண்டும் என்று கருதியவர் - பலமுறை சிறைச்சாலைக்குச் சென்றவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு அவருக்குச் சொந்தமான நிலம், வேதாரண்யத்தில் 30 அல்லது 40 ஏக்கரா நிலத்தில் அன்னை கஸ்தூரிபாய் நினைவாகக் 'கஸ்தூரிபா குருகுலம்' ஒன்றைத் தொடங்கினார். அப்படித் தொடங்கியபோது, அந்தக் குருகுலத்திலே சேர்ந்த பெண் ஒரே ஒரு பெண்தான் - நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு! இன்றைக்கு அந்தக் குருகுலத்தில் 2000 பெண்கள் படிக்கின்றார்கள். 50க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் அந்தக் குருகுலத்திலே இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

"பெரிய உள்ளம் படைத்தவர் - சமுதாயத்திற்காகத் தொண்டாற்ற வேண்டும் என்று கருதியவர் - பலமுறை சிறைச் சாலைக்குச் சென்றவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை".

மத்திய அரசுக்கு நன்றி

வெளிநாட்டுத் துணிகளைப் புறக்கணிக்க வேண்டும் என்ற காந்தியடிகளின் அன்புக்கட்டளையை ஏற்று சர்தார் வேதரத்தினம் அவர்கள், தாம் கதர் தவிர வேறு எதுவும் உடுத்துவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டது மாத்திரமல்ல; அவர் வெளிநாட்டுத் துணிகள் எல்லாம் விற்கக் கூடிய துணிக்கடை ஒன்றை வைத்திருந்தார். அந்த துணிக்கடையைக்கூட மூடிவிட்டார்கள் என்பது அவரது சீர்மிகுந்த வரலாறாகும். அப்படிப்பட்ட வராலாற்றுக்குரிய பெருமகனை இன்றைக்கு நாம் கவுரவித்திருக்கிறோம். மத்திய அரசு மாநில அரசின் வேண்டுகோளைத் தாமதமாக ஏற்றுக்கொண்டது என்றாலும் கூட, ஏற்றுக்கொண்டதற்காக மத்திய அரசுக்கும், அஞ்சல் துறை அதிகாரிகளுக்கும் இந்தத் துறையை நிர்வகிக்கின்ற அமைச்சருக்கும் தமிழக அரசின் சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தியாகிகளை மறக்காது

இந்த அரசு என்றைக்கும் மதிப்பு மிகுந்த தியாகிகளை மறந்தது கிடையாது. அப்படி மறக்கவில்லை என்பதற்கு அடையாளமாகத்தான் கோட்டைக்குப் பக்கத்தில் கட்டப்பட்டுள்ள பத்துமாடி கட்டடத்திற்கு "நாமக்கல் கவிஞர் மாளிகை" என்ற பெயரைச் சூட்டியிருக்கிறோம்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன்; எந்தத் தியாகியாக இருந்தாலும் அவரவர்களுடைய கொள்கைக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்தில்கூட, பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. தேர்தல் நேரம் என்ற காரணத்தால் 13-ஆம் தேதி அன்று திறக்கப்பட வேண்டிய நினைவுச் சின்னம், விரைவில் இன்னும் ஓரிரு வார காலங்களில் திறக்கப்பட இருக்கின்றது.

பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைத்தபோது அவருக்கு மிகவும் விருப்பமான கைராட்டையைத்தான் அங்கே அந்த மண்டபத்தின் முகப்பிலே வைத்தோம் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.

பெரியாருக்கு நினைவுச் சின்னம் அமைத்தபோது, அவர் புரட்சிக்காரர் என்பதை விளக்குகின்ற வகையிலே, ஒரு கையிலே தீச்சுடரை ஏந்திய வண்ணம் நினைவுச் சின்னம் அமைத்தோம்.

என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு முதலிலே நான் அமைத்த நினைவுச் சின்னம் குடை சின்னம். பலபேருக்கு அவர் நிழலாக இருந்தார் என்பதை விளக்க அந்தக் குடையை நான் அமைத்தேன். ஆனால், பிறகு அது மாற்றப்பட்டுவிட்டது. அதைப் பற்றி நான் பேச விரும்பவில்லை.

தியாகிகளுக்கு மரியாதை

அதைப்போல ராஜாஜி அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைத்த நேரத்தில், "அந்த ஸ்தூபி முகப்பு எப்படியிருக்க வேண்டும்" என்று கேட்டபோது நான் சொன்னேன் - "ராஜாஜி சக்ரவர்த்தித் திருமகன் என்ற தொடர் எழுதியவர். அவர் ராமரிடத்திலே நல்ல நம்பிக்கையும், சிறந்த பற்றும் கொண்டவர். எனவே அந்தக்கோபுரம் ராமருடைய கிரீடத்தைப் போல் இருக்கவேண்டும்" என்று நானே அந்த மாதிரியை வரைந்து கொடுத்து, அச் சின்னம்தான் அங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

எனவே, எந்த ஒரு தியாகியைப் பெருமைப்படுத்துவதாக இருந்தாலும், அவரவர்கள் கொள்கைக்கேற்ப, அவர்கள் கொண்டிருந்த பற்றுக்கேற்ப அந்த மரியாதைகள்

சென்னை பெருநகரம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி வளர்ச்சி...

சென்னை விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்காக நிதிநிலை அறிக்கையிலே ஐம்பது கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1996-97ல் ரூபாய் 247 கோடி செலவில், நகர்ப் பகுதிகளில் 20 ஆயிரம் குடியிருப்புகள் கட்டப்பட்டன. 31 நகரங்களை வளரும் மையங்கள் எனத் தேர்ந்தெடுத்து அவற்றுள் 13 மையங்களில் 9 ஆயிரம் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

நீலகிரியில் Master Plan திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. உதகமண்டலம் பகுதியில், மிகக்குறைந்த வருமானம் உள்ள[illegible]னோர் வீடுகட்டுவதற்காக குறைந்தபட்ச இடத்தின் பரப்பளவை [illegible]ட்டுள்ளது. கட்டடம் கட்ட உரிமம் வழங்கும் அதிகாரம் இதுவரை[illegible] மாற்றி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் உள்ளாட்சி அமைப்புகளு[illegible] வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி வளர்ச்சிப் பணி[illegible] ரூபாய் 200 கோடியும் ஏனைய 5 மாநகராட்சிகளுக்கு ரூபாய் 100 கோடியும் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகரை மேம்படுத்த, பெரம்பூர் சுரங்கப்பாதை, இருமருங்கிலும் பாதசாரிகள் நடக்க சுரங்கப்பாதை, பெரம்பூர் குக்ஸ் சாலை மற்றும் பிபிசாலை இணைக்கும் இரயில் மேம்பாலம், எழிலகம் அருகில் சுரங்கப்பாதை, நேப்பியர் பாலத்தின் அருகில் இன்னொரு மேம்பாலம், பேசின் பாலம் அருகில் மற்றொரு மேம்பாலம், ஸ்டர்லிங் ரோடு சந்திப்பு அருகில் மேம்பாலம், லஸ் அருகில் சுரங்கப்பாதை, தங்கசாலை மற்றும் பேசின் பாலம் சந்திப்பில் சுரங்கப்பாதை, ஆயிரம் விளக்குப் பகுதியில் அண்ணாசாலையும் திரு.வி.க.சாலையும் சந்திக்கும் இடத்தில் வணிக வளாகம், தியாகராயர் சாலையிலுள்ள பழைய அங்காடிகளைப் புதுப்பித்துப் புதிய அங்காடிகளை உருவாக்குதல், அண்ணாநகர் டாக்டர் விஸ்வேஸ்வரய்யா கோபுரப் பூங்காவில் பொழுதுபோக்கு மையப்பூங்கா, மெரினா நீச்சல் குளம் அருகில் சங்கீத நீரூற்று, சென்னை ஜார்ஜ்டவுன் பிரகாசம் சாலை லோன்ஸ்கொயர் வாகனம் நிறுத்தும் வசதிக்காக மூன்று மாடிக் கட்டடம், வெளியூர் ஜார்ஜ்டவுன் பேருந்து நிலையம், பிராட்வே நவீனப்படுத்துதல் ஆகிய 15 திட்டங்களை மேற்கொள்ள சென்னை மாநகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நகராட்சிப் பணியாளர்களுக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிக்காலம் கணக்கிட்டு ஓய்வூதியச் சலுகை தர ஆணையிடப்பட்டுள்ளது.

சென்னை நகரில் மேலும் 550 இடங்களில் குடிநீர்த் தொட்டிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சியின் வெள்ளிவிழா ஆண்டையொட்டி நகரின் வளர்ச்சிக்கு ஐம்பது கோடி ரூபாய் செலவில் புதிய திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தப்படுகின்றன.

செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

பெற்ற சுதந்திரத்தைக் காப்போம்

தியாகிகளை எல்லாம் நினைவுகூர்கிற இந்த நேரத்தில், அந்தத் தியாகிகள் அரும்பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தை நாம் அமைதியாகக் காக்கக் கற்றிருக்கிறோமா என்பதை எண்ணிப்பார்த்து - அந்த நேரத்தில், நாம் இன்றைக்கு வருத்தப்பட வேண்டிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கின்றோம். இந்தியா முழுமையும், குறிப்பாக, தமிழ்நாட்டிலும் குண்டு வெடிக்கின்ற இந்தச் செய்திகள் ஒவ்வொரு நாளும் நம்முடைய காதுகளிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதைப் போன்ற செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன.

நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்று காலையில் கூட சென்னை மாநகரத்தில், நல்லவேளை ஒரு குண்டு - வெடிக்காமலே எடுக்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டிருக்கின்றது.

எனவே, இவைகளைத் தடுப்பதற்குக் காவல்துறை மாத்திரமல்ல; மத்திய அரசு மாத்திரமல்ல; பொதுமக்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

தியாகிகளுக்கு நாம் காட்டும் மரியாதை

தியாகிகளுக்கு நாம் காட்டுகின்ற மரியாதை - அஞ்சல் தலை வெளியிடுவது மாத்திரமல்ல; அமளி மூளாமல் இந்த நாட்டை, தமிழகத்தைத் தொடர்ந்து காப்பற்றுவது, காத்து வருவதுதான் என்பதை எடுத்துக்கூறி உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.'

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார். ★

தொழிலாளர் நலன்



★ தொழிலாளர்களின் தோழனாக விளங்கும் இவ்வரசு, முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முனைப்புமிகு வழிகாட்டுதலில், வெளிப்படையான அணுகுமுறையின் காரணமாகப் பல்வேறு தொழில் தாவாக்களைத் தீர்த்து வைத்திருக்கிறது. 3251 தொழிலாளர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, மூடப்பட்டுக் கிடந்த 3 நூற்பாலைகள், மீண்டும் திறக்கப்பட்டன.

★ நிர்வாகச் சிக்கல், தொழிலாளர் தாவா போன்றவைகளின் காரணமாக மூடப்பட்டுள்ள தொழிலகங்களில் பணியாற்றி, வேலையின்றித் தவிக்கும் தொழிலாளர்களின் துயர் துடைப்பு நிவாரணத் தொகையாக, முன்னர் தீபாவளிக்கு மட்டும் ரூ.400 வீதம் அளிக்கப்பட்டது. இந்நிவாரணத் தொகையை, 1997 - லிருந்து பொங்கலுக்கும் விரிவு ஏற்படுத்திடும் வகையில் முதலமைச்சர் கலைஞரின் ஆணையின் படி, 'முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து' 19,574 தொழிலாளர்களுக்கு ரூ.78,29,600 வழங்கப்பட்டுள்ளது.

★ விவசாயம், தீப்பெட்டித் தொழில், தச்சு மற்றும் கருமார் தொழில், பாலிதீன், பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழில் போன்ற அமைப்புச் சாரா 60 தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு அரசால், குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் சிறக்க 'தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நலத் திட்டம்' 15.6.97 முதல் தமிழகம் முழுவதும் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செயலாக்கங்களாக, 'விபத்துக் காப்புறுதி, குழந்தைகள் காப்பகம், வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர்கள் ஈட்டுறுதி மற்றும் ஓய்வூதியம்' முதலிய வழிகாட்டும் திட்டங்கள் நிறைவேற்றப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடையும் வகையில், 48,000 தொழிலாளர்கள் இசைவளித்துப் பதிவு செய்துகொண்டுள்ளனர். இத்தகு கட்டுமானத் தொழிலாளர்கள் பணியில் இறக்க நேரிட்டால், குடும்பத்தினருக்கு உதவித் தொகையாக ரூ.50,000 வழங்கப்படுவதுடன், ஈமச்சடங்கிற்கு ரூ.500 வழங்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

★ பீடித்தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், நிலம் கையகப் படுத்தப்படுவதில் நிலவிய இடர்ப்பாடுகள் களையப்பட்டு, முதற்கட்டமாக, நெல்லை - மேலப்பாளையத்தில் 439 இல்லங்கள் கட்டப்படுகின்றன. பிற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரைவில் விரிவாக்கப்படும்.

★ குழந்தைத் தொழிலாளர் முறையை அறவே களைந்திடும் வகையில், ஆய்வுப் பணிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன; மாநில அளவில் 'கண்காணிப்புக் குழுவொன்றும்', 'குழந்தைத் தொழிலாளர் மாநிலப் புனரமைப்பு - நிதி மற்றும் மாவட்ட அளவிலும், இத்தகு நல நிதியங்கள் உருவாக்கப்பட்டு, 'கல்வியறிவு, விழிப்புணர்வு, தனிப் பள்ளி வசதிகள்' ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிலாளர் நலன் காக்கும் வகையில், தொழிற் சாலைகள் சட்டத்தின் கீழ் 25,214 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன; இதன் மூலம் 11 இலட்சம் தொழிலாளர்களின் பாதுகாப்பு, அவர்களது நலன் காப்பு உறுதி செய்யப்பட்டுள்ளன. விபத்துத் தடுப்பு அடிப்படையில், பட்டாசுத் தொழிலாளர்கள் 5000 பேருக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், இத்தொழிலாளர்களுக்கான விபத்துக் காப்பு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ், இதுவரையில் 19 இழப்புக்குள்ளான குடும்பங்களுக்கு ரூ.9½ இலட்சம் வழங்கப்பட்டு, அவர்களது இன்னல்கள் களையப்பட்டுள்ளன.

★ அமைப்புச் சாரா தொழிலாளர்களான கல்லுடைப்போர், சுமை தூக்குவோர், கைவண்டி இழுப்போர் போன்றோர் வைப்புநிதி பலனைப் பெறுவதற்கும் ESI பலனைப் பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ முதலமைச்சர் கலைஞரின் தொழில் மயமாக்கும் கொள்கைக்கேற்ப, தொழில் நுட்ப மனித வள மேம்பாட்டின் அடிப்படையில், தொழிற் பயிற்சி நிலையங்களில்லாத 218 ஊராட்சி ஒன்றியங்களில், மூன்றாண்டுகளுக்குள் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படவுள்ளன. 21 தொழிற் பயிற்சி நிலையங்கள், உலக வங்கி நிதியுதவின் கீழ் ரூ.12.24 கோடியில் நவீனப்படுத்தப்படுகின்றன.

உணவுப்பொருள் வழங்கலில் ஒப்பற்ற சாதனை

★ குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகளில் எல்லாப் பொருட்களும் எல்லா நாட்களிலும் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; மூன்று பேர் உள்ள குடும்பத்தினருக்கும் 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

★ கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பண்டங்களை விநியோகிப்பதற்குத் தேவையின் அடிப்படையில் 2,000 புதிய நியாயவிலைக் கடைகள் - பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.



★ தமிழகத்தில் நடமாடும் நியாய விலைக் கடைகள் மற்றும் மகளிரால் நடத்தப்படும் சில்லறை விற்பனை கடைகளையும் சேர்த்து மொத்தம் 23,492 நியாயவிலைக் கடைகளும், 2,580 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் இயங்கி வருகின்றன.

★ வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு 'சிவப்பு' வண்ணத்திலும், ரூ.10 ஆயிரம் மாத வருவாய் உள்ளவர்களுக்கு 'பச்சை' வண்ணத்திலும், இதர குடும்பங்களுக்கு 'மஞ்சள்' வண்ணத்திலும், குடும்பத்தலைவரின் புகைப்படம் ஒட்டிய குடும்ப அட்டைகள், மாநிலத்திலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் 1998ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் ரூ.1½ கோடி புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும். 1.7.98 முதல் வறியோர் நலன் காக்கும் பொது விநியோகமுறை முழுமையாகச் செயல்படத் தொடங்கும்.

★ இந்தியாவில், எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மண்ணெண்ணெய் மட்டும் வழங்கும் நிலையம் மூலம் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் ஒன்றினைத் தமிழக அரசு முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையத்தில் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள 8000 முதல் 10,000 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு மண்ணெண்ணெய் மட்டும் வழங்கப்படும். அடுத்த ஆண்டிற்குள் இத்தகு 500 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் திறக்கப்படுமென முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

பொது விநியோக முறையில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு:

★ நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர்கள் - உறுப்பினர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள் - உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் - உறுப்பினர்கள், பேரூராட்சித் தலைவர்கள் - உறுப்பினர்கள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் - உறுப்பினர்கள் அவர்களின் எல்லையிலுள்ள நியாயவிலைக் கடைகளைப் பார்வையிட்டு அங்கு முறைகேடுகள் ஏதுமிருப்பின், அவற்றை மாவட்ட மற்றும் வருவாய்க் கோட்ட அளவிலான குழுக்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லலாமென அரசு ஆணையிட்டுள்ளது.

★ நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களுக்கு, வழங்கப்பட்டு வந்த தொகுப்பூதியமான ரூ.800, ரூ.900ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் சுமைத் தூக்கும் தொழிலாளர்களில், 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியோர்களின் பணி நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளன.

கூட்டுறவில் கூடிவரும் நன்மைகள்:

★ கிராமப் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக விளங்கும் கூட்டுறவு அமைப்புகளுக்கு, பல்லாண்டுகளாகத் தேர்தலே நடத்தப்படவில்லை; இவ்வரசு பதவியேற்றவுடன் முதலமைச்சர் கலைஞரின் ஆணையின்படி, 23185 கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை 1996லேயே நடத்திக் காட்டியது; தற்பொழுது 2,31,850 தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்; மாநிலத்தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவில், தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

★ குறுகிய காலப் பயிர்க் கடனுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த, 13% வட்டி என்பது இனிமேல் 12% வட்டியாக விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறத்தக்க வகையில், 1% வட்டி குறைக்கப்பட்டுள்ளது.

★ கூட்டுறவு ஊழியர்களின் குடும்பப் பாதுகாப்புத் திட்ட உதவித்தொகை ரூ.60,000லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண்மை மற்றும் வேளாண்சார்ந்த தொழில்களுக்கு மட்டுமல்லாமல், சமுதாயத்தில் அனைத்துப் பிரிவினருக்கும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் செயற்பாடுகளுக்கொப்ப, அனைத்து வங்கியியல் பணிகளையும், நவீனமயமாக்கப்பட்ட முறைகளில் மேற்கொள்ள வழிவகை செய்யப்படும் என முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

★ கூட்டுறவு வங்கிகளின் மூலம் வழங்கப்படும் தனிநபர் நகைக் கடன் வரம்பு ரூ.40 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ கரும்பு பயிர்க்கடன் ரூ.45 ஆயிரத்திலிருந்து ரூ.55 ஆயிரமாகவும், இதர பயிர்களுக்கு ரூ.25 ஆயிரத்திலிருந்து ரூ.35 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. ★

ஊட்டச்சத்தும் உடல் நலமும்

ஊட்டச்சத்தும், உடல் நலமும் பிரிக்கமுடியாதவை. உடல்நலம் ஊட்டச்சத்து குறைபாட்டினால்தான் முக்கியமாகப் பாதிக்கப்பட்டு நோய் உண்டாகிறது. மக்கள் நன்றாக இருந்தால்தான், நாடு நன்றாக இருக்கும். மக்கள் ஆரோக்கியமாக இருக்க ஊட்டமான உணவு வேண்டும். நிறையப் பேர் சாப்பிடுகிறோம், அவை நம் உடலுக்குத் தேவையான ஆற்றலைத் தருகிறதா என்று நம்மில் பலர் உணருவதில்லை. சாப்பாட்டில் கவனம் செலுத்தினால், "சாப்பாட்டு ராமர்" பட்டம் கிடைக்கும் என்று சாப்பாட்டை இலட்சியம் செய்வதில்லை. உணவு - அடிப்படை ஆற்றலை வழங்குவதால் நமக்கு அதில் கட்டாயம் அக்கறை வேண்டும். அதில் ஒரு தேசத்திற்கும் சமமான அக்கறை உள்ளது. ஊட்டச்சத்து குறைபாடு நம்மைப்போல் வளரும் நாடுகளில் மக்களின் தரத்தைக் கட்டுப்படுத்துகிறது. மக்களுக்கு எடுத்துரைத்து ஊட்டச்சத்து பற்றிய விழிப்புணர்வு பரவ அரசுத் துறைகள் செயல்பட்டு வருகின்றன.

பழங்கள், காய்கறிகளின் முக்கியத்துவம்

தானிய வகைகளில், பருப்பு வகைகளில் ஏராளமான - தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கின்றன. ஆனால், பழங்களும், காய்கறிகளும் ஊட்டச்சத்துக்களை வழங்குவதோடு மட்டுமின்றி உடல்நலத்தையும் காக்கின்றன. இரத்தம், எலும்பு மற்றும் பற்கள் போன்றவற்றின் உருவாக்கத்திற்கும் பல்வேறு உடல் இயக்கங்களை ஒழுங்குப்படுத்துவதற்கும் பழங்களும் காய்கறிகளும் அவசியம் தேவை. இவற்றிலிருந்து கிடைக்கும் ஊட்டச்சத்துக்கள் வைட்டமின் ஏ, சி, பி, காம்ப்ளெக்ஸ் மற்றும் இரும்பு, கால்சியம் 'வைட்டமின் சி' ஏராளமாக உள்ளது. முள்ளங்கி, பச்சைக்கீரை, முட்டைகோஸ் போன்றவை தினசரி நமது உணவில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

பயிர் வகைகள் மற்றும் பீன்ஸ் ஆகியன நம் உணவில் வைட்டமின்கள், தாதுக்கள் நார்சத்து ஆகியவற்றை அளிப்பதோடு புரதச்சத்து முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன. பழங்கள், காய்கறிகள் கூடியவரை புதிதாக உட்கொள்ள வேண்டும்.

காய்கறிகள் மேற்பகுதிகளின் தோலைக் கூடியவரை மெலிதாக உரிக்கவும். ஏனெனில் பெரும்பகுதி வைட்டமின்களும், தாதுக்களும், பழங்கள் - காய்கறிகளின் தோலுக்குச் சற்றுக் கீழே படிந்துள்ளது. முள்ளங்கி, கேரட், பீட்ரூட் ஆகியவற்றின் மேற்புற இலைப்பகுதிகளைத் தூக்கி எறிய வேண்டாம். பொரியல், சாம்பார், சப்பாத்தி, பரோட்டா மற்றும் சாலட்டுகளில்

மக்களுக்கு விழிப்புணர்ச்சி

மக்களுக்கு அவர்களின் உணவுப் பழக்கத்தை பற்றி விழிப்புணர்ச்சி பெற ஊட்டச்சத்துக் கல்வி மிக அவசியம். அக்கல்வியின் மூலம் ஊட்டச்சத்து பற்றிய அறிவை உருவாக்குவது ஊட்டச்சத்தை எவ்வாறு பெறுவது, அதற்கான வழிகளைக் கற்றுக்கொடுப்பது உடல் நல ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வு சேவை அமைப்புக்களை எவ்வாறு மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று எடுத்துரைப்பது ஆகியனவாகும்.

உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம் ஊட்டச்சத்துக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி 1964-லேயே நடமாடும் உணவு மற்றும் விரிவாக்க செயல்திட்டத்தை ஏற்படுத்தியது. இத்திட்டத்தில் மக்களுக்குப் பிரச்சார சாதனங்களின் மூலம் ஊட்டச்சத்து பற்றிய அறிவுரை வழங்கப்படுகிறது.

வீட்டிலேயே காய்கறிகள் மற்றும் பழங்களைப் பதப்படுத்துதல் ஆகியவற்றை நேரடி செயல்முறை விளக்கங்கள், விரிவுரை, விவாதங்கள், திரைப்படக் கண்காட்சிகள் மூலம் போன்ற தாதுக்கள் ஆகியவையாகும். வேரிலிருந்து கிடைக்கும் கிழங்கு வகைகளில் உருளைக்கிழங்கு வள்ளிக்கிழங்கு, மரவள்ளி போன்றவை உடலுக்குச் சக்தி அளிக்கின்றன. நம் உணவின் முக்கியப் பகுதியான நார்ச்சத்தைப் பழங்களும் காய்கறிகளும் வழங்குகின்றன. இது இயல்பான உணவுக்குழாய் இயக்கத்திற்கு உதவி புரிந்து, அதன் மூலம் உடல்நோய்கள் மற்றும் பெருங்குடல் புற்றுநோய் வராமல் தடுக்கின்றது.

பொதுவாக, பழங்கள் விலை உயர்ந்தவை தான். ஆனால் எல்லாக் கனிகளும் எட்டாக் கனிகள் அல்ல. ஊட்டச்சத்து மிக்க பழங்களான கொய்யா, மாம்பழம், வாழைப்பழம், பப்பாளி போன்றவை. அவற்றிற்குரிய பருவத்தின்போது மிக மலிவாகக் கிடைக்கும். கேரட், குளிர்காலத்தில் மலிவாகக் கிடைக்கும். இதில் 'வைட்டமின் ஏ' சத்து கிடைக்கின்றது. புத்துணர்ச்சியும், சக்தியையும் தருவது கேரட், துருவப்பட்ட கேரட் மற்றும் சர்க்கரை அல்லது வெல்லத்துடன் சமைக்கப்பட்ட பூசனி இளம் குழந்தைகளுக்கான முக்கியமான துணை உணவாகும். பச்சையாக உட்கொள்ளப்படும் காய்கறிகளில் இவற்றைப் பயன்படுத்தவும். வெட்டுவதற்கு முன்னர் பச்சைக் கீரைகளை நன்கு கழுவ வேண்டும். ஒரு போதும் வெட்டிய பின்னர் கழுவக்கூடாது. சிறிதளவு நீரில் சிறிது நேரத்திற்கு மூடப்பட்ட பாத்திரத்தில் காய்கறிகளை வேகவைக்க வேண்டும்.

காய்கறிகளிலேயே முழுமையான ஊட்டச்சத்தைப் பெற மேற்சொன்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

என்ன சாப்பிடுகிறோம் ? எப்படிச் சாப்பிடுகிறோம் ? என்று தெரிந்து சாப்பிட்டால் அது நம் உடலுக்கும் உடல் வளர்ச்சிக்கும் நல்லது. 'ஊட்டச்சத்து' என்ற வார்த்தையைப் பார்த்து மிரள வேண்டாம். அது ஒன்றும் வசதியானவர்கள் வளமாக வாழச் சொல்லப்பட்ட வார்த்தை அல்ல. வறியவர்களும் வளமாக வாழ - நல்ல தரமான உணவுப் பழக்கத்தை மேற்கொள்ள அறிமுகப்படுத்தும் வார்த்தைதான் ஊட்டச்சத்து. ஆம், பாமர மக்களுக்கும் இந்த ஊட்டச்சத்து இனிமேல் ஓர் அறிமுகம்தான் !.

★ ★ ★

சக்தித் தாண்டவம்

- பொன்னீலன்

"**அ**தோ வந்துவிட்டார் அன்னை !" மகிழ்ச்சி தாங்காமல் நந்திதேவர் போட்ட கூச்சல் பக்கத்துப் பனிச் சிகரங்களிலெல்லாம் எதிரொலித்தது. "ஆம் இறைவா, அதோ பாருங்கள். எருது விழிகளில் ஆனந்தம் தாண்டவமாட அய்யனுக்கு மலையடி வாரத்தைச் சுட்டிக்காட்டினார் அந்த மாட்டுத் தலையர்.

நந்திதேவரின் மகிழ்ச்சிக்குக் காரணம் இருந்தது. தேவியைத் தேடி இரவு முழுவதும் கால் கடுக்கக் காடு நாடெல்லாம் அலைந்து சிரமப்பட்டவர் அவர்தானே ? பாவம் அய்யன் ! இரவு ஒரு பொட்டு நேரம்கூடக் கண் மூடவில்லை. சாயங்காலமே காணாமல் போய்விட்ட அன்னை எங்கே போனாளோ, என்ன ஆனாளோ என்கிற கவலை ஒரு பக்கம், கணவன் நான் குத்துக் கல்லாய் இங்கே இருக்க, சொல்லாமல் கொள்ளாமல் அவள் பாட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டாளே என்கிற ஆத்திரம் மறுபக்கம்; என்ன பாடுபட்டுப் போனார்.

> **"ஆண் - பெண் சமத்துவ முழக்கம் மண்ணுலகில் மட்டும்தானா? விண்ணுலகிலும் கேட்கிறது!"**

"ஸ்ஸ்ஸ் ! இரையாதே" ! தீச்சுடர் போன்ற தன் ஆட்காட்டி விரலை உதட்டில் அழுத்தியபடி நந்தியைக் கடுமையாகப் பார்த்தார் முக்கண் மூர்த்தி. திருக்கயிலாயமலை உச்சியில் ஒரு பனிப்புற்றின் பின்னால் மறைந்து நின்று கொண்டிருந்தார் அவர். அவர் பின்னால் கயிலாயமலையின் பனிக்குகை மாளிகை.... ஆணும் பெண்ணுமான சிவலோக வாசிகள்... காலை வெயிலில் பனி மூட்டங்கள் விலகி புலனாகிக் கொண்டிருந்தன.

"பார், எவ்வளவு உல்லாசமாக வந்துகொண்டிருக்கிறாள் அந்தப் பெண் !" கோபத்தில் சிவனின் முறுக்கு மீசை துடித்தது. கணவனிடம் அனுமதி பெறாமல் போய்விட்டோமே என்கிற குற்ற உணர்வு துளியாவது இருக்கிறதா அவள் முகத்தில் ?"

உண்மைதான். அன்னை தடம் பார்த்து வழி நடக்கும் மரபுக்குரிய பெண்ணாக வரவில்லை. குதூகலம் நிறைந்த சிறுமிபோல அவர் துள்ளிக் குதிக்கிறார். பாறைக்குப் பாறை அலட்சியமாய்த் தாவுகிறார். பூக்களைப் பறித்து ஆசையோடு நுகருகிறார். வண்ணத்துப் பூச்சிகளைத் துரத்திக்கொண்டு ஓடுகிறார்.

"பெண்ணா இவள் ! ஓ மாயப்பிசாசு ! இவளால் இந்தப் பெண்ணினமே கெட்டுக் குட்டிச்சுவராய்ப் போகப் போகிறது" சிவனின் உதடுகள் இகழ்ச்சியாய் மடிந்தன.

"சிவ சிவ" அதிர்ச்சியில் தன்காளைச் செவிகளைப் பொத்திக் கொண்டார் நந்தி தேவர்.. "தேவா, அவர் பிரபஞ்சத்தையே பெற்று வளர்க்கும் அன்னை ! சக்தியின் ஊற்று ! அவளையா இப்படிச் சொல்லுகிறீர்கள் ?"

"நந்தி !" விஷக்கறை படிந்த கருப்புப் பற்களைக் கடித்தார் அய்யன். கணவனிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் இப்படி ஓடிப்போகும் இவளா உலகத்தின் அன்னை ? இவளைப் பின்பற்றினால், உலகம் என்ன ஆகும் ?" தலையை அவர் மறுத்துக் குலுக்கிய வேகத்தில் கங்கை தாறுமாறாய்ப் பாய்ந்தது. நல்ல பாம்பு சடையைப் பல்லால் கவ்விக் கொண்டு புடலங்காய் போல் தொங்கிற்று.

அய்யன் சொன்னது உண்மைதான். அம்மைக்குக் குதூகலம் அதிகம்தான். கயிலாய மலையின் அடிவாரத்தில், கங்கையின் கரையோரம் தங்கமாய்த் தகதகக்கும் கூழாங் கற்களின் மீது உல்லாசமாகத் தாவித்தாவி மேலே வந்து கொண்டிருந்தார் அவர். நதியின் இரண்டு பக்கமும் ஓங்கி வளர்ந்த தேவதாரு மரக்காடு காற்றில் பாடுகிறது. அந்தப் பாடலுக்கு நடனம் ஆடுவது போல இருக்கிறது அன்னையின் அசைவுகள். கருப்புப் புறாக்களாகப் பாதங்கள் பாறைக்குப் பாறை தாவுவதும் தள்ளாடும் உடலை சமனப்படுத்திக் கொள்வதற்காக இறக்கைகள் போல் கைகள் விரிவதும் மடிவதும்... நூல் இடைநெளிவதும், குழைவதும், காற்றில் கருங்கேசம் மிதப்பதும் அமிழ்வதும்...



அன்னையை இவ்வளவு அழகாக அவர்கள் கண்டு எத்தனை யுகங்கள் ஆகிவிட்டன. நந்திதேவர் நினைவு பின்னோக்கி நகர்ந்தது. அந்தக் கொடிய நாள்! அன்றுதானே அண்ணல் ஊர்த்துவ தாண்டவம் ஆடினார்.. நாணத்தால் காலைத்துதூக்கி ஆடத் தயங்கிய அன்னையை அன்றுதானே அவர் அடிமைப்படுத்தினார்! அன்று முதல் தானே உலகெங்கும் பெண்மை ஆண்மைக்கு அடிமைப்பட்டது. காதல் காமமானது! காதல் கடவுள் எரிந்தே சாம்பலானான்... ஓ.. அந்த நாசமாய்ப் போன அன்றைய நாணத்துக்காக எத்தனை இரவுகள் ஏங்கி ஏங்கிக் கண்ணீர் வடித்திருப்பார் அன்னை!...

அதன்பின் இன்றுதான் நிஜமான புன்னகை மலர்ந்திருக்கிறது அன்னையின் திருமுகத்தில்! நிலைக்குமா இது! வெப்பப் பெருமூச்சு விட்டார் அவர். அய்யனின் கோபத்தையோ நந்தியின் சோகத்தையோ சிறிதும் அறியாமல் துள்ளிக் குதித்து வந்து கொண்டிருந்தார் அன்னை. அன்னையின் சிங்க வாகனமோ அதற்கு ஒரு படி மேலே! பாறைக்குப் பாறை தாவி அது குட்டிக்கரணம் போடுகிறது... "ஆ! இது என்ன, சிங்கம் கருப்பாயிருக்கிறதே? அன்னையின் சிங்கம் தங்க நிறமல்லவா? அது எங்கே போயிற்று? எங்கிருந்து பிடித்து வருகிறார் இந்தக் கரும்பூதத்தை" முணுமுணுத்தார் நந்தி.

"தேவா, அவர் பிரபஞ்சத்தையே பெற்று வளர்க்கும் அன்னை! சக்தியின் ஊற்று! அவளையா இப்படிச் சொல்லுகிறீர்கள்?"

கயிலாய மலையின் அடிவாரப் படியை அன்னை நெருங்க நெருங்க அய்யன் கோபம் கொழுந்து விட்டெரிகிறது. அன்னையின் சுதந்திரத் தோற்றம்.. கண்களின் சுதந்திரச் சுடர்... பாம்புக்குப் பதிலாக அவர் கழுத்திலே தொங்கும் பல வண்ண அல்லி மலர் மாலைகள், 'திரிசூலம், ஏந்திய கையில் ஒரு சூலமாக ஒற்றைக் காஷ்மீர் ரோஜா - யாருக்காக அந்த மலரை ஏந்துகிறாள்? காதல் மயக்கத்தில் என்ன பாடலைப் பாடுகின்றார்? என் மயக்கத்தில் மயங்கி என் முயக்கத்தில் உருக வேண்டியவள்... தானாக மயங்கி என் தகுதியைக் குலைக்கிறாளே' ரத்தமாய்ச் சிவந்துவிட்டன அய்யனின் கண்கள். ஆத்திரத்தில் அவர் உடம்பு நடுங்கியது.

"நில் அங்கே, யாரைத் தேடிக் கொண்டு வருகிறாய்?" அய்யனின் இடிக்குரலில் நடுங்கிய வெண்புறாக்கள் தங்கள் குகைக் கூடுகளை விட்டுப் பறந்தன.

அந்தச் சத்தம் காதில் விழுந்ததாகக் கூடக் காட்டிக் கொள்ளவில்லை அன்னை. அதே குழந்தைத்தனம், அதே உல்லாசம், கருஞ் சிங்கத்தின் முதுகில் பாய்ந்து பிடரியைப் பிடித்துக் கொள்ள, அது இரண்டு இரண்டு படிகளாக மேல் தாவிக்கொண்டிருந்தது.

"நில், பதில் சொல்லிவிட்டு மேலே வா. இரவெல்லாம் எங்கே போயிருந்தாய்?"

"மறந்துவிட்டீரா?" சிங்கத்தின் கரும் பிடரியைப் பாசத்தோடு வருடிக் கொடுத்தார் அன்னை. நம் வேலன் வள்ளிக்குத் திருமணநாள் அல்லவா இன்று?"

"வேலன்!" நரநரவென்று பல்லைக் கடித்தார் சிவன். "குறத்தியைக் கட்டி என் குலப்பெருமையைக் கெடுத்த மூடன்! அவன் வீட்டுக்கு யாரைக் கேட்டு விட்டுப் போனாய்?"

அன்னையின் கருநீல வட்ட முகம் நந்திதேவன் பக்கம் திரும்பிற்று.

"ஏன் நந்திதேவா, சொல்லவில்லையா நீ? ஈசனிடம் சொல்லச் சொல்லிவிட்டுத்தானே போனேன்?"

நந்தி தேவர் விழித்தார். எப்படிச் சொல்ல முடியும் அவரால்? மானசரோவர் ஏரியில் தேவமகளிருடன் அய்யன் மாலை முழுவதும் நீராடிக்கொண்டிருந்தார். அதனால் சொல்ல இயலவில்லை என எப்படிப் பதில் சொல்லுவது?

"பொய் சொல்லுகிறாய்!" வலது பாதத்தை அய்யன் தரையில் ஓங்கி மிதித்தபோது கைலாயமே நடுங்கிக் குலுங்கியது! பனிச்சிகரங்கள் நொறுங்கிச் சரிந்தன. "ஒரு இரவு இல்லை. இரு இரவு இல்லை, பல இரவுகளாகவே நீ போய்க் கொண்டுதான் இருக்கிறாய்! சொல், எங்கே போகிறாய்?"

பூவைப் போன்ற தன் வலது பாதத்தைப் படியில் நாட்டிய பாவனையில் லேசாகத் தட்டினாள் தேவி. கலீர் என்ற சதங்கையொலி எழுந்தது. 'இதற்குத்தான்' - முறுவல் பூத்தார் அவர்.

கோபம் தலைக்கு ஏறியது சிவனுக்கு. "கணவனின் அனுமதி பெறாமல் பெண் வெளியே செல்லக் கூடாது. சொல் நீ சென்றது, நாட்டியம் கற்கவா... அல்லது வேறு..?"

"அனுசுயாவிடம் நீங்கள் பிச்சை கேட்கப் போனீர்களே, அது போலப் போகவில்லை நான்!" கலீரென்று அன்னை சிரித்தார். "புதிய கலையைக் கற்றுக் கொள்ளப் போனேன். மனிதருக்கு விடுதலை அருளுகின்ற புதிய கலை அது".

அய்யனின் ஆண்மைச் செருக்கு தீப்பற்றிக் கொண்டது. எரிந்தார் அவர்!.

"நான் ஆடவன். எங்கும் போவேன்! அது என் இஷ்டம்! நீ பெண், கணவனின் அனுமதி பெற்றுத்தான் வெளியே போக வேண்டும். நாட்டியம் பயில்வதற்கென்றாலும் அதுதான் விதி! அதுமட்டுமல்ல, உன் ஆடை மாறியிருக்கிறது. அலங்காரம் மாறியிருக்கிறது! நம் பண்பாட்டை அழிக்கிறாய் நீ!".

"பண்பாட்டை அழிக்கிறேனா?" அன்னையின் முகத்தில் ஒரே கணம் காளி தோன்றினாள். ஆடை என்பது என்ன? முழுமறைப்பும், முழு சுதந்திரமும், முழு அழகும் தரும் புறப்புனைவு தானே அது? இந்தப் புனைவில் என்ன குறை கண்டீர்கள்?".

"சக்தீ"..... தீ எரிந்தது சிவனின் சொற்களில். "கோபத்தை மூட்டி என்னைக் கொடியவனாக்காதே. அன்று பட்ட பாட்டை அதற்குள் மறந்துவிட்டாயா?"

"எப்படி மறப்பேன்!" புளிப்பாக முறுவலித்தாள். அதை மறக்க முடியாததனால் தானே இத்தனையும்!

"அவ்வளவுக்குப் போய் விட்டாயா?" ஆத்திரத்தில் அய்யனின் நீலமணி விம்மிப்புடைத்தது. "நீ பூலோகத்துக்குப் போனது புது நாட்டியம் கற்றுக் கொள்ளத்தான் என்பது எனக்கு ஏற்கெனவே தெரியும்! கணவனை வெற்றி கொள்வதில் மனைவிக்கு அத்தனை ஆர்வமா? என்ன கற்றுக் கொண்டாலும் உன்னால் என்னை வெல்ல முடியாது. தோல்வி உன் பிறவியிலிருக்கிறது பெண்ணே!"

சட்டென்று கூம்பி விட்டது அன்னை முகம். தன் கையிலிருந்த வெள்ளை ரோஜாவைப் பார்த்தார். எத்தனை ஆசையோடு இந்த ரோஜாவைக் கொண்டுவந்தார் அவர். அய்யனிடம் இதைக் கொடுக்க வேண்டும். "நேசா, பல்லாயிரம் ஆண்டுகள் அடிமைத்தனத்துக்குப் பின் மீண்டும் உலகில் சமத்துவமும் காதலும் மலரத் தொடங்கி விட்ட அதைப் பார்த்த பரவசத்தில் இதோ உன்னைத் தேடி நானும் வந்து கொண்டிருக்கிறேன்! ஆயிரக்கணக்கான ஆண்டு அடிமைத்தனத்துக்குப் பின் மீண்டும் நாம் காதலிக்கத் தொடங்குவோம். ஆம், எங்கே சமத்துவம் மலருகிறதோ, அங்கே தான் காதலும் மலரும்... அந்த அற்புத உணர்வின் சின்னமாக அல்லவா இந்த மலரைக் கொண்டு வந்தேன். அது வாடுகிறதே! உலகம் முழுவதும் மீண்டும் காதலும் பெண்மையும் வாடிப்போகுமே? இன்றும் உன், 'நான் கரைந்து நாம்' ஆகவில்லையா? அன்பே, அதோ கிழக்கே மிதக்கும் புதிய சூரியன் பேசுவது கேட்கவில்லையா? தூய பனிச்சிகரங்களில் தவழும் காற்று பாடுவதைக் கேட்கவில்லையா?"



" சவுக்குக்குப் பதிலாக
மலர்ச் செண்டுகள்....
புதியபோர் முறையைப்
பழகிக் கொள்!
வா
இருவரும் ஆடுவோம்
ஒருவராக! "

பழுக்கக் காய்ச்சிய இரும்பாய்ச் சிவந்துவிட்டது அய்யன் முகம். இமைகளை மூட்டிக்கொண்டு நடு நெற்றியில் புடைத்தது மூன்றாவது கண்.

அன்னையோ தன் மூன்றாவது கண்ணைச் செல்லமாய்ச் சிமிட்டினார் "வா, ஆடவா!"

"நந்திதேவா!" கூச்சலிட்டார் அய்யன். "தட்டடா மேளத்தை! இவள் இன்னும் ஒரு முறை என்னிடம் பாடம் கற்றுக் கொள்ளட்டும்!".

நந்திதேவர் மத்தளத்தை எடுக்க ஓடினார். சிவலோகப் பாடகர்கள் கின்னரங்களையும் மற்றும் கருவிகளையும் தூசுதட்டி தயார் செய்தனர். மற்றுமுள்ளவர்கள் ஆடலுக்கு இடம் விட்டு, முற்றத்தில் வட்டமாய்ச் சூழ்ந்தார்கள்.

தத்தித்தோம்
தகதிமிதோம்
தகதிமி தகதிமி தோம்...

- மத்தளம் முழங்க, கின்னரகங்கள் இசைபாட

தன்பொற்பத் திருக்கழல் கலீரென்று ஒலிக்கத் தரையைத் தட்டி அபய முத்திரை காட்டிப் போட்டியைத் தொடங்கினார் அய்யன்.

தத்தித் தோம்
தகதிமி தோம்
தகதிமி தகதிமி தோம்.
நானே உலகம்
நானே உயிர்கள்
நானே விண்ணும் வெளியும்
நானே யாவும்
என உணர்வீரே
என்னில் எல்லாம்
கரைவீரே!

ஒன்றினில் அனைத்துமே ஒடுங்கிடும் இறுக்கத்தில் தீப்பிழம்பாகச் சுழன்றது அய்யன் உடல்.

திடுமெனக் கருமின்னல் ஒன்று அய்யன் முன்னே துள்ளிக் குதிக்க, அதன் நீலவிழியில் கருணை சுரக்க

'தத்தித்தோம்
தகமிதோம்
தோம் தரிகிட
திமிதோம்'

மயில் போலத் துள்ளித் துள்ளி நடந்தார் அன்னை.

" உலகமும் நானே,
உயிர்களும் நானே
விண்ணும் வெளியுமே நானே
யாவுமே நானே
எனை உணர்ந்தேனே
யாவுமாய் நான் கரைந்தேனே!
அதனால்
சமத்துவம் எழுக,
சவுக்குகள் ஒழிக,
மலர்களைத் தூதராய் விடுக
காதல் மாளிகையின்
கதவுகள் திறக்கக்
கனிந்திடும் பாடலே வருக! "

அனைத்திலும் ஒன்றென உணர்ந்திடும் விரிவில் அன்பெனும் மேகமே பொழிக!

கருணைப் புனல்கண்டு சீறிற்று வெம்மை அனல். 'என்னை அணைக்கப் பார்க்கிறாயா?' காட்டுத் தீயாய்ச் சுழன்றார் அய்யன்.

அவர் பாதங்கள் பறவைகளாயின. நெடிய கைகளோ எரியும் ஆன்மாவின் இறக்கைகளாயின. கணந்தோறும் மாறும் கதிரவனின் சாயல்கள் போல் ஆற்றலின் ஆயிரத்தெட்டுச் சாயல்களும் அய்யனின் முகத்தில் மாறி மாறிக் கொப்புளித்தன.

தீம் தரிகிட தீம் தரிகட
தத்தீம் தரிகிட ததீங்கிட

அய்யன் சுழன்றார். நெருப்புச் சடை முடி எட்டுத் திக்கிலும் பக்கத்துக்கு ஏழாய் பரவிச் சுழன்றது. சுழற்சி வேகத்தில் இளம்பிறை முழுநிலவாய் உருண்டது. தலை சுற்றித்தடுமாறி கங்கை அன்னை கண்ணை மூடிக்கொண்டாள். வாலால் அய்யனின் நீல மணி மிடற்றை இறுக்கியபடி பாம்பும் சுழன்றது.

தீம்தீம் என உடுக்கை ஒலிக்க, ஓ! ஓவென நெருப்பு சிரிக்க, யானைத்தோல் சுழன்று விரிய அய்யன் ஆடியபொழுது, சிகரங்கள் பொடியாயின. நட்சத்திரங்கள் உதிர்ந்து சிதறின. சுடுகாட்டுப் பேய்களெல்லாம் கயிலாயத்தில் குவிந்து கூக்கூவெனக் கூவிக் கூத்தாடின... அந்தக் கூச்சலின் நடுவே அண்ணலின் வலதுகால் செங்குத்தாக மேல் உயர்ந்தது. கால் விரல்கள் செவிக் குண்டத்தைக் கழற்றித் திரும்பவும் பொருத்தின.

"ஆடு! அல்லது அடிமைத் தனத்தை ஒப்புக் கொண்டு அய்யன் முன் முழங்கால் போடு!" ஆடவர் கூட்டம் விண்ணதிரக் கை கொட்டியது. ஆண்மை வென்றது ஆண்மை வென்றது அனைத்திலும் தலையாய் நின்றது!

பெண்களோ மருண்டனர், ஆயிரம் ஆயிரம் ஆண்டுத் துன்பங்கள் கொடுமைகள் ஏக்கங்கள். அவர்கள் முகங்களில் கொந்தளித்தன. படிப்படியாக இப்போதுதான் மூச்சுவிடவாவது சலுகை கிடைத்திருக்கிறது. இதையும் இழந்து மீண்டும் பழைய அடிமை நிலையில் அழிவதா!"வேண்டவே வேண்டாம். அன்னையே! போட்டியிலிருந்து விலகிவிடு! அய்யனிடம் மன்னிப்புக் கோரிவிடு. இன்னும் ஒரு முறை தோற்று நாம் அடிமைப்பட்டால் அதை நம்மால் தாங்க இயலாது! கிடைத்திருப்பதில் திருப்திப்படு. போராட்டத்தை விட்டுவிடு".

அன்னையின் கருப்பு நிலா முகத்தில் குறுநகை அரும்புகிறது. பூப்போலச் சொல்லுகிறார்.

புல்லடிமைத்தனம் புதைந்து போகப் புதுயுகம் பிறந்துவிட்டது..

"பெண்களே அஞ்சாதீர்?"

"கொட்டுங்கள்" கலைஞர்களைப் பார்த்து அவர் கைகள் உயர்ந்தன.

"அய்யன் ஆடிய அதே ஆட்டம். ஆனால் தீ ஆடியதற்குப் பதில் இந்தப் பூ ஆடுகிறது. நயத்துடன் இசையுங்கள். நிறைந்த கனிவுடன் தட்டுங்கள்".

முன்னும் பின்னுமாக நடந்து, பக்கவாட்டிலே நகர்ந்து, திடுக்கெனப் பாதங்களைத் தரையில் தட்டி, பந்துபோல உயர்ந்து அன்னை ஆடியபோது அவருடைய இடதுபாதம் ஆகாயத்தில உயர்ந்தது, பாதத்தின் விரல்களில் ரோஜா மலர். விரல்கள் மலரைக் கூந்தலில் சூடிக் குஞ்சத்தைத் திருத்தின. காலை இறக்காமல் கால் பெருவிரலை ஊன்றிய படி அன்னை பம்பரமாய்ச் சுழன்றபோது அண்ட சராசரங்கள் சுழன்றன. மங்கையரின் ஆர்ப்பாட்டத்தில் புதிய சிகரங்கள் முளைத்தன. விண்ணிலே புது நட்சத்திரங்கள் பூத்தன. நின்ற கோலத்திலேயே அய்யனைக் கனிந்து நோக்கினாள் அன்னை!

"போட்டி நல்லது, அடிமைப்படுத்துதல்தான் அருவருப்பானது. வா, மீண்டும் சங்கமிப்போம். உன்னில் பாதியாக அல்ல. நீயும் நானுமான இரு முழுமைகளாக" அதிர்ந்து போன சிவன் அன்னையைப் பார்த்தார், அன்னையின் ஆடையைப் பார்த்தார். கால்களில் சேலை சுற்றி இடுப்பிலே செருகியிருக்கவில்லை அவர்.

"இது என்ன ஆடை?"

"சுரிதார்!" வானத்தில் எழுந்தது புதிய அசரீரி. பெண்மைக்குச் சுதந்திரம் அளிக்கும் சுதந்திர ஆடை. இனி பெண்மை எந்த ஆட்டமும் ஆடும்; யாரும் வெல்ல முடியாது.

"பெண்ணையும் ஆணையும் சமமாக்கிடும் பேய் ஆடை! கிழியுங்கள் அதை!"

கூச்சலிட்டார் அய்யன். பத்து விரல்களையும் விரித்துக் கொண்டு அன்னை மீது பாயத் தயாரனார்.

"நில்"!

இடிமுழக்கம் போல் ஒரு சத்தம். பாய்ந்து வந்த கருஞ்சிங்கம் அய்யனை முறைத்துக் கொண்டு வாலைச் சுழற்றித் தரையில் அடித்தது.

"அன்னையோடு பூமியில் புது விடுதலை பெற்றவன் நான்.

"அடிமைத்தனம் -

அது எந்த வடிவில் வந்தாலும் அழித்தொழிப்பேன்!" அது கர்ஜித்தது.

"என் வாகனம் காளை எங்கே? அதன் கூரிய கொம்பு எங்கே? குத்தடா இந்தக் கருப்பனை" கூச்சலிட்டார் அய்யன். கருப்புச் சிங்கத்தின் கர்ச்சனையில் அரண்டு, அது கயிலாயமலைக் காட்டுக்குள்ளே எங்கோ ஓடிக் கொண்டிருந்தது என்பதை அறியாமல்.

"தோழனே! சொல், நீ செய்யும் எந்தக் காரியம் என்னால் செய்ய இயலாதது? சமத்துவம் தர இன்னும் ஏன் தயக்கம்!" கொஞ்சினார் அன்னை.

என்ன பதில் சொல்லுவது யோசனையில் ஆழ்ந்தார் சிவன். ★

டாக்டர் உ.வே.சா. பிறந்தநாள் (19-2-1885) நினைவாக

சாமிநாதர் சகாப்தம்!

சோழராஜா

பழம்பெருமை பேசிக்கொண்டிருப்பதில் ஒரு பெருமையும் இல்லை என்றார், மகாகவி பாரதியார். பாருநிகர் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் மூலம்தானே நாம் நமது பழம் பெருமைகளையே உணர்கிறோம்?

"ஆம்" என்றால், அவற்றுள் முக்கால்வாசித் தமிழ் இலக்கியங்கள் இன்றும் நம்மோடு நிலைத்துநிற்க மூலகாரணமானவர் - மகாமகோபாத்தியாய, திராவிட வித்யா பூஷணம், மகாவித்துவான், டாக்டர் - என்றெல்லாம் சிறப்புறப் பேசப்படும் 'தமிழ்த்தாத்தா' உ.வே. சாமிநாதையர் அவர்கள்தான்!

இவ்வாறான இணையற்ற புகழ் உ.வே.சா. அவர்களுக்கு வாய்த்திட மூலகாரணம் என்ன தெரியுமா? சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற ஐம்பெருங் காப்பியங்களையும் - பெருங்கதை, சூளாமணி போன்றவற்றையும் பல்வேறு சங்க இலக்கியங்களையும் - ஊர் ஊராக அலைந்து தேடிப்பிடித்து பதிப்பித்த அந்த அரும்பணிதான்!

'கல்கி' அவர்கள் இட்ட செல்லப் பெயரே தமிழ்த் தாத்தா. அவரது காப்பியப் பதிப்புப் பணியின் தொடக்கமாக அமைவது 1887ல் முதன் முதல் வெளியான 'சீவக சிந்தாமணி' பதிப்போகும். அதைத் தொடர்ந்தே - 1892ல் சிலப்பதிகாரமும், 1894ல் புறநானூறும், 1898ல் மணிமேகலையும், 1924ல் பெருங்கதையும் அரும்பாடுபட்டு வெளியிடப்பட்டன.

'தமிழ் வியாசர்' என்று மூதறிஞர் ராஜாஜி அவர்களால் தனிப்படக் குறிப்பிடப்பட்ட உ.வே.சா. அவர்கள், மாயூரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவராவார்.

அளவு கடந்த புகழ்பெற்ற பின்னாலே, தம் ஆசிரியர் பற்றியோ, குருநாதர் பற்றியோ, தலைவரைப் பற்றியோ, சொல்லிக்கொள்ள விரும்பாதவர்களை இப்போதும் நாம் காண்கிறோம்; ஆனால் இவர் - அந்தவகையோருக்கு நேர்மாறானவர்.

சிறுவயதில் சிதம்பரம் பிள்ளை, கஸ்தூரி ஐயங்கார் போன்றோரெல்லாம் - இலக்கணமும், புராணங்களும் இவருக்கு கற்பித்ததுண்டு. செங்கணம் என்ற ஊரில் சின்னப்பண்ணை ரெட்டியார் என்ற புலவரிடம் யாப்பருங்கலக் காரிகையும் கற்றார் உ.வே.சா. எனினும், தாம் பெரிதும் தமிழறிய வழிகாட்டிய ஆசானைப் பற்றி - தாமே எழுதிய 'என் சரித்திரம்' என்ற நூலின் 27ஆம் அத்தியாயத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்:

'பல காலமாகத் தவம்புரிந்து ஒரு தெய்வ தரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாசகனைப் போல நான் இருந்தேன். அவனுக்குக் காட்சியளிக்கும் அத்தெய்வம்போல் அவர் வந்தார்'...

- இது மட்டுமல்ல; மேலும் அதுபற்றி அவர் எழுதியுள்ளதாவது:

'ஒரு நல்ல காரியத்துக்கு எத்தனைத் தடைகள் உண்டாகின்றன? உறவினர்களில் பலர் நான் சமஸ்கிருதம் படிக்க வேண்டும்; பாகவத இராமாயண உபந்நியாசங்கள் செய்து பிரபலமாக விளங்கவேண்டும் என்று அறிவுரை கூறினர்; வேறு சில நண்பர்களோ, நான் ஆங்கிலம் கற்று, பெரிய உத்தியோகம் பார்த்துப் பொருள் ஈட்ட வேண்டும் என்று விரும்பினர். என் தந்தையோ நான் சங்கீதத்தில் முதன்மை பெறவேண்டும் என்று எண்ணினார்; அதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

'ஆனால், எல்லாருடைய விருப்பத்துக்கும் மாறாக என் உள்ளம் இளமையிலிருந்தே தமிழ்த் தெய்வத்தின் அழகிலே பதிந்துவிட்டது. தமிழ்த்தாயின் திருவருளைப் பெறவேண்டும் என்ற அவா பெருகியது. சமஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு இவற்றுள் ஒன்றேனும் என் மனத்தைக் கவரவில்லை. சில சமயங்களில் அவற்றில் வெறுப்புக்கூட வளர்ந்தது. சங்கீதம் என் தந்தை - தாய் வழியில் பரம்பரைத் தொடர்பு பெற்றிருந்ததால், அதில் மட்டும் கொஞ்சம் ஆசை இருந்தது. என் தமிழார்வத்தைக் காட்டிலும் சங்கீத ஆசை குறைவுதான். 'தமிழ், தமிழ், தமிழ்' என்ற உணர்வே என் உள்ளத்தில் பூரணமாக நிறைந்திருந்தது. அதன் ஒரு மூலையில் சங்கீதம் இருந்தது. எந்தச் சமயத்திலும் அந்தச் சிறிய இடத்தையும் கவர்ந்து கொள்ளத் தமிழ் காத்திருந்தது. அதற்கு வாய்ப்பாக அமைந்தது பிள்ளையவர்கள் தரிசனம்'.

- என்றே மிகவும் தெளிவாக அதுபற்றி விவரித்து எழுதியிருக்கிறார்.

உ.வே.சா அவர்களுக்குப் பெற்றோர் வைத்த பெயர் 'வேங்கடராமன்' என்பதாகும். அது அவர் மூதாதையர் பெயர் ஆகையால், வீட்டில் 'சாமா' என்றே சுவாமிமலையில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானின் பெயரால் செல்லமாக அழைக்கப்பட்டார். 'சாமா' என்பது சாமிநாதன் என்ற பெயரின்

வியத்தகு வெளியீடுகள்

'தமிழ்த் தாத்தா' உ.வே.சா. அவர்கள் முதன்முதல் பதிப்பித்தது சீவக சிந்தாமணி; முதன் முதல் உரையெழுதி வெளியிட்டது மணிமேகலை; கடைசியாகப் பதிப்பித்தது 'மணிமேகலை ஆராய்ச்சி'.

இவற்றுக்கிடையே - புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, ஐங்குறுநூறு, திருவாரூர் தியாகராஜப் பெருமானின் திருவிளையாடல்கள் (360ல் கைக்குக் கிடைத்த) 14 லீலைகள், திருக்காளத்தி புராணம், வேம்பத்தூரார் திருவிளையாடல் புராணம், கந்தபுராணம், திருத்தணிகைப் புராணம், தமிழ்விடு தூது, குறுந்தொகை, குமரகுருபரர் பிரபந்தங்கள் போன்ற பல மூலச்சுவடிகளையும் அங்கிங்கெனாதபடி எங்கும் அலைந்து கண்டுபிடித்துப் பதிப்பித்துப் பெருமை பெற்றார்.

சுருக்கம் என்பதால் - "இனி நான் உன்னைச் சாமிநாதன் என்றே அழைக்கப்போகிறேன்" என்று ஒரு நாள் அவர் குருநாதர் கூற - அப்பெயரே, அதன் பின்னர் இணையற்ற புகழோடு நிலைத்துவிட்டது.

இவருடைய இல்லத்தின் பெயர் 'தியாகராஜ விலாசம்' என்பதாகும். இந்தப் பெயர்க் காரணம் என்ன தெரியுமோ? முதன் முதல் உ.வே.சா. அவர்கள் உருப்படியான வேலைவாய்ப்பைப்பெற மூலகாரணமாக இருந்தவர் வித்துவான் தியாகராஜ செட்டியார் அவர்கள்தான். கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த அவர், சாமிநாதனின் தமிழ்ப்புலமை பாராட்டித் தம் இடத்தையே அவருக்கு விட்டுக் கொடுத்து விட்டுப் பதவி விலகிக் கொண்டார். இத்தனைக்கும் அந்த வேலைக்கு மாதச் சம்பளம் ரூ.50 மட்டும்தான்!

சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தினுள் - இப்போதும் நாம் அடக்க ஒடுக்கமாக நிறுத்தப்பட்டுள்ள சாமிநாதரின் திருவுருவச் சிலையினைக் காண்கிறோம்; அடடா! அவருடைய அந்தக் கால்கள்தாம் - தீயினுக்கும், கடல் கோளுக்கும் பலியாகிவிடாதிருந்த பழைய ஓலைச் சுவடிகளைத் தேடி, ஐம்பதாண்டு காலத்திற்கு மேல் அயராமல் நடந்தும், பலன் கருதாமல் பயணம் தொடர்ந்தும் அன்னைத் தமிழுக்கு நலம் சேர்த்திருக்கின்றன! அவர் தன்னலம் கருதாமல் எடுத்துக் கொண்ட அந்த அரிய முயற்சியால்தான் பல பேர் வீட்டில் செல்லரித்துக் கிடந்த - கறையான் பிடித்தது போக மிஞ்சியிருந்த - பரண்மேல் பயனற்றதெனக் கட்டிப் போடப்பட்டிருந்த பழைய பைந்தமிழ் ஓலைச் சுவடிகளெல்லாம் புத்துயிர் பெற்று, நம் தமிழன்னையின் புகழ் மகுடத்து ஒளிக்கற்களாகச் சுடர் வீசுகின்றன.

தமிழன்றிப் பிறமொழி கற்றிட அவ்வளவாக விரும்பாத தகைமையாளர் உ.வே.சா.அவர்கள். என்றாலும்கூட - அகநானூறு, புறநானூறு, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்றவற்றைத் திருத்தமுறப் பதிப்பிப்பதோடு மட்டும் நின்றுவிட்டாரில்லை; ஜைன மத நூலையும், பௌத்த மத நூலையும் கூட ஆய்ந்தறிந்து - அம் மதத்தாரும் 'இவர் அறிஞரே' என்று சம்மதிக்கும் வகையில் பதிப்பித்து வெளியிட்டார்.

இளமையிலேயே மரபுக்கவிதை இயற்றும் திறனும், இசைஞானமும் அமைந்திடப் பெற்றவரான உ.வே.சா.அவர்களுக்குத் திரிகூடராசப்பக் கவிராயரின் 'குற்றாலக் குறவஞ்சி' மிகப் பிடித்திருந்தது; அதேபோல் தேவாரத் திருமூர்த்திகளான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடிய தேவாரத்தையும் இசை பிறழாமல் இசைக்கத் தெரிந்திருந்தது.

வாழ்ந்ததும், வளர்ந்ததும் உத்தமதானபுரத்திலும், கும்பகோணத்திலும்தான் என்றாலும் - உ.வே.சா. அவர்கள் வேங்கடசுப்பையா - சரசுவதியம்மாள் மகனாக 19.2.1855ல் சூரியனூர் (தஞ்சை மாவட்டம்) என்கிற சிறுகிராமத்தில் உள்ள தாயார் வீட்டில்தான் பிறந்தார்.

கதாகலட்சேபம் செய்யும் வழக்கமுடையவராக இருந்த தந்தையார், தம் பிள்ளையாண்டானின் இசைப்புலமையை - தமிழ்த்திறத்தை ஊக்குவிப்பவராகவே அமைந்தார்.

பிற்காலத்தில், அவர் மூப்புற்று அதனால், பிரசங்கம் மூலமான வருவாய் குறைந்தபோது, உ.வே.சா.அவர்களையும் உடன் அழைத்துச் சென்று - தனது நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்தது உண்டு.

அக்கால வழக்கப்படி, மதுராம்பாள் என்ற சிறுமியைச் சாமிநாதருக்கு 13 வயது நடக்கும்போதே 16.6.1868ல் மணம் முடித்து வைத்தார்கள் பெற்றோரும் உற்றார் உறவினரும்.

பிற்காலத்தே இவருக்கு ஆசிரியராக வாய்த்த மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தின் அவைக்களப் புலவராக இருந்தவர்; திருசிரபுரத்தில் பிறந்து, மாயூரத்தில் வளர்ந்தவர் ஆவார்.

அவர் மறைவுக்குப் பின் ஆதீனகர்த்தர் சுப்பிரமணிய தேசிகர் அன்பால் அங்கேயே ஆசிரியராக இருந்து நல்ல தொடர்பு கொண்டிருந்தார் சாமிநாதர். அப்போது கும்பகோணத்திற்கு முன்சீஃபாக வந்தார் சேலம் இராமசாமி முதலியார் என்பார். சிறந்த தமிழறிஞரான அவரிடம் ஐயரை அறிமுகம் செய்து வைத்தார் தேசிகர். இது நடந்தது 21.10.1880ல், இந்தச் சந்திப்பே, சாமிநாதரின் வாழ்வில் அரியதோர் திருப்பத்தை உண்டாக்கியதாகும்.

அதுவரை, சமண நூலும், ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றுமான சீவகசிந்தாமணியைப் படித்திராத சாமிநாதர், அவர் சந்திப்பிற்குப் பின்னாலேதான், அதைப் படிக்க வேண்டும்; எப்பாடு பட்டாவது அதுபோன்ற அரிய ஏடுகளைத் தேடிப்பிடித்துப் பதிப்பிக்கவேண்டும் என்கிற உந்துதலுக்கே ஆட்பட்டார்.

அவ்வாறே, திருத்தக்க தேவர் எழுதிய அதனைப் படாத பாடுபட்டுப் படித்தும் பதிப்பித்தும் 'பதிப்புத் துறையின் வழிகாட்டி' என்கிற பெரும் புகழும் பெற்றார். பதிப்புத்துறையில் புதியதோர் சகாப்தத்தையே உருவாக்கினார். ஆதீனத்தாரும் முன்சீஃப் இராமசாமி முதலியாரும் இதற்குப் பொருளுதவினர்.

பழைய சுவடிகளைத் தேடி, தம் சொந்தச் செலவிலேயே பல மாவட்டங்களுக்கும், ஊர்களுக்கும் பயணம் போனார் சாமிநாதர். பல கிராமங்களுக்குக் கால்கடுக்க நடந்து சென்றதும் உண்டு. சிலபேர் தம்மிடமிருந்த சுவடிகளை இனாமாக அவருக்குக் கொடுத்து உதவினர்; சிலபேர் பொருளைப் பெற்றுக்கொண்டு அளித்தனர்; இன்னும் சிலர், பணத்தை வாங்கிக்கொண்டு, 'அனுப்பிவைக்கிறேன்' என்று கூறி ஏமாற்றி விட்டனர். வேறு சிலர் எங்கே - யாரிடம் சுவடி கிடைக்கும் என்று விவரம் கூறி, அன்போடு வழிகாட்டினர்.

அப்படிச் சென்ற இடங்களில் கிடைக்கும் சுவடிகளில் சில, பயனுடையதாக இருக்கும்; சில சுவடிகள் செல்லரித்தும், கரையான் பிடித்தும் இருக்கும்; அரியது கண்டாற் போல் அவற்றைக் கண்டும் ஆனந்திப்பார் சாமிநாதர். சில இடங்களில் "போன ஆடிப் பெருக்கின் போதுதான் ஆற்றிலே விட்டோம்", "சென்ற போகியின் போது தான் தீயிலே போட்டோம்; குளிர் காய்ந்தோம்", "அடுப்பெரித்து விட்டோம்"...என்றெல்லாம் பதில் கிடைக்கும்போது - ஏதோ பெரும் புதையலையே இழந்துவிட்டது போலக் கலங்கிப்போவார் சாமிநாதர்.

அவ்வாறான சுவடி தேடும் முயற்சியின் போது தான், குன்றக்குடி மடத்தில் இருந்து - சிலப்பதிகார மூலமும், மணிமேகலை மூலமும் கிடைத்தது! முதலைப்பட்டியில் புறநானூறு உரை கிடைத்தது. மற்றவைகளும் இவ்வாறே பல்வேறு ஊர்களிலிருந்து கிடைத்தன.

ஒவ்வொரு சுவடியையும் தக்க திருத்தம் செய்து - அது தொடர்பாகக் கிடைத்த மற்ற சுவடிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தமக்கே சரி என்று பட்டால்தான் பதிப்புக்கே தருவார் சாமிநாதர்.

தமக்கு விளங்காதவற்றை எப்படியாவது சரிசெய்து வெளியிடும் குணம் அவரிடம் இருந்ததில்லை. பல கற்றறிவாளர்களுக்கு அதுபற்றி விளக்கம் கேட்டு எழுதுவார். சரியான விளக்கத்தை யார் அளித்தாலும் ஏற்றுக்கொண்டார் சாமிநாதர்; அப்படிப்பட்ட விளக்கம் கிடைக்காத பட்சத்தில் - 'இறையருள் பாலித்தால் தெளிவாகாத பகுதிகளை அறிந்தவர்களிடம் கேட்டு அடுத்த பதிப்பில் வெளியிடுகிறேன்' என்று குறிப்பிடும் பெருந்தன்மை அவருக்கு இருந்தது.

பெரும்பாலும் அவருடைய புத்தகப் பதிப்புப் பணி யாவும் சென்னையிலேயே நடைபெற்றது.

அதற்காகத் திருவாடுதுறை, குன்றக்குடி, திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர்களும், பாஸ்கர சேதுபதி பாண்டித் துரைத் தேவர் போன்றோரும், பிறரும் சாமிநாதருக்கு நிதியுதவி செய்தது உண்டு; அது தவிரத் தம் உழைப்பு மட்டுமன்றிக் கைப்பொருளையும் அதுவும் போதாத நிலையில் கடன்பெற்றும் தம் நோக்கம் நிறைவேறப் பயன்படுத்தத் தயங்கினாரில்லை!

ஓலைச் சுவடிகளைப் புத்தகங்களாகப் பதிப்பிக்க இவர் படும் பாட்டை உணர்ந்த யாழ்ப்பாணத் தமிழறிஞர் சி.வை.தாமோதரன்பிள்ளை - "சீவக சிந்தாமணியை என்னிடம் கொடுங்களேன்; கொழும்பில் பொருட்செலவிட்டுப் பதிப்பிக்க ஒருவர் தயாராக இருக்கிறார்" என்று நேரில் வந்து கேட்டபோதும் - சாமிநாதர் அப்படித் தர மறுத்து விட்டார். தமிழ் மேம்பாட்டுக்காக எத்தகைய சிரமத்தை ஏற்கவும் இவர் தயாராக இருந்ததே அதற்குக் காரணம். சி.வை.தாமோதரனாரும், சிறந்த பதிப்பாளரேயாவார்.

இவ்வாறாக அன்னைத் தமிழுக்கு அரும்பணி புரிந்துவந்த உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள், 1903ல் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராக இருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகர் அருளாசி பெற்று, தம் பதிப்புப் பணிகளுக்கும் வசதிப்படுமென்று சென்னைக்கு வந்து சேர்ந்தார். சென்னை மாநிலக் கல்லூரித் தமிழாசிரியர் பதவி பெற்றார். திருவட்டீசுவரன் பேட்டையில் மாதம் 20 ரூபாய் வாடகைக்கு ஒரு வீடு பிடித்தார்; பிறகு அதையே சொந்தமாக்கிக் கொண்டார். அந்த வீடுதான் மேலே நாம் குறிப்பிட்ட 'தியாகராச விலாசம்'.

1906ல், 'மகாமகோபாத்யாய' என்கிற சிறப்புப் பட்டத்தைத் தமிழக அரசு அவருக்கு அளித்தது. அப்போது, வேல்ஸ் இளவரசர், குடும்பத்தோடு சென்னை வந்திருந்தார். அவர் வருகையையொட்டி அறிஞர் பலருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன; சாமிநாதருக்கும் தங்கத் தோடா ஒன்று அளிக்கப்பட்டது.

குறையும் நிறையும்

வித்வான் தியாகராச செட்டியார், தம் இடத்தில் அமரத் தகுதியானவர் உ.வே.சா. ஒருவரே என்றெண்ணி, அவரைப் பதவியில் அமர்த்தி விட்டுத்தான் குடந்தைக் கல்லூரியினின்றும் ஓய்வு பெற்றார்.

அவருடைய கடைசிக் காலத்தில், போய்ப் பார்த்து நலம் விசாரித்தார் உ.வே.சா. "உம்முடைய சீவக சிந்தாமணி முதல் பதிப்பைப் பார்த்தேன்; அற்புதம்; அது வெளிவரத் துணைநின்றோர் பற்றியெல்லாம் நீர் குறிப்பிட்டிருந்ததைப் படித்தேன்; ஆனால் அதில் என் பெயரை விட்டு விட்டீரே..." என்றார் சிறிது வருத்தத்தோடு.

அவர் சுட்டிக்காட்டிய தவறுக்கு வருத்தம் தெரிவித்த உ.வே.சா.. அந்தக் குறைபாட்டை ஈடுசெய்யும் விதத்தில், சென்னையில் முதன்முதல் தாம் வாங்கிய இல்லத்திற்குத் 'தியாகராஜ விலாசம்' என்று பெயரிட்டார். 'ஐங்குறுநூறு' பதிப்பை அவர் பெயருக்கு அர்ப்பணித்தார்; குடந்தைக் கல்லூரியில் பி.ஏ. தமிழ் பயிலும் சைவ மாணவர் ஒருவருக்கு அவர் பெயரால் ஆண்டுதோறும் ரூ.48/. உதவி வந்தார்!

மாநிலக் கல்லூரி வளாகத்தில் அதன் சார்பாக நடைபெற்ற பாராட்டு விழாவில் மகாகவி பாரதியாரும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது; அது மட்டுமல்ல; சாமிநாதரின் தமிழ்த்தொண்டைப் போற்றி அங்கேயே அவர் உணர்ச்சி வசப்பட்டு எழுதிய மூன்று பாடல்களில் ஒன்று வருமாறு:

'அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி அரியாதார்;
இன்றெம்மை ஆள்வா ரேனும்
மன்னியசீர் மகாமகோ பாத்தியாயப்
பதவியினைப் பரிவின் ஈந்து
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா
தன்றனக்குப் புகழ்செய் வாரேல்
முன்னிவனப் பாண்டியர்நாள் இருந்திருப்பின்
இவன்பெருமை மொழிய லாமோ!'

- 1932ல், இவருக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் (டி.லிட்.) பட்டம் வழங்கியது.



ஓ, அந்தக் கால்கள்!

திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி ஆகிய மூன்று நூல்களையும் ஒன்று திரட்டி "பன்னிரு திருமுறைகள்" என்ற புதிய நூலாக வெளியிட்டார் செங்கல்வராயப் பிள்ளை. அந்த நூலின் பிரதியை உ.வே. சாமிநாதையரிடம் கொடுத்தார்.

நூலை ஆழ்ந்து படித்துப் பார்த்த உ.வே.சா. திடீரென செங்கல்வராயப் பிள்ளையின் கைகளை எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். பதறிப் போனார் செங்கல்வராயப் பிள்ளை. "என்ன காரியம் செய்கீறீர்கள்" என்று அதிர்ந்துபோய்க் கேட்டார்.

உ.வே.சா. நிதானமாகச் சொன்னார்: "முருகனுடைய பெருமைகளை ஆராய்ந்த கைகளாயிற்றே. அதனால் தான் அந்தக் கைகளை என் கண்களில் ஒற்றிக் கொண்டேன்".

நெகிழ்ந்துபோன செங்கல்வராயப் பிள்ளை அவரிடம் இருந்து விடை பெற்றார். நாலடி முன்னே சென்றவர், திடீரென நின்று திரும்பவும் உ.வே.சாமிநாதையரிடம் வந்தார். நெடுஞ்சாண்கிடையாகப் படுத்து அவரது கால்களைத் தம் கண்களால் ஒற்றிக் கொண்டார்.

இம்முறை பதறியவர் உ.வே.சா. "பிள்ளைவாள், என்ன காரியம் செய்கிறீர்கள்" என்று கேட்டார்.

"சங்க கால இலக்கியங்களைத் தேடித்தேடி அலைந்த கால்களாயிற்றே" என்று கண்ணீர் மல்கக் கூறினார் பிள்ளை.

இந்திய விடுதலைப் போரில் சிறைவாசம் ஏற்றிருந்த தமிழறிஞருமான வ.உ.சிதம்பரனாரும், திருக்குறள் பற்றிய தம் ஐயப்பாடு பற்றி விளக்கம் கேட்டுச் சாமிநாதருக்கு மடல் எழுதியதுண்டு.

1919ல் மாநிலக் கல்லூரித் தமிழாசிரியர் பதவியிலிருந்து சாமிநாதர் பணிஓய்வு பெற்றார். அச்சமயத்தில் சென்னைக்கு வந்திருந்த கவி ரவீந்திரநாத் தாகூர், இவரைப் பற்றி ஏற்கெனவே அறிந்திருந்ததால், அவர் இல்லத்திற்கே சென்று பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்ற காலத்தில் - ராஜா அண்ணாமலை செட்டியார் அங்கே நிறுவிய மீனாட்சி தமிழ்க்கல்லூரிக்குச் சாமிநாதரையே முதல்வராக நியமித்தார். ஆனால், உடல்நலக் குறைவு காரணமாக மூன்றாண்டு காலத்திலேயே அதிலிருந்து விலகி, சென்னைக்கு வந்து சேர்ந்தார் இவர்.

அந்நாளில் தொடங்கப்பட்ட 'கலைமகள்' பத்திரிகையில, அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்கப் புராணங்கள், இலக்கியம் பற்றியெல்லாம் எழுதிவந்தார் சாமிநாதர். 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் "என் சரித்திரம்" என்ற பெயரில் தன் வரலாறும் எழுதிடலானார்.

1937ல் சென்னைக்கு வந்திருந்த காந்தியாருக்குத் தமிழில் இவரெழுதிய வரவேற்புரையே, இந்தியில் மொழி பெயர்த்துத் தரப்பட்டது. அதைப் படித்துணர்ந்த காந்தியடிகள், சாமிநாதரைப் பெரிதும் புகழ்ந்தார்.

1942 ஜனவரியில், கட்டிலிலிருந்து தவறிக் கீழே விழுந்ததால் காலில்பட்ட பலத்த காயத்தால் உடல் நலிவுற்றார் நமது உ.வே.சா.அவர்கள். இரண்டாம் உலகப்போர் நடந்து வந்த வேளையாதலால், சென்னைக் கடற்கரையருகிலும் ஒரு குண்டு விழுந்தது. மக்கள் அதனால் பெரும் பதற்றமடைந்தனர். இதனால் அவரைச் சென்னையிலிருந்து திருக்கழுக்குன்றத்திலே,திருவாவடுதுறைமடத்திற்குச்சொந்தமாயிருந்தஒருகட்டடத்திற்குக் கொண்டுபோய் வைத்துச் சிகிச்சையளித்தார்கள்; பலனில்லை; பைந்தமிழ் வளர்ச்சிக்கு--குறிப்பாகப் பதிப்புத் துறைக்கு முன்னோடியாக இருந்து தனியொரு சகாப்தத்தைத் தோற்றுவித்த 'தமிழ்த் தாத்தா' உ.வே.சாமிநாதையர் அவர்கள் 28.4.1942 அன்று தமது 87ஆம் வயதில் வளையாபதியையும், குண்டலகேசியையும் தேடிப் பதிப்பிக்க இயலவில்லையே என்ற கவலையோடு, தமிழ்த்தாயும் கலங்கிடத் தம் கண் மூடிவிட்டார்.

அதற்குப் பின்னாலே, அவருடைய மகன் கல்யாணசுந்தரத்தின் கோரிக்கையை ஏற்று - திருமதி ருக்மணி அருண்டேல் அவர்கள் உ.வே.சா. பெயரால் சென்னை பெசண்ட் நகரில் உள்ள தமது கலாசேத்ராவில் உருவாக்கிய நூலகத்தில், பதிப்பிக்கப்படாமல் நின்றுபோன மற்ற 939 சுவடிகளையும், குறிப்புகளையும் அடையாறு பிரம்மஞான சபையின் ஒரு பகுதியில் வைத்துப் பாதுகாத்து வருகிறார். இப்போது அங்கே 2123 ஓலைச்சுவடிகளும், 2,203 புத்தகங்களும் உள்ளன. மத்திய அரசும், மாநில அரசும் 'டாக்டர் உ.வே.சா.நூலகத்திற்குப் பேருதவி புரிந்துவருகின்றன.

சென்ற ஆண்டில் அங்கே நிறுவப்பட்ட டாக்டர் உ.வே.சாமிநாதையர் திருவுருவச் சிலை அமைப்பிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கினார். அவர் பெயரால் அமைந்த நூலகத்திற்கு அளிக்கப்பட்டு வந்த ரூ.60 ஆயிரம் மான்ய நிதியுதவியை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தியும் உத்தரவிட்டார்.

தமிழுள்ளவரை - தமிழ்ப் பதிப்புலகம் உள்ளவரை உ.வே.சா. அவர்களின் பெயரும் புகழும் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்!

பாட்டுப் பரீட்சை

குடந்தைக் கல்லூரியில் 1880ல் தமிழாசிரியர் பணிக்கென உ.வே.சா. அவர்கள் சென்றபோது, சீனிவாச ஐயர் என்ற ஆங்கில ஆசிரியர் ஒருவர், அவருக்கோர் சோதனைத் தேர்வு வைத்தார்.

"மகாவித்துவானிடம் நீங்கள் முதலில் படித்தீர்கள்; அடுத்து நான் அவரிடம் படித்திருக்கிறேன். அதனால் நாம் அண்ணன் தம்பி உறவாகிறோம்; எனவே, அண்ணனைப் போன்ற தாங்கள் தங்கள் வேலையை நான் பெற உதவவேண்டும் என்ற கருத்தில் ஐந்து நிமிடத்திற்குள் ஒரு பாடலைப் பாட முடியுமா?" என்று கேட்டார்.

அதற்குச் சம்மதித்த, சாமிநாதர், நான்கு நிமிஷம் இருபது வினாடியில் பாடிய பாடல் இது:

'வாய்ந்தபுகழ் படைத்திலங்கு மீனாட்சி
சுந்தரநா வலவன் பாலே
ஏய்ந்ததமிழ் ஆய்ந்தமுறைக் கியைவுறநீ
இதுகாறும் இனிதின் வேய
ஆய்ந்தவள நகர்க்குடந்தைக் காலேஜில்
நின்னிடமெற் களித்தல் நன்றே
வேய்ந்ததமிழ் முதல்புலமைத் தியாகரா
சப்பேர்கொள் மேன்மை யோனே!'

★ ★ ★



சின்னச் சின்ன இழை பின்னிப்பின்னி வரும் சித்திரக் கைத்தறி

உண்பது, உடுப்பது, உறைவது சார்ந்த தொழில்களில் விவசாயத்திற்கு அடுத்தபடியாகப் பல துறைக்கு வேலைவாய்ப்பு அளித்து வரும் தொழில் கைத்தறித் தொழிலாகும். 1950-60ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் சுமார் 5.5 இலட்சம் கைத்தறிகளும், சற்றொப்ப 20 இலட்சம் கைத்தறியாளர்களும் இத் தொழிலை நம்பி வாழ்ந்துவந்தனர். காலப்போக்கில் ஆலைகளின் கடும் போட்டியும் விசைத்தறியின் வெகுவான வளர்ச்சியும் மக்களின் ரசனையில் ஏற்பட்ட மாற்றங்களும் காலவோட்டத்திற்கேற்ப, கைத்தறித் துணி வடிவமைப்புகளில் விரிவான மாற்றங்களைத் தேவையான அளவிற்கு செய்யாமையாவும், கைத்தறித் தொழில் தளர்வுறத் தொடங்கியது.

தற்பொழுது தமிழகத்தில் உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில், கூட்டுறவின்கீழ் 3.68 இலட்சம் கைத்தறிகள் கொண்ட 1,256 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் 50 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. கைத்தறிச் சங்கங்களில் பருத்தி, பட்டு, பாலியெஸ்டர் செயற்கைப் பட்டுப் போன்ற பலவிதமான நூல் வகைகளைக் கொண்ட துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கூட்டுறவு அமைப்பிலேயே விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்னும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்றும் வகைப்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. துணியின் வகையைப் பொறுத்து சங்கங்களின் எண்ணிக்கை பின்கண்டவாறு உள்ளன:

1. பருத்தி	-	1031
2. பட்டு (83)	-	83
3. தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்	-	136
4. கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்	-	6
		1256



கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான அனைத்துப் பருத்தி நூல் வகைகளும் மாநில கூட்டுறவுச் சங்கத்தில் நூல் விற்பனை நிலையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளினால் ஆண்டிற்கு 65000 பேல்கள் சிட்ட நூல் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றில் பெருவாரியான அளவிற்குக் கூட்டுறவு நூற்பாலைகள் மாநில சங்கத்திற்கு, கைத்தறி இயக்குநர் அவர்களின் ஒதுக்கீட்டு ஆணைகளின்படி விநியோகிக்கப்படுகின்றன. பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் தேவைப்பட்டியலை ஒருங்கிணைத்து நூல் தேவையில் 'கோ-ஆப்டெக்ஸ்' முன்கூட்டியே இயக்குநருக்குத் தெரிவிக்கிறது. அதற்கேற்பக் கூட்டுறவு நூற்பாலைகள் வாரியாகவும், நூல் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன.

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களும், தேவையான பட்டு நூலினை அரசு பட்டு வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டிலுள்ள டான்சில்க் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்கின்றன. அரசு ஆணையின்படி பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான பட்டினை மேற்சொன்ன டான்சில்க் நிறுவனத்திடமிருந்து மட்டுமே பெறமுடியும். மாதம் ஒன்றுக்குப் பட்டுச் சங்கங்களின் பட்டுத் தேவை சுமார் 20,000 கிலோவாகும். ஆண்டு ஒன்றுக்கு 2.40 இலட்சம் கிலோ பட்டு கொள்முதல் செய்யப்படுகின்றன. பட்டுச் சங்கங்களின் மற்றொரு மூலப்பொருளான ஜரிகை அரசு நியமித்துள்ள மத்திய ஜரிகைக் கொள்முதல் குழுவின் மூலமாக விலை நிர்ணயிக்கப்பட்டு, பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் கொள்முதல் செய்யப்படுகின்றன. இக்குழு மாதம் ஒருமுறை கூடி அந்தந்த மாதத்தின் தேவைக்கேற்ப மும்பை மார்க்கெட்டின் தங்கம் மற்றும் வெள்ளி விலையினை அடிப்படையாகக்கொண்டு விலையினை நிர்ணயம் செய்கிறது. தமிழகத்தில் அனைத்து பட்டுக்கூட்டுறவுச் சங்கங்களின் மாதாந்திரத் தேவை சுமார் 20,000 முதல் 25,000 மார்க்குகள் (ஒரு மார்க் என்பது 242 கிராம் கொண்ட 2600 மீட்டர் நீளமுள்ளது) பொன்னிழை. அதில் அரசு நிறுவனமான (காஞ்சீபுரம்) தமிழ்நாடு ஜரிகை ஆலை மாதம் ஒன்றுக்கு 3,500 மார்க்குகள் உற்பத்தி செய்து சங்கங்களுக்கு வழங்கிவருகின்றது. மிகுதி ஜரிகைத் தேவை முழுவதும் மேற்குறிப்பிட்ட கமிட்டியினால் அங்கீகரிக்கப்பட்ட சூரத்திலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

அனைத்து கூட்டுறவுச் சங்கங்களிலும் பருத்தியில் சேலை, வேட்டி, லுங்கி, துண்டு, கைக்குட்டை, சிட்டத்துண்டு, தலையணை உறை, திரைச்சீலை, ஜமக்காளம் போன்ற துணி வகைகளும் பட்டு வகையில் சேலை, வேட்டி மற்றும் அங்கவஸ்திரம் ஆகியனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

நெசவாளர்கள் பலர் சொந்தத் தறியில்லாத காரணத்தால் கூலிக்காகத் தறிமுதலாளிகளின் தறிகளில் வேலை செய்கிறார்கள். இவர்களது நிலைமையை மாற்ற, அரசு தொழிற்கூட அமைப்பில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கியது. இத்தகைய சங்கங்களில், தறி மற்றும் நெய்வதற்கு நூல் ஆகியன சங்கத்தின் மூலம் நெசவாளர்களுக்கு வழங்கப்படுகிறது. மகளிருக்கான தொழிலியல் திட்டத்தினையும் சேர்த்து, தமிழ்நாட்டின் தற்போது 136 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு, அங்கத்தினர்கள் பயன் அடைந்து வருகின்றனர்.

வேடந்தாங்கல் - திருவண்ணாமலை
சுற்றுலாத்துறை சிறப்பு ஏற்பாடு

சென்னையிலிருந்து 85 கி.மீட்டர் தொலைவிலுள்ள வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்குப் பருவ காலங்களில் பாகிஸ்தான், பங்களாதேஷ், கனடா, அமெரிக்கா என்று வெவ்வேறு நாடுகளிலிருந்து 20,000க்கும் மேற்பட்ட பறவைகள் இறை தேடியும், இனப்பெருக்கம் செய்யவும் வருகின்றன. இந்தப் பறவைகள் சரணாலயத்தைக் கண்டு களிக்கப் போதுமான சுற்றுலாப் பேருந்துகள் இல்லை.

எனவே, சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காகவும் அவர்கள் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தை எளிதில் கண்டுகளிக்கவும் சனி மற்றும் ஞாயிறு நாட்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒரு, சுற்றுலாவைத் தொடங்குகிறது. இதற்குக் கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ.140,காலை 8.00 மணிக்குத் தொடங்கும் இந்தச் சுற்றுலா கிஷ்கிந்தா மற்றும் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் சென்றுவிட்டுச் சென்னைக்கு இரவு 7.00 மணியளவில் திரும்பும்.

அண்ணாமலை கிரிவலம்

சென்னையிலிருந்து 185 கி.மீட்டர் தூரத்திலுள்ள திருஅண்ணாமலைக்குப் பௌர்ணமி அன்று மட்டும் கிரிவலம் வருவதற்காக ஏராளமான யாத்திரிகர்கள் திருவண்ணாமலை செல்கின்றனர். எனவே, எளிதில் யாத்திரிகர்கள் பௌர்ணமி தினத்தன்று கிரிவலம் வருவதற்கு ஏற்ப, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் ஒரு சுற்றுலாவைத் தொடங்கிறது. இதற்குக் கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ.150.இந்தச் சுற்றுலா பௌர்ணமி அன்று மதியம் 2.30 மணிக்குச் சென்னையிலிருந்து தொடங்கும். திருவண்ணாமலையில் கிரிவலம் சென்ற பிறகு, விடியற்காலை சென்னையை மீண்டும் அடையும்.

ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டம்

கிராம அடிப்படையிலான பரந்த அணுகுமுறையாகக் கிராமங்களைத் தத்தெடுக்கும் திட்டத்தினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் போதிய அடிப்படை வசதிகளும், சாலை வசதிகளுமில்லாத மிகவும் பின்தங்கிய நிலையிலிருக்கும் கிராமங்களைத் தத்தெடுத்து அக்கிராமங்களில் கைத்தறி மற்றும் மற்ற ஒட்டுமொத்த வளர்ச்சிக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதுகாறும் 13 (பதிமூன்று) கிராமங்கள் தத்து எடுக்கப்பட்டு, அக்கிராமங்களிலும் வசிக்கும் நெசவாளிகள் மட்டுமின்றி அனைத்துத் தரப்பினரும் பயனடைந்துள்ளனர். தற்போது இத்திட்டம், மைய அரசின் செறிவுத்திட்டத்துடன் இணைக்கப்பட்டு, மாநில அரசும் பங்கேற்று நெசவாளப் பெருமக்களுக்குப் போய்ச்சேரும் வகையில் செயல்படுத்தப்படுகின்றன.

ஆலை (மில்கேட்) விலையில் நூல் வழங்கும் திட்டம்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மற்றும் கைத்தறி அமைப்புகளுக்கு ஆலைவாயில் விலையில் 2% குறைத்து நூல் வழங்கும் திட்டம் ஒன்றினைச் சிட்ட நூல் விலை மான்யம் திட்டத்தினை - சில மாற்றங்கள் செய்து மைய அரசு 1997-98ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கெனத் தேசியக் கைத்தறி வளர்ச்சிக் கழகம் முகவராகச் செயல்படும் வகையில் முறைப்படுத்தப்படுகிறது.

சலுகை வட்டியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனம்:

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்)க்குச் சலுகை அடிப்படையில் நடைமுறை மூலதனம் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியினால் வழங்கப்படுகின்றது. இதற்கு வங்கி வட்டி விகிதத்திலிருந்து 2.5 விழுக்காடு குறைவாக வட்டி கணக்கிடப்படுகிறது. தேசிய வங்கியின் சலுகை நிதியுதவியினை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் மாநிலச் சங்கத்திற்கும் அளித்துவரும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 3 விழுக்காடும தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு ஒரு விழுக்காடும் வட்டி மானியமாக அரசு தற்சமயம் வழங்கி வருகிறது.

இவ்வாண்டு (1997-98) மாநிலச் சங்கத்திற்கு ரூ.268.29 கோடியும், மற்ற பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.164 கோடி அளவிலும் மாநில மற்றும் மையக் கூட்டுறவு வங்கி மூலமாக நபார்டு வங்கி கடனளவில் அனுமதித்துள்ளது.

ஆண்டுதோறும் நாட்டில் உள்ள அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நபார்டு வங்கி வழங்கும் கடன் அளவில் ஏறத்தாழ 45 சதவீத அளவினைத் தமிழக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுப் பயன் அடைகின்றன.

தள்ளுபடி மான்யம்

கைத்தறித் தொழிலினை ஊக்குவிக்கும் பொருட்டும், விசைத்தறிகளினால் ஏற்படும் போட்டிகளினாலும் கைத்தறி ரகத் துணிகளைத் தங்குதடையின்றி விற்பனை மேற்கொள்ள, தள்ளுபடி மான்யம் வழங்கும் திட்டத்தினை 1950ஆம் ஆண்டு அரசு அறிமுகப்படுத்தியது. அதற்கான செலவினத் தொகையினை "செஸ் நிதி"யிலிருந்து (CESS FUND) வழங்கப்பட்டு வந்தது. பின்னர் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்வது அறிமுகப்படுத்தப்பட்டு, திட்ட ஒதுக்கீட்டிலிருந்து (PLAN SCHEME) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டது. முதன்முதலாக ஆண்டு முழுவதும் 5% தள்ளுபடி மான்யமும், தீபாவளி, பொங்கல், ரம்ஜான் மற்றும் கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைக் காலங்களுக்கு 10% தள்ளுபடி மான்யமும் அனுமதிக்கப்பட்டது. பிறகு 1975-76ஆம் ஆண்டு வரை மாநில அரசே தள்ளுபடி மான்யம் தொகை யாவற்றினையும் வழங்கி வந்தது. பின்னர், மாநில அரசும் மத்திய அரசும் 50:50 என்ற விகிதத்தில் சமபங்காக அளவினை ஏற்று மானியம் வழங்கிவந்தன. 1.4.89 முதல், மத்திய அரசு தள்ளுபடி மான்யம் திட்டத்திற்குப் பதிலாக "விற்பனை மேம்பாட்டு உதவித்திட்டம்" என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின்கீழ் பெறப்படும் மொத்தத் தொகையில் தள்ளுபடி மான்யத்திற்கென 75% விழுக்காடும், எஞ்சிய 25% விழுக்காட்டினைப் பலதரப்பட்ட கைத்தறி மேம்பாட்டு உதவித்திட்டங்களுக்கும் செலவிட்டுக் கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்றும் மத்திய அரசு வழிமுறையினை வகுத்துள்ளது. 1989-90ஆம் ஆண்டு வரை ஆண்டிற்கு 90 நாட்களுக்குத் தள்ளுபடி மான்யம் வழங்கப்பட்டு வந்தது. பின்னர் 1990-91ஆம் ஆண்டு அப்போதைய அரசு 100 நாட்களுக்குத் தள்ளுபடி மான்யம் வழங்கப்படுவதாக அறிவிப்பு செய்து 8 மாதங்களுக்கு மாதம் 5 நாள் வீதம் 40 நாட்களுக்கும், பண்டிகைக் கால 4 மாதங்களில் 60 நாட்களுக்கும், தள்ளுபடி மான்யம் வழங்குவதாக அறிவிப்புச் செய்தது.

திட்டத்தின் செயல்பாட்டைச் செய்த அரசு 1.4.97 முதல் ஆண்டு முழுவதும் 10% தள்ளுபடி மான்யம் அனுமதித்து **முதலமைச்சர் கலைஞர்** ஆணையின் படி விற்பனை மேற்கொள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனைக்கும் 10% தள்ளுபடி மான்யம் அனுமதிக்கப்படவேண்டும் என்றும், அதனை 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்குச் சென்றடையும் வகையில் விற்பனை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் ஆணை பிறப்பித்தது.

பின்னர் நெசவாளர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலித்த அரசு, ஏழை நெசவாளர்களின் நலன் கருதியும், கைத்தறித் துணிகளின் விற்பனையினை அதிகரிக்கச் செய்யவும், ஆண்டு முழுவதும், 20% தள்ளுபடி மான்யம் வழங்கி விற்பனை மேற்கொள்ளத் தற்போது அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த ஆணையின்படி தற்போது பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறித் துணி வகைகளுக்கு (ஜனதா மற்றும் ஆயத்த ஆடைகள் தவிர்) ஆண்டு முழுவதும் விற்பனையில் 20% தள்ளுபடி மான்யம் அனுமதித்து விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம்

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கும் மற்றும் கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும், இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது.

1997 பொங்கல் திருநாளை முன்னிட்டு ரூ.88.49 கோடி மதிப்பில், பொங்கல் திருநாள் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு '97 ஆகிய இரு கட்டங்களில் 72.75 இலட்சம் சேலைகளும், 68 இலட்சம் வேட்டிகளும் கைத்தறி மற்றும் விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்து வழங்கப்பட்டன.

1998 பொங்கல் திருநாளுக்கென 72.75 இலட்சம் பெண்கள் மற்றும் 68 இலட்சம் ஆண் பயனீட்டாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்பட்டுள்ளது.



இலவசச் சீருடை வழங்கும் திட்டம்

1. தமிழ்நாடு அரசின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு மட்டும் சீருடை வழங்கும் திட்டம் 1985-86ஆம் ஆண்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தொடக்கக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர், நகராட்சி மற்றும் சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ் வரும் பள்ளிகளில் பயிலும் சிறார்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைகின்றனர்.

2. மாணவ, மாணவியர்களுக்கு ஒரு 'செட்' சீருடை வழங்கப்படுகிறது.

3. (1996-97 முதல்) தனியாரிடமிருந்து துணிகளைக் கொள்முதல் செய்யாமல் மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் சீருடைத்துணிகளைப் பெற்றுத் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைப்பதோடல்லாமல் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வழிவகுக்கும்.

1996-97ஆம் ஆண்டில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் ரூ.31.11 கோடி மதிப்பிற்கு 105.44 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டிற்கும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த (அரசு ஆணை நிலை எண்.308, சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை, நாள் 28.10.1997)ல் ஆணை வழங்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுவிடும் கல்வியாண்டில் திட்டத்தால் பயன்பெறும் அனைத்துச் சங்கங்களுக்கும் சீருடை சென்றடையும் வகையில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.46.26 கோடி மதிப்பிற்கு 152.97 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி விநியோகம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

இதுதவிர, 1997-98ஆம் ஆண்டிற்குப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய துறைகளின் கோரிக்கைப்படி அத்துறைகளின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் சிறார்களுக்கும் தேவையான சீருடைத்துணி வழங்க கீழ்க்கண்டவாறு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்கு ஆணையிடப்பட்டு விநியோகம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

துறையின் பெயர்	வெள்ளை சட்டைத்துணி	தாவணி	நீலநிற கேஸ்மெண்ட்	காக்கி டிரில்
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை	36,586	19,920	24,977	22,615
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை	1,22,939	30,956	79,654	71,906
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை	6,81,637	2,17,329	4,68,989	3,79,485

கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகள்

1993-94ஆம் ஆண்டு முதல் 1996-97ஆம் ஆண்டு முடிய உள்ள நான்கு ஆண்டுகளில் கைத்தறித் தொழிலில் இருந்துவரும் குறைவான மூலதனத்தினால் ஏற்படக்கூடிய ஆதாரக் குறைவுகளைச் சரிக் கட்டும் போக்கில் கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகள் நிறுவுவதற்குரிய செயல்முறைத் திட்டத்தினை மைய அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டமானது கைத்தறித் தொழிலைச் சுயசார்புடையதாகச் செய்யும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசால் தமிழ்நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 303 கைத்தறி வளர்ச்சி மையங்களில், இதுவரை ரூ.14.33 கோடி செலவில் 286 கைத்தறி வளர்ச்சி மையங்களும் ரூ.0.62 கோடி செலவில் 32 தரமான சாயச்சாலைகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

1997-98ஆம் ஆண்டிற்கு மேலும் ரூ.169.86 இலட்சம் மதிப்பீட்டில் 74 கைத்தறி வளர்ச்சி மையங்களும் மற்றும் 7 தரமான சாயச்சாலைகளுக்கான கருத்துருக்கள் மத்திய அரசிற்குப் பரிந்துரைக்கப்பட்டு, அரசின் ஒப்பளிப்பு ஆணை எதிர்நோக்கப்படுகிறது.

செறிவுத்திட்டம்

கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பொருட்டும், தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டும் மத்திய அரசின் செறிவுத்திட்டத்தினைத் தமிழக அரசு செயல்படுத்திவருகிறது.

செறிவுத்திட்டமானது துணைத் திட்டங்களான வாணிகம் மற்றும் வாணிகம் சாரா அடிப்படையில் நெசவாளர்களுக்கு விளிம்புத் தொகை வழங்குதல், தொழிற்கூடம், தொழிற்கூடம் மின்மயமாக்குதல், கிடங்கு நிறுவுதல், ஆதரவற்ற நெசவாளர்களுக்கு விளிம்புத் தொகை வழங்குதல், விற்பனை மையங்கள் அமைத்தல், ஒருங்கிணைந்த கைத்தறி கிராம வளர்ச்சித் திட்டம், புதிய தறிகள் மற்றும் தறி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் புதிய வடிவமைப்புகளைப் புகுத்துதல் போன்ற திட்டங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டங்களுக்கான மாநில, மைய நிதியுதவி 50:50 என்ற அடிப்படையில் வழங்கப்படும். தொழிற்கூட கட்டுமானம் மற்றும் ஆதரவற்ற நெசவாளர்களுக்கு விளிம்புத் தொகை வழங்குதல் போன்ற திட்டங்களுக்கான நிதியுதவி முழுவதும் மத்திய அரசினால் மான்யமாக வழங்கப்படுகிறது.



அண்ணா கூட்டுறவு நூற்பாலை

கடந்த நான்கு ஆண்டுகளில் திட்டத்தின் சாதனை

வரிசை எண்	ஆண்டு	பயனடைந்த சங்கங்கள்	பயனாளிகள்	அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1.	1993-94	7	175	10.30
2.	1994-95	13	900	38.50
3.	1995-96	155	3,161	224.267
4.	1996-97	274	4,996	268.996

கிராமப்புறக் கைத்தறி நெசவாளர்களுக்கான திட்டங்கள்:

கிராமப்புறங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களின் ஆதார வருமானத்தை உயர்த்தும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகவும் மத்திய அரசின் ஊரக அமைச்சகம், கீழ்க்கண்ட நான்கு திட்டங்களை அறிவித்துள்ளது.

அ. கைத்தறி நெசவாளர்களுக்குத் தறிகளையும், அதற்கான உபகரணங்களையும் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்குதல்.

ஆ. ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், கிராமப்புறத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

இ. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி கைத்தறி நெசவாளர்களுக்கு 'இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின்' கீழ், வீடு கட்டித்தருதல்.

ஈ. 'நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின்' கீழ் கைத்தறி நெசவாளர்களுக்குப் பொது வசதி மையங்கள் கட்டித்தருதல்.

மாநில அரசு, மேற்படி திட்டத்தினைக் கைத்தறி நெசவாளர்களுக்கு பயன்படும் வகையில் ஊரக வளர்ச்சித் துறையும் கைத்தறித் துறையும் இணைந்து செயல்படுத்திட ஆணை பிறப்பித்துள்ளது. இத் திட்டத்தின்கீழ் பயனீட்டாளர்கள், ஊரக வளர்ச்சி முகமை அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் உதவியுடன் தேர்வு செய்யப்படுகின்றனர்.

சேமிப்பு - பாதுகாப்புத் திட்டம்
குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 1975-76ஆம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உள்ள உறுப்பினர்கள் தாம் பெறும் ஊதியத்தில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் செலுத்தி வருகின்றனர். மைய அரசும் மாநில அரசும் தலா 4 பைசா வீதம் செலுத்துகின்றன. இந்த நிதியின் கூடுதல் தொகைக்கு அரசு 7 விழுக்காடு வட்டி அளிக்கிறது. நெசவாளர் உறுப்பினர்களின் ஆயுள் காப்பீடு செய்யப்பட்டு ஆயுள்காப்பீட்டுக் கழகத்திற்கு மாநில அரசு 2/3 பங்கும் அமைய அரசு 1/3 பங்கும் முனைமத்தொகை செலுத்திவருகின்றன. இத்திட்டத்தின் தொடக்கத்தில் பயன்பெறும் உறுப்பினர்கள் 55 வயதுக்கு முன் இறக்க நேரிட்டால் அவரது சட்டபூர்வ வாரிசுதாருக்கு ரூ.500 காப்பீட்டுத் தொகையாகவும் 1.3.1980 முதல் ரூ.10,000 ஆகவும் உயர்த்தப்பட்டதோடல்லாமல், வயது வரம்பும் 58ஆக உயர்த்தப்பட்டது. மேலும் 1.10.91 முதல் இக்காப்பீட்டுத் தொகை ரூ.15000க்கு உயர்த்தப்பட்டு இந்த அரசு இதனை ரூ.25,000 ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளது. மேலும் வயது வரம்பு 60ஆக தற்போது உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

2. 1992-93ஆம் ஆண்டு முதல் மைய அரசும் இத்திட்டத்தில் பங்கேற்று 1/3 பங்கு முனைமத் தொகையாகச் செலுத்திவருகிறது. எஞ்சியுள்ள 2/3 முனைமத் தொகையினை மாநில அரசு செலுத்திவருகிறது. 31.3.97 வரை இத்திட்டத்தின்கீழ் 91.628 நெசவாளர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

3. 1997-98ஆம் ஆண்டிற்குக் காப்பீட்டுத் தொகையாக ரூ.1,14,53,500 ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குச் செலுத்தப்படவுள்ளது. மேலும், இக்காலத்திற்குச் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.342.85 இலட்சம் மாநில அரசின் பங்காக வழங்கப்படவுள்ளது.

சிக்கன நிதித்திட்டம்

இத்திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு இணையாக மைய அரசினால் 1985-86 முதல் செயல்படுத்தப்பட்டு வருவதாகும். துவக்கத்தில் மைய அரசு, நெசவாளர்கள் அளிக்கப்படும் கூலியில் ரூபாய்க்கு மூன்று பைசா வீதம் அதிக பட்சமாக ஒரு நெசவாளருக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.90 வீதம் அளித்து வந்தது. இத்திட்டம் 1992-93 முதல் திருத்தியமைக்கப்பட்டு 3 பைசாவிலிருந்து 4 பைசாவாக மைய அரசின் பங்கு உயர்த்தப்பட்டு, அதிகபட்ச உச்சவரம்பான ரூ.90ம் நீக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 1996-97ஆம் ஆண்டில் ரூ.1,40,04,745 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.399.75 இலட்சத்திற்கு மத்திய அரசிற்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு, தற்போது மைய அரசால் ரூ.150 இலட்சம் விடுவிக்கப்பட்டு மேற்படி தொகை மாநில அரசால் விடுவிக்கப்படவுள்ளது.

நெசவாளர் வீட்டு வசதி மற்றும் தொழிற்கூடத் திட்டம்

கூட்டுறவின் கீழுள்ள கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி அதிகரித்து மேம்பாடு எய்த அவர்களுக்கு வீடு மற்றும் தொழிற்கூடம் கட்டும் திட்டம் 1979-80ஆம் ஆண்டு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடன் தொகையும், மாநில அரசு மான்யத் தொகையும் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. 1985-86ஆம் ஆண்டு முதல் மத்திய அரசும் இத்திட்டத்தில் பங்கேற்று மான்யம் வழங்கி வருகின்றது.

இத்திட்டத்தின்படி இதுகாறும் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி பின்வருமாறு:

	1996-97 வரை 1997-98 முதல்		
	ரூ.	கிராமப் புறம் (இவ்வாண்டு முதல்)	நகர்ப்புறம்
ஹட்கோ கடன்	25,000	25,000	5,000
மாநில அரசு மான்யம்	5,000	5,000	5,000
மைய அரசு மான்யம்	14,000	18,000	20,000
பயன்பெறும் உறுப்பினர் பங்கு	3,000.00	3,000	3,000
	47,000	51,000	53,000

1995-96ஆம் ஆண்டு 1000 தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டவும் அரசால் ஆண்டொன்றுக்கு ரூ.190 இலட்சம் மான்யமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.140 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.50 இலட்சமுமாகும். 1996-97ஆம் ஆண்டிற்கு 1000

தொழிற்கூடத்துடனான வீடுகள் கட்ட ரூ.190 இலட்சம் மான்யம் அரசால் வழங்கப்பட்டுப் பயனாளிகளுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. 1997-98ஆம் ஆண்டிற்கு மத்திய அரசின் திருத்தப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் 1233 வீடு மற்றும் தொழிற்கூடங்களைக் கட்ட, பயனீட்டாளர்களைத் தேர்ந்தெடுத்து அதற்கான மான்யத் தொகை (கிராமப்புற வீடு மற்றும் தொழிற்கூடம் கட்ட ரூ.18,000 மற்றும் நகர்ப்புற வீடு மற்றும் தொழிற்கூடம் கட்ட, தலா ரூ.20,000 (ரூபாய் இருபதாயிரம்) கோரி அரசுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மைய அரசு தற்போது முதல் தவணையாக ரூ.11,06,000 அனுமதித்து (50%) ஆணை வழங்கியுள்ளது. மாநில அரசால் கட்டுமானம் செய்து வீடு அளிக்கும் வகையில் செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன.



கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வு செறிவுத் திட்டம்

இத்திட்டம் 1992-93ஆம் ஆண்டு முதல் மைய அரசின் மான்ய உதவியில் கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களுக்காகப் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது.

1. நெசவுத் தொழிலால் ஏற்படும் நோய் தீர்க்கும் மருத்துவச் செலவினங்களைத் திரும்ப வழங்குதல்

2. கண்சிகிச்சை மற்றும் கண்ணாடி ஆகியவற்றிற்கான செலவுகளைத் திரும்ப வழங்குதல்

3. குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருதல்

4. மகப்பேறு உதவி

5. குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை

6. ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டுதல்

1992-93ஆம் ஆண்டில் 45 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 64 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க, கிணறு ஒன்றுக்கு ரூ.35,000 வீதம் 22.40 இலட்சமும், 1993-94ஆம் ஆண்டிற்கு 68 நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு 108 ஆழ்துளைக் கிணறு அமைக்க ரூ.37.80 இலட்சமும், 19 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 19 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்ட நிலையம் ஒன்றுக்கு ரூ.1 இலட்சம் வீதம் ரூ.19 இலட்சம் வழங்கப்பட்டு அங்கு வாழும் நெசவாளர்கள் பயனடைந்துவருகிறார்கள்.

1994-95ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டுள்ள 6 இனங்களுக்கு ரூ.1,16,07,000-ம் 1995-96-ம் ஆண்டில் ரூ.79,84,093- ம் வழங்கப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டிற்கு ரூ.1,10,16,331 வழங்க மைய அரசிற்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதில், தற்போது ரூ.55,08,000 மைய அரசின் ஆணை பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

கூட்டுறவுத் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு இத்திட்டத்தினைத் தமிழக அரசு 1.1.92 முதல் செயல்படுத்தத் துவங்கியது. இத்திட்டத்தினை இந்தியாவிலேயே செயல்படுத்தும் முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த எந்த ஒரு நெசவாளரும் சங்க மொத்த உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட ரகத் துணியில் சங்க வருடாந்திர உற்பத்தியில் 75% சராசரி உற்பத்தி செய்திருப்பின் அவர் இத்திட்டத்தில் சேரத் தகுதியுடையவராகிறார். இத்திட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர் 58-வயதுக்கு முன் இறக்க நேரிட்டால் அவர் மரணமடைந்த நாளிலிருந்து அவரால் நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் யாருக்காவது (மனைவி/கணவன்/வயது வராத மகன்/திருமணமாகாத மகள்/விதவை மகள் மற்றும் மருமகள்/தாயார்/தகப்பனார்) பிரதி மாதம் ரூ.250 வீதம் 10 ஆண்டுகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 31.3.97ல் 31,822 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் 30.9.97 முடிய 291 உறுப்பினர்களின் வாரிசுதாரர்கள் ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர்.

காட்சியறையை நவினப்படுத்தல்

இத்திட்டத்தின் கீழ் கைத்தறித் துணிகளின் விற்பனையை மேம்படுத்த நவீன தொழில் நுட்பத்தின் அடிப்படையில் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் காட்சியறையைப் புதுப்பித்து அழகுபடுத்தும் நோக்குடன் நிதியுதவி வழங்கப்படுகிறது. தேவையிருப்பின் குளிர்பதன வசதிக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் காட்சியறைகளை நவீனப்படுத்த ஆண்டொன்றுக்கு ரூ.50 இலட்சம் வீதம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி உதவி மைய அரசு மற்றும் மாநில அரசு பங்குடன் செயல்படுத்தப்படும் விற்பனை மேம்பாடு திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

கைத்தறித் துணி விற்பனையை மேம்படுத்தும் நோக்கத்தில் 1997-98ஆம் ஆண்டு 'கோ-ஆப்டெக்ஸ்' வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ள விற்பனை வளாகத்தில் பங்கு பெற்றுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.25 இலட்சமும், மாநிலத்தின் மற்ற பகுதியிலுள்ள ஒன்பது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை மேம்பாட்டிற்காக ரூ.25 இலட்சமும் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் 2.43 இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் இயங்கிவருகின்றன.

கூட்டுறவுத் துறையில் உள்ள 50 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 7,659 பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் உள்ளன. இவற்றில் 5,079 விசைத்தறிகள் செயற்பட்டு வருகின்றன. மேற்படி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் சிறப்புத் திட்டமான இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் சேலை மற்றும் வேட்டிகளை உற்பத்தி செய்துவருகின்றது. மேற்படி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1996-97ஆம் ஆண்டில் 630.26 இலட்சம் மீட்டர் துணி ரகங்கள் ரூ.4318.34 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசின் இலவச வேட்டி சேலைத் திட்டமும் அடங்கும். மேற்படி உற்பத்தி செய்யப்பட்ட விசைத்தறித் துணி ரகங்கள் 587.38 இலட்சம் மீட்டர் ரூ.5080.40 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

விசைத்தறி நெசவாளர் காப்பீட்டுத் திட்டம்

தமிழகத்திலுள்ள விசைத்தறி நெசவாளர்களுக்குக் காப்பீட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்திடத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின்படி ஆண்டு ஒன்றுக்கு முகமைத் தொகையான ரூ.120 மத்திய மாநில அரசுக்கும் மற்றும் உறுப்பினரும் சேர்ந்து நிகராக ஆயுள் கழகத்திற்குச் செலுத்த வேண்டும், இதுவரை 755 தகுதியான விசைத்தறி நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டத்தினைச் செயல்படுத்த விதிமுறைகளை அங்கீகரிக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

விசைத்தறித் துறை - குறிப்பாகத் தனியார் துறையில் கடந்த சில காலங்களில் நல்லதொரு முன்னேற்றப் பாதையில் சென்றுள்ளது. எனினும் கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம் காரணமாகச் சில மில் துணிகளின் உற்பத்தி குறுகியுள்ளது. பொதுவாக விசைத்தறித் துறைக்குத் துணிகள் பதனிடும் வசதிகள் மிகக் குறைவாக உள்ளது. விசைத்தறித் தொழில் மேம்பாட்டிற்காகப் பழைய பழுதடைந்த தறிகளை மாற்றவும், அரசு உதவியுடன் விசைத்தறி உரிமையாளர்கள் பதனிடும் ஆலைகளை அமைக்கவும் விசைத்தறி நெசவாளர்களுக்கு நீண்டகாலக் கடன்களை வழங்கும் திட்டங்களை வகுக்கவும் ஆவன செய்யப்பட வேண்டும்.

கூட்டுறவு நூற்பாலைகள்

தமிழ்நாட்டில் 18 கூட்டுறவு நூற்பு ஆலைகள் உள்ளன. அதில், புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை கடந்த 1994 ஏப்ரல் முதல் மூடப்பட்டுள்ளது. இந்த நூற்பாலையை மீண்டும் திறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக் கூட்டுறவு நூற்பாலைகளில் சுமார் 12,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்வாலைகள் மூலம் அவற்றின் மொத்த உற்பத்தியில் 50 சதவீதம் கைத்தறித் தொழிலுக்குத் தேவையான சிட்டநூல் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1996-97ஆண்டு (40ஆம் எண்ணுக்கு மாற்றப்பட்டதில்) 205.24 இலட்சம் கிலோ நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு நூற்பாலைகளின் கடுமையான நிதிப் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு அரசு கூட்டுறவு நூற்பாலைகளைக் கடன் கொடுத்தோர் நெருக்குதலிலிருந்து இடை ஓய்வு அளிக்கும் பொருட்டு, இடருதவி (Relief undertaking) நிறுவனங்களாக அறிவித்தது. கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புத்துயிரூட்டும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு முதல் கட்டமாக வழிவகைக் கடனாக ரூ.15 கோடி வழங்கப்படும் என அறிவித்து, மேற்படித் தொகை கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு ஜனவரி '97-ல் வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஆலை குறித்தும், விரிவான ஆய்வு நடத்த அரசு முடிவு செய்து, இதற்கென 'இட்காட்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, அறிக்கை தற்போது பெறப்பட்டுள்ளது. அதன்மீது தக்க நடவடிக்கை

ஓய்வூதியம் அறிவிப்பு

நிதித் (ஓய்வூதியம்) துறையின் 12.6.1997 ஆம் நாளிட்ட 315ஆம் எண் அரசாணையில் திருத்தப்பட்டவாறான நிதித் (ஓய்வூதியம்) துறையின் 31.12.1996 ஆம் நாளிட்ட 762ஆம் எண் அரசாணையில் ஆசிரிய ஓய்வூதியம் பெறுபவர்கள், தமிழ்நாடு பணிநிலை சார்ந்த அனைத்திந்தியப் பணி அதிகாரிகள் ஓய்வூதியம் பெறுபவர்கள் உள்பட, தமிழ்நாடு மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டத்தை 1.1.1997 முதற்கொண்டு செயல்படுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் படி, தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதிக்காக ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து அவர்கள் இறக்க நேரிடும் வரை, மாதம் ஒன்றுக்கு ரூ.20/- சந்தா தொகை பிடித்தம் செய்யப்படும்.

இந்த நிதிக்கு ஓராண்டுகாலம் சந்தா தொகை செலுத்தியபிறகு, ஓய்வூதியம் பெறுபவர் ஒருவர் இறக்க நேரிடில், அவருடைய மனைவி/ கணவன்/நியமனதாரர் சட்டப்படியான வாரிசுக்கு ரூ.25,000/. அளிக்கப்படும். நிதித் (ஓய்வூதியம்) துறையின் 26.12.1997 ஆம் 639 ஆம் எண் அரசாணையில் தமிழ்நாட்டிற்கு வெளியே கருவூலங்கள் / துணைக் கருவூலங்கள் மற்றும் பொதுத்துறை வங்கித் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள், குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்குவதற்கான நடைமுறைகள் குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நிதித்துறையின் (ஓய்வூதியம்) 26.12.1997 ஆம் நாளிட்ட 639ம் எண் அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்படி, இத்திட்டத்தில் சேர விருப்பமில்லாத வெளிமாநிலங்களில் ஓய்வூதியம் பெறுபவர்கள், இத்திட்டத்தில் சேர விருப்பமில்லை என்பதை எழுத்து மூலமாக 20.3.1998 அன்று அல்லது அதற்கு முன்பாக, சம்பந்தப்பட்ட கருவூல அதிகாரிகள்/துணைக் கருவூல அதிகாரிகள் அல்லது, பொதுத்துறை வங்கித்திட்டத்தின் கீழ், ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தமட்டில், சம்பந்தப்பட்ட வங்கிகளின் கிளை மேலாளரிடம் அளிக்க வேண்டும். எனவே, ஆசிரிய ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் தமிழ்நாடு பணி நிலையைச் சேர்ந்த அனைத்திந்திய பணி ஓய்வூதியம் பெறுபவர்கள் உட்பட தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியே ஓய்வூதியம் பெறும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள், குடும்பப் பாதுகாப்பு நிதித்திட்டத்தில் சேர விருப்பமில்லாதவர்கள், தங்களுடைய விருப்பத்தை, 20.3.1998 அன்று அல்லது அதற்கு முன், சம்பந்தப்பட்ட கருவூல அதிகாரிகளிடம் / துணைக் கருவூல அதிகாரிகளிடம் அல்லது பொதுத்துறை வங்கித்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தமட்டில், சம்பந்தப்பட்ட வங்கிக் கிளை மேலாளரிடமும் எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- இவ்வாறு நிதித்துறையின் சிறப்புச் செயலாளர் திரு.ஆர்.என்.சௌபே அறிவித்துள்ளார்.

அறிவுரைக்காக அரசுக்குச் சுற்று அனுப்பப்பட்டுள்ளது. மாதந்தோறும் கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்திறன் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, ஆலைகளின் முன்னேற்றத்திற்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது. நூற்பு ஆலைகளுக்குத் தேவையான தரமான பஞ்சை நியாயவிலையில் 'டான்ஸ்பின் மூலம்' கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு நிர்ணயம் செய்யும் விலைக்கு விற்பனை செய்யப்பட்டு, இலவச வேட்டி சேலை மற்றும் சீருடை போன்ற திட்டங்கள் நல்லமுறையில் செயல்பட உதவிகரமாக உள்ளது.

இத்துறையின் கட்டுப்பாட்டிற்குள் கீழ்க்காணும் நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் செயல்பாடு பற்றிய குறிப்பு பின்வருமாறு:

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம், சென்னை

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம் 21.12.94 அன்று தமிழ்நாடு கூட்டுறவு சங்கச் சட்டத்தின் கீழ் 29.12.94-ல் பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான மூலப்பொருளான பஞ்சினைப் பதிவு பெற்ற கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமிருந்து, அதாவது பிற மாநிலங்கள் உட்பட்டு பஞ்சு கொள்முதல் செய்து தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சினைத் தரமாகவும் மற்றும் நியாயமான விலையில் விநியோகம் செய்யவேண்டும் என்கின்ற சீரிய நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு இயங்கி வரும் இவ்விணையம் தமிழ்நாடு அரசு அளித்த ரூ.25 கோடி தொகையினை மூலதனமாகக் கொண்டு நிறுவப்பட்ட இணையத்தில் அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளும் மற்றும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் உறுப்பினர்களாக உள்ளனர். இணையம் இன்றைய தேதி வரையில் 76,914 பேல்கள் தரமான மற்றும் நியாயமான விலையில் பஞ்சினைக் கொள்முதல் செய்து, அனைத்துக் கூட்டுறவு நூற்பாலைகளுக்குச் சுழற்சி முறையில் தொடர்ந்து விநியோகம் செய்துவருகிறது. இவ்வாறு விநியோகிக்கப்பட்ட பஞ்சின் மதிப்பு ரூ.76.97 கோடியாகும். இணையம் இவ்வாறு தரமான பஞ்சு கொள்முதல் செய்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கு விநியோகம் செய்ததில் கூட்டுறவு நூற்பாலைகளின் மொத்தப் பஞ்சு கொள்முதலில் சுமார் 20 விழுக்காடாகும். தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வரும் இவ்விணையம் 1994-95 முதல் 1996-97 வரையில் மொத்தம் ரூ.38.96 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. இனிவரும் ஆண்டுகளில் பஞ்சு நிலுவைத் தொகையினை வசூல் செய்வதில் தீவிரப்படுத்தப்பட்டு, அதிகபட்ச தர பஞ்சினைக் கொள்முதல் செய்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி, அவைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவத் திட்டமிடப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ்

'கோ-ஆப்டெக்ஸ்' என்று அனைவராலும் அறியப்பட்ட தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1935-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்தியாவிலேயே மிகப்பெரிய கைத்தறி நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் 60 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக வெற்றிகரமாகச் செயலாற்றிவருகின்ற மாநில அமைப்பாகும்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 1996-97 ஆண்டிற்கான விற்பனை, கொள்முதல், ஏற்றுமதி செய்த வகையில் மதிப்பு பின்வருமாறு:

			(மதிப்பு ரூ.கோடியில்)
ஆண்டு	விற்பனை	கொள்முதல்	ஏற்றுமதி
1996-97	ரூ.260	ரூ.146.56	ரூ.3.75

வேகமாக மாறிவரும் காலத்திற்கேற்ப கோ-ஆப்டெக்ஸ், தனது பாரம்பரியத்தைத் தக்க வைத்துக்கொள்ள, 2001-2002ஆம் ஆண்டில் விற்பனைக் குறியீடான ரூ.100 கோடியை அடைவதற்குப் புதிய அணுகுமுறை வகுக்கப்படவும், வெளி மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களில் பெரிய அளவிலான விற்பனை நிலையங்கள் (Mega Showrooms) திறக்கப்பட உள்ளன.

தமிழ்நாடு ஜரிகை ஆலை, காஞ்சிபுரம்

தரமான சரிகையினை உற்பத்தி செய்து, நியாயமான விலையில் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்காகத் தமிழ்நாடு ஜரிகை ஆலை, காஞ்சிபுரத்தில் பொதுத்துறை நிறுவனமாக நிறுவப்பட்டது. தமிழ்நாடு ஜரிகை ஆலை தமிழ்நாட்டிலுள்ள பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவையினைப் பெருமளவில் பூர்த்தி செய்துவருகிறது.

தமிழ்நாடு ஜரிகை ஆலையில், கடந்த மூன்று ஆண்டுகளின் செயலாக்கம் கீழ்வருமாறு:

மதிப்பு மற்றும் இலாபம் ரூபாய் இலட்சத்தில்

வ.எண்.	ஆண்டு	உற்பத்தி		விற்பனை		லாபம்
		மார்க்	மதிப்பு	மார்க்	மதிப்பு	
1.	1994-95	26,486	671.95	26,240	665.78	32.83
2.	1995-96	33,613	887.38	33,665	888.79	28.07
3.	1996-97	40,161	1050.61	39,476	1,032.90	39.49

(ஒரு மார்க் என்பது 240 கிராம்)

கடந்த மூன்றாண்டுகளில் அரசு பங்கு மூலதனத்தில் மீது தமிழ்நாடு ஜரிகை ஆலை செலுத்திய ஈவுத்தொகை பின்வருமாறு:

வ.எண்.	ஆண்டு	அரசு பங்கு (ரூ.இலட்சத்தில்)	ஈவுத்தொகை அறிவிக்கப்பட்டது	ஈவுத்தொகை செலுத்தியது (ரூ.இலட்சத்தில்)
1.	1994-95	13.20	20%	2.64
2.	1995-96	13.20	20%	2.64
3.	1996-97	13.20	25%	3.30

மேற்படி நிறுவனமானது தற்சமயம் தமிழகத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரிகைத் தேவையை 20% பூர்த்தி செய்யும் நிலையில் உள்ளது. இவ்வாலையை மேலும் விரிவுபடுத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் முழுத்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வெள்ளி இழைநூற்புப் பிரிவை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவுத் துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு

1973-ஆம் ஆண்டு கூட்டுறவு அமைப்பின்கீழ் ஒரு பதனிடும் ஆலையாகத் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை என்ற பெயரில் 6.7.73-ல் பதிவு செய்யப்பட்டு 5.9.73-லிருந்து செயலாற்றி வருகிறது. இவ்வாலை தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் செயல்படும் ஒரே பதனிடும் ஆலையாகும்.

இவ்வாலையில் ஏ,பி,சி மற்றும் டி ஆகிய நான்கு வகை நிறுவனங்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு ரூ.1,06,30,900 பங்குத் தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாலையில் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுமாக மொத்தம் 375 பேர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

ஆலையின் உற்பத்தித் திறன்
(மாதம் ஒன்றுக்கு)

1. சலவை செய்தல்	-	7,50,000 மீட்டர்கள்
2. சாயம் தோய்த்தல்	-	4,50,000 மீட்டர்கள்
3. பிரிண்டிங்	-	1,00,000 மீட்டர்கள்
4. பாலியஸ்டர் பிராசசிங்	-	3,50,000 மீட்டர்கள்
5. நூல் சாயம் தோய்த்தல்	-	6,000 கட்டுகள்



மேற்கண்ட துணிகள் பதனிடுவதற்காக கோ-ஆப்டெக்ஸ், கதர் வாரியம், மத்திய சிறை, கோவை, கர்நாடகா கைத்தறி வளர்ச்சிக் கழகம், பெங்களூர் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து துணிகள் பெறப்பட்டு பதனிடப்பட்டு வருகிறது.

இவ்வாலையானது சென்னை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களைப் பெருந்தலைவராகக் கொண்டு 7 நிர்வாகக்குழு உறுப்பினர்களுடன் இயங்கி வருகின்றது. இவ்வாலையில் ரூ.336.12 இலட்சங்களுக்கு மூலதனம் உள்ளது.

இவ்வாலையின் உற்பத்தி விவரம் பின்வருமாறு:

வ.எண்.	விவரம்	1994-95	1995-96	1996-97	1997-98 அக்டோபர் '97 வரை
1.	துணிகள் பதனிடப்பட்டவை (மீட்டர்களில்)	47.17	64.54	76.94	70.87
2.	நூல் சாயமிட்டது (கிலோ)	1.90	1.42	1.48	0.68
3.	பதனிடும் கூலி ஈட்டியது	355.40	329.86	459.32	456.27

1995-96 வரை நட்டத்தில் இயங்கி, செயல்படாமல் இருந்த ஆலை மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழக அரசின் இலவசச் சீருடைத் துணிகளை ஆலையில் முழுஅளவில் பதனிடுவதால், ஆலையானது தற்போது இலாபகரமாக இயங்கி வருகிறது. மேலும் ஆலையில் புதிய இயந்திரங்கள் ரூ.75 இலட்சத்தில் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாலையின் பதனிடும் திறனை நவீனப்படுத்தவும் உற்பத்தியை அதிகரிக்கவும் புதிய இயந்திரங்கள் நிறுவுவதற்கும் ரூ.185 இலட்சத்தில் திட்டம் இடப்பட்டு முதல் கட்டமாக ரூ.1.30 கோடியில் இயந்திரங்கள் வாங்குவதற்கும் கொள்முதல் உத்திரவுகள் அனுப்பப்பட்டுள்ளன. புதிய இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.50 இலட்சங்கள் மானியமாகத் தமிழக அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மீதம் தேவையான ரூ.80 இலட்சங்கள் தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்திடம் கடன்பெறப் பிரேரணை அனுப்பப்பட்டு, தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது.

இவ்வாலையானது 1997-98ஆம் ஆண்டு மிகவும் இலாபகரமாக – அதிக உற்பத்தியும் செய்துள்ளது. ★

சென்ற இதழ்த் தொடர்ச்சி...

தமிழர் நேசன்

முனைவர் இராம. குருநாதன்

உலோகங்கள் குறித்து அ.மாதவய்யா எழுதிய கட்டுரை தனித்தன்மையுடையது. இது ஆங்கிலத்திலிருந்து தழுவி எழுதப் பெற்றதாகும்.

'ஆதிஆயுர்வேத, சாஸ்திரமும் நுண்ணுயிர் உலகமும்' என்ற கட்டுரை பண்டைக் காலத்தில், ஆயுர்வேதம் எவ்வாறு சிறப்புற்றிருந்தது என்பதைப் பற்றியதாகும்.

முதல் அறிவியல் பத்திரிகை

சில அறிவியல் கட்டுரைகளின் தலைப்பே புதுமையாக இருந்துள்ளது. இஃது இப்பத்திரிகையின் உத்திகளில் ஒன்று. ஆலம் பூ / விதை பற்றிய கட்டுரை படிக்கத் தூண்டுவதற்கு ஏற்ப அமைந்துள்ளது அதன் தலைப்பு, 'அத்தி பூத்தாற்போல' என்பதாகும். பயிரியல் பற்றிய கட்டுரையாகும் இது.

'குறிப்புகள்' என்ற பகுதியில் இடம் பெறும் அறிவியல் வினா-விடைகள் ஈர்ப்புடைய வகைகளில் அமைந்துள்ளன. கேள்விகள் ஆவலைத் தூண்டுமாறு உள்ளன. இதுவும் இப்பத்திரிகையின் அழகியதோர் உத்தி. 'நெருப்பிலிடப் பட்ட இரும்பு ஏன் சாம்பலாகப் போவதில்லை?' 'ஆகாயம் நீலமாய்க் காணும்போது மேகங்கள் எங்கே போகின்றன?' 'உறிஞ்சினால் ஜலம் எப்படி மேலே எழுகின்றது?' என்பனபோல் வரும் கேள்விகள் பொது அறிவை இளஞ் சிறாரிடம் வளர்க்க உதவின. அதற்கேற்ற வகையில் கேள்விகள் படிக்கத் தூண்டுவதாய் விளங்கின. அறிவியல் வினா - விடைகளைச் சிறுவரிடம் மேலோங்கச் செய்யவேண்டும் எனக் கருதிய பொ.திரிகூடசுந்தரம் முப்பதாண்டுகளுக்குப் பின் அப்பாவும், மகனும், அறிவுக்கனிகள் போன்ற நூல்களை எழுதுதற்கு இவ்வுத்திமுறை முன்னோடியாக இருந்துள்ளது.

'இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்' என்னும் பொருள் பற்றி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையும் டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் மையமும் இணைந்து இரு நாட்களில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறையில் நடத்திய கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை.

'விஞ்ஞானப் பத்திரிகை' என்று பலராலும் கருதப்பட்டுவந்த இப்பத்திரிகை, அத்தகைய அறிவைத் தமிழர் பெறத் தூண்டுகோலாக இருந்துள்ளது. தொண்ணூற்று நான்கு வயதுவரை வாழ்ந்த பெ.நா.அப்புசாமி, தமிழில் சிறந்த அறிவியல் கட்டுரைகளை எழுதிப் புகழ்பெறுதற்குக் காரணமாயிருந்தது இவ்விதழ்.

'தமிழர்நேசன்', இவ்வாறு அறிவியல் செய்திகளுக்கே முதன்மை அளித்து வந்ததால், அறிவு சார்ந்தவர்களின் பத்திரிகையாகத் திகழ்ந்தது. தமிழ் இதழ் வழியே தமிழ்மக்களுக்குப் புதிய அறிவியலில் தடம் பதிக்கச் செய்த பெருமை இப்பத்திரிகைக்கு உண்டு. இதுவே தமிழில் வெளிவந்த முதல் அறிவியல் பத்திரிகையாகும்.

இதழை எவ்வெவ்வகையில் நடத்திச் செல்வது என அ.மாதவய்யாவிற்கு நன்கு தெரிந்திருக்கிறது. அறிவியலுக்கான இதழாக இருந்தும், பல்வேறு துறைகளில் செய்திகள் இடம்பெறுவதையும் பின்னர் இணைத்துக் கொண்டார்.

அறிவியல் மட்டுமன்றித் தமிழ்மொழிக்கும் 'தமிழர்நேசன்' அருங்கொடை நல்கியுள்ளது. தமிழில் அறிவியல் கலைச்சொற்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளமை பாராட்டுக்கு உரியது. உயிரியல், வேதியியல், இயற்பியல் முதலான அறிவியல் துறை சார்ந்த ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை வழங்கியுள்ளது. அவற்றில் தூய தமிழ்ச்சொற்களைக் காண முடியாவிட்டாலும், அக்கால கட்டத்தில் ஆங்கிலம் கற்றோர் அவற்றை அறிந்து கொள்ள உதவியது. இராசாசி போன்றோரின் ஒத்துழைப்பால் சேலத்தில் தமிழ் அறிவு நூல் சொற்சங்கம் (Tamil Scientific Term Society) இயங்கி வந்ததனைத் தமிழர் கல்விச் சங்கத்தின் தலைவராக இருந்த ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் இப்பத்திரிகையில் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழர் கல்விச் சங்கத்தின் சார்பில் வெளிவந்த இப்பத்திரிகையில், சங்கத்தின் நோக்கத்தைத் தொகுதி ஐந்து - முன்னுரையில் அவர் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

> *தமிழின் மேன்மையையும், தமிழ்மக்களின் நலத்தையும் நாமும், அறிவாளர் பலரும் நல்அறிவைத் தமிழ் வழியே புகட்ட முன்வரும்போது, அவர் புகட்டும் அறிவைத் தமிழ்மக்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறும் செய்வது சங்கத்தின் நோக்கம்*
>
> (தமிழர் நேசன். தொகுதி V.I)

அறிவு நூல்களை அறியச் செய்தலும், தமிழர்க்கு மேனாட்டுச் சாத்திரங்களை அறிமுகப்படுத்தி அவற்றின் வழி தமிழரின் கல்வி அறிவை மேம்படுத்தச் செய்வதும் இன்றியமையாத கடமைகளாகும் என்பதை அவரது கூற்று உணர்த்துகிறது. சேலத்தில் நடந்துவந்த தமிழ் அறிவு நூல் சொற்சங்கத்திற்கும் தமிழர்கல்விக் கழகத்திற்கும் நெருக்கமான உறவு இருந்திருக்க வாய்ப்புண்டு. தமிழர் நேசனின் பத்திரிகைப் பொறுப்பாளர்களும், பிறரும், சேலத்தில் இயங்கி வந்த அச்சங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்ததையும், அச்சங்கப் பணியின் செயற்பாடுகளையும் பற்றிய யாதொரு தகவலையும் விளக்கமாக அறியமுடியவில்லை.

'தமிழர் நேசன்', தமிழ் மொழி பற்றிய சிந்தனைகளுக்கு ஓரளவு முன்னுரிமை கொடுத்துள்ளது. இதனை அவ்வப்போது வெளிவந்த ஓரிரு கட்டுரைகளினின்றும் அறிய முடிகிறது. தமிழ்மொழி குறித்தும், தமிழ்ச் சொற்களஞ்சியம் குறித்தும் ஜே.எஸ்.சாண்ட்லர் எழுதிய கட்டுரைகள் சுட்டிக்காட்டத்தக்கன. தமிழ்ச் சொற்களஞ்சிய ஆக்கத்தின் குழுத் தலைவராக இருந்த அவர், கருத்தாழம் மிக்க மொழித்தொடர்பான சிந்தனைகளை முன்வைத்துள்ளார்.

> *யுத்த காலத்தில் ஆட்களைச் சோதிக்கிறது போல், அகராதி செய்யும் விஷயத்தில் பதங்களைச் சோதிக்கும் வேலை பிரதானமாகவுள்ளது. (தமிழ்நேசன் III; 4)*

– என்று சொற்களைக் கண்டறிந்து அகரமுதலியில் வெளியிடுவது பற்றிச் சுவைபடக் குறிப்பிடும் அவர், பிற சொற்களைத் தமிழ் ஏற்கும் விதத்தை நான்காகப் பகுத்துக் கூறியுள்ளார்.

(1) பூர்வத் தமிழில் பதங்கள் - ஆதியிலிருந்து வழங்குபவை; அவை தமிழாக இருப்பவை.

(2) துணைத் தமிழில் பதங்கள் - வேறு மொழியிலிருந்து நல்ல கருத்துகளைக் கொண்டுவந்து தமிழ்ப்பதங்களோடு ஐக்கியப் படுத்துதல்.

(3) நடுநிலையான தமிழில் பதங்கள் - தமிழ் இலக்கணத்திற்கு மாறுபாடு இல்லாமல் இனிமேல் புதுகருத்துகளைக் கொண்டுவரக்கூடிய இசைவான பதங்களே. அவையெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது. இசைந்து வராத பதங்களுக்குத் தமிழில் இடமில்லை.

(4) பகையான தமிழில் பதங்கள் - சம்பந்தமில்லாமல் தாறுமாறாக உண்டாக்கக் கூடிய பதங்கள். இவை தமிழ் பாஷைக்குப் பகையாய் உள்ளவை.

என இவ்வாறு வகைப்படுத்திக் கூறியுள்ளமை சான்ட்லர் மேற்கொண்ட பணியில் அவரிடம் இருந்த கடமையுணர்ச்சி, ஈடுபாடு, பொறுப்பு ஆகியவற்றைக் காட்டுவதாகவுள்ளது.

இலக்கியம் தொடர்பான கட்டுரைகளை முதல் ஐந்து தொகுதிகளில் காண்பதரிது. ஐந்தாம் தொகுதியில் கா.சுப்பிரமணிய பிள்ளை திருஞானசம்பந்தரின் தேவாரம் குறித்து எழுதிய கட்டுரை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகையில், பொழுதுபோக்கிற்குரிய செய்திகள் பெரும்பான்மையும் இல. மொழிபெயர்ப்புக் கவிதை, கதை, நாடகம் போன்றவை ஓரளவு இடம்பெற்றுள்ளன. 'தமிழர் செல்வம்' என்ற பகுதி ஒவ்வோர் இதழிலும் வெளிவந்துள்ளது. பண்டைய தமிழ் இலக்கியத்திலிருந்து, குறிப்பாக, பத்துப்பாட்டு, சிலம்பு, மேகலை, குறள், நாலடியார், கம்பராமாயணம், வில்லிபாரதம், தனிப்பாடல்கள் முதலானவை ஒருபக்கம் அல்லது இருபக்கங்களில் இடம் பெற்றுள்ளன. பாடலிலிருந்து சில பகுதிகளையும், அவற்றிற்கான குறிப்புரையோடு கூடிய விளக்கங்களையும் தமிழர் செல்வம் என்ற இலக்கியப் பகுதி புலப்படுத்திக் காட்டியுள்ளது.

மொழி பெயர்ப்புக் கவிதைகள் முதல் தொகுதியில் வெளியிடப்பெற்றுள்ளன. அவற்றை அ.மாதவய்யா மொழி பெயர்த்துள்ளார். சார்லஸ் லாம்ப்'ன் எனது பழைய தோழர் (The old familiar faces) தாமஸ் மூரின் பழைய நாள் நினைவு (The Light of the otherday) 'இராபர்ட் கதே'யின் எனது புத்தகங்களின் மத்தியில் (Among the books) 'பாகோரி'ன் நீ மனம் ஏங்கிடாதே (Despair not) 'பார்பால்ட்'டின் உயிர் (Life) போன்ற கவிதைகள் குறிப்பிடத்தக்கவை. மற்றும் ஆல்டங் ஹக்லியின் கவிதை ஒன்றைத் தழுவி எழுதப்பெற்ற 'இந்தியா என் அன்னையே' என்ற கவிதையும், சேக்ஸ்பியரின் சானெட் ஒன்றும் முதல் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இவை தவிர கடவுள் அருள் உலகம், சிறந்த தொண்டு, மரணம் முதலிய மொழிபெயர்ப்புக் கவிதைகளும் அதில் இடம்பெற்றுள்ளன. இத்தகைய கவிதைகளில் சில உயிரோட்டமாக உள்ளன.

சிறுகதை, புதினம், நாடகம் ஆகியன ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

பக்கிம் சந்திரர் எழுதிய 'விருஹல்லங்கல வ்யாக்கிர சாரியார்' என்ற வங்காளச் சிறுகதை, இராமசாமி ஐயரால் 'வால்நீண்ட வரிப்புலியார்' என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எள்ளல் சுவையுடன் கூடிய சிறுகதை இது.

எட்வின் ஆர்னால்ட் இயற்றிய ஆசிய ஜோதி, உ.வே.சா.எழுதிய புத்த சரித்திரம் ஆகிய இவற்றை அடிப்படையாகக் கொண்டு 'மூப்பினை அறிதல்' என்ற நாவலைப் படைத்துள்ளார் அ.மாதவய்யா. இது சித்தார்த்தரின் வரலாற்றைப் பற்றியது.

[illegible]ம் சம்பாதிக்கப் பிறந்தவர்கள் அல்ல; சாதிக்கப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டாக வேண்டும்!

- விவேகானந்தர்

வடமொழி கலப்பில்லாத தனித்தமிழில் சித்தார்த்தன் 'பற்றிய நாவல் இது

என்று அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளது. தனித்தமிழ் என்பதை விட அவரது காலத்திய நடை என்றே கருதும்படியாக அக்கதையின் நடை அமைந்துள்ளது. 'தில்லை கோவிந்தன்' என்ற அ.மாதவய்யாவின் தொடர்கதை இப்பத்திரிகையில் இடம் பெற்றிருக்கிறது. இதுவும் ஒரு மொழிபெயர்ப்பு நாவலாகும்.

சிறுவர் பகுதிகள் தொடர்ந்து வெளிவந்துள்ளன. இவை பாலவிநோதக் கதைகள் என்ற பகுதியில் இடம்பெற்றுள்ளன. சிறுவரிகள் படிப்பதற்கு ஏற்றவகையில் பெரிய எழுத்துக்களில் (12 புள்ளிகள்) வெளிவந்துள்ளன இக்கதைகள். மொகலாயக் கதைகள் என்பதும் தொடர்ந்து வெளிவந்தது. பொழுதுபோக்குத் தொடர்பானவையாய் இவை விளங்கின.

இப்பத்திரிகையில் நாடகம் எப்போதாவது இடம்பெற்றுள்ளது. பவானந்தம் பிள்ளை சீதாபரகணம் என்ற நாடகத்தை இதில் எழுதியுள்ளார். இராம நாடக மஞ்சரி இப்பத்திரிகையில் இணைச் சேர்க்கையாக (அநுபந்தமாக) வெளிவந்துள்ளது.

வரலாற்றுத் தொடர்பான கட்டுரைகள் குறிப்பிடத்தக்க அளவில், 'தமிழர் நேசன்' இடம்பெற்றுள்ளன. 'ஐரோப்பியர் ஆதிசரித்திரம்' என்ற தொடர்க் கட்டுரை சில பகுதிகளாக வெளிவந்தது. வரலாற்றில் புகழ் பெற்றவர்களின் வாழ்க்ன்க தொடர்ந்து இடம் பெற்றது. முதல் தொகுதியில், 'ஆன்றோர் ஆற்றுப்படை' என்னும் பகுதியில், தாதாபாய் நௌரோஜி, சி.சுப்பிரமணிய அய்யர், இராஜா ராம்மோகன்ராய், ஸர் வில்லியம் லெடர்பன் முதலியோர் வாழ்க்கை பற்றி அ.மாதவய்யா எழுதியுள்ளார். பிற தொகுதிகளில் டி.ஆர்.இராஜகோபாலய்யர் என்பவர் மாஜினி, நெல்சன், நெப்போலியன், டால்ஸ்டாய், வாஷிங்டன், மார்ட்டின் லூதர், லிங்கன், கூடன்பர்க், கரிபால்டி முதலியோர் பற்றி நீண்ட கட்டுரை அளித்து வந்தார்.

மதிப்புரைப் பகுதியில் அரிச்சந்திரா, கம்பராமாயணச் சுருக்கம், சிவாஜி மகராஜா, பட்டபாணர் சரித்திரம் முதலான நூல்கள் இடம்பெற்றுள்ளன.

விடுதலைக்கு முன்னுள்ள காலகட்டத்தில் வெளிவந்த இதழாதலால் விடுதலை பற்றிய சிந்தனையில் இது கொண்டிருந்த கருத்துப் புலனாகுமாறு இல்லை. முதல் ஐந்து தொகுதிகளைக் காணுகின்றபோது, இப்பத்திரிகையின் பொறுப்பாளர்கள் தேசிய விடுதலையில் பங்கு ஆற்றியதற்கான குறிப்புகள் கிடைத்தில. எனினும், தமிழர் கல்விச் சங்கத்தில் பொறுப்பு வகித்தவர்களில் சிலர், தேசிய விடுதலை உணர்வு மிக்கவர்களாய் இருந்துள்ளனர். 'தமிழர்நேசனில்' இது குறித்து அறிய வாய்ப்பில்லை.

விடுதலை பெறுதற்குக் கால் நூற்றாண்டுக்கு முன் வெளிவந்த பத்திரிகைகளில் தமிழர் நேசனுக்குக் குறிப்பிடத் தகுந்த இடம் உண்டு என்பதில் ஐயம் இல்லை. அறிவியல் பத்திரிகை என்றழைக்கப் படத்தக்கதாக, அறிவியல் கட்டுரைகள் மிகக் கவனமாக எழுதப்பெற்றிருப்பதைப் போற்ற வேண்டும். பின்னர் சுத்தானந்த பாரதியார் போன்றவர்கள் பத்திரிகை நடத்தியபோது, இப்பத்திரிகையின் அறிவியல் கட்டுரைகள் முன்னோடியாக இருந்துள்ளன. தமிழர் நேசனில் வெளிவந்த கட்டுரைகள் ஒவ்வொன்றும் அவற்றை எழுதியோரின் கடின உழைப்பையும், விடா முயற்சியையும் காட்டவல்லன.

> ***முதலில் தொண்டு, பின்பு தன்னலம் என்ற மனப்பக்குவம் அனைவரிடமும் ஏற்படவேண்டும்; அப்பொழுதுதான் நல்ல சமுதாயம் உருவாகும்!***
>
> **- டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன்**

இதழாசிரியர் அ.மாதவய்யாவின் முயற்சியும் தன்னம்பிக்கையும் உழைப்பும் தமிழர்நேசனுக்கு உற்ற துணையாய் விளங்கின. இலக்கிய மொழி பெயர்ப்புக்களோடு, அறிவியல் தொடர்பான செய்திகளையும் அவர் அவ்வப்போது மொழிபெயர்த்து வந்தார். அன்றைய நாளில் பி.ஏ. தேர்வில் முதல் மாணவராகத் திகழ்ந்த மாதவய்யாவிற்கு, இலக்கியத்தாகம் இருந்ததற்கான அடையாளங்களைத் தமிழர் நேசனில் காணமுடிகின்றது. எனினும் அறிவியல் பார்வையே அதில் ஓங்கியுள்ளது.

1917 முதல் 1927 வரை சுமார் பத்தாண்டுகள் 'தமிழர் நேசன்' வெளிவந்து கொண்டிருந்தது. இறுதி சில ஆண்டுகள் இவ்விதழின் ஆசிரியர் பணியை பெ.நா.அப்புசாமி ஏற்றுக்கொண்டார். இவர்க்கு மாதவய்யா சிறிய தந்தை ஆவார். மாதவய்யாவிற்குப் பின் இப்பத்திரிகை மிகவும் மெலிந்து போயிற்று. குறைவான பக்கங்களே வெளிவந்தன. பெ.நா.அப்புசாமி ஆசிரியராக இருந்து நடத்தி வந்தபோது அப்பத்திரிகையின் நிலைமை குறித்துப் பின்னாளில் 'ராணி' ஆசிரியர் அ.மா.சாமியிடம் அவர் தெரிவித்த கருத்தாவது:

> ***'தமிழர்நேசன் பத்து ஆண்டு நடந்தது. 32 பக்கமும் நானே எழுதி நிரப்பினேன். படங்களும் வரைந்தேன். பல பேரிடம் கட்டுரை கேட்டுக் கடிதம் எழுதினேன். இதை (விஞ்ஞானம்) தமிழில் எழுதினால் படிப்பவர்களுக்கு அர்த்தம் ஆகாது என்று சொல்லிவிடுவார்கள். படிப்பவர்களும் கிடையாது. எழுதுகிறவர்களும் இல்லாமல், படிப்பவர்களும் இல்லாமல் தமிழர் நேசன் நின்றுபோனது'.***
>
> ***(தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி ப.193)***

- என்று குறிப்பிட்டிருப்பது சிந்திக்க வைப்பதாகும். தொடக்கத்தில் அறிவியல் செய்திகளுக்கு முதன்மை அளித்துவந்த ஓர் இதழ் நின்று போனது வருத்தத்திற்கு உரியதாகும். முன்னர் எழுதிவந்தோரே திரும்பவும் எழுத முயன்றிருக்கலாம் அல்லவா? பெ.நா.அப்புசாமி கூறியிருப்பது போன்று அறிவியல் கட்டுரை எழுதினால் படிப்பவர்களுக்குப் பொருள் விளங்காது என்ற கூற்று சற்றே மிகையானது. தமிழர் கல்விச் சங்கத்தின் அடிப்படை நோக்கத்தையே சிதைப்பது போல் உள்ளது. படிப்போரிடம் வரவேற்பு குறைந்துபோக வாய்ப்பு உண்டு. அஃதியல்பானது. அதைக் காட்டிலும் விற்பனையைக் கவனத்தில் கொண்டால் அது நின்றுபோனதற்குரிய காரணம் புரியும். அதேசமயம் 1924இல் 'பஞ்சாமிர்தம்' என்ற பத்திரிகைக்கு அ.மாதவய்யா ஆசிரியராகப் பொறுப்பேற்றதையும் இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

'தமிழர் நேசன்' என்ற இதழ் நின்று போனாலும், தமிழில் முதல் முயற்சியான அறிவியல் பத்திரிகை என்ற சிறப்பை மட்டும் அது இழக்கவில்லை; இழக்கவும் இயலாது.

இக்கட்டுரையில் காணப்பட்ட செய்திகள் பின்வருமாறு:

(1) 1917இல் தமிழர் கல்விச்சங்கம் என்ற அமைப்புத் தொடங்கப்பெற்று, அதன் வழி வெளிவந்தது 'தமிழர் நேசன்' என்ற மாத இதழ்.

(2) பலரின் கூட்டு முயற்சியால் வெளிவந்த இவ்விதழுக்கு அ.மாதவய்யா ஆசிரியராய் இருந்துள்ளார்.

(3) தமிழரின் அறிவியல் வளர்ச்சிக்கு ஆக்கம் தேடுவதை நோக்கமாகக் கொண்டது. இவ்வடிப்படையில் தமிழில் வெளிவந்த அறிவியல் இதழ்களுக்கு முன்னோடியாக இவ்விதழ் விளங்கியது.

(4) அறிவியல் கட்டுரைகள் அரிய உழைப்போடும், மிகுந்த கவனத்தோடும் எழுதப்பெற்றுள்ளன. அறிவியல் பாடநூல் என்று கருதுமாறு பல்வேறு பட்ட அறிவியல் கட்டுரைகளை அளித்து வந்துள்ளது.

(5) அறிவியல், கலை, வரலாறு ஆகியவை தொடர்பான செய்திகளை அறிமுகப்படுத்தலும், அவற்றைத் தமிழ்/தமிழர் வளர்ச்சிக்கு உளப்படுத்தலுமாகிய இரண்டு அடிப்படைப் பகுப்புகளைக் கொண்டுள்ளது இவ்விதழ்.

(6) மொழிபெயர்ப்புப் படைப்புகள், கலைச்சொல் உருவாக்கங்கள் ஆகியவற்றை வெளியிட்டு மொழி பெயர்ப்புப் பணியில் செவ்வனே தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

கதர் கிராமத் தொழில் வாரியம்

- ★ 9-வது ஐந்தாண்டுத் திட்டம் ரூ.5013.21 இலட்சத்திற்கு உருவாக்கப்பட்டு உள்ளது. இதற்குத் தேவையான அரசு மற்றும் மாநிலத் திட்டக்குழு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.
- ★ 1998-99 நிதியாண்டிற்கு ரூ.50.75 இலட்சத்திற்கு பகுதி-2 திட்டத்தில் புதிய திட்டப்பணிகளை மேற்கொள்ள மாநிலத் திட்டக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வாய்ப்புக்கள் அதிகமுள்ள மாவட்டங்களில் மட்டும் பணிமேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ★ 1997-98ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின்போது **முதலமைச்சர் கலைஞர்** அவர்களால் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தமிழ்நாட்டிற்கென ஒரு வரைவு துணிநூல் கொள்கை தயாரிக்கப்படுகிறது.
- ★ தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1997-98ஆம் ஆண்டுக்கு கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்திக் குறியீட்டை முறையே ரூ.46 கோடி மற்றும் ரூ.404 கோடியாக இலக்கு நிர்ணயித்தது. மேலும் 1998-99க்கு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் முறையே ரூ.50 கோடி மற்றும் ரூ.425 கோடிக்கும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ★ தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 30.9.97 முடிய உள்ள காலத்தில் ரூ.4.16 கோடிக்குக் கதர் ரகங்களையும் ரூ.180.60 கோடி அளவுக்கு கிராமத் தொழில் பொருட்களை விற்பனை செய்துள்ளது. 1998-99ல் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனையை முறையே ரூ.55.00 கோடி மற்றும் ரூ.450 கோடிக்கும் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- ★ 30.9.97 முடிய பதினாறு இலட்சம் நபர்களுக்கு வாரியத்தால் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.
- ★ பட்டு ரகங்களில் புதிய நவீன டிசைன்கள் புகுத்தப்பட்டுள்ளதால் பட்டு சேலைகளுக்கு அதிக அளவில் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. இதனால் 30.9.97 முடிய ரூ.644.81 இலட்ச மதிப்பில் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- ★ கதர் பட்டு மற்றும் கதர் ஆடைகளுக்கு 15% தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது.



இந்த நகரத்தைத் தூங்க வைக்க வேண்டும்!

- மனுஷ்ய புத்திரன்

இந்த நகரத்தைத்
தூங்க வைக்க வேண்டும்

அதன் பைத்தியக் கண்களில்
செவ்வரி படர்கிறது

காலமும் அகாலமும்
குழம்பிய காலத்தில்
அது பிரமைகளில் நீந்துகிறது

மிகவும் களைப்படைந்து விட்டது,
எனினும் தூங்க மறுக்கிறது.

ஒரு போதும் அடையவியலா
தன்னுடலை
தானே தின்னும் பசியில்
சுற்றிச் சுற்றி வருகிறது.

நகரங்கள்
தூங்க மறந்து போனதால்
கனவு காணும் பழக்கத்தையும்
இழந்து விட்டன.

விசித்திர ஒலிகளை எழுப்பியபடி
புரண்டு புரண்டு படுக்கிறது.

வலி அதிகரிக்கும் போதெல்லாம்
நாய்களின் குரல் வழியே
நிலவை நோக்கி ஊளையிடுகிறது.

தூங்காத நகரங்கள்
விடிகிற பொழுதின்
அந்தப் பரவசத்தையும் காண்பதில்லை

அதற்குத் தன் செயல்களை
எங்கே நிறுத்தி
எங்கே தொடங்க வேண்டுமெனப்
புரிவதே இல்லை.

நான் சற்றைக்கு முன்
நிராதரவான நிலையில்
கழுத்தறுபட்ட ஒரு மனிதன்!
என் கழுத்தை அறுத்தவனும்
நானும்
ஒரு கணம் முன்புவரை
குறுக்கிடும் உத்தேசம் கொண்டிருக்கவில்லை.

இவை நிகழ்கின்றன
யுத்தத்தின் நெறிமுறைகள்
ஏதுமில்லாத இந்த நகரம்
துரோகப் பெட்ரோல், குற்றங்களால்
தன் வழிமுறைகளை நிச்சயித்துக் கொண்டிருக்கிறது.

இன்றும் சில பெண்களும்
குழந்தைகளும் காணாமல் போயிருக்கிறார்கள்.
இந்த இரவின் வெப்பத்தில்
அவர்கள் ஆவியாகியிருக்கக் கூடும்.

பைத்தியங்களும்
தற்கொலை செய்து கொண்டவர்களும்
எப்படியோ இரகசியமாக
வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

நகரங்கள்
என்றிலிருந்து தூங்க மறந்தன என்பதற்கு
நம்மிடம் சாட்சியங்களில்லை.

ஒரே ஒரு இரவு மட்டும்
இந்த வாகனங்கள் அனைத்தையும்
பொம்மைக் கார்களாக்கிக்
குழந்தைகளிடம் கொடுத்துவிடலாம்

பற்றி எரியும் மின் கம்பங்களைப் பிடுங்கி
கடல் நீரில் அமிழ்த்திவிடலாம்

தூக்க மாத்திரைகளின்றி
இந்த நகரத்தைத் தூங்க வைக்கவேண்டும் -

[illegible] [illegible]ரங்கள் போல!

கபிலர் குன்று

கலைஞர் வியக்கும் கபிலர்

"காடுகளில் மலைச் சோலைகளில் கபிலப்புலவன்
கண்டறிந்து குறிஞ்சிப்பாட்டில் கோடிட்டுக் காட்டியுள்ள
மலரையெல்லாம் பறித்தெடுத்து என் மனம் பறித்த
மாத்தமிழ்ச்சுவடிகள்மேல் மாரியெனப் பொழிந்திடுவேன்!
இதோ, கபிலர் காட்டும் மலர்கள் காண்க.....
பத்துப் பாட்டாம் குறிஞ்சிப் பாட்டில் கபிலப்புலவன் - மலர்களைப்
பட்டியல் போடும்பாங்கே, பாவையர்
சரம்தொடுத்தது போல் அமைந்திட்டதம்மா! இந்தச்
சங்கத் தமிழின் பெருமையைச் சாற்றுதல் எளிதோ?"

கபிலர் காட்டிய மலர்கள்

உரிதுநாறு அவிழ்தொத்து உந்தூழ், கூவிளம்,
எரிபுரை எறுழம், கள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான்பூங் குடசம்,
எருவை, செருவிளை, மணிப்பூங் கருவிளை,
பயினி, வானி, பல இணாக் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல் இணர்க் காயா,
விரிமலர் ஆவிரை, வேரல், சூரல்,
குரீஇப் பூளை, குறுநறுங் கண்ணி,
குருகிலை, மருதம், விரி பூங் கோங்கம்,
போங்கம், திலகம், தேங் கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந்தண் சண்பகம்,
கரந்தை, குளவி, கடிகமழ் கலிமா,
தில்லை, பாலை, கல் இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமா ரோடம்,
வாழை, வள்ளி, நீள்நறு நெய்தல்,
தாழை, தளவம், முள்தாட் தாமரை,
ஞாழல், மௌவல், நறுந்தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறு செங்குரலி,
கோடல், கைதை, கொங்க முதிர் நறுவழை,
காஞ்சி, மணிக்குலைக் கள்கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல்பூந் தணக்கம்,
ஈங்கை, இலவம், தூங்கு இணர்க் கொன்றை,
அரும்பு, அமர் ஆத்தி, நெடுங்கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல்பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்துவாரம்,
தும்பை, துழா அய், சுடர்ப்பூந் தோன்றி,
நந்தி, நறவம், நறுவம் புன்னாகம்,
பாரம், பீரம், பைங்குருக் கத்தி,
ஆரம், காழ்வை, கடி இரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,
மா இருங் குருந்தும் வேங்கையும் பிறவும்".

- இவ்வாறு தமிழக முதல்வரும் தமிழ் ஆராய்ச்சிப் பேரறிஞரும் 'சங்கத் தமிழ்' நூல் தந்த சரித்திர நாயகரும் ஆன மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தாம் எழுதிய 'சங்கத் தமிழ்' நூலின் துவக்கத்திலே 'மலர் மாரி பொழிகின்றேன்!' என்ற தலைப்பின் கீழ் சங்க காலத் தலைமைப் புலவரான கபிலரின் புலமைத் திறனை - படைப்பாற்றலை மிகவும் வியந்து பாராட்டுகிறார்.

கபிலர், தாம் எழுதிய குறிஞ்சிப்பாட்டில் 61 ஆம் அடி முதல் 95ம் அடி முடிய 35 அடிகளில் 99 வகையான மலர்களின் பெயர்களை வரிசையாகச் சொல்லியிருக்கிறார். கபிலரின் இந்தப் படைப்பாற்றலை - சிந்தனையாற்றலை - புலமையாற்றலை நம் கலைஞர் மட்டுமின்றி உலகில் உள்ள அனைத்து மொழிக் கவிஞர்களும் மிகவும் வியந்து பாராட்டுகிறார்கள்.

இராம. ஆதிரைக்காவலன்



கபிலர் குன்று அன்று...

கபிலர் உயிர் நீத்த இடம்

இவ்வாறு, உலக மொழிக் கவிஞர்களால் வியந்து பாராட்டப்படும் பெருமையை உடைய கபிலர், தமது இறுதிக் காலத்தில் விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரில் பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்து இறுதியில் அவ்வூரில் பாயும் தென்பெண்ணையாற்றின் நடுவில் உள்ள ஓர் உயரமான பாறையில் வடக்கிருந்து உயிர் நீத்தார். கபிலர் உயிர் நீத்து 2200 ஆண்டுகள் ஆன பின்பும் அவர் உயிர் நீத்த இடமான அந்தப்பாறை - தற்பொழுதும் 'கபிலர் குன்று' என்று பொது மக்களால் அழைக்கப்படும் இந்த இடம் தற்பொழுது தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் உள்ளது.

இக்குன்றின் மீது சிவலிங்கம் உள்ள கோவிலும் இக்கோவிலை அடைவதற்கு ஆற்றிலிருந்து படிக்கட்டுகளும் உள்ளன. ஆனால் இக்கோவிலின் கருவறையும் சுற்றுச் சுவர்களும் படிக்கட்டுகளும் மிகவும் பாழடைந்த நிலையில்இருந்தன. தாய்த் தமிழைப் பேணிப் போற்றும், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணையால், ரூ.50 ஆயிரம் செலவில், கபிலர் குன்றும் சீரிய முறையில் சீரமைக்கப்பட்டுள்ளது.

கபிலர் வரலாறு

கபிலர் குன்றைப் பற்றிய மற்ற விவரங்களை அறிந்து கொள்வதற்கு முன்பு கபிலரின் வரலாற்றை இங்கே நாம் சுருக்கமாகக் காண்போம்.

சங்ககாலப் பெரும்புலவரான கபிலர், பாரி வள்ளலின் அவையிலே புலவராக மட்டுமின்றி அவரது ஆருயிர் நண்பராகவும் விளங்கினார். பாரிக்கு **அங்கவை, சங்கவை** என்ற பெயர் கொண்ட இரு மகள்கள் இருந்தனர்.

ஏதோ ஒரு காரணத்தினால் வள்ளல் பாரிக்கும் மூன்று குறு நில மன்னர்களுக்கும் போர் மூண்டது. அப்போரில் பாரி உயிர் நீத்தான். பாரி போருக்குச் செல்லும் முன்பு கபிலரிடம் 'கபிலர் பெருமானே! ஒரு வேளை போரிலே நான் இறந்துவிட்டால் தாங்கள் தான் மணமாகாத என்மகள்களுக்கு உற்ற துணையாக இருந்து அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கவேண்டும்' என்று வேண்டிக் கொண்டான், அதற்குக் கபிலரும் சரியென்று ஒப்புக்கொண்டார்,

கபிலர் பாரியிடம் உறுதியளித்தவாறு, அவன் உயிர் நீத்த பின்னர் அவன் மகள்களுக்குத் திருமணம் செய்து வைப்பதற்காக அவர்களை அழைத்துக்கொண்டு பறம்புமலையை விட்டுப் புறப்பட்டார்.

முதலில் விச்சிக்கோன் என்ற குறுநில மன்னனை அடைந்து அவனிடம் பாரி மகள்களை மணக்கும்படி வேண்டினார், ஆனால் அவனோ 'தந்தையை இழந்து வறுமையில் வாடும் பெண்களை மணந்து கொள்ள மாட்டேன்' என்று மறுத்துவிட்டான்.

அதன்பிறகு, கபிலர் அப்பெண்களை அழைத்துக்கொண்டு இருங்கோவேள் என்ற குறுநில மன்னனிடம் சென்று அவனை மணக்கும்படி வேண்டினார். அவனும் 'தந்தைய இழந்து வறுமையில் வாடும் இந்த பெண்களை மணந்துகொள்ள மாட்டேன்' என்று மறுத்ததுடன் கபிலரை அவமதித்து அனுப்பி விட்டான்.

இதனால் மனமுடைந்த கபிலர், 'என்னதான் பாரி முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளலாய் இருந்தாலும் இன்று அவன் மகள்கள் வறுமை நிலையில் இருப்பதால் அவர்களை எந்த மன்னனும் மணக்க முன் வரமாட்டான். எனவே நாம் இம்மகளிர் திருமணத்திற்குப் பெரும் பொருள் சேர்த்த பிறகுதான் மணமகனைத் தேடிச் செல்ல வேண்டும்' என்று முடிவு செய்து அப்பெண்களை அழைத்துக் கொண்டு பெரும் பரிசில் பெறுவதற்காகச் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனிடம் சென்றார்.

அங்கே அவன் மீது பதிற்றுப் பத்தின் ஏழாம் பத்தைப் பாடி அவனைப் புகழ்ந்தார், அதைக் கேட்டு மகிழ்ந்த சேரன் கபிலரிடம் 'கபிலரே! தங்களுக்கு என்ன பரிசில் வேண்டும்?' என்று கேட்க அதற்குக் கபிலர் 'எனக்காகப் பரிசில் கேட்டு வரவில்லை, இந்தப் பாரி மகளிரின் திருமணத்திற்காகத் தான் பரிசில் கேட்டு வந்தேன்' என்று கூறினார்.

உடனே, சேரன் கபிலரை அழைத்துக் கொண்டு தனது நாட்டிலுள்ள 'நன்றா' என்னும் குன்றின் மீது ஏறி நின்று தன் கண்ணில் பட்ட நிலப்பகுதியை எல்லாம் கபிலருக்கு உரிமை' ஆக்கியதோடு நூறாயிரம் பொற்காசுகளையும் பரிசிலாகக் கொடுத்தான்.

அவற்றைப் பெற்றுக் கொண்ட கபிலர் அப்பெண்களை அழைத்துக் கொண்டு அவனிடம் இருந்து விடை பெற்றுத் திருக்கோவிலூரை அடைந்தார். அப்பொழுது அவ்வூரை ஆண்ட மலையமான் திருமுடிக்காரியைச் சந்தித்து அவனிடம், 'இப்பாரி மகளிரைத் தங்களின் புதல்வர்களுக்குத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்' என்று வேண்டினார்.

அதைக் கேட்ட திருமுடிக்காரி மிகவும் மகிழ்ச்சியடைந்து சரியென்று ஒப்புக் கொண்டான். பின்னர் கபிலர் சேரனிடம், தாம் பெற்ற பொற்காசுகளையும் நிலங்களையும் பாரி மகளிரின் திருமணத்திற்காகத் திருமுடிக்காரியிடம் கொடுத்தார். அதன்பிறகு பாரி மகளிர் அங்கவை, சங்கவை ஆகியோருக்கும் காரியின் புதல்வர்கள் திருக்கண்ணன், சிறுகண்ணன் ஆகியோருக்கும் திருக்கோவிலூரிலே திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அதன்பின்னர், கபிலர் காரியின் அரண்மனையில் பாரி மகளிருடனேயே வாழ்ந்து வந்தார். பல ஆண்டுகள் சென்ற பின்னர் தள்ளாத முதுமை காரணமாகத் தமது உயிரைப் போக்கிக் கொள்வதற்கு அவர்களிடமிருந்து விடை பெற்றுத் திருக்கோவிலூரில் தென்பெண்ணை யாற்றின் நடுவில் உள்ள ஓர் உயரமான

பாறையின் மீது வடக்குத் திசை நோக்கி அமர்ந்து சாகும் வரை உண்ணா நோன்பினை மேற்கொண்டு உயிர் நீத்தார். அவர் உயிர் நீத்த அப்பாறைதான் தற்பொழுதும் **'கபிலர் குன்று'** என்று அழைக்கப்படுகிறது.

கபிலரின் பெருமைகள்

சங்க காலப் புலவர்களிலேயே மற்ற புலவர்களைக் காட்டிலும் **கபிலர்தான்** மிகுதியான பாடல்களைப் பாடியுள்ளார்.

நமக்குக் கிடைத்துள்ள 2381 சங்கப் பாடல்களிலே **கபிலர்** மட்டும் **235 பாடல்களைப்** பாடியுள்ளார். அதாவது ஏறக்குறைய 600 புலவர்களால் பாடப்பட்ட சங்கப் பாடல்களிலே கபிலர் ஒருவர் மட்டும் பத்து சதவீதப் பாடல்களைப் பாடித் தலைமை இடத்தை வகிக்கிறார். இவருக்கு அடுத்த படியாக **அம்மூவனார்** என்ற புலவர் 127 பாடல்களைப் பாடியுள்ளார். மற்ற புலவர்களெல்லாம் நூற்றுக்குக் குறைவான பாடல்களையே பாடியுள்ளார்கள்.

கபிலரைப்போன்று சிறந்த புலவர்களாகக் கருதப்படும் **பரணர், நக்கீரர், ஔவையார்** ஆகியோர் கூட நூற்றுக்குக் குறைவான பாடல்களைத்தான் பாடியுள்ளார்கள். **பரணர்** 86 பாடல்களையும், **ஔவையார்** 59 பாடல்களையும், **நக்கீரர்** 37 பாடல்களையும் பாடியுள்ளார்கள். எனவே பரணர், நக்கீரர், ஔவையார் ஆகியோரைக் காட்டிலும் கபிலர்தான் தலைசிறந்த புலவராக - **தலைமைப் புலவராக** விளங்குகிறார். இந்தப் பெருமை சங்கப் புலவர்களிலே வேறெந்தப் புலவருக்கும் கிடையாது.

சங்க காலப் புலவர்களிலே மற்ற புலவர்களைக் காட்டிலும் கபிலர் ஒருவர்தான் மிகுதியான புலவர்களால் சங்க இலக்கியங்களிலேயே பாராட்டப்பட்டிருக்கிறார்.

'உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய் மொழிக் கபிலன்' (அகநானூறு - 78 (15,16)

- என்று மதுரை நக்கீரனாரும்,

'தூஉது
செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்'

(புறநானூறு - 53 (10-12)
- என்று பொருந்தில் இளங்கீரனாரும்,

'வயங்கு செந் நாவின்
உலகக் கூராக் கலையில் நெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன்' (பதிற்றுப்பத்து - 85 (10-13)

- என்று
பெருங்குன்றூர்க் கிழாரும்,

'பொய்யா நாவிற் கபிலன்'
(புறம் - 174 (10)

- என்று
மாறோக்கத்து நப்பசலையாரும்,

'நிலமிசைப் பரந்த மக்கட்
கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்'
(புறம் - 126 (10,11)

- என்று அதே
மாறோக்கத்து நப்பசலையாரும்,

'கபிலன்
இன்றுளன் ஆயின் நன்றுமன்'
(புறம் - 53 (12,13)

- என்று சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை கூறியதாகப் பொருந்தில் இளங்கீரனாரும்,

'இலவமலர் அன்ன அம்செந் நாவின்
புலம் மீக்கூறும்' (அகம் - 142 (1,2)

- என்று கபிலரின் பெயரைக் குறிப்பிடாமல் பரணரும் தங்களது பாடல்களிலே கபிலரைப் பற்றிப் பாராட்டிக் கூறியுள்ளார்கள்.

இவ்வாறு கபிலர் சங்கப் பாடல்களிலே ஏழு இடங்களில் மற்ற புலவர்களால் பாராட்டப்பட்டுள்ளார். வேறு எந்தச் சங்கப் புலவரும் இதுபோல் அதிக இடங்களில் மற்ற புலவர்களால் பாராட்டப்படவில்லை. எனவே இந்தப் பெருமை சங்கப் புலவர்களிலேயே கபிலருக்கு மட்டுமே உண்டு.

சங்கப் புலவர்களின் காலத்தில் உண்மையான நட்புக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து காட்டியவரும் கபிலரே.

பிசிராந்தையார் தம் நண்பன் **கோப்பெருஞ்சோழன்** உயிர் நீத்த உடனேயே அவன் பிரிவை ஆற்றாது தாமும் உயிர் நீத்தார். ஆனால் கபிலர் இறந்து போன தம் நண்பன் பாரியோடு உயிர் துறக்காமல் உயிரோடு வாழ்கின்ற தம் நண்பனின் மகள்களுக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து பின்புதான் உயிர் நீத்தார். தனது உயிரனைய நண்பனாம் பாரியின் மறைவுக்குப் பிறகும், தனது நண்பனின் மகள்களின் திருமணத்தை நடத்திக் காட்டிய பிறகே மறைந்தார் என்பது கபிலரின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பதன்றோ?

'மெய்ம்மைத் தியலும் முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதை செஞ்சொற் கபிலன்'

- என்ற திருக்கோவிலூரில் உள்ள கி.பி.11ம் நூற்றாண்டைச் சேர்ந்த **இராசராசன்** கல்வெட்டு கபிலரை மிகவும் சிறப்பாகப் புகழ்கிறது. இவ்வாறு வேறு எந்தச் சங்கப் புலவரும் பிற்காலக் கல்வெட்டினால் சிறப்பாகப் புகழப்படவில்லை.

எனவே, பிற்காலக் கல்வெட்டு ஒன்றினால் மிகச் சிறப்பாகப் புகழப்படும் ஒரே சங்க காலப் புலவர் **கபிலர்** மட்டும்தான். இந்தப் பெருமை வேறெந்தச் சங்கப் புலவருக்கும் கிடையாது.

கபிலர் குன்று - கலைஞரின் அரசால் சீரமைக்கப்பட்ட பின் இன்று.

விலைவாசியைக் கட்டுப்படுத்த முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ள விற்பனை வரிச் சலுகைகள்

- ★ பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் பொருட்கள் கிடைத்திடும் அடிப்படையில், ரூ.450 கோடிக்கு வரிவிலக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒருமுனை வரிவிதிப்பு, வரி சீர்திருத்தம் முதலானவைகள் அமலாக்கப்பட்டுள்ளன.
- ★ சாதாரண மக்கள் பயனடையும் வகையில் பருப்பு, மஞ்சள், மிளகாய் போன்றவைகளுக்கு அறவே வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ★ கணிப்பொறி, தொலைக்காட்சிப் பெட்டி, காகிதம், பொறிகடலை, சாதாரண பிஸ்கெட்டுகள், ஆயத்த ஆடைகள் போன்றவற்றிற்கு வரிக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.
- ★ பனியனுக்கு வரி அறவே நீக்கப்பட்டுள்ளது.
- ★ மூலப்பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி 3% அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது.
- ★ ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள், வர்த்தகர் சங்கப் பிரமுகர்கள் அடங்கிய 'வணிகவரி சீரமைப்புக் குழு' அமைத்து, வணிக வரிவிதிக்கும் முறை சீரமைக்கப்பட்டுள்ளது.

சங்க காலப் புலவர்களிலே கபிலருடைய வாழ்க்கையைப் பற்றித்தான் நமக்கு மிகுதியான வரலாற்றுக் குறிப்புகள் கிடைத்துள்ளன. கபிலருக்குக் கிடைத்துள்ளது போன்ற வரலாற்றுக் குறிப்புகள் சங்க காலப் புலவர்களிலே வேறெந்தப் புலவருக்கும் கிடைக்கவில்லை. பிறரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தமது பாடல்களிலே கூறிய பரணரைப் பற்றிக் கூட இவ்வளவு வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கவில்லை. எனவே இந்தப் பெருமை சங்கப் புலவர்களிலே கபிலருக்கு மட்டுமே உண்டு.

ஆரிய அரசன் பிரகதத்தனைத் தமிழறிவித்தற்காகவே கபிலர் குறிஞ்சிப்பாட்டைப்பாடினார். இவ்வாறு ஒரு பாடலின் மூலம் வேற்று இனத்தான் ஒருவனுக்கு நமது தமிழினப் பெருமையைக் கபிலர் வெளிக்காட்டியது போலச் சங்க காலத்திலே வேறெந்தப் புலவரும் வேறு ஏதாவது ஒரு விதத்தில் நமது தமிழினப் பெருமையை வெளி உலகிற்குக் காட்டினார்கள் என்பதற்குச் சங்க இலக்கியங்களிலே சான்றுகள் இல்லை.

தமிழ் மொழியில் முதன் முதலாகக் காரண காரியத் தொடர்பு அறாமல் ஒரு சிறுகதையைக் கபிலர் குறிஞ்சிப்பாட்டில் முற்றிலும் சித்திரித்திருக்கிறார். எனவே அவர் தம் பாடலின் அமைப்பு முறையில் அதுவரை எவரும் கையாளாத ஒரு புதுமையைப் புகுத்தியிருக்கிறார். ஆகவே தமிழ் இலக்கிய உலகிலே முதன் முதலாக ஒரு புதிய அமைப்பு முறையைத் தோற்றுவித்தவரும் கபிலர்தான்.

மேலும், கபிலர் குறிஞ்சிப்பாட்டில் 99 வகையான பூக்களின் பெயர்களை வரிசையாகக் கூறித் தமது படைப்பாற்றலை மிகச் சிறப்பாக வெளிப்படுத்திப் பெருமை பெற்றுள்ளார்.

கபிலர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து திணைகளிலும் பாடல்களைப் பாடியுள்ளார். மற்ற புலவர்கள் எல்லாம் ஓரிரு திணைகளில்தான் பாடல்களைப் பாடியுள்ளார்கள். எனவே, சங்கப் புலவர்களிலே ஐந்து திணைகளையும் பாடிய ஒரே புலவர் என்ற சிறப்பும் கபிலருக்கே உண்டு.

பத்துப்பாட்டு, எட்டுத் தொகை எனப்படும் சங்க இலக்கிய நூல்களிலே பத்துப் பாட்டில் கபிலர் எழுதிய குறிஞ்சிப்பாட்டு இடம் பெற்றுள்ளது. இதுபோல் எட்டுத் தொகை நூல்களிலே பரிபாடலைத் தவிர மற்ற ஏழு தொகை நூல்களிலேயும் கபிலரது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பரிபாடலில் மட்டும்தான் இவரது பாடல்கள் இடம் பெறவில்லை. ஆனால் பரிபாடல் நமக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆகவே, அது முழுமையாகக் கிடைக்காத வரை அதிலே கபிலரது பாடல்கள் இடம் பெற்றுள்ளதா? அல்லவா? என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது.

பரணர், நக்கீரர், ஔவையார் உள்ளிட்ட வேறெந்தப் புலவர்களின் பாடல்களும் இதுபோல் அனைத்து நூல்களிலும் இடம் பெறவில்லை. ஆகவே இந்தப் பெருமை சங்கப் புலவர்களிலே கபிலருக்கு மட்டுமே உண்டு.

திருக்கோவிலூரில் உள்ள கபிலர் குன்றின் மீது ஏறி நின்று குன்றின் உச்சிப் பகுதியான இந்த இடத்தில்தான் கபிலரின் உயிர் பிரிந்தது என்று இன்றும் கபிலரின் உயிர் பிரிந்த இடத்தைச் சுட்டிக் காட்ட முடியும். சங்கப் புலவர்களிலே கபிலரைத் தவிர வேறெந்தப் புலவர் உயிர் நீத்த இடத்தையும் சுட்டிக் காட்டிட இயலவில்லை.

இவ்வாறு சங்க காலத்தைச் சார்ந்த 600 புலவர்களிலே வேறெந்தப் புலவருக்கும் இல்லாத பல பெருமைகள் கபிலருக்கு மட்டுமே உண்டு.

சங்கப் புலவர்களிலே மிகுதியான பாடல்களைப் பாடிய ஒரே புலவர் என்ற சிறப்பு மட்டுமின்றி மேலும் பல கோணங்களிலும், மற்ற புலவர்களைக் காட்டிலும் சிறப்புப் பெற்றவரான கபிலரை, 'சங்க காலத் தலைமைப் புலவர்' என்று அழைத்திட இயலுமன்றோ?

கபிலர் குன்றின் பழைய நிலைமை

இவ்வாறு பல பெருமைகளைப் பெற்ற சங்க காலத் தலைமைப் புலவரான கபிலர் உயிர் நீத்த இடமான திருக்கோவிலூரில் உள்ள கபிலர் குன்று, 23 ஆண்டுகளுக்கு முன்பு வரை கபிலர் உயிர் நீத்த இடம் என்று வெளியுலகிற்குச் சரிவரத் தெரியாமல் கேட்பாரற்றுக் கிடந்தது.

கபிலர் இக்குன்றின் மீதுதான் உயிர் நீத்தார் என்பதற்கான கல்வெட்டுச் சான்றையும் அதற்குரிய தெளிவான விளக்கங்களையும் கொண்டு நான் இக்குன்றைத் தமிழ்நாடு அரசுக்கு முதன் முதலில் அடையாளம் காட்டி இதை அரசு தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு பராமரிப்பதுடன் கபிலர் நினைவாகத் திருக்கோவிலூரில் கபிலர் கோட்டம் ஒன்றையும் கட்டுவிக்க வேண்டும் எனக் கோரி 13-11-1975 முதல் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக,

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையின் அன்றைய இயக்குநர் டாக்டர் இரா.நாகசாமி அவர்களும் வேறு சில தொல்லியர் ஆய்வாளர்களும் இங்கு வருகை தந்து கபிலர் குன்றையும், கபிலர் உயிர் நீத்த செய்தியைக் கூறும் கல்வெட்டையும் பார்வையிட்டார்கள். கல்வெட்டுத் தொடருக்கு நான் கூறிய தெளிவான விளக்கங்களை ஏற்றுக்கொண்டு இக்குன்றில்தான் கபிலர் உயிர் நீத்த செய்தியைக் கூறும் கல்வெட்டையும் பார்வையிட்டார்கள். இக்குன்றில்தான் கபிலர் உயிர் நீத்தார் என்பதை உறுதி செய்து இந்த இடம் தொல்பொருள் ஆய்வுத் துறையின் சார்பில் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனக் கூறிச் சென்றார்கள்.

அதன்பிறகு தமிழக அரசு கபிலர் குன்றை 17-1-1985 அன்று தொல்பொருள் ஆய்வுத்துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமாக 'அரசு ஆணை எண் 20/தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை' மூலம் அறிவித்தது.

அன்று முதல் இக்குன்று தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாப்பில் இருந்து வருகிறது. இக்குன்றின் மீது 1992 ஆம் ஆண்டில்

அறிவிப்புப் பலகையொன்றையும் இத்துறை நிறுவியது. அத்துடன் இக்குன்றிற்கு 1993 ஆம் ஆண்டில் பகுதி நேரக் காவலர் ஒருவரையும் இத்துறை நியமித்தது.

கபிலர் குன்று சீரமைப்பு

ஆனால் இக்குன்றின் மீதுள்ள கோவிலும் படிக்கட்டுகளும் மிகவும் பாழடைந்த நிலையில் இருந்தன. இதனால் பார்வையாளர்கள் இக்குன்றின் மீது ஏறிப்பார்ப்பதற்கு அஞ்சினார்கள். எனவே இதனை உடனடியாகச் சீரமைக்க வேண்டும் எனக் கோரி 1996 ஆம்ஆண்டு ஜூன் மாதத்தில் நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் மடல்கள் எழுதினேன்.

பின்னர் சென்னைத் தலைமைச் செயலகத்திற்குச் சென்று தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர், முனைவர் தமிழ்க் குடிமகன் அவர்களை நேரில் சந்தித்து இக்கோரிக்கையை நிறைவேற்றும் படி வலியுறுத்தினேன். உடனே நமது கலைஞரின் அரசு இக்குன்றை ரூ.50 ஆயிரம் செலவில் மிகவும் சிறப்பான முறையில் சீரமைத்தது. இதனால் இக்குன்று தற்பொழுது பார்வையாளர்களுக்கு மிகவும் பாதுகாப்புள்ள இடமாகவும் பழமை சிறிதும் மாறாமல் புதிய பொலிவிலும் காட்சி அளிக்கிறது.

பள்ளிக்குக் 'கபிலர்' பெயர்

பாரியின் மகள்கள் **அங்கவை, சங்கவை** ஆகிய இருவரும் தமிழ்ப் புலமையில் ஆற்றல் மிக்கவர்களாக இருந்தனர். இவர்கள் எழுதிய பாடல் புறநானூற்றில் 112 ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. எனவே தமிழ்ப் புலமையோடும் எங்கள் ஊர் வரலாற்றோடும் தொடர்புடைய **'கபிலர்'** பெயரை எங்கள் திருக்கோவிலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும் பாரி வள்ளலின் மகள்கள் **'அங்கவை, சங்கவை'** ஆகியோர் பெயர்களை எங்கள் ஊர் அரசு மகளிர் மேல்நிலை பள்ளிக்கும் சூட்டவேண்டும் எனக்கோரி 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நம் முதல்வர் மாண்புமிகு டாக்டர் **கலைஞர்** அவர்களுக்கும் கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. **அன்பழகன்** அவர்களுக்கும் மடல்கள் எழுதினேன்.

பின்னர் தலைமைச் செயலகத்திற்குச் சென்று கல்வியமைச்சர் அவர்களிடம் இதுபற்றி நேரில் வலியுறுத்தியதன் விளைவாக. **கலைஞரின்** அரசு எங்கள் ஊர்ப் பள்ளிகளுக்குக் **'கபிலர்'**, **'அங்கவை, சங்கவை'** ஆகியோர் பெயர்களைச் சூட்டி 14-3-1997 அன்று 'அரசாணை நிலை எண்.115/பள்ளிக் கல்வித்துறை' மூலம் ஆணை பிறப்பித்தது.

கபிலரின் இறுதிக் காலம் பற்றிய ஒரு குழப்பமான வரலாறு

சங்கப் புலவர்களிலேயே மற்ற புலவர்களைக் காட்டிலும் கபிலரைப் பற்றித்தான் மிகுதியான வரலாற்றுக் குறிப்புகள் கிடைத்துள்ளன என்பதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். அவ்வாறு இருந்தும் கபிலரின் இறுதிக் காலத்தைப் பற்றி ஒரு குழப்பமான வரலாறு கடந்த நூற்றாண்டுகளாக நமது தமிழ் ஆய்வு உலகில் நிலவி வருகிறது.

கபிலரின் இறுதிக் காலத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ள நமக்குக் கிடைத்திருக்கும் ஒரே சங்க இலக்கியச் சான்றான புறம் 236 ஆம் பாடலின் பண்டைய அடிக்குறிப்பு 'வேள்பாரி துஞ்சிய வழி அவன் மகளிரைப் பார்ப்பார்ப் படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது' எனக்கூறுகிறது. அதாவது 'கபிலர் பாரியின் பெண்களைப் பார்ப்பனர்களிடம் ஒப்படைத்து விட்டு வடக்கிருந்து உயிர் நீத்தார்' என்பது இதற்குப் பொருள்.

ஆனால் புறநானூறு கூறும் இச்செய்திக்கு நேர் முரணாகத் திருக்கோவிலூரில் உள்ள கி.பி.11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராசராசன் கல்வெட்டு (தென் இந்தியக் கல்வெட்டுக்கள்-தொகுதி:7) (S.I.I.Volume-VII) எண் 863) 'கபிலன் பாரி தன்னடைக்கலப் பெண்ணை மலையர்க்குதவிக் கனல்புகும்' எனக் கூறுகிறது. 'கபிலர் பாரியின் பெண்ணை மலையருக்குத் திருமணம் புரிவித்து விட்டுத் தீப்பாய்ந்து உயிர் நீத்தார்' என்பது இதற்குப் பொருள்.

அதாவது, புறநானூறு 'பாரிக்கு இரு பெண்கள் (பாரி மகளிரை)' எனக்கூறுகிறது. ஆனால் திருக்கோவிலூர்க் கல்வெட்டு இதற்கு முரணாக 'ஒரு பெண் (பாரிதன் னடைக்கலப் பெண்ணை)' எனக் கூறுகிறது.

'கபிலர் வடக்கிருந்து உயிர் நீத்தார் (வடக்கிருந்து)' எனப் புறநானூறு கூறுகிறது. ஆனால் திருக்கோவிலூர்க் கல்வெட்டு இதற்கு முரணாகக் 'கபிலர் தீப்புகுந்து உயிர் நீத்தார் (கனல்புகும்)' என்று கூறுகிறது.

இவ்வாறு கபிலரைப் பற்றிப் புறநானூறு கூறும் ஒவ்வொரு செய்திக்கும் நேர் முரணான செய்தியைத் திருக்கோவிலூர்க் கல்வெட்டு கூறுவதாகச் சொல்லப்படுகிறது. இதனால் கபிலரின் இறுதிக் காலத்தைப் பற்றி ஒரு குழப்பமான வரலாறு இன்று வரை நிலவி வருகிறது.

புறநானூறும் திருக்கோவிலூர்க் கல்வெட்டும் கூறுகின்ற இந்த முரண்பாடான செய்திகளைப் பற்றி 1913 ஆம் ஆண்டில் மு.இராகவையங்கார் அவர்கள் தமது 'வேளிர் வரலாறு' நூலிலும் 1921 ஆம் ஆண்டில் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தமது 'கபிலர்' நூலிலும் 1936 ஆம் ஆண்டில் வே.வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் தமது 'கபிலர்' நூலிலும் 1937 ஆம் ஆண்டில் இரா.இராகவையங்கார் அவர்கள் தமது 'பாரி காதை' நூலிலும் அதன்பிறகு தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் தமது 'இலக்கியமும் கல்வெட்டுக்களும்' என்ற நூலிலும் ஆய்வு செய்து அவரவர்கள் வழியில் சமன்படுத்தி எழுதியிருந்தார்கள்.

ஆனால் இவர்களுடைய இந்தச் சமன்பாடுகளை நமது ஆய்வு உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் இந்த முரண்பாடுகள் இன்று வரை முரண்பாடுகளாகவே நிலவி வருகின்றன.

கபிலர் குன்று உருவப்படத்தை, முதலமைச்சருக்கு அளித்து மகிழ்கிறார், கட்டுரையாசிரியர்.

குடிசை மாற்று வாரியம்

- ★ குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் குடிசை மாற்று வாரிய வீடுகளில், வசித்து வருவோர் விரும்பினால், அத்தகு 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏழைகளுக்குத் தவணை முறையில் குறைந்த விலையில் அந்தந்த வீடுகளே சொந்தமாக்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.
- ★ 25 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட குடிசை மாற்று வாரிய வீடுகள் ரூ.9.50 கோடியில் புதுப்பிக்கப்படுகின்றன.
- ★ சென்னை மற்றும் நகராட்சிகளில் குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளுக்கென ரூ.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புறநானூறு உ.வே.சாமிநாத ஐயர் அவர்களால் முதன்முதலில் 1894 ஆம் ஆண்டு வெளிக்கொணரப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது. திருக்கோவிலூர்க் கல்வெட்டு 1902 ஆம் ஆண்டு வெளிக் கொணரப்பட்டது. கபிலரின் இறுதிக் காலத்தைப் பற்றிக்கூறும் இந்த இரண்டு வரலாற்றுக் குறிப்புகளும் வெளிக்கொணரப்பட்டு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு ஆகியும் இந்த வரலாற்றுக் குழப்பம் இன்னும் நீங்கவில்லை.

இதன் காரணமாகப் புறநானூறும் திருக்கோவிலூர்க் கல்வெட்டும் கூறுகின்ற இந்த முரண்பாடான செய்திகளைப் பற்றி இக்கட்டுரையாசிரியர் இரண்டு ஆண்டுகளாகச் சங்கப் பாடல்களிலே மறைந்திருக்கும் தடயங்களையும் பிற்காலத் தடயங்களையும் கொண்டு முழுக்க முழுக்க மொழியாராய்ச்சியின் மூலம் மிகவும் நுணுக்கமாக ஆய்வு செய்து இறுதியில் புறநானூற்றின் 'வேள்பாரி துஞ்சிய வழி அவன்மகளிரைப் பார்ப்பார்ப் படுத்து வடக்கிருந்து கபிலர்' என்கின்ற அடிக்குறிப்பு என்ன செய்திகளைக் கூறுகிறதோ அதே செய்திகளைத்தான் 'கபிலன் பாரிதன் னடைக்கலப்பெண் மலையர்க்குதவிக் கனல்புகும்' என்ற திருக்கோவிலூர்க் கல்வெட்டுத் தொடரும் கூறுகிறது. அதாவது 'கபிலர் பாரியின் இருபெண்களைத் திருமணம் புரிவித்துவிட்டு உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தார்' என்ற ஒரே செய்தியைத்தான் இவ்விரண்டுமே கூறுகின்றன. எனவே இவ்விரண்டும் முரண்பாடான செய்திகளைக் கூறவில்லை என்ற உண்மையை மறுக்க முடியாத சான்றுகளைக் கொண்டு நிறுவிப் 'புறநானூற்றுச் செய்திகளை உறுதி செய்யும் கபிலர் கல்வெட்டு (கபிலரின் இறுதிக் கால வரலாறு)' என்ற தலைப்பில் 600 பக்கங்கள் கொண்ட ஒரு ஆய்வு நூலை எழுதி விரைவில் வெளியிட உள்ளார்.

கபிலர் குன்றின் உலகப் பெருமை

கபிலர் உயிர்நீத்து 2200 ஆண்டுகளாகியும் அவர் உயிர் நீத்த இடம் இன்றும் சுட்டிக் காட்டப்படுகிறது என்பது உலகிலே மிகவும் வியப்புக்குரிய ஒரு செய்தியாகும்.

கபிலர் காலத்திலோ அல்லது அவர் காலத்திற்கு முன்போ உலகில் - வாழ்ந்த வேறெந்த மனிதன் உயிர் நீத்த இடமும் உலகில் இதுபோல் இன்று சுட்டிக் காட்டப்படவில்லை. அதாவது கபிலர் காலத்திற்குப் பின்பு வாழ்ந்த மனிதர்கள் உயிர்நீத்த இடங்கள்தான் இன்று சுட்டிக் காட்டப்படுகின்றனவே ஒழிய, அவருக்கு முன்பு வாழ்ந்த மனிதர்களின் உயிர் பிரிந்த இடங்கள் இன்று சுட்டிக் காட்டப்படவில்லை. எனவே உலகிலேயே இந்தப் பெருமை திருக்கோவிலூரில் கபிலர் உயிர் நீத்த இடமான கபிலர் குன்றுக்கு மட்டுமே என்றே கருதிட முயலும்.

உலகிலேயே மிகவும் நீளமான நதி நைல் நதி. உலகிலே மிகவும் உயரமான சிகரம் எவரெஸ்ட் சிகரம். இதுபோல் உலகிலே மிகவும் அதிகமான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மனிதன் உயிர்நீத்த இடம் கபிலர் குன்று ஆகும்.

சுற்றுலாத்தலமாக உருவாக்கல்

கபிலரின் பெருமையையும் கபிலர் குன்றின் பெருமையையும் தமிழ் மக்கள் மட்டுமின்றி உலக மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் பொருட்டுத் திருக்கோவிலூரில் கபிலர் குன்றுக்கு அருகில் உள்ள ஆற்றங்கரையில் 'கபிலர்' பெயரில் 'கோட்டம்' ஒன்றை அமைத்து அங்கே ஆண்டுதோறும் அரசின் சார்பில் 'கபிலர் விழா' நடத்த வேண்டும்.

கபிலர் குன்றை முதன்மைக் காரணமாகக் கொண்டு திருக்கோவிலூரைச் சுற்றுலாப் பயணிகள் வந்து பார்வையிடுவதற்கு ஏற்றவாறு கபிலர் குன்றைச் சுற்றி அனைத்து வகையான சுற்றுலா வசதிகளையும் உணவகம், தங்கும் விடுதி ஆகியவற்றையும் ஏற்படுத்தலாம்.

சங்க காலத்தை நினைவுகூரும் வகையில் 'சங்க காலக் கோட்டம்' ஒன்று இதுவரை தமிழ்நாட்டில் எங்கும் அமைக்கப்படவில்லை. சங்க காலத் தலைமைப் புலவர் கபிலர் பாரி வள்ளலின் மகள்களுக்குத் திருமணம் புரிவித்துப் பல ஆண்டுகள் வாழ்ந்து உயிர் நீத்த ஊராகிய திருக்கோவிலூர்தான் சங்க காலக் கோட்டத்தை அமைப்பதற்குத் தமிழ்நாட்டிலேயே மிகவும் பொருத்தமான இடமாகும். எனவே சங்க கால வரலாறு முழுவதும் இடம்பெற்ற 'சங்க காலக் கோட்டம்' ஒன்றையும் கபிலர் கோட்டத்திற்கு அருகில் அமைத்து அங்கே ஆண்டுதோறும் 'சங்க கால விழா' ஒன்றை அரசு நடத்தவேண்டும்.

கபிலர் குன்றை ஒட்டியவாறு ஆற்றின் இரு கரைகளையும் இணைக்கும் தரைப்பாலம் ஒன்று ஏற்கெனவே உள்ளது. வலுவிழந்த நிலையில் உள்ள இப்பாலத்தைச் சிறிது உயர்ப்படுத்திச் சீரமைப்பதுடன் கரைகளிலிருந்து இப்பாலம் தொடங்கும் இருமுனைகளிலும் கபிலர் பெயரில் மிகப்பெரிய நுழைவு வாயில்களை அமைக்கலாம்.

கபிலர் குன்றின் படிக்கட்டுகளுக்கு நேர் எதிரே ஆற்றில் ஓர் உயரமான நீண்ட பாறை உள்ளது. இப்பாறை மீது கபிலர் பாரி மகளிர் அங்கவை, சங்கவையை மலையமான் திருக்கண்ணன், சிறுகண்ணன் ஆகியோருக்குத் திருமணம் செய்து வைப்பது போலவும் அருகில் மணமகன்களின் தந்தை மலையமான் திருமுடிக்காரி நிற்பது போலவும் பெரிய அளவிலான சிலைகளை அமைக்கலாம்.

கபிலர் குன்றுக்கும் இச்சிலைகள் அமையவிருக்கும் பாறைக்கும் நடுவில் உள்ள இடமும் பாறைகளாகவே உள்ளன. எனவே கபிலர் குன்றையும் சிலைகள் அமையவிருக்கும் பாறையையும் சுற்றி ஆற்றில் சுவர் எழுப்பி இடையில் உள்ள இடத்தில் பூங்கா ஒன்றை அமைக்கலாம்.

சிலைகள் அமையவிருக்கும் பாறைக்கும் அதன் அருகில் செல்லும் தரைப்பாலத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் சுற்றுலாப் பேருந்துகள் வந்து நிற்பதற்கு வசதியாகச் சிமெண்ட் தளம் அமைக்கலாம்.

ஆற்றங்கரையிலிருந்து நேராகக் கபிலர் குன்று பகுதிக்குச் சுற்றுலாப் பயணிகள் நடந்து செல்வதற்குத் தரைப்பாலம் ஒன்றை அமைக்கலாம்.

'திருக்குறளிலே திளைத்து குறளோவியம் நூலையும்
வள்ளுவர் கோட்டத்தையும் தந்தார் கலைஞர்!"
"சிலப்பதிகாரத்திலே திளைத்துப் பூம்புகார் திரைப்படத்தையும்
புதிய பூம்புகார் நகரையும் தந்தார் கலைஞர்!"
என்கின்ற வரலாறு தற்பொழுது நிலவி வருவது போலச்
சங்க இலக்கியத்திலே மூழ்கிச் சங்கத் தமிழ் நூலையும்
கபிலர் கோட்டத்தையும் தந்தார் கலைஞர்!"

- என்ற புதிய வரலாறு கலைஞர் அவர்களால் படைக்கப்படும் என்பது உறுதியே!

கலைஞர் அவர்கள் திரும்பவும் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு கபிலர் குன்றைச் சீரமைக்க வேண்டும் என்றும் பள்ளிக்குக் 'கபிலர்' பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி வைத்த கலைஞர் அவர்கள் இப்பகுதி மக்களின் இக்கோரிக்கைகளை உறுதியாக நிறைவேற்றித்தருவார் என்ற நம்பிக்கை வீண்போகாது; ஏனெனில், **கபிலர், கலைஞர் வியக்கும் கபிலரல்லவா!** ★

சிறுகதைக்கோர் புதுமைப்பித்தன்

தொ.மு.சி.ரகுநாதன்

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்கு மகாகவி பாரதி (1882-1921) எவ்வாறு தன்னிகரில்லாத தலை மகனாகத் திகழ்ந்தாரோ, அவ்வாறே தமிழ்ச் சிறுகதைக்குத் தன்னிகரில்லாத் தலைமகனாகத் திகழ்ந்தவர் புதுமைப்பித்தன் (1906 - 1948).

பாரதி அமரராகி முக்கால் நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாகியும், தமிழில் எளிமையும், புதுமையும், வலிமையும் மிக்க நல்ல கவிதைகளை எழுதுவோருக்கும், எழுத விரும்புவோருக்கும் இன்றும் அவரது கவிதைகள் எவ்வாறு பாலபாடமாகவும் மூலபாடமாகவும் விளங்கி வருகின்றனவோ, அவ்வாறே புதுமைப்பித்தன் புகழுடல் எய்திக் கிட்டத்தட்ட அரைநூற்றாண்டுக் காலம் கடந்தும் இன்றும், தமிழில் புதுமையும், வலிமையும், சமூக உணர்வும் மிக்க நல்ல சிறுகதைகளை எழுதுவோருக்கும், எழுத விரும்புவோருக்கும், புதுமைப்பித்தனின் கதைகள் பாலபாடமாகவும், மூலபாடங்களாகவும் விளங்கி வருகின்றன. ஆம், கவிதை உலகில் தமது தனித்த முத்திரையைப் பதித்த பாரதியைப் போல், சிறுகதை உலகில் தமது தனித்த முத்திரையைப் பதித்துவிட்டுச் சென்ற சிறுகதை ஆசிரியர் புதுமைப்பித்தன்.

சொல்லப்போனால், பாரதி காலத்தில் ஏனைய புலவர்கள் உலாவென்றும், மடலென்றும், ஒருதுறைக் கோவையென்றும் பாடித் தமது புலமையைப் புலைப்பொருளாய் வீணடித்துக் கொண்டிருந்த அதே சமயம், பாரதி, நிலைகெட்ட மனிதரை நினைத்து எவ்வாறு நெஞ்சு பொறுக்காமல் பாடினாரோ, அதேபோல் புதுமைப்பித்தனின் சமகாலத் தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்கள் பலரும், காதல், கத்திரிக்காய் என்று கதை பண்ணிக்கொண்டு., அம்மாயி - அத்திம்பேர் - அத்தங்கார் கதைகளையும், அப்பளக் கச்சேரிக் கதைகளையும் எழுதிக் குவித்துவந்த காலத்தில், புதுமைப்பித்தன் ஒருவரே வாழ்க்கையில் பிறர் கண்ணெடுத்துப் பார்ப்பதற்குக் கூசிய சமுதாயச் சீர்கேடுகளையும், அவலங்களையும், சமூக முரண்பாடுகளையும் கீறிப் பிளந்து காட்டி சீறியெழும்பும் கேள்விக் குறிகளை எழுப்பிய கதைகள் பலவற்றையும் எழுதி வந்தார்.

தாவிச்செல்லும் நடை

அவரது கதைகளில் உருவம், உள்ளடக்கம், உத்தி, நடை எல்லாமே அவர் புனைந்து கொண்ட பெயருக்குப் பொருத்தமாகப் புதுமை வேட்கையில் பிறந்தவையாக விளங்கின. உண்மையில் அவர் தமது கதைகளுக்குத் தேர்ந்தெடுத்துக் கொண்ட உள்ளடக்கமே அவற்றின் உருவம், நடை, உத்தி யாவற்றையும் தீர்மானித்தது எனலாம். அவரே தமது சிறுகதைத் தொகுதியொன்றின் முன்னுரையில், "கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு, வார்த்தைகளை வெறும் தொடர்புச் சாதனமாக வைத்துத் தாவிச் செல்லும் நடை ஒன்றை அமைத்துக் கொண்டேன். இது நானாக எனக்கு வகுத்துக்கொண்ட பாதை. தமிழ்ப்பண்புக்கு முற்றிலும் புதிது" என்று எழுதியிருக்கிறார். அவரே குறிப்பிட்ட இந்தத் தாவித் தாவிச் செல்லும் தவளைப் பாய்ச்சல் நடை, அவரது ஆரம்பக் காலக் கதைகள் பலவற்றுக்கும் அநாயாசமாகக் கைகொடுத்து உதவியது.

உதாரணமாக, வயிற்றுக்கொடுமையால் வாலிப உடலை விற்றுப் பிழைப்பவருக்கும்கூட, மான உணர்ச்சி உண்டு என்ற கருத்தை வலியுறுத்தித் தாம் எழுதியுள்ள 'கவந்தனும் காமனும்' என்ற கதையில், தெருமுனையில் அவள் நின்ற நிலையை, "அலங்கோலமான ஸ்திதியில் ஒரு பெண். பதினாறு பதினேழு வயது இருக்கும். காலணா அகலக் குங்குமப் பொட்டு, மல்லிகைப் பூ, இன்னும் விளம்பரத்துக்குரிய சரக்குகள்" என்று வருணிக்கிற புதுமைப்பித்தன், "நீங்கள் போட்டிருக்கிறீர்களே பாப்ளின் ஷர்ட், உங்கள் ஷெல் பிரேம் கண்ணாடி ! எல்லாம் அவர்கள் வயிற்றில் இருக்க வேண்டியதைத் திருடியதுதான். ரொம்ப ஜம்பமாக, நாசூக்காகக் கண்ணை மூட வேண்டாம். எல்லாம் அந்த வயிற்றுக்காகத்தான்" என்று அந்தப் பெண்ணின் இத்தகைய அவல நிலைக்குக் காரணமான சமுதாயச் சுரண்டலை நறுக்குத்தெறித்தாற்போல் சாடி விடுகிறார். இதேபோல், காய்ச்சலில் கிடக்கும் தன் கணவனுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றுவதற்காகத் தன் கற்பை முக்கால் ரூபாய்க்கு விற்க நேர்ந்த அம்மாளுவின் நிலையைக் கூறும்'பொன்னகரம்' என்ற சேரி மக்களைப் பற்றிய கதையில், அங்குள்ளோர் "எல்லோரும் ஏகதேசக் குடியர்கள்தான். 'டல் சீச'னில் பசியை மறக்க வேறு வழி? பசி ஐயா பசி! 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்று ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே, அங்கு நீர் ஒருநாள் இருந்தால், உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!" என்று உல்லாசபுரியாருக்கு நெஞ்சில் உறைக்கிற மாதிரிச்சாட்டையடி கொடுத்துவிட்டுக் கதையைத் தொடர்கிறார்.

இவ்வாறு ஓரிரு வார்த்தைகளைப் பிரயோகித்து, உள்ளத்தில் ஊசி குத்துகிற மாதிரி சில உண்மைகளை உணர்த்தி விடுவது புதுமைப்பித்தனுக்குக் கைவந்த கலையாக இருந்தது. உதாரணமாக, பாலிய மணத்தின் கொடுமையைக் கருவாகக் கொண்ட 'ஆண்சிங்கம்' என்ற கதையை, "சீனிவாசனுக்குக் கலியாணமானது நினைவில் இல்லை. ஏனெனில் அது பெப்பர்மின்ட் கலியாணம்" என்று நெஞ்சில் தைக்கிற மாதிரிக் கூறிவிட்டுத் தான் கதையை மேலும் தொடர்கிறார். இதுபோல், இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் வெள்ளைக்கார முதலாளிகளின் சுரண்டலுக்கு ஆளாவதோடு, அவர்களிடம் தமது கற்பையும் பறிகொடுக்க நேர்ந்த அபலைப் பெண்களின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் 'துன்பக்கேணி' என்ற கதையில், வெள்ளை முதலாளிகளுக்குத்தேயிலைத் தோட்டக்கூலி பெண்களை 'ஏற்பாடு' செய்து கொடுக்கும் ஸ்டோர் மானேஜரைப் பற்றிக் கூற வரும்போது, அவர் "கன்னைய நாயனார் ரகத்தைச் சேர்ந்த பேர்வழி. தனது இஷ்ட தெய்வத்துக்குத் தான் ருசித்துப் பார்த்துத்தான் சமர்ப்பிப்பார்" என்று உவமித்துக்கூறி, அந்தப் பெண்களின் கற்பு பலராலும் சூறையாடப் படுவதைப் புதுமைப்பித்தன் உணர்த்தி விடுகிறார்.

காலத்துக்கும் களத்துக்கும் ஏற்ற நடை மாற்றம்

இதுபோலவே 'ஒரு நாள் கழிந்தது' என்ற கதையில், "சென்னையில் ஒட்டுக் குடித்தனம் என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக்காரன் குடியிருக்க வருகிறவர்கள் எல்லோரும் திருக்கழுக்குன்றத்துக் கழுகு என்று நினைத்துக் கொள்வானோ என்னவோ ?" என்று எழுதுகிறார் புதுமைப்பித்தன். எங்கிருந்து வந்தது, பிறகு எங்கே சென்றது என்ற சுவடே தெரியாமல், உணவு நேரத்துக்கு மட்டும் வந்து தலைகாட்டிவிட்டு மறையும் திருக்கழுக்குன்றத்துக் கழுகை அறிந்தவர்கள், இந்த உவமானத்தின் மூலம் புதுமைப்பித்தன் ஒட்டுக் குடித்தனத்தில் அடங்கியுள்ள உபத்திரவங்களையெல்லாம் ஒரே வரியில் எவ்வாறு உணர்த்தி விடுகிறார் என்பதைச் சுவையாக உணரலாம்.



புதுமைப்பித்தன் கதைகள் எல்லாமே இத்தகைய தவளைப் பாய்ச்சல் நடையிலேயே இருந்தன என்று சொல்ல முடியாது. கவிதையின் உள்ளடக்கத்துக்கும் உணர்ச்சிக்கும் ஏற்ப எவ்வாறு தாளலயமும் சொல்லாட்சியும் மாறுகின்றனவோ, அதேபோல் புதுமைப்பித்தன் கதைகளிலும், கதையின் கருப்பொருளுக்கும் காலத்துக்கும் களத்துக்கு ஏற்ப நடையும் மாறும்.

சிலர் சமூகக் கதை எழுதினாலும், சரித்திரக் கதை எழுதினாலும், தம்புராவைப் போல ஒரே சுருதியில் ஒரே மாதிரியான நடையில் எழுதிச்செல்வர். ஆனால் புதுமைப்பித்தன் கதைகளில் அவரது வசன நடை ஒரே சுருதியில் பேசிக் கொண்டிராது. கதையின் கரு, காலம், பாத்திரம், களம் ஆகியவற்றுக்கேற்ப அவரது நடையும் சுருதியும் கதியும் மாறிப் பேசும். எடுத்துக்காட்டாக திருநெல்வேலி வட்டார வாழ்க்கை பற்றிய கதையான 'நினைவுப்பாதை' என்ற கதையில், 'மேலச்சேவல் வைரவன் பிள்ளை' என்ற பாலசுப்பிரமணியப் பிள்ளையின் மனைவி வள்ளியம்மை ஆச்சி நேற்றுத்தான் இறந்துபோனாள்...இன்று காடேற்று, நீண்ட நாள் வியாதி ஒன்றும் இல்லை. போன சனிக்கிழமை புழக்கடையில் கால் வழுக்கி விழுந்தாள். இடுப்பிலும் விலாவிலும் ஊமையடி அதில் படுத்தவள்தான், எழுந்திருக்கவே இல்லை" என்றுதான் கதையே தொடங்கும். தொடர்ந்து, "போன மாசமே சுப்புப்பிள்ளை அண்ணாச்சி சொல்லலே... ஆச்சிக்கு ஒரு கண்டமிருக்குன்னு. நானும் அன்னைக்கு விளையைப் பாத்துட்டு வரப்போ பேசிக்கிட்டுத் தானே வந்தேன். வெள்ளிக்கிழமை கழிஞ்சாத்தான்னார். காலன் வாரதுக்குக் கணக்கின்னும் நேரமின்னும் உண்டுமா ?" என்று சுந்தரம் பிள்ளை வட்டார வழக்கில் பேசுவதும் நமக்குக் கேட்கும்.

உவமையும் உருவகமும்

இதேபோல் அவர் இருபதாம் நூற்றாண்டின் வட்டார வாழ்க்கையை விட்டுவிட்டு, மாணிக்கவாசகர்

ஓரிரு வார்த்தைகளைப் பிரயோகித்து உள்ளத்தில் ஊசி குத்துகிற மாதிரி சில உண்மைகளை உணர்த்திவிடுவது புதுமைப்பித்தனுக்குக் கைவந்த கலையாக இருந்தது.

காலத்துக்குச் சென்று, பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி வாங்கிய பித்தனைப் பற்றிய 'அன்றிரவு' என்ற கதையை எழுத முனையும்போதோ, அவரது நடை காவிய கம்பீரத்தையும் கனத்தையும் பெற்றுவிடுகிறது. உதாரணமாக, சொக்கேசனின் வருகையை எதிர்பார்த்து, அங்கயற்கண்ணி ஊஞ்சலாடிய காட்சியைப் புதுமைப்பித்தன் பின்வருமாறு வருணிக்கத் தொடங்கிவிடுகிறார். "விளக்கமற்ற வெளிச்சத்திலே, புலன்விளக்கு எட்டாத ஒளிப்பிரவாகத்திலே, மணியூசல் விசையோடு ஆடியது. அளகச்சுருள், புலன் உணர்வு நுகரும் இருட்டுடன் இருட்டாகப் புரள, கால் விசைத்து, உந்திச்சுழி குழிந்து, அலைபோல் உகள, கொங்கை பூரித்து விம்மிக் குலுங்க, அன்னை மணியூசல் ஆடினாள். ஆலவாய் ஈசன் அழகன் சொக்கன் வருகை நோக்கி மணியூசல் ஆடினாள். அங்கயற்கண்ணியின் அதரத்திலே கீற்றோடிய புன்சிரிப்பு; மருங்கிலே துவட்சி, கண்களிலே விளையாட்டு; நெஞ்சிலே நினைவு. செல்வி மணியூசல் ஆடினாள். அண்டபகிரண்டங்களையும் சகல சராசர பேதங்களையும் தன்னுள் அடக்கும் ஆலிலை வரிவிட்டுப் புரண்டு விளையாடியது".

இதேபோல் புதுமைப்பித்தன் கையாள்கின்ற உவமையும் உருவகமும் கூடப் புதிய அனுபவத்தை வழங்குபவையாக விளங்கும். 'மனித எந்திரமாக' வாழும் வர்த்தகக் குமாஸ்தா மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அவர், 'பொறுப்பு, ஏமாற்று, சுயமரியாதை, நம்பிக்கை என்று நியதியற்றுச் சுழலும் ஒரு கிரக மண்டலத்தையே தூக்கிச் சுமக்கும் பிறவி'யாக இனம் காட்டுவார். "தமிழ்க் கவிஞர்களின் கனவுகள் எல்லாம் திரண்டு வடிவெடுத்தது போன்றது அவள் தேக அமைப்பு" என்று அழகியொருத்தியை அவர் அடையாளம் காட்டுவார். "எங்கெங்கோ வாரியிறைத்த பிரமதேவனின் நம்பிக்கைகள் போல, வாழ்க்கை எரியிட்ட கனல்கள் போன்ற" என்று நட்சத்திரங்களை அவர் வருணிப்பார். அந்திமாலையின் செக்கர் மயக்கத்தை, "அந்தித் தேவனின் சோக நாடகம், அந்தச் சாயங்காலம் சீதையின் சோகத்தையும் கதேயின் பாஸ்டையுமே நினைவுக்குக் கொண்டு வரும்" என்று புதுமையாகக் குறிப்பிடுவார்.

உத்திகள் என்று பார்த்தால் புதுமைப்பித்தன் தமது கதைகளில் கையாண்ட உத்திகள் பலப்பல. அவை அவர் எடுத்துக்கொண்ட கதைப்பொருளுக்கும் வலியுறுத்த விரும்பும் கருத்துக்கும் ஏற்பவே வடிவெடுத்தன. கதையை, இப்படித்தான் தொடங்கவேண்டும், இப்படித்தான் முடிக்க வேண்டும் என்ற எந்த சம்பிரதாயமான தடத்தையும் அவர் பின்பற்றியதில்லை. யானை போனால் அது போன வழிதான் அதற்குத்தடம் என்பது போலவே அவரது உத்தியும் இருந்தது. அவரே தமது கட்டுரையொன்றில், "சிறுகதைக்கும், தனிப்பாட்டு என்ற 'லிரிக்'குக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றுதான். வரிக்கு ரூபம் அவசியம். சிறுகதையில் ரூபம் கதை எழுதுவோனின் மனோதர்மத்தைப் பொறுத்தது" என்று கூறுகிறார். எடுத்துக்காட்டாக, ஒரு மரணத்தைக் கருப் பொருளாகக் கொள்ளும் கதாசிரியர்கள் பலரும், அந்த மரணம் நிகழ்வதையே முத்தாய்ப்பாக்கி, அதனைக் கதையின் இறுதியில்தான் கூறுவார்கள். ஆனால் புதுமைப்பித்தன் தமது 'செல்லம்மாள்' என்ற கதையைக் கூறும்போது, 'செல்லம்மாளின் மூச்சும் அடங்கிற்று" என்றுதான் கதையைத் தொடங்குகிறார். கதையின் முடிவிலோ இறந்துபோன செல்லம்மாளை நமது இதயத்தில் வாழவைத்துவிடுகிறார்.

மைல் கல், சகாப்தம்

1943இல் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற தலைப்பிலேயே அவர் உரையாற்றியபோது, அவரே இவ்வாறு குறிப்பிட்டார்: "இவ்வாறுதான் கதை எழுதவேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். அவ்வாறு பாத்தி கட்டிக்கொண்டு கதை எழுத என்னால் முடியாது. சில எழுத்தாளர்களுக்கு நிலவும் தென்றலும் வராவிட்டால் கதையே வராது. ஆனால் எனது செண்பகராமன் பிள்ளை இருட்டிலேதான் புறப்பட்டுப்போனார். இருட்டிலேயே திரும்பி வந்தார். "சம்சார பந்தத்தில் சலிப்பேற்பட்டு சன்னியாசியாகப் புறப்பட்டுச் சென்ற செண்பகராமன் பிள்ளை மீண்டும் சம்சாரபந்தத்துக்கே திரும்பி வர நேர்ந்ததை விவரிக்கும் 'சித்தி' என்ற தமது கதையைக் கருத்தில் கொண்டே புதுமைப்பித்தன் இவ்வாறு கூறினார்.

பாரதியைப்போல, புதுமைப்பித்தனும் அற்பாயுசில் மறைந்தவர்தான். அவரது இலக்கிய வாழ்க்கைக் காலமும் இருபது ஆண்டுகளுக்குக் குறைந்ததுதான். இந்தக் குறுகிய காலத்துக்குள் அவர் மொத்தத்தில் ஏறத்தாழ நூறு கதைகளே எழுதியிருக்கிறார். எனினும் அவற்றில் பலவும் நூறாண்டுகாலம் மங்காது வாழும் தெம்பும் திறனும் படைத்தவை.

ஆம் தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலும் வளர்ச்சியிலும் புதுமைப்பித்தன் ஒரு மைல்கல், ஒரு திருப்புமுனை; ஒரு சகாப்தம், அதில் சந்தேகமில்லை.

★★★

கால்நடை பராமரிப்பு

- ★ கால்நடை மற்றும் கோழி இனங்களுக்கு அதிக அளவிலான உடல் நலன் பேணும் நோக்குடன் 10 கால்நடை மருந்தகங்களை, கால்நடை மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன; பத்து புதிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு கால்நடை பராமரிப்புக் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- ★ கால்நடைகளுக்குத் தீவிர உடல்நல சிகிச்சை அளிக்கும் பொருட்டு 1997ஆம் ஆண்டு 60 இடங்களில் புதிய கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன; 20 கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 3 கால்நடை மருத்துவமனைகளை பிரதம மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. கால்நடை பராமரிப்புத்துறையின் நிர்வாக நலனை முன்னிட்டும் மேற்பார்வையின் திறனை அதிகரிக்கும் நோக்குடனும் புதிதாக 6 மண்டலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 2126 கிராமங்களில் ரூ.42.5 இலட்சம் செலவில் கால்நடை உப கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.
- ★ தேசிய வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தின் தீவிர தடுப்பூசிப் பணி திட்டத்தின் பலனாக மாநிலமெங்கும் கால்நடைகளுக்கும், ஆடுகளுக்கும் அதிக அளவில் ஏற்படும் இறப்புத் தவிர்க்கப்பட்டுள்ளது.
- ★ புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்சமயம் செயல்பட்டு வரும் டென்மார்க் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தினை, இரண்டாவது கட்டமாக, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களின் 46 பஞ்சாயத்து யூனியன்களுக்கு ரூ.27.50 கோடி செலவில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பால்வளம்

- ★ கடந்த 1½ ஆண்டுகளில், 17 மாவட்ட ஒன்றியங்கள், 10,446 முதன்மைச் சங்கங்கள் ஆகியவற்றின் சீரிய பணிகளின் வாயிலாக, நாளொன்றுக்கு 16.4 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.
- ★ இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 1995-96, 1996-97ஆம் ஆண்டுகளில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ.336.63 இலட்சங்கள், 100% மான்யமாக வழங்க தேசிய பால் நிறுவனம் இசைவு நல்கியுள்ளது.
- ★ ஆதிதிராவிடர் நலத்திட்டத்தின் கீழ், கறவை மாடுகள் வாங்க ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு 50% மானியத்தில் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

அட்டைப்பட விளக்கம்:

முதல் பக்க அட்டை:

சர்தார் வேதரத்தினம் பிள்ளை அஞ்சல் தலை வெளியீடு

இரண்டாம் பக்க அட்டை:

கபிலர் குன்று

கடைசிப்பக்க அட்டை:

கூட்டுறவுத் துறையின் சில பணிகள்

பறந்து செல்க!

- கவிஞர் சாமி.பழநியப்பன்

காதலெனும் உயிர்ப்பொருளை மூட்டை கட்டி
கடைத்தெருவில் விலைபேசி விற்று விட்டு
மாதர்களை மதுவுலவும் மலர்க ளாக
மதிக்கின்றார் இந்நாளில் இவ்வையத்தார்!

கொதிக்கின்ற உள்ளமே உனக்கிப் பாரில்
குடியிருப்புக் கிடமில்லை பறந்து செல்க !

உடுப்பதுவும் உண்பதுவும் அல்லால் தன்னை
உய்வித்த தாய்நாட்டை உளத்தே எண்ணிக்
கடுகளவும் தொண்டுசெயற் கெண்ணி டாமல்
கண்மூடி வாழுகிறார் இவ்வையத்தார்!

கொதிக்கின்ற உள்ளமே உனக்கிப் பாரில்
குடியிருப்புக் கிடமில்லை பறந்து செல்க !

தெய்வங்கள் பலவாக்கி மக்கள் நெஞ்சில்
தீமைநிறை மடமையினை வளரச் செய்யும்
பொய்யர்களைப் பொய்யரென் றறிந்திடாமல்
போற்றுகிறா(ர்) இந்நாளில் இவ்வையத்தார்!

கொதிக்கின்ற உள்ளமே உனக்கிப் பாரில்
குடியிருப்புக் கிடமில்லை பறந்து செல்க!

வகையற்ற மக்களின்நல் வாழ்விற் காக
வாகையுறுஞ் செயலேதும் ஆற்றி டாமல்
நகைமுகத்தைக் காட்டிநமை நாசஞ் செய்யும்
நரியார்தாள் பணிகின்றார் இவ்வையத்தார்!

கொதிக்கின்ற உள்ளமே உனக்கிப் பாரில்
குடியிருப்புக் கிடமில்லை பறந்து செல்க!

அறிவுடைமை என்பதனை ஆடிக் காற்றில்
அகன்றோடும் பதராகப் பறக்க விட்டு
பிறரையுமந் நிலைமைக்குள் ளாக்கு கின்ற
பெற்றியினர் நிறைந்துள்ளார் இவ்வையத்தே!

கொதிக்கின்ற உள்ளமே உனக்கிப் பாரில்
குடியிருப்புக் கிடமில்லை பறந்து செல்க!

எங்கள் ஊர்ப் பிரச்சினை

பிரச்சினை :

கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவன்-பரதர் சமுதாய மக்கள் ஏழை மீனவர்கள். இவர்கள் பெரும்பாலும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள். எங்கள் குழந்தைகள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புப் பெறத் தேவைப்படும் சாதிச் சான்றிதழ் 89ஆம் ஆண்டு முதல் 93ஆம் ஆண்டின் தொடக்க காலம் வரை, மிகவும் பிற்படுத்தப்பட்டவர் (Most Backward class) என வழங்கப்பட்டது. ஆனால் 1993ஆம் ஆண்டின் இடைக்காலம் முதல் தொடர்ந்து 97ஆம் ஆண்டு வரையிலும் பிற்பட்டோர் (Backward class) என வழங்கிவருகின்றனர். ஆனால் தமிழகத்தின் பிற மாவட்ட பரவன்-பரதர் சமுதாய மக்களுக்கு ''மிகவும் பிற்படுத்தப்பட்டோர்'' (Most Backward class) என்று சாதிச் சான்றிதழ் வழங்கிவருகின்றனர். ஒரு வீட்டில் இரு குழந்தைகளுக்கு ஒருவருக்கு Most Backward Class என்றும் அடுத்தவருக்கு Backward Class என்றும் உள்ளது. இதனால் - பள்ளி, கல்லூரிகளில் குழப்ப நிலை ஏற்படுகின்றது. எனவே, தாங்கள் தயவுசெய்து கன்னியாகுமரி மாவட்ட ஏழை மீனவ மக்கள் பயன்பெற, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெற, இப்பிரச்சினையைத் தமிழரசு புத்தகத்தில் இடம்பெறச் செய்து அதன் தீர்வையும் தருமாறு வேண்டுகிறேன்.

பரவன்-பரதர் சமுதாயமக்கள்,
மருங்கூர்-629 402.
கன்னியாகுமரி மாவட்டம்.

தீர்வு :

அரசு ஆணையில் வரிசை எண்.27இல் பரவர் இனத்தவர் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலியிலுள்ள செங்கோட்டா வட்டங்களில் ஆதிதிராவிடர் எனவும் மாநிலத்தின் பிற பகுதிகளில் இவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் எனவும் ஆணையிடப் பட்டுள்ளது. இதில் கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறியவர்களும் அடங்குவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு ஆணை எண்.28/பிற்பட்டோர் நலம், நாள்:19.7.94 பத்தி-1ல் இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய அனைவரும் பிற்பட்டவர்களாகவே கருதப்படுவர் என ஆணையிடப்பட்டுள்ளது. எனவேதான், அந்த ஆணை வரப்பெற்ற தேதி முதல் பரவர் இனத்தவருக்கும் தற்போது பிற்பட்டவர் எனச் சான்று வழங்கப்பட்டு வருகிறது.

ஆர்.சுப்பிரமணியன்,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

பிரச்சினை:

வேலூர் மாவட்டம், வாலாசா வட்டம், செங்காடு கிராமத்தில் அமைந்து இருக்கும் அரசுக்குச் சொந்தமான ஸ்ரீவைகுண்ட பெருமாள் கோயில் உள்ளது. இந்தக் கோயில் மிகவும் பழைமை வாய்ந்த கோவில். இதற்குச் சொந்தமான நஞ்சை நிலம் 7 ஏக்கர், பாசனக் கிணறும் உள்ளது. தவிர, தமிழ்நாடு தலைநகர் சென்னையில் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி கோயில் பின்புறம் இந்தக் கோயிலுக்குச் சொந்தமான ஓட்டு வீடும் உள்ளது. இவ்வளவு சொத்துக்கள் இருந்தும் விளக்குகள் ஒன்றுகூட எரிவது கிடையாது. பூஜை நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. கோயில் ராஜகோபுரம் இடிந்து விட்டது. புஜ கம்பம் (காம்பவுண்ட்) சுற்றுச் சுவர் மற்றும் அறைகள் எல்லாம் மிகவும் பழுது அடைந்து உள்ளது. இந்தக் கோயில் எங்கள் கிராமத்திற்குச் சுற்று வட்டக் கிராமங்களுக்கு மிகவும் பெயர் பெற்ற கோயில். எனவே, இக்கோயிலின் பழுது நீக்கிப் புதுப்பித்துத் தரும்படி தங்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ந.வடிவேலன்,
செங்காடு, வேலூர் மாவட்டம்.

தீர்வு:

வேலூர் மாவட்டம், வாலாசா வட்டம், செங்காடு ஸ்ரீவைகுண்ட பெருமாள் திருக்கோயில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் உள்ள பட்டியலில் சாராத - ஆனால் ஆளுகைக்குட்பட்ட கோயில் என்பதால் செயல் அலுவலரால் திருக்கோயில் நிர்வாகம் கவனிக்கப்பட்டு வருகிறது.

இத் திருக்கோயிலுக்கு மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு ஏழு ஏக்கர் நஞ்சை புஞ்சை நிலங்களும், சென்னையில் திருவல்லிக்கேணி பகுதியில் வீடும் உள்ளது. நிலங்கள் அனைத்தும் துறை சட்ட விதிகளின்படி பொது ஏலத்தில் குத்தகை விடப்படுகிறது. சரியான பாசனவசதி இல்லாத காரணத்தாலும், கிராம முரண்பாடுகளின் காரணமாகவும், அதிகத் தொகைக்குக் குத்தகை எடுக்க வாய்ப்பில்லை. ஏற்கெனவே, குத்தகை எடுத்த குத்தகைதாரர்கள் நிலுவை குத்தகைத் தொகையினை முறையாகக் கட்டுவதில்லை. நிலுவைத் தொகையினை வசூல் செய்ய அவ்வப்போது துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சொற்பமாக வசூல் ஆகும் தொகையில் திருக்கோயில் பூஜை சாமான்கள், எண்ணெய் வாங்குவதற்கும் செலவிடப் படுகிறது. ஆலய அர்ச்சகரால் பூஜை ஒழுங்காக நடைபெற்று வருகிறது.



இவ்வாலயத்திற்கு சொந்தமாகச் சென்னை நகரில் உள்ள வீட்டின் வாடகை, வரப்பெறாமையால், வாடகை நிலுவைக்காகவும், வீட்டைக் குடியிருப்பவர் காலி செய்யவும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வாடகைதாரர் மீது வழக்குத் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

இத்துறையின் கீழ் உள்ள ஆலயத்திற்குத் திருப்பணி மேற்கொள்ளும்போது துறை உதவிப் பொறியாளரால், மதீப்பிடு தயாரிக்கப்பட்டு திருப்பணிக்காக ஆகும் செலவுத் தொகை ஒன்றில் மூன்று பங்கு பொதுமக்கள் மூலம் நன்கொடை பெற்றுத்தான் வேலைகள் துவங்கமுடியும், ஊர்ப் பொது மக்கள் ஆலயத் திருப்பணிக்காக - உபயமாக நிதி உதவியினைப் பெரும் அளவில் அளித்தும், அரசின் நிதி உதவியும் பெற்றுத்தான் ஆலயத் திருப்பணி செய்யப்பட வேண்டும். ஆலயத்திற்கு வரவினம் அதிகப்படியாக இல்லாத நிலையில் ஆலயம் புதுப்பிக்கப்பட இல்லாமல் இருக்கும் நிலை தொடர்கிறது என்பதைக் கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

-ப.வி.ச. டேவிதார், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
வேலூர் மாவட்டம்.

பிரச்சினை :

பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலத்திலிருந்து 14 கி.மீ தொலைவில் உள்ளது காவிலிப்பாளையம் என்ற கிராமம். இந்தக் கிராமத்தில் தண்ணீர் மிகவும் பிரச்சினையாக உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் ரூ.200/- பைப் பராமரிப்புக்காக அனைவரும் கட்டினோம். பணத்தைக் கடைசித்தேதி அறிவித்து குறித்த நேரத்தில் தவறாமல் சரியாக வசூல்செய்து விட்டார்கள். ஆனால் 10 நாட்களுக்கு ஒரு முறை 4 நாட்களுக்குத் தண்ணீர் தடைப்படுகிறது. காரணம் வண்டிப்பாளையம் (தண்ணீர் வரும் வழி) என்ற இடத்தில் அடிக்கடி பி.வி.சி பைப்பை உடைத்து வயல்களுக்குத் திசை திருப்பிக்கொள்கிறார்கள். மாதத்தில் தவறாமல் 3 முறை இவ்வாறு நடக்கிறது. பி.வி.சி. பைப்பிற்குப் பதிலாக இரும்புக் குழாய்கள் போட்டால் நன்றாக இருக்கும். இதற்கு அரசு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், இங்குச் சரியான ரோடு வசதி, தெரு விளக்கு வசதிகள், ஆஸ்பத்திரி வசதி இல்லை. இப் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைக்க தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

- ஊர்மக்கள்
காவிலிப்பாளையம், ஈரோடு மாவட்டம்.

தீர்வு :

காவிலிப்பாளையம் குக்கிராமத்திற்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் புதுக்கொத்துக்காடு கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேற்கண்ட கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் முறையாக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், காவிலிப்பாளையம் குக்கிராமத்திற்குச் சாலை வசதி, தெருவிளக்கு வசதிகள், ஆஸ்பத்திரி வசதி போன்றவைகளை ஊராட்சியின் நிதி வசதியைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் ஊராட்சியின் மூலம் செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-வளர்ச்சி அலுவலர் (சிற்றூராட்சி)
ஈரோடு மாவட்டம்.

பிரச்சினை :

எங்கள் ஊர் ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஒன்றியத்திற் குட்பட்ட பர்கூர் ஊராட்சியில் உள்ள சுண்டப்பூர் ஆகும். இங்கு சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றனர். இந்த ஊருக்குச் சரியான பாதை வசதி இல்லை. இவ்வூர் காட்டு விலங்குகள் வசிக்கும் பகுதியில் வனத்தில் உள்ளது. இவ்வூர் மக்கள் மளிகைப் பொருட்கள் வாங்க வேண்டுமெனில் காட்டுப்பகுதியில் 8 கி.மீ. வனப் பகுதியில்தான் நடந்து வரவேண்டும். இந்தப் பகுதிக்கு பஸ், லாரி, போன்ற போக்குவரத்து வசதி ஏதுமில்லை. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஊருக்குப் பஞ்சாயத்து ரோடு போடப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு, தண்ணீர் வசதி இல்லை, கிணறு இல்லை, போர்வெல் இல்லை, மருத்துவ வசதி இல்லை. மருத்துவ சிகிச்சைக்கு, தொட்டில்கட்டி பர்கூர் அல்லது அந்தியூர் 32 கி.மீ. செல்லவேண்டும். எனவே, தாங்கள் தக்க நடவடிக்கை எடுத்து எங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- ஊர்ப்பொதுமக்கள்
சுண்டப்பூர், ஈரோடு மாவட்டம்.

தீர்வு :

பர்கூர் ஊராட்சி சுண்டப்பூர் பர்கூரிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மேற்படி கிராமம் தாமரைக்கரை - பர்கூர் சாலையிலிருந்து 4 கி.மீட்டர் தள்ளி வனப் பகுதிக்குள் அமைந்துள்ளது. மெயின் ரோட்டிலிருந்து குடியிருப்புக்குச் செல்லும் சாலை வனத்துறைச் சாலை ஆகும். வனத்துறைச் சாலையை ஊராட்சியிலிருந்து பழுது

பார்க்க இயலாது. கண்டிப்பூர் குடியிருப்பில் சுமார் 125 வீடுகள் உள்ளன. மக்கள் தொகை சுமார் 600. இக் குடியிருப்பில் திறந்தவெளி குடிநீர்க் கிணறுகள் உள்ளன. நடப்பாண்டில் குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து புதிய குடிநீர் கிணறுவெட்டித் தரைமட்டத் தொட்டி கட்டி குடிநீர் விநியோகம் செய்யத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

வளர்ச்சிஅலுவலர் (சிற்றூராட்சி)
ஈரோடு மாவட்டம்.

பிரச்சினை :

எங்கள் ஊரில் குடிநீருக்காக ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி உள்ளது. இதன் மூலம் விநியோகமாகும் குடிநீர் அனைத்துப் பகுதிகளுக்கும் சீராகச் செல்வதில்லை. குறிப்பாகப் பேருந்து நிலையம் அருகில் உள்ள பகுதிகளுக்குச் சரியாக குடிநீர் கிடைப்பதில்லை. தாழ்வான பகுதிகளுக்கே நீர் அனைத்தும் சென்றுவிடுகிறது. மேலும் பேருந்து நிலையத்தில் அருகில் உள்ள ஆழ்துளைக் குழாய் கிணற்றில் நீர் வருவதே கிடையாது. மேலும் இந்தப் பகுதியில் உள்ள அரசு கிணற்றில் ஒரே ஒரு உருளை மட்டுமே உள்ளது. அதுவும் எந்த நிமிடம் கிணற்றுக்குள் விழுமோ தெரியவில்லை. எனவே, எங்கள் பகுதியில் சீரான குடிநீர் விநியோகத்திற்கும் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கவும், கிணற்றுக்கு உருளைகள் போடவும் ஏற்பாடு செய்து தருமாறு எங்கள் ஊர் பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மு. ரவிச்சந்திரன்
வெள்ளித்திருப்பூர்,
ஈரோடு மாவட்டம்.



தீர்வு :

வெள்ளித்திருப்பூரில் காவிரிக்கூட்டுக் குடிநீர்த்திட்டத்தின் மூலம் நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து விநியோகம் ஆகும் வால்வுகளை மேடான பகுதிகளுக்கும் குடிநீர் சீராகச் செல்லும் வகையில் ஊராட்சிப் பணியாளர்களை வைத்துச் சரி செய்யப்பட்டுள்ளது.

வெள்ளித்திருப்பூர் பேருந்துநிலையம் அருகில் இருக்கும் ஆழ்குழாய்க் கிணற்றில் நீர் ஊற்று வற்றிவிட்டது. இருப்பினும் அப்பகுதியில் குடியிருக்கும் பொது மக்களுக்குக் காவிரிக்கூட்டுக்குடி நீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் செல்வதால் தண்ணீர் பிரச்சினை இல்லை.

வெள்ளித்திருப்பூர் பேருந்துநிலையம் அருகில் இருக்கும் கிணற்றுக்கு மேலும் இரு இரும்பு உருளைகள் போடப்பட்டு, தண்ணீர் எடுக்க வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அருகில் உள்ள திறந்தவெளிக் கிணறுகளுக்கும் எட்டு இரும்பு உருளைகள் தண்டவாளங்கள் போன்றவை ஊராட்சி நிதியிலிருந்து வாங்கிப் பொறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெள்ளித்திருப்பூர் ஊராட்சியில் முலையூர் என்ற குக்கிராமத்தில் பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்க புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. ஒன்றியப் பொது நிதியிலிருந்து வெள்ளித் திருப்பூர் ஊராட்சி, செட்டிபாளையம் எம்.ஜி.ஆர். நகரில் ரூ.50,000/ மதிப்பில் ஆழ்குழாய்க் கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி அலுவலர் (சிற்றூராட்சி)
ஈரோடு மாவட்டம்.

பிரச்சினை :

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், வீராட்சிமங்கலம் அதிக அளவு தாழ்த்தப்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். நூலகத்திற்கு வருகைபுரியும் வாசகர்கள் நூறுக்கு மேல் இருக்கும்.

ஆகவே, தாராபுரம் வட்டம், வீராட்சி மங்கலம் கிராமக் கிளை நூலகத்திற்கு க.ச.எண்.215 இடம் தருவதற்குப் பஞ்சாயத்து தயாராக இருக்கிறது. எனவே, வீராட்சிமங்கலம் கிளை நூலகத்திற்குக் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்து தருமாறு எமது அமைப்பின் சார்பாகக் கோருகிறோம்.

தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பு
ஈரோடு மாவட்டம்

தீர்வு :-

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம் வீராட்சிமங்கலம் கிளை நூலகத்திற்குப் பெறப்பட்டுள்ள காலிமனையில் கிளை நூலகக் கட்டடம் கட்ட ஈரோடு மாவட்ட நூலக அலுவலருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டடம் விரைவில் கட்டப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நூலக இயக்குநர்
சென்னை - 2.

பிரச்சினை:

நீலகிரி மாவட்டம் கூடலூர் தாலுக்காவில் அம்பலவயல் அரசு உயர்நிலைப்பள்ளியில் சுமார் 500க்கு மேற்பட்ட மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

மாணவர்களாகிய எங்களுக்குப் பேருந்து வசதியின்மை முக்கியத் தடையாக உள்ளது. நாங்கள் தினம் 8 கிலோ மீட்டர் தூரம் நடந்து வருகிறோம். 12 ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருந்த பேருந்தையும் நிறுத்திவிட்டார்கள்.

இதனால் நாங்கள் குறித்த நேரத்தில் பள்ளி செல்ல இயலாமல் பெரும் அவதிக்குள்ளாகிறோம்.

எனவே, எங்களின் பேருந்து வசதியை உடன் பூர்த்தி செய்யத் தாங்கள் தக்க நடவடிக்கை எடுத்துதவுமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

மாணவ, மாணவியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி
அம்பலவயல், மூனநாடு அஞ்சல்,
நீலகிரி

தீர்வு :

கூடலூரிலிருந்து அம்பலவயல் வரை இயக்கம் செய்து இரவு அம்பலவயலில் தங்கல் செய்யப்பட்ட பேருந்தில் டீசல் திருடப்பட்டுள்ளது. இது குறித்து காவல்துறையிடம் புகார் கொடுக்கப்பட்டு பின்னர் பேருந்து இயக்கம் தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது. பயணிகள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு கடந்த 2.12.97 முதல் பேருந்து இயக்கம் செய்யப்பட்டு வருகிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது மேலாளர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (கோவை-கோட்டம்3)

பிரச்சினை :

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 52 வார்டு பகுதியைச் சேர்ந்த கல்வங்காடு கிராம மக்கள் உய்யக் கொண்டான் ஆற்றங்கரையைப் பாதையாகப் பயன்படுத்திவருகிறோம். இதைத் தவிர வேறு பாதை கிடையாது. எங்கள் பகுதிக்குப் போதிய பாதை வசதி இல்லாத காரணத்தால் நெடுஞ்சாலையை அடைவதற்கு நாங்கள் படும்பாடு அளவில்லததாகும். மேற்படி பாதை பல வருடங்களாக பராமரிப்பு இன்றி குண்டும் குழியுமாக ஒழுங்கற்ற நிலையில் மண் அரிப்பினால் சேதமடைந்து மிகவும் மோசமான நிலையில் பாதை இருக்கிறது. மேற்படி பாதை பொதுப் பணித்துறை ஆற்று நீர் கோட்டத்திற்குச் சொந்தமானது. திருச்சி மாநகராட்சிக்குத் தார்சாலை அமைத்து கொள்வதற்கு ஆற்று நீர் கோட்டம் அனுமதியும் வழங்கியுள்ளது. இதுநாள்வரை தார்சாலை அமைக்கப் படவில்லை. இந்தப்பிரச்சினையில் தலையிட்டு எங்கள் பகுதிக்குத் தார்சாலை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர். மலையாளி
கல்லங்காடு
வெண்ணையப்பேட்டை வழி, திருச்சி

தீர்வு :-

கோ. அபிசேகபுரம் கோட்டம்-திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண். 52 ல் உள்ள கல்லாங்காடு பகுதிக்கு செல்வதற்கு உய்ய கொண்டான் ஆற்றின் கரையில் தார்சாலை அமைக்க மதிப்பீடு ரூ.7,20,000/ க்கு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டவுடன் தார்சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை சமர்ப்பிக்கப்படுகிறது.

உதவி ஆணையர்,
கோ. அபிசேகபுரம் கோட்டம்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

நீதித் துறை

நீதிமன்றங்களின் சீரிய செயல்பாட்டிற்காகக் கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்தல், புதிய கட்டடங்கள் கட்டுதல், மரச்சாமான்கள் வாங்குதல், ஆகிய தேவைகளுக்காக ரூ.21.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்பிருந்த ஆட்சியில் நடைபெற்ற ஊழல் குறித்த வழக்குகளை விசாரிக்க மாவட்ட நீதிபதிகள் தரத்தில் உள்ள தனி நீதிபதிகள் தலைமை வகிக்கும் மூன்று கூடுதல் நீதிமன்றங்கள் ரூ.49 இலட்சத்து 32 ஆயிரம் செலவில் நிறுவப்பட்டன.

தமிழகத்தில் உள்ள அனைத்து வழக்குரைஞர் கழகங்களுக்கும் நூலகங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற ரூ.31.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பணிகள் நடைபெறுகின்றன.

இதயநோயா? அலட்சியம் வேண்டாம்!

மாடிப்படி ஏறும்போது மூச்சு வாங்கினால் அலட்சியமாக இருக்கக்கூடாது. முதுமையில் இதய நோய்கள் வராமல் பார்த்துக் கொள்ள 40 வயது முதலே உணவு, உடற்பயிற்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பொதுவாகச் சைவ உணவே நல்லது. அசைவம் சாப்பிடுபவர்களாக இருந்தால் முட்டை, இறைச்சி வேண்டாம். மீன், கோழி ஆகியவற்றை 10 தினங்களுக்கு ஒருமுறை சாப்பிடலாம். வெண்ணெய் உள்பட கொழுப்புச் சத்து உள்ள உணவுப் பண்டங்களைத் தவிர்த்துவிட வேண்டும்.

உடல் எடைக்கும் இதயத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உடல் பருமன் நல்லது அல்ல. ஏனெனில் உடல் பருமன் காரணமாக இதயத்தின் வேலை அதிகரிக்கும். உயரத்துக்கு ஏற்ற எடை கீழுள்ள அட்டவணைப் படி இருந்தால் தவறில்லை.

இரத்த அழுத்தம்

வயது	உயர்நிலை எம்.எம்/ஜி	கீழ்நிலை எம்.எம்/ஜி
30 - 40	120	80
40 - 60	130	90
60 - 70	140	90
70-க்கு மேல்	160	90

நவீன வாழ்க்கை முறையில் சொகுசு அதிகரித்துவிட்டதால், உடற்பயிற்சி குறைந்துவிட்டது. தினந்தோறும் காலை அரை மணி நேரம் இரண்டு முதல் மூன்று கிலோமீட்டர் தூரம் நடந்தால் நல்லது. மிக வேகமாகவோ அல்லது மிக மெதுவாகவோ நடக்கக்கூடாது. நடக்கும்போது பேசினால் மூச்சு வாங்காத அளவுக்கு உரிய வேகத்தில் நடக்கவேண்டும். இரத்த அழுத்தத்தைச் சீராகப் பராமரிக்க நடைப்பயிற்சி உதவும்.

60 வயது நிரம்பியவர்களுக்கு இயல்பான இரத்த அழுத்த அளவு, உயர் நிலையில் 140 எம்.எம்/ஜி-ம் கீழ் நிலையில் 90 எம்.எம்.ஜி.-ம் இயல்பானது. எனினும் இரத்த அழுத்தம் உயர் நிலையில் 130 எம்.எம்./ஜி என்ற அளவைத் தொட்ட உடனேயே உப்பைக் குறைத்துக் கொள்ளுவது நல்லது. ஊறுகாய் சாப்பிடக் கூடாது.

புகைப்பழக்கம் காரணமாக இதய இரத்தக் குழாய்கள் சுருங்கிவிடும். இதயத் துடிப்பு சீராக இருக்காது. எனவே புகை பிடிப்பதை விட்டுவிடுவது நல்லது.

மாடிப்படி ஏறும்போது படபடப்பு ஏற்பட்டால், இதயச் செயல்பாட்டுக்கு அதிக ஆக்சிஜன் தேவைப்படுகிறது என்று பொருள். இப்பிரச்சினை உள்ளவர்கள் இரத்த அழுத்த அளவைப் பரிசோதித்துக் கொள்ளவேண்டும். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாதம் ஒரு முறையாவது இரத்த அழுத்தத்தைப் பரிசோதனை செய்து கொள்ளவேண்டும்.

இந்தியாவில் நகர்ப்புறங்களில் 40 சதவீத முதியோரும், கிராமப்புறங்களில் 16 சதவீத முதியோரும் இதய நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

கிராம மக்களிடையே இதயநோய்கள் குறைவாக இருப்பதற்கு, உடல் உழைப்புடன் கூடிய அவர்களது வாழ்க்கை முறையே காரணம்

- டாக்டர் டி. வைத்தியநாதன்.

கின்னஸ் சாதனை ரயில் என்ஜின்

கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இந்தியாவைச் சேர்ந்த 143 ஆண்டுக்காலம் பழமை வாய்ந்த நீராவி என்ஜின் இடம் பெற்றுள்ளது.

'தேவதை ராணி' (Fairy Queen) என்ற பெயர் கொண்ட அந்த ரயில் என்ஜின் 1855-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தில்லி - ஆல்வார் செல்லும் சுற்றுலா ரயிலில் இப்போது அது இயக்கப்படுகிறது.

கரிய வண்ணத்தில் அழகுற அமைந்த இதற்கு உலக சாதனைச் சான்றிதழ் கிடைத்துள்ளது. தேசிய ரயில் அருங்காட்சியகத்தில் காட்சிக்காக இது வைக்கப்படும். ஏற்கெனவே 79 கண்காட்சியிலும் இடம் பெற்றுள்ள இந்த என்ஜின், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், கிழக்கிந்தியக் கம்பெனிக்காக உருவாக்கப்பட்டது.



மருத்துவம்:

பிள்ளைப்பேறு

- ஜோசப் சந்திரகுமார்

இந்தியா, மக்கள் பெருக்கத்தால் அவதிப்படும் நாடுதான் என்றாலும், இந்த நாட்டிலும் திருமணமாகியும் பல்லாண்டுகள் மகப்பேறு இல்லாமல் குழந்தைக்காகத் தவம் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான தம்பதிகளும் இருக்கத்தான் செய்கின்றனர். திருமணமான ஒவ்வொரு பெண்ணும் தாய்மை நிலையை அடையவேண்டுமென்று ஏங்குவது இயற்கையே. குழந்தை இல்லாத குறையினால் குடும்பத்தில் மன வேறுபாடும் சமூகத்தில் தாழ்வு மனப்பான்மையும் வாழ்க்கையில் விரக்தியும் ஏற்படுகின்றன.

இந்திய நாட்டில், திருமணமான தம்பதிகளில் 10 முதல் 15 சதவிகிதம் பேர் குழந்தைச் செல்வம் இல்லாமல் தவிக்கின்றனர். குழந்தை பெறுவதற்காக இவர்கள் பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவிடவும் தயாராக இருக்கின்றனர்.

சிலர், நல்ல மருத்துவர்களை அணுகி நடைமுறை ரீதியான ஆலோசனையைப் பெறுகின்றனர்; மற்றும் பலர் போலி மருத்துவர்களிடம் சிக்கி பணத்தைப் பறி கொடுக்கின்றனர்.

குழந்தைப்பேறு இன்மைக்கு 40 சதவிகிதம், பெண்ணின் மலட்டுத்தன்மையும், 40 சதவிகிதம் ஆணின் மலட்டுத்தன்மையும் 20 சதவிகிதம் இருவரின் மலட்டுத்தன்மையும் காரணம் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது.

பெண்ணைக் குறை சொல்லுவதா?

இந்தியாவைப் பொருத்தவரை, ஆண்களின் மலட்டுத்தன்மை 40 முதல் 45 சதவிகிதம் வரை இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் வேதனை தரும் வேடிக்கை என்னவென்றால், குழந்தை இல்லாத பெண்தான் சமுதாயத்தில் மலடியெனப் பட்டம் சூட்டப்பட்டு, பழிக்கப்படுகிறாள். இவ்வாறு அவதிப்படும் பெண்களில் பலர் உடற்கூறு ரீதியில் குழந்தை பெறும் பாக்கியம் பெற்றவர்களேயானாலும், இவர்களின் கணவர் உடலில் விந்தணு உற்பத்தி ஆகாமலோ அல்லது விந்தணு எண்ணிக்கையில் குறைந்தோ இருப்பதால்தான் குழந்தை பெற முடியாத நிலை ஏற்படுகிறது. அண்மைக்காலம் வரை ஆண்களுக்கே உரிய வறட்டுப் பெருமை காரணமாகக் கணவன்மார் மகப்பேறு பரிசோதனைக்குத் தங்களை உட்படுத்திக்கொள்ள முன்வரவில்லை.

ஆனால் இப்போது, திருமணமாகி ஓராண்டு ஆகியும் குழந்தை பிறக்காத பெண்களைத் தீவிரப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு முன்னர், கணவனின் உடல் பரிசோதனையும் விந்தணு பரிசோதனையும் அவசியம் என்று மகப்பேறு நிபுணர்கள் கட்டாயப்படுத்துகின்றனர்.

சினைமுட்டை

ஆண் மற்றும் பெண் பாலரின் அடிப்படை இனப்பெருக்கக் காரணிகளான விந்தணு மற்றும் சினை முட்டையின் முக்கியத்துவத்தைப் பற்றித் தெரிந்துக்கொள்ள வேண்டியது அவசியம். ஆணின் விந்தணுவின் தலை பாகத்தில், பாரம்பரியக் குணாதிசயங்களை நிர்ணயிக்கும் க்ரோமோசோம்கள் எனும் மரபணுக்கள் இடம் பெற்றிருக்கின்றன.

மனிதனின் உடலில் இருக்கும் இதர அணுக்கள் ஒவ்வொன்றிலும் 46 க்ரோமோசோம்கள் இருக்கும்போது, விந்தணுவில் மட்டும் 23 க்ரோமோசோம்கள்மட்டுமே இடம் பெற்றிருப்பது விந்தைதான். ஆணின் விந்தணு, பெண்ணின் சினைப் பையிலிருந்து வெளிவரும் சினை முட்டையுடன் இணையும் போது விந்தணுவில் இருக்கும் 23 க்ரோமோசோம்களும் சினை முட்டையில் இருக்கும் 23 க்ரோமோசோம்களும் ஆகமொத்தம் 46ம் சேர்ந்து குழந்தையின் குணாதிசயங்களை நிர்ணயிப்பதுதான் ஆண்டவன் படைப்பின் அதிசயமாகும். ஆகவேதான், குழந்தைக்காக ஏங்கும் தம்பதிகள் தங்கள் சொந்த விந்தணுவும் சினை முட்டையும் சேர்ந்து கரு உற்பத்தி ஆகவேண்டும். அதுவே தங்களின் சொந்த ரத்தமாக இருக்க முடியும் என்று நினைப்பது நியாயம்தானே.

செயற்கை முறையில் உயிர் அணுவைக் கருவூட்டல்

நுண்ணிய 'பிப்பட்' மூலம்
கருமுட்டையினைப்
பிடித்தல்

கருமுட்டையினுள்
உயிர் அணுவை
நுண்ணியமாக நுழைத்தல்

சோதனைக் குழாய்க் குழந்தைகள்

பல பெண்களுக்குச் சினை முட்டை உருவாகியும், அவை வந்தடையும் குழாயில் அடைப்புகள் இருப்பதால் அவர்களால் குழந்தை பெற முடிவதில்லை. இவர்களில் ஒரு சிலரே அறுவைச் சிகிச்சை மூலம் பயன்பெற முடியும்.

1978ஆம் ஆண்டில் கேம்பிரிட்ஜைச் சேர்ந்த ஸ்டெப்டோ, எட்வர்ட்ஸ் என்ற நிபுணர்கள் கண்டுபிடித்த ஐ.வி.எஃப்.எனும் இன் விட்ரோ ஃபெர்டிலைசேஷன் என்ற கண்டுபிடிப்பு, இப்படிப்பட்ட பெண்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. இதுவே பின்னர் 'சோதனைக் குழாய்க் குழந்தை' முறை என்று பிரபலமாகியது.

இந்த முறையில், ஊசி மூலம் பெண்ணின் சினை முட்டையை வெளியே எடுத்து ஆய்வுக் கூடத்தில் தக்க வெப்ப நிலையில் கணவனின் விந்தணுக்களை அதனுடன் சேர்த்துக் கருவுறச் செய்கிறார்கள். இப்படி உருவான கருவினை மீண்டும் மனைவியின் கர்ப்பப்பையில் செலுத்தி, குழந்தையை வளரவைத்து விஞ்ஞானச் சாதனை புரிந்தார்கள். இதைத் தொடர்ந்து உலகெங்கும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் உடல் ஊனம் இன்றி நல்ல முறையில் பிறந்து குழந்தையில்லாத பலரது மனக்குறையைத் தீர்த்துவைத்தன.

ஆண் மலட்டுத்தன்மை

சோதனைக் குழாய் முறையானது, பெரும்பாலும் மலட்டுத்தன்மை கொண்ட பெண்களுக்கே பெரிதும் பயன்பட்டது. ஆண் மலட்டுத்தன்மையை நீக்க இது பயன்படவில்லை. ஏனென்றால், சோதனைக் குழாய் மூலம் குழந்தை பிறக்க வேண்டுமானால் ஆணின் விந்தணுக்கள் எண்ணிக்கையில் ஏராளமாகவும் உயிரோட்டம் மிக்கவையாகவும் இருக்க வேண்டும். மலட்டுத்தன்மை கொண்ட ஆண்களைப் பரிசோதிக்கும்போது உயிரணுக்கள் 40 கோடி என்ற எண்ணிக்கை இருப்பதற்குப் பதிலாக 4 அல்லது 5 அணுக்களே இருப்பது தெரிய வந்தது. அது மட்டுமல்லாமல், உயிரோட்டம் பெற்று வேகமாக நீந்திச் செல்ல வேண்டிய நிலையில் இருக்க வேண்டிய உயிரணுக்கள், இத்தகைய ஆண்களுக்கு நெளிந்தும் அசைந்தும் செல்லும் நிலை காணப்படுகிறது.

ஹார்மோன் மருந்து சிகிச்சை மூலம் இந்த நிலையை சரிசெய்ய முடியாது. இவர்களைப் பொறுத்தவரை ஐ.வி.எஃப். அல்லது சோதனைக் குழாய் முறை பயனளிப்பதில்லை.

புதிய கண்டுபிடிப்பு:

இந்தச் சூழ்நிலையில்தான் 1992ஆம் ஆண்டில், பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த டாக்டர் வான் ஸ்டெயிர்டெஜெம் என்பவர் தலைமையிலான நிபுணர்குழு இன்ட்ரா சைடோப்ளாஸ்மிக் ஸ்பெர்ம் இன்ஜெக்ஷன் (ஐ.சி.எஸ்.ஐ) எனும் புதிய முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியது.

இந்த முறையில், பயிற்சிபெற்ற நிபுணர்கள், மிக நுட்பமான சாதனங்களைப் பயன்படுத்தி ஒரே ஒரு ஆண் விந்தணுவைப் பெண்ணின் சினை முட்டைக்குள் ஊசி போன்ற கருவியின் மூலம் செலுத்துகின்றனர். கரு உண்டானதும் அதனை மறுபடியும் பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தி குழந்தை வளரச் செய்கின்றனர்.

சோதனைக்குழாய் முறைபோல் அல்லாமல் ஐந்து விந்தணுக்கள் மட்டுமே உடைய, மலட்டுத்தன்மை கொண்ட ஆண்கள், விந்தணுவின் உயிரோட்டம் குறைந்தவர்கள் ஆகியோரும் தங்கள் மனைவியைக் கருத்தரிக்க வகை பிறந்துள்ளது. இன்னொரு விஷயம் சிலவகை மலட்டுத்தன்மை உடைய ஆண்களுக்கு ஆண் விதையில் உயிரணுக்கள் உருவானலும் விந்து வெளிப்படும்போது அதில் உயிரணுக்கள் காணப்படாததால் இப்படிப்பட்டவர்கள் தங்கள் மனைவியைக் கருத்தரிக்கச் செய்ய முடிவதில்லை.

இத்தகைய நிலையில் உள்ளவர்களுக்கும் ஒரு நல்ல செய்தி. இவர்களுடைய ஆண் விதையிலிருந்து ஊசி மூலம் நேரடியாக உயிரணுக்களை வெளியே எடுத்து, ஆய்வுக் கூடத்தில் பெண்ணின் சினை முட்டைக்குள் செலுத்தி கருத்தரிக்கச் செய்ய இந்த ஐ.சி.எஸ்.ஐ. முறை வழி வகுக்கிறது.

இவர்களுடைய உயிரணுக்களில் வால் பகுதி இல்லாமல் போனாலும் பரவாயில்லை. தலைப்பகுதி மாத்திரம் உருக்குலையாமல் இருந்தால் போதும்.

உலகிலுள்ள பல பெரு நகரங்களில் ஐ.சி.எஸ்.ஐ. முறையைப் பயன்படுத்துவதற்கு நவீன சாதனங்கள் உருவாகி, பல ஆராய்ச்சி நிலையங்கள் செயல்படத் துவங்கிவிட்டன. பெல்ஜியம் நாட்டில் மட்டும் 1994 ஆகஸ்ட் மாதம் வரையில் 400-க்கு மேற்பட்ட குழந்தைகள் இந்த வகையில் பிறந்திருக்கின்றன. ஆணின் விதையில் உண்டாகும் உயிரணு, பாதையில் அடைப்பு காரணமாக வெளிவர முடியாமலும், அறுவை சிகிச்சை பயன்படாமலும் இருப்பவர்களுக்கும் விந்தணு எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பவர்களுக்கும் ஐ.சி.எஸ்.ஐ. முறை ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

ஆண் மலட்டுத்தன்மையை நீக்கும் இந்த அரிய மகப்பேறு சிகிச்சை இப்போது சென்னையிலும் கிடைக்கத் துவங்கியிருக்கிறது. ஆண் மலட்டுத்தன்மை ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை முறையின் முன்னோடியாக இருப்பவரும் சென்னையில் உள்ள மார்ச்- 2 நிறுவனத் தலைவருமான டாக்டர் ஏ. ராஜசேகரன், ஐ.சி.எஸ்.ஐ. முறை மூலம் மகப்பேறு சிகிச்சை அளிக்க ஒரு இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என்றும் இதில் சுமார் 30,000 ரூபாயை மருந்துக்கென்று ஒதுக்கவேண்டும் என்றும் கூறுகிறார்.

இந்தச் சிகிச்சை நிறைவு பெற, சுமார் ஒன்றரை மாதம் பிடிக்குமாம்.குழந்தையில்லாத மலட்டுத் தம்பதி என்று சமுதாயத்தால் முத்திரை குத்தப்பட்டு நொந்துபோயிருப்பவர்கள், தங்களுடைய சொந்தக் குழந்தையைப் பெற்றெடுக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியோடு ஒப்பிட்டால் இந்தச் செலவு சாதாரணம்தானே! ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி: 568926, 568927, 564906



தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



தமிழரசு

மார்ச் 1-15, 1998 ரூ.3

இயக்குநர்
30 மார் 1998
தமிழ்நாடு அரசுக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008



நமது அன்றாட
பழக்கவழக்கங்களால்,
எய்ட்ஸ் வராது.

அதற்கு நீங்களே
ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படி இல்லையே...

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98



இந்த இதழில்....

உலக மகளிர் நாள் :
முதலமைச்சர் வாழ்த்துச் செய்தி — 2
"பாரதரத்னா" எம்.எஸ்.சுப்புலட்சுமி
- கே.எஸ். மகாதேவன் — 4
"பாரதரத்னா" சி.சுப்பிரமணியம்
- மதுராந்தகன் — 7
எங்கள் ஊர்ப் பிரச்சினை — 8
சரித்திரம் படைத்த டாக்டர் கலாம் — 13
உலகம் இனியது
- கே.மீனாட்சிசுந்தரம் — 14
நலம் காப்போம் (கவிதை)
- முனைவர். கடலூர் மணிமாறன் — 17
இதுவரை சிறுகதை
- மாலன் — 18
திறப்பதற்கு இங்கே கத்தரியுங்கள் (கவிதை)
- கலாப்ரியா — 24
'தமிழ்நாடு'
- முனைவர் சா.வளவன் — 25
திராட்சையில் மாவுப்பூச்சியா ?
- டாக்டர். கே.சந்திரசேகரன் — 31
1998 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் — 33
வெள்ளிப் பூண் - சு. சமுத்திரம் — 41
மருத்துவம் - மு. வீராசாமி — 46

தமிழரசு
திருவள்ளுவராண்டு - 2029
மாசி - பங்குனி
மார்ச் 1 - 15, 1998
மலர்: 28 இதழ்: 17
விலை ரூ.3

உண்மை வழிநடந்து - விழிப்புடன் செயல்பட்டு
தமிழக முன்னேற்றத்திற்குத் தொண்டாற்ற
தமிழக மகளிர் முன்வரவேண்டும்.

உலக மகளிர் நாளில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்த வாழ்த்துச் செய்தி

8.3.98 உலக மகளிர் நாள்! உலகில் ஏறத்தாழ சரிபாதியாக வாழும் மகளிரின் முன்னேற்றம் குறித்துச் சிந்திக்கும் நாள்! பெண்கள் நலத் திட்டங்கள் பலவற்றை அறிமுகப்படுத்தி - செயல்படுத்தி - பெண்கள் சமுதாயத்தின் பெருமையை நிலைநாட்டுதற்குப் பாடுபட வேண்டுமெனும் உணர்வை நாட்டு மக்களிடையே ஊட்டி வளர்க்கும் நாள் - இந்நாள்!

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே!"



- எனப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள், நாம் விடுதலை பெறுவதற்கு முன்பாகவே - பெண்கள் சமுதாய விடுதலை காண்பது இன்றியமையாதது என்பதை வலியுறுத்தினார்.

தந்தை பெரியார் அவர்களும், பேறிஞர் அண்ணா அவர்களும் தமிழகம் முழுவதும் மகளிர் மாநாடுகள் பல நடத்திப் பெண் கல்வி, விதவை மறுமணம் முதலியவற்றை வலியுறுத்தி, பெண்கள் மேம்பாட்டிற்குத் தம் வாழ்நாள் முழுவதும் அயராது பாடுபட்டனர்.

1967 ஆம் ஆண்டில் தமிழகத்தில் அமைந்த கழக அரசு, பெண்கள் மேம்பாட்டிற்காக - பெண்கள் சமுதாயத்தின் எழுச்சிக்காக ஆக்கபூர்வமான பல செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிறந்த கவனம் செலுத்திவந்துள்ளது - இன்றும் கவனம் செலுத்திவருகின்றது.

- ★ *1973 ஆம் ஆண்டில், காவல் துறையில் பெண் காவலர்களை முதன்முதல் நியமனம் செய்து இந்தியாவிற்கே வழிகாட்டியது இந்த அரசு.*
- ★ *ஆதரவற்ற பெண்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்...*

- ★ *டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம்...*
- ★ *1989 ஆம் ஆண்டில் ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டம்...*
- ★ *டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்...*
- ★ *1990 ஆம் ஆண்டில் அரசுப் பணிகளிலும், பொது நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம்...*

- எனப் பெண்களுக்காகப் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியது இந்த அரசு.

- ★ *தொடக்கப் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு வரை பெண்களையே ஆசிரியர்களாக நியமனம் செய்திட ஆணையிட்டு, படிப்படியாக ஐந்தாம் வகுப்புவரை பெண்கள் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவதற்கு வழிவகுத்தது இந்த அரசு.*

- ★ *1989ஆம் ஆண்டில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்னும் ஒரு மாபெரும் திட்டத்தை அறிமுகப்படுத்தி - அதன் மூலம் கிராமப்புறங்களில் வாழும் ஏழைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெருக்கவும், குடும்பத்தில் கூடுதல் வருமானம் கிடைக்கவும் - தொழில் வாய்ப்புகளை ஆண்டுதோறும் ஏற்படுத்திவருகிறது இந்த அரசு.*
- ★ *1996 ஆம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கி - ஊராட்சி உறுப்பினர் பொறுப்பு முதல் - மாநகராட்சி மேயர் பதவி வரை பல்வேறு நிலைகளில் மக்கள் பிரதிநிதிகளாய் வீற்றிருந்து ஆட்சி செலுத்தும் அரிய வாய்ப்பினை - ஏறத்தாழ 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட மகளிருக்கு ஏற்படுத்தித் தந்துள்ளதும் இந்த அரசே.*
- ★ *தொழில் தொடங்கும் மகளிர்க்கு ஊக்கமளிக்கும் வகையில் குடும்பத்தில் முதல் தலைமுறையாகத் தொழில் தொடங்கும் 250 மகளிருக்குத் தொழில் முதலீட்டில் 50,000/- ரூபாய் வரை மானிய உதவி வழங்கியுள்ளதும் இந்த அரசே.*
- ★ *ஏறத்தாழ 2,600-க்கு மேற்பட்ட பெண்காவலர்களை இந்த ஆண்டில் நியமனம் செய்துள்ளதுடன், மேலும் 5,000 பெண் காவலர்களை நியமனம் செய்திட ஆணையிட்டுள்ளதும் இந்த அரசே.*

- ★ *மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில் வழங்கப்பட்டு வந்த 5,000/- ரூபாய் நிதி உதவியை 10,000/- ரூபாய் என உயர்த்தியதுடன், கடந்த இரண்டு ஆண்டுகளில் 46,145 பெண்களுக்கு 10,000/- ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கிய இந்த அரசு, இத்திட்டத்தில் விண்ணப்பம் செய்யும் மகளிர் அனைவருக்கும் நிதியுதவி வழங்கவும் ஆவன செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.*

- இப்படி கல்வி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி ஆகியவை மூலம் சமூகத்தில் பெண்களின் மதிப்பினை மேம்படுத்துவதில் அதிக ஆர்வமும் ஆழ்ந்த ஈடுபாடும் கொண்டு மகளிர் நலம் காப்பதில் மகத்தான சாதனைகள் பலவற்றை உருவாக்கி உள்ளது இந்த அரசு.

நலமான சூழ்நிலைகளுக்கும், வளமான வாழ்க்கை மேம்பாடுகளுக்கும் உரிய அடிப்படைத் தேவைகள் எவை என்பதை உணராதவர்களும் கூட - அவர்கள் கேட்காமலேயே - அவர்களின் தேவை அறிந்து - தாயினும் சாலப் பரிந்து - திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி அவர்களுடைய மேன்மைக்காகப் பாடுபடுவதையே தனது கடமையாகக் கொண்டுள்ளது - இந்த அரசு.

இந்த அரசின் இத்தகைய திட்டங்கள் மூலம் உயர்வான கல்வியையும் - உரிய வேலைவாய்ப்புகளையும் பெற்று - வாழ்வில் உன்னதநிலை எய்திடத் தமிழக மகளிர் அனைவரையும் இந்த உலக மகளிர் நாளில் உளமார வாழ்த்தி மகிழும் இவ்வேளையில் - யார் எதைக் கூறினாலும் அதை அப்படியே நம்பிடாமல் -

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு".

- எனும் வள்ளுவர் உரைத்த வழி நின்று - சிந்தித்து - உண்மையறிந்து - உண்மை நிலைத்திட - உண்மை வழி நடந்து - விழிப்புடன் செயல்பட்டு, தமிழக முன்னேற்றத்திற்குத் தொண்டாற்றுவர் தமிழக மகளிர் என உறுதியுடன் நம்புகிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தாம் விடுத்த உலக மகளிர் நாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

'பாரதரத்னா'

எம்.எஸ்.சுப்புலட்சுமி

- கே.எஸ்.மகாதேவன்

சங்கீத கலாநிதி திருமதி. எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களுக்குப் "பாரத ரத்னா" என்னும் நாட்டின் மிக உயர்ந்த விருது அறிவிக்கப்பட்டபோது, உலகமே பாராட்டியது.

எம்.எஸ். சுப்புலட்சுமி தனது எழுபது ஆண்டு வாழ்வில், இசைகலைக்காகத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டதோடு, மாபெரும் நற்பணிகள் - அறப்பணிகளுக்காகவும் பாடு பட்டிருக்கிறார். மாந்தருக்குள் ஒரு தெய்வம் என்று போற்றப்படுகின்ற மகாத்மா காந்தியே எம்.எஸ்.ஸின் நற்பணிகளைப் பாராட்டியுள்ளார்.

"பாரத ரத்னா" விருது எம்.எஸ்.ஸின் இசை மகுடத்தில் பதிக்கப்பட்ட கோகினூர் வைரம் என்பதில் ஐயம் ஏதுமில்லை. என்றாலும், மேலும் பல நவரத்தினங்கள் அவருடைய இசை மகுடத்தில் ஒளி வீசுகின்றன. எடின்பரோ சர்வதேச இசை நாடக விழா 1963-ஆம் ஆண்டு நடைபெற்றபோது, அதில் எம்.எஸ்.ஸின் பங்கேற்பு, 1966-ஆம் ஆண்டு ஐ.நா. பேரவையில் இவரின் உணர்வு பூர்வமான இசை நிகழ்ச்சி, லண்டன், மாஸ்கோ போன்ற நாடுகளில் இவர் பங்கேற்ற இந்திய விழாக்கள், இதுபோல அவர் கலந்துகொண்ட பல நிகழ்ச்சிகள், தொன்மையான தூய்மையான சாஸ்திரிய கர்நாடக இசையின் புகழை உலக நாடுகள் உணரும்படி செய்து ஓர் எழுச்சியை ஏற்படுத்தின.

இதுபோன்ற நிகழ்ச்சிகளாலும், மற்ற நிகழ்ச்சிகளாலும் ஒரே சீராகப் பல கௌரவங்கள் அவரை வந்தடைந்தன. 'பத்ம விபூஷண்', 'காளிதாஸ் சன்மான்', 'சென்னை சங்கீத வித்வ சபையின் 'சங்கீத கலாநிதி', 'மக்ஸேஸ விருது' போன்ற பல சிறப்புகளை எம்.எஸ். ஏற்கெனவே பெற்றிருக்கிறார். எம்.எஸ்.ஸின் இசை மகுடத்தை அழகு செய்யும் இத்தனைச் சிறப்புக்கள் - விருதுகள் இந்தியாவில் வேறு எந்த இசைக் கலைஞருக்கும் கிடைத்தது இல்லை. இணையில்லாத இனிய குரல் மூலம் வாழ்வெல்லாம் பொதுநலனுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவருக்கு "பாரத ரத்னா" விருது அளித்திருப்பது மிகப்பொருத்தமானது.

எம்.எஸ்.ஸின் பணிவு, எல்லோரும் அறிந்த ஒன்று. காஞ்சி பரமாச்சாரியார், ஜவஹர்லால் நேரு, ராஜாஜி, டாக்டர். ராதாகிருஷ்ணன், முன்னாள் ஐ.நா. தலைமைச் செயலர் ஊதாண்ட் போன்றவர்கள் இதைப்பற்றிப் பாராட்டியுள்ளார்கள். "எல்லோருக்கும் நன்றாம் பணிதல்", என்ற வள்ளுவர் வாக்கை எம்.எஸ். இன்று நிரூபித்து நம்மிடையே வாழ்கிறார்.

இசைப்பயணம்

தமிழ் நாட்டின் கலைத் தலைநகரான மதுரையில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய வீணை வித்தகர் திருமதி. சண்முக வடிவு மகளாக 1916 செப்டம்பர் 16ஆம் நாள் இவர் பிறந்தார். பாரம்பரிய இசைப்புலமை இதனால் இவருக்குக் கிடைத்தது. இயற்கையிலேயே அமைந்த இனிய குரலோடு மிக இளம் வயதிலிருந்தே தமது அன்னையாரின் வீணை நிகழ்ச்சிகளில் உடன் பாடி வந்தார், எம்.எஸ். மிருதங்கச் சக்கரவர்த்தி புதுக்கோட்டை தட்சிணா மூர்த்தி பிள்ளை, மதுரை புஷ்பவனம் ஐயர் போன்ற பாடகர்கள் வீணை சேஷண்ணா போன்ற இசைமேதைகள் அடிக்கடி இவர் வீட்டிற்கு வருவதுண்டு. இதுபோன்ற சமயங்களில் அவர் பாடல்களைக் கேட்டுப் போற்றிய இந்த மேதைகள் "உங்கள் மகளுக்கு உன்னதமான இசை வாழ்வு காத்திருக்கிறது" என்று சண்முக வடிவிடம் கூறினார்கள். சீனிவாச அய்யங்காரிடம் கர்நாடக இசையின் அடிப்படைகளைக் கற்ற எம்.எஸ். [illegible] அன்னையாரின் பாடாந்தரம் (இசைவழி), அவருடைய சொந்த இசைத்தாகம் ஆகியவற்றைப் பின்பற்றி, 16ஆம் வயதினில் வியக்கத்தக்க திறமையுடன் ஆழமாகப் பாடும் ஆற்றலைப் பெற்று அரங்கேற்றினார்.

சிறந்த திரைப்படத் தயாரிப்பாளர் டாக்டர் கே.சுப்பிரமணியம் தமது துணைவியாருடன் மதுரையில் சண்முகவடிவு இல்லத்திற்குச் சென்ற போது, எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இனிய சங்கீதத்தை நேரில் கேட்டதும், எம்.எஸ்.ஸின் கலைப்பாதையில் ஒளிமயமான எதிர்காலம் ஏற்பட வழிவகுக்கப்படலாயிற்று. அப்போது இவருக்கு வயது 17.

இவருடைய குரலினிமையால் ஈர்க்கப்பட்ட டாக்டர் கே.சுப்பிரமணியம் "சேவாசதன்" என்னும் தமது திரைப்படத்தில் நடிக்கவும் பாடவும் இவரை ஒப்பந்தம் செய்தார். இந்தத் திரைப்படத்தில் எம்.எஸ்.ஸின் பாடலும், நடிப்பும் திரை உலகிலும் இவருடைய தனித்தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கின. எம்.எஸ். சுப்புலட்சுமியைப் பெரிதும் நேசித்த திரு.சதாசிவம் ஒரு கோயிலில் நடந்த எளிய நிகழ்ச்சியில் 1936-ல் இவரைத் திருமணம் செய்துகொண்டார்.

கணவர் திரு.சதாசிவம் அவர்களுடன் திருமதி. எம்.எஸ்.

- "துன்பம் வரும்போது திறமை வெளிப்படும்" என்று ஹோரேஸ் கூறியிருக்கிறார். ஆனந்தவிகடன் வார இதழில் பணியாற்றிய திரு.சதாசிவமும், திரு.'கல்கி' கிருஷ்ணமூர்த்தியும் அதில் இருந்து விலகிய பிறகு 'கல்கி' என்ற பெயரில் வார இதழ் ஒன்றைத் துவக்க எண்ணினார்கள் (1992ஆம் ஆண்டு 'கல்கி' வார இதழ் பொன்விழாக் கொண்டாடியது). பத்திரிகையைத் துவக்க குறைந்தது ரூபாய் நாற்பதாயிரம் தேவைப்பட்டது. நினைவில் நீங்கா மூன்றாவது திரைப்படமான "சாவித்திரி" திரைப்படத்தில் எம்.எஸ்.நாரதராக நடித்து இத்தொகையை ஈட்ட உதவினார். காவியுடைதரித்து நாரதராக நடிப்பிலும் பாட்டிலும் திறமை காட்டி மக்களைக் கவர்ந்தார். இந்தத் திரைப்படத்தில் ஹேமாவதி ராகத்தில் "காந்திமதி" என்று இவர் பாடிய பாடல் மிகச் சிறந்த பாடலாக அமைந்தது. இதற்கு முன்னர் "சகுந்தலை" என்ற திரைப்படத்தில் ஜி.என்.பாலசுப்பிரமணியமும், எம்.எஸ்.ஸும் பாடிய மறக்கமுடியாத பாடல்களால் ஈர்க்கப்பட்ட ரசிகர்கள் இந்தப் பாடலுக்கு அடிமைகள் ஆனார்கள்.

இந்தக் காலகட்டத்தில் திருமதி. எம்.எஸ்.அவர்கள் இந்தியா முழுவதும் இசை நிகழ்ச்சிகள் நிகழ்த்திவந்தார். அன்பும், ஒழுங்குக் கட்டுப்பாடும் உடைய கலைஞராக, ஆளுமையை இவர் நிலைநிறுத்திக் கொண்டாலும், காந்தம்போல் கவரும் இசையை இவர் வழங்கினார்.

1944-ஆம் ஆண்டு வரை இவர் பெற்ற இசைக் கச்சேரி அனுபவம், பின்னாளில் ரசிகர்களைப் பொறுத்தவரையில் அவர்களை ஈர்ப்பதாக அமைந்துவிட்டது.

மகாத்மாவின் அழைப்பு:

1944ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூதறிஞர் ராஜாஜி, சதாசிவம் தம்பதியை அவர்கள் இல்லத்தில் சந்தித்தார். சேவாகிராமத்தில் காந்தியடிகளைச் சந்தித்துவிட்டு அப்போதுதான் திரும்பி வந்ததாகவும், கஸ்தூரிபா நினைவு நிதிக்கு நிதி சேகரிப்பதற்குத் திருமதி.எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்களின் ஐந்து நிதி சேகரிப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் திரு.சதாசிவத்திடம் கூறி ஒப்புக்கொள்ளச் செய்வதாகக் காந்தியடிகளிடம் உறுதி அளித்து வந்திருப்பதாகவும் ராஜாஜி கூறினார். உடனே, சதாசிவமும் ஒப்புக்கொண்டார்.

அதுவரை, எம்.எஸ்.சுப்புலட்சுமி ஒரு சில நிதி சேகரிப்பு இசை நிகழ்ச்ச்சிகளையே நடத்தியிருந்தார்.

பெங்களூர் தேசிய உயர்நிலைப்பள்ளி, கோத்தகிரி பள்ளி போன்ற சில பள்ளிகள், எட்டயபுரம் மகாகவி பாரதி மண்டபம், தமிழ்ச் சங்கம் (சென்னை) போன்றவற்றுக்கு நிதி திரட்ட நடந்த இசை நிகழ்ச்சிகளில் இவர் பங்கு பெற்றார். இவை தவிர சென்னை சங்கீத வித்வத் சபை, மற்றும் சில சபைகளுக்குப் பணம் ஏதும் பெற்றுக்கொள்ளாமல் இவர் பாடியுள்ளார்.

இசைப் பாரம்பரியத்தில் இவரைப்போல இந்த அளவுக்கு நற்பணிகளுக்காகப் பாடியவர் எவரும் இல்லை. திருவையாறு சத்குரு தியாகராஜ சுவாமிகள் சமாதிக்காக, பெங்களூர் நாகரத்தின அம்மாள் தம்முடைய உடைமைகளை எல்லாம் வழங்கியதுபோல, சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த திருவாரூரில் இந்த மும்மூர்த்திகளுக்கு நினைவுச் சின்னங்கள் அமைவதற்குத் திருமதி எம்.எஸ். அவர்கள் காரணமாக இருந்தார்.

1941 ஆம் ஆண்டு கல்கத்தா சென்றபோது, சதாசிவம் தம்பதியர் நாக்பூரில் இறங்கி, காந்தியடிகளைத் தரிசிப்பதற்காக வார்தா ஆசிரமத்திற்குச் சென்றார்கள். அப்போது நடந்து கொண்டிருந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் இவர்கள் கலந்துகொள்ள, மகாத்மா காந்தி கேட்டுக் கொண்டதற்கு இணங்க எம்.எஸ்.சுப்புலட்சுமி சில "பஜன்" பாடல்களைப் பாடினார். இவர் பாடலில் இருந்த இதயபூர்வமான தெய்வீக உணர்வு காந்தியடிகளைக் கவர்ந்தது.

பின்னர், கஸ்தூரிபா நினைவு நிதி இசை நிகழ்ச்சிகள் நடந்தபோது, திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமிக்குக் காந்தியடிகளிடம் இருந்து, காந்தியடிகளின் கையெழுத்தில் தமிழ்க் கையெழுத்தோடு ஒரு கடிதம் வந்தது. மிகச் சிறிய கடிதம் என்றாலும் மிக முக்கியமானது இந்தக் கடிதம்.

1947-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அகில இந்திய வானொலி, திரு. சதாசிவத்தோடு தொடர்பு கொண்டு, காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் தேதி எம்.எஸ்.சுப்புலட்சுமி ஒரு சில பஜன்களைப் பாட முடியுமா என்று கேட்டது. ஆனால் துளசிதாஸ், கபீர்தாஸ், மீரா பஜன்களின் எம்.எஸ். ஒலிப்பதிவைத் தில்லிக்கு அனுப்பிவைத்தார்.

எல்லோரும் வியக்கும் வண்ணம், காந்தியடிகள் திருமதி. எம்.எஸ். "ஹரி தும ஹாரோ" என்ற மீரா பஜனைப் பாட வேண்டும் என்று வற்புறுத்தினார். எம்.எஸ்.சுக்கு இந்த இசைவகை அவ்வளவு பரிச்சயம் இல்லை என்றும், திரு.சதாசிவம் பணிவோடு செய்தி அனுப்பினார். ஆனால், காந்திஜி, அதுபற்றிக் கவலையில்லை என்றும், மற்றவர்கள் பாடுவதை விட எம்.எஸ். இந்தப் பஜனைப் பேசினாலே போதும் என்றும் சொல்லி அனுப்பினார்.

பின்னர் திருமதி. சுப்புலட்சுமி இந்தப் பாடலை நண்பர்கள் உதவியோடும், இசைக்கலைஞர்கள் ஒத்துழைப்போடும் சாதகம் செய்து சிறந்த தேர்ச்சி பெற்றார். அகில இந்திய வானொலி இதைப் பதிவு செய்து தில்லிக்கு அனுப்பியது. 1947 அக்டோபர் 2ஆம் தேதி மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் இதைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

1948 ஜனவரி 30ல், காந்தியார் மறைந்த பிறகும் - காந்தியடிகளின் மறைவால் ஏற்பட்ட அந்த நிகழ்ச்சி காரணமாகப் பிறகு ஓராண்டுக்காலம் அந்தப் பாடலைப் பாடும்போது எம்.எஸ். அழாமல் பாடியதே இல்லை!

நாடே பாராட்டிய 'மீரா'

"மீரா" திரைப்படத்தின் இந்தி மொழியாக்கம், எம்.எஸ். சுப்புலட்சுமிக்கு நாடெங்கும் புகழைத் தேடித்தந்தது. காற்றினிலே வரும் கீதம், கண்ணன் புகழ் இசைக்க, இனிய குரலால் இவர் பாடிய "மீரா" பஜன்கள், பக்த மீராவாக இவர் நடித்த இயல்பான நடிப்புத்திறனை நாடெங்கும் இவருக்கு நன்மதிப்பைப் பெற்றுத் தந்தது. இந்தத் திரைப்படத்திற்குப் பிறகு, எளிமையான தென்னிந்தியா போற்றும் இசைக் கலைஞராக இருந்த திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் நாடே போற்றும் தெய்வீக இசைக் கலைஞராகப் பெருமை பெற்றார்.

இராமன் பற்றிய தியாகராஜ சுவாமிகளின் கிருதி, துளசிதாஸ் பஜன் அல்லது மீரா பஜன் ஆகியவை இசையில் திருமதி. சுப்புலட்சுமியின் மிகையில்லா உடைமைகள் ஆகும்.

எம்.எஸ்.ஸின் இந்தத் தெய்வீகக் கலனவதான் திருமதி. சரோஜினி நாயுடு, பாபு ராஜேந்திர பிரசாத், ஜவஹர்லால் நேரு, டாக்டர். இராதாகிருஷ்ணன், லார்டு ஹார்வுட் மற்றும் ஐ.நா. பேரவையினர் எல்லோரையும் இவருடைய இசையில் மயங்கச் செய்தது.

ஜவஹர்லால் நேருவே ஒரு முறை "இசைப் பேரரசி முன்னர் நான் ஒரு பிரதமர்" என்று கூறிப் பெருமைப்பட்டார்.

கணவரின் பெருமை

வாழ்விலும், இசைப்பாதையிலும் எல்லா விஷயங்களிலும் கணவர் சதாசிவத்தின் கருத்தை அப்படியே ஆதரித்த சுப்புலட்சுமி எப்போதும் கணவரிடம் ஆழ்ந்த மரியாதையும், நம்பிக்கையும் வைத்திருந்தார். எம்.எஸ்.ஸுடைய வளர்ச்சியில், குறிப்பாக நிதி நிகழ்ச்சி சம்பந்தமான விஷயங்கள் இவற்றின் இடம், செயலாக்கம் பற்றிய விஷயங்களில், ஒவ்வொரு கட்டத்திலும் திரு.சதாசிவம் திட்டமிட்டு நடத்தியது எவரும் செய்யமுடியாத பணியாகும்.

இந்தியப் பெண்மையின் நெறிகளைப் போற்றும் எம்.எஸ். இந்திய மரபுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார். சதாசிவத்தினுடனான இவருடைய இல்வாழ்க்கை போற்றுதற்குரியதாகும்.

"பாரத ரத்னா" விருது பெற்றபோது அந்த இன்ப அதிர்ச்சியை அனுபவிக்கக் கணவர் இல்லையே என்பது எம்.எஸ்.ஸுக்குப் பெருமளவு வருத்தத்தைத் தந்தது. "பாரத ரத்னா" விருது அளிக்கப்பட்ட இப்பெருமைக்குரிய நாளில் சதாசிவம் இல்லையே என்ற ஏக்கம் அவரை வாட்டாமலில்லை.

சென்ற செப்டம்பர் மாதம் 81 வயதான அவருக்கு, பெண்மை நெறிகளில் அவர் கொண்டுள்ள மங்காத நம்பிக்கை மற்றும் இசைச்சேவையும் உலகெங்கும் பாராட்டைப் பெற்றுத் தந்தது.

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பர். இதைப் போல எதிலும் திருப்தி அடையும் இவர் அணுகுமுறை மிகச் சிறந்ததாகும். மருத்துவமனைகள், பள்ளிகள், ஏழைகள் போன்றவர் வளர்ச்சிக்காக நற்பணி மூலம் இசை நிகழ்ச்சிகள் நடத்தி கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதித்து, எல்லாவற்றையும் இவற்றுக்கு வழங்கிய எம்.எஸ். ஆரம்பத்திலிருந்தே, எளிய வாழ்க்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். பலமுறை தம்முடைய நகைகளை ஏழைகளுக்கு வழங்கியுள்ளார். கொடுத்துக் கை சிவந்தவர் இவர். தமது கணவர் வாழ்ந்து காட்டிய வழியில், தூய வாழ்வும் உயர் சிந்தனையும் கொண்டு இவர் வாழ்க்கை நடத்தி வருகிறார்.

கர்நாடக இசையின் பேரரசி

கர்நாடக இசைக்கலைஞர் என்ற முறையில் இவருடைய திறமை மறுக்க முடியாததாகும். எடுத்துக்காட்டாக, ராக ஆலாபனையில், மூன்று ஸ்தாயிகளில் எளிதாகப் பாட வல்லவர் இவர். சுருதி சுத்தம் போற்றுதற்குரியது. இவரைப்போலப் பாட வல்லவர்கள் ஒரு சில முன்னோடிகளே ! சங்கராபரணம், காம்போதி, தோடி, பைரவி, கீர்வாணி, கல்யாணி, ரஞ்சனி, கேதார கௌள போன்ற ராகங்களில் விரிவான தொடுவானத்தைத் தொடுபவர் எம்.எஸ்.

அவர்களைப் போல எம்.எஸ்.ஸும் நெடுநாள் நினைவு கொள்ளத்தக்கவர். திரைச் சீலையில் பல வண்ண ஓவியம் தீட்டுவது போல, தாராஸ்தாயியில் அந்தர காந்தாரத்தை வானில் மிதக்க விடும் வல்லமை படைத்தவர் எம்.எஸ்.



Bombay 28-9-40

Dear Subbulakshmi

Rajaji has told me everything about your good work in connection with Kasturba Memorial Fund by using your musical gifts. May God bless you.

Yours

மோ. க. காந்தி

திருமதி எம்.எஸ்.சுக்குக் காந்தியடிகள் எழுதிய கடிதம்

இணையற்ற இசை வீச்சு

மற்ற பாடகர்கள் பெரும் சிரமம் எடுத்துக்கொண்டு செயல்படுத்த முடியாத உணர்வலைகளை, இயல்பாகவே வழங்கக்கூடிய தனி பாணியைக் கொண்டவர் எம்.எஸ். இவருடைய உத்தி ஆச்சரியம் தருவது; ஒவ்வொரு முறையும் ஓர் இசைப்பயணம் மேற்கொள்ளும் உணர்வை இவர் ஏற்படுத்துகிறார். இது உலகின் ஒரு தனித்தன்மை வாய்ந்த குரலாகும். இந்தக் குரலின் அழகு, தெளிவான தரம், அறிவார்ந்த ஒலி வெள்ளம் எல்லோரையும் கவர்வதாகும். தாராஸ்தாயியில் இசையையும் பாடலையும் வழங்கும்போது எல்லை கடந்து செல்லாமல், இவர் குரல் உள்ளேயே அடங்கியிருக்கும்.

பறவை போல இவர் இசைப்பயணம் மேற்கொள்ளும்பபாது, இவருடைய இசை வீச்சில், விலை மதிக்கமுடியாத குரல் வளத்தின் பொன்னாபரணங்களை ஒருவர் பார்க்க முடியும். இதுபோன்ற வெற்றிகளைப் பெறுவதற்கு, இவர் எவ்வளவு பாடுபட்டிருக்க வேண்டும் என்பதைக் கற்பனையால்தான் உணரமுடியும்.

சங்கீத மும்மூர்த்திகள், புரந்தரதாசர், பாபநாசம் சிவன், வாசுதேவாச்சார் போன்றவர்களின் பாடல்களில் இவருடைய ஆற்றலைக் குறிப்பிட வேண்டும் என்றால், அது விரிவாகும். பாலா, பிருந்தா போன்றவர்களிடம் கற்ற பதம்கள் எண்ணிக்கையைச் சொல்ல முடியாது. அவ்வளவு அதிகம். இவருடைய அன்னமய்யா பாடல்கள் பக்தி மயக்கத்தை ஏற்படுத்தும். வீடுகள் தோறும் இவை பாடப்படுகின்றன. இதைப் போலவே, கல்கியின் "காற்றினிலே வரும் கீதம்", ராஜாஜியின் "குறை ஒன்றும் இல்லை" ஆகியவை இசை நிகழ்ச்சிகளில் இடம் பெறும் முக்கியமான பாடல்களாகிவிட்டன.

தியாகராஜ சுவாமிகளின் சிஷ்யப் பரம்பரையைச் சேர்ந்த மகாவைத்தியநாத சிவம், 72 மேளகர்த்தா ராகங்களில் சமஸ்கிருதத்தில் பாடல் இயற்றினார். இவர் காலம் 1844 - 1893 ஆகும். வெங்கடஹரி 72 மேளகர்த்தா ராகங்களை வகுத்த முறையில் இவர் பாடல் இயற்றினார். சுத்த மத்திமம், பிரதி மத்திமத்தில் ஒவ்வொன்றிலும் 36 ராகங்கள், மராத்தி மொழியில் தனிநபர் ஒருவரைப் புகழ்ந்து லாவணி வெங்கடராஜ் முன்னர் இயற்றியதைப் பார்த்து சமஸ்கிருதத்தில் சிவம் புதிதாக இயற்றினார்.

டாக்டர். எம்.எஸ். வெறும் கலைஞர் மட்டும் அல்ல; இசையுலகில் இணையற்றுத் திகழும் ஞானியுமாவார் ! ★

'பாரத ரத்னா' சி.சுப்பிரமணியம்

இந்திய நாட்டின் மிக உயர்ந்த விருதான 'பாரதரத்னா' விருது பெற்றிருக்கிறார், மூத்த அரசியல் மேதைகளில் ஒருவரான திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள்.

இதுபற்றி - நோபல் பரிசு பெற்றவரான நார்மன் இ.போர்லாக், திரு.சி.எஸ்.சுக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

'1965-66ஆம் ஆண்டுகளில் இந்திய நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டபோது, நீங்கள் எடுத்த கொள்கை முடிவுகளே அங்கே அந்நாட்டை ஆபத்திலிருந்து மீட்டன. அப்போது தாங்கள் கொண்டுவந்த 'பசுமைப் புரட்சி'த் திட்டம் காரணமாக இந்தியாவில் உணவு உற்பத்தி அதிகரித்தது; விவசாயப் பெருமக்களின் வருவாய் பெருகியது'–

- என்றெல்லாம் அவர் அந்தக் கடிதத்தில் புகழ்ந்து பாராட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்.

அயல்நாட்டவரே இவ்வாறு நினைவில் வைத்துள்ள அந்த அற்புதத் திட்டத்தின் நேரடிப் பலனை அனுபவித்தவர்களல்லவா நாம்!

இந்த ஆண்டு, இவரையும் சேர்த்து மேலும் எம்.எஸ்.சுப்புலட்சுமி, ஏ.பி.ஜே. அப்துல் கலாம் உட்பட - 6 பேருக்குப் 'பாரத ரத்னா' விருது வழங்கிப் பெருமை பெற்றது இந்திய அரசு. விருது வழங்கப்பட்ட நாளில் இவர் உடல் நலிவுற்றிருந்ததால், அதை நேரில் சென்று பெற்றுக்கொள்ள இயலவில்லை; எனவே, பிறகு இந்தியக் குடியரசுத் தலைவரே அவ்விருதை சி.எஸ்.சுக்கு நேரில் வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டது.

கோவை மாவட்டம் - பொள்ளாச்சிக்கு அருகேயுள்ள செங்குத்துப்பாளையம் என்ற சிற்றூரில், 30.1.1910 அன்று, சிதம்பரம் கவுண்டர் - வள்ளியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள். உயர் படிப்பை முடித்தபின், கோவையில் வழக்கறிஞராகத் தொழில் தொடங்கினார்; அதன்பிறகு அரசியல் பிரவேசம்.

இவரது மனைவியாரின் பெயர் திருமதிசகுந்தலா என்பதாகும்.

தமிழ்நாட்டில் - 1952-ல், மூதறிஞர் ராஜாஜி அமைச்சரவையில்தான் முதன்முதல் இவர் அமைச்சராகப் பொறுப்பேற்றார். பிறகு தொடர்ந்து கர்ம வீரர் காமராசர், பெரியவர் பக்தவத்சலம் போன்ற பெருமக்களின் அமைச்சரவைகளிலெல்லாம்கூட இடம் பெற்றிருந்து, இணையற்ற நற்பணிகளால் புகழ்பெற்ற பெருமையாளர் சி.எஸ்., சிறந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர், தன்னலம் கருதாத தேசியவாதி, திறமையான நிர்வாகி, அமைச்சராக ஆன பிறகு மட்டுமல்ல; நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் உறுப்பினராகப் பங்கேற்றிருந்த காலத்திலும் தம்முடைய விவாதத்தைச் சரியான புள்ளி விவரங்களோடு எடுத்து வைத்து வாதிட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்; நல்ல நிர்வாகி; சிறந்த மேடைப்பேச்சாளர்; தேர்ந்த எழுத்தாளர் 'தமிழால் முடியும்' என்கிற ஒரு நூலே இதற்குச் சாட்சி, பேச்சிலே மட்டுமன்றிச் செயலிலும் சீர்திருத்தத்தைக் கடைப்பிடித்து வருபவர்.

இவ்வாறான அரிய சிறப்புகளாலேயே ஜவகர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்த காலத்தில், மத்திய அமைச்சராகவும் இவர் பதவியிலமர்த்தப்பட்டார்.

நேருவின் மறைவுக்குப் பின்னர் அமைந்த லால்பகதூர் சாஸ்திரி அமைச்சரவையிலும் இவர் இடம் பெற்றார். அப்போதுதான் நாட்டின் உணவுத் தட்டுப்பாட்டைத் தீர்த்துவைக்கும் 'பசுமைப்புரட்சித் திட்டம்' இவரால் உருவாக்கப்பட்டது. இதில் இவருக்குத் துணைநின்றவர் திரு.எம்.எஸ்.சுவாமிநாதன் ஆவார்.

பிறகு, திருமதி இந்திராகாந்தி அம்மையார் அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்து இவர் வகையுற வடிவமைத்த வரவு செலவுத் திட்டங்கள் உலகப் புகழ் பெற்றன.

பிறகு - அண்மைக் காலத்தில், மகாராட்டிர மாநில ஆளுநராகவும் பதவி வகித்துத் தமது பண்பட்ட உள்ளத்தால் உயர்வு பெற்றார் திரு.சி.எஸ்.

'பாரதரத்னா' விருது பெற்றுள்ள அவர் - 'என் வழிகாட்டியான எனது சித்தப்பா - காலம் சென்ற சுவாமி சித்பவானந்தா, அரசியலில் என்னை ஊக்குவித்த ராஜாஜி, நேருஜி ஆகியோருக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்'

- என்று விருது பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி கிடைத்ததும் மகிழ்ச்சி பொங்கக் கூறினார் திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள்.

மத்திய அரசிலும், மாநில அரசிலும் அவர் அமைச்சராக இருந்தபோது, தனக்கு எவ்வளவு வேண்டியவராக இருந்தாலும் சரி; தகுதியில்லாத பட்சத்தில் யாருக்கும் சிபாரிசு செய்ததே இல்லை.

"என்னைப் பொறுத்தவரையில் கல்வி நிறுவனங்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் நான் தலையிடமாட்டேன் என்ற உறுதியை நானாக எனக்கு விதித்துக்கொண்டேன்.

டாக்டர் எல்.கே.முத்துசாமியின் புதல்வர் ராமகிருஷ்ணன் ஓரளவு குறைவான மதிப்பெண்களைப் பெற்றிருந்ததால், அவருக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. ராமகிருஷ்ணன் என்னை அணுகினார். ஆனால், கல்வி நிறுவனங்களில் மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில் தலையிடுவது இல்லை என்ற எனது கொள்கையில் நான் உறுதியாக இருந்தேன். ராமகிருஷ்ணன் பிறகு எனது மருமகனாக - அதாவது எனது மகளை மணக்க இருந்தவர்".

- 'என் வாழ்க்கை நினைவுகள்' என்று அவர் எழுதியுள்ள புத்தகத்தில், அவரே தம் பிடிவாத குணம் பற்றிக் குறிப்பிட்டுள்ள ஒரு பகுதி இது!

- மதுராந்தகன்

எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை :

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள புஞ்சை சங்கேந்தி கிராமம் எங்கள் ஊராகும். எங்கள் ஊருக்குப் பேருந்து தட எண்.91, வண்டி எண். டி.என். 45-0465 என்ற எண்ணுள்ள பேருந்து வந்துகொண்டிருந்தது. இப்போது அதற்குப் பதிலாக டி.எண். 45 என்-0961 என்ற எண்ணுள்ள பேட்டவாய்த்தலை சென்று வந்த எல்.எஸ்.எஸ். வண்டி வந்தது. டி.என்.45 என்.ஒ. 465 கடந்த 1 வருட காலமாகத் தமது பயணத்தை முழுமையாகவோ, குறிப்பிட்ட நேரத்துப்படியோ வருடத்திற்கு 70% நாள்கூட முழுமையாகச் செயல்பட்டதில்லை. அக்குறையைப் போக்க வந்த பேருந்தும் அதே நிலை. இப்படி எங்கள் ஊருக்கு வந்துசெல்லும் பேருந்து எப்பொழுது வரும் எப்பொழுது திரும்பும் என்ற கேள்வி தினமும் மக்களின் மனதில் எழக்கூடிய சாதாரண நிகழ்ச்சியாகும். இதனால் எங்கள் ஊரிலிருந்து 3 கி.மீ. தினமும் நடந்துசெல்லும் நோயுற்றவர்களும், பள்ளிச் சிறார்களும், சிறு வியாபாரிகளும் வெளியூரிலிருந்து வந்து போகும் பக்தர்களும் ஏராளம். இது குறித்து அதிகாரிகளிடம் பல முறை விண்ணப்பித்தும் எவ்விதப் பயனும் இல்லை. இக்குறையினைத் தீர்க்குமாறு தங்களை மிகவும் பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

- கிராம மக்கள்
லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம்

தீர்வு :

பேருந்து வழித்தட எண்.91 என்ற புஞ்சை சங்கேந்தி கிராமத்திற்கு இயக்கப்படும் நகரப் பேருந்து எண். டி.என்45/என்.0961 ஐ கால அட்டவணைப்படி, நடை இழப்பின்றி இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
கும்பகோணம் (கோட்டம் II)

பிரச்சினை :

எங்கள் ஊர் நீலகிரி மாவட்டம், பாலாடா என்ற கிராமம் ஆகும். இங்கு தமிழ்நாடு அரசின் பொது நூலகத்துறையின் கீழ்,பகுதி நேர நூலகம் 1996-ம் வருடம் ஜனவரி மாதத்தில் திறக்கப்பட்டது. அரசு 30.1.96ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளில் 625 கிராமப்புற நூலகங்கள் திறக்கும் திட்டத்தில் எங்களது கேத்தி பாலாடா உள்ளது என்பது தெரிந்ததே. ஆணை பிறப்பிக்கப்ட்டு,6 மாதம் ஆகியும் இன்னமும் இந்த கிராமப்புற நூலகம் திறக்கப்படவில்லை. இதை எப்பொழுது திறக்க உள்ளீர்கள்? மேலும் அரசு கோரியிருந்தபடி அனைத்து நிபந்தனைகளையும் எங்கள் கிராமத்தில் பூர்த்தி செய்துள்ளோம். எனவே இது குறித்து எப்பொழுது எங்கள் ஊரில் கிராமப்புற நூலகம் திறக்க உள்ளீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

- கிராம மக்கள்
பாலாடா

தீர்வு :

பார்வை 1-ல் கண்ட கடிதத்திற்கிணங்க கேத்தி (பாலாடாவில்) ஊர்ப்புறநூலகங்கள்திறக்க ஊர்ப்புற நூலகர்கள் பணியிடம் இனச் சுழற்சி முறைப்படி நியமனம் செய்யப்பட்டமையால் ஏற்கெனவே பணி புரிந்துவந்த பகுதி நேர நூலகர்கள் நான்கு பேர் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்து உள்ளதாலும், பணியிடத்தைத் தற்போது காலியாக வைக்கத் தீர்ப்பாணையத்தில் ஆணை வழங்கப் பட்டுள்ளது. ஆகவே,கேத்தி பாலாடா, பில்லிக்கம்பை, சம்பட்டி, குருத்துக்குளிஆகிய ஊர்ப்புற நூலகங்களின் தற்போதைய நிலையினைப் பொது நூலக இயக்குநர்-சென்னைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிவுரைக் கடிதம் கிடைக்கப்பெற்றவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நூலக அலுவலர் (உதகை) தெரிவித்துள்ளார் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- திரு. பி. சோனை, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
உதகமண்டலம்.

பிரச்சினை :

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த 1. மொட்டையாண்டி, சேனிக்கோட்டை, சூரகுடி, இடையார் ஊராட்சியைச் சேர்ந்த வீரண்டான், கள்ளியம்பள் ஆகிய குக்கிராமங்கள் பயன்பெறும் வகையில் அறந்தாங்கி - காரைக்குடி, தேனிப்பட்டி புதுப்பட்டி வழியாகச் செல்லும் மெயின் சாலையில் 4.05வது கி.மீ. இணைப்புச் சாலை துவக்கப்பட்டு, அந்தச் சாலை இடையார் ஏரியின் மேல் வழியாகச் சென்று மொட்டையாண்டி - சேவிகோட்டை கிராமங்களுக்கு மத்தியில் சூரடி கிராமத்திற்கு வடபுறம் வீரண்டான் ஆரம்பப் பள்ளி வழியாகக் கள்ளியம்பள் கிராமத்திற்குத் தென்புறம் சென்று, அறந்தாங்கி - புதுவயல், இடையார் புதுவாக்கோட்டை, கம்மங்காடு வழியாகச் செல்லும் மெயின் சாலையில் இடையார் கூட்டுக் குடிநீர் தலைமை நீரேற்றும் நிலையம் அருகில் போய் இணைகிறது. இச்சாலையின் மொத்த நீளம் சுமார் 6 கி.மீ. ஆகும். இச்சாலையைத் தரம் உயர்த்தி மேம்பாடு செய்து தரக்கோரி பல மனுக்கள் அனுப்பியும் (பல வருடங்களாக) எவ்விதப் பலனுமில்லை. ஏனெனில் இச்சாலை வழியாகத்தான் கிராமவாசிகள் விவசாயம் செய்யும் சுமார் 1000 ஏக்கர் நஞ்சை நெல் விவசாயம் செய்யத் தேவையான இடுபொருட்கள் கொண்டு வரவும், லாரி - டிராக்டர் வண்டி, வாகனங்கள் மேலும் மக்களுக்கு டவுன்பஸ் வசதி சரியாக அமையவும் இச்சாலைதான் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. எனவே, இச்சாலையைத் தரம் உயர்த்தி மேம்பாடு செய்யத் தக்க நடவடிக்கை எடுத்து, எங்களின் குறைகளைத் தீர்த்து வைக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

— மா.மு. கருப்பையா
மொட்டையாண்டி
புதுக்கோட்டை மாவட்டம்.

தீர்வு :

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் ஊராட்சியைச் சார்ந்த மொட்டையாண்டி கிராமத்தில் உள்ள சாலையினைத் தரம் உயர்த்தி மேம்பாடு செய்யக்கோரி பார்வை 1ல் காணும் இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்படி சாலையில் நடைபெறும் பணியினைக் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கின்றேன்.

1. *1997 - 98ஆம் ஆண்டுக்கான 10-வது நிதிக்குழு சிறப்பு மானியத் திட்டத்தின் கீழ் மொட்டையாண்டி சாலை கி.மீ. 2/6ல் குழாய்ப்பாலம் அமைக்க ரூ.80,000 மதிப்பீட்டில் டெண்டர் முடிக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட உள்ளது.*
2. *1997 - 98ஆம் ஆண்டுக்கான பராளுமன்றத் தொகுதி மேம்பாடு நிதி மூலம் ரூ.5.90 இலட்சத்தில் தார்ச்சாலை அமைக்கும் பணி நெடுஞ்சாலைத் துறையின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.*

மேலும் 1998 - 99ஆம் ஆண்டு நிதியில் மேற்படி சாலையினை எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

— ஆணையர், ஊராட்சி ஒன்றியம்,
அறந்தாங்கி

பிரச்சினை :

கோவை மாவட்டம் சுல்தான்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட அப்பநாயக்கன்பட்டி கிராமம் எங்கள் ஊராகும். அண்மையில் பெய்த பலத்த மழையின் காரணமாக 1982-ஆம் வருடம் அரசு கட்டிக்கொடுத்த தொகுப்பு வீடுகள் (இந்திரா நினைவு குடியிருப்பில்) இடிந்துள்ளன. மழைநீர் வெள்ளம் காலனியில் வந்ததே காரணம், புதிதாக எங்கள் காலனிக்கு அருகில் திரு.கோவிந்தராஜ் என்பவரது பட்டாபூமியினை பிளாட் போட்டு விற்பனை செய்யப் பள்ளத்தின் நடுவில் குறுகிய பாலம் கட்டப்பட்டது. மழை வெள்ளம் அதிகமாய் வந்ததால், பாலம் ரிங் பைப்பில் போகமுடியாமல் நீர் தேங்கி, கிழக்குத் திசையில் பாய்ந்தது. எங்கள் வீடுகள் இடிந்தும், சிலவற்றின் மேல் கூரைகள் இடிந்தும், காலனியைச் சுற்றியும் மழைநீர் தேங்கியும் உள்ளது. எனவே இடிந்த வீட்டினைப் பழுதுபார்த்தும், மழைநீர் காலனியில் தேங்காவண்ணமும், தேங்கிய நீரை விரைவில் வெளியேற்றவும், தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கத் தாங்கள் உதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஊர்ப்பொதுமக்கள், அரிசனக்காலனி,
அப்பநாயக்கன்பட்டி.

தீர்வு :

சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றிய அப்பநாயக்கன் பட்டி, அரிசன காலனி பொதுமக்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து, கீழே குறிப்பிட்டவாறு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மழையின் காரணத்தால், அப்பநாயக்கன் பட்டி அரிசனக் காலனிக்குள் மழைநீர் புகுந்து சேதமடைந்துள்ளது. கீழே குறிப்பிட்டுள்ள 17 நபர்களின் வீடுகளுக்குப் பதிலாகப் புதிதாகத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியக் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலரின் ந.க.4478/97/பி4 நாள் 12.12.97ல் முன்மொழிவு அனுப்பப் பட்டுள்ளது. முன்மொழிவுகள் பரிசீலனை செய்யப்பட்டு, கோவை மாவட்ட ஆட்சித் தலைவரின் ந.க. 3649/97/அ3 நாள். 5.2.98ல் கீழே குறிப்பிட்டுள்ள 17 பயனாளிகளுக்கு அவர்களின் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தொகையில் 31.3.98க்குள் முடிக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

வ. எண்	பயனாளியின் பெயர் மற்றும் முகவரி	வீட்டு எண்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை
	திரு/திருமதி		
1.	குமரன் த/பெ.பழனி, அப்பநாயக்கன்பட்டி	1/222	25,900.00
2.	பழனாள், க/பெ. கப்பன்	1/124	26,000.00
3.	கருப்பன், த/பெ.பச்சான்	1/131	26,000.00
4.	கப்பன், த/பெ.சின்னான்	1/120	26,050.00
5.	சின்னாள், த/பெ.நாச்சி	1/116	26,100.00
6.	மாறன், த/பெ.நாச்சி	1/119	25,900.00
7.	பழனிச்சாமி, த/பெ.நாச்சி	1/108	25,900.00
8.	பழனிச்சாமி, த/பெ.அம்பாள்	1/102	26,100.00

9. மதுராள், க/பெ.ரங்கன்	1/104	26,100.00
10. சின்னபழனி, த/பெ.கருப்பன்	-	26,050.00
11. சின்னான், த/பெ.மாறன்	1/109	25,900.00
12. .ரங்கன், த/பெ.சுப்பன்	1/123	25,900.00
13. பழனி, த/பெ.நாச்சி	1/127	25,900.00
14. பழனி, த/பெ.மாறன்	1/121	25,900.00
15. சுப்பன், த/பெ.மாறன்	1/110	26,950.00
16. திரு. ஓவன், த/பெ. மாறன்	1/106	26,000.00
17. திரு. பழனி, த/பெ. சுப்பன்	1/148	26,000.00
		ரூ.4,41,650.00

பொதுமக்கள் விரும்பியபடி எதிர்காலத்தில் மழைநீர் அரிசனக் காலனிக்குள் செல்லாதிருக்கப் பாதுகாப்பிற்காக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் அப்பநாயக்கன்பட்டி வண்ணான்குட்டை அருகில் வெள்ளத் தடுப்புச் சுவர் ரூ.1.50 மிதிப்பீட்டில் கட்டுவதற்கு 19.12.97ம் தேதி சுல்தான்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலரின் ந.க.851/97/ஏ9ல் முன் மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதிநிலைமின் அடிப்படையில் 1998-99ஆம் நிதியாண்டில் வேலை (ந.க.11232/97/அ4 உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ்) அனுமதியளிக்கப்பட்டு துவங்கப்படும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

— ஜி.சந்தானம்,
மாவட்ட ஆட்சித்தலைவர்
கோவை மாவட்டம்

பிரச்சினை :

எங்கள் ஊர் மதுரை மவாட்டம் சமயநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஆகும். எங்கள் ஊரில் ஒரே ஒரு தியேட்டர்தான் உள்ளது. இத் தியேட்டரில் குறைந்த அளவு கட்டணத்தை அச்சு செய்து மக்களுக்கு ரூ.8.50 ஆக கட்டணத்தை வசூல் செய்கிறார்கள். தியேட்டர் டிக்கெட்டில் ரூ.2.30 அச்சிடப்பட்ட கட்டணம் ஆகும். ஏன் இவ்வளவு கட்டணம் வசூல் செய்தீர்கள் என்று கேட்டால் அடிதடி நடத்துகிறார். இதனால் பொது மக்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். இதனால் அரசுக்கு வரி ஏய்ப்பு நடக்கிறது. அரசுக்குப் பல ஆயிரம் ரூபாய்கள் இதனால் நட்டம் ஏற்படுகிறது. எனவே, இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

— பி.ஜி. தவிடன், எம்.உத்திரம்,
சமயநல்லூர், மதுரை மாவட்டம்

தீர்வு :

மேற்படி தியேட்டர் (பரவை - ஊர்மெச்சிகுளம் பகுதியில் உள்ளது) அப்படி எதுவும் கூடுதலாக வசூல் செய்ததாகத் தெரியவில்லை. மேலும் சமயநல்லூர் ஊராட்சிப் பகுதி தேசிய நெடுஞ்சாலை மற்றும் இருப்புப் பாதையில் உள்ளபடியாலும் போக்குவரத்து உள்ள பகுதியாக உள்ளதால் இங்கு அனைத்துக் கட்சிகள் மற்றும் பொதுத் தொண்டு நிறுவனங்களின் பார்வைகள் தொடர்ந்து இருந்துகொண்டு இருக்கும். மேலும் இப்பகுதிமக்களரவுடித்தனத்தை எப்பொழுதும் அனுமதிக்கமாட்டார்கள் என்பதைத் தாங்கள் காவல் துறையைத் தொடர்புகொண்டால்தங்களுக்குத்தெரியும். விலாசத்தில் உள்ள பி.ஜி.தவிடன் என்ற நபர் உண்மையான விலாசமாகத் தெரியவில்லை. அப்படி ஒரு பெயர் இப்பகுதியில் இல்லை என்பதையும் புகார் உண்மை இல்லை என்பதையும் தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

— தலைவர்,
சமயநல்லூர் ஊராட்சி

பிரச்சினை :

வெண்கரும்பூர் கிராமம் ச.எண்.210, 211, 212 நத்தம் புறம்போக்காக உள்ளது. மேற்படி கிராமம் நத்தம் சர்வே செய்தபோது உட்பிரிவு செய்யாமல் பட்டா கொடுக்கப்படாமல் விடுபட்டுவிட்டது. மேற்படி இடத்தில் சுமார் தற்போது 40 குடும்பத்தினர் வீடுகள் கட்டி குடியிருந்து வீட்டுவரி செலுத்தியும் வருகிறார்கள். மேற்படி பகுதிக்குக் 'கலைஞர் கருணாநிதி நகர்' என்று பெயரிடப்பட்டும் உள்ளது. எனவே, தாங்கள் மேற்கண்ட குடியிருப்புகளுக்கு நத்தம்பட்டா வழங்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

—ஊராட்சி மன்றத் தலைவர்
வெண்கரும்பூர், பென்னாடம்,
கடலூர் மாவட்டம்

தீர்வு :

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், வெண்கரும்பூர் கிராம ஊரட்சி மன்றத் தலைவர் கொடுத்துள்ள மனுவின் மீது திட்டக்குடி நத்தம் நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மேற்படி கிராமப் புல எண்கள். 210, 211, 212 ஆகியவற்றில் புல எண். 211 மட்டுமே நத்தம் புலம் என்றும், இப்புலத்தில் நன்கு வளர்ந்த இலுப்பை மற்றும் புளியமரங்கள் உள்ளதால் மனைப்பட்டா வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டதாகவும், தற்போது புலப்பரிசீலனை செய்ததில் மனைப்பட்டா வழங்கத் தகுதியுள்ள 39 இனங்கள் உள்ளன என்றும், இவைகளுக்கு மட்டும் மனைப்பட்டாவும், மீதம் பரப்பில் அமைந்துள்ள மரங்களுக்கு மரப்பட்டாக்களும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனப் பரிந்துரை செய்துள்ளார். மேலும் புல எண்கள். 210, 212ஆகியவை பட்டா புஞ்சைப் புலங்கள் என்றும், எனவே, இப்புலங்கள் நத்தம் அளவைப் பணிக்குக் கொணரப் படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே, புல எண்.211 நத்தம் புலத்தில் மட்டும் தற்போது அமைந்துள்ள விடுகளுக்கு மனைப்பட்டாக்கள் வழங்கவும், இப்புலத்தின் மீதம் பரப்பில் அமைந்துள்ள மரங்களுக்கு மரப்பட்டாக்கள் வழங்கவும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டக்குடி வட்டாட்சியருக்குப் பார்வை 3 கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளேன் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மாவட்ட வருவாய் அலுவலர்,
கடலூர் மாவட்டம், கடலூர்,

பிரச்சினை :

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஒன்றியத்திற் குட்பட்ட தனக்கண் குளம் கிராமம் திருவள்ளுவர் நகரில் வசித்து வருகின்றோம். இங்கு 5000த்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கிறார்கள். குறிப்பாக 80 விழுக்காடு மக்கள் கல்வி அறிவு பெற்றவர்களாக உள்ளனர். மேலும், இப்பகுதியின் அருகாமையில் பொது நூலகம் இல்லாதார் மக்கள் விழிப்புணர்வு அற்றவர்களாக இருக்கும் நிலை ஏற்படுகிறது.

எனவே, மாவட்ட நூலகத்தை அணுகி நூலகம் அமைக்க அவர்கள் தந்த விதிமுறைகளின்படி நூலகத் தளவாடங்களான வாடகையில்லாத அரசு கட்டிடம், பிற்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 7 செண்ட் காலி இடம் பத்திரப் பதிவுடன் இரு புரவலர்கள் தொகை ரூ.2000 குறைந்தது200உறுப்பினர்கள் தொகை ரூ.6000 ஸ்டீல் பீரோ-1, ஸ்டீல் மேஜை-1, ஸ்டீல் சேர்-10, டியூப்லைட் பிட்டிங் ஆகியன திருநகர் கிளை நூலகரிடம் 9.10.97ல் ஒப்படைக்கப்பட்டும் இதன் விவரங்கள் மாவட்ட நூலகருக்கும், மாநிலப் பொது நூலக இயக்குநருக்கும் கடிதத்தின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டும் காலதாமதம் ஆவது தவிர்க்க இயலாததாக உள்ளது. ஆகவே, எங்கள் பகுதிக்கு நூலகம் திறக்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
நண்பர்கள் அன்புக்குழு,
திருவள்ளுவர் நகர், திருநகர்
மதுரை - 6.

தீர்வு :

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஒன்றியத்திற் குட்பட்ட தனக்கண் குளம் கிராமம் திருவள்ளுவர் நகரில் பகுதிநேர நூலகம் உள்ளது என்றும், அவ்வூரில் உடன் பகுதிநேர நூலகம் திறப்பதற்கு உடன் ஆவன செய்யும்படியும் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக மதுரை மாவட்ட நூலக அலுவலருக்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளது. விரைவில் அப்பகுதியில் நூலகம் திறக்க ஆவன செய்யப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொது நூலக இயக்குநர்,
அண்ணாசாலை, சென்னை - 2.

பிரச்சினை :

பழனி வட்டம் பழைய ஆயக்குடி கிராமத்தில் ஆயக்குடி பேரூராட்சிக்குச் சொந்தமான சந்தைப் பேட்டை உள்ளது. இங்குதான் திங்கட்கிழமை தோறும் வாரச்சந்தை நடப்பது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாக இச்சந்தைப் பேட்டை வளாகம் முறையான பராமரிப்பின்றி, திறந்த வெளி பொதுக்கழிப்பறை போன்ற நிலைக்கு வந்துவிட்டது. இதனால் வாரச்சந்தை போக்குவரத்து நெருக்கடி மிகுந்த பிரதான (திண்டுக்கல் - பழனி) நெடுஞ்சாலை ஓரத்தில் நடந்துகொண்டிருக்கிறது. இதனால் பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. விபத்து நடப்பதற்கான சூழ்நிலையும் உள்ளது. இதுகுறித்துப் பல மனுக்கள் அனுப்பியும் எந்த ஒரு பலனுமில்லை.

மேலும் இதே சந்தைப்பேட்டை வளாகத்தில் பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவில் 4,5 ஆண்டுகள் முன்பு கட்டப்பட்ட சமுதாயக் கூடம் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்ட நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளது. சமுதாயக் கூட கட்டடம் என்ன நோக்கத்திற்காகக்கட்டப்பட்டதோ அதை நிறைவேற்றும் வகையில் அதன் உபயோகம் இருக்க வேண்டும். அல்லது ஊர்மக்கள் அனைவருக்கும் பயன்படும் விதத்தில் நூலகம் / படிப்பகம் போன்றவற்றை இக்கட்டத்தில் ஏற்படுத்த வேண்டும். எதுவும் செய்யாமல் ஏன் பூட்டப்பட்ட நிலையில் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளது? இது குறித்தும் கோரிக்கை மனுக்கள் அனுப்பியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, தாங்கள் தக்க நடிவடிக்கை எடுத்து, இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் கேட்டுகொள்கிறேன்.

— கிராமப்பொதுமக்களின் சார்பாக நா. புகழேந்தி
பழைய ஆய்க்குடி, பழனி வட்டம், திண்டுக்கல் வட்டம்

தீர்வு :

ஆயக்குடி பேரூராட்சியின் 4வது வார்டு சந்தைப்பேட்டையில் சில வருடங்களுக்கு முன்பு குப்பைகள் கொட்டப்பட்டு வந்தது. கடந்த ஓராண்டாகக் குப்பை கொட்டுவது நிறுத்தப்பட்டு உள்ளது. ஏற்கெனவே, குப்பைத் தொட்டியை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்ககப்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் அரசின் நலத்துறை மூலம் சமுதாயக்கூடம் ஒன்று கட்டப்பட்டு, அது தற்சமயம் பொதுமக்கள் பயன்படுத்த முன்வராத நிலையில் உள்ளது. சந்தை கூடும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மேற்படி வாரசந்தை கூடும் அளவுக்குச் சுத்தம் செய்து பிளீச்சிங் பவுடர் சுண்ணாம்புத்தூள் தூவியும், பினாயில் தெளித்தும் வேலைகள் செய்யப்படுகிறது. தினந்தோறும் காலை வேளையில் சந்தையின் உட்புறம் துப்புரவு செய்தும், சுக்கூஸ் கழிவுகளை அப்புறப்படுத்தியும் வேலைகள் செய்து முடிக்கப்படுகிறது. சந்தை நாட்களில் சாலை ஓரங்களில் கடைபோடும் நபர்களைச் சந்தையின் உட்புறம் கடையைப் போட அறிவுறுத்தி, சாலை ஓரங்களில் கடை போடாதவாறு கண்காணிக்கப் படுகிறது.

இதற்கிடையில் சந்தை காம்பவுண்டு உட்புறம் தற்காலிகக் கடைகள் போடவும் பேரூராட்சி மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் தாட்கோ லோன் மூலம் கடைகள் கட்டி வாடகைக்கு விடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு செய்யும்போது வாரச்சந்தை சுத்தமாக வாய்ப்பு உள்ளது.

— செயல் அலுவலர்,
ஆயக்குடி பேரூராட்சி (தேர்வுநிலை)
திண்டுக்கல் மாவட்டம்.

● ● ●

வாசகர் இதயம்

தமிழ்நாடு அரசு எனக்குத் 'தந்தை பெரியார் சமுகநல விருது' வழங்கிச் சிறப்பித்ததைத் தங்கள் இதழில் நல்லமுறையில் - முதலமைச்சரின் சொற்பொழிவோடு வெளியிட்டிருந்தீர்கள். அந்த இதழில் இருந்த மற்ற விஷயங்களும் எனக்கு மகிழ்வூட்டும்படி இருந்தன - என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- எஸ். தவமணிராசன்,
சிவகாசி.

பொங்கல் சிறப்பு மலர் கண்டேன்; தங்கக் கவிதை பல உண்டேன்; பொங்கு மகிழ்ச்சியைப் புரிந்து கொண்டேன்; எங்கெங்கும் புகழ் மணம் வீசட்டும் - மங்கலத் 'தமிழரசு' மண்மிசை நின்றே.

- கெங்கை பாலதா,
சின்னக்கலையம்புத்தூர்.

இலக்கியத்தில், பூக்களைக் கொண்டே பெண்கள் எப்படியெல்லாம் வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இனிக்க இனிக்க விளக்கியிருந்த சிலம்பொலியாரின் கருத்துகள் மிகவும் அருமை.

- மு. செல்வம்,
கீரப்பாளையம்.

பொங்கல் சிறப்பு மலரில், கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன் எழுதியிருந்த 'ஓர் இலக்கியப் பார்வை' கட்டுரை நற்சிந்தனைக்கு விருந்தாக இருந்தது; பாராட்டுகிறேன்.

- கே.எஸ்.அப்துல் ரகுமான்,
திருவல்லிக்கேணி.

தமிழரசில் தொடர்ந்து வெளிவரும் "எங்கள் ஊர்ப் பிரச்சினை" பகுதி மிகவும் பயனுள்ளதாகும். என் போன்ற சாதாரணமானவர்கள், எவ்வ[illegible] ஊர்களிலிருந்தும் தமது [illegible] தெரிவிக்கவும், "தமிழரசு" மூலம் [illegible] கொள்[illegible] அப்பகுதி [illegible]

- [illegible]டுசாமி
ஆனையாங்குப்பம்

அரசின் திட்டச் செய்திகள், கட்டுரைகள், கதை, கவிதை, இலக்கியம், துணுக்குச் செய்திகள், விழாப் படங்கள் - என்று தொடர்ந்து வெளியிட்டு வியக்கவைத்து விடுகிறீர்கள்; இதழுக்கு இதழ் மெருகு கூடிவரும் 'தமிழரசு'க்கு நல்வாழ்த்து.

- எம்.என்.குபேந்திரன்,
சென்னை.

தமிழரசு ஜனவரி இதழில், கலைஞரின் தனித்தமிழ்ச் சொல்லாக்கம் பற்றிய கட்டுரை அருமையாக இருந்தது; அரிய பல செய்திகளைப் புரிந்து கொள்ளச் செய்தது. கலைஞரின் 'தமிழ்வழிக் கல்வி' மொத்தத்தில் சிறப்பான வெளியீடு.

- மு.வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

பிப்ரவரி தமிழரசில் இடம்பெற்றிருந்த 'எதிர்முனை' சிறுகதை சிறப்பாக இருந்தது; முழுக்க முழுக்க இலக்கியப் புதையலாக இருந்தது. நன்றி.

- கா.நா. ராஜசேகர்,
மங்களபுரம்.

சரித்திரம் படைத்த

டாக்டர் கலாம்

இந்திய ஏவுகணைத் தொழில் நுட்பத்தின் தந்தை' எனப்படும் நிபுணரான புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமுக்கு நம் இந்திய நாட்டின் இணையற்ற விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கிப் பெருமைப் படுத்தப்பட்டுள்ளது. வழங்கியவர் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் அவர்கள்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆலோசகராகவும் - பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி வளர்ச்சி அமைப்பின் தலைவராகவும், இருப்பது மட்டுமல்ல; இலகு ரகப் போர் விமானம், அர்ஜுன் டாங்கிகள் ஆகியவற்றை உருவாக்குவதிலும் இவர் முக்கியப் பங்காற்றியிருக்கிறார்.

மறைந்த டாக்டர் விசுவேசுவரய்யாவுக்குப் பிறகு பொறியாளர்களைப் பொறுத்த மட்டில் இவருக்குத்தான் 'பாரத ரத்னா' விருது கிடைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. நம் நாட்டில் மிகக் குறுகிய காலத்திலேயே ஏவுகணைத் தொழில் நுட்பத்தை மேம்படுத்தி - அது தொடர்பான வளர்ச்சித் திட்டம் வெற்றியடைச் செய்ததில் பெரும்பங்கு இவருடையதாகும்.

பாதுகாப்பு அமைப்புகள், உயர்கல்வி நிலையங்கள், விஞ்ஞானக் கூடங்களில் பணிபுரிந்துவந்த திறமையாளர்களை ஒருங்கிணைத்து ஆய்வுப் பணியை மேற்கொண்டதால்தான் குறுகிய காலத்திலேயே ஏவுகணைத் தொழில் நுட்பத்தை மேம்படுத்த முடிந்தது.

திரு.கலாமைப் பொறுத்த வரை, நாம் நெஞ்சுயர்த்திப் பெருமைப்பட வேண்டிய செய்தி, அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். ஆம், 1931 அக்டோபர் 10ஆம் நாள் இராமேஸ்வரத்தில் பிறந்தவர் திரு.கலாம். முழுப் பெயர் அவுல் பக்கீர் ஜைனுலாபுதீன் அப்துல் கலாம்.

பிடித்ததும், பிடிக்காததும்

மிக வறிய குடும்பத்தில் பிறந்த திரு.கலாம், ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மீடியம்தான்; பிறகு, திருச்சி செயின்ட் ஜோஸப் கல்லூரியில் பட்டப்படிப்பு; அதன்பின்னர் அவர் சென்னை எம்.ஐ.டி.யில் சேர்ந்து விமானப் பொறியியல் துறையில் தம் மேற்படிப்பைத் தொடர - அவருடைய சகோதரி தம்மிடமிருந்த நகையையெல்லாம் விற்றுப் பொருளுதவி செய்திருக்கிறார்.

இன்றைக்கும் கட்டைப் பிரம்மச்சாரியாகவே உள்ள திரு.அப்துல் கலாமுக்குத் தமிழ் இலக்கியம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம், கதையெல்லாம் தெரியும்.

கவிதை இயற்றுதல், வீணை வாசித்தல் பிடிக்கும்; அசைவம் பிடிக்காது -

அதேபோல மது, சிகரெட் ஆகியவைகளும்கூட அறவே பிடிக்காது!

இதையெல்லாம் விட முக்கியமான ஒன்று, இளம்பருவத்தில் உயர்கல்வி முடிந்ததும் மேலும் வளரவோ - பொருள் திரட்டவோ கருதி, எந்த ஒரு வெளிநாட்டிற்கும் சென்றதில்லை திரு.அப்துல் கலாம். படித்து முடித்ததும் வெளிநாட்டிற்குப் போனால்தான் மரியாதை என்று கருதுவோர் இதை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

முதலமைச்சர் வாழ்த்து

டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாமுக்குப் 'பாரத ரத்னா' விருது அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒரு வாழ்த்துச் செய்தி கொடுத்திருந்தார் பெருமிதத்தோடு:

"நமது நாட்டில் வழங்கப்படும் மிக உயர்ந்த விருது எனப் போற்றப்படும் 'பாரத ரத்னா விருது' இந்தியாவின் தொழில்நுட்பச் சாதனையில் சரித்திரம் படைத்துவரும் விஞ்ஞான வித்தகர் டாக்டர் அப்துல் கலாமுக்கு அளிக்கப்பட்டிருப்பதும், அதுவும் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அளித்திருப்பதும் பெருமைக்குரியதும் பெருமகிழ்ச்சிக்குரியதுமாகும். அவருக்கு என் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரியதாகுக'' - என்று அதில் முதலமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

'டாக்டர் ஆஃப் சயின்ஸ்' பட்டம் பெற்ற இவர், இதற்கு முன்பாக தேசிய வடிவமைப்பு விருது, ஓம் பிரகாஷ் பாஸின் விருது, நேரு பெயரிலான தேசிய விருது (மத்தியப் பிரதேசம்), ஆர்யபட்டா விருது (1994), நாயுடம்மா நினைவு தங்க மெடல் (1996), ஜி.எம்.மோதி அறிவியல் துறை விருது (1996), எச்.கே.ஃபெரோடியா விருது (1996) - ஆகிய விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

அதுமட்டுமா? 1981ல் டாக்டர் கலாமுக்கு இந்திய அரசின் 'பத்ம பூஷன்' பட்டம் வழங்கப்பட்டது. 1990ல் 'பத்ம விபூஷன்' பட்டமளித்துப் பாராட்டப்பட்டது.

இப்போது - டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் இந்திய விண்வெளி ஆய்வுப் பிரிவுத் துணைத் தலைவராகவும், இந்திய தேசியப் பொறியியல் இயக்க உறுப்பினராகவும், பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழக உறுப்பினராகவும், இந்திய எலக்ட்ரானிக்ஸ் மற்றும் டெலிகம்யூனிகேஷன் அமைப்பின் உறுப்பினராகவும் உள்ளார்.

2020ல், இந்தியா எப்படி இருக்கவேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொடுக்கும் பெரும் பொறுப்பே, இவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது!

- பி.எல்.ஆர்.

உலகம் இனியது

கே.மீனாட்சிசுந்தரம்

வாழ்க்கையைக் குறித்து மக்கள் இரண்டு விதமான மனப்பான்மையை உடையவராக இருக்கின்றனர்.

எல்லாம் துன்பமயம், எல்லாம் இன்பமயம் என்பவையே அவை. உலகில் துன்பந்தான் மிகுதியாய் உண்டு. இன்பம் சிறிதளவே என்பதுதான் பலர் கொள்கை. ஒரு ரூபாயில் பதினைந்தணாத் துன்பமும் ஒரு அணா இன்பமும் கலந்திருக்கிறது என்று ஆங்கிலப் பழமொழி கூறுகிறது. உண்மையை உணர்பவர்கள் உலகில் நிறைந்த இன்பங்களைக் காண்கின்றனர். துன்பமுண்டு என்பதை உணர்ந்தாலும் சோர்வடையாமல் நின்றால் அவற்றைக் களையமுடியும் என்ற உறுதியான எண்ணத்தை நிறுவுகின்றனர். உணர்ச்சியூட்டி எழுச்சி கொள்ளச் செய்த பாரதி உலகை இன்ப மயமாகவே காண்கிறார்.

பாரத நாயகியின் திருக்கையால் "உலகின்பக் கேணி" என எழுதப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைக்கிறார் நமது அமரகவி. "எத்தனைக் கோடியின்பம் வைத்தாய் இறைவா"! என்ற கவியைப் பாடுங்கால் நம்மை அறியாமல் உலகிலமைந்த இன்பங்கள் யாவற்றையும் நுகர்ந்து சுவைத்து இன்பத்தில் திளைக்கின்றோம். இயற்கை அழகினை அள்ளிப் பருகுகிறார். தனது வசன கவிதையில் "இவ்வுலகம் இனியது" எனத் தொடங்கி ஒவ்வொன்றையும் இனிய பொருளாகக் காணும்போது நம்மையும் மறந்து இனிக்கச் செய்கிறார். எனவே உலகம் இன்பம் நிறைந்ததே தவிர துன்பம் நிறைந்ததன்று என்பதைக் காட்டி உலகின்மீது வெறுப்புக் கொள்ளாது ஆசைகொள்ள வழி வகுக்கிறார்.

துன்பங்கள் எல்லாவற்றையும் எளிதில் போக்கிவிடலாம். பாப்பாப் பாட்டிலும், ஆத்தி சூடியிலும் அதைப் போக்குவதற்குரிய பாதையைக் காட்டுகிறார். "துன்பம் மறந்திடு" என்று ஆத்திசூடியில் கூறுகின்ற கருத்து எவ்வளவு உயர்ந்தது; சிறந்தது தெரியுமா ?

"துன்பம் நெருங்கி வந்த போதும் - நாம்
சோர்ந்து விடலாகாது பாப்பா"

துன்பங்கள் நெருங்கி வரலாம். ஆனால் அதைக்கண்டு சுருங்கிவிடக்கூடாது. ஏனெனில் "கெடுப்பது சோர்வு" என்றார் பாரதி. அது மட்டுமா கூறுகிறார் ? விநாயகர் நான்மணி மாலையில் விநாயகரை என்ன வேண்டுகிறார் ? கூர்ந்து கவனிக்கவேண்டும். இதோ அந்த வரிகள்:

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல் - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்
சிந்தையே யிம்மூன்றுஞ் செய்".

நமக்குத் தொழில்கள் மூன்று என அறுதியிட்டுக் கொண்டு உறுதியாகச் சோராதிருத்தல் வேண்டுமென்பதனை அவற்றில் ஒன்றாக அமைத்துக் கணநாதனை வேண்டுகிறார். உழைக்கவேண்டும். தனக்கா ? இல்லை, நாட்டுக்கு. உழைக்குங்கால் இமைப்பொழுது கூடச் சோராதிருத்தல் வேண்டும். பாருங்கள் ! பரந்த உள்ளத்தோடு எவ்வளவு தூரம் ஊக்கம், முயற்சி, உற்சாகம் வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார் என்று.

செயலாற்றுங்கால் எவ்வளவோ துன்பங்கள் நெருங்கலாம். தோல்வியும் ஏற்படலாம். ஆனால், தோல்வியில் கலங்காது, கேட்டிலும் துணிந்து நின்று நொந்தது சாகுமென உணர்ந்து, சிதையா நெஞ்சுகொண்டு சோராது தொழிலாற்ற வேண்டுமென்பதை அழகுற ஆத்திசூடியில் குறித்து அருமையான பாதை காட்டுகிறார்.

துன்பத்தை மறக்காமல் சோர்வுகொண்டு கவலையுடன் வாழ்பவன் கருகி, நைந்து, செத்தே தீருவான். நரகமும், முத்தியும் இங்கேயே இருக்கின்றன என்கிறார் பாரதியார்.

"கவலைப்படுதலே கடுநரகம்மா
கவலையற்றிருத்தலே முக்தி"

பாரதி அறுபத்தாறில் மரணமில்லாமல் வாழலாம் என்கிறார் கவிஞர். விஞ்ஞானக் கண்ணை வெளிக்காட்டி உண்மையை எடுத்து இயம்புகிறார். "நாடியிலே அதிர்ச்சியினால் மரணம்" என்று "கோனாகிச் சாத்திரத்தை ஆளும் மாண்பார் ஜகதீச சந்த்ர வசு" கூறுகின்றார். இந்த நாடியதிர்ச்சிக்குக் காரணம் என்ன ? "கவலையினால் நாடி எலாம் தழலாய் வேகும்" என்கிறார் ஆராய்ச்சிக் கவிஞர். எனவே "கொன்றழிக்கும் கவலைக்கு" "வஞ்சகக் கவலைக்கு" இடங்கொடுக்க வேண்டாம் என்று பறைசாற்றுகிறார். கற்றவர்களையும் அறிஞர்களையும் பார்த்துக் கடாவுகின்றார் :

"கற்றுத் தெளிந்த பின்னும் - கிளியே
கவலைப்படலாகுமோ ?"

எவ்வளவு அருமையாகப் படித்துப் பட்டம் பெற்ற அறிவாளிகளுக்கு அறிவுறுத்துகிறார் பாருங்கள் :

"நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சியுயிர் வாழ்தல் அறியாமை - தஞ்சமென்றே
வையமெலாங் காக்கு மகாசக்தி நல்லருளை
ஐயமறப் பற்ற லறிவு"

அறிவையும் அறியாமையையும் அறிவுறுத்தியவர் வேத முடிவை வெளிப்படுத்துகிறார்.

"கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
காட்டு மறைகளெல்லாம் - நீவிர்
அவலை நினைந்து உமிமெல்லுதல் போலிங்கு
அவலங்கள் புரிவீரோ"

கவலையற்று, சோர்வற்று, ஊக்கமின்றி, உள வலியின்றி, உண்மையில் பற்றின்றிக் கிடப்பவர்களைப் பார்த்து மிகவும் கிண்டலாக இடித்துரைக்கின்றார் இடி போன்ற பாரதியார். ஏதோ அதிர்ஷ்ட வசத்தால் ஊக்கமில்லாத ஒரு சிலர் வாழ்க்கையில் முன்னேறிவிடுவதைக் கண்டு, இளைஞர் உலகம் உண்மைக்கும் நேர்மைக்கும் இடமில்லை என்று எண்ணி உளவலி குன்றிச் சோர்வுற்று வாழ்க்கையில் வெறுப்புற்று நிற்கிறது. ஆனால் அவற்றிற்குப் பாரதியின் பாக்கள் முற்றுப்புள்ளி வைத்து விட முடியும்.

தனி ஒருவனுக்குணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று மார்தட்டி முன்வர மாட்டானா ? முயற்சியில் தளர்ச்சி இருக்குமானால் வளர்ச்சி எப்படி இருக்க முடியும் ? எனவே, ஊக்கமும் உளவலியும் வேண்டியதாகின்றது. உண்மையில் பற்றில்லையானால் உருப்படியான வேலையை என் செய்யப் போகிறான் ?

கவலை போவதற்குக் காதல் செய்ய வேண்டுமென்கிறார் கவிஞர். தமிழ்மணங் கமழத் தலைதூக்கிய தலைவர் தமிழ்க் காதலைப் போற்றாதிருப்பாரா ? தமிழ்ப் பண்பாட்டைத் தலைசிறந்ததாகக் காண்கிறார். உண்மைக் காதல் கொண்டு வாழ்க்கை தொடங்க சமூகம் இடமொதுக்கவில்லை என்பதைக் கவிஞர் கண்டு கொண்டார். சோர்ந்த இளம் உள்ளங்களுக்கு உள்ள நிலையை எடுத்தியம்புகிறார். நகைச்சுவை ததும்ப நம் கவியரசர் கூறும் அழகைப் பாருங்கள் :

"நாடகத்தில் காவியத்தில் காத லென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றா மென்பர்.
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார்
பாடைகட்டி அதைக்கொல்ல வழி செய்கி ன்றார்
பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுக்கின் றாரோ !"

- இளைஞர்களைப் பார்த்து உண்மைக் காதலுக்கு வழிவகுக்கச் சொல்லுகிறார். ஆனால் அதே சமயத்தில் முறை பிறழ்ந்து மேனாட்டுக் காதல் முறையைப் பின்பற்றிக் கவலைகொள்ள வேண்டாமென எச்சரிக்கிறார். விடுதலைக் காதலை வெட்டிப் பேசுகிறார், நம் வீரர் சுப்பிரமணிய பாரதியார். என்னே நம் தமிழ் பண்பாட்டின் சிறப்பு!

இன்பமான உலகிலே துன்பங்கள் நெருங்கி வந்த காலத்துச் சோர்வுறாது கவலையுறாது இறைவனை உள்ளத்தெண்ணி காதல் செய்து ஊக்கமும் உளவலியும் உண்மையில் பற்றும் கொண்டு வாழ்க என்கிறார் வாழும் கவிஞர். இவ்வாறு கூறும் கவிஞர் தம் வாழ்க்கை எவ்வகையில்

ரூ. 123 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்படவுள்ள இத் திட்டங்களின் மூலம் சுமார் 6.62 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

கோவை மாவட்டத்தில் 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப் படவுள்ளன. முதல் திட்டத்தின் மூலம், அன்னூர் மற்றும் அவிநாசி ஒன்றியங்களில் உள்ள 28 ஊரகப் பஞ்சாயத்துகளும் சூலூர் ஒன்றியத்திலுள்ள 25 ஊரகக் குடியிருப்புகளும், மூப்பேரி பாளையம் ஊரக நகரப் பஞ்சாயத்திலுள்ள 9 குடியிருப்புகளும் பயனடையும்.

2-வது திட்டத்தின் மூலம், பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி - தெற்கு, கிணத்துக் கடவு மற்றும் குடியமங்கலம் ஒன்றியங்களில் உள்ள 295 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும்.

ஈரோடு மாவட்டம் குண்டடம் ஒன்றியத்திலுள்ள 85 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.6.14 கோடி செலவில் நிறைவேற்றப்படும். இது தவிர, அந்தியூர் ஒன்றியத்திலுள்ள நாகலூர், சின்னத்தம்பி பாளையம், மைக்கேல் பாளையம் ஊராட்சி ஆகிய பகுதிகளிலுள்ள சுமார் 32 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.6.8 கோடி செலவில் மற்றொரு திட்டம் நிறைவேற்றப் படவுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ரூ.11 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தின் சேந்தமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.6.69 கோடி செலவில் நிறைவேற்றப் படவுள்ளது. இத்திட்டத்தால், சேந்தமங்கலம், ஆலங்குளம், மானூர், மேல நீலிதநல்லூர், குருவிகுளம், சங்கரன் கோவில், பெத்தநாடார்பட்டி, பூலான்குளம் மற்றும் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 72 குடியிருப்புகள் பயன்பெறும். ★

சென்றது? பெரும் பேரறிஞர்கள் இக்கொள்கைகளைப் பின்பற்றி வாழ்ந்தவர்களா என்பதனையும் காணுதல் வேண்டும்.

உலகினை இன்ப மயமாகக் கண்டார் உமர்கயாம். இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் நற்பொருளாளர்களுக்கும் துறவிகளுக்கும் காதலர்களுக்கும் கலங்கியவர்களுக்கும் மகிழ்ந்தவர்களுக்கும் மனமுடைந்தவர்கட்கும் விருந்து நல்கி, ஏனையோரையும் ஆழச் சிந்திக்கவைத்து பாவையரும் பழரசமும் மணிநூலும் வாழ்வுக்கு இன்றியமையாதன என்றியம்பி, வாழ்வு மகிழ்ச்சியில், இன்பத்தில் தேங்கி திளைத்தலே என்கிறார். என்றாலும் உலகியலை ஊன்றியறிந்து ஆண்டவன் இயலை ஆழ்ந்துணர்ந்து காதல் இயலைக் கனிவுடன் பொழிந்து நடைமுறைக்கு ஏற்ற உண்மையான உணர்ச்சி இயல்களை உரைத்து மெய்ப் புலவராக விளங்குகிறார்.

நம் கவிஞரும் ஓரளவு அவர் போன்றவரே. பாரதியாருக்கு வாழ்க்கையில் நெருங்கிவந்த துன்பங்கள் எத்தனை? சோர்வுற்றாரா? இல்லை. கவலையுற்றாரா? சோற்றுப் பருக்கைக் கூட இல்லாக் காலத்திலும் கேட்டவர்க்குக் கையிலுள்ளதை அள்ளி வழங்கினார்! அடுத்த நாளைப் பற்றி எண்ணினாரில்லை. சக்தியைப் பாடிச் சக்தி பெற்றார். "காணி நிலம் வேண்டும்" என்ற பாட்டில் அவர் இலட்சியத்தையே படம் பிடித்துக் காட்டி ஒவ்வொருவனும் அது போலப் பொது உடைமை வாழ்வு வாழமுடியும் என்பதைக் காட்டுகிறார். "பாரத சமுதாயம் முழுவதும் பொது உடைமை" என்றன்றோ பாடுகிறார். பாரதியின் வாழ்க்கையைப் பார்க்குங்கால் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கண்டேதான் பாடியிருக்கிறார் என்ற முடிவுக்கு வரலாம். ஒவ்வொரு தமிழ் மகனும் பாரத மகனும் அவர் வாழ்க்கையையும் கவியையும் தெளிவுறக் கற்று ஊக்கமும் உளவலியும் கொள்ளவேண்டும்.

விஞ்ஞான நூல்களைப் படித்துப் பாருங்கள். விஞ்ஞானிகள் எவ்வளவு பேர் எவ்வளவு துன்பங்களுக்கிடையில் எள்ளளவும் சோர்வின்றி உளவலியோடு தொண்டாற்றி, வெற்றி கண்டுள்ளார்கள் என்பது வெளிப்படும். பெயரும் வாழ்க்கையும் கூறி விரிக்க வேண்டாமென விடுத்துச் செல்கிறேன்.

அடியார்களை எடுத்துக்கொள்ளுங்கள். மரண வேதனையை விட வேறு வேதனை என்ன இருக்க முடியும்? கொல்லுகிறேனென்று வேண்டுவன செய்த காலத்தும் சோர்வுறாது அஞ்சாது உறுதியோடு இருக்கவில்லையா நமது நாவுக்கரசர்! ஆண்டவனை அடைய அவாவிய ஆண்டாள் உறுதியோடு இருந்த காரணத்தால் உடும்புபோல் பிடித்துவிட்டாளல்லவா?

உலகம் போற்றும் கீதை என்ன சொல்கிறது? எண்ணித் துணிந்த கருமத்தைச் சோர்வால் விட இருக்கிறான் அர்ச்சுனன். கண்ணனாகிய "ஞானமலை" என்ன சொல்கிறார். "சூழ இருப்பவர்களைக் கொல்வது துன்பமெனக் கவலைக்கிடமெனக் கருதுகிறாய். உள்ள உறுதியோடு வந்தவர் சோர்வுறுகின்றான். ஊக்கம் உருண்டுவிட்டது. அது தவறு. அறம் செய்வது உன் கடன். அதில் எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்க வேண்டா" என்றார். இதனை நாம் நன்கு எண்ணிப் பார்க்கவேண்டும்.

இளைஞர்களே! உலகில் ஏற்படும் சில திடீர்ச் செயல்களைக் கண்டு உள்ளம் நோவாதீர்கள். உலகம் இன்பமயமானது. துன்பம் நெருங்கி வரலாம். சோர்வடையாதீர்கள் கவலை கொள்ளாதீர்கள். அண்டம் சிறிதானாலும் அஞ்சாதீர்கள். துன்பம் தூளிபடும். இன்பம் பொங்கும். பாரதி கண்ட நல்ல வாழ்வு பாரதி பாதையில் சென்றால் பார்த்தோடி வரும். தீமையெலாம் அழிந்துபோகும். ஆகவே, வீரச் சிங்கங்களே!

"கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம் இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நீவிர் எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு தின்றுவிளையாடி இன்புற்று இருந்து வாழ்வீர்!"

- வாழ்க பாரதி! வாழ்க அவர் வகுத்த பாதை!

நலம் காப்போம்

உலகமெலாம் நடுநடுங்கி அஞ்சிச் சாகும்
ஒருபெருநோய் 'ஆட்கொல்லி' எயிட்சே ஆகும்!
பலதுறையில் முன்னேற்றம் எய்தி இந்தப்
பார்வியக்கும் அருஞ்செயல்கள் புரிந்த போதும்
கலங்குகிறோம்! இந்நோயின் வயப்பட் டோரைக்
காப்பாற்ற முடிவதில்லை; மருந்தும் காணோம்!
நலம்போக்கி வாழ்நாளை நறுக்கி நம்மை
நடைப்பிணமாய் ஆக்கிவிடும் இந்த நோயே!

ஒருவனுக்கு ஒருத்தியென்ற உயர்ந்த வாழ்க்கை
ஒப்பரிய தமிழ்ப்பண்பாம்! ஒழுக்க வாழ்வாம்!
விருப்பம்போல் கண்டபடி வேட்டை நாயாய்
வெறிகொண்டே அலைபவர்கள் இந்த நோயால்
கருகிடுவர் தீப்பட்ட சருகைப் போல!
கடும்பழியும் இழிமொழியும் பெயர்சொன் னாலே
அருவருப்பும் சொல்லவொணா மானக் கேடும்
அளிக்கின்ற நோய்! நம்மை அழிக்கும் நோயாம்!

பல்வேறு வழிகளிலே இந்நோய் தாக்கும்!
பாலுறவு இவற்றிலெலாம் முதன்மை யாக
வல்லூறாய் வட்டமிடும்! குடும்ப வாழ்வின்
வழிமாறி முறைதவறி வரம்பு மீறிச்
செல்வோரை அரவணைக்கும்! சீர்மை போக்கிச்
சிறுமைகளைப் பரிசளித்துச் சிரிக்கும்! என்றும்
நல்லவராய் வாழ்வதுவே சிறப்பாம் இந்த
நானிலத்தின் நல்வாழ்வை நயந்து காப்போம்!

பெற்றோர்கள் செய்கின்ற தவற்றுக் காகப்
பிள்ளைகளும் தண்டனையை அடைதல் நன்றோ?
கற்றதனால் பயனென்ன? கண்ணி ருந்தும்
கால்பதிக்க லாமோ? அச் சேற்றுக் குள்ளே!
முற்றும்நம் தலைமுறையை ஆட்டி வைக்கும்
மிகுந்தவிடப் பாம்பான எயிட்சு நோயை
அற்றுப்போ கச்செய்வோம்! குடும்ப வாழ்க்கை
அமைதிகெட்டுப் போகாமல் காப்போம் நன்றே!

- முனைவர் கடலூர் மணிமாறன்

இதுவரை சிறுகதை

தமிழ்ச் சிறுகதைக்கு என்ன வயதிருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

வாய்மொழியாகக் கதை சொல்லப்பட்ட காலத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டுச் சொல்லப் போதுமான ஆதாரங்கள் இல்லை. கதை சொல்வதைப் பற்றித் தொல்காப்பியத்தில் ஒரு வரி வருகிறது. "பாட்டிடை வைத்த குறிப்பினானும்" என்று துவங்குகிற சூத்திரத்தில் "பொருள் மரபில்லா பொய்மொழியானும்" என்று ஒரு வரி வருகிறது.

பொய்மொழி என்ற இந்த வார்த்தையை "உண்மையில்லாத பொய்க்கதை" என்று உரையாசிரியர்கள் விளக்குகிறார்கள். பொய்மொழி என்ற சொல் 'Fiction' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான ஒரு சொல்லாக இருப்பது, மொழியின் பற்பல ஆச்சரியங்களில் ஒன்று. கதை என்பதே பொய் என்பது ஒரு பரவலான நம்பிக்கை. கதை விடுதல், கதை அளத்தல் என்ற பேச்சு வழக்கிற்குப் பொய் சொல்வது என்றே பொருள். இந்தப் பேச்சு வழக்கைப் பாரதியார், கவிதைக்குள்ளும் எடுத்துச் சென்று அதற்கு ஒரு சிரஞ்சீவித் தன்மையைக் கொடுத்து விடுகிறார். (அட, பிள்ளைக் கதைகள் விரிக்கிறாய் - பாஞ்சாலி சபதம் - 109).

கதைக்கு எத்தனை வயதிருக்கும் என்று 'கதை விடுவதில்லை' என்னுடைய நோக்கம். தமிழ்ச் சிறுகதையின், எழுத்து வடிவில் இன்று நமக்குப் படிக்கக் கிடைக்கிற தமிழ்ச் சிறுகதையில், வயதை அல்ல. வரலாற்றை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

கதை என்னும் பொய்மை, அச்சுமையைச் சந்தித்தது - குத்து மதிப்பாகச் சொன்னால் 175 வருடங்களுக்கு முன்னால், 1822ல் சென்னைக் கல்விச் சங்கத்தார் என்ற அமைப்பினர், வீரமாமுனிவரின் "பரமார்த்த குரு" கதைகளை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

வாய்மொழியர் பேச்சு வழக்கில் இருந்த கதைகளின் தொகுப்புதான் இது என்ற ஒரு கருத்து உண்டு. அதே சமயம் தமிழில் முதலில் அச்சேறிய இந்தக் கதைகள் குறித்து சுவாரஸ்யமான சர்ச்சையும் ஒன்று உண்டு. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாவில்லா ராமஸ்வாமி சாஸ்திரி அண்ட் சன்ஸ் பிரசுரித்துள்ள பரமார்த்த குரு கதையின் முன்னுரை. அந்தக் கதைகள் சுப்ரதீபக் கவிராயரால் இயற்றப்பட்டு அவருக்குப் பொருளுதவி செய்து வந்த வீரமாமுனிவரால் அச்சிடப்பட்டது என்றும், தேம்பாவணியும் இந்தக் கவிராயராலேயே எழுதப்பட்டது என்றும் குறிப்பிடுகிறது. இந்தத் தகவல் உண்மை என்றால் தமிழில் அச்சான முதல் கதைத் தொகுப்பிலேயே Ghost Writing!

> **“பாரதி, காமக்களியாட்டங்களும் ஒழுக்க உபதேசங்களும் சிறுகதை உலகை ஆக்ரமித்திருந்த காலத்தில் தமிழ்ச் சிறுகதை உலகில் ஒரு புதிய மரபை உருவாக்கினார். சிறுகதை என்பது ஒரு ஐரோப்பியக் கலைவடிவம் என்று கருதப்பட்ட காலத்தில் அதை மறுதலிப்பதுபோல் பாரதி, முற்றிலும் புதியதொரு வடிவத்தை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. பாரதி உருவாக்கிய இந்த வடிவம் மரபு சார்ந்தது. அதே நேரம் நவீனமானது.”**

- மாலன்

பரமார்த்த குரு கதைகளை அடுத்து வந்த பல தொகுப்புகளும் வாய்மொழியாக வழங்கிவந்த கதைகளின் தொகுப்பாகவோ அல்லது மொழிபெயர்ப்புகளின் தொகுப்புகளாகவோ இருக்கக் காண்கிறோம். சில உதாரணங்கள்

1826 பஞ்சதந்திரக் கதைகள் (மூலம் : மராத்தி)
1826 கதாமஞ்சரி (மூலம் : வடமொழி)
1853 ஈசாப்பின் நீதிக் கதைகள் (மூலம் : ஆங்கிலம்)
1855 மதனகாமராஜன் கதை (வாய்மொழி)
1868 மயில்ராவணன் கதை (வாய்மொழி)
1869 முப்பத்திரண்டு பதுமை கதை (வாய்மொழி)
1869 தமிழறியும் பெருமாள் கதை (வாய்மொழி)

வாய்மொழி வழக்கில் இருந்த கதைகளும், மொழிபெயர்ப்புகளும் புத்தகங்களாக வெளிவந்துகொண்டிருந்த காலத்தில், சுயமாக எழுதப்பட்ட கதைகளைக் கொண்ட ஒரு தொகுப்பு 1869ல் வெளியாயிற்று. அதை எழுதியவர் ஒரு இலங்கைத் தமிழர். 1841லிருந்து யாழ்ப்பாணத்தில் 'உதயதாரகை' என்ற ஒரு பத்திரிகை வெளியாகி வந்தது. 1857ல் அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர் அ. சதாசிவம்பிள்ளை. வட்டுக்கோட்டை அமெரிக்கன் மெஷின் செமினரியில் படித்து வரும்போதே, இந்த அருணாசலம் சதாசிவம்பிள்ளை மதம் மாறி ஜே.ஆர்.ஆர்னால்ட் என்ற பெயரைச் சூடிக்கொண்டார். தனது பத்திரிகையில் தான் எழுதி வந்த கதைகளில் நாற்பது கதைகளைத் தொகுத்து 1869ல் ஒரு நூலாக வெளியிட்டார். அதன் பெயர் "நன்னெறி கதாசங்கிரகம்." இதுதான் தமிழில் முதன் முதலில் வெளியான சுயமான கதைகளின் தொகுப்பு.

நல்ல நெறிகளை - அருணாசலம் பிள்ளையின் வார்த்தைகளில் சொன்னால், "சன்மார்க்க சாதனைக்கும், போதனைக்கும் உரிய" விஷயங்களைப் போதிப்பதுதான் இந்தத் தொகுப்பின் நோக்கம். இதை ஒட்டி இதே போன்று போதனை நோக்கத்தோடு பல தொகுப்புகள் வரத்துவங்கின. அவற்றையெல்லாம் பற்றி விரிவாகப் பேச இங்கு இடமில்லை.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றை ஆராய்ந்த சிட்டியும், சிவபாதசுந்தரமும் அதை நான்கு கட்டங்களாகப் பிரிக்கிறார்கள். நன்னெறி கதாசங்கிரகம் தோன்றிய 1869 முதல் வ.வே.சு. ஐயர் மரணமடைந்த 1925 வரை உள்ள ஆண்டுகள் முதல் கட்டம். 1926 முதல் புதுமைப்பித்தன் இறப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முந்தைய 1945 வரை இரண்டாவது கட்டம். 1946 முதல் 60 வரை மூன்றாவது கட்டம். அறுபதுக்குப் பிந்தைய ஆண்டுகள் நான்காவது கட்டம். நானும் இந்தப் பாகுபாடுகளைப் பின்பற்றி ஒவ்வொரு காலகட்டத்திற்கும் இரண்டு கதாசிரியர்கள் என்று எடுத்துக் கொண்டு சிறுகதை இலக்கியத்தின் போக்கைச் சொல்ல முற்படுகிறேன்.



புராணப் பாடல்களும், காதல் பிரபந்தங்களும், தனிமனிதப் புகழ்ச்சிகளும், சித்திரக்கவிகளும் தமிழ்க் கவிதை உலகில் மண்டிக் கிடந்த காலத்தில் கவிதையை மீட்டெடுத்ததைப் போலவே பாரதி, காமக் களியாட்டங் களும் ஒழுக்க உபதேசங்களும் சிறுகதை உலகை ஆக்ரமித்திருந்த காலத்தில் தமிழ்ச் சிறுகதை உலகில் ஒரு புதிய மரபை உருவாக்கினார். சிறுகதை என்பது ஒரு ஐரோப்பியக் கலைவடிவம் என்று கருதப்பட்ட காலத்தில் அதை மறுதலிப்பதுபோல் பாரதி, முற்றிலும் புதியதொரு வடிவத்தை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. பாரதி உருவாக்கிய இந்த வடிவம் மரபு சார்ந்தது. அதே நேரம் நவீனமானது. முன்னே குறிப்பிட்ட தொல்காப்பிய சூத்திரத்தின் "பொருள் மரபில்லா பொய்மொழியானும்" என்ற வரிக்கு விளக்கம் எழுதிய் உரையாசியர்கள் 'யானையும் குருவியும் தம்முள் நட்பாடிப் பேசிக்கொள்வது போல' என்று விளக்கம் தருகிறார்கள். அதே சூத்திரத்தின் அடுத்த அடி 'பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்' என்று அமைந்திருக்கிறது. அதாவது உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சு.

கதை சொல்லும் தமிழ் மரபின் இந்த இரண்டு அம்சங்களையும் பின்பற்றித் தனது சிறுகதை வடிவத்தை உருவாக்கினார் பாரதி. அவருடைய காக்காய் பார்லிமெண்ட், இலக்கணம் படித்த காக்கை போன்ற கதைகளில் இவற்றைப் பார்க்க முடியும். அந்தக் கதைகளில் காகங்கள் பேசிக் கொள்கின்றன. அதே சமயம் அவை 'உண்மை கலந்த வேடிக்கைப் பேச்சு' பேசுகின்றன.

ஐரோப்பியக் கலை வடிவத்தை நிராகரித்து, தனக்கென, தமிழுக்கென ஒரு புது வடிவை உருவாக்கிக் கொண்ட பாரதி, சிறுகதையின் பயன் குறித்தும் ஒரு இந்தியப் பார்வையே கொண்டிருந்தார். கதை என்பது இன்பம் பயக்கும் ஒரு கலை வடிவம் மட்டுமல்ல. செய்தி சொல்வதற்கான ஒரு ஊடகமும் கூட என்பதுதான் அந்தப் பார்வை. சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் அரசியல் நடப்புகளையும் சொல்வதற்குப் பத்திரிகையைப் போலச் சிறுகதையையும் ஒரு ஊடகமாக அவர் வரித்துக் கொண்டார். அவரது 'துளஸிபாய்' பெண்கள் உடன்கட்டை ஏற நிர்ப்பந்திக்கப்படும் வழக்கத்தைச் சாடுகிறது. பூலோக ரம்பை பொட்டுக் கட்டும் வழக்கத்தின் கொடுமைகளைச் சித்திரிக்கிறது. காந்தாமணி, பெண்கள் ருதுவாவதற்கு முன்பே அவர்களைத் திருமணம் செய்து கொடுக்கும் வழக்கத்தை இகழ்ந்து அதற்கு மாற்றாகக் கலப்புத் திருமணத்தைக் கோடி காட்டுகிறது. சுவர்ணகுமாரி அரசியலிலும் மதத்திலும் மிதவாதத்தைப் பின்பற்றுவதை நையாண்டி செய்து திலகரின் தீவிரவாதத்தையும், பிரம்ம சமாஜத்தையும் உயர்த்திப் பிடிக்கிறது.

தமிழின் முதல் நவீன சிறுகதை என்று கருதத்தக்க - 1911ல் எழுதப்பட்ட - அவருடைய ஆறில் ஒரு பங்கிற்கு எழுதப்பட்ட முகவுரையில் அவருடைய சமூக நோக்கம் அப்பட்டமாக வெளிப்படுகிறது.

"ஒரு சாதி ஒருயிர்: பாரத நாட்டிலுள்ள 30 கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புகள் இருக்கலாம். பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம். பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மதபேதங்கள் இருக்கலாம். மதவிரோதங்கள் இருக்கலாகாது.

இவ்வுணர்வே நமக்கு ஸ்வதந்திரமும் அமரத் தன்மையும் கொடுக்கும். வேறு வழியில்லை. இந்நூலைப் பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்த நமக்கெல்லாம் உணவு கொடுத்து இரட்சிப்போர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்த தன்மை வாய்ந்த வைசிய சகோதர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

தமிழின் இந்த முதல் நவீன சிறுகதை அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதல் தடை செய்யப்பட்ட கதை தமிழின் முதல்

சிறுகதைதான். இந்தத் தடைவிதிப்பை பத்திரிகைகளும், அறிஞர்களும் எதிர்க்க வேண்டும் என்று கோரி 8.10.1912 தேதியிட்ட இந்து நாளிதழின் ஆசிரியருக்குக் 'கடிதம்' பகுதிக்கு சி.சுப்ரமண்யபாரதி என்ற பாரதியார் கடிதம் எழுதினார். அரசாங்கத் தடையை எதிர்க்கும் விஷயத்தில் இன்று நடப்பதே அன்றும் நடந்தது. ஆம். தடையை எதிர்க்க யாரும் முன்வரவில்லை.

பாரதியாரின் சமகாலத்தவரான வ.வே.சு. ஐயர் ஐரோப்பிய சிறுகதை வடிவத்தைப் பின்பற்றி எழுத முற்பட்டவர். 'ரஸோபாவோபேதமாய்' இருக்கவேண்டும் என்பதுதான் அவருடைய சிறுகதைக் கொள்கை. சிறுகதையைச் சமூக விழிப்புணர்விற்குப் பயன்படுத்துவது குறித்து அவர் தீர்மானமான லட்சியங்கள் கொண்டிருந்தார் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. குழந்தை மணத்தையும் வரதட்சணைக் கொடுமையையும் பற்றிப் பேசும், இன்றுவரை தமிழின் முதல் சிறுகதை என்று நம்பப்படும் குளத்தங்கரை அரசமரம், தாகூர் எழுதிய காட்டேர் கதர் என்ற வங்கக் கதையின் தழுவல். இந்தக் கதையின் ஆங்கில மொழி பெயர்ப்பு 'மாடர்ன் ரிவ்யூ' பத்திரிகையில் 1914ம் ஆண்டு 'தி ஸ்டோரி ஆஃப் த ரிவர் ஸ்டேர்' என்ற தலைப்பில் வெளியாயிற்று. வ.வே.சு. ஐயரின் கதை 1915ல் விவேகபோதினி பத்திரிகையில் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அவரது மனைவியின் பெயரான பாக்யலக்ஷ்மி அம்மாள் என்ற பெயரில் வெளியாயிற்று. தாகூரின் கதையில் ஆற்றங்கரை படித்துறை ஒன்று கதை சொல்கிறது. ஐயரின் கதையில் குளத்தங்கரை அரசமரம் கதை சொல்கிறது. எட்டு வயதில் விதவையான ஒரு சிறுமி, யுவதியாக ஆன பின்பு ஒரு பால சந்நியாசியிடம் மனதைப் பறிகொடுத்து அந்தச் சந்நியாசியிடம் எந்தவிதச் சலனமும் ஏற்படாததால் ஆற்றில் குதித்துத் தற்கொலை செய்து கொள்வதைச் சொல்கிறது தாகூரின் கதை. சிறு வயதில் மணமுடிக்கப்பட்ட ருக்மணி வயது வந்து பிறகும் வரதட்சணைக் கொடுமை காரணமாகக் கணவன் வீடு செல்லமுடியாத சூழ்நிலையில் கணவன் விளையாட்டாகச் சொன்ன வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முடியாமல் குளத்தில் குதித்துத் தற்கொலை செய்து கொள்வதைச் சொல்வது ஐயரின் அரசமரம்.

தமிழின் முதல் நவீன சிறுகதை என்று வகுப்பறைகளில் போதிக்கப்படும் கதை ஒரு தழுவல் கதை. அதில் காணப்படும் சமூக நோக்கம் தற்செயலானது.

பாரதியாரைப் போல சமூகப் பிரச்சினைகளை விவாதிப்பதற்குரிய ஒரு சாதனமாக அவர் சிறுகதையைக் கருதியிருக்கவில்லை. மாறாக, தமிழனுக்கு அவனுடைய சரித்திரத்தை எடுத்துச் சொல்லி அதன் மூலம் அவர்களிடத்தில் பெருமையுணர்வை ஏற்படுத்துவதற்குச் சிறுகதைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதுவே அவருடைய இலட்சியமாக இருந்தது. அவர் காலமாவதற்குச் சில நாட்களுக்கு முன்பு காசியில் உள்ள தனது நண்பர் ஆதிமூர்த்தி என்பவருக்கு எழுதிய கடிதம் ஐயரின் மரணச் செய்தியைத் தாங்கிவந்த பாலபாரதி இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்தில் அவர் எழுதுகிறார்:

“தூமாஸ் பிரெஞ்சு சரித்திரம் அனைத்தையுமே கற்பனைக் கதைகளைச் சரிபண்ணி ஒவ்வொரு பிரெஞ்சுக் காரனையும் தன் தேச சரித்திரத்தினைக் கற்றவனாயும், உற்சாகியாயும் ஆக்கிவிட்டதைப் போலத் தமிழ்நாட்டு சரித்திரமனைத்தையும் கற்பனைக் கதைகளாகச் செய்ய வேண்டுமென்றிருக்கிறேன். பாரியும் நன்னனும் கபிலரும், நக்கீரரும் கரிகாலனும் செங்குட்டுவனும், நாகராஜனும் ராஜேந்திரனும், விஜயபாலனும் சுந்தரமூர்த்தி நாயனார் முதலிய சைவ நாயன்மார்களும், குலசேகரன், ராமானுஜன், தேசிகர் முதலிய வைஷ்ணவ ஆச்சார்ய மகான்களும் நமது கதைத் தொடரில் நாயகர்களாக விளங்கி, காம்பீர்யம் முதலிய பௌருஷமான ரசங்களுக்கு நிலையமாக நின்றால், அடுத்த தலைமுறை முதல் தமிழ் இலக்கியத்தையும் தமிழ்ச் சரித்திரத்தையும் யார் அவமதிப்பார்? அது சாத்திய மானால், இப்பேர்ப்பட்ட வீரதீரர் பிறந்து வளர்ந்து இறந்த நாட்டில் நாம் பிறக்கச் செய்த புண்ணியமே புண்ணிய மென்றும் நாம் அவர்களுக்கேற்ற சந்ததியாகக் கடவோம் என்னும் எண்ணங்கள் தமிழருள் தோன்றி மற்ற மாகாணங்களில் பிறந்து கொண்டிருக்கும் தீரயுகம் இங்கும் பிறக்க வழிகாட்டியாக நாம் அமைந்து விடுவோம். இந்த நோக்கத்துடனேயே “மங்கையர்க்கரசியின் காதல்” முதலிய கதைகளை எழுதியதோடு, லைலா மஜ்னுனு, அனார்கலி முதலிய கதைகளும் கைப்பழக்கத்துக்காக எழுதிவருகிறேன். நாளாவட்டத்தில் பெரிய சரித்திரத்தை எழுதும் நிலைமைக்கு வரும் என்று நினைத்தே சிறுகதைகளை எழுதி வருகிறேன்.”

> சிறுகதை ஒரு தனி சம்பவத்தைப் பற்றியதாக இருக்கவேண்டும் என்ற பிராண்டர் மாத்யூவின் இலக்கணத்தை உதறித் தள்ளிவிட்டு, பத்துப் பதினைந்து ஆண்டுக்கால வாழ்க்கை வரலாற்றைச் சிறுகதையாக விரித்துச் சென்ற பாரதியாரைப் போலவே கல்கியும் தனது கதைகளை எழுதினார்.

ஐயரின் மங்கையர்க்கரசியின் காதல் குலோத்துங்க சோழனுடைய தளபதியான கருணாகரத் தொண்டமானுடைய மகளைப் பற்றியது என்றாலும், அது எழுதப்பட்ட காலத்தில் ஐரோப்பாவில் பின்பற்றப்பட்டு வந்த சிறுகதை இலக்கணங்களைப் பின்பற்றி எழுதப்பட்டது. சிறுகதை என்பது “ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அது ஏற்படுத்தும் தாக்கம் ஒரே ஒரு உணர்வினதாக இருக்க வேண்டும்” என்று எட்கர் அலன்போ (1841) தனது Single Effect சித்தாந்தத்தை வெளியிட்டார். அவருக்குப் பின்வந்த கதாசிரியர்கள் சிறுகதை என்பது ஒரு தனிச் சம்பவத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஐரோப்பியச் சிறுகதைகளுக்கும் இந்தியக் கதை மரபிற்கும் உள்ள வித்தியாசங்களை “அவர்கள் நட்ட நடுவில் கதையைத் தொடங்குகிறார்கள்” என்று சின்ன சங்கரன் கதை முன்னுரையில் பாரதியார் குறிப்பிடுகிறார். இந்த எல்லா லட்சணங்களையும் வ.வே.சு.ஐயரின் மங்கையர்க்கரசியின் காதல் என்ற கதையில் பார்க்க முடியும்.

பாரதியாரை விட, சிறுகதையின் நவீன வடிவத்தைச் சிறப்பாகக் கையாண்டவர் ஐயர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஐயரிடம் Craft இருந்த அளவிற்கு Vision இருந்ததா என்பது கேள்விக்குரிய விஷயம். ஐயருக்கும் பாரதிக்கும் உள்ள ஆளுமையின் வித்தியாசத்தை அவர்கள் உருவாக்கிய துளஸிபாயிக்கும், மங்கையர்க்கரசிக்கும் இடையே காணமுடியும். வலுக்கட்டாயமாக உடன்கட்டை ஏற்றப்பட்ட ராஜ குடும்பத்து துளஸிபாய் அதிலிருந்து தப்பி இஸ்லாமியரான அப்ஸல்கானை மணந்துகொண்டு மகிழ்ச்சியோடு வாழ்வதாக முடிகிறது பாரதியின் கதை.

காதலனின் சடலத்தைக் கண்டு, “நீ போனபிறகு எவ்விதம் நான் நின்றுகொண்டும், பேசிக்கொண்டும் இருக்கிறேன்? என் நாதா, உன் உதடு அசைகிறதுபோல் இருக்கிறதே, என்னை அழைக்கிறாயோடா? வந்தேன், வந்தேன்” என்று 'பிரலாபித்துக் கொண்டு' தன்னையும் குத்திக் கொண்டு மடியும் மங்கையர்க்கரசியை முன் வைக்கிறார் ஐயர்.

ஐயர் ஐ.சி.எஸ். படித்தவர். பாரதியார் பட்டதாரியா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஐயர் ஐரோப்பியக் கலாச்சாரத்தின் தலைநகரான இங்கிலாந்தில் வாழ்ந்தவர். ஆனால் ஐயர் சநாதன நம்பிக்கைகளும் வருணாசிரமத்தில் பிடிப்பும் கொண்டவராக வாழ்ந்தார், பாரதி சநாதனக் கலாசாரத்தைத் தாங்கிப் பிடிக்கும் காசியில் வாழ்ந்தவர். ஜாதிமத பேதங்களை நிராகரிக்கிற முற்போக்காளராக வாழ்ந்தார் பாரதி. நிஜவாழ்வில் பழமை மீது பிடிப்புக் கொண்ட ஐயர் சிறுகதையைப் பொறுத்தவரை நவீன ஐரோப்பிய வடிவை வரித்துக் கொண்டதும், முற்போக்கான நவீன எண்ணங்களை வாழ்க்கையில் கொண்டிருந்த பாரதி இந்திய இலக்கிய மரபைச் சார்ந்து தனக்கென ஒரு வடிவத்தை உருவாக்கிக் கொண்டதும் இலக்கிய வரலாற்றின் விசித்திரங்கள்.

இதே போன்ற முரண்பாடுகளை வரலாற்றின் அடுத்த கட்டத்தில் கல்கியிடமும், புதுமைப்பித்தனிடமும் பார்க்கிறோம். கல்கி புதுமைப்பித்தனுக்கு ஏழு வருடங்களுக்கு முன்பு பிறந்து, அவருக்கு ஏழு வருடங்களுக்குப் பின்பு காலமானார் என்ற போதிலும், இருவரும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் எழுத ஆரம்பித்தவர்கள். கல்கியின் கதைகள் பல பாரதியாரின் கதைகளைப் போல சமூக நோக்குக் கொண்டவை. கல்கியினுடைய முதல் தொகுப்பான சாரதையின் தந்திரத்தில் காணப்படும் கதைகள் - தீண்டாமை, பால்ய விவாகக் கொடுமை, விதவை மணம், கதர் இயக்கம், புலால் மறுத்தல் ஆகிய விஷயங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவரது மற்றொரு தொகுப்பான 'பேங்க்கர் விநாயக்ராவில்' காணப்படும் கதைகள் அனைத்தும் மதுவிலக்கை அடிப்படையாகக் கொண்டவை. கல்கி பின்னாளில் எழுதிய கதைகளில் இத்தகைய சமூக நோக்கைக் காண இயலாது. அவை கதை சொல்வதையும் ஜனரஞ்சகத்தையும் முதன்மையாகக் கொண்டவை.

இந்த மாற்றத்திற்கு திரு.வி.க.-வின் கீழ் வெ.சாமிநாத சர்மாவுடன் துவங்கி பின்னர் ராஜாஜியின் கீழ் விமோசனம் பத்திரிகையில் பணிபுரிந்த கல்கி, வர்த்தக நோக்கம் கொண்ட பத்திரிகையான ஆனந்த விகடனில் சேர்ந்து கொண்டது காரணமாக இருக்கலாம். கல்கி தனது பெயரில் சொந்தப் பத்திரிகை துவங்கியபோது படிப்படியாகச் சிறுகதைகள் எழுதுவதைக் குறைத்துக்கொண்டு நாவல்களின் பக்கம், குறிப்பாகச் சரித்திர நாவல்களின் பக்கம் கவனம் செலுத்தியதையும் பார்க்கும்போது பாரதியாரைப் போல் துவங்கிய கல்கி வ.வே.சு.ஐயரில் வந்து முடித்தார் என்று சொல்லத் தோன்றுகிறது.

சிறுகதை ஒரு தனி சம்பவத்தைப் பற்றியதாக இருக்கவேண்டும் என்ற பிராண்டர் மாத்யூவின் இலக்கணத்தை உதறித் தள்ளிவிட்டு, பத்துப் பதினைந்து ஆண்டுக்கால வாழ்க்கை வரலாற்றைச் சிறுகதையாக விரித்துச் சென்ற பாரதியாரைப் போலவே கல்கியும் தனது கதைகளை எழுதினார். பாரதியாருடைய ஆறில் ஒரு பங்கு, ஸ்வர்ணகுமாரி போன்ற கதைகளில் முன்னுரை, முடிவுரை போன்ற அமைப்புகளைக் காண முடியும். அதைப்போலவே கல்கியினுடைய பல கதைகளில் (உம்: கேதாரியின் தாயார்) இந்த அமைப்பைப் பார்க்கமுடியும்.

கல்கி பாரதியின் நடையைப் பின்பற்றவும் முயன்றார். ஆனால் அதில் அவர் பெரிய வெற்றி பெறவில்லை. கலைமகளுடைய முதல் இதழில் (1932 ஜனவரி) அதன் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த எம்.லெக்ஷ்மி அம்மாள் ' ஸ்ரீ ' என்ற புனைபெயரில் உரையாடல் பாணியில், தமிழ் வசனநடை குறித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் ஒரு பகுதி இது:

“நான் படித்ததில் பாரதி வசனம் ஒன்றுதான் நன்றாய் இருக்கிறது.”

“பாரதி வசன நடையைப் பின்பற்றுவது கஷ்டம்.”

“கஷ்டமில்லை. அனர்த்தம்.”

“நீ கல்கியின் வியாசங்களை அன்று கொடுத்தாயே? அவை சாரமாய் இருக்கின்றன. ஆனால் சில கட்டுரைகள் பாரதியின் நடையைப் பின்பற்றித் தொத்தப் பார்த்து சுயலக்ஷணம் இல்லாமல் இருக்கின்றன.”

பாரதியார் ஒரு சில வரிகளில், போகிறபோக்கில் செய்துவிட்டுப் போகிற நையாண்டியை ஆரம்ப காலத்தில் பின்பற்றி வந்த கல்கி நாளடைவில் கதைகளை முழுக்க முழுக்க நகைச்சுவை ததும்புகிற படைப்புகளாக எழுத ஆரம்பித்தார். சில படைப்புகள் வெறும் கேலிச் சித்திரங்களாக மாறி அவர் எதைச் சொல்ல வந்தாரோ, அதற்கு நேர் எதிரான விளைவை ஏற்படுத்தின.

சிறுகதைகளைப் பற்றிப் பேசும்போது கூட இந்த நையாண்டியைக் கல்கி கைவிடவில்லை. சிறுகதையைப் பற்றி அவர் நிகழ்த்திய ஒரு உரையில்,



“சிறுகதை என்றவுடனேயே அதில் ஒரு கதை இருக்கவேண்டும். அது சின்னதாயும் இருக்க வேண்டும் என்று ஏற்படுகிறதல்லவா? இதற்கு ஒரு உதாரணம் பார்ப்போம்.

ஒரு நாள் காஞ்சீபுரம் உபய வேதாந்த தாத்தையங்கார் ஸ்வாமிகள் அவருடைய வேலைக்காரன் குப்பனைக் கூப்பிட்டு, “அடேய் குப்பா! நீ உடனே ஸ்ரீ பெரும்புதூர் திருவேங்கடாச்சார் ஸ்வாமி வீட்டிற்கு ஓடிப்போய் திருக்குடந்தை திருநாராயண ஐயங்கார் ஸ்வாமி திருக்கோவில் ஆராதனைக்குத் திருத்துளாய் எடுத்துவிட்டுத் திருக்குளத்திற்குப் போனபோது திருப்பாசி வழுக்கவே திருவடி தவறி வீழ்ந்தார் என்று சொல்லு என்று சொல்லிட்டு, சமாசாரம் புரிந்ததா என்று கேட்டார். அதற்கு வேலைக்காரக் குப்பன், “தெரியாதா சாமி? கும்பகோணத்துப் பாப்பான் குட்டையிலே விழுந்தார் என்று சொல்கிறேன் என்று சொன்னானாம்” என்று கிண்டலடிக்கிறார்.

கல்கியின் சமகாலத்தவரான புதுமைப்பித்தனிடம் இந்தக் கிண்டல் உண்டு. வ.ரா.வின் வார்த்தைகளில் சொல்வதானால் “இவர் எழுத்தில் இடக்கு ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது” ஆனால் கேலியையும் மீறி அதில் வாழ்க்கை பற்றிய ஒரு நோக்கு இருப்பதைப் பார்க்க முடியும். ‘கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் இதற்கு ஒரு சிறந்த உதாரணம். ஆனால் புதுமைப் பித்தன்... ‘உலகை உய்விக்கும் நோக்கமோ, கலைக்கு எருவிட்டு உயிர்க்கச் செய்யும் நோக்கமோ, எனக்கோ என் கதைகளுக்கோ சற்றும் கிடையாது’ என்று சொல்கிறார்.

தன்னை எந்தவொரு வட்டத்திற்குள்ளும் அடைத்துக்கொள்ள விரும்பாத புதுமைப்பித்தனின் மனப்பான்மையைத் தான் இந்த வார்த்தைகள் காட்டுகின்றனவே அன்றி, அவருடைய படைப்பின் நோக்கங்களை அல்ல. 19.7.41ல் சிவபாத சுந்தரத்திற்குப் புதுமைப்பித்தன் எழுதிய கடிதத்தில் “நான் இதுவரை என்னைப்பற்றி ஒரு ‘அப்னார்மல்’ மனிதன் என்றே நினைத்துக் கொண்டிருந்தேன்” என்று குறிப்பிட்டு என்னைக் காலத்தின் சின்னமாக மாற்றிவிட்டீர்களே என்று குறைபட்டுக் கொள்கிறார்.

கல்கியைப் போல நேரடியாகச் சமூகப் பிரச்னைகளைப் பற்றிப் புதுமைப் பித்தன் எழுதியதில்லை - என்றாலும் வறுமை நிறைந்த வாழ்க்கையில், துயரங்களை அனுபவிக்கும் ஏழை மக்களைப் பல கோணங்களில் எழுதி இருப்பவர் புதுமைப்பித்தன். கணவனுக்கு மருந்து வாங்குவதற்காகக் ‘கற்பை’ விற்கும் பொன்னகரத்துச் சேரிப் பெண்ணில் இருந்து, இன்றைய பொழுதைக் கழிக்கக் கடன்வாங்கி, துயரங்களைத் தற்காலிகமாக ஒரு நாளைக்குத் தள்ளிப்போடும் ‘ஒருநாள் கழிந்தது’ முருகதாசர் வரை வாழ்க்கையின் பல்வேறு கோணங்களை அவரது படைப்புகளில் பார்க்க முடியும்.

கதைப்பொருளில் மட்டுமல்ல, கதையின் வடிவத்தில் பல்வேறு முயற்சிகளைச் செய்து பார்த்தவர் புதுமைப்பித்தன். ஐயரைப் போல ரீதி புதிது என்று இவர் பிரகடனம் செய்யவில்லை. ஆனால், “அவர் நூறு கதைகள் எழுதினாரென்றால் நூறும் நூறு வகை”. (தமிழ்ச் சிறுகதைகள் வரலாறும் வளர்ச்சியும், சிட்டி, சிவபாத சுந்தரம்),

ஒரு காலகட்டத்தின் இருவேறு போக்குகளைக் கல்கியும் புதுமைப் பித்தனும் பிரதிபலித்தனர் என்றாலும், அவர்களுக்குள் கடுமையான கருத்து மோதல்கள் நிகழ்ந்ததுண்டு. மணிக்கொடி நின்றுபோன பிறகு தினமணியில் கட்டுரைகள் எழுதிய புதுமைப்பித்தன் கல்கியின் சில கதைகள் வேறு சில ஐரோப்பிய எழுத்தாளர்களின் படைப்புகளைத் தழுவியவை என்பதை ஆதாரங்களோடு சுட்டிக்காட்டினார். கல்கி அந்தக் கண்ணாடிச் சட்டங்களை மாத்திரம் பயன்படுத்திக் கொண்டாரேயன்றிச்சித்திரங்கள் அவருடையவை என்று கல்கியின் சார்பாக ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் கணையாழியின் கனவு தொகுதியின் முன்னுரையில் வாதிடுகிறார்.

கல்கி மீது எத்தகைய குற்றத்தைப் புதுமைப்பித்தன் சுமத்தினாரோ, அதே பழிக்குத் தனது மறைவிற்குப் பின் புதுமைப்பித்தன் உள்ளானார் என்பது வரலாற்றின் மற்றுமொரு விசித்திரம்.

> **“பாரதியார், புதுமைப்பித்தன், மெளனி, கு.ப.ரா. பிச்சமூர்த்தி, போன்ற முன்னோடிகள் கையாண்ட கருப்பொருட்களை அவர்களை விட அதிக செழுமையுடன் கையாண்டவர் ஜானகிராமன். அந்த முன்னோடிகள் எடுத்துக் கொள்ளாத விஷயங்களை எடுத்துக்கொண்டு, அவற்றை அவர்களை விட ஒரு பெரிய வேகத்துடனும் திறமையுடனும் கையாண்டவர் ஜெயகாந்தன்.”**

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தன் அளவிற்குப் பேசப்படும் இன்னொரு எழுத்தாளர் ஜெயகாந்தன். புதுமைப்பித்தனைப் போலவே அடித்தள மக்களின் துயரங்கள், நடுத்தர மக்களின் மன விசித்திரங்கள் இவற்றைப் பற்றி எழுதுபவர். ஆனால் புதுமைப்பித்தன் கதைகளில் அடிப்படை நம்பிக்கை வறட்சி. (“என் கதைகளின் பொதுத் தன்னம்பிக்கை வறட்சி” - புதுமைப் பித்தன் கலைமகள் 1947) ஆனால் ஜெயகாந்தனுடைய பாத்திரங்கள் மிகச் சிக்கலான நேரத்திலும் வாழ்வின் மீதான நம்பிக்கையையும், காதலையும் கைவிட்டு விடாதவர்கள். இதற்குப் புதுமைப் பித்தனுக்கு இல்லாத சித்தாந்த பலம் ஜெயகாந்தனுக்கு இருந்தது ஒரு காரணம். இளைமைப் பருவத்தில் கம்யூனிஸ்ட் கட்சியோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு தன் வாழ்க்கையைத் துவக்கிய ஜெயகாந்தன் மார்க்சிய சித்தாந்தங்களில் பயிற்சியும் நம்பிக்கையும் கொண்டிருந்தவர். கல்கியைப் போலச் சிறு பத்திரிகைகள் எழுதத்துவங்கி, ஆனந்தவிகடனுக்கு வந்தவர். கல்கியைப் பாதித்ததைப் போலவே ஜெயகாந்தனையும் இம் மாற்றம் பாதித்தது. ஆனால், கல்கியைப் போல ஜனரஞ்சகமாக எழுதுபவராக மாறிவிடாமல் ஆனந்த விகடன் வாசிக்கும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சமூகத்தினரின் Crisisஐ தர்க்க ரீதியாக ஆராயத் தனது கதைகளை ஜெயகாந்தன் பயன்படுத்திக்கொண்டார். தனது இலக்கிய வாழ்வின் நான்காவது கட்டம் என்று ஜெயகாந்தன் குறிப்பிடும் இந்தக் காலகட்டத்தில் அவர் சிறு பத்திரிகையில் எழுதி வந்த இலக்கிய வடிவத்தை விட்டு விட்டு வேறொரு புதிய வடிவத்தைக் கைக்கொள்ளத் துவங்கினார்.

“அர்த்தமே வடிவத்தை வளமாக்குகிறது. ஆகையினால் இவற்றைப் பிடித்துக்கொண்டு வீண் அவஸ்தைக்கு உள்ளாகிற பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல் சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன். கலைப் பணி என்றாலே அதனுள் சமூகப் பார்வை அடக்கம்” என்று தனது சிறுகதை வடிவம் குறித்து வாதிடுகிறார் ஜெயகாந்தன்.

ஜெயகாந்தன் ஆரம்ப நாட்களில் மார்க்சியப் பார்வையோடு எழுதி வந்ததாகவும், பின் பெரிய பத்திரிகைகளுக்குப் போய் ‘கெட்டுப்போய்’ விட்டதாகவும் குற்றம் சாட்டுகிறவர்கள் உண்டு. ஆனால் அவரது ஆரம்ப காலத்திலேயே, கம்யூனிஸ்ட்டான விஜயபாஸ்கரன் நடத்திவந்த சரஸ்வதி இதழிலேயே ப்ராய்ட்டிச அடிப்படையில் தாம்பத்யம், பௌருஷம், திரஸ்காரம், பால்பேதம் ஆகிய நான்கு கதைகளை ஜெயகாந்தன் எழுதியதுண்டு. இந்தக் கதைகளை எழுதியபோது “சிற்றின்பத்தைத் தூண்டிவிடும்” கதைகளை எழுதுகிறார் ஜெயகாந்தன் என்ற குற்றச்சாட்டிற்கு உள்ளானார். பெரியாழ்வார் திருமொழி, பாரதியார், ச.து.சு.யோகி ஆகியோரை மேற்கோள் காட்டி ‘ஆபாசம் வார்த்தையிலா இருக்கிறது’ என்று எதிர்வழக்காடினார் ஜெயகாந்தன். ஆனால் பாலுணர்வு பற்றி உளவியல் ரீதியில் கு.ப.ரா-வும், நடப்பியல் ரீதியில் புதுமைப்பித்தனும், தத்துவ நோக்கில் பிச்சமூர்த்தியும் எழுதினார்கள் என்றால், இந்த மூன்று நிலைகளையும் தாண்டிப் பகிரங்கமான சொல்லாட்சியுடன் ஜெயகாந்தன் எழுதினார் என்பதை மறுப்பதற்கில்லை.

செக்ஸ் கதைகளை எழுதுவதான குற்றச்சாட்டிற்கு உள்ளான இன்னொரு எழுத்தாளர் தி.ஜானகிராமன். 1960ல் புதுப்பிக்கப்பட்ட மணிக்கொடியில் எழுதத் துவங்கியவர். பாலுறவுச் சிக்கல்களை கு.ப.ராவின் பாணியைப் பின்பற்றி, அவரையும்விட நுட்பமாக எழுதியவர் ஜானகிராமன் என்றபோதிலும், அவர் பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டதைப் போலவெறும் செக்ஸ் கதைகளை மாத்திரம் எழுதியவரல்ல. இசைக் கலைஞர்களைப் பற்றி, அநாதரவான சிறுவர்களைப் பற்றி, ஆசிரியர்களைப் பற்றி, வெற்றிபெறும் போதும் தோல்வி காணும் போதும் வக்கிரமடைந்துவிடுகிற மனிதர்களைப் பற்றி ஏன், டவுன் பஸ்ஸில் ‘பீக்’ அவரில் கும்பல் நடுவில் மாட்டிக் கொண்டு ‘ஈவ் டீசிங்கிற்கு’ உள்ளாகும் பெண்ணைப் பற்றிக்கூட எழுதியவர். இவருடைய கதையில் ஜெயகாந்தனைப் போல, தர்க்கரீதியான அணுகுமுறை இராது. ஆனால், புதுமைப்பித்தனைப் போல வாழ்க்கை பற்றி ஒரு நோக்கு உண்டு. கல்கியினுடைய நகைச்சுவை ஆங்காங்கே இழையோடுவதைப் பார்க்க முடியும். ஆனால் ஜனரஞ்சகத்தை நோக்கமாகக் கொண்டிருக்காது. ஜெயகாந்தனின் பலம் அவருடைய வார்த்தைகள் என்றால், ஜானகிராமனுடைய பலம் அவர் உரையாடலின் இடையே விடும் மௌனம்.

பாரதியார், புதுமைப்பித்தன், மெளனி, கு.ப.ரா.பிச்சமூர்த்தி போன்ற முன்னோடிகள் கையாண்ட கருப்பொருட்களை அவர்களை விட அதிகச் செழுமையுடன் கையாண்டவர் ஜானகிராமன். அந்த முன்னோடிகள் எடுத்துக்கொள்ளாத விஷயங்களை எடுத்துக்கொண்டு, அவற்றை அவர்களை விட ஒரு பெரிய வேகத்துடனும் திறமையுடனும் கையாண்டவர் ஜெயகாந்தன்.

உலகப் புகழ்பெற்ற ஓவியரான ‘லியானார்டோ டாவின்ஸி’ தீட்டிய பழங்கால ஓவியமான ‘தி லாஸ்ட் சப்பர்’ புதுப்பிக்கப் பட்டுள்ளது; இருபதாண்டுக் காலமாக நடைபெற்றது இந்தப் பணி! கடந்த 4 நூற்றாண்டுகளில் இவ்வாறு இந்த ஓவியம் 19 தடவை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இப்போது அந்த ஓவியம் மிலன் நகரில் உள்ள கிறிஸ்தவ தேவலாய மடத்தில், பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மரபிற்கு முற்றிலும் வெளியே பயின்று, தமிழில் சிறுகதை எழுதி அதில் சிறப்பான இடத்தைப் பெற்றவர் அசோகமித்திரன். மணிக்கொடி காலத்தில் ஐரோப்பிய சிறுகதைகளில் - குறிப்பாக மாப்பசான், செக்காவ், கோகேல் ஆகியோருடைய சிறுகதைகள் தமிழ்ச் சிறுகதைகளின் வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகித்தன என்றால் 35 ஆண்டுகளுக்குப் பிறகு எழுபதுகளின் துவக்கத்தில் கணையாழி எழுத்தாளர்களிடையே அமெரிக்கச் சிறுகதை எழுத்தாளர்களின் தாக்கம், குறிப்பாக ஜான் அப்டைக், ஜே.டி.சாலிங்கர், நார்மன் மெய்லர், ஏன் - எர்னஸ்ட் ஹெமிங்வே கூடத்தான், ஏற்படக் காரணமாக இருந்தவர் அசோகமித்திரன். இவருடைய கதைகள் ஒருவகையில் மிகைப்படுத்தப்பட்ட புதுமைப்பித்தனின் கதைகள். வாழ்க்கை பற்றிய ஒரு நோக்கம் நம்பிக்கையும் வறட்சியும் கொண்டவைகள். புதுமைப் பித்தனின் கேலியோ எள்ளலோ அதில் கிடையாது. ஆனால் மெல்லிய, மிக மெல்லிய நகைச்சுவை இதில் இழையோடும்.

நெடிய தமிழ்ச் சிறுகதை மரபைத் தன்னுடைய கண்ணுக்குத் தெரியாத ஆணிவேராகவும் ஐரோப்பிய, அமெரிக்க வடிவ, வாக்கிய அமைப்புகளைத் தன்னுடைய கிளைகளாகவும் கொண்டவர் சுஜாதா. பாரதியாரில் இருந்து அசோகமித்திரன் வரை எல்லாருடைய சாயலையும் இவர் எழுத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் பார்க்க முடியும். அசோகமித்திரன் வாழ்க்கையை மிகத் தீவிரமாக எடுத்துக் கொள்பவரென்றால் அதை, மிகச் சுலபமாக எடுத்துக் கொள்பவர் சுஜாதா. அசோகமித்திரன் கதைகளில் இழையோடும் நகைச்சுவையை அடையாளம் கண்டுகொள்ளத் தவறி நாம் சிரிக்காமல் இருந்துவிடக் கூடும். ஆனால் அவை முன்வைக்கும் விஷயங்கள் குறித்து நாம் சிந்திக்காமல் இருந்துவிட முடியாது. ஆனால் சுஜாதாவின் கதைகளில் மறைமுகமாக உணர்த்தப்படும் விஷயங்களைப் புரிந்துகொண்டு சிந்திக்கத் தவறுகிறவர்கள்கூட சிரிக்கத் தவறுவதில்லை. அசோகமித்திரன் புலமைப்பித்தனின் மிகைப்படுத்தப்பட்ட வடிவம் (Enlarged Version) என்றால் கல்கியின் மிகைப் படுத்தப்பட்ட வடிவம் சுஜாதா.

என்றோ எங்கோ ஒரு ஊற்றாகத் துவங்கிய தமிழ்ச் சிறுகதை என்ற மகாநதி சளைக்காமல் ஓடிக்கொண்டிருக்கிறது. சில நேரம் பாறைகளைப் புரட்டியபடி; சில நேரம் பாறை நடுவே விரிந்த ஒரு நூல் கயிறாய் மெலிந்து சோர்ந்து நகர்ந்தபடி; நிற்காமல் சளசளக்கும் அருவியாய்; வீட்டு மண்பானையில் இளைப்பாறப் பிடித்து வைத்த நீராய்; ஒளிதரும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாய்; அழுக்குப் போக குளிப்பாட்டுவதாய், கரையோரத்துக் கழிவுகளை வாங்கிச் சுமக்கும் தாதியாய்; கழனிக்குள் புகுந்து பசுமை விளைவிக்கும் தாயாய், தமிழ்ச் சிறுகதை என்னும் ஜீவநதி நூற்றாண்டுகளுக்கும் மேலாய் ஓடிக்கொண்டிருக்கிறது. நகரத்து மனிதர்களாகிய நமக்கு அதைக் கண்டு வியந்து நிற்க மனமுண்டு. ஆனால் முங்கிக் குளிக்க நேரமில்லை. வெறுமனே கால் நனைத்து கையில் அள்ளி ஒரு வாய் பருகித் திருப்தி காணவே பிறந்தவர்கள் நாம். இந்தக் கட்டுரையும் அப்படித்தான். மலர்களை விட, மலர்களைப் பற்றிய கவிதை சில சமயங்களில் நன்றாக அமைந்து விடுவதுண்டு. ஆனாலும் அவை மலர்களாக முடியாது. இந்தக் கட்டுரையும் அப்படித்தான்.

●

திறப்பதற்கு இங்கீக கத்தரியங்கள்



● கள்ளன் போலீஸ்
விளையாட்டில் - யாரும்
கண்டு பிடிக்க முடியாத
இடமொன்று
கண்டறிந்து
ஒளிந்திருந்தான்,
அந்த விளையாட்டு முடிந்து
எல்லோரும் வட்டமாயமர்ந்து
சினிமாப்பேர் போட்டு
விளையாடப் போனது
தெரியாமல்....

● வகுப்பில் பேனாவில்
யாருக்குப் பசி தீர்ந்தாலும்
அவனிடம் கேட்டால்
மட்டுமே
கிடைக்கும்;
சார்வாளுக்குத் தெரியாமல்
தரவும்
அவனுக்கு மட்டுமே முடியும்.

● எங்கிருந்து
கொண்டு வருவானென்று
தெரியாது --
யார் வீட்டு வாசலில்
மார்கழிக் கோலத்தில்
பூசணிப்பூ இருந்தாலும்
அவன் தந்ததாய்த்
தானிருக்கும்.

● அத்தை முறைவேண்டும்
(வே)வம்பக்கா
அவள் வீட்டுக்கு
விலக்கானால்
கருவேப்பிலைச் செடியைக்
காரணம் காட்டி
தோட்டம் பூராவுக்கும்
தண்ணீரிறைக்க
வைத்துவிடுவாள்
(தன் மகளை வேறு
யாருக்கோதான்
தாரை வார்த்திருக்கிறாளாம்)

● படர்குழிக்கு நட்டு வைத்தால்
நன்றாய்க் கொடிவளரும்
என்று கார்த்திகைச்
சொக்கப்பானையின்
கொஞ்சம் எரிந்த
மூங்கில்களை
முண்டியடித்துப் பொறுக்கி
அள்ளிவருவான்;
தெருவின் முதல் வீடு
தொடங்கி
ஆளுக்கொன்றாய் வாங்கிக்
கொள்ள
வெறுங்கையோடு
வீடு வந்து
ஆடைக்கரிக்கும்
மீசைக்கரிக்குமாய்
அப்பாவிடம்
வாங்கிக் கட்டுவான்.

● யார் கேட்டாலும்
இல்லையென்று சொல்லாமல்
"எழுதிக்கிட்ருக்காங்க
நாளைக்கு வரும்".... என்று
தபால்காரன் உத்தியோகம்
எப்படியோ கிடைத்தது.

● எனினும்
இப்போதும்
அவன் வீட்டில் இல்லை
அவனது வீடும்
அவன் சாமியாடும்
கோயிலும்!

கலாப்ரியா


தமிழ்நாடு
(வாரப்பதிப்பு—ஸ்தாபிதம் 1919)
ஆசிரியர்: டாக்டர் P. வரதராஜுலு நாயுடு.
மலர் 22
(16—11—1911)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறை, டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வுமையம் - ஆகியவை இணைந்து நடத்திய 'இந்திய விடுதலைக்கு முந்திய தமிழ் இதழ்கள்' கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை:

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ பத்தாயிரம் கிராமங்களில் ஏழாயிரம் கிராமங்களைச் சார்ந்த மக்கள், பத்திரிகை என்றால் என்னவென்றே தெரியாத நிலையிலிருந்த காலத்தையும் சூழலையும் நினைத்துக் கொள்ள வேண்டும். எஞ்சியிருக்கும் மூவாயிரம் கிராமங்களிலும் படித்தவர்களாகக் கருதப்படுவோர் எண்ணிக்கை நாலாயிரம் இருக்கும். அவர்களுள் ஒவ்வொரு கிராமத்திலும் யாராவது ஒரு பணக்காரர் வீட்டில் ஏதாவது ஒரு நாளிதழ் வரும். அதை ஒன்பது பேர் படிக்கக்கூடும். இந்த நிலையில் பார்த்தால் ஒவ்வோர் ஊரிலும் பொதுச் செய்திகளைத் தெரிந்து கொள்பவர் பத்துப்பேர் இருந்தால் அதிகம். இப்படிப்பட்ட காலகட்டத்தில் நாளிதழ் நடத்துவதில் எவ்வளவு பேர் ஆர்வம் காட்டுவார்கள் என எண்ணிப் பார்க்கவேண்டும்.

அந்நியர் ஆட்சி, அதன் கெடுபிடிகள், மொழியறியாத அவர்களிடத்தில் அவர்களைப் பற்றிக் குறை சொல்லியிருப்பதாக யாரேனும் கூறிவிட்டால், எல்லாப் படிகளையும் பறிமுதல் செய்தல் முதலியவற்றால் பத்திரிகைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படும் இழப்பும் தண்டனையும் அக்காலத்தில் தாங்கிக்கொள்ள முடியாத அளவிலிருந்தன.

தலைநகரங்களில் அல்லது பெருநகரங்களில் பத்திரிகையை நடத்தினால் செய்திகளை எளிதில் பெறலாம். படித்தவர் எண்ணிக்கையும் கூடுதலாக இருக்கும். வாங்குவோர் பொருளாதாரமும் சற்று உயர்ந்ததாக இருக்கும். அதேவேளையில் பத்திரிகைகளிடையே போட்டியும் இருக்கும். இவற்றுக்கும் ஈடுகொடுத்தாக வேண்டும். தொலைதூர நகரங்களில் பத்திரிகையைத் தொடங்கினால் விற்பனை குறைவாக இருக்கும். செய்தி திரட்டுவதும் எளிதாக இராது. வெளியூர்களுக்குப் பத்திரிகை போய்ச்சேரச் சில நாளாகும். இவ்வளவு தொல்லைகளுக்குமிடையே பத்திரிகை நடத்துவது என்பது பெருஞ் சாதனைதான்.

கொண்ட கொள்கையில் பிடிப்பும், உறுதி தளரா உள்ளமும், இழப்பினுக்கும் அச்சுறுத்தலுக்கும் சோர்ந்துவிடாத முயற்சியும் இருக்குமானால் பத்திரிகை நடத்த முன்வரலாம். ஒரு சாராரே படித்தவர்களாக இருந்த காலகட்டத்தில் அவரினத்தாரே பத்திரிகை நடத்தினால் வாங்குவர். பிறர் நடத்தும் பத்திரிகை அந்தச் சூழலையும் கடந்தாக வேண்டும்.

நாட்டுப்பற்றை ஊட்டியாக வேண்டும். விடுதலை வேட்கையை வளர்த்தாக வேண்டும் என்ற சூழலில் தமிழகத்தில் காங்கிரசு இயக்கம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியது.

காங்கிரசின் தூண்களாக மூவரைக் குறிப்பிடுவர். நாயக்கர், நாயுடு, முதலியார் என்றே அம்மூவரையும் குறிப்பிட்டுப் பழக்கம். முறையே பெரியார், டாக்டர் பி.வரதராசுலு, திரு.வி.க. ஆகியோரைக்குறிக்கும். காங்கிரசு இயக்கத்தை வளர்க்க அயராமல் பாடுபட்ட இம்மூவரையும் ஒரு சேர எண்ணிப் பார்ப்பர். மூவரும் காந்தியடிகளின் ஒத்துழையாமைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றனர். தங்கள் நலனை மறந்து, நாட்டு நலனே பெரிதெனக் கொண்டனர்.

டாக்டர் வரதராசுலு சேலம் மாவட்டம் இராசிபுரத்தில் 4.6.1887இல் பிறந்தார். இராசிபுரத்தின் பெருமாள் கோவில் அறங்காவலராக அவருடைய தந்தை இருந்தார். தொடக்கக் கல்வியை இராசிபுரத்திலும், உயர்நிலைப் பள்ளிக் கல்வியைக் கோவையிலும் கற்றார். பர்மா மருத்துவப் பள்ளியிலும் கல்கத்தா தேசிய மருத்துவப் பள்ளியிலும் பயின்று மருத்துவரானார். திருப்பூரில் மருத்துவத் தொழிலைத் தொடங்கினார்.

- முனைவர் சா.வளவன்

எளிய குடும்பத்தில் தோன்றினாலும் படிப்பதோடு புறச்சூழல்களை அறிந்துகொள்வதில் ஆர்வங்காட்டியவர் வரதராசுலு. மாணவப் பருவத்திலேயே அரசியலில் ஈடுபட்டார். தம் வாழ்க்கையின் முற்பகுதியைச் சேலத்திலும், பிற்பகுதியைச் சென்னையிலும் கழித்தார். எழுத்திலும் பேச்சிலும் மிகச் சிறந்து விளங்கினார். உணர்ச்சிமிக்க பேச்சால் இளைஞரிடையே எழுச்சியை ஊட்டினார். ஆள்காட்டி விரலை நீட்டி நீட்டிப் பேசுவது அவரது பழக்கமாயிருந்தது.

காற்றையும் தண்ணீரையும் போல அன்றைக்குத் தமிழ்நாட்டிற்குத் தேவையாயிருந்தவை, நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும். தமிழ்நாட்டிற்கு இவ்விரண்டு பெரிய நன்மைகளைச் செய்தார் வரதராசுலு என டி.எஸ்.சொக்கலிங்கம் பாராட்டியிருக்கிறார். பத்திரிகைப் பணியைச் செவ்வனே செய்தவர்

வரதராசுலு. தம் பத்திரிகைப் பாசறையில் பண்பட்ட எழுத்தாளர் பலரைப் பக்குவப்படுத்தினார்; தமிழ் மொழியை எளிமைப்படுத்தினார்.

அன்றைய சூழலில் ஆங்கில வழியே படித்தவர்கள் இருந்தனர். ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்தே பேசும் படித்த கூட்டமாக அது இருந்தது. அக்கூட்டத்திற்கு இசைவாகச் **'சுதேசமித்திரன்'** பத்திரிகை இருந்தது. அப் பத்திரிகையில், தொடக்கத்தில் மிகப்பல ஆங்கிலச் சொற்கள் கலந்து எழுதும் நிலை இருந்தது. பின்னர் வரையறை இல்லாமல் வடமொழிச் சொற்களையும் கலந்து எழுதினர். 'சுதேசமித்திரனின்' தலையங்கத்தில் காணும் தமிழ்நடையைக் கல்கி அவர்கள் எள்ளல் சுவையுடன் எழுதிக்காட்டினார்.

''பெங்கால் புரொவின்ஷியல் கான்பரன்ஸில் மிஸ்டர் அம்பிகாசரன் மஜூம்தாரின் பிராஸிடென்ஸியல் அட்ரெஸில் இந்தியப் பிரஜைகளின் தேசிய அபிலாஷைகளை அடக்க, இந்திய புயராக்ரஸி கையாண்டு வரும் ரிப்ரஷன் முறைகளின் உபயோகமற்ற தன்மையைப் பற்றி கரதலாமலகமாய் கூறி இருப்பது ஹிஸ் எக்ஸெலன்ஸி வைஸ்ராய் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமென்று நம்புகிறோம்''. (சா.திரவியம், தேசியம் வளர்த்தமிழ், 1982, ப-120).

இங்ஙனம் பத்திரிகை நடை இருந்தாலும் சுதேசமித்திரனை அதிக அளவில் மக்கள் படித்தனர். காங்கிரசு இயக்கத்தைச் சார்ந்து இருந்ததும் அரசியல் கலைச் சொற்களை உருவாக்கியதும் செய்திகளையும், தலையங்கங்களையும் விரும்பிப் படிக்குமாறு தலைப்பிட்டு அமைத்ததும் விற்பனைப் பெருக்கத்திற்குக் காரணங்களாகும்.

1882இல் 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பாகவும் 1893இல் வாரமிரு முறையாகவும் 1897இல் வாரம் மும்முறையாகவும் வெளிவந்தது. 1899இல் நாளேடாக மலர்ந்தது. பதினேழு ஆண்டுகளுக்குப் பின்னர், டாக்டர் வரதராசுலு 'பிரபஞ்சமித்திரன்' எனும் பத்திரிகையை நடத்தத் தொடங்கினார். ஏற்கெனவே இயக்கம் காரணமாக நாளேடாக வெளிவந்ததாலும் சுதேசமித்திரன் மக்கள் மனங்களில் இடம் பெற்றது. இந்த நிலையில் 1916ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிரபஞ்சமித்திரனை நடத்தத் தொடங்கினார் வரதராசுலு. -

''சென்னையில் கஷ்டநிலையிலிருந்த 'பிரபஞ்சமித்திரன்' என்ற பத்திரிகையை 1916ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் வாங்கி அதை தேசிய முறையில் நடத்தி வந்தேன்'' - என்று அவரே குறிப்பிட்டுள்ளார். (தினமணி, சுதந்திரப் பொன்விழா மலர், ஆகஸ்ட் 97, பெ.சு.மணி - சுதந்திரத்திற்கு பாடுபட்ட பேனாக்கள் ப.142).

அந்த பிரபஞ்சமித்திரனுக்கு எதிர்ப்பு மூன்று நிலைகளில் இருந்தது.

'தேசபக்தியற்ற பிராமணரல்லாதவர்கள், வர்ணாச்ரம தர்மத்தை உயிர்ப்பிக்க முயற்சி செய்யும் பிராமணர்கள், பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் என்று மூன்று பக்கங்களில் இருந்தும் பிரபஞ்சமித்திரன்' (மேலது-ப.145) தாக்கப்பட்டது. அச்சூழலில் வாங்கி விற்பனையைப் பெருக்கியவர் வரதராசுலு.

ஹோம்ரூல் இயக்கத்தையும் காந்தியுகக் காங்கிரசையும் பிரபஞ்சமித்திரன் ஆதரித்தது. ஹோம்ரூல் இய்க்கத்தில் எல்லா இன மக்களும் அதிகளவில் சேர்ந்தால் பிராமணர் ஆதிக்கம் இராது எனும் கருத்தையும் 19.11.1917 இதழ் வெளியிட்டுள்ளது. வரதராசுலுவின் எழுத்து மக்களிடையே உணர்ச்சியைத் தட்டி எழுப்பியதோடு சிந்திக்கவும் வைத்தது. வலிமையான பிரச்சாரக் கருவியாகவும் அமைந்தது. அரசியல் நடப்புகளைச் சூடாகவும் சுவையாகவும் விமர்சனம் செய்தது. 1918இல் மதுரை மாநகரில் ஹார்வி மில் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். அப்போது தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் பேச்சாளர் திரண்டனர். ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்பு, அனல் தெறிக்க வெளிப்பட்டது. மதுரை நகரே போர்க்களமாயிற்று. காவலர்கள் சுட்டதால் சிலர் மாண்டனர். நாளும் கொந்தளிப்பு பெருகிக் கொண்டிருந்தது. இவற்றுக்கெல்லாம் வரதராசுலுவின் பேச்சே காரணம் என அரசு கருதியது. அவரைப் பிடித்து (29.8.1918) வழக்கும் தொடுத்தது. திரு.வி.க. தாம் நடத்திய தேசபக்தனில் அவருக்காகத் தலையங்கமே எழுதினார். இராஜாஜி வாதாடினார்.

ஆனாலும், இராஜாஜிக்குப் புகழ் சேர்த்த இந்த வழக்கு வரதராசுலுவிற்குப் பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனையைப் பெற்றுத் தந்தது. பின்னர் உயர்நீதிமன்றத்தில் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் வாதாடி வரதராசுலுவிற்கு விடுதலை வாங்கித் தந்தார்.

மாநிலத்தில் முதல் மூன்று இடங்கள் பெறும் ஊனமுற்ற மாணவர்களுக்கு ஊக்கப் பரிசு

பத்தாம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில், முதல் மூன்று இடங்களைப் பெறும் ஊனமுற்ற, பார்வையற்ற மற்றும் காதுகேளாத மாணவர்களுக்குத் தமிழக அரசின் சிறப்பு விருது மற்றும் ரொக்கத் தொகை 1996-97 ஆம் கல்வியாண்டிலிருந்து வழங்கப் பட உள்ளது.

பத்தாம் வகுப்பில் முதல் இடம் பெறுவோருக்கு ரூ.1,500ம், இரண்டாம் இடம் பெறுவோருக்கு ரூ.1,000ம், மூன்றாம் இடம் பெறுவோருக்கு ரூ.750-ம் பரிசாக வழங்கப்படும்.

அதேபோல் பன்னிரண்டாம் வகுப்பில் முதலிடம் பெறுவோருக்கு ரூ.1,500-ம், இரண்டாம் இடம் பெறுவோருக்கு ரூ.1,000ம், மூன்றாம் இடம் பெறுவோருக்கு ரூ.750-ம் ரொக்கப் பரிசுகளாக வழங்கப்படும்.

இவ்விருது ''மாதிலத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சிறந்த ஊனமுற்ற மாணவர்களுக்கான தமிழ்நாடு அரசு ஊக்கப்பரிசு'' எனக் குறிப்பிடப்படும். □

> இன்றைய சமுதாயம்
> வழக்கு நிலம் போன்றது;
> அதைச் செம்மைப்படுத்துவதே
> உண்மையான சமூக சேவை!
> - அறிஞர் அண்ணா

பேச்சாலும், எழுத்தாலும் மக்கள் பெருமளவில் வரதராசலுவை ஆதரித்தனர். ஆங்கிலேயர், பேச்சைத் தடுக்க முற்பட்டது போலவே எழுத்தையும் முடக்க முனைந்தனர். பிரபஞ்சமித்திரன் இதழுக்கு 1,000 ரூபாய் ஈடுகாணம் (ஜாமீன்) கட்டவேண்டும் என ஆணையிட்டனர். அதனால் பிரபஞ்சமித்திரன் நிறுத்தப் பட்டது.

18.6.1923இல் கல்லிடைக் குறிச்சியில் வரதராசலு அவர்கள் பேசும்போது - 'நரகம் இன்னதென்று அறிய வேண்டுமானால் ஆங்கில ஆட்சியின் கீழ் சிறையை அனுபவித்தால்தான் முடியும்' என விளக்கினார். சிறைக் கொடுமை என்னவென்று தெரிந்தும் தொடர்ந்து உறுதியோடு பேசினார்; எழுதினார். அவருடைய பேச்சிலும் எழுத்திலும் பொருத்தமான உவமைகள் வெளிப்படும்.

''சிவில் சர்வீஸ் அமைப்பு எஃகு அமைப்பு என்று கூறுகிறார் லாயட் ஜார்ஜ். இந்த இரும்புத்தூண் மணலில் எழுப்பப்பட்டுள்ளது என்பதையும் தண்ணீர் பெருக்கெடுத்தால், தரையில் தகர்ந்து விழும் என்பதையும் பாபம் அவர் அறியவில்லை!'' (கா.திரவியம், முகுதூ-ப.144) என பொருத்தமான உவமையைக் கொண்டு விளக்கினார்.

''அரசியல், சமுதாய வாழ்வு, வர்த்தகம், சமயம் ஆகிய எத்துறைகளிலாயினும் சரி; ஒவ்வோர் இந்தியனும் முதலில் போர் வீரனாகவும் அதற்குப் பின்பே குடிமகனாகவும் விளங்க வேண்டும்'' என்று கோவையில் நடந்த அனைத்திந்தியத் தொழில் வேளாண்மைக் கண்காட்சியில் 11.4.1933இல் வீரமுழக்கம் செய்தார்.

'இந்த மனிதர் ஒரு விஷப்பூச்சி. இவர் மீது வழக்குத் தொடுக்க வேண்டும்' என்று அன்றைய ஆட்சியாளரில் ஒருவர் ஆத்திரப்பட்டுக் கோப்பில் குறித்தாராம் (மேலது, ப.165).

இங்ஙனம் பேச்சில் தொனித்த வீரமும் உறுதியும் எழுத்திலும் அவர்தம் பத்திரிகையிலும் வெளிப்பட்டது. அழகிய உவமையை ஏழுத்திலும் கூடப் பொருத்திக்காட்டி விளக்கினார்.

''ஒத்துழையாமை இயக்கத்துக்கு அணைபோட, மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரை, அன்னிய ஏகாதிபத்தியம் தந்திரமாகப் பயன்படுத்தி வந்ததைக் கண்டு வருந்தி, அவர் 'ஜின்டான் சாஸ்திரி' என்ற தலைப்பில் எழுதிய குறிப்பில், குத்தல் மட்டுமல்ல, கொள்கைப் பிடிப்பும் காணப்பட்டது. வயிற்றில் ஏற்பட்ட கோளாறு வாயில் நாற்றத்தை உண்டாக்குவதை மாற்ற, ஜின்டான் மாத்திரையை உட்கொள்வதுபோல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன் வயிற்றுக் கோளாற்றை மறைத்து, வெளிப்பகட்டைக் காத்துக்கொள்வதற்கு, சாஸ்திரியைப் பயன்படுத்துகிறது''.

வேகமான - விறுவிறுப்பான தமிழ் நடையை வரதராசலு **'தமிழ்நாடு'** இதழில் அமைத்தார். திருப்பூரில் மருத்துவராகப் பணியாற்றிய போதே பிரபஞ்சமித்திரனை மங்கலம் சண்முக முதலியாரிடம் இருந்து வாங்கி விறுவிறுப்பான தமிழ்நடையை அப்பத்திரிகையில் வரச் செய்தார். மங்கலம் சண்முகம் அவர்களிடம் 'காரியஸ்தர்' என்ற முறையில் சுப்பிரமணிய சிவா சேர்ந்திருந்தாலும் ஆசிரியராகவே பணியாற்றினார். வெள்ளிதோறும் வார இதழாகப் பிரபஞ்சமித்திரன் வந்தது. செய்திகளை விமர்சனப் பாங்குடன் 'நாரதர்' என்ற புனை பெயரில் சுப்பிரமணிய சிவா எழுதி வந்தார். ஆனால் அப்பத்திரிகை சென்னையில் மிகுந்த பொருளிழப்போடு தடுமாறியது. திருப்பூரில் இருந்த வரதராசலு பிரபஞ்சமித்திரனை வாங்கி ஓராண்டு நடத்தினார்.

மதுரை வழக்கின் காரணமாகச் சிறையில் தள்ளப்பட்டார் வரதராசுலு. முதல் சிறை வாசத்துக்குப் பின் 1919ஆம் ஆண்டின் இறுதியில் 'தமிழ்நாடு' பத்திரிகையை வார இதழாகத் தொடங்கினார் வரதராசலு. சேலத்திலிருந்து வரதராசலு அப்பத்திரிகையை நடத்தி வந்தார். 1925லிருந்து சென்னையில் இருந்து **'தமிழ்நாடு'** இதழை வார இதழாகவே வெளிவரச் செய்தார். 14.4.1926 முதல் தமிழ்நாடு நாளிதழாக வெளிவரலாயிற்று. ஆனால் டி.எஸ்.சொக்கலிங்கம் அவர்கள் 1927 தமிழ்ப் புத்தாண்டிலிருந்து வெளிவந்தது. செல்வாக்குப் பெற்ற பத்திரிகையான சுதேசமித்திரனுக்குப் போட்டியாக அமைந்த 'தமிழ்நாடு' ஓரணாவிற்கு விற்கப்பட்டது. சுதேசமித்திரனின் விலை ஒன்றரை அணாவாகும்.

1921இல் இரு கட்டுரைகள் வரதராசுலுவால் வெளியிடப்பட்டன. அவை அரசு எதிர்ப்புக் குற்றமுடையன என அந்நியர் வழக்கினைத் தொடுத்து வரதராசலுவிற்கு ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனையை விதித்தனர். **'சுதந்திரப் போராட்டம்', 'இந்தியா விடுதலை பெற ஆயுதம் ஏந்த வேண்டும்'** எனும் இரு கட்டுரைகளும் அவருக்கு மீண்டும் சிறைவாசத்தைத் தந்தது. (தமிழ் இதழியல் சுவடுகள், ப.139).

1925இல் 'குடி அரசு' பத்திரிகையை ஈ.வெ.ரா. தொடங்கினார். திரு.வி.க. 'தேசபக்தன்' இதழை, 1917லேயே தொடங்கியிருந்தார். வடநாட்டில் லால் - பால் - பால் (Lal-Pal-Bal) (லாலாலஜபதிராய், விபின்சந்திரபால், பாலகங்காதர திலகர்) என மூவரைச் சேர்த்துச் சொல்வது போல ஈ.வெ.ரா., வரதராசுலு, திரு.வி.க. ஆகிய மூவரையும் கூறுவர். பெரியாரைக் காங்கிரசில் சேர்க்கப் பெரிதும் முயன்றவர்களுள் வரதராசுலுவும் ஒருவர். காங்கிரசு இயக்கத்தின் கொள்கைகளை விளக்குவதற்குப் பல கிராமங்களுக்குள்ளும் சென்று பேசியவர் வரதராசுலு. காங்கிரசு கோரிக்கைக்கு ஆதரவு தராமல் இருந்த கட்சிகளைக் கண்டித்து மக்களிடையே சொற்பொழிவாற்றி நாட்டுப்பற்றை வளர்த்தவர் வரதராசுலு. (தினமணி,மேலது, ஏ.என்.சிவராமன் வணக்கமும், நன்றியும் (ப-62).

காங்கிரசுக்காரர்களின் கூட்டங்கள் படித்த வகுப்பினர் மட்டுமே கூடியிருக்கிற சிறிய மண்டபங்களில் நடந்து வந்ததை மாற்றித் திறந்தவெளிகளில் எல்லார் முன்னிலையிலும் நடத்திக் காட்டியவர் வரதராசுலு. எல்லா ஊர்களிலும் வரதராசுலுவின் புகழ் பரவியதால் அவர் நடத்திய பத்திரிகையும் புகழ்பெறத் தொடங்கியது. 1500 படிகள் விற்கும் இதழே - அதாவது சுதேசமித்திரனே மிகப் பெரும் பத்திரிகை என்று போற்றப்பெற்ற காலத்தில் தமிழ்நாடு இதழும் 1500 படிகள் விற்பனையாயிற்று. அது படிப்படியே உயர்ந்து 1930இல் 10,000 ஆயிற்று. (மா.சு.சம்பந்தன் மு.கு.நூல், ப.139, டி.எஸ்.சொக்கலிங்கம் எனது இரா.நாமா, ப.63).

1932இல் வரதராசுலு **'இந்தியன் எக்ஸ்பிரஸ்'** என்ற ஆங்கில இதழையும் நடத்தி வந்திருக்கிறார். தமிழ்நாடு

இதழ் நீதிக்கட்சியை வன்மையாகக் கண்டித்தது. 1912இல் செப்டம்பர் 20இல் சென்னையில் காங்கிரசு இயக்கத்தின் பிராமணரல்லாதவர்கள் 'சென்னை மாகாண சங்கம்' என்னும் ஓர் அமைப்பினை நிறுவினர். ஏற்கெனவே **தென்னிந்திய நல உரிமைச்சங்கம்** என **நீதிக்கட்சி** இயங்கிக் கொண்டிருந்தது. அது பிராமணரல்லாதார் அரசியல்-சமூக உரிமைகளைப் பெறத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தது. காங்கிரசிற்கு வலுவான போட்டியாக நீதிக்கட்சி இருந்தது. அதனால் பிராமணரல்லாத காங்கிரசுக்காரர்கள் பிராமணரல்லாதார் நலன்களைப் பாதுகாக்க காங்கிரசின் நோக்கத்திற்கு முரண்படாதவாறு சென்னை மாகாண சங்கத்தை நிறுவினர் எனத் **திரு.வி.க.** அவர்கள் குறித்துள்ளார். (திரு.வி.க.வாழ்க்கைக் குறிப்புக்கள், ப.760).

'தமிழகத்தின் அரசியல் வாழ்விலும் இதழியியல் வளர்ச்சியிலும், 1917 முதல் 1930 வரை வரதராசலு அவர்கள் மிகச் சிறந்த சேவை செய்தவராவார். அவரது தொண்டால் தமிழகத்தைப் பெருமைப்படுத்தினார். இந்த அடிப்படைப் பணியைத் தமிழகம் என்றென்றும் மறவாது, மறவாது' - என 1923ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 1931ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் வரை தமிழ்நாடு இதழில் பணியாற்றிய **'பேனாமன்னர்' டி.எஸ்.சொக்கலிங்கம்** குறிப்பிட்டுள்ளார்.

> *மனித சமூகத்தின்*
> *தரித்திரத்திற்குக் காரணம் -*
> *செல்வவான்கள்*
> *செல்வவான்களாக இல்லா*
> *விட்டால், தரித்திரவான்கள்*
> *இல்லை!*
>
> *- தந்தை பெரியார்*

வரதராசலு அவர்கள் தம் **தமிழ்நாடு** இதழ் மூலம் பல போராட்டங்களை நடத்தினார். 'இந்து மதப் பரிபாலன போர்ட்' என்னும் அறநிலையத்துறை கோவில் நிர்வாகங்களைச் சரியாய் நடத்த தேவையானதாகும். ஆனால் அறநிலையத் துறைக்குச் சட்டம் ஏற்படுத்தியபோது சில நாளிதழ்கள் அதனை எதிர்த்தன. வரதராசலு அவர்கள் தாம் தீவிரமான ஆதரவை வெளிப்படுத்தினார். கோவிலில் பொட்டுக் கட்டும் பழக்கத்தை ஒழிக்கச் சட்டம் பிறப்பித்தபோது, அதனையும் இதழ்களும் சத்தியமூர்த்தி போன்ற தலைவர்களும் வன்மையாய் எதிர்த்தனர். அச்சட்டத்தையும் தீவிரமாய் ஆதரித்தது தமிழ்நாடு இதழ்.

தமிழ்நாடு பத்திரிகை 1925ஆம் ஆண்டு பொங்கல் மலரில் **பாரதியார்** பாட்டுக்கள் சிலவற்றை வெளியிட்டதோடு அவற்றிற்கு ஓவியங்களும் தீட்டப்பட்டன. டி.எஸ்.சொக்கலிங்கம் அவர்களின் இந்த முயற்சி பின்னர் பல பத்திரிகைகளிலும் வேகமாய்ப் பரவியது எனக் குறித்துள்ளார். (மா.சு.சம்பந்தன்,மு.கு.நூல், பக்.142-143).

தமிழ்நாடு இதழ் சேலத்திலிருந்து வந்துகொண்டிருந்த போது வரதராசலு அவர்கள் வாரந்தோறும் எழுதும் தலையங்கங்களைத் தந்தியில் வரவழைத்து இந்துப் பத்திரிகையில் வெளியிட்டு வந்தது. இது வரதராசலு அவர்களின் எழுத்து வன்மையைப் புலப்படுத்தும். சுதேசமித்திரன் இதழும் தமிழ்நாடு இதழில் வெளிவந்த கட்டுரைகளை அச்சிடும் கருத்துக்களை வரதராசலு விளக்குவதற்குக் கதைகளின் உதாரணங்களையும் எப்போதாவது எடுத்துக்காட்டுவார் என்கிறார் டி.எஸ்.சொக்கலிங்கம். (மேலது-ப.62, ப.138).

வரதராசலு அவர்களின் தமிழ்நடை மிகச் சிறப்பானதாகும். கட்டுரைகளிலும் மொழிபெயர்ப்புகளிலும் தமிழ் மரபே இருக்கவேண்டும் என்பதில் மிக உறுதியாக இருந்தார். Water falls என்பதனை **'நீர்வீழ்ச்சி'** என மொழிபெயர்ப்பதை அவர் விரும்பவில்லை. **'அருவி'** என்ற சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்றார். அதுபோன்றே எழுத்துக்களைத் தேவையில்லாமல் கூட்டி எழுதுவதை அவர் தவிர்த்தார். **'மகாத்மாவின் பிரசங்கம்'** என்பதை **'மகாத்மா பிரசங்கம்'** என்று போட்டாலே போதும் என்றார். 'போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம்' என்பதைப் 'போலீசார் சுட்டனர்' என்று போட்டாலே போதும். ஆங்கிலத்தில் உள்ளதைப் படித்து உள்ளத்தில் இருத்திக்கொண்டு தமிழில் பிறர்க்கு எப்படிச் சொல்லுவோமோ அதுபோல் எழுத வேண்டும் என்றார். இங்ஙனம் பத்திரிகைத் தமிழில் அவர் மிகப்பல சீர்திருத்தங்களைச் செய்தார். நேராக மனத்தில் எழுத வேண்டும் என்பதே அவருடைய கொள்கை. மனத்தில் பதியுமாறு பேசியதைப் போலவே மனத்தில் பதிய எழுதியவர் வரதராசலு. (மா.சு.சம்பந்தன், மு.கு.நூல் பக்.142, டி.எஸ்.சொக்கலிங்கம் ப.42).

தமிழ்நாடு இதழுக்கு வரதராசலு அவர்கள் தேர்ந்தெடுத்த இலச்சினை அவருடைய கொள்கைப் பிடிப்பைக் காட்டும். மூவண்ணக் கொடியின் நடுவே கலப்பை ஏந்திய ஓர் உழவன் நின்று கொண்டிருப்பான். இரு பக்கங்களிலும் இரண்டு வாள்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருக்கும். கீழே 'சுயராஜ்ய வாழ்வே சுகவாழ்வு' எனும் தொடர் இருக்கும். இது தமிழ்நாடு இதழின் இலச்சினையாகும்.

அவருடைய நாட்டுப்பற்றும் அடித்தள மக்களை உயர்த்தும் நோக்கமும் விடுதலை வாழ்வே இனிய வாழ்வு என்ற கருத்தும் சிந்திக்கத் தக்கவை. பாரதி நடத்திய **'விஜயா', 'சூர்யோதயம்'** போன்ற பத்திரிகைகளில் கூட ஆங்கிலத் தொடரும் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சு மொழியில் பெயரும் இருந்தன. ஆனால் வரதராசலு அவர்கள் இதழின் முகப்பில் தமிழ்ச் சொற்களையே கையாண்டிருந்தார். ஆங்கிலத்திலும் பெயர் பொறிக்கப்படவேண்டும் என்பதால் வலது பக்கத்தின் மேல் பகுதியில் மிகச் சிறிய எழுத்தில் ஆங்கிலத்தில் குறித்துள்ளார். வாரப் பதிப்பு, நிறுவிய ஆண்டு (வாரப் பதிப்பு-ஸ்தாபிதம்) 1919 எனக் குறித்துள்ளார். 1941ஆம் ஆண்டில் இதன் விலை அரையணாவாக இருந்திருக்கிறது. (தினமணி, மு.க.நூ.பெ.சி.மணி மு.கு.க.ப.147இல் வெளியிட்டுள்ள இதழின் நகல் - அறிமுகம்).

காங்கிரசு இயக்கத்தை வளர்த்ததைப் போலவே காங்கிரசுக்குள்ளிருந்து தவறு செய்தவர்களையும் கண்டித்து எழுதியிருக்கிறார் வரதராசலு **'சேரமாதேவி குருகுலப் போராட்டம்'** மிகச் சிறப்பானதாகும். வ.வே.சு.ஐயர் நடத்திவந்த சேரமாதேவி குருகுலத்தில் பிராமண மாணவர்களுக்குத் தனியாகவும் பிறருக்குத் தனியாகவும் உணவு பரிமாறிய வழக்கத்தைச் சாடினார். சமத்துவத்தை நிலைநாட்டச் சமபந்தி வேண்டுமென வலியுறுத்தினார். **திரு.வி.க., பெரியார்** ஆகியோரும் இவ்வியக்கத்தில் பெரிதும் ஈடுபட்டனர்.

குருகுலம் தொடங்கப்பட்டதன் நோக்கமும் அதற்குப் பொருள் தந்தோர் உணர்வும் எத்தகையன என்பதை முதலில் விளக்கி, வெளிநாடு சென்று திரும்பிய வ.வே.சு.விடம் தமக்கு இருக்கும் நம்பிக்கையைக் காட்டி, அவர் தம்மை மாற்றிக்கொள்ள ஒரு மாத காலம் கொடுத்தும் மிக நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

"தேசிய வேலை செய்யக் கூடியவர்களைத் தயாரிப்பதற்காக குருகுலம் ஆரம்பிக்கப்பட்டது. எல்லா வகுப்புகளையும் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் அதற்கு உதவி செய்தார்கள். மொத்தம் வசூலான 50,000 ரூபாயில் 96% பிராமணரல்லாதாரால் கொடுக்கப்பட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி 5000 ரூபாய் கொடுத்தது. என்னுடைய கிளர்ச்சியின் பயனாகவே இவ்விவாதம் தீரும் வரையில் வாக்களித்த ரூ.22,000 கொடுபடாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எல்லாச் சிறுவர்களும் சமத்துவமாக நடத்தப்படுவார்களென்று நம்பித் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் பிராமணரல்லாதாரும் பணம் கொடுத்தனர். எது எப்படியிருந்த போதிலும் பிராமண, பிராமணரல்லாத சிறுவர்கள், ஆகாரம், கல்வி இரண்டிலும் வித்தியாசமின்றி நடத்தப்படுவார்கள் என்ற நிச்சய ஏற்பாட்டின் பேரில்தான் நான் பணம் கொடுத்தேன். ஸ்ரீமான் வ.வெ.சு.ஐயர் இங்கிலாந்து சென்று திரும்பியவராயும் தேசீயவாதியாகவும் இருப்பதால் அவர் ஜாதி வித்தியாசம் பாராட்டமாட்டார் என்று நம்பினேன்; ஆனால் அவ்விதம் நடக்கவில்லை. எல்லாச் சிறுவர்களையும் சமத்துவமான முறையில் நடத்த வேண்டுமென்றே நான் கேட்கிறேன். எவ்வித வித்தியாசமும் இருக்கக்கூடாது. அல்லது பணம் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். தேசீய ஸ்தாபனங்களில் பிராமணரல்லாதாருக்குச் சமத்துவமான நடத்தை ஏற்படாத வரையில், முடிவு என்ன ஆனபோதிலும் நான் எனது போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. ஸ்ரீமான் ஐயருக்கு ஒரு மாதக் கெடு கொடுத்திருக்கிறோம். அதற்குள் அவர் குருகுலத்தைச் சீர்திருத்த வேண்டும். அல்லது பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அவர் இப்பொழுது போலவே நடந்து கொண்டிருந்தால் நேரடியான வேலை ஆரம்பிக்குமுன் தேசத்தில் பலமான பிரசாரம் செய்யப் போகிறேன். (குடிஅரசு, 10.5.1925, வார இதழில் மீண்டும் அச்சிடப்பெற்ற அறிக்கை).

எழுதியது போலவே தீவிரமாகப் போராடினார் வரதராசலு. விடுதலை பற்றியும் மிக நல்ல விளக்கத்தை 'ஓர் எச்சரிக்கை' எனும் தலைப்பில் 20.12.1925 இதழின் தலையங்கத்தில் எழுதியுள்ளார்:

சுதந்திரம் மனிதவர்க்கத்தின் பிறப்புரிமையாகும். சுதந்தரமென்பது ராஜீய சுதந்தரத்தை மட்டும் குறிப்பதாகச் சிலர் நினைக்கின்றார்கள். அது தவறான எண்ணமாகும். **சமய சுதந்தரம், சமூக சுதந்தரம்,** சிறு கூட்டத்தார் தம்முடைய நயவஞ்சகத்தால் பெரும்பான்மையோரை ஏமாற்றி ஆதிக்கம் செலுத்துவது போன்ற மோசங்களிலிருந்து குடிமக்கள் விடுதலை பெறும் சுதந்தரம் ஆகிய பல சுதந்தரங்களும் உண்டு. நாம் கோருவது பரிபூரண சுதந்தரமாகும். ராஜீய - சமய - சமூக விடுதலையே, நாம் வேண்டுகிறோம். வெள்ளைக்காரனுக்கு குறிப்பிட்ட விசேஷ-சுதந்தரமும் அந்தஸ்த்தும் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. சமய-சமூக-உயர்வும் மற்றவர்களுக்கில்லாத **'பிறப்புரிமை'** எனப்பட்ட பாத்தியதைகளும் பிராமணருக்குக் கொடுக்கப்படுவதையும் நாம் ஆட்சேபிக்கிறோம். (குடிஅரசு, 27.12.1925 இதழில் அச்சிடப்பெற்ற பகுதி).

தண்டனை

"இருதார மணத்துக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?" என்று அந்நாளில் தலைமை நீதிபதியாக இருந்த லார்ட் ரஸ்ஸல் அவர்களை ஒரு சமூக ஊழியர் கேட்டார்.

உடனே ரஸ்ஸல், "இரண்டு மாமியார்கள் இருப்பதே அதிக தண்டனைதான்" என்று சிரித்துக்கொண்டே கூறினார்!

ஆங்கிலேய அரசுக்கு வரிகள் செலுத்தக் கூடாது என்று வரதராசலு அறைகூவல் விடுத்தபோது, அரசு அவருக்கு அபராதம் விதித்தது. அவர் செலுத்த மறுத்தார். அதனால் அவருடைய காரைப் பறிமுதல் செய்தது. ஆனால் அக்காரை ஓட்டிச் செல்ல இந்தியர் எவரும் முன் வரவில்லை. ஆங்கிலேய உயர் அதிகாரியே அதனை ஓட்டிச் சென்றார். அந்த அளவுக்கு மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தவர் வரதராசலு. அவருடைய உறுதியையும் வீரத்தையும் கண்டு **'தென்னாட்டுத் திலகர்'** என வாயார வாழ்த்தினார் வ.உ.சி. (கா.திரவியம், மு.க.நூ.ப.145).

பத்திரிகையின் கடமையாக நல்ல கருத்தொன்றை வரதராசலு அவர்கள் தம் இதழில் வெளியிட்டார். அக்கொள்கையை அவர் இறுதிவரை பின்பற்றினார்.

''பத்திராதிபரின் பொறுப்பு வெகு கஷ்டமானது. பத்திராதிபர்களுக்கு அளவற்ற ஆண்மை வேண்டும். அதற்குத்தக்க அடக்கமும் வேண்டும். உண்மையைச் சொல்ல வேண்டும். உற்றார் உறவினர் தாட்சண்யங்களைப் பொருட்படுத்தலாகாது. ஜனங்களின் தவறுகளை ஆணித்தரமாக எடுத்துக்காட்ட வேண்டும். அவர்களுடைய ஆத்திரத்தைக் கண்டு அஞ்சலாகாது. **'ஈசுவர சேவையை விடத் தேச சேவை உயர்ந்தது'** என்பது நமது அபிப்பிராயம்.

நெஞ்சில் பேத புத்தியும் கையில் தேசியக் கொடியும் பிடித்த பத்திராதிபர்களின் சேவை, கக்கத்தில் கன்னக்கோலும், கையில் ஜபமாலையும் வைத்தவர் செய்யும் பக்தியைப் போன்றதாகும். (மா.சு.சம்பந்தன், மு.கு.நூல், பக்.127-128).

கொள்கை வீரரான வரதராசலு காங்கிரசு இயக்கத்தில் தொடர்ந்து போராடி வந்தார். 1925இல் **பெரியாரும்** (1927இல்) **திரு.வி.க.வும்** காங்கிரசு இயக்கத்திலிருந்து விலகிய பின்னும் தொடர்ந்து போராடியவர் **வரதராசலு.**

'அரசாங்கத்தின் ஆதிக்கத்துக்கு அஞ்சிப் பணிந்து சிலரும், சர்க்காரின் சலுகைகளில் மயங்கித்தாசர்களாகச் சிலரும் நமக்கேன் வம்பு என்று நாட்டு நடப்பில் நாட்டம் கொள்ளாமல் சிலரும், மனித உணர்வு இல்லாது மரத்துப்போய் சிலரும் வாழ்ந்து வந்த சூழ்நிலையில் எழுத்தின் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தையே உருவாக்கி, பாரதநாட்டின் விடுதலைப் படைக்கலனாகப் பத்திரிகையைப் பயன்படுத்தி, துன்பத்தைத் துச்சமாகக் கருதி, தியாகத்தையே பரிசாக ஏற்று, தமிழுக்கும் தாய் நாட்டுக்கும் தளராத தொண்டாற்றியவர் டாக்டர் வரதராசலு'. (கா.திரவியம் மு.க.நூ. ப.102).

''தியாகமும் உறுதியோடு எதிர்த்த தன்மையும் அவருக்குப் பின்னாளில் வெற்றியைத் தரவில்லை.

1926இல் நாளிதழாகத் தம் வார இதழான தமிழ்நாடு இதழை வெளியிட்டு வீச்சான அதே நேரத்தில் பேச்சுவழக்கிலான நடையைக் கொண்டு மிகப் பல வாசகர்களை ஈர்த்து சுதேசமித்திரனுக்கு மிக வலிவான போட்டியாக அமைத்தவர் வரதராசுலு. ஆனால் 1930இல் மகாத்மா காந்தியின் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தமிழ்நாடு இதழ் ஆதரிக்காததால் சில காங்கிரசார் 'இந்தியா' எனும் நாளிழை வெளியிட எண்ணினர்.

1930இல் இருந்தே தமிழ்நாடு இதழின் விற்பனை குறையத் தொடங்கியதாலும். 1931இல் டி.எஸ். சொக்கலிங்கம் அவர்கள் விலகியதும் விற்பனையைப் பாதித்திருக்கும். 1936 செப்டம்பர் 26ஆம் நாள் வரதராசுலு எழுதிய தலையங்கத்தில், தீவிரமான சமய, சமூக, அரசியல் துறைகளில் கழிக்க வேண்டுமென்ற எண்ணம் (தினமணி, மு.க.நூ.பெ.சு.மணி, மு.கு.க.ப.147) காரணமாகத் தமிழ்நாடு இதழை நிறுத்தப்போவதாக அறிவித்தார்.

1936இல் வாரப் பதிப்பும் நாளிதழும் நின்றன. நான்கு ஆண்டுகள் கழித்து வார இதழை சேலத்திலிருந்து அரையணா விலையில் மீண்டும் நடத்தினார். அதுவும் சில ஆண்டுகளே வெளிவந்தது. பின்னர் கருமுத்து தியாகராசர் அப்பத்திரிகையை வாங்கிச் சில காலம் நடத்தினார். 1930-32களில் காந்தியடிகள் நடத்திய உப்புச்சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம் முதலியவற்றை வரதராசுலு எதிர்த்ததால் 'தமிழ்நாடு' இதழ் தேசபக்தர்களின் ஆதரவை இழந்தது. 1934இல் இந்தியச் சட்டசபை தேர்தல் நடந்தது. காங்கிரசில் இருந்து விலகியிருந்ததால் தேர்தலின் சுயேச்சையாக நின்றார் வரதராசுலு. அவரைக் காங்கிரசில் நிறுத்துவதற்குத் திரு.வி.க. பெரிதும் முயன்றார். (திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள், ப.432) ஆனால் வரதராசுலு இணங்கவில்லை. தேர்தலில் தோற்றுப்போனார்.

சரிவும் தோல்வியும் இருந்தாலும் அவருடைய பத்திரிகைப் பணியும் பேச்சும் தொண்டும் அவருடைய பெயரை இந்திய விடுதலை வரலாற்றில் நிலைத்திருக்கச் செய்யும். 1957இல் அவர் மறைந்தார். ●

மனித நேய வார விழா

மனித நேய வார விழா ஜனவரி 24 முதல் 30ஆம் தேதி வரை தமிழகமெங்கும் - குறிப்பாக மாவட்டத் தலைநகர் தோறும் கொண்டப்பட்டது.

சென்னையில் - கிண்டியில் உள்ள டான்ஸ்டியா அரங்கில் அவ்விழா - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்ககத்தின் மூலம் 29.1.98 அன்று 'சமுதாயப் பொருளாதார சிந்தனைக் கூட்டம்' என்ற பெயரில் நடத்தப்பெற்றது.

ஆதி-திராவிடர் பழங்குடியினர் இயக்கத்தின் நலத்துறைச் செயலாளரும்; இயக்குநர், துணை இயக்குநர், உதவி இயக்குநர், இணை இயக்குநர், ஆகியவர்களும் தொழில் மற்றும் வணிகத்துறை இணை இயக்குநர் திரு. நடராசன், கல்கத்தாவில் உள்ள ரவீந்திரநாத் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர். சுபசங்கர் மற்றும் தாட்கோ, டான்ஸியா, சிப்பெட் நிறுவன உயர் அலுவலர்கள் முதலான பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

இதன் நிறைவு நாள் நிகழ்ச்சிகள் சிவானந்தா சாலையில் உள்ள அண்ணா கலையரங்கில் நடைபெற்றன. செய்தி விளம்பரத்துறையோடு, மாணவ - மாணவிகள் சேர்ந்து நடத்திய கண்காட்சியும் இதில் இடம் பெற்றது.

வேளாண்மை :

திராட்சையில் மாவுப் பூச்சியா ?

தமிழ்நாட்டில் திண்டுக்கல், மதுரை, தேனி, தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் பரவலாகவும் இதர மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளிலும் திராட்சை சாகுபடி செய்யப்படுகின்றது.

திராட்சையைத் தாக்கும் பூச்சிகளில், 'மாவுப்பூச்சி' அல்லது 'கற்றாழைப் பூச்சி' என்று சொல்லப்படும் இப்பூச்சியினால் சேதாரம் மிகவும் அதிகமாகும். பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தி மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். மேலும் இரசாயனப் பூச்சிக்கொல்லிகளை உபயோகிப்பதனால் திராட்சையின் பழங்களில் அதன் நச்சுத் தன்மை கலந்து உண்பவர்களுக்குத் தீங்கு விளைவிக்கிறது.

எனவே, இரசாயனப் பூச்சிக் கொல்லியை உபயோகிப்பதற்குப் பதிலாகப் பூச்சியை உணவாக உண்ணும் கிரிப்டோலிமஸ் என்ற இரை விழுங்கிப் பொறிவண்டுகளைத் திராட்சைத் தோட்டத்தில் விட்டு மாவுப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம். இத்தகைய இரைவிழுங்கிகள், புழு மற்றும் வண்டு பருவத்தில் உள்ள மாவுப்பூச்சியை இணையாக உண்டு, தோட்டத்தில் இட்ட 10முதல் •12 வாரங்களில் சேதாரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்திவிடும்.

'ஆஸ்திரேலியப் பொறி வண்டு' என்று அழைக்கப்படும் இத்தகைய இரைவிழுங்கிகள் மதுரை வேளாண் கல்லூரியின் பூச்சியியல் துறையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு திராட்சைச் சாகுபடியாளரின் நலனுக்காக வண்டு ஒன்றுக்கு ரூ.1/-க்கு (ரூபாய் ஒன்று மட்டும்) விற்பனைக்கு உள்ளது.



இது தவிர, பச்சைக் கண்ணாடி இறக்கைப்பூச்சி என்ற இரைவிழுங்கிப் பூச்சியினமும் இக்கல்லூரி ஆய்வுத் திட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த வகைப்பூச்சியும் திராட்சை மாவுப்பூச்சியை நன்கு கட்டுப்படுத்தும்.

ஒரு எக்டேருக்கு மாவுப்பூச்சியின் தாக்குதலின் அளவிற்கு ஏற்ப சுமார் 1,000 - 4,000 வண்டுகள் வரை தேவைப்படும். ஒரு முறை வண்டுகளைத் தோட்டங்களில் விட்டால் நாளடைவில் இவைகள் பல்கிப்பெருகி, வரும் ஆண்டுகளில் மாவுப்பூச்சியின் தாக்குதல் பெருமளவில் குறைந்து திராட்சை மகசூலை அதிகரிக்கின்றது.

மேற்சொன்ன இரைவிழுங்கிகள் வேண்டுவோர்:-

**பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை,
வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
மதுரை - 625 104.**

- என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பயன்பெறக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- டாக்டர் கே. சந்திரசேகரன்

நூல் நயம்

முத்துச் சிப்பி

ஆசிரியர் : வாழியூர் வே.இராசவேலன்

வெளியிட்டோர் : பேரசு பதிப்பகம், வாழியூர், ஒண்ணுபுரம் வழி,
திருவண்ணாமலை மாவட்டம், 632 315.

பக்கம்: 96 விலை ரூ.25

எழுத்திலும் பேச்சிலும் வல்லவரான நூலாசிரியர், பல்வேறு ஏடுகளில் எழுதிய-மேடைகளில், வானொலியில் முழக்கிய-புதியதாக இயற்றிய 32 கவிதைகளைத் தொகுத்தளித்துள்ள நூல் இது. எளிய கவிதைகள் ஆக்கப்பட்டுள்ளன.

புயலை வென்ற புழுதி

ஆசிரியர் : பரிக்கல் என். சந்திரன்,எம்.ஏ.,

வெளியிட்டோர் : மீனா புத்தகப் பண்ணை,
7, வில்லியம் லே-அவுட் 2வது தெரு,
கே.கே.ரோடு, விழுப்புரம்-605 602

பக்கம்: 188 விலை ரூ.42

இது ஒரு நகைச்சுவை நாடக நூல். இரண்டு நாடகங்கள் உள்ளன. சற்றே வித்தியாசமாக 'கொல்ல வந்த கள்ளிப்பாலுக்குத் தப்பிய பெண் குழந்தைகளுக்கு' காணிக்கை ஆக்கப்பட்டுள்ளது. பல வானொலி நாடகங்களை எழுதிய ஆசிரியரின் அனுபவம், நாடக நடையில் தெரிகிறது.

குருத்துவம் என்னும் பாம்பனார் புகழ்க்காதை

ஆசிரியர் : ஓவியப் பாவலர் மு.வலவன்

வெளியிட்டோர் : முத்தையன் பதிப்பகம்,
65, பெரியதெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-600 005

பக்கம்: 96 விலை ரூ.25

அருள்மிகு முருகப்பெருமானின் பெருமை பாடியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்-அருணகிரிநாதர், வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள், குமரகுருதாசர் என்னும் பாம்பன் அடிகள் ஆகியோராவர். இவர்களில் மூன்றாமவர் வரலாறு-அவதாரக் காண்டம், அருந்தவக் காண்டம், அருள்புரிக் காண்டம் என மூன்று காண்டங்களாக, முத்தான தமிழ்க் கவிதையாக்கிப் படைக்கப்பட்டுள்ள நூல் இது.

ஆயிரம் உண்டிங்கு சேதி

ஆசிரியர் : பி.எல். ராஜேந்திரன்,எம்.ஏ.,

வெளியிட்டோர் : கதிர் வெளியீடு,
7, பொன்னம்பலம் தெரு,
சோழபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053

பக்கம்: 128 விலை ரூ.23

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்கிற திருமூலர் பாடலடிகளில் தொடங்கி - 'சாதிகள் இல்லையடி பாப்பா! குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!' என்கிற பாரதியின் பாடலடிகள் வரை, ஆயிரத்திற்கு மேலான பொன்மொழிகள் தொகுக்கப்பட்டுள்ளன இந்த நூலில். தமிழ்நாட்டறிஞர்கள் மட்டுமன்றிப் பிற நாட்டறிஞர்களின் நல்லுரைகளும் இதில் அடங்கியுள்ளன.

ஓர் ஓவியம் காவியமானது

ஆசிரியர்: பெருங்கவிஞர் நெ.அ.பூபதி

பக்கம் : 112 விலை ரூ.25

மனிதத் தன்மை என்னவெனக் கணவனுக்கு உணர்த்திட வாழ்நாள் முழுவதும் பாடுபட்டும் பலன் காணாமல் - சுகம் காணாமல் கண்மூடும் சுந்தராங்கி பற்றிய சோக காவியம் இது; முழுதும் இனிக்கும் எண்சீர் விருத்தப் பாக்களால் ஆக்கப்பட்டிருக்கிறது.

முதல் முத்தம்

ஆசிரியர் : பெருங்கவிஞர் நெ.அ.பூபதி

இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர் :
தேன்மொழி வெளியீடு,
22, பாரதிதாசன் தெரு, குமரன் காலனி,
சைதாப்பேட்டை, சென்னை-15.

பக்கம் : 88 விலை ரூ.20

வறிய குடும்பத்து வாலிபன் ஒருவனும், அதே நிலையில் உள்ள இளம் பெண்ணொருத்தியும் காதலிக்கிறார்கள்; அவர்களுடைய காதல் தொடர்கதையாக நீளாமல், சிறுகதையாகவே முற்றுப் பெறுகிறது; இதுதான் பத்துத் தலைப்புகளின் கீழான காவியமாகப் படைக்கப்பட்டுள்ளது இந்த நூலில்.

- இந்திரன்



1998 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்

1. வடசென்னை : சி.குப்புசாமி (தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர்	18,80,926
பதிவான வாக்குகள்	8,76,109
செல்லாதவை	24,262

சி.குப்புசாமி	திமுக	4,01,322
ஆர்.டி. சபாபதி மோகன்	மதிமுக	3,32,229
ஏ.சௌந்தரராஜன்	இ.கம்யூ(மா)	50,590
ஜி.கே.ஜே.பாரதி	ஜதேகா	47,147
டி.தேவநாதன்	பசக	12,085
எஸ்.குமாரசாமி	இ கம்(மார்க் லெ)	4,100
கே.கலைச்செல்வன்	சுயே	1,608
ஜே.கணேசன்	சுயே	1,331
என்.பாஸ்கர்	சுயே	757
டி.கே.மூர்த்தி	சக	678

2. மத்திய சென்னை :
முரசொலி மாறன் (தி.மு.க.) வெற்றி

மொத்த வாக்காளர்	12,06,719
பதிவான வாக்குகள்	5,97,170
செல்லாதவை	15,721

முரசொலி மாறன்	திமுக	3,00,774
டி.ஜெயகுமார்	அதிமுக	2,29,047
ஆர். அன்பரசு	இதேகா	44,061
எஸ்.நடராஜன்	புத	1,385
சுதர்சன்	சுயே	1,161
சுவாமிநாதன்	சுயே	973
திருமதி சவா முஸ்தபா	சுயே	888
வி.சிவகுமார்	சுயே	798
டி.சிவஞான சம்பந்தன்	ராஜத	714
எஸ்.ரங்கநாதன்	சுயே	622
வி.ஜி.லோகநாதன்	சுயே	493
இ.ஜகந்நாதன்	சுயே	299
எஸ்.ராமச்சந்திரன்	சுயே	234

3. தென் சென்னை : டி.ஆர்.பாலு (தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர்	19,36,542
பதிவான வாக்குகள்	9,17,040
செல்லாதவை	18,242

டி.ஆர்.பாலு	திமுக	4,32,913
கே.ஜனா கிருஷ்ணமூர்த்தி	பாஜக	4,12,899
எம்.பி.சுப்பிரமணியம்	இதேகா	44,549
எம்.நாகப்பன்	சுயே	3,294
என்.கனகசபை	சுயே	2,012
ஜே.மோகன்ராஜ்	டிஎல்ஜே	1,276
எஸ்.விவேகானந்தா	சுயே	744
எஸ்.ஸ்ரீனிவாசன்	சுயே	574
பி.எஸ்.கணேசன்	சுயே	537

4. ஸ்ரீபெரும்புதூர் (தனி) :
கே.வேணுகோபால் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர்	12,66,643
பதிவான வாக்குகள்	7,24,858
செல்லாதவை	28,531

கே.வேணுகோபால்	அதிமுக	3,26,528
டி.நாகரத்தினம்	திமுக	3,02,733
டாக்டர் கே.ஜெயகுமார்	இதேகா	64,944
எஸ்.வியாசராஜன்	சிசேக	1,345
எஸ்.டி.ஜெயராமன்	சுயே	777

5. செங்கல்பட்டு :
காஞ்சி பன்னீர்செல்வம் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர்	11,48,117
பதிவான வாக்குகள்	6,96,499
செல்லாதவை	25,913

காஞ்சி பன்னீர்செல்வம்	அதிமுக	3,29,239
கே.பரசுராமன்	திமுக	3,06,323
டி.என்.முருகானந்தம்	இதேகா	24,968
எம்.யூ.கிருஷ்ணன் பாராயணர்	சுயே	5,419
கே.ஜெகவீரபாண்டியன்	ராஜத	2,754
எஸ்.கே.பி.ஸ்ரீனிவாசன்	சுயே	765
எம்.கே.ரமேஷ்	சுயே	588
எத்திராஜ் பிரிகேடியர்	சுயே	530

6. அரக்கோணம் : சி.கோபால் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,72,687
பதிவான வாக்குகள் - 7,20,670
செல்லாதவை - 23,592

சி.கோபால்	அதிமுக	3,59,431
ஏ.எம்.வேலு	தமாகா	3,09,943
ஆர்.தாமோதரன்	இதேகா	24,519
ஏ.கந்தப்பன்	சுயே	1,120
எஸ்.எம்.என்.நடராஜன்	சிசேக	1,078
புலவர் மணிஎழிலன்	சக	987

7. வேலூர் : என்.டி.சண்முகம் (பா.ம.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 11,01,147
பதிவான வாக்குகள் - 6,93,560
செல்லாதவை - 19,631

என்.டி.சண்முகம்	பாமக	3,31,035
டி.ஏ.மொஹமது சகி	திமுக	3,04,630
பி.அக்பர் பாஷா	இதேகா	18,885
எம்.பத்மநாபன்	சுயே	17,837
ஜே.சத்யமூர்த்தி	சக	836
பி.எஸ்.தரணிவாசன்	சுயே	706

8. திருப்பத்தூர் :

டி.வேணுகோபால் (தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,93,837
பதிவான வாக்குகள் - 6,99,805
செல்லாதவை - 25,250

டி.வேணுகோபால்	திமுக	3,22,990
எஸ்.கிருஷ்ணமூர்த்தி	அதிமுக	3,22,716
ஆர்.கண்ணபிரான்	இதேகா	28,095
பி.அஜிஸ்	சுயே	844

9. வந்தவாசி : எம்.துரை (பா.ம.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,75,770
பதிவான வாக்குகள் - 6,67,287
செல்லாதவை - 21,751

எம்.துரை	பாமக	3,27,010
எல்.பலராமன்	தமாகா	2,61,935
எம்.கிருஷ்ணசாமி	இதேகா	34,827
ஆர்.குப்புசாமி (எ)-ஆர். அரட்டைவடையார்	சுயே	21,219
ஜி.எஸ்.சந்திரபோஸ்	சுயே	545

10. திண்டிவனம் :

செஞ்சி எம்.ராமசந்திரன் (ம.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,65,034
பதிவான வாக்குகள் - 6,74,617
செல்லாதவை - 26,335

செஞ்சி எம்.ராமச்சந்திரன்	மதிமுக	3,20,112
ஜி.வெங்கட்ராமன்	திமுக	2,88,380
கே.ராமமூர்த்தி	இதேகா	29,898
ஆர்.ஜெயபாலன்	பசக	4,837
டி.பரமசிவம்	சுயே	1,892
வி.ராமச்சந்திரன்	சுயே	827
என்.எம்.இஸ்மாயில்	சுயே	640
பி.எஸ்.பழனி	சுயே	575
ஜி.லஷ்மணன்	ராஜத	443
ஜி.இனியதயாளன்	சுயே	332
எம்.முகமது அலி ஜின்னா	சுயே	189
ஆர்.முனுசாமி	சுயே	157

11. கடலூர்: எம்.சி.தாமோதரன் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,76,136
பதிவான வாக்குகள் - 6,58,340
செல்லாதவை - 23,596



எம்.சி.தாமோதரன்	அதிமுக	3,09,985
பி.ஆர்.எஸ்.வெங்கடேசன்	தமாகா	2,82,856
டாக்டர் ஆர். இராமதாஸ்	இதேகா	40,603
கே.நம்பியார்	ராஜத	1,300

12. சிதம்பரம் (தனி) :

ஆர்.ஏழுமலை (எ) எழில்மலை (பா.ம.க.) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,54,642
பதிவான வாக்குகள் - 6,84,155
செல்லாதவை - 17,561

ஆர்.ஏழுமலை (எ) எழில்மலை	பாமக	3,05,372
வி.கணேசன்	திமுக	2,97,417
டாக்டர் பி.வள்ளல்பெருமான்	இதேகா	43,214
பி.நாகப்பன்	பசக	19,922
எஸ்.ஜெயராஜ்	சுயே	351
வி.ஜானகிராமன்	சுயே	318

13. தருமபுரி : கே.பாரி மோகன் (பா.ம.க.) வெற்றி

மொத்த வாக்காளர் - 11,75,234
பதிவான வாக்குகள் - 6,39,529
செல்லாதவை - 18,288

கே.பாரி மோகன்	பாமக	3,41,917
பி.தீர்த்தராமன்	தமாகா	2,42,490
பி.வெங்கடேசன்	சுயே	14,788
பி.கே.பட்டாபிராமன்	யுசிபிஐ	10,018
சி.ஜெயசீலன்	பசக	5,693
ஏ.கோபால் இனமுரசு	ராஜத	3,185
என்.ஆர்.தியாகராஜன்	சுயே	1,222
டாக்டர் கே.பத்மராஜன்	சுயே	999
டி.மகேந்திரன்	சுயே	559
கே.மாணிக்கம்	சுயே	370

14. கிருஷ்ணகிரி:கே.பி.முனுசாமி (அ.தி.மு.க.) வெற்றி

மொத்த வாக்காளர் - 11,15,876
பதிவான வாக்குகள் - 6,48,144
செல்லாதவை - 25,455

கே.பி.முனுசாமி	அதிமுக	3,15,762
டி.ஆர்.ராஜாராம் நாயுடு	தமாகா	2,66,413
ஏ.ஜி.ஏ.கிருஷ்ணமூர்த்தி	இதேகா	35,229
ஆர்.முனிராஜ்	பசக	5,285

15. ராசிபுரம் (தனி) :

டாக்டர் வி.சரோஜா (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 11,08,243
பதிவான வாக்குகள் - 6,06,487
செல்லாதவை - 28,103

டாக்டர் வி.சரோஜா	அதிமுக	3,02,801
கே.கந்தசாமி	தமாகா	2,48,424
தேன்மொழி	இதேகா	18,178
வி.அருள்மணி	புத	5,338
பி.சதாசிவம்	பசக	1,159
கே.பழனியப்பன்	சுயே	928
ஆர்.சுப்பிரமணி	சுயே	510
கே.பிரபாகரன்	சுயே	360
வி.வீரபாபு	ராஜத	323
ஆர்.ராமசாமி	சுயே	205
ஏ.தர்மராஜன்	சுயே	158

16. சேலம் : கே.ராமமூர்த்தி (சுயே) வெற்றி

மொத்த வாக்காளர் - 11,78,177
பதிவான வாக்குகள் - 6,79,486
செல்லாதவை - 20,513

கே.ராமமூர்த்தி	சுயே	3,65,557
ஆர்.தேவதாஸ்	தமாகா	2,29,677
கே.வி.தங்கபாலு	இதேகா	48,027
பி.சம்பத்குமார்	சுயே	10,311
எஸ்.கேசவராஜன்	ஏஜேபிபி	2,091
ஏ.ஜி.பத்மநாபன்	பசக	1,710
பி.மாரிமுத்து	சுயே	550
கே.பழனிசாமி	சுயே	495
சி.சிங்காரவேலு	சுயே	405
டி.பெரியசாமி	சுயே	150

17. திருச்செங்கோடு :

கே.பழனிச்சாமி (அ.தி.முக) வெற்றி

மொத்த வாக்காளர் - 14,60,247
பதிவான வாக்குகள் - 7,81,520
செல்லாதவை - 22,895

கே.பழனிச்சாமி	அதிமுக	4,14,992
டாக்டர் கே.பி.ராமலிங்கம்	திமுக	3,10,183

பி.பழனிச்சாமி	இதேகா	-	28,421
டி.பாக்கியம்	புத	-	2,442
எஸ்.வி.செல்வம்	சுயே	-	1,483
பொன்.எஸ்.தில்லைக்கரசி	சுயே	-	622
ஆர்.செங்கோடன்	சுயே	-	482

18.நீலகிரி :

எம். மதன் (எ) மாஸ்டர் மதன் (பா.ஜ.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 12,94,110
பதிவான வாக்குகள் - 7,18,202
செல்லாதவை - 23,844

எம்.மதன் (எ) மாஸ்டர் மதன்	பாஜக	-	3,22,818
எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன்	தமாகா	-	2,62,433
ஆர்.பிரபு	இதேகா	-	1,06,588
எம்.பாஸ்கரன்	சுயே	-	1,416
சி.ரமேஷ்	சுயே	-	1,103

19. கோபிசெட்டிபாளையம்:

வி.கே.சின்னசாமி (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,21,268
பதிவான வாக்குகள் - 6,27,372
செல்லாதவை - 24,917

வி.கே.சின்னசாமி	அதிமுக	-	3,29,753
என்.ராமசாமி	திமுக	-	2,15,111
இ.வி.கே.எஸ்.இளங்கோவன்	இதேகா	-	48,531
எல்.சுரேஷ்	சுயே	-	7,836
பன்னாரி	சுயே	-	615
வி.ஏ.முருகன்	சுயே	-	609

20.கோயம்புத்தூர் :

சி.பி.ராதாகிருஷ்ணன் (பா.ஜ.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 14,95,355
பதிவான வாக்குகள் - 8,26,652
செல்லாதவை - 22,167

சி.பி.ராதாகிருஷ்ணன்	பாஜக	-	4,49,269
கே.ஆர்.சுப்பையன்	திமுக	-	3,04,593
ஆர்.கிருஷ்ணன்	இதேகா	-	40,739
எஸ்.டி.கல்யாணசுந்தரம்	பசக	-	4,596
ஆர்.ரங்கசாமி	சுயே	-	1,431
ஆர்.கிருஷ்ணசாமி	சுயே	-	1,181
சி.சாந்தி	சுயே	-	1,091
எம்.சாமிநாதன்	சுயே	-	666
ஓ.ராமசாமி	சக	-	405
ஆர்.லக்ஷ்மண நாராயணன்	சுயே	-	220
ஆர்.இளங்குமரன்	சுயே	-	161
கே.எஸ்.ராகவேந்திரா	சுயே	-	133

21. பொள்ளாச்சி (தனி) :

எம்.தியாகராஜன் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,26,056
பதிவான வாக்குகள் - 5,78,887
செல்லாதவை - 24,612

எம்.தியாகராஜன்	அதிமுக	-	3,06,083
கோவை தங்கம்	தமாகா	-	2,10,682
ஆர்.ஈஸ்வரவேலு	இதேகா	-	31,967
எம்.ஜோதிராஜ்	புத	-	4,926
கே.மணி	சுயே	-	617

22. பழனி : ஏ.கணேசமூர்த்தி (ம.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 11,17,611
பதிவான வாக்குகள் - 6,26,656
செல்லாதவை - 18,606

ஏ.கணேசமூர்த்தி	மதிமுக	-	2,86,300
எஸ்.கே.கார்வேந்தன்	தமாகா	-	2,58,863
கே.எஸ்.வேணுகோபால்	இதேகா	-	61,089
என்.பழனிசாமி	சுயே	-	1,084
எஸ்.பொன்னுசாமி	சுயே	-	714

23. திண்டுக்கல் :

சி.ஸ்ரீனிவாசன் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 11,43,880
பதிவான வாக்குகள் - 6,11,642
செல்லாதவை - 18,469

சி.ஸ்ரீனிவாசன்	அதிமுக	-	2,76,106
என்.எஸ்.வி.சித்தன்	தமாகா	-	2,60,907
லதா	எம்.அதிமுக	-	35,119
சி.சந்தானகிருஷ்ணன்	புத	-	19,176
ஆர்.பாஸ்கரன்	சுயே	-	808
எஸ்.காளிமுத்து	சுயே	-	540
பி.சங்கர்	சுயே	-	295
கே.பழனிச்சாமி	சுயே	-	222

24. மதுரை :

சுப்பிரமணியன்சுவாமி (ஜனதா) வெற்றி

மொத்த வாக்காளர் - 13,49,265
பதிவான வாக்குகள் - 6,76,204
செல்லாதவை - 18,553

சுப்பிரமணியன்சுவாமி	ஜனதா	-	2,66,202
ஏ.ஜி.எஸ்.ராம்பாபு	தமாகா	-	2,45,305
பி.மோகன்	இ.கம்யூ(மா)	-	1,10,862
டி.பாண்டியன்	இதேகா	-	17,507
திருமதி ரஜினி	சுயே	-	5,485
எஸ்.ராமசந்திரன்	சுயே	-	4,977
ஆர்.பழனிச்சாமி	சுயே	-	4,764
ஆர்.வி.சேஷாச்சாரி	ஏஜேபிபி	-	967
கே.ஆர்.சௌந்தர பாண்டியன்	சுயே	-	663
எஸ்.பி.தளபதி பாலு	சுயே	-	498
டி. தனசேகர்	டிஎல்ஜே	-	421

25.பெரியகுளம் :

ஆர்.முத்தையா (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,79,256
பதிவான வாக்குகள் - 6,16,663
செல்லாதவை - 14,422

ஆர்.முத்தையா	அதிமுக	-	3,19,594
ஆர்.காந்திமதி	திமுக	-	2,48,931
சி.முக்கையா	புத	-	20,217
பி.வி.கே. தேவேந்திரன்	சுயே	-	5,549
எம்.வீரபிரகாஷ்	இதேகா	-	4,198
பி.முருகன்	சுயே	-	1,231
கே.பழனிச்சாமி	சுயே	-	1,130
எஸ்.முருகராஜ்	சுயே	-	469
கே.இளமுருகன்	சுயே	-	252
ஏ.காமாட்சி	சுயே	-	223
வி.முருகன்	சுயே	-	200
ஏ.மூவேந்தன்	சுயே	-	147
ஆர்.வீரசாமி	சுயே	-	100

26.கரூர் : எம்.தம்பிதுரை (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 11,30,361
பதிவான வாக்குகள் - 6,75,172
செல்லாதவை - 25,292

எம்.தம்பிதுரை	அதிமுக	-	3,27,480
கே.நாட்ராயன்	தமாகா	-	2,83,807
கே.பி.சண்முக சுந்தரம்	இதேகா	-	30,157
எஸ்.காமராஜ்	புத	-	5,449
ஆர்.எம்.ராமசாமி	சுயே	-	522
பி.கண்ணன்	சுயே	-	484
பி.சுந்தரராஜ்	சுயே	-	474
வி.மாரிமுத்து	ராஜத	-	411
பி.முருகேசன்	சுயே	-	403
வி.மனோகர்	சுயே	-	320
எஸ்.செல்வராஜு	சுயே	-	206
கே.அசோகன்	சுயே	-	167

27.திருச்சிராப்பள்ளி :

ரங்கராஜன் குமாரமங்கலம் (பா.ஜ.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 11,78,260
பதிவான வாக்குகள் - 6,47,499
செல்லாதவை - 16,694

ரங்கராஜன் குமாரமங்கலம்	பாஜக	-	3,05,233
எல்.அடைக்கலராஜ்	தமாகா	-	2,93,778
சுபா சோமு	இதேகா	-	23,747
கே.சச்சிதானந்தம்	புத	-	4,979
எம்.கலீல்	சுயே	-	1,133
அழகிய மணவாளன்	சுயே	-	749
எஸ்.சண்முகசுந்தரம்	ராஜத	-	612
ஜி.ஆசிமுதீன்	சுயே	-	373
எஸ்.ஆர்.ராமு	சுயே	-	201

28.பெரம்பலூர் (தனி) :

பி.ராஜரெத்தினம் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,25,125
பதிவான வாக்குகள் - 6,61,506
செல்லாதவை - 22,306

பி.ராஜரெத்தினம்	அதிமுக	3,41,118
ஏ.ராஜா	திமுக	2,80,682
பி.வி.சுப்பிரமணியன்	இதேகா	16,579
செல்வி எம்.செல்வாம்பாள்	ராஜத	821

29. மயிலாடுதுறை :

கே.கிருஷ்ணமூர்த்தி (த.மா.கா) வெற்றி

மொத்த வாக்காளர் - 9,90,364
பதிவான வாக்குகள் - 6,43,835
செல்லாதவை - 17,565

கே.கிருஷ்ணமூர்த்தி	தமாகா	2,86,098
பி.டி.அருள்மொழி	பாமக	2,43,642
மணிசங்கரஐயர்	சுயே	72,911
ஆர்.திருநாவுக்கரசு	இதேகா	15,265
டாக்டர் பாலு	புத	2,189
கே.பாண்டியன்	ராஜத	2,120
எஸ்.பாலசுந்தரம்	இ.கம்(மார்க் லெ)	1,965
ஏ.தயாளன்	பசக	1,528
டாக்டர் ஏ.ஷேக் தாவுத்	சுயே	552

30. நாகப்பட்டினம் (தனி) :

எம்.செல்வராசு (இந்திய கம்யூ.) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,21,037
பதிவான வாக்குகள் - 6,61,129
செல்லாதவை - 22,063

எம்.செல்வராசு	இந்திய கம்யூ.	3,75,589
டாக்டர் கே.கோபால்	அதிமுக	2,44,286
எம்.தியாகராஜன்	இதேகா	15,837
ஜி.ஜீவானந்தம்	புத	3,354

31. தஞ்சாவூர் :

எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் (தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,13,609
பதிவான வாக்குகள் - 6,45,683
செல்லாதவை - 19,603

எஸ்.எஸ்.பழனிமாணிக்கம்	திமுக	3,24,344
எல்.கணேசன்	மதிமுக	2,76,140
மதியழகன்	இதேகா	23,109
திருமதி எஸ்.உமா	சுயே	1,296
கே.சோழமன்னார் கனகராஜா	சுயே	1,191

32. புதுக்கோட்டை :

ராஜா பரமசிவம் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 11,84,609
பதிவான வாக்குகள் - 7,91,405
செல்லாதவை - 18,022

ராஜா பரமசிவம்	அதிமுக	2,88,072
பி.என்.சிவா	திமுக	2,57,552
எஸ்.திருநாவுக்கரசு	எம்.அதிமுக	2,26,416
எம்.ஆர்.சொக்கலிங்கம்	சுயே	895
சி.வேலப்பன்	சுயே	448

33. சிவகங்கை : பி.சிதம்பரம் (த.மா.கா) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,76,206
பதிவான வாக்குகள் - 6,15,492
செல்லாதவை - 21,456

பி.சிதம்பரம்	தமாகா	3,03,854
கே.காளிமுத்து	அதிமுக	2,44,713
எம்.கௌரிசங்கரன்	இதேகா	34,114
திருமதி சாந்தி உடையப்பன்	சுயே	6,847
இ.நல்லசாமி	ராஜத	3,839
பி.குணசேகரன்	சுயே	389
ஜி.அண்ணாதுரை	சுயே	280

34. ராமநாதபுரம் :

வி.சத்தியமூர்த்தி (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,78,503
பதிவான வாக்குகள் - 6,13,150
செல்லாதவை - 22,328

வி.சத்தியமூர்த்தி	அதிமுக	2,58,978
எஸ்.பி.உடையப்பன்	தமாகா	2,34,886
டாக்டர்(திருமதி)கே.நசீர்பர்வீன்	புத	53,542
வி.ராஜேஸ்வரன்	இதேகா	24,942
ஆர்.கார்த்திகேயன்	சவாக	17,569
ஆர்.முத்து கணபதி	சுயே	905

35. சிவகாசி : வைகோ (ம.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 12,03,627
பதிவான வாக்குகள் - 7,81,757
செல்லாதவை - 16,840

வைகோ	மதிமுக	3,87,694
வி.அழகிரிசாமி	இந்திய கம்யூ.	2,52,771
எஸ்.சத்தியமூர்த்தி	புத	1,06,726
கே.ராஜேந்திரன்	இதேகா	9,745
கே.மாரியப்பன்	சுயே	1,922
சி.பொன்னுசாமி	சுயே	1,756
எம்.மன்மதன்	சுயே	1,021
பி.எல்.டி.தியாகராஜன் (எ) யோககண்ணன்	சுயே	793
எம்.குருசாமி	சுயே	639
ஏ.ராஜசேகர்	ராஜத	627
எஸ்.வி.ரெங்கநாயகம்	சுயே	583
வி.கண்ணன்	சுயே	369
ஆர்.பிரமசாமி	சுயே	271

36. திருநெல்வேலி :

ஆர்.ஜனார்தனன் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,75,467
பதிவான வாக்குகள் - 6,09,616
செல்லாதவை - 11,602

ஆர்.ஜனார்தனன்	அதிமுக	2,47,823
ஆர்.சரத்குமார்	திமுக	2,40,919
டாக்டர் ஏ.சேவியர் செல்வ சுரேஷ்	புத	86,419
ஜி.ஆர்.எட்மண்ட்	எம்.அதிமுக	16,789
கிருஷ்ணனந்தன் யாதவ்	சுயே	3,795
பி.பாஸ்கர்	சுயே	1,100
கே.நகைமுகன்	ராஜத	821
எஸ்.வேல்முருகன்	சுயே	348

37. தென்காசி (தனி) :

எஸ்.முருகேசன் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,14,494
பதிவான வாக்குகள் - 6,62,154
செல்லாதவை - 16,663

எஸ்.முருகேசன்	அதிமுக	2,70,053
எம்.அருணாசலம்	தமாகா	1,72,736
டாக்டர் கே.கிருஷ்ணசாமி	புத	1,23,592
வி.செல்வராஜ்	இதேகா	77,285
கே.லக்ஷ்மணன்	சுயே	1,059
டி.பாலமுருகன்	சுயே	716

38. திருச்செந்தூர் :

ஆர்.ராமராஜன் (அ.தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,14,366
பதிவான வாக்குகள் - 5,46,862
செல்லாதவை - 11,225

ஆர்.ராமராஜன்	அதிமுக	2,64,290
ஆர்.தனுஷ்கோடி ஆதித்தன்	தமாகா	2,17,435
குமரி அனந்தன்	இதேகா	38,291
ஏ.பக்கிரிராஜ் சதுப்	சுயே	11,408
காலந்தி பி.சந்திரசேகரன்	பசக	3,166
என்.இராஜகோபாலன்	சுயே	692
எஸ்.தேவதாசன் ராஜா	சுயே	355

39. நாகர்கோவில் :

என்.டென்னிஸ் (த.மா.கா) வெற்றி

மொத்த வாக்காளர் - 10,28,393
பதிவான வாக்குகள் - 5,99,670
செல்லாதவை - 6,494

என்.டென்னிஸ்	தமாகா	2,96,611
பி.ராதாகிருஷ்ணன்	பாஜக	2,67,426

1998 பொதுத்தேர்தல் - பங்கேற்ற கட்சிகள் பெயர் விளக்கம்

1.	திமுக	திராவிட முன்னேற்றக் கழகம்
2.	தமாகா	தமிழ் மாநிலக் காங்கிரஸ்
3.	அதிமுக	அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
4.	இகம்யூ	இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
5.	பாமக	பாட்டாளி மக்கள் கட்சி
6.	இதேகா	இந்திய தேசிய காங்கிரஸ்
7.	மதிமுக	மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்
8.	பாஜக	பாரதிய ஜனதா கட்சி
9.	ஜத	ஜனதா தளம்
10.	இகம்யூ(மா)	இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
11.	இகம்யூ(மாலெ)	இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)
12.	அதமுக	அனைத்திந்திய தமிழக முன்னேற்ற கழகம்
13.	சக	சமதா கட்சி
14.	புத	புதிய தமிழகம்
15.	பசக	பகுஜன் சமாஜ் கட்சி
16.	ராஜத	ராஜ்ய ஜனதா தளம்
17.	சிசேக	சிவசேனா கட்சி
18.	சவாக	சமாஜ்வாடி கட்சி

பி.எஸ்.ஸ்டெயின்லாஸ்	இதேகா	27,821
ஏ.அய்யப்பன்	சுயே	904
யூ.நாகூர் மீரான் பீர் முகமது	சுயே	287
பி.ஜோசப்	சுயே	127

தமிழ்நாடு - சட்டப்பேரவை இடைத்தேர்தல் 1998

126. குன்னூர் (தனி) : எம்.ரங்கநாதன் (தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 1,69,753
பதிவான வாக்குகள் - 99,268
செல்லாதவை - 5,140

எம்.ரங்கநாதன்	திமுக	47,850
எஸ்.கருப்புசாமி	அதிமுக	37,945
பி.ஆறுமுகம்	இதேகா	7,189
ஜி.சித்தன் (எ) குருசாமி	அதமுக	1,144

204. அருப்புக்கோட்டை :

தங்கம் தென்னரசு (தி.மு.க) வெற்றி

மொத்த வாக்காளர் - 1,67,272
பதிவான வாக்குகள் - 1,10,183
செல்லாதவை - 7,269

தங்கம் தென்னரசு	திமுக	40,223
வி.எஸ்.பஞ்சவர்ணம்	அதிமுக	38,272
பி.டி.மாணிக்கம்	புத	12,484
கே.பழனிசாமி	சுயே	9,525
கே.சந்திரன்	இதேகா	1,329
ஏ.சமயன்	சுயே	386
டாக்டர் கே.பால்மராஜன்	சுயே	262
டி.கே.கருத்தபாண்டியன்	சுயே	219
எம்.மலைச்சாமி	சுயே	99
எம்.திருநாவுக்கரசு	சுயே	64
இ.பூமிநாதன்	சுயே	51



நெல்லை மாவட்டத்தில் வறட்சியால் வாடும் 72 கிராமங்களுக்குத் தாமிரபரணி தண்ணீர் !

முதலமைச்சர் கலைஞர் ஆணை

சங்கரன்கோவில் - ஆலங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே சங்கரன்கோவில் நகராட்சி, ஆலங்குளம் ஒன்றியம், குருவிகுளம் ஒன்றியம், நீலிதநல்லூர் ஒன்றியம், சங்கரன்கோவில் ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களில் பல கிராமங் களுக்குத் தாமிரபரணி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது; ஆனால், ஒவ்வொரு ஒன்றியத்திலும் சில கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன. விடப்பட்ட கிராமங்களுக்குப் புதிதாகத் தாமிரபரணி தண்ணீர் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. ஆலடி அருணா அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடத்தில் ஆறு மாதங்களுக்கு முன்பே விண்ணப்பித்திருந்தார்.

அதன் அடிப்படையில், சேந்தமங்கலம் தாமிரபரணி குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.6 கோடியே 69 இலட்சங்கள் ஆகும். இதனைப் பராமரிக்க ஒவ்வொரு ஆண்டும் ஆகும் செலவு ரூ.10 இலட்சத்து 38 ஆயிரம் ஆகும். இதற்கான உத்தரவை அரசு (4.3.1998) அன்று பிறப்பித்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், புதிதாகத் தாமிரபரணியில் ஒரு கிணறு தோண்டப்படுகிறது. நீலிதநல்லூர் ஒன்றியம், ஆலங்குளம் ஒன்றியம், மானூர் ஒன்றியம், சங்கரன்கோவில் ஒன்றியம், குருவிகுளம் ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களில் விடப்பட்ட 72 கிராமங்களுக்குத் தாமிரபரணி தண்ணீர் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

மேலும், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள ஆண்டிப்பட்டி ஊராட்சி, பூலான் குளம் ஊராட்சி, பெத்தநாடார்பட்டி ஊராட்சி ஆகியவற்றிலுள்ள கிராமங்களும் இந்தத் திட்டத்தில் இணைக்கப் பட்டுள்ளன. இந்தத் திட்டத்திற்கான வேலை மிக விரைவில் துவக்கப்படும். இதனை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. ஆலடி அருணா அவர்கள் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்தத் திட்டத்திற்கு அனுமதி அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார். ●



வெள்ளைப் பூண்!

-சு.சமுத்திரம்

“சோசியம் பாக்கலியோ... சோசியம்...”

கமர்க்கட்டு, வேர்க்கடலை, வெள்ளரிக்காய் வகையறாக்களை விற்பது போலத்தான், மாரியம்மாவின் குரல் ஒலித்தது. போதாக்குறைக்கு இந்த நொறுக்குத் தீனிகளைச் சுமப்பது போன்ற ஒரு சணல் பை, அவளது இடதுகரத்தில் பிடிபட்டிருந்தது. வெறும் பை தான்...ஆனாலும் சுமக்க முடியாததுபோல் அவள் பிடித்த தோரணை அப்படி. சோசியத்தை விற்று அரிசி, பருப்பு, காய்கறிகளை வாங்கிப் போவதற்காக அந்தப் பையைக் கொண்டு வந்திருக்கிறாள்.

இந்தப் பையை ஒரு கையிலும், ‘சக்கம்மா பிரம்பை’ இன்னொரு கையிலும் பிடித்தபடி, மாரியம்மா அந்தக் கடற்கரைப் பரப்பைத் தாண்டினாள். கடல் மண்ணுக்கு வரப்பைக் கட்டியதைப் போன்ற இருக்கைச் சுவரைக் கடந்து, அதற்கும் தார்ச்சாலைக்கும் இடையேயுள்ள பிளாட்பாரத்தில் சாய்வாக நின்றபடி வாகனக்காரர்களையும், இருக்கைச் சுவரில் இருந்தவர்களையும் நோட்டமிட்டாள். வேகவேகமாக நடக்கப் போனாள். ஆனாலும் உடல், மனதிற்கு ஒத்துழைக்க மறுத்து, மூச்சு முட்டலாய் அல்லாடியது. கால்கள் தாறுமாறாக நின்றன. இந்தக் கடற்கரையின் உள்வளாகத்தை மும்முறை சுற்றி வந்துவிட்டாள். இவளது அம்பது வயதிற்கு இது அதிகம்தான். குறுக்கும் நெடுக்குமாகச் சுற்றி கும்பல், கும்பலாக இருந்தவர்களுக்கு முன்னாலும், ‘ஒருடல் ஈருயிராய்’ பின்னிப் பிணைந்தவர்களின் பின்னாலும் நின்றதில் கால்கள் வலி கொடுத்தன...கண்கள் சொருகின... ஆனால் அவள் சோசியத்திற்கு உரியவர்கள் அகப்படவில்லை. கடலோர ஈரமண்ணில் உட்கார்ந்து ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கும் குறுந்தாடி இளைஞர்கள், வாழ்ந்த வாழ்க்கையை உருவகப்படுத்தி, அதை எதிரே முன்னிறுத்தி, அதைத் தீட்டித் தீர்ப்பதுபோல் தனக்குந்தானே பேசிக்கொள்ளும் நடுத்தரங்கள், கைக்கடிகாரத்தில் ஒரு கண்ணும், பின்பக்கம் மறு கண்ணும் போடும் இளம் பெண்கள் - ஆகிய அத்தனை பேரும், ஏனோ சொல்லிவைத்தது போல் மாரியம்மாவை ஏறிட்டும் பார்க்கவில்லை... இதனால்தான் சாலைப் பக்கம் வந்துவிட்டாள்.. நடக்க ரொம்பவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது... இருந்தாலும் நடந்துதான் ஆக வேண்டிய நிர்பந்த நிலை...

மாரியம்மாள், உடலும் நோவாமல், மனதும் தளராமல், இந்த இரண்டுக்கும் சமரசம் செய்வதுபோல் நடந்தாள். முக்கால் கிலோ மீட்டர் தூரமுள்ள நீள, நெடிய, இருக்கைச் சுவற்றில் இருந்த சின்னஞ்சிறிய விடலிகளைக் குறிவைத்தாள். இவர்களில் பலர் ஆணும் - பெண்ணுமாய் ‘வாடா-போடா’ என்று பேசியபடியே சினிமா ஸ்டைலில் இடையையோ, உடையையோ யதார்த்தமாய் பற்றியிருப்பவர்கள். இவர்கள், ‘யார்வேணுமுன்னாலும் பார்க்கலாம்’ என்பது மாதிரி காதலில் ‘கன்பார்ம்’ ஆனவர்கள்... அல்லது காதலாவது, கத்திரிக்காயாவது என்ற மனோபாவத்தில், ஒருவருக்கொருவர் ‘கம்பெனி’ கொடுப்பவர்கள்; இந்த இரு சாராருமே சோசியத்தைச் சீண்டாதவர்கள்.

> இவளது சகாக்கள்
> சக்கம்மா
> பிரம்புகளையும்
> மூலையில் போட்டு
> விட்டு, மண்வெட்டி,
> கடப்பாறைகளை
> கைகளில்
> எடுத்தபோதுகூட,
> இந்தக் கைக்கோல்
> இவளைக்
> கைவிடவில்லை... . . .

மாரியம்மா, கிட்டத்தட்ட ஓட ஆரம்பித்தாள். ஒரு மோட்டார் பைக்கிலிருந்து ‘சின்னஞ்சிறிசுகள்’ இறங்கின... அவர்கள் முன்னால் போய் நின்றாள். “சோசியம் பார்க்கிறீகளா?” என்றாள். அந்தப் பெண், ஆளைவிடு என்பதுமாதிரி அவளைப்பார்த்து, பாசாங்குத்தனமாய்க் கும்பிடு போட்டாள்... அவளைக் கூட்டிவந்த, அல்லது அவளால் கொண்டுவரப்பட்ட நவநாகரீக இளைஞன், மாரியம்மாவை அருவெறுப்பாய்ப் பார்த்தபடியே, கைகளைத் துடுப்புப்போல் அங்குமிங்குமாய் ஆட்டி ‘கோ... கோ’ என்று ஆங்கிலத்தில் விரட்டினான்.

மாரியம்மாவிற்கு, என்னவோ போலிருந்தது. கடற்கரை வேலிச்சுவரில் பொத்தென்று உட்கார்ந்தாள். பக்கத்தில் இருந்த பளபளப்பு மனிதர், எழப்போனபோது இவளே எழுந்து ஓர் லுங்கிக்காரர் பக்கம் போய் உட்கார்ந்தாள். கால்களை மடித்துப் போட்டு செருப்பு இல்லாத பாதங்களில் கண்ணாடித் துகள்கள் போல் குத்திய கடல் மண் துகள்களைத் தட்டிவிட்டாள். சிறுவர்களின் கால்பந்து,

கைப்பந்தாட்டங்களால், உடம்புக்குள் படிந்த மண் துகள்களின் அரிப்பைத் தாங்க முடியாமல், முந்தானையைத் தூக்கி, தலைக்குமேல் நிறுத்தி, அந்த 'மறைப்பில்' சட்டை மாதிரியான ஜாக்கெட்டைத் தளர்த்தி விட்டாள்... தாரில் நெய்தது போன்ற முரட்டுச் சேலை... கொண்டையற்ற தலை... பாதி கழுத்தை மறைத்து உச்சியில் சிலிர்த்த முடி... அந்தக்காலத்து போலீஸ் சிகப்புத் தொப்பியில் கருப்பு வடிவம் மாதிரியான மகுடத் தலை... காதுகளில் வெள்ளைச் சுண்ணாம்பு தடவியது போன்ற கம்மல்கள்...

மாரியம்மாவிற்கு, இன்னும் எழுந்திருக்கத் தெம்பில்லை.. தானும் ஒரு வகையில் பிச்சைக்காரிதானோ என்ற எண்ணம், மனதை வருத்தியது. கையில் உள்ள சக்கம்மா பிரம்பை வெறுமையாகப் பார்த்தாள்... ஒரு கோலாட்டுக் குச்சியின் பாதிக் கனபரிமாணம் கொண்ட உருண்ட கோல்... இரு புறமும் வெள்ளிப் பூண்களால் கோல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. காலம் கொடுத்த மூப்பைக் காட்டும் சிராய்ப்புகள்...

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கிராமத்து சக்கம்மா கோவிலில், ஈரப் புடவையோடும், இடுப்பில் வேப்பிலைக் கொத்துக்களோடும், கற்பூர, அக்னி சாட்சியாக, தாத்தா ஒப்படைத்த கோல்... இந்தக் கோல்தான், அவளைக் கோவில் திருவிழாக்களுக்கும், வாரச் சந்தைகளுக்கும், கோர்ட்டு வளாகங்களுக்கும் வெற்றிகரமாகக் கூட்டிச் சென்றது. அறுவடை காலத்தில் வயல் வரப்புகளில், அவலும், வெல்லமும், உளுந்தும், நெல்லுக்குப் பண்டம் மாற்றம் செய்யும் கூடைக்காரிகளோடு போட்டியிட்டு அவர்களுக்குக் கிடைத்ததைவிட ஒருபடி நெல்லை அதிகமாக வாங்கிக் கொடுத்த பிரம்பு; வாலிப வனப்பில் இவள் சுடர்விட்டபோதும், வம்பர்களைக்கூட பயபக்தியோடு பார்க்க வைத்த சோசியக் கோல். வீடியோ-ஆடியோ திடீர்ப் படையெடுப்பில் கிராமங்களில் மயான புத்திரன் உள்ளிட்ட இருபத்தொரு தேவதைகளும் காணாமல் போனபோது, இவளது சகாக்கள் சக்கம்மா பிரம்புகளையும் மூலையில் போட்டுவிட்டு, மண்வெட்டி, கடப்பாறைகளைக் கைகளில் எடுத்தபோதுகூட, இந்தக் கைக்கோல் இவளைக் கைவிடவில்லை... இவளைச் சென்னைக்கு அழைத்துவந்து ஒரு குடிசையைச் சொந்தமாகப் போடவைத்தது. இறப்புச் சல்லடையில் எஞ்சி நிற்கும் இரண்டு பெண்களையும் ஒரு பையனையும் கௌரவமாக வாழ வைத்த பிரம்புதான்...

ஆனாலும் கடந்த ஒரு மாதமாய் இதுக்கு என்னமோ ஆயிடுச்சு... இல்ல ஜனங்களுக்கு என்னவோ ஆயிடுச்சு...

மாரியம்மாள் எழுந்தாள்... கண்காட்டும் தொலைவில் ஒரு மோட்டார் பைக்கில் - மேலும், கீழுமாய் வியாபித்திருந்த இளவட்டங்களிடம் போய், பழக்கப்பட்ட அஸ்தரத்தை பிரயோகப் படுத்தலாமா என்று தன்னை மீறி நினைத்தாள்... அந்த அஸ்திரம் பணத்தைக் கொண்டுவரும். கூடவே தொழில் கௌரவத்தையும் குலைத்து விடும்.

போன வாரம், மெரினா கடற்கரையில் தனக்குக் கிடைத்த கசப்பான அனுபவத்தை, பத்து படித்துக் கொண்டிருக்கும் தன் மகன் மருதுவிடம் சொன்னபோது

"எம்மா நீ சோசியம்... கீசியம்... பார்த்துக் கிழிச்சது போதும்... நான் கடலை வித்து உன்னைக் காப்பாத்துறேன்" என்றான். ஆனாலும், இவள்தான் 'அடி செருப்பால; ஒப்பனமாதிரி முட்டாளா இருக்கப் போறியா?' என்று அடக்கினாள். ஆனால் மறுவாரம், இவள் உடம்புக்கு முடியாமல் படுத்தபோது, மகன் மருது, கடலைப் பெட்டியோடு வந்து ஆசீர்வாதம் கேட்டான். இவளால் அழத்தான் முடிந்தது. அனுமதி கொடுக்காமல் இருக்க

முடியவில்லை. சும்மா சொல்லப்படாது. மருது, தினமும் இருபது ரூபாய் கொண்டுவந்தான்.. வயது வந்த இரு மகள்களும் அரசு குடியிருப்பு வீடுகளில் பத்துப் பாத்திரம் தேய்த்தும், துணி துவைத்தும், பழைய சோற்றோடு வந்தார்கள்.. இவள் பழைய சகவாசத்தில் ஒரு நாள் இந்த மத்திரக் கோலை எடுத்தபோது, உழைப்பாளி மகன் பார்த்த பார்வையில் இந்தக் கோல் தானாய் விழுந்து தரைதட்டியது.

மாரியம்மாள், நினைவுகளைக் கலைத்தாள்; எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தாள். இரவு எட்டிப் பார்த்தது. தொலைவில் உள்ள கடலின் இமைபோல் அதன் மேல்பக்கம் ஆகாயம் கருத்திருந்தது. அதற்கு மேல் கடலவனின் நெற்றி போன்ற செவ்வகச் செவ்வானம், நட்சத்திரங்களை மினிக்கி மினிக்கிக் காட்டியது... இவற்றிற்கு மேலே பறப்பது போன்ற பிரமையுடன் ஒரு விமானம் இரட்டை நட்சத்திரக் கண்களை மூடி மூடித் திறந்தபடி பறந்தோடியது.

சோசியக்காரி யோசித்தாள். வீட்டுக்குத் திரும்பலாமா? எப்படி முடியும்? கைநிறையப் பணம், கொண்டுவந்த மருது முந்தாநாள் முதுகு வீங்கி வந்தான். இவனைக் கட்டிப் பிடித்துக் கூப்பாடு போட்டான். சுண்டல், வேர்க்கடலை முதலாளி, இவன் பாதி சரக்கை விற்காமல் வந்தான் என்று தலையில் ஓங்கி குட்டியிருக்கிறான். இந்த மாதிரி சமயங்களில் மற்ற பயல்கள் பல்லை இளிப்பதுபோல் இளிக்காமல், இவன் பல்லைக் கடித்து, முதலாளியை முறைத்துப் பார்த்திருக்கிறான்... முதலாளி முன்னெச்சரிக்கைக்காரன், இவனைப் போல், மற்ற பையன்களும் முறைத்துவிடக் கூடாதே என்ற பயத்தில் பயங்கரவாதியாகி, மருதுவை இரும்பு அகப்பையாலேயே செம சாத்து சாத்திவிட்டான். அவனைத் தேடிப்பிடித்து இவள் நியாயம் கேட்டால், 'உன்னால ஆனதைப் பார்' என்கிறான். இப்போதெல்லாம் கார், பங்களா, தொழிற்சாலை, தோட்டம், துரவு வைத்திருப்பவங்க மட்டும் முதலாளி இல்லை... நாலுபேரைக் கீழே வேலைக்கு வைத்திருப்பவன் எல்லாம் முதலாளிங்க. ஒரே அடாவடிதான். இந்த அடாவடியில் பிள்ளை படுத்த படுக்கையாகக் கிடக்கான். அடியின் வலியைவிட அம்மாவிடம் சவால் விட்டானே 'ஆனதைப்பார்' என்று அந்தப் பயலைப் பரீட்சித்துப் பார்க்க முடியலயே என்ற இயலாமை.. இதுவும் போதாதென்று, மகள்கள் வேலைபார்த்த, குடியிருப்பு முதலாளிகள், வெளியில் விடுமுறையில் போய்விட்டார்கள். பொண்ணுகளை விவரம் தெரியாத வீடுகளுக்கு அனுப்பமுடியாது. சின்னவனை, ஒரு தடவை அப்படி அனுப்பி பட்டபாடு போதும். இப்போதைக்குப் பழைய சோறும், ஊசிப்போன சாம்பாரும் கிடைக்காது. பிள்ளைகள் குலைப்பட்டினியாய்க் காத்திருப்பார்கள்... பேசாமல் இந்த வெள்ளிப் பூணை மார்வாடியிடம் அடகு வைக்கலாமா?... அதவிட நம்மயே அடகுவைக்கலாம்... 'எம்மாடி' இந்த நினைப்பே வரக்கூடாது.

மாரியம்மாவுக்கு, நினைவுகள் நிகழ்வுகளை ஏற்படுத்தத் தூண்டின. யானை பலத்தோடு நடந்தாள். மூன்றாவது சுற்றாக, அந்தக் கடல் மண் பரப்பைக் குறுக்கும் நெடுக்குமாய்க் கால்களால் உழுதாள். மணல் திட்டில் உள்ள 'உங்கள் நண்பன்' கூண்டிற்குக் கும்பிடு போட்டு, அங்கிருந்து தாவி, குடைராட்டினம் பக்கம் கூவி, விளையாட்டு கிளிக்கூண்டிற்குப் பக்கம் தவமிருந்து, பலூன்களைச் சுடும் துப்பாக்கி "வீரர்கள்" பக்கம், அவர்களை வியப்பது போல் நின்று, பிறகு நடந்து நடந்து, படகுகளின் பக்கம் பாய்ந்து, மீண்டும் கடற்பக்கமிருந்து கரைப்பக்கம் நோக்கி பெருமூச்சோடு நடந்தாள். குறி சொல்வதற்காக நடந்தவள், இப்போது குறிக்கோளை மறந்து எதையோ ஒன்றை உதறப் போவது போல் திமிறித் திமிறி நடந்தாள். கிட்டத்தட்ட ஒரு உருவத்தை மிதிக்கப் போய்விட்டாள். எப்படியோ, கால்களைக் கடல் மண்ணில் நங்கூரம் ஊன்றி அந்த உருவத்தைப் பார்த்துவிட்டாள். அது ஒரு இளம் பெண். அவளோ முன்பக்கம் இரு கரங்களாலும், மண்ணைத் தோண்டித் தோண்டி அங்குமிங்குமாய் வீசிக் கொண்டிருந்தாள். அவள் பறித்த குழியில் அவள் கண்களைப் போலவே நீர்க் கசிவு...

இந்தப்பணம் மனசுல தங்காது. மனசுல தங்காத எதுவும் வயித்துல தங்காது. இது வெள்ளிப்பூண் போட்ட பிரம்பு. என்னைக் கவனிச்சுக்கும்.

மாரியம்மாவுக்குப் புரிந்துவிட்டது. இது காதல் தோல்வி... அல்லது கட்டியவன் கொடுமை... கழுத்தில் மஞ்சள் கயிறு இல்லை... அலங்கமலங்கப் பார்க்கும் கண்களைப் பார்த்தால் இது காதல் தோல்விதான்...

மாரியம்மா, அவளது 'மண்வாசனை' கவனத்தைத் திருப்புவதற்காக உரத்துக் குரலிட்டாள்.

"சோசியம் பாரு தாயீ... நடந்தது நடக்கிறது நடக்கப்போகிறது... உனக்கு வாற கணவன் நல்லவனா... கெட்டவனா... பொறக்கப் போறது ஆணா.. பெண்ணா... இந்த வருசம் பரீட்சையில் பாஸாயிடுவியா இல்லே பெயிலாயிடுவியா... சொத்து வாங்க யோகம் இருக்கா... இல்லையா... வெளிநாடு செல்ல வாய்ப்பு இருக்கா. இல்லையா... காதல் கல்யாணமா... கட்டாயத் திருமணமா... ஆயுசப்பத்திய சந்தேகமா... கைரேகை எல்லாம் காட்டும் - உன்னைத்தான் தாயி..."

அந்தப் பெண் முதலில் மருண்டு பார்த்தாள்... சல்வார் கமீஷ்காரி... கழுத்தைச் சுற்றிய துப்பட்டா துணி சுடர் விட்டது... காது வளையங்கள் ஒளிவிட்டன... கைக்கடிகாரம் டாலடித்தது. இருபத்திமூன்று வயது தேறலாம்.

"ஒன்னத்தான் தாயீ!"

"எனக்கு எந்த இழவும் வேண்டாம்... வேனுமுன்னா இந்தக் கையை வெட்டிப்போடு..."

"அபசகுனமா பேசாத தாயீ... உனக்கு நல்ல காலம் பொறக்கப் போறதாலதான் "சக்கம்மா தேவி" என்னை இங்கே அனுப்பிவச்சிருக்காள்.."

அந்தப் பெண், மாரியம்மாவைச் சிநேகிதமாய்ப் பார்த்தாள். கண்ணிமை இருட்டிலும் உருட்டிப் பார்த்தால் சின்னஞ்சிறு ஒளிக்கதிர் தென்படுமே, அதுபோன்ற ஒரு மெலிந்த புன்னகை. ஈரக் கைகளைப் பிட்டத்தில் துடைத்துவிட்டு வலது கையை நீட்டினாள்.

"தட்சணை கொடு தாயீ! அப்போதுதான் தாட்சாயிணீ பேசுவாள்..."

"எவ்வளவு?"

"இருபத்தொரு ரூபாய் முப்பது காசு... தாயீ அதுக்கு மேலே உன் இஷ்டம் தாயீ".

அந்தப் பெண் கொடுத்த இருபது ரூபா நோட்டை உற்றுப் பார்த்தும, சில்லறை நாணயங்களை எண்ணாமலும் மாரியம்மாள் தன் சுருக்குப் பைக்குள் போட்டுக்கொண்டு இடுப்பில் சொருகிக் கொண்டாள். தட்சணையை இரு மடங்காக கூட்டியது வருத்தம்தான்... 'விலாவாரியாகச் சொன்னால் போச்சு...'.

அந்தப் பெண்ணின் உள்ளங்கையில் 'சக்கம்மா பிரம்பை' பட்டும் படாமலும் படர விட்டபடி, மாரியம்மா இசை நயத்தோடு இழுத்து இழுத்துப் பேசினாள்.

"சக்கம்மா தேவியே சடுதியில் வரவேணும்... கோட்டை மாரியம்மா குதூகலமாய் வரவேணும்... மலையாள பகவதி மாறாமல் வரவேணும்... பொய் சொல்லக்கூடாது... மெய் சொல்லவேணும்...

"ஒன்னோட மனசு பொன்னான மனசு - பிறரோட கஷ்டத்தப் பார்த்தால் கண்ணீர் சிந்துவே:, நஷ்டத்தப் பார்த்தால் ஈடு கட்டுவே. ஆனாலும் உன்னால உயர்ந்தவர்கள் இப்போதோ நன்றி மறந்தார்கள்...நம்பிக்கை துரோகிகள்... கலங்காதே! மலங்காதே! நீதான் ஜெயிப்பே... ஒரு மாத காலத்தில் உருண்டோடும் கஷ்டங்கள்... கிரகாதிகளில் விடுபட்டு கீர்த்தி அடைவே..."

மாரியம்மா வழக்கம்போல் பொதுப்படையாகக் குறி சொன்னாலும், அந்தப் பெண்ணுக்கு, அவள் சொன்னது தனக்கு மட்டுமே சொல்வதுபோல் தோன்றியது. மாரியம்மா பேசி முடித்ததும், விளக்கம் கேட்டாள்.

"நம்பிக்கைத் துரோகம்னா?"

"நம்பிக்கைத் துரோகமுன்னா.. நம்பிக்கைத் துரோகம்...காதல் வலையிலே சிக்கினே... அழகன் கண்பட்டு ஆகாயத்துல பறந்தே... தொட்டவன் விட்டான்...துஷ்டன் போல் ஆனான்... ஆனாலும் கோளாறு அவன் பக்கம் இல்ல... திருஷ்டி பட்டதாலே தீயவன் போல் ஆகிவிட்டான்... பரிகாரம் செய்தால் பறந்தோடி வருவான்..."

அந்தப் பெண் கடந்த கால நிகழ்வுகளை நினைவுகளாக்கினாள்.

'அவனுடன் சேர்ந்ததில் மற்றவள்களுக்குப் பொறாமை அதிகம்... முந்திக்கிட்டாளே என்ற கோபம்... அவரு நல்லவரு... இந்தப் பிசாசுங்க கண்பட்டுதான் என்னை மறந்துட்டாரு.. இருங்கடி... இருங்க.. ஒங்க கண்ணு முன்னாலேயே அவரோடு இணைந்து காட்டுவேன்...'

அந்தப் பெண் பெரு நம்பிக்கையோடு மாரியம்மாளிடம் கேட்டாள்...

"திருஷ்டிப் பரிகாரத்திற்கு எவ்வளவு செலவாகும்?"

"உன் காதல் கதையை ஆதியோட அந்தமாகச் சொல்லு தாயீ... அப்போதான் எப்படிப்பட்ட பரிகாரமுன்னு சொல்ல முடியும்..."

"நானும் ரவியும் உயிருக்குயிராய் பழகினோம்..."

"ஒரு நொடி தாயீ... ரவின்னா எந்த ரவி... ரவிக்குமாரா... ரவிச்சந்திரனா... ரவீந்திரனா..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது சோசியரம்மா... எல்லோரையும் போல நானும் அவரை ரவின்னுதான் கூப்புடுவேன்... நானும், அவர் தங்கையும் கல்லூரியில் கம்ப்யூட்டர் பாடம் ஒன்றாகப் படித்தோம். அதோட தொடர்ச்சியா ஒரு கம்பெனியில புராஜெக்ட் செஞ்சோம்... ரவி தங்கையைக் கூப்பிடத் தினமும் வருவார்...

"அங்கேயே நில்லு தாயீ... அவனுக்கு, அவள் நிசமான தங்கைதானா? அவன், உன்னைத் தன்னோட வீட்டுக்கு கூட்டிப் போனானா.. எதுக்குக் கேட்டேன்னா, தங்கை என்கிற வார்த்தையோட மகிமை தெரியாம, இப்போ பலர் புறப்பட்டிருக்காக..."

அந்தப் பெண் மாரியம்மாவைத் துணுக்குற்றுப் பார்த்தாள். இது ஒன் வேலை என்பது மாதிரி.. வெட்டு ஒன்று துண்டு இரண்டாய்க் கேட்டாள்.

"அவர் என்னை மறந்தாலும், என்னால அவரை மறக்க முடியாது... எனக்கு அவர் திரும்ப வேணும்... பரிகாரத்திற்கு எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை..."

மாரியம்மா, அந்தக் கம்ப்யூட்டர் பெண்ணையே மாறி மாறிப் பார்த்தாள். பிறகு கைகளைப் பின்பக்கமாய் ஊன்றி, உடம்பைச் சரித்தாள். போனமாதம் மெரினா கடற்கரையில் ஏற்பட்ட கசப்பான அனுபவம் கண்களை உறுத்த, அவள் இரண்டு கண்களையும் இறுக மூடினாள்...

மெரினா கடற்கரையில் கப்பிச் சாலைப் பக்கம் ஒரு மோட்டார் பைக்கில் நான்கைந்து பேர் மேலும் கீழுமாய்க் கிடந்தார்கள். இவள் அவர்கள் பக்கம் போய் 'சோசியம் பாக்கலியோ' என்றபோது, ஒருவன் கைதட்டிக் கூப்பிட்டான். இவள் கேட்ட பதினொரு ரூபாய்க்குப் பதிலாக இருபது ரூபாயைத் திணித்தான். இவளும் வழக்கம்போல் அந்தக் கைக்காரனைத் துதிபாடிவிட்டு, "இப்போதைய காதல் இடைஞ்சலான காதல்... இது போய் இன்னொரு காதல் வரும்... அதுவே நிற்கும்... நிலைக்கும். "ஆனாலும் திருஷ்டி கழிக்கனும்" என்றாள். உடனே சக பயல்கள் "அடே மச்சி கரெக்டா சொல்லுடா... 'ஆப்' வாங்குடா" என்றார்கள். மோட்டார் பைக்கில் இருந்த அந்தப் பையன் துள்ளிக் குதித்து, ஒக்காபோலா ஆட்டம் ஆடினான். பிறகு "ஆயா ஒன் வாயிலே ஒரு குவார்ட்டர் ஊத்தனும். போன வாரமே அந்த "போரைக்" கழிச்சுக் கட்டிட்டேன். விட்டுட்டேன். இரண்டாவது புனிதக் காதலி எப்போ வருவா ஆயா? என் வருங்காலக் காதலி எப்படி இருப்பா" என்றான். உடனே இன்னொருத்தன் "ஆயா, பொண்ணு மாதிரி அழகா இருப்பாடா... ஆமாம் ஆயா... ஒனக்குஎத்தனை குட்டிங்க..." என்றான். மாரியம்மாள் காசை வீசி எறிந்துவிட்டு, திரும்பி நடந்தாள்.

அப்போது நடந்தது,

அட்டைப்பட விளக்கம்:

முதல் பக்க அட்டைப்படம்:

'பாரதரத்னா' விருதுபெற்ற திரு.சி.சுப்பிரமணியம்,
திருமதி. எம்.எஸ்.சுப்புலட்சுமி,
திரு. ஏ.பி.அப்துல் கலாம்.

கடைசிப்பக்க அட்டைப்படம்:

கலைஞரின் அரசு மகளிர் மேம்பாட்டுக்காக
மேற்கொள்ளும் சிறப்புமிகு நடவடிக்கைகள்
சிலவற்றின் படப்பிடிப்பு.

இப்போதும் வலி கொடுத்தது... இதற்குள் சரிந்து கிடந்த மாரியம்மாவை அந்தப் பெண் உசுப்பினாள். மாரியம்மாள் இருபத்தொரு ரூபாய்க்காக யாசிக்காமல், அதையும் மீறி சிந்தித்தாள்.. 'அந்தப் பயல்கள் மாதிரிதான் இவள் பயலும் இருப்பான். எம் பொன்ன எப்படி நிமிர வச்சனோ... அப்படி இவளையும் நிமிர வைக்கணும்...'

மாரியம்மா பொரிந்து தள்ளினாள். "பெத்த மககிட்டச் சொல்ற மாதிரிதான் சொல்றேன்... கோபப்படாம கேளு தாயீ... நீ படிச்ச பொண்ணு... கை நிறைய சம்பளம் வாங்குறே... இல்ல வாங்கப் போறே... சொந்தக் காலுல நிக்கப் போற பொண்ணு... பெண்டாட்டிக்குத் துரோகம் செஞ்சிட்டு ஆற அமர திரும்பி வார புருசனைக்கூட, ஏத்துக்காதவள்தான் அசல் பொம்பளை... நீ நிசமான பொண்ணுன்னா அந்தப் பயல மனசுல இருந்து வீசி எறி... உன்னை இந்நேரம் வீட்டுக்கும், வாசலுக்குமாய் தேடிக்கிட்டிருக்கிற உங்கம்மா அந்தப் பயலவிட ஒசத்தி... ஒரு வேளை, ஒனக்காக பஸ் ஸ்டாப்புல காத்திருக்கிற அப்பாவும் அண்ணனும், தம்பியும் அவனை விட ஒசத்தி... கல்யாணத்துக்கு முன்னாடியே பீடை கழிஞ்சதேன்னு சந்தோஷப்படு தாயீ... சந்தோஷப்படு. கஷ்டத்தை விலை கொடுத்து வாங்காதே தாயீ... கஷ்டத்தை விலை கொடுத்து வாங்காதே தாயீ..."

அந்த கம்ப்யூட்டர் பெண்ணுக்கு மகிழ்ச்சி வராவிட்டாலும், துக்கம் தணிந்தது. அடிக்கடி தடம்புரண்ட இந்த முடிவை உறுதிப்படுத்திக் கொண்டாள்.. சுயவிளக்கம் கொடுத்தாள்...

"நீங்க திருஷ்டி, கிருஷ்டின்னு சொன்னதாலதான் எனக்குப் போன ஆசை, திரும்பிவந்தது. சக்கம்மாவே சொல்றதா நினச்சு..."

"சக்கம்மா எங்கே இருக்காளோ... எப்படி இருக்காளோ யாருக்குத் தெரியும்... கண்டவர் விண்டதில்லை... விண்டவர் கண்டதில்லை...நீயே ஒனக்குச் சக்கம்மா... இந்தா ஒன் ரூபா..."

'வச்சிக்கோங்க சோசியரம்மா."

'இல்லம்மா... இந்தப் பணம் மனசுல தங்காது... மனசுல தங்காத எதுவும் வயித்துல தங்காது... இது வெள்ளிப் பூண் போட்ட பிரம்பு... என்னைக் கவனிச்சுக்கும்... சரி... சரி... எழுந்திரு... ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாய் நடப்போம்..."

அவர்கள் தாயும், சேயும் போல் எழுந்தார்கள்... கடலோரம் போனார்கள்... அலைகள் வழக்கம்போல் ஆர்ப்பரித்தன... ஆனாலும் அவர்களுக்கு இப்போது அது புது முழக்கமாய்க் கேட்டது. ★

மருத்துவம்:

சித்த மருத்துவக் குழு

தமிழ்நாடு சித்த மருத்துவத்தின் (முன்னேற்றம் மற்றும் சித்த மருத்துவர்கள் பதிவு) சட்டத்தின் கீழ் முதல் சித்த மருத்துவக் கவுன்சில் அமைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. முன்னாள் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் திரு. லெட்சுமிகாந்தன் பாரதி அவர்களை இந்தக் கவுன்சிலின் தலைவராக நியமித்துள்ளது. கீழ்க்கண்டவர்கள் இந்தக் கவுன்சிலின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மரு. எ. ஆனந்தகுமார், சென்னை
மரு. பிரகாசம், சேலம்
மரு. ஜெ.பி. கிருஷ்ணமூர்த்தி, குன்றத்தூர்
மரு. ஆர். ராமமூர்த்தி
மரு. கே. நடராஜன், சென்னை
பட்டணம் வைத்தியர் மரு. ஜெபஸ்டீன், நாகர்கோவில்
மரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, தாராபுரம்
மரு. கண்ணன், திண்ணூர், திருச்சி மாவட்டம்
துணைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை
இணை இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை
முதல்வர், அரசினர் மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை
கண்காணிப்பாளர், அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை, சென்னை
மேலாளர், தமிழ்நாடு மூலிகைப்பண்ணை மற்றும் மருத்துவக் கழகம், சென்னை

எல்லா சித்த மருத்துவர்களும் இந்தப் புதிய சட்டத்தின் கீழ், பதிவு செய்துகொள்ள வேண்டும். ஏற்கெனவே பதிவு பெற்ற சித்த மருத்துவர்களும் இந்தப் புதிய சட்டத்தின் கீழ் புதிதாகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காச நோய்

மிகவும் பலவீனமாகிவிட்ட உடலில் எதிர்ப்புச் சக்தி குறைவதற்காகக் காத்திருந்து காசநோய்க் கிருமி தாக்குதலைத் தொடங்குகிறது.

குழந்தைகள், முதியவர்கள், சர்க்கரை நோயாளிகள், ஆஸ்துமாவுக்காக 'ஸ்டீராய்ட்' மருந்துகளைச் சாப்பிடுவோர், வறுமை நிலையில் உள்ளவர்கள் ஆகியோருக்குக் காசநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

அடிக்கடி குழந்தை பிறத்தல், அடிக்கடி கருச்சிதைவு, காலரா, டைபாய்டு ஆகியவை காரணமாக நோய் எதிர்ப்புச்சக்தி குறைந்து காசநோய் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு. சாதாரண மருந்துகளுக்குக் கட்டுப்படாமல் மூன்று வாரங்களுக்குத் தொடர்ந்து இருமல், மாலையில் லேசான காய்ச்சல், எடைக்குறைவு, பசியின்மை, உடல் சோர்வு ஆகியவை காசநோயின் அறிகுறிகளாகும். இருமும்போது இரத்தம் வெளியேறினால் அலட்சியமாக இருக்கக்கூடாது

மார்பு எக்ஸ்-ரே, சளிப் பரிசோதனைகள் மூலம் காசநோய் உள்ளதா எனத் தெரிந்துகொள்ள முடியும்.

ஊட்டச்சத்து உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டு, நோய் எதிர்ப்புச் சக்தியைப் பராமரித்தால் காசநோய்க் கிருமிக்கு 'வேலை' இல்லை.

காசநோயால் தாக்கப்படும் பெண்களில் 70 சதவீதத்துக்கு மேற்பட்டோரின் கருத்தரிக்கும் திறன் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

துருக்கியில் நூருதீன் அகா, இஸ்ட், உரால் ஆகியோர் மேற்கொண்ட ஆய்விலிருந்து இது தெரியவந்துள்ளது.

காசநோயால் பாதிக்கப்பட்ட 57 பெண்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. அவர்களில் 71.4 சதவீதம் பேருக்கு கர்ப்பப்பை தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. காலம் தவறி மாதவிலக்கு ஏற்படுதல், ஆரம்பக்கட்ட அழற்சி ஆகியவை காணப்பட்டன. இந்தக் கோளாறுதான் இறுதியில் அவர்களின் கருத்தரிக்கும் திறனைப் பாதிக்கிறது.

எனினும், இதைத் தொடக்க நிலையிலேயே கண்டுபிடித்துச் சிகிச்சை அளித்தால் அவர்களின் கருவுறும் திறனை மீட்டுவிட முடியும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்.

சுவாச மண்டலத்துக்குள் நுழையும் காசநோய்க் கிருமி, முதலில் நுரையீரலை ஆக்கிரமிக்கிறது. பின்னர் அங்கிருந்து இரத்தம் மூலமாக இனவிருத்தி உறுப்புகளைச் சென்றடைகிறது. கர்ப்பப்பை, அதற்குச் செல்லும் குழாய் உள்ளிட்டவற்றில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இனவிருத்தி உறுப்புகளில் காசநோய்க் கிருமி பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் பெண்களின் தொகை 12.3 சதவீதமிருக்கும் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

வளரும் நாடுகளில், 17 லிருந்து 40 வயதுக்கு உட்பட்டோரே இந்நோயால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். வயிறு, அடிவயிற்றில் வலி, அளவுக்கு அதிகமான இரத்தப்போக்கு ஆகியவையே இந்நோயின் முக்கிய அறிகுறிகள்.

ஏழை நாடுகளில் பெண்கள், சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கியே இருக்கிறார்கள். அவர்களை இந்நோய் தாக்கியதற்கான அறிகுறிகள் தெரியாமல் போகின்றன. அதனால் தொடக்க நிலையிலேயே இந்நோயைக் கண்டுபிடித்துச் சிகிச்சை அளிக்க முடியாத நிலை உள்ளது என்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

- டாக்டர் ஆர். உமா



பார்வை இழப்பைத் தடுப்பதில் பள்ளி ஆசிரியர்கள் பங்கு

மு. வீராசாமி

கண் ஒரு நுட்பமான உறுப்பு. அதனால்தானோ என்னவோ, பலர் அதைப்பற்றிக் கவலைப்படுவதேயில்லை. கண்களை முறையாகப் பேணிக் காப்பதுமில்லை!

இன்று நம்நாட்டில் பார்வை யிழப்பும், அது தொடர்பான பார்வைக் குறைவும் மிக முக்கியப் பிரச்சினையாக இருக்கின்றன. நம்நாட்டில் 90 இலட்சம் பேர் பார்வையிழந்துள்ளதாகவும், தவிர 40 இலட்சம் பேர் பார்வைக்குறைவினால் துன்பப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து, தன்னலம் போற்றல், கண் பாதுகாப்பு பற்றிய போதிய அறிவில்லாமையும், கண்ணில் ஏற்படும் நோய்கள், காயங்கள் இவற்றை அலட்சியப்படுத்துவதுமே பார்வையிழப்பை அதிகரிக்கச் செய்கின்றன.

ஆசிரியரின் பங்கு

நம் நாட்டில் 14 வயதுக்குட்பட்ட, பள்ளியில் பயிலும் குழந்தைகளில் 2.5 இலட்சம் பேர் பார்வைக் குறைவினால் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதாகப் புள்ளி விவரம் ஒன்று தெரிவிக்கின்றது. தடுக்கக் கூடிய பார்வையிழப்பைத் தடுப்பதில் பள்ளிகள் முக்கியப் பங்கினை வகிக்கின்றன. ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கண்ணின் அமைப்பு பற்றியும், கண்பாதுகாப்பு பற்றியும் போதிப்பதுடன் உரிய நேரத்தில் அவர்களை மருத்துவம் செய்துகொள்ளவும் அறிவுரை கூறலாம்.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதால் பிள்ளைகளிடையே பார்வைக் குறைவு தொடர்பான வெளிப்பாடுகளை (Symptoms) ஆசிரியர்களே கவனித்து, குறையுள்ளவர்களை உடனடியாகத் தக்க மருத்துவம் செய்துகொள்ளச் சொல்லி, கண்மருத்துவரிடம் அனுப்பலாம். ஏனெனில், குழந்தைகள் பார்வைக்குறைவு தொடர்பான வெளிப்பாடுகளை அறிந்து கொள்ளும் நிலையில் இல்லை. பார்வைக் குறைவு, கண்களுக்குக் களைப்பைத் தருவதுடன், தலைவலி, படிப்பில் போதிய ஆர்வமின்மை, மாறுகண், சரிசெய்ய முடியாத நிரந்தரப் பார்வையிழப்பு ஆகியவற்றிற்கும் மூல காரணமாயுள்ளது.

கீழ்க்கண்ட அறிகுறிகளுள் ஏதேனும் காணப்பட்டால் ஆசிரியர்கள் அத்தகைய குழந்தைகளின் பெற்றோரிடம் தெரிவிப்பதுடன் அவர்களைக் கண் மருத்துவரிடம் உரிய மருத்துவத்திற்கு அனுப்பவும் வேண்டும்.



பார்வைக்குறைவு

படிக்கும் பிள்ளைகளுக்குக் கரும் பலகையில் ஆசிரியர் எழுதுவது தெரியாது; படித்தால் எழுதினால் தலைவலி வருவது; புத்தகத்தைக் கண்ணிற்கு அருகே வைத்துப் படித்தல்; தொலைவில் உள்ள பொருட்களைப் பார்க்கும்போது ஒரு கண்ணை மூடி அல்லது தலையைச் சற்றுச் சாய்த்துப் பார்த்தல்.

கண்ணில் ஏற்படும் நோய்கள்

கண்வலி, திரும்பத் திரும்ப ஏற்படுகின்ற கண்கட்டி டிரக்கோமா, (Trachoma), கெரொட்டோமலேஷியா (Keratomalacia) என்கிற பார்வை யிழப்புக்கு வழிவகுக்கும் வைட்டமின் 'ஏ' பற்றாக்குறையால் ஏற்படும்.

இதன் அறிகுறிகள்: கண்ணின் விழிவெண் படலத்தில் முக்கோண வடிவில் சாம்பல் நிறத்தில் ஏற்படுகின்ற பைட்டாட் புள்ளிகள், மாலைக்கண் முதலியன. இதனை ஆரம்ப நிலையிலேயே வைட்டமின் 'ஏ' மிகுந்துள்ள உணவுப் பொருட்களைக் கொடுப்பதன் மூலம் நலப்படுத்திவிட முடியும்.

தற்காப்பு முறைகள்

வகுப்பறையில், கரும்பலகை அனைவரும் பார்ப்பதற்கேற்ப வைக்கப்பட வேண்டும். பலகையில் கருமைநிற வண்ணம் நன்றாகத் தீட்டப்பட்டிருக்க வேண்டும். ஆசிரியரும், இறுதி வரிசையில் அமர்ந்திருக்கின்ற மாணவர்களுக்கும் தெளிவாகத் தெரியும் வண்ணம் எழுத்துக்களைத் தெளிவாகவும், பெரியதாகவும் எழுதவேண்டும்.

படிக்கும்பொழுதும், எழுதும்பொழுதும் கண்ணுக்கும் புத்தகத்துக்கும் இடையே 30 செ.மீ. இடைவெளி இருக்க வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும். மாணவர்களின் இருக்கை அமைப்பு, அவர்களின் வயது, உயரம் இவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். வகுப்பறையினுள் போதிய வெளிச்சம் இருக்க வேண்டும். வகுப்பறை வானிலை அல்லது மின்சார வெட்டு காரணமாக வெளிச்சமின்றியிருப்பின், ஆசிரியர்கள் மாணவர்களிடம் படிப்பதையும், எழுதுவதையும் தவிர்க்குமாறு கூறி அதற்கு மாறாக வாய் வழிப்பயிற்சி (Oral Exercise) அளிக்கலாம்.

மாணவர்கள் ஆய்வகங்களில் வேதிப் பொருட்களைக் கையாளும்போது கவனமாக இருக்கச் சொல்லவேண்டும். எல்லா வேதிப்பொருட்களும் நன்றாகப் பெயரிடப்பட்டிருத்தல் அவசியமாகும். தொழிற்கல்வி நிலையங்களில் பற்ற வைப்பின்போது (Welding) தகுந்த பாதுகாப்புக் கண்ணாடியை அணிந்துக் கொள்ளச் சொல்லவேண்டும்.

கண்பாதுகாப்பு பற்றிய நலக் கல்வி

கண்ணில் தூசி விழுந்தால் கண்ணைத் தேய்க்காமல் சுத்தமான நீரால் கண்ணைக் கழுவவேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுரை கூற வேண்டும். அது பயனளிக்காதபோது மருத்துவரிடம் அனுப்பலாம்.

சரிவிகித உணவு, சுற்றுப்புறத் தூய்மை, தன்சுத்தம் இவற்றைக் கடைப்பிடிப்பது உடல் நலத்துக்கு மட்டுமின்றி, கண்ணுக்கும் நல்லது. வெடி, மத்தாப்பு போன்றவையினாலும், பென்சில், பேனா போன்ற கூர்மையான பொருட்களைப் பயன்படுத்தி விளையாடும் போதும் ஏற்படுகின்ற காயங்கள் கண்களைப் பாதிப்பதால் அத்தகைய விபத்துக்கள் நேராவண்ணம் தடுப்பதில் குழந்தைகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நல்ல வெளிச்சத்தில் வெளிச்சம் புத்தகத்தில் விழுவதுபோல் அமர்ந்து படிக்க வேண்டும். ஓடும் வண்டியிலும், படுத்துக்கொண்டும் படிப்பதைத் தவிர்க்க வேண்டும். நீண்ட நேரம் படிக்கும்பொழுது கண்களுக்குச் சிறிதுநேரம் ஓய்வு தர வேண்டும்.

தொலைக்காட்சியில் படம் பார்க்கும் போது பெட்டியிலிருந்து 3 மீட்டர் தொலைவில் அமர்ந்து படம் பார்க்க வேண்டும். பார்க்கும்போது அறையில் தேவையான வெளிச்சம் இருக்க வேண்டும். கண் வலியுள்ள மாணவர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து விளையாடக் கூடாது. நோய் பரவா வண்ணம் தடுப்பதில் தன் சுத்தத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்து, ஒருவர் பயன்படுத்துகின்ற துண்டு, கைக்குட்டை போன்றவற்றை வீட்டில் உள்ள மற்றவர்கள் பயன்படுத்தக் கூடாது என்றும் கூறவேண்டும்.

பார்வைத்திறன் ஆய்வு

தற்போது தேசியப்பார்வை இழப்புத் தடுப்புத் திட்டத்தின் கீழ் எல்லா மாவட்டங்களிலும், மாவட்டப் பார்வை இழப்புத் தடுப்புச் சங்கங்கள் மூலம் பள்ளி மாணவர்களுக்குப் பார்வைத்திறன் ஆய்வு செய்யப்பட்டு, பார்வைக்குறைவு உள்ளவர்களுக்கு இலவசமாகக் கண் கண்ணாடி வழங்கப்படுகிறது. புதிதாகக் கண்ணாடி அணிந்துள்ள மாணவர்களைத் தொடர்ந்து அணிந்திருக்குமாறு ஆசிரியர்கள் மாணவர்களை உற்சாகப் படுத்த வேண்டும்.

குழந்தையின் கண் தொடர்பான குறைபாடுகளைப் பெற்றோரிடம் உணர்த்தவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். கண்நலம் தொடர்பான செயல்திறன்களில் மாணவர்களைப் பங்கு கொள்ளுமாறும், கண்பாதுகாப்பு பற்றிய கட்டுரைகள் எழுதுமாறும் அவர்களை அவ்வப்போது உற்சாகப்படுத்த வேண்டும்.

வைட்டமின் 'ஏ' அதிகமுள்ள உணவுப் பொருட்களான கீரை, கொத்துமல்லி, கருவேப்பிலை, பப்பாளி, கேரட், மாம்பழம் போன்றவற்றை உண்ணுமாறு மாணவர்களை உற்சாகப்படுத்தவும், மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படவும் செய்ய வேண்டும். மேலும் கண் நோய்களில் பெரும்பாலானவை மருந்து மற்றும் அறுவை சிகிச்சையினால் நலப்படுத்தக் கூடியவையே என்றும், மேம்பாடுமிக்க மருத்துவ வசதி பற்றியும் எடுத்துக்கூறி மக்களிடையேயிருக்கின்ற அறியாமையினைப் போக்கவேண்டும். கண் நோய்களுக்குச் சிற்றூர்களிலுள்ள போலி மருத்துவரை நாடுவதினால் ஏற்படும் தீங்கினையும் மக்களுக்கு எடுத்துரைக்க ஆசிரியர்கள் முயற்சி செய்யவேண்டும்.

கண், உடலின் மிகமுக்கிய உறுப்பு என்பதால் - கண்ட கைமருந்துகளையும் போட்டு, 'சரிப்படாவிட்டால் பிறகு பார்ப்போம்' என்று கருதி அலட்சியமான சிகிச்சைமுறைகளை மேற்கொள்ளக் கூடாது; அது பார்வையையே கெடுத்து விடக்கூடும்.

---

*ஆசிரியரும் வெளியிடுபவரும் : **ரா. சிவகுமார்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு.*
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர்தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927, 564906



ஆளுமை



இயக்குநர்
ஆவணக் காப்பக
வரலாற்று
21 ஏப் 1998
ஆவணக் காப்பகம்
600 008

இந்த இதழில்

- சட்டப்பேரவைக் கூட்டத் தொடரைத் துவக்கி வைத்து மேதகு ஆளுநர் உரை 2
- 1998 - 1999 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை; சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் உரை 9
- அவளுடைய கேள்வி (சிறுகதை) - தோப்பில் முகமது மீரான் 33
- சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய குடியிருப்பு வளாகம் 40
- இந்திய தரிசனம் - ஜெயகாந்தன் 47

தமிழரசு
திருவள்ளுவராண்டு - 2029
பங்குனி
மார்ச் 16 - 31, 1998
மலர் : 28 இதழ் : 18
விலை ரூ.3

"பொது விநியோகத் திட்டம் சீரமைக்கப்பட்டு இரண்டு நிறங்களில் குடும்ப அட்டை வழங்கிடும் புதியமுறை விரைவில் செயல்படுத்தப்படும் !"

சட்டமன்றக் கூட்டத் தொடரைத் துவக்கி வைத்து மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரை

மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே!

இம்மாநிலத்தின் ஆளுநராகப் பொறுப்பேற்ற பின்னர், உங்கள் அனைவரையும் இந்தப் பதினோராவது சட்டப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் முதன்முறையாகச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாண்டில் நம் மாநிலத்தின் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடைந்து தமிழ்நாட்டுக்கும் தமிழக மக்களுக்கும் வளம்சேர்க்கும் ஆண்டாக அமையும் என நான் நம்புகிறேன்.

2. தமிழகத்தைச் சேர்ந்த சிறந்த விஞ்ஞானி டாக்டர் அப்துல்கலாம் அவர்களுக்கும், இசைமேதை டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும், மத்திய, மாநில அமைச்சர் பொறுப்புகளிலிருந்தவரும், மராட்டிய மாநில முன்னாள் ஆளுநரும், அரசியல் மேதையுமான திரு. சி.சுப்பிரமணியம் அவர்களுக்கும் நாட்டின் மிக உயர்ந்த விருதான "பாரத ரத்னா" விருது வழங்கப்பட்டுள்ளது நமக்குப் பெருமிதம் அளிக்கிறது. தமிழகத்திற்குப் புகழ் சேர்த்துள்ள இவர்களுக்கு உங்களனைவர் சார்பிலும் என் சார்பிலும் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அண்மையில் நடந்த தேர்தல்களில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளின் முடிவுகள் அரசின் நற்பணிகளைத்தொடர ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. நாடாளுமன்றத்தைப் பொறுத்த வரையில் தமிழக மக்கள் நிலையான ஆட்சி அமையும் என்ற எதிர்பார்ப்புடன் வாக்களித்துள்ளனர். பொதுவாக மத்திய மாநில உறவுகள் சுமுகமாக அமைந்திட இந்த அரசு முழு ஒத்துழைப்பைத் தரும்.

4. இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை ஆகியவற்றைத் பேணிக்காப்பதுடன், மாநிலங்கள் மேலும் அதிகாரங்கள் பெற்று சுயாட்சித் தன்மையுடன் விளங்கவும், மத்தியில் கூட்டாட்சித் தத்துவம் நிலைபெறவும், மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சிமொழிகளாகவும், அதற்கு முதற்கட்டமாகத்தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி அளிக்கப்படவும் பலகாலமாக வலியுறுத்தி வருகிற இந்த அரசு இவ்ற்றுக்காகத்தொடர்ந்து பாடுபடும்.

5. கோவையில் நடந்த மதக் கலவரம், குண்டு வெடிப்பு ஆகியவை மத நல்லிணக்கத்திலும், மனித நேயத்திலும் அக்கறையுள்ள அனைவருக்கும் ஆழ்ந்த வேதனை அளிப்பதாகும். 1997 நவம்பர் 29 ஆம் தேதி தொடங்கி ஒருவாரகாலம் நடந்த கலவரங்களில், உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையாக முதற்கட்டமாக ரூ.28 இலட்சம் வழங்கப்பட்டது. இக்கலவரங்களுக்கு வழிவகுத்த சூழ்நிலைகள், காரணங்கள் குறித்து விசாரணை செய்யவும், இத்தகைய நிகழ்ச்சிகள் இனி எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்கவும், பொதுமக்களுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கவும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகள் செய்ய, குஜராத் உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி திரு. பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. 14.02.1998 அன்று கோயம்புத்தூரில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் 1997 நவம்பர் மாதத்தில் நடந்த கலவரங்களுக்கும் தொடர்பு இருக்கக்கூடும் என்று கருதப்படுவதால் இவை குறித்தும் விசாரணை செய்ய அரசு, நீதிபதி திரு.பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்களின்

கோவை வெடிகுண்டு சம்பவத்தையடுத்து, வெடிபொருட்களின் விற்பனையில் தீவிரக் கட்டுப்பாட்டைச் சட்ட ரீதியாகச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

விசாரணைக் குழுவையே நியமித்துள்ளது. விசாரணைக் குழுவின் முன் அனுமதியுடன் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்த குடும்பங்களுக்கும் நவம்பரில் நடைபெற்ற கலவரத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் உயர்த்தப்பட்ட வீதத்தில் நபர் ஒருவருக்கு ரூ.2 இலட்சம் என்ற அளவில் இழப்பீட்டுத் தொகையாக மொத்தம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவின் பரிந்துரையை எதிர்நோக்கி, இரு நிகழ்வுகளிலும் சொத்துக்களுக்கு இழப்பு மற்றும் சேதம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்க அரசு ரூ.5 கோடி அனுமதித்துள்ளது. தேவையெனில் இத்தொகையை அரசு அதிகப்படுத்தி வழங்கும்.

6. கோயம்புத்தூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்புகளும், அங்கும், மாநிலத்தின் பிற பகுதிகளிலும் ஜெலட்டின் குச்சிகள், மற்ற வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்ட நிகழ்வுகளும், கிணறு வெட்டுதல் போன்ற உண்மையான தேவைகளுக்கான வெடி பொருட்கள் தீவிரவாத இயக்கங்களுக்குத் திசை திருப்பி அனுப்பப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன. இதனைத் தடுப்பதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது. எனவே மாநிலத்தில் வெடி பொருட்கள் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை செய்யப்படும் எல்லா இடங்களிலும் தீவிரக் கட்டுப்பாட்டை சட்ட ரீதியாகச் செயல்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது.

7 பொருளாதார முன்னேற்றத்திற்கான வளர்ச்சித் திட்டங்களுக்கு, அமைதியும் நல்லிணக்கமும் இன்றியமையாத அடிப்படையாகும் என்பதை நன்குணர்ந்த இவ்வரசு, மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு நிலைமையைப் பராமரிப்பதற்கு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. தென்மாவட்டங்களில் பல்லாண்டுகளாக அவ்வப்பொழுது நிகழ்ந்துவரும் வகுப்புக் கலவரங்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அத்தகைய கலவரங்கள் தொடராமல் தடுக்க, உரிய நடவடிக்கைகளை எடுப்பது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகள் அளிக்க, உச்சநீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு.எஸ். மோகன் அவர்கள் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை இவ்வரசு அமைத்தது. இக்குழு, 1998 சனவரியில் அரசுக்கு அதன் அறிக்கையை வழங்கியது. அந்த அறிக்கையில் அனைத்து மாவட்டங்களிலும், பல்வேறு நிலைகளில் அமைதிக் குழுக்களை அமைத்தல், சட்டம்-ஒழுங்கு நிருவாகம் எச்சரிக்கையுடனும் தவறு நேராமல் விழிப்புடனும் செயல்படச் செய்தல் போன்ற பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை, மாநில அரசின் நடவடிக்கைக்காகத் தீவிர பரிசிலனையில் உள்ளன.

8. பல ஆண்டுகளாக நடந்துவரும் சந்தன மரக்கடத்தலைத் தடுப்பதற்கு இவ்வரசு உரிய முயற்சிகள் எடுத்துள்ளது. இதன் விளைவாக இவ்வரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து டிசம்பர் 1997 முடிய ரூ.34.80 கோடி மதிப்புள்ள கடத்தல் சந்தன மரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் 33 சந்தனமரக் கடத்தல்காரர்கள் குண்டர்கள் சட்டத்தின் கீழ்

சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சந்தன மரக் கடத்தலைத் தடுக்க இவ்வரசு இன்னும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளும். அண்மையில் வழங்கப்பட்ட சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி ஓர் சிறப்புப் பணிக் குழு விரைவில் அமைக்கப்படும்.

9. திட்டப்பணிகளை ஆக்கபூர்வமாகவும் செம்மையாகவும் நிறைவேற்றி, எல்லா இலக்குகளையும் எய்திவருகிறது என்ற பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.10,200 கோடி ஒதுக்கப்பட்டிருக்கையில், ரூ.10,563 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, மத்தியத் திட்டக்குழு, தமிழ்நாட்டுக்கான ஒதுக்கீட்டளவை ரூ.25,000 கோடியாக உயர்த்தி ஒப்புதல் அளித்துள்ளது. எட்டாவது திட்டக் காலத்தில் ஆண்டு வளர்ச்சி வீதம் 5.96 சதவீதமாக இருந்தது. ஒன்பதாவது திட்டக் காலத்தில், இவ்வளர்ச்சி வீதத்தை 7 சதவீதத்திற்கும் மேலாக உயர்த்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

10. இந்த ஆண்டில் இம்மாநிலம் முழுவதிலும் அளவுக்கு அதிகமான மழை பெய்துள்ளது. இப் பெருமழையினால் பல்வேறு மாவட்டங்களில், குறிப்பாக, கடலோர மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகியவை கடுமையான பாதிப்புக்கு உள்ளாயின. மழை மற்றும் இடி, மின்னலால் ஏற்பட்ட மனித உயிர் இழப்பு, கால்நடை உயிர் இழப்பு, குடிசைகள், பயிர்கள் சேதம்

★ பெட்ரோல், டீசல் விற்பனை போல, மண்ணெண்ணெய் விநியோக நிலையங்கள் நகர்ப்புறப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்படும்.

★ மத்திய - மாநில உறவுகள் சுமூகமாக அமைந்திட அரசு முழு ஒத்துழைப்புத் தரும்.

ஆகியவற்றுக்கு இடருதவி அளிக்கும் வகையில், அரசு ரூ.58 கோடியே 95 இலட்சம் செலவழித்துள்ளது.

11. இரண்டாவது பசுமைப்புரட்சியை உருவாக்க தொடர்ந்து முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், பொருளாதாரத்தில் சீரான நிலை, ஊரக வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றை எய்துவதே இவ்வரசின் நோக்கமாகும். சென்ற ஆண்டில் காவிரிப் பாசன வாய்க்கால்களிலும் பல மாவட்டங்களில் உள்ள கண்மாய்களிலும் தூர்வார எடுத்த முயற்சி விவசாயிகளுக்கு நல்ல பயனை அளித்துள்ளது. இத்திட்டம் வரும் ஆண்டிலும் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு, பாசன ஆதாரங்களின் முழுப்பயனும் இட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நல்ல பருவமழை பெய்ததையடுத்து, இவ்வாண்டு நம்மாநிலம் நல்ல விளைச்சலைக் கண்டுள்ளது.

இணைக் கொள்முதல் செய்யப்படும் காலகட்டத்திலும் கூட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இவ்வரசு, மைய அரசு நெல்லுக்கு நிர்ணயித்த குறைந்த அளவு ஆதரவு விலைக்கும் மேலாக வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35/- அனுமதித்தது. உற்பத்திப் பெருக்கம் காரணமாக விவசாயிகள் விளைபொருளை விற்பனை செய்வதில் பாதிப்புக்கு ஆளாகாமலிருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, அரசு 926 நேரடிக் கொள்முதல் மையங்களைத் திறந்துள்ளது. முதல்முறையாகக்காவிரி பாசனப் பகுதிகளுக்கு வெளியேயுள்ள மாவட்டங்களிலும் இம்மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் இதுவரை செய்திராத அளவு 17 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

12. இந்த அரசின் ஒளிவு மறைவற்றதும், தொழில் முனைவோரிடையே நேயப் பண்புடையதுமான கொள்கைகள் பலன்தரத் துவங்கியுள்ளன. வெளிநாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வரும் தொழில் முனைவோர் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பி வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளனைத்தையும் தாமதமின்றிச் செய்ய அரசு இயந்திரம் முடுக்கிவிடப் பட்டுள்ளது. இதன் விளைவாக,கடந்த 22 மாதங்களில் தமிழகத்தில் வெளிநாட்டு மூலதனம் ஊக்குவிக்கும் வாரியத்தின் (Foreign Investment Promotion Board) ஒப்புதல் பெற்ற வெளிநாட்டு நேரடி மூலதனம் ரூ.4040 கோடி ஆகும். மேலும் தொழில் உரிமம் பெறத் தேவையில்லாத 655 தொழில்கள் ரூ.9639 கோடி மதிப்பீட்டில் தொடங்கப் பதிவு செய்யப்பட்டுள்ளன. உரிமம் தேவையுள்ள 141 தொழில் திட்டங்கள் ரூ.1897 கோடி மதிப்பீட்டில் தொடங்க உரிமம் பெற்றுள்ளன. சுருங்கக் கூறின், மிகக் குறைந்த கால அளவான 22 மாதங்களில் ரூ.15,576 கோடி அளவிலான தொழில் முதலீடுகள் இம்மாநிலத்தில் செய்யப்படவுள்ளன என்பது தமிழகத்தின் வரலாற்றிலேயே மிகவும் அதிகமான ஒன்றாகும். நடப்பாண்டில் டூபாண்ட் நிறுவனத்தின் நைலான் தொழிற்சாலை, சென்னை ஏற்றுமதி வளாகத்தில் அமைந்துள்ள உலோக ஹேலைட் விளக்குத் தொழிற்சாலை, கரூர் அருகில் அமைந்துள்ள கரூர் யார்ன் லிங்க்ஸ் தொழிற்சாலை, தர்மபுரி மாவட்டத்தில் சொக்கரசன்னபள்ளியில் அமைந்துள்ள டாரஸ் நாவல்டீஸின் டாலமைட் தொழிற்சாலை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் செட்டிபுண்ணியம் கிராமத்தில் அமைந்துள்ள பாரத் உடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள மயிலேரிப்பாளையத்தில் அமைந்துள்ள S.G. இரும்பு வார்ப்புத் தொழிற்சாலை ஆகியவை உற்பத்தியைத் துவக்கியுள்ளன. ஹூண்டாய் நிறுவனத்தின் மோட்டார் வாகனத் தொழிற்சாலையில் 1998 அக்டோபர் மாதத்தில் உற்பத்தி துவங்கும்.

13. தொழில் வளர்ச்சிக்கான சிறந்த அடிப்படைக்கட்டமைப்பு வசதிகள் மட்டுமே, வெளி நாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் தொழில் முனைவோரை நம்மாநிலத்திற்கு ஈர்க்கும் என்பதை அரசு உணர்ந்துள்ளது. தொழில் வளர்ச்சி

மையங்களையும், தொழில் பூங்காக்களையும், துணை நகரங்களையும் மாநிலத்தின் பல பகுதிகளில் அரசு உருவாக்கும். மின்சாரம், சாலைகள், தண்ணீர் வசதி, துறைமுகங்கள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் அரசு முனைப்புடன் செயல்படும். இதற்குப் பெருமளவில் முதலீடுகள் தேவைப்படுமாதலால், இதுவரை அரசினால் மட்டும் செயல்படுத்தப்பட்ட மின்சக்தி, நெடுஞ்சாலைகள் போன்ற துறைகளில் தனியார் முதலீட்டை ஈர்க்க, அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

14. இம்மாநிலப்பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் தமிழகத்தின் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் மாநிலத்தின் உற்பத்தியை அதிகரிக்கவும், பெருமளவில் வெளிநாட்டு முதலீட்டைத்தமிழகத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கும் தொழில்களுக்கும் ஈர்க்கவும், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கவும், ஆலோசனைகள் வழங்க ஹார்வர்டு பன்னாட்டு வளர்ச்சிக் கழகத்துடன் அரசு ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழகப் பொருளாதாரத்தின் மீதான இவ்வாராய்ச்சிப் பணி துவங்கியுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு
வேலை வாய்ப்பை உருவாக்கக்
கணினி, பிளாஸ்டிக் தொழில் பற்றி
பயிற்சி தரப்படும்.

15. தனியார் துறையினால் இயக்கப்பட இருக்கும் முதலாவது மின் திட்டம் வரும் ஆண்டில் 196 மெகாவாட் திறனுடன் சென்னையில் செயல்படத் துவங்கும். கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் மின் உற்பத்தி செய்வதற்காக, அடிப்படை வசதிகள் குத்தகை மற்றும் நிதி நிறுவனத்தோடு (Infrastructure Leasing and Financial Services Limited) சேர்ந்து கூட்டுத்துறை நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த, இந்த அரசு கொள்கையளவில் அனுமதி அளித்துள்ளது. எண்ணூரில் 1000 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றையும், தூத்துக்குடியில் 500 மெகாவாட் திறன் கொண்ட, அனல் மின் நிலையம் ஒன்றையும் நிறுவ — தமிழ்நாடு மின்வாரியம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

16. சாலை மேம்பாட்டுப் பணிக்கு இவ்வரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. சென்ற இரண்டாண்டுகளில் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கிழ் "நபார்டு" (National Bank for Agriculture and Rural Development) வங்கியின் நிதியுதவியுடன், ரூ.450 கோடி மதிப்புள்ள சாலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீட்டுவசதி-

நகர்ப்பகுதி மேம்பாட்டுக்கழக (Housing and Urban Development Corporation) நிதியுதவியுடனும், உலக வங்கியின் நிதியுதவியுடனும் மொத்தம் ரூ.1416 கோடி செலவில் சாலைகளும் பாலங்களும் மேம்படுத்தப்படும்.

17. இவ்வரசால் நிறுவப்பட்ட மாநிலக் கடலாண்மை வாரியம்.(Maritime Board) சிறு துறைமுகங்களின் மேம்பாட்டுப் பணியிலும் அவற்றை முறைப்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகிறது. கடலூர், செய்யூர் மற்றும் குளச்சல் துறைமுகங்களின் மேம்பாட்டை இவ்வரசு தனியார் துறையின் பங்கேற்புடன் செயல்படுத்த உள்ளது. வணிகக் கப்பல்களுக்குத் தேவையான பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் இம்மாநிலத்திலுள்ள இளைஞர்களுக்கு இத்தொழிலில் வேலை வாய்ப்பினை உருவாக்கவும் ஒரு கடலாண்மைப் பயிற்சிக் கழகத்தை (Maritime Academy) அமைக்கஅரசு முடிவெடுத்துள்ளது.

18. வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக இந்த அரசு 1996-ஆம் ஆண்டில் அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் முதல் தடவையாக பெண்களுக்கு 33 1/3 சதவீதம் இடம் ஒதுக்கிடு செய்து தேர்தல்களை நடத்தியது. மேலும் 1997-ல் நகர்ப்பகுதி மற்றும் ஊரக உள்ளாட்சி மன்றங்கள் அனைத்திற்கும் கணிசமான நிதிப்பகிர்வை அளித்தது. மேலும், உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை அளிப்பதற்கு உள்ளாட்சித்துறை அமைச்சரை அமைப்பாளராகவும் சட்டமன்றத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு தக்க முடிவுகள் எடுக்கும். சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் உறுதி அளிக்கப்பட்டிருந்தபடி, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் குறித்த பொதுவான சட்ட முன்வடிவு ஒன்று சென்ற வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் இச்சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இச்சட்ட முன்வடிவு, தற்போது ஆய்வுக் குழுவின் பரிசிலனையில் உள்ளது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைப் பணிகளைத் திறமையுடனும் செம்மையாகவும் நிறைவேற்ற இச்சட்டம் உதவும்.

19. 'நமக்கு நாமே' மற்றும் 'அண்ணா மறுமலர்ச்சித்' திட்டம் ஆகியவற்றின்கிழ் கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'நமக்கு நாமே' திட்டத்தில் 3658 பணிகள் ரூ. 24.61 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'அண்ணா மறுமலர்ச்சித்' திட்டத்தின் கிழ் ரூ.224 கோடி அளவில் 33282 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

20. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, நபர் ஒன்றுக்கு நாள்தோறும் 10 லிட்டருக்குக்குறைவான குடிநீர் பெறுகின்ற 10,000 ஊரகக் குடியிருப்புகளில், நடப்பாண்டில் 4,500 ஊரகக் குடியிருப்புகளில் நபர் ஒன்றுக்கு நாள்தோறும்

ரூ.18,048 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அளித்த தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கை



'ஒளிமயமானதும், உண்மையானதும், ஊழலற்றதுமான ஓர் உறுதிமிக்க ஆட்சிக்குரிய சிறப்புமிகு திட்டங்களைச் சிந்தித்துப் படைப்பது மட்டுமன்றி, அவற்றைச் செயலாற்றிடும் பணியில் முழுமையான வெற்றி பெற, நாட்டில் உள்ள நல்ல உள்ளங்களின் துணையையும், தூய வாழ்த்துக்களையும் வேண்டியவாறு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது' - என்ற முத்தாய்ப்போடு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டப்பேரவையில் 27-3-98ல் அளித்த 1998-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் முக்கிய அம்சங்கள் மட்டும் ஒரு பானைச் சோற்றுக்குச் சில சோறு பதம் காணும் வகையில் இங்கே அளிக்கப்படுகிறது:

- ☐ உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட வருவாய் நிதி ரூ.663 கோடியை ரூ.839 கோடியாக உயர்த்தியும் மேலும் 10ஆம் நிதிக்குழு வழங்கிய ரூ.100 கோடியும் வழங்கப்படும்.
- ☐ இந்தியாவில் முதலாவதாகத் தொடங்கப்பட்ட 'தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதி' யின் மூலம் நிதிநிறுவனக் கடனாக ரூ.800 கோடி பெறப்படும்.
- ☐ திருச்சி, கோவை, சேலம், மதுரை மற்றும் நெல்லை மாநகரங்களின் வளர்ச்சிக்குத் தலா ரூ.25 கோடியும், நகராட்சிகளுக்குத் தலா ரூ.10 கோடியும் பேரூராட்சிக்குத் தலா ரூ.10 கோடியும் வழங்கப்படும்.
- ☐ 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குச்' சிறப்பு நிதியாக ரூ.75 கோடியும் 'நமக்கு நாமே' - திட்டத்திற்கு ரூ.10 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ☐ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.25 இலட்சத்திலிருந்து தொகுதிக்கு ரூ.30 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ☐ போதிய அளவு குடிநீர் வசதியற்ற 5,398 குடியிருப்புகளுக்கு ரூ.330 கோடியில் குடிநீர் வசதியளிக்கப்படும்.
- ☐ 76.42 இலட்சம் டன்னாக இருக்கும் உணவு உற்பத்தி இவ்வாண்டு 94.92 இலட்சம் டன்னாக உயரும்.
- ☐ தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.82 கோடி; வேளாண் - மனிதவள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.9.85 கோடி ஒதுக்கீடு.
- ☐ ரூ.83.49 கோடி செலவில் 216 கிராம இணைப்புச் சாலைப் பணிகள் நடைபெறுகின்றன. 301 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க ரூ.101.73 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- ☐ நியாய விலைக்கடைகளில், ஒவ்வொரு நாளும் சரக்கு இருப்பு எழுதப்படும்; எடைக் குறைவு - பொருட்கள் வழங்காமை குறித்து பொதுமக்கள் பதிவு செய்திடும் வகையில் ஒரு 'புகார்ப் புத்தகம்' வைக்கப்படும்.
- ☐ உலக வங்கியின் நிதிஉதவியில், பாசனத்திட்டங்களை நவீனப்படுத்தி நீர்ஆதாரங்களை நிலைப்படுத்தும் ரூ.1,140 கோடியிலான பெருந்திட்டத்தில் ரூ.80 கோடியில் 40 திட்டங்கள் நடைபெறுகின்றன; ரூ.359 கோடி மதிப்பீட்டில் 152 பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- ☐ சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கு வாரந்தோறும் முட்டை வழங்கப் படும்.
- ☐ சென்னைப் போக்குவரத்து மேம்பாட்டிற்கு ரூ.366 கோடி ஒதுக்கீடு.
- ☐ விதவைகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்கள், முதியோர் ஒய்வூதியம் ரூ.100லிருந்து ரூ.150 ஆக உயர்வு.

- ☐ ஐரோப்பியப் பொருளாதார அமைப்பின் நிதிஉதவியில் ரூ.115 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் ஏரிகள் சீரமைப்பு 2-ஆம் கட்டப்பணியில் 288 ஏரிகள் சீரமைக்கப்பட்டுள்ளன; வரும் ஆண்டில் ரூ.12.89 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெறவுள்ளன.
- ☐ காவிரிப் பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணி ரூ.10 கோடியில் நடைபெற்றுள்ளன; வரும் ஆண்டில் ரூ.20 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- ☐ ரூ.12.8 கோடியில் மீனவக்குடும்பங்களுக்கு 4000 இலவச இல்லங்கள் கட்டப்படுகின்றன. வரும் ஆண்டில் மேலும் 4000 இல்லங்கள் கட்ட ரூ.13.15 கோடி ஒதுக்கீடு.
- ☐ மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் 1.19 இலட்சம் மீனவர்கள் பயனடையும் வகையில் கடந்த ஆண்டைப் போல், வரும் ஆண்டிற்கும் ரூ.8.57 கோடி ஒதுக்கீடு.
- ☐ மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதங்கள் மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும். 1-1-96 முதல் அது அமல்படுத்தப்படும்.
- ☐ தமிழகத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் இருந்து தயாரிக்கப்படும் நோட்டுப் புத்தகங்களுக்கு மாநிலங்கள் இடையேயான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
- ☐ சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்கள் அனைத்திற்கும் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.
- ☐ ரூ.2,650 கோடி செலவில் கடலூரில் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்படும்.
- ☐ கணினி மென்பொருட்களுக்கு முழுவிற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.
- ☐ சென்னையில் ரூ.100 கோடி செலவில் வணிக நிதிமையம் அமைக்கப்படும்.
- ☐ ரூ.605 கோடி மதிப்பீட்டில், லஸ் - வேளச்சேரி இடையே ஆகாய ரயில் செல்வதற்கான 2-வது கட்டப் பணி தொடங்கப்படும்.
- ☐ தொடக்கப் பள்ளியே இல்லாத கிராமங்களே இல்லாமல் செய்வோம்; 700 குக்கிராமங்களில் புதிதாகத் தொடக்கப்பள்ளிகள் அமைக்கப்படும். 5ஆம் வகுப்புவரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இலவசப் பாடப்புத்தகம் வழங்கப்படும்.
- ☐ தமிழ்த்தென்றல் திருவிக, கல்கி, வேலூர் கூராகவன் ஜமதக்னி ஆகியோர் எழுதிய நூற்கள் நாட்டுடைமை ஆக்கப்படும்.
- ☐ வரும் நிதியாண்டில், தமிழ்நாடு மின்வாரியத்தின் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.903 கோடியாக உயர்த்தப்படும்.
- ☐ மக்கள் நல்வாழ்வுத்துறைக்கான ஒதுக்கீடு நடப்பு ஆண்டில் ரூ.877 கோடியிலிருந்து, வரும் ஆண்டில் ரூ.1,096 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ☐ வரும் ஆண்டில் மேலும் 5 மாவட்டங்களில் இசைப்பள்ளிகள் துவக்கப்படும்.

மாண்புமிகு தமிழக நெடுஞ்சாலை மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சராகப் பசும்பொன் தா.கிருட்டிணன் அவர்கள், ஆளுநர் மாளிகையில் பதவியேற்றுக் கொண்டார். மேதகு ஆளுநர் செல்வி மீபாத்திமா பீவி அவர்கள் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்நிகழ்ச்சியில் பங்கேற்றார் (26-3-1998).

★ "தமிழகமெங்கும் ஜூலை மாதத்திற்குள் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்"
★ பேருந்துக் கட்டணங்கள் குறைக்கப்படும்.

- மேதகு ஆளுநர் அவர்கள் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துச் சட்டப் பேரவையில் 23.3.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:



ஆளுநர் உரையின் மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பல்வேறு கட்சித் தலைவர்களும் பேரவை உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துவைத்து, இறுதியாக அவர்கள் எடுத்துவைத்த கருத்துக்கள் எல்லாவற்றின் மீதும் என்னுடைய பதில்களைச் சொல்வதற்கு நேரம் இல்லாவிட்டாலும் கூட, அடுத்து, தொடர்ந்து வர இருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் நடைபெறுகின்ற பொது விவாதம், தனித் தனித் தலைப்புகளிலே வருகின்ற மானியங்களின் விவாதங்கள் இவைகளில் அதற்கான விளக்கங்களை, விடைகளை அளிக்கமுடியும் என்ற நிலையில் குறிப்பிட்ட சில உறுப்பினர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி மாத்திரம் எடுத்துக்கூறி சில பொதுவான செய்திகளை இந்த மாமன்றத்திலே பரிமாறிக் கொள்ளலாம் என்ற அளவோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன்.

நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுற்று, அந்தத் தேர்தல் முடிவுகளைப் பற்றி மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்.

"இது கவர்னருடைய உரையல்ல. கருணாநிதியினுடைய உரை" என்றுகூட விமர்சிக்கப்பட்டு வெளியிலே பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. இந்த அவையிலும் கூறப்பட்டிருக்கின்றது.

ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்

ஒரு உண்மையை - இதுவரையிலே உணராமல் இருக்கின்ற யாராவது சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பார்களேயானால் அவர்கள் உணர்ந்து கொள்வதற்காகச் சொல்கிறேன் - எந்த ஒரு ஆளுநர் உரையாக இருந்தாலும் அது அரசாங்கத்தினுடைய உரைதானே தவிர, முதலமைச்சர் அவர்களுடைய உரையைத்தான் ஆளுநர், அரசின் சார்பாக அவைக்கு வழங்குகிறார் என்பதுதான் உண்மையே தவிர, முழுக்க முழுக்க அரசுக்குச் சம்பந்தம் இல்லாத உரை என்று யாரும் கருதிவிடக்கூடாது.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இன்று ஆளுங்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய தோழமைக் கட்சிகள், அவையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி மற்றும் அதனுடைய கூட்டணிக் கட்சிகள் எதிர்பார்த்த அளவுக்குப் பெரும்பாலான இடங்களிலே வெற்றி பெறவில்லை என்ற உண்மை உலகத்திற்கே தெரிந்தது.

எனவே, அதைப்பற்றி நான் விளக்க விரும்பவில்லை. ஆனால், இத்தகைய முடிவுகளின்போது இதற்கு முன்பு இந்த அவையிலே திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி நடந்துகொண்டது என்பதையும், குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், வேறு சில கட்சிகளும் தற்போது இங்கே எப்படி நடந்துகொண்டன என்றும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

1980-ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலகட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திராகாந்தி அவர்களுடைய தலைமையிலான காங்கிரஸ் கட்சியும் தேர்தல் உடன்பாடு கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்ட போது, புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளில், 38 நாடாளுமன்றத் தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காங்கிரஸ் அணி மகத்தான வெற்றியைப் பெற்றன. எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அந்தக் கூட்டணிக்குக் கிடைத்த இடங்கள் இரண்டே இரண்டு இடங்கள்தான். அப்போது நான் எதிர்க்கட்சியிலே இருந்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தது.

மரபுக்கு விரோதமான மனப்பான்மை

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது நடந்துகொண்டதைப்போல, நடக்கின்ற, நடக்க வேண்டும் என்கின்ற நினைவே எங்கள் யாருக்கும் அப்போது வரவில்லை. அன்றைக்கு எனக்கு நேராக, இந்த அவையிலே நாங்கள் அமர்ந்திருக்கும்போது, ஆளுநர் உரையாற்றிய நேரத்தில் கருப்புக்கொடி காட்டப்பட்டது. இந்த அரசு பதவி விலக வேண்டும் என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பதாகை கூட அதிமுக. சார்பில் இங்கே காட்டப்பட்டது. இதுபோன்ற மரபுகள் எம்.ஜி.ஆர்.

அவர்களுடைய தலைமையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு இடங்களைப் பெற்று, தோல்வியைத் தழுவிய நேரத்தில், இங்கே எந்தக் கட்சியாலும் கடைப்பிடிக்கப்படவில்லை.

அன்றைக்கு இந்த அவையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகமோ, இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ இந்த முறையைப் பின்பற்றுவது ஒன்றும் பெரிய காரியம் அல்ல; கஷ்டமான காரியம் அல்ல.

ஆனால், நாம் இந்த அவையிலே போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்கின்ற அந்த மரபுக்கு விரோதமாக நடக்கின்ற மனப்பான்மை கிஞ்சிற்றும் ஏற்படாத காரணத்தால் அன்று அந்தக் காட்சியை இந்த அவை கண்டது. அது எவ்வளவு பெரிய தவறு என்பதைத் தாங்கள், தங்களுடைய பெருந்தன்மையான தீர்ப்பின் மூலமாக இந்த அவைக்கு விளக்கி நாட்டிற்கு உணர்த்தியிருக்கிறீர்கள், உறுப்பினர்களுக்கும் உணர்த்தி இருக்கிறீர்கள்.

தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியோ, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோ கூட்டணி சேர்ந்து இந்த நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டுப் பெரும்பாலான இடங்களைப் பெறவில்லை என்பதற்கு, எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நண்பர் திருநாவுக்கரசு அவர்களும், மற்றும் பல உறுப்பினர்களும் தங்களுடைய விமர்சனங்களைச் சற்று வேகமாகவே செய்திருக்கிறார்கள்.

ஆனால், அதற்காக நான் வருத்தப்படவில்லை. சில நேரங்களிலே, அனுபவங்கள், அடுத்து நாம் எடுத்து வைக்க வேண்டிய அடிகளுக்கு உதவிடக்கூடும்; துணையாக இருக்கக்கூடும் என்ற அளவில் கடந்தகால அனுபவங்களை நாங்கள் இன்றைக்கு எங்களுக்குத் துணையாகக் கொள்கின்றோம்.

முனைப்போடு பயணம் தொடர்வோம்

திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, "நீங்கள் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டுவிட்டீர்கள், எங்களை விட்டுவிட்டீர்கள், புதிய தமிழகம் கட்சியை விட்டுவிட்டீர்கள்" என்றெல்லாம் சொன்னார்.

நாங்கள் புதிய தமிழகத்தை என்றும் விடமாட்டோம். புதிய தமிழகமாகத், தமிழகத்தை ஆக்கவேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புகிறது. அதற்காகத்தான் தன்னுடைய பணியினை ஆற்றிக்கொண்டிருக்கிறது. நடந்து முடிந்ததற்குப் பிறகு, சில விஷயங்களை நாம் ஆராய்ந்து, யார் மீது குற்றம், எவர் மீது குற்றம் என்று ஒருவருக்கொருவர் குறை கூறிக் கொண்டிருப்பதைவிட, நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்கின்ற அந்த முனைப்போடு பயணத்தைத் தொடங்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

அந்த அடிப்படையிலேதான், நடைபெற்று முடிந்த தேர்தலில் ஏற்பட்ட முடிவை இருகூறாகப் பிரித்து, ஒரு முடிவு, தமிழகச் சட்டமன்றத்திற்காக நடைபெற்ற இடைத் தேர்தலில் இரண்டு தொகுதிகளிலும் இந்தக் கூட்டணி வெற்றி பெற மக்கள் ஆதரவு வழங்கியிருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டி, நாடாளுமன்றத்திலே அளித்த வாக்கு, மத்தியிலே ஒரு நிலையான ஆட்சி அவர்களால் எதிர்பார்க்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதையும் கவர்னருடைய உரை விளக்கியிருக்கின்றது.

யாரும் ஏமாறாதீர்

இதனை எல்லோரும் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக்க கழக ஆட்சிக்கு எதிராக மக்கள் இருக்கிறார்கள் என்று எண்ணி யாரும் ஏமாறத் தயாராக வேண்டாம் என்று நான் அவர்களுக்கெல்லாம் வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அவையில், பல பிரச்சினைகள், கொந்தளிப்பான பிரச்சினைகள், பரப்பரப்பான பிரச்சினைகள், இந்தப் பேச்சினால் என்ன விளைவு ஏற்படுமோ என்று நானே அஞ்சுகின்ற அளவிற்குப் பேசப்பட்ட பல பிரச்சினைகள் எல்லாம், பல்வேறு தலைவர்களாலும் உறுப்பினர்களாலும், இங்கே பேசப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குச் செல்வதற்கு முன்பு, நம்முடைய உறுப்பினர்கள் சிலர் தங்களுடைய தொகுதிகளைப் பற்றி எடுத்துச்சொன்ன அந்தச் செய்திகளுக்கு நான் முதலில் முக்கியத்துவம் கொடுக்க விரும்புகின்றேன்.

குறிப்பாக திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, அறந்தாங்கி சர்க்கரை ஆலை என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகின்றேன்; மத்தியிலே இருந்த ஐக்கிய முன்னணி அரசு, அதனுடைய தொழில்துறை அமைச்சர் முயற்சியால் நம்முடைய வேண்டுகோளுக்கு இணங்க, 21.3.97 அன்று ஈ.ஐடி பாரி நிறுவனத்திற்குச் தினசரி 2500 டன் கரும்பு அரவை செய்யும் திறன் உள்ள சர்க்கரை ஆலை ஒன்றை, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திலே நிறுவ அனுமதி அளித்துள்ளது.

அந்த ஆலைக்குக் கரும்பு பயிரிட, கரும்புப் பகுதி ஒதுக்கீடு செய்யும் படி 25.6.97 அன்று ஈ.ஐ.டி. பாரி நிறுவனம், சர்க்கரைத் துறை ஆணையருக்கு விண்ணப்பித்துள்ளது. இந்த விண்ணப்பம் சம்பந்தமாக, அரசால் நியமிக்கப்பட்ட பகுதி ஒதுக்கீட்டுக் குழு, நிலப்பகுதிகளை ஒதுக்கீடு செய்கின்ற அந்தக்குழு பரிசீலித்தது; அரசுக்கு அதனுடைய பரிந்துரையை அனுப்பியுள்ளது. அதன் அடிப்படையில், அறந்தாங்கி ஆலைக்குப் பகுதி ஒதுக்கீடு ஆணை சர்க்கரைத் துறை ஆணையரால் 5.2.98 மற்றும் 17.2.98 அன்று வழங்கப்பட்டுள்ளது.

"கடந்தகால அனுபவங்களை நாங்கள் இன்றைக்குத் துணையாகக் கொள்கிறோம்".

ஈ.ஐடி. பாரி நிறுவனம், அறந்தாங்கி வட்டத்திலே உள்ள குரும்பூர் என்ற கிராமத்தில் இந்த ஆலை அமைக்க ஏதுவாகத் தேவைப்படும் நிலத்தை வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்துள்ளது. மேலும் இந்த ஆலை நிறுவுவதற்கு நிதி நிறுவனங்களிடமிருந்து தேவைப்படும் கடனைப் பெறவும், இந்த நிறுவனம் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது. ஆலை நிறுவுவதற்குத் தேவையான நிலம் வாங்கப்பட்ட பின் ஆலைக்குத் தேவைப்படும் இயந்திரங்களைத் தருவித்து ஆலையை நிர்மாணம் செய்து முடித்து, இந்த ஆலை 1999 -ஆம் ஆண்டு இறுதியில் இயங்கத் தொடங்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தொடக்கத்திலே உரையாற்றிய நம்முடைய சுப்பராயன் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தமிழகத்திலே 8 விழுக்காடு மாத்திரமே நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவது மிகக் குறைவானது என்றும், வேறு சில மாநிலங்களைச் சுட்டிக்காட்டி அங்கெல்லாம் 40 விழுக்காடு, 30 விழுக்காடு வழங்கப்படும்போது, இங்கே மாத்திரம் 8 விழுக்காடு என்ன நியாயம் என்றும் கேட்டார்கள்.

இந்த 8 விழுக்காடு என்பது 1997-98 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலே மொத்த வரி வருவாயிலே 8 விழுக்ககாடு என்பதாகும். அதன்படி உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வகையில் 662 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

இவை தவிர, கேளிக்கை வரியிலே 90 விழுக்காடு, 100.67 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. மேலும் முத்திரைத்தாள் மீதான மேல் வரி, நிலவரி வருவாயிலே தல வரி, தல மேல் வரி, பண்ணைக் காடுகள் வளர்ச்சி வருவாயிலிருந்து ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யும் தொகை, 10-வது நிதிநிலைக் குழுவின் பரிந்துரைகளின்படி உள்ளாட்சிமன்றங்களுக்கான மானியங்கள், குடிநீர் வழங்குவதற்கான கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற மானியம், பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான மானியங்கள், குறைந்த அளவு தேவைத் திட்டத்தின் கீழ் மானியங்கள் போன்ற பல்வேறு மானியங்களின் கணக்கில் 539.24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

உள்ளாட்சிகளுக்கு ரூ. 1,301.91 கோடி

இவ்வாறாக 1997 - 98ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 1301.91 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இது 9 அல்லது 10 சதவீதம்தான் இருக்கும். ஆனால், கர்நாடகத்திலே 36 விழுக்காடு இருக்கிறதே என்று சுப்பராயன் அவர்கள் வினவக்கூடும். அதற்கான விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இங்கே நம்முடைய மாநிலத்தில் எல்லாப் பொறுப்புகளையும் அரசு ஏற்றுக்கொண்டு, சில பொறுப்புக்களைத்தான் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தந்து, அந்தப் பொறுப்புகளுக்கான தொகை ஒதுக்கும்போது 8 சதவீதம் அல்லது 9 சதவீதம் அல்லது 10 சதவீதம் என்கின்ற அளவிற்குத்தான் அது போய் நிற்கின்றது. உதாரணமாக, கர்நாடக மாநிலத்தில் 10ஆம் வகுப்புவரையிலே உள்ள ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கான சம்பளம், அவர்களைப் பற்றிய பொறுப்பு அத்தனையும் மாவட்ட பஞ்சாயத்துக்கள் மூலம்தான் நிர்வகிக்கப்படுகிறது. இங்கே ஆசிரியர்களைப் பஞ்சாயத்திலே ஒப்படைத்தால், நாளைக்கே போர்க்கொடி தூக்குவார்கள். அந்தப் போர்க்கொடிக்கு அடுத்த கொடியாக சுப்பராயனுடைய கொடி நிற்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏற்கெனவே அனுபவப்பட்டு இருக்கின்றோம்.

எம்.ஜி.ஆர் காலத்திலும் சரி, அதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி; ஆசிரியர்களுடைய ஒரு பெரும் கோரிக்கையே, எங்களை ஒன்றியத்திலோ அல்லது உள்ளாட்சி மன்றங்களிலோ ஒப்படைத்து விடாதீர்கள் என்பதுதான். எனவே, அவர்களை எல்லாம் ஒன்றியத்திலே, உள்ளாட்சி மன்றங்களிலே ஒப்படைத்தால், இன்னும்கூட அதிக சதவீதத்தை நிதி ஒதுக்கீடு நாம் அவர்களுக்குச் செய்யமுடியும். அது மாத்திரமல்ல; மருத்துவ மனையிலே கூட, 50 படுக்கைகள் குறைவாக உள்ள எல்லா மருத்துவச் செலவினத்தையும் அங்கெல்லாம் - கர்நாடகா போன்ற மாநிலங்களில், மாவட்டப் பஞ்சாயத்துக்களே ஏற்றுக்கொண்டு உள்ளன.

இதைச் சொல்லும்போது ஒரு கேள்வி எழும். ஏன் அப்படிப்பட்ட உரிமைகளை, ஆசிரியர் இல்லாவிட்டால் மற்ற உரிமைகளை ஏன் ஊராட்சிமன்றங்களுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரக்கூடாது என்று கேட்கக் கூடும். இதற்காகத்தான் ஒரு குழுவையே நாம் இன்றைக்கு அமைத்து இருக்கின்றோம்.

இதற்கிடையில், மேற்கு வங்கத்தைப் பார்த்தால், அங்கே 16 சதவீதம்தான். அவர்கள் பேசிய பிறகு, அங்கெல்லாம் தொடர்புகொண்டு, அதிகாரிகளைவிட்டு, தொலைபேசியில் தொடர்புகொண்டு, கேட்டபோது, மேற்கு வங்கத்திலே 16 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட்டு வருகிறது. அங்கே மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மேற்கு வங்கத்தில் உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக பட்ச பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன என்ற உண்மையை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

அதிக அதிகாரம் வழங்கிடக் குழு

அதுமாத்திரமல்ல; அரசியலமைப்புச் சட்டத்திலே 73, 74-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பெரும்பாலான இனங்கள், உதாரணமாகக் கல்வி, சுகாதாரம் ஆகிய இனங்கள் எல்லாம் உள்ளாட்சி அமைப்புகளிலேதான் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இங்கே மேற்கு வங்கத்தை ஆதரிக்கின்ற கம்யூனிஸ்ட்டுகள் இருந்தாலும் கூட, உள்ளாட்சி மன்றங்களிடத்தில் ஆசிரியர்களை ஒப்படைத்தால், அதை நிச்சயமாக ஏற்கமாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இவைகளை எல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையை நாம் அணுக வேண்டும்.

“அறந்தாங்கி சர்க்கரை ஆலை, 1999 ஆம் ஆண்டு இறுதியில் இயங்கத் தொடங்கும்”.

எனவேதான், இன்னும் என்னென்ன அதிகாரங்களை அவர்களுக்குத் தரலாம் வழங்கலாம் என்பதற்கான குழு, உள்ளாட்சித் துறை அமைச்சரை அமைப்பாளராகக் கொண்டு அமைக்கப்பட்டு இருக்கின்றது. அந்தக் குழுவினுடைய பணிகள் எப்பொழுதோ நடைபெற்று முடிந்து இருக்கவேண்டும். ஆனால், குழு அமைப்பதற்காக ஒவ்வொரு கட்சியினுடைய தலைவருக்கும் கடிதம் எழுதி, உங்கள் கட்சியின் சார்பாக ஒரு உறுப்பினரை வழங்குங்கள் என்று கேட்டபோது, பல கட்சிகளிடமிருந்து பதில் உடனடியாக வரவில்லை; மிகத் தாமதமாகத்தான் வந்தது. எந்தக் கட்சிகள் என்று பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை; யாரும் என்னை ஆவலோடு, அதிர்ச்சியோடு பார்க்கத் தேவையில்லை. எந்தக் கட்சியினுடைய பெயரையும் நான் குறிப்பிடமாட்டேன்.

ஆனால் அப்படி தாமதமாக வந்த காரணத்தால் அந்தக் குழுவினுடைய பணி தொடங்கவும் தாமதம் ஆயிற்று. ஒரு கூட்டமோ அல்லது இரண்டு கூட்டங்களோதான் அந்தக் குழுவினுடைய கூட்டம் நடைபெற்றிருக்கின்றது. அதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிட்டது. ஆகவே அந்தக் குழுக் கூட்டத்திற்கு நேரமில்லாமல் போய்விட்டது. இனி, அந்தக் குழு நம்முடைய சட்டமன்றப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே கூட இடைப்படுகின்ற நேரத்தில் அந்தக்குழுவை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நான்கைந்து தடவையாவது கூட்டி, இன்னும் என்னென்ன அதிகாரங்களை உள்ளாட்சிகளுக்குத் தரலாம் என்பதை நிர்ணயித்து, அரசுக்கு அறிக்கையாக அளிப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.

இங்கே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் மணி அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் - தொழிற்சாலை அமைய வேண்டும் என்பதற்காக, அவர்களும் சரி, குமாரதாஸ் அவர்களும் சரி, நீண்ட நாட்களாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ரப்பரைப் போலவே அந்த ரப்பர் தொழிற்சாலையும் நீண்டுகொண்டே போகின்றது. இருந்தாலும் 1994-ஆம் ஆண்டில் செண்பகராமன்புதூர் என்ற கிராமத்திலே வாகன டயர் திட்டம் ஒன்றை அமைக்க 70 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த முன்பிருந்த அரசு நடவடிக்கை எடுத்தது. நிலச் சொந்தக்காரர்கள் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து, இடைக்காலத் தடையாணையை 1995-ஆம் ஆண்டு பெற்றுவிட்டார்கள்.

ஆனால், அந்தத் தடையாணையை விலக்குவதற்குக் கடந்த கால அரசு விரைவான நடவடிக்கை எடுக்காத காரணத்தால், நிலத்தைக் கையகப்படுத்துவதிலே ஏற்பட்ட தாமதத்திற்காக வேதனைப்பட்டு அங்கே ரப்பர் தொழிலைத் தொடங்க முனைந்த அந்தத் தொழில் முனைவர், இந்தத் திட்டமே தேவையில்லை என்று அதைக் கைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டார். அவர் அந்தத் திட்டத்தைக் கைவிட்டபிறகு, 'டிட்கோ' நிறுவனம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. 'டிட்கோ' நிறுவனம் அந்த நிலங்களுக்கான தொகையை அளித்து, நிலத்தைக் கையகப் படுத்தும் அலுவலரிடம் அந்தப் பொறுப்பை இன்றைக்கு வழங்கியிருக்கின்றது. அதே நேரத்தில், நீதிமன்றத் தடை ஆணையை விலக்குவதற்கும் பெருமுயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.50 கோடியில் தொழில் பூங்கா

அதேநேரத்தில், ரப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழில் பூங்கா (இன்டஸ்ட்ரியல் பார்க்) ஒன்றை அமைக்க இந்த அரசு கருதியுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதற்காக, ஏற்கெனவே கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு அருகில் இன்னொரு 15 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, அவற்றையும் கையகப்படுத்த விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தத் தொழில் பூங்கா - ரப்பர் பூங்கா, சிறிய மற்றும் நடுத்தர ரப்பர் தொழில்கள் அமைக்க முன்வருகின்ற தொழில் முனைவோருக்கு உதவும்.

அமைக்கப்படவுள்ள ரப்பர் தொழில் பூங்கா தடையில்லாத மின்சாரம், நீர்வளங்கள், உற்பத்தியாகும் ரப்பர் தரங்களைப் பிரித்தெடுத்து ஒரே இடத்தில் சோதனை மற்றும் சான்றிதழ் வழங்குகின்ற வசதிகள், பொது நீர் வெளியேற்றம், கழிவு நீர்ச் சுத்திகரிப்பு வசதிகள், தகவல் தொடர்பு வசதிகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டதாக அமையும் என்பதையும், இப்பூங்காவுக்கான பூர்வாங்கமான திட்ட மதிப்பீடு ரூ.50 கோடியாகும் என நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் எடுத்துக் கூறி இதை விரைந்து முடிக்க 'டிட்கோ' நிறுவனம் எல்லாவிதமான முனைப்பான நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இரண்டே வண்ணங்களில் குடும்ப அட்டை

பொதுப்பிரச்சினையாக - தொகுதிப் பிரச்சினைகளாக இல்லாமல், மாநிலம் தழுவிய பொதுப் பிரச்சினையாக, பொதுவாக பொது விநியோகம் பற்றி இங்கே பேசப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே அதைப்பற்றி விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள்.

பேசிய எல்லா உறுப்பினர்களுமே இந்தக் குடும்ப அட்டை, நியாய விலைக்கடைகள், பொது விநியோகம் இவைகள் பற்றி இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இதில் தாமதம் ஆனது உண்மைதான். ஆனால் திட்டமிடுகின்ற நேரத்தில், மூன்று வண்ணங்களில் அட்டைகள் என்று எண்ணித் திட்டமிட்டபோது, அந்த அட்டைகளை அச்சிடுகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்தவர்கள், இதற்குக் காலதாமதம் ஆகும் என்று தெரிவித்த நேரத்திலே, விரைந்து முடித்துக் கொள்ளவேண்டுமென்று நானும் உணவு அமைச்சரும் மற்றும் அதிகாரிகளும் ஒரு ஐந்தாறு தடவையாவது அவர்களிடத்திலே விவாதித்திருக்கின்றோம். இருந்தாலும் கூட, அதை அச்சேற்றுகின்ற பணி விரைந்து முடிக்கப்படவில்லை. அந்த நேரத்திலேதான், இந்த ஆளுநர் உரைக்கு முன்பு எனக்குத் தோன்றிய யோசனையாக, இந்த மூன்று வண்ண அட்டைகள் தேவையா, பச்சை அட்டை, மஞ்சள் அட்டை, இளம்சிவப்பு அட்டை என்று மூன்று அட்டை தேவையா? அவரவர்கள் இஷ்டத்திற்கு, அதாவது 'ஆப்ஷனிலே' ஒரு அட்டை, மற்றவர்களுக்கு அரிசி மற்ற அத்தியாவசியப் பொருள்களைத் தருவதற்கு ஒரு அட்டை என்று இருக்கின்றது போதாதா? ஒருவருக்கு இல்லவே இல்லை என்று சொல்வதற்கு ஒரு அட்டை தேவையா- என்று யோசித்தபோதுதான் வேண்டாம் என்று சொல்கிறவர்களுக்கு இல்லவே இல்லை என்ற நிலையில் அந்த அட்டை வழங்கப்படலாம்.

எனவே, இரண்டு அட்டைகள் போதுமானது என்று அந்த அட்டைகளைக் கணக்கிடும்போது நம்முடைய தாமரைக்கனி குறிப்பிட்டதைப்போல பச்சை மீது வந்துள்ள வெறுப்பால் - வெறுப்பு ஒன்றும் வரவில்லை, என்றைக்கும் வராது. ஏனென்றால் பச்சைப் பசேல் என்றுள்ள இயற்கையைப் பார்ப்பதிலேதான் எல்லோருக்கும் மகிழ்ச்சி. இந்த எண்ணத்தில் அந்த நிறத்தை விலக்கிடவில்லை. இந்தத் திட்டத்தை நாங்கள் மாற்றி, அமைக்க எண்ணியபோது, அச்சடிக்கப்பட்டிருக்கிற அட்டைகளை எத்தனை என்று கணக்கிட்டபோது, எந்த நிறத்தைக் குறைத்தால் இழப்பு குறைவாக இருக்கும் என்று எண்ணியபோது, பச்சை நிற அட்டைகள்தான் குறைவாக அச்சடிக்கப்படும். ஏனென்றால், இல்லை என்று சொல்கிற கார்டுகள்தான் குறைவாக இருக்கும். ஆகவே அதை விலக்கிவிட்டு, மற்ற நிறங்களை அச்சிடலாம் என்றவொரு முடிவுக்கு வந்து, மஞ்சள், இளம் சிவப்பு என்ற அந்த இரண்டு வண்ண அட்டைகளை வெளியிடுவது என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது.

இதிலே வருமான அடிப்படை பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இன்றைக்குப் பத்திரிக்கையிலே பார்த்தேன். நம்முடைய நண்பர் ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் எம்ஜிஆர் மன்றத்தினுடைய தலைவர், அவருடைய கட்சி சார்பாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி வெளியிட்டிருக்கிறார்கள். இந்த வருமான அடிப்படையே கூடாது. எல்லோருக்கும் கார்டுகள் வழங்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இங்கே உணவு அமைச்சர் எடுத்துக் காட்டியதுபோல், மத்திய அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குக் குறைந்த விலையில் உணவு வழங்கவேண்டும். உணவு தானியங்கள் வழங்க வேண்டும், அது அரிசி ஆனாலும், கோதுமை ஆனாலும் - என்கிற முடிவை ஐக்கிய முன்னணி அரசு எடுத்தபோது, அந்த முடிவு எடுக்கிற கூட்டத்தில் நானும் கலந்துகொண்டேன் என்ற நிலையில் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் என்கிற முறையில் மாத்திரமல்ல; நம்முடைய மாநிலத்தினுடைய முதலமைச்சர் என்கிற முறையிலும் நான் எடுத்துவைத்த கருத்து, 'ஏற்கெனவே நீங்கள் சொல்கின்ற விலையைவிடக்குறைவான விலைக்குத்தான் தமிழ்நாட்டிலே நாங்கள் அரிசி விற்பனையை நியாய விலைக்கடைகளிலே நடத்திக் கொண்டிருக்கிறோம்' என்பதை எடுத்துக்காட்டி, நீங்கள் கொண்டு வருகின்ற இந்த முறையின் காரணமாக எங்களுக்கு மத்திய அரசு வழங்குகின்ற அரிசியைக் குறைத்து விடக்கூடாது என்ற உத்திரவாதத்தைப் பெற்றுக்கொண்ட பிறகுதான் - நான் அவர்கள் எடுத்த அந்த முடிவுக்கே ஒப்புதல் அளித்தேன்.

மஞ்சள் அட்டை வைத்திருப்பவர்கள் விரும்பினால் அரிசி

அந்த உத்திரவாதத்தை, அன்றையப் பிரதமரும், உணவு அமைச்சரும் கூட அந்தக் கூட்டத்திலே எனக்கு வழங்கினார்கள். அந்த உத்திரவாதத்தின்படி நமக்கு அவர்கள் அரிசி வழங்கிவருகிறார்கள் என்பதை ஆளுநர் உரையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருப்பதை உறுப்பினர்கள் எல்லோரும் மிக நன்றாக அறிவீர்கள். இந்த வருமான வரம்பு, வறுமைக்கோடு எது என்பதை நிர்ணயிப்பதற்காக மத்திய அரசால் வெளியிடப்பட்ட ஒன்றாகும். இந்த வருமான வரம்பு இருக்கின்ற காரணத்தினால், 1250 ரூபாய் இருப்பவர்களுக்கு மாத்திரம்தான், இந்த 'சிகப்பு அட்டை' அரிசி மற்ற அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படும் என்று இல்லை. அதற்கு மேலாக மஞ்சள் அட்டை வைத்திருப்பவர்கள் கூட அவர்கள் விரும்பினால் - 'ஆப்ஷன்' அவர்களுக்கு அரிசிதான் வேண்டும் என்றால் வாங்கிக் கொள்ளலாம்.

எனவே, அப்போது எனக்கு அரிசிதான் வேண்டும் என்று மஞ்சள் அட்டைக்காரர் சொல்வாரேயானால், மஞ்சள் அட்டையும், இளம் சிகப்பு அட்டையும் ஒரே தரம்தான். அப்போது - 'இல்லை, இல்லை எனக்கு வேண்டாம். எனக்குத் தேவையில்லை' என்று அவர்களாக முன்வந்து வேண்டாம் என்று சொன்னால் தவிர, அவர்களுக்கு அரிசி வழங்குவது நிறுத்தப்பட மாட்டாது. மஞ்சள் அட்டைக்கும் அரிசி உண்டு என்பதை நான் மிகத் தெளிவாக இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

வருமான அடிப்படையிலே இருக்கின்ற இந்த முறை தீது. இதனால் கெடுதி ஏற்படும் என்ற விமர்சனத்திற்கு எள்ளளவு இடமுமில்லை. அப்படி யாரும் அதற்காக வருத்தப்படத் தேவையில்லை. அதற்காக அதிர்ச்சி அடையத் தேவையில்லை என்பதையும் இந்த விளக்கத்தின் மூலமாக அவர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரத்திலே இந்த அட்டை வழங்கத் தொடங்கப்பட்டு, விரைவிலே முடிவுறும் என்று மாதக்கணக்கிலே, முதலிலே சொல்லப்பட்டது உண்மைதான்.

பழைய அட்டைகளுக்கும் ரேஷன் பொருட்கள்

ஆனால், எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட காலதாமதத்தால் சற்று அந்த நாட்களை நீட்டிக்க வேண்டிய இன்றியமையாமை இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்காக இங்கே நம்முடைய நண்பர் அழகிரி அவர்கள் இன்றைக்குக் குறிப்பிட்டதைப்போல, இந்த இடைக்காலத்திலே யாரும் குடும்ப அட்டை - இல்லாமல் அவதிப்படுகின்ற நிலை நிச்சயமாக வராது. ஏனென்றால், ஏற்கெனவே இருக்கின்ற அட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் நியாயவிலைக் கடைகளிலே அவர்களுக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இன்றைக்கும் இருக்கின்றது. நாம் அவர்களுக்கு மேலும்

உதவிகரமாகவும், அதே நேரத்திலே அரசாங்கத்தினுடைய பொருளாதார இழப்பின் சுமையைக் குறைப்பதற்காகப் போலி அட்டையைக் கண்டுபிடிப்பதற்காகவும்தான் இந்த முறையை நாம் கொண்டுவந்திருக்கின்றோம் என்பதை நீங்கள் உணரவேண்டும் .

சென்னை மாநகரத்தில், ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதைப்போல மே முதல் தேதி முதல் இந்த அட்டைகள் வழங்கப்படும். அது, ஜூன் மாதம் முதல் தேதி முதல் நடைமுறைக்கு வரும். அந்தப் பொருட்களை வாங்கிக் கொள்ளக் கூடிய அளவுக்கு நடைமுறைக்கு வரும். அதேபோல் சென்னை மாநகரத்திலே மே முதல் தேதி வழங்கப்படும் அதே காலகட்டத்தில், மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய மாநகரப் பகுதிகளிலும் அதே முதல் தேதி குடும்ப அட்டைகள் வழங்கப்படும். திருநெல்வேலி, மாநகரப் பகுதியில் மே மாதம் 16ஆம் தேதி முதல் இந்தக் குடும்ப அட்டை வழங்கப்படும்.

மாவட்டங்களில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் புதிய குடும்ப அட்டைகள், இந்த வண்ண அட்டைகள், 1.6.98 முதல் வழங்கப்படும். கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய 8 மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம்கூட 1.6.98ல் இந்த அட்டைகள் வழங்கப்பட்டுவிடும்.

நான் குறிப்பிட்ட இந்த 8 மாவட்டங்களில் மாத்திரம் 1.7.98 முதல் இந்தக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

அனைவருக்கும் ஜூலை மாதத்திற்குள் குடும்ப அட்டைகள்

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல, தற்போதுள்ள குடும்ப அட்டைகளை அதுவரையிலே நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உத்தரவாதத்தினையும் நான் தருகின்றேன். எனவே, மாநிலம் முழுவதும் இந்தப் புதிய இரு வண்ணக் குடும்ப அட்டைகள் வழங்கும் பணி, மே மாதம் முதல்தேதி தொடங்கப்பட்டு, ஜூலை மாதத்திற்குள் முடிக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் அழகிரியும், மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்களும் இன்னும் சில குடும்பங்கள், குடும்ப அட்டைகள் இல்லாமலே இருக்கின்றார்கள் என்ற குறையை இங்கே எடுத்து காட்டியிருக்கின்றார்கள். கடந்த சில ஆண்டுகளாகப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் உள்ளன என்ற கருத்தும் ஆளும் கட்சி சார்பிலும், எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள உறுப்பினர்கள் சார்பிலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அப்படி, இதுவரையில் குடும்ப அட்டைகளைப் பெறாமல் விட்டுப் போன குடும்பங்களுக்கு, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் ஏப்ரல் மாதத்திலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவர்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் ஜூலை மாதத்திற்குள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதற்கான அறிவிப்புகளும் விரைவிலே வரும் என்பதையும் மாநகராட்சிப் பகுதிகளில் விடுபட்டுப் போன குடும்பங்களிலிருந்து புதிய குடும்ப அட்டைகள் வழங்க ஏற்கெனவே மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தக் குடும்ப அட்டை பிரச்சினைக்கு அடுத்து, ஏன்-அடுத்து என்று கூட சொல்லமுடியாது, இதைவிட சற்று மேலாகவே கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகள் பற்றி இங்கே பேசப்பட்டு இருக்கின்றது. நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் சுப்பராயன் அவர்களும், பெரியசாமி அவர்களும் - ஏன் எல்லோரும் நம்முடைய திருநாவுக்கரசு போன்றவர்கள், அத்தனை எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்களும், இந்தப் பிரச்சினையைப் பற்றி மிகுந்த உருக்கத்தோடு, கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்களே கழகத்திற்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் உள்ள ஈடுபாட்டைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

1955 - 56ம் ஆண்டில், அறிஞர் அண்ணா அவர்களும், நானும், மற்றும் நம்முடைய பேராசிரியர் போன்ற கழகத்தினுடைய தலைவர்களும், கைத்தறித் துணிகளைத் தலையிலும், முதுகிலும் சுமந்து, ‘கைத்தறி வாங்கலையோ கைத்தறி’ என்று அன்றைக்கு உடுமலை நாராயண கவிராயர் எழுதிய பாடல் ‘செந்தமிழ் நாட்டுக் கைத்தறிச் சேலை வேட்டிகள் வாங்கிடுவீர், நம் கைத்தறியாளர் சேமமுறவே வாங்கிடுவீர்’ என்ற பாடலைப் பாடிக்கொண்டு, அண்ணா அவர்கள் திருச்சியிலும், நான் சென்னையிலும், கைத்தறித் துணிகளை விற்றோம். அன்றைக்கு ஒருநாள் விற்பனை 1 இலட்சம் ரூபாய். அன்றைக்கு 1 இலட்சம் ரூபாய் என்றால் இன்றைக்கு எவ்வளவு என்று எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். 1 இலட்சம் ரூபாய்க்கு அன்றைக்கு கைத்தறித் துணிகளை விற்று, தேங்கிக் கிடந்த ‘கைத்தறித் துணிகளுக்கு ஒரு ‘மவுஸ்’, ஒரு மகத்துவத்தை ஏற்படுத்துகின்ற நிலையை அன்றைக்கு நாங்கள் உருவாக்கினோம்.

அப்படி விற்றபோதுதான், அதுவரையிலே கதர் ஆடையிலேயிருந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள், சென்னையிலே நான்விற்ற கைத்தறி ஆடைகளை அன்றைக்கு அவருடைய இல்லத்திலே 5 ஆயிரம் ரூபாய் அளவிற்கு வாங்கி, அதற்குப் பிறகு, கைத்தறி கட்ட ஆரம்பித்தார் என்ற ஒரு வரலாற்றுச் செய்தியையும் உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்றைய நிலையில் உலகம் முழுவதும் இந்தத் துணித் தொழிலில் ஒரு முடக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். கைத்தறியாளர்களுடைய குறைகளைத் தமிழகத்திலே போக்குவதற்கு இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளில் ஒன்றிரண்டை நினைவுபடுத்துவது என்னுடைய கடமையாகும்.

“உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் வழங்கிடக் குழு அமைப்பு”

கைத்தறியாளர் குறைகளைப் போக்கிட அரசு எடுத்த நடவடிக்கை

89 - ஆம் ஆண்டிலேதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை எளியவர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்குவது என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, விரிவாக அது நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தத் திட்டத்தின் கீழ் 97 - 98ல் ரூ.92.60 கோடி மதிப்புடைய சேலைகளும், வேட்டிகளும் தமிழகத்திலே உள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை செய்யப்பட்டு, எந்தவிதமான புகாருக்கும் இடமில்லாமல் நல்ல தரமான வேட்டிகள், சேலைகள் வழங்கப்பட்டது. சில பேருக்கு வழங்கப்பட விட்டுப் போயிருக்கலாம். ஆங்காங்கே உள்ள குறைகளின் காரணமாகத் தரமான வேட்டி, சேலைகள் நடுத்தர வர்க்கத்தினர் கூட எங்களுக்குத் தரக்கூடாதா என்று கேட்கின்ற அளவிற்கு அவ்வளவு தரமான வேட்டிகளும், சேலைகளும், ரூ.92 கோடிக்கு அத்தனையும் நெசவாளர் சங்கங்கள், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலேதான் உற்பத்தி செய்து தரப்பட வேண்டுமென்று கூறப்பட்டு, ரூ.92 கோடி அவர்களுக்குப் போய்ச்சேர்ந்திருக்கிறது.

அதேபோல் 98 - 99 ஆம் ஆண்டு திட்டப்படி, வேட்டி சேலை இலவசமாக வழங்கப்படும் திட்டப்படி இந்த சங்கங்களுக்கே அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. ஒரு மீட்டர் துணி கூட வெளி மாநிலங்களிலிருந்தோ, தனியாரிடமிருந்தோ கொள்முதல் செய்யப் படவில்லை என்பது இந்த அரசு கைத்தறி நெசவாளர்கள் மீது கொண்டுள்ள அக்கறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதை நான் இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் இலவசச் சீருடைகளுக்காக ரூ.56.74 கோடி மதிப்புடைய 188 இலட்சம் மீட்டர் துணிகள் தமிழக நெசவாளர்களால்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் ஆகிய துறைகள் நடத்துகின்ற பள்ளி மாணவ மாணவிகளுக்குச் சீருடை வழங்குகின்ற திட்டத்திற்கு ரூ.6.83 கோடி வழங்கப்பட்டு, 22 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் தமிழக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமேதான் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

இவைகள் எல்லாம் துணிகள் தேங்கிக் கிடக்கக் கூடாது என்பதற்காக, நெசவாளர் களுக்கே போய்ச் சேரவேண்டும் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே போய்ச் சேரவேண்டுமென்பதற்காக, ஒரு மீட்டர் துணி கூட வெளியிலே வாங்காமல் அவர்களுக்கே போய்ச் சேர இந்த அரசு வகுத்த வழிகள் ஆகும்.

ஆண்டு முழுவதும் 20 சதவிகிதத் தள்ளுபடி

அது மாத்திரமல்லாமல் கைத்தறித் துணிகளுடைய விற்பனையை மேம்படுத்த இந்த அரசு உச்சவரம்பு இல்லாமல் ஆண்டு முழுவதும் ‘ரிபேட்’ 20 பர்செண்ட் - 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கி ஆணை பிறப்பித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இதன் விளைவாக 97-98 ஆம் நிதியாண்டில் முதல் 5 மாதங்களில், அதாவது 1.4.97 முதல் 31.8.97 முடிய ரூ.147 கோடியாக இருந்த விற்பனை அடுத்த 6 மாதங்களில் 1.9.97 முதல் 28.2.98 முடிய ரூ.235 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை நான் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதாவது இந்த 20 விழுக்காடு ஆண்டு முழுவதும் என்று ஆக்கிய காரணத்தால் அதிக விற்பனை ரூ.88 கோடிக்கு ஆகியிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அது மாத்திரமல்ல, கூட்டுறவுச்சங்க நெசவாளர்களுக்கு 1.4.97 முதல் 10 விழுக்காடு அகவிலைப்படியும், 1.10.97 முதல் அடிப்படை கூலியிலே 10 விழுக்காடு உயர்வும் அளிக்கப் பட்டுள்ளது. கூட்டுறவு நெசவாளர் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்து, ஓய்வுபெறும் நெசவாளர்களுக்கு மாதம் ரூ.150 ஓய்வூதியம் வழங்கி வருகின்றது. அதை - அந்த ஓய்வுபெறும் வயதை 58-லிருந்து 60-ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது 16.6.96 முதல்.

நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத்தொகை 15,000 ரூபாய் என்பது 18.9.96 முதல் இந்த அரசினால் 25,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு உதவிகளைச் செய்தும்கூட, இந்த அளவிற்குப் பக்கபலமாக இருந்தும் கூட அவர்களுக்கு இன்னமும் முழுமையாகத் துன்பம் தீர்ந்தபாடில்லை என்பதை உறுப்பினர்களைப் போலவே நானும் உணர்ந்து வருத்தப் படுகின்றேன்.

நெசவாளர்கள் வளம்பெறக் குழு

எனவே, இவைகளை நல்லமுறையில் ஆராய்ந்து அவர்களுடைய வாழ்விலே வளம் சேர்க்கவும், நலம் சேர்க்கவும் அவர்களுக்கு எளிதாக நியாய விலையிலே நூல் கிடைக்கவும், அவர்களிடம் தேங்கிக் கிடக்கும் துணியைக் கொள்முதல் செய்வதற்கும், அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்கவும், அவர்களுக்கு தேவையான கடன் வசதி எளிதில் பெறவும் என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றிப் பரிசீலித்து, இந்த அரசுக்கு ஆலோசனை களையும், பரிந்துரைகளையும் வழங்குவதற்காக, நெசவாளர்களுடைய பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றினை அமைத்து, அந்தக் குழு மிக மிக விரைவில் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே அரசுக்கு அறிக்கை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படும்.

அந்தக் குழு உறுப்பினர்கள் யார், யார் என்பதை அடுத்த நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிடுகிறேன். அதற்குள்ளாக அவர்களை யெல்லாம் கலந்துபேசி, அந்த உறுப்பினர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்படும். அந்தக் குழுவின் பரிந்துரைகளைக் கொண்டு, நெசவாளர் துயர் நீங்க நல்ல முடிவுகளை நாம் எல்லோரும் சேர்ந்து எடுப்போம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

“ரப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழில் பூங்கா ஒன்று அமைக்கப்படும்”.

இந்த அவையில் (நேஷனல் அஜெண்டா) பற்றி விவாதிக்கப்பட்டிருக்கின்றது. இதுபற்றி நேற்றைக்கு முன் தினம் நடைபெற்ற விவாதத்தில் சில விளக்கங்களை நான் தந்திருக்கின்றேன். இந்த நேஷனல் அஜெண்டா 17 கட்சியினுடைய தலைவர்கள் கையெழுத்திட்டு, வெளியிட்டுள்ள ஒன்றாகும். வாஜ்பாய் அவர்கள், அத்வானி அவர்கள், செல்வி ஜெயலலிதா அவர்கள், வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள், வை.கோ. அவர்கள், டாக்டர் ராமதாஸ் அவர்கள் என்று, 17பேர் கையெழுத்திட்டுள்ள அறிக்கை ஆகும்.

தமிழக நலனுக்கு விரோதமாக ‘நேஷனல் அஜெண்டா’

இந்த நேஷனல் அஜெண்டாவில் என்னென்ன திட்டங்களைச் சேர்க்கவேண்டும் என்ற நிபந்தனை விதித்து, அது சேர்க்கப்படாத சூழ்நிலையைப் பார்க்கும்போது, சேர்க்கப்பட்டதும் தமிழக நலன்களுக்கு, சமுதாய நலன்களுக்கு, விவசாய நலன்களுக்கு விரோதமாக ஆக்கப்பட்டிருப்பதைக் காணும்போது, இந்தக் கோரிக்கைகளை வைக்காமலேயே இருந்திருக்கலாமே என்று எண்ணத்தோன்றுகிறது.

ஏதோ முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சொன்னார் என்பதற்காக நான் போட்டி போட்டுக்கொண்டு அதை எதிர்க்கவேண்டுமென்று கருதுகின்றவன் அல்ல. உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்னைப் பற்றி. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மாற்றம் ஏற்பட்டு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, காவிரிப் பிரச்சினையிலே அவருக்குக் கை கொடுக்கின்ற வகையிலே நடந்து கொண்டதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். அதுபோல அவரும், இதே அவையில், இதே இடத்தில் பேசிய பேச்சு காவிரிப் பிரச்சினையானாலும், வேறு பல பொதுப் பிரச்சினைகளிலானாலும், அதிமுகவும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருக்கும் என்று சொன்ன சொல் இன்னமும் என்னுடைய செவிகளில் ரீக்காரம் செய்து கொண்டுதான் இருக்கிறது.

அந்த அளவிற்குக் காவிரிப் பிரச்சினையிலே ஒருமித்த கருத்து இருந்தது. எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்து, இதைப்பற்றி விவாதத்திற்கு அழைத்தபோதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பிரதிநிதிகள் சென்றிருக்கிறார்கள். பேசியிருக்கிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சர்வ கட்சிக் கூட்டங்கள் கூட்டப்பட்டு, அதற்கு அழைப்பு அனுப்பியபோதெல்லாம் ‘நீ காவிரிப் பிரச்சினைக்குத் துரோகம் செய்து விட்டவன்; ஆகவே, அந்தச் சர்வ கட்சி கூட்டத்திலே கலந்துகொள்ள முடியாது’ என்று அறிவித்து, அப்படி எழுதப்பட்ட கடிதங்களை வெளிப் படையாகவே பத்திரிகைகளுக்குக் கொடுத்து, அந்தக் கூட்டங்களிலே கலந்துகொள்ள மறுத்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள்.

இங்கேயேகூட, ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1989-90-ல், வி.பி.சிங் அவர்கள் அங்கே பிரதமராக இருந்தபோது, நடுவர் மன்றம் அமைக்கப்பட வேண்டு மென்பதற்காக, பொதுப்பணித்துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழு நம்முடைய தீர்மானத்தை எடுத்துக்கொண்டு டெல்லிக்குச் சென்ற நேரத்தில், வருவதாக ஒப்புதல் அளித்த எஸ்.ஆர்.இராதா-அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.

முதலில் கொஞ்சநாள் தம்பி திருநாவுக்கரசு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அதற்குப் பிறகு எஸ்.ஆர்.இராதா அவர்கள் என்று நினைவு. அவரும் வருவதாகச் சொல்லி எல்லோருக்கும் சேர்த்து - டெல்லிக்குச் செல்ல விமானத்திற்கான பயணச்சீட்டு பெறப்பட்டு, கடைசி நேரத்திலே தாங்கள் வர இயலாது என்று கூறியது மாத்திரம் அல்ல; எங்களோடு வர இருந்த காங்கிரஸ் நண்பர்களையும் வரவிடாமல் அன்றைக்குத் தடுத்துவிட்டார்கள்.

பொதுவான பிரச்சினைகளைப் புறக்கணித்தது இல்லை

அன்றைக்கு ஒரே ஒரு காங்கிரஸ் எம்.பி. வைஜயந்தி மாலா அவர்கள்தான், துரைமுருகனுடைய தலைமையில் சென்ற அந்த தூதுக் குழுவினுடைய சந்திப்பிற்கு வி.பி.சிங் அவர்களுடைய அலுவலகத்திற்கு வந்தார்கள். மற்றவர்கள் யாரும் அன்றைக்கு வரவில்லை. அப்படிப் புறக்கணிக்கப்பட்டது. ஒரு பெரிய பிரச்சினை, பொதுவான பிரச்சினை; அரசியல் கண்ணோட்டத்தோடு அன்றைக்கு அணுகப்பட்ட காரணத்தால் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் என்றைக்கும் நாங்கள் அப்படிப் புறக்கணித்தது இல்லை.

இந்தப் பொதுவான பிரச்சினைகளில் எங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூற அரசோடு சேர்ந்து ஒத்துழைக்க எதிர்க்கட்சியாக இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் புறக்கணித்ததும் இல்லை; ஒதுங்கியிருந்ததும் இல்லை. எங்களுடைய கருத்துக்களை வேகமாக எடுத்துக் கூறியிருக்கலாம். ஆனால் ஒன்றாகச் சேர்ந்து செய்ய வேண்டிய முயற்சிகளில் நாங்கள் என்றைக்கும் விட்டுக் கொடுத்தது இல்லை. அந்த வகையிலே இன்றைக்கு இந்தக் காவிரிப் பிரச்சினையில் அதிகம் நான் பேச விரும்பவில்லை. நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையொட்டி நேற்றைய முன்தினம் எழுந்த சர்ச்சையிலும் நீண்ட விளக்கத்தை நான் வழங்கியிருக்கிறேன். ஆனால் கேட்டது என்ன? கிடைத்தது என்ன? - என்பதைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டும்.

காவிரிப் பிரச்சினையில் நீதி வழங்கப்பட வேண்டும். அது இந்த அஜெண்டாவிலே வரவேண்டும். இந்த தேசியத் திட்டத்திலே வரவேண்டும் என்று செல்வி ஜெயலலிதா அவர்கள் வாதாடுகின்றார்; போராடுகின்றார்; பத்திரிகையிலே செய்தி வந்தது. தனிப்பட்ட சில பேருடைய மந்திரி பதவிகளுக்காக அல்ல; தமிழ்நாட்டினுடைய பொதுப் பிரச்சினைக்காக வாதாடுகிறேன் என்று சொன்னபோது அதைக் கேட்க இனிப்பாக இருந்தது.

“காவிரி” என்ற ஒரு சொல்லையே தேசிய திட்டத்திலே காணவில்லை!

ஆனால் நடைபெற்றிருப்பது என்னவென்றால் காவிரி என்ற ஒரு சொல்லையே தேசிய திட்டத்திலே காணவில்லை. குடகிலேயிருந்து பூம்புகார் வரையிலே நீண்டு பரந்து வந்துகொண்டிருக்கின்ற அந்தக் காவிரி இந்தச் சிறிய ஏட்டில் ஒரு இடத்திலேகூட காவிரி என்கின்ற 3 எழுத்துத் தமிழையோ அல்லது ஆங்கிலத்திலே Cavuery என்ற சொல்லையோ இதிலே காண முடியவில்லை. இரண்டு நாளைக்குமுன்பு தினமணி பத்திரிகையிலே பார்த்தேன். அதிலேகூட கர்நாடகத்திலே முதலமைச்சர் என்ன சொல்கிறாரோ அதைத்தான் இந்தத் தேசியத் திட்டத்திலே அவர்கள் ஏற்றியிருக்கிறார்கள் என்று தினமணிகூட தீட்டியிருக்கிறது. படித்துப் பார்த்தேன்.

அது மாத்திரம் அல்ல; கர்நாடகத்தினுடைய குரல் இன்றைக்கு ஹெக்டே மூலமாக அங்கே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த ஹெக்டேவினுடைய குரல்தான் இந்தத் திட்டத்திலே இருப்பதாக என்னால் உணர முடிகிறது. உணர முடிகிறது என்ன, உண்மையும் அதுதான். என்ன இருக்கிறது?

`We will not adopt in a National Water Policy which provides for effective and prompt settlement of disputes" என்றுதான் இருக்கிறது. அந்தத் தேசிய நதிநீர்க் கொள்கை என்பது Water Policy என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று தான். அதை யாரும் மறுக்கவில்லை; தேசிய நதிநீர் கொள்கையை யாரும் மறுக்கவில்லை; வெறுக்கவில்லை; அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்.

ஆனால் அதை வைத்து அந்தத் தீபத்தை வைத்து இந்த வீட்டைக் கொளுத்திவிடக்கூடாது. பார்ப்பதற்குத் தீபம்தான். ஆனால் தீபம் என்னுடைய வீட்டிடைக் கொளுத்தப் பயன்பட்டால் தடுத்தேதான் தீருவேன் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட்டாக வேண்டும். தீபம் என்பதற்காக வீட்டைக் கொளுத்த முடியுமா?

பட்டேல் என்ன சொல்கிறார், கர்நாடகத்தின் முதலமைச்சர் என்ன சொல்கிறார்; கர்நாடக மாநில அரசு என்ன சொல்கிறது? இப்போது ஒன்றும் இந்தப் பிரச்சினையை எடுக்கவேண்டாம்; ‘பேச்சு வார்த்தைக்கு வா நான் சொல்வதைக் கேள்; ஏற்றுக்கொள்’ என்றனர். பேச்சு வார்த்தைக்கு நாம் மறுத்தபோது கூட உச்சநீதிமன்றம்தான் தாக்கீது தந்தது, பேசுங்கள் என்று. பேசாவிட்டால் உச்சநீதிமன்றம் தவறாகக் கருதிக்கொள்ளும் என்று பேசிப் பார்த்தோம். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை. உச்சநீதிமன்றத்திற்குச் சென்று சொன்னோம். பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை. உங்கள் தீர்ப்பை வழங்குங்கள் என்று சொன்னோம். உச்சநீதிமன்றம் மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்டது. ஐக்கிய முன்னணி அரசைப் பார்த்துக் கேட்டது.

ஐக்கிய முன்னணி அரசில் கர்நாடகத்தைச் சேர்ந்த ஜனதாதளத் தலைவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தேவகவுடா - ஐக்கிய முன்னணி கட்சியினுடைய தலைவர் அவர்தான். அவர் பிரதமர் பதவியிலிருந்து விலக்கப் பட்டபோது நானும், மூப்பனார் அவர்களும்தான் அவரை முன்மொழிந்து, வழிமொழிந்து ஐக்கிய முன்னணியினுடைய சேர்மனாக, இந்தக் குழுவினுடைய தலைவராக அவர் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு - அவர் இருக்கிறார்.

அவர் இருந்தபோது கூட மத்திய அரசு அவருக்காக வளைந்துகொடுக்காமல் - தேவகவுடாவுக்காக வளைந்து கொடுக்காமல் ஐக்கிய முன்னணி அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்து சுப்ரீம் கோர்ட்டில் கொடுத்திருக்கிறது. என்ன திட்டம்? ஒரு அத்தாரிட்டி - Cavuery Valley Authority. அது என்ன சொல்கிறது? அத்தாரிட்டியினுடைய வேலை என்ன? நடுவர்மன்றம் கொடுத்திருக்கின்ற இடைக்கால அவார்டு இருக்கிறதே; அந்தத் தீர்ப்பு இருக்கிறதே; அதை எப்படி நிறைவேற்றுவது - நிறைவேற்றுவதா; இல்லையா; என்பதல்ல. எப்படி நிறைவேற்றுவது என்பதற்காகத்தான் அந்தத் திட்டத்தை மத்திய அரசு கொடுத்தது.

இதைப்பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று மத்திய அரசு நம்முடைய மாநிலத்தைக் கேட்டது. நாம் அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாக இருந்ததால் நாம் ஏற்று கொண்டிருக்கிறோம். அதைப்போலவே புதுவை மாநிலம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. கேரள மாநிலம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கர்நாடக மாநிலம் ஏற்றுக்கொள்ளாமல் இழுத்தடித்தார்கள். இழுத்தடிக்கும்போது அது சொல்லுவது எல்லாம் அத்தாரிட்டி வேண்டாம், கமிட்டி போதும். அது மாத்திரம் அல்ல; இந்தப் பிரச்சினையை தேசிய நதிநீர் கொள்கை வகுக்கப்பட்ட பிறகு பேசிக் கொள்ளலாம் என்பதுதான். இது இப்போது ஹெக்டே அவர்கள் வாயிலாக இந்த நேஷனல் அஜெண்டாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அன்றைக்கு முழங்கிய அந்த முழக்கம் இதில் இடம்பெறவில்லை என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து இந்தப் பிரச்சினைக்கு அவர் பாடுபடவேண்டும்; போராட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறனே தவிர, அவரை இழித்தும், பழித்தும் பேசுவதற்காகச் சொல்லவில்லை. ஏன் என்றால் தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் அக்கறையோடு செய்ய வேண்டும் எனக்குள்ள சந்தேகம் எல்லாம் நடுவர் மன்றம் நாம் கேட்டபோது அம்மையார் ஒரு முறை சொன்னார்கள். அப்படியே நடுவர் மன்றம் கொடுத்தாலும்கூட அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு ஒன்றுக்கு விதியில்லை என்று ஒருமுறை அம்மையார் சொன்னார்கள். அதையெல்லாம் நினைத்தால் பயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட உணர்வோடு இதை அணுகினால் நம்முடைய பிரச்சினை நல்ல முறையில் தீருமா என்ற அச்சமே தவிர வேறு அல்ல.

அடுத்து பி.சி. மற்றும் எம்.பி.சிக்கு இட ஒதுக்கீடு. இந்த இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலே 69 சதவீதத்திற்கான சட்டம் கூட நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தினுடைய 9வது அட்டவணையில்கூட சேர்க்கப்பட்டது. இப்படி சேர்க்கப்பட்ட பிறகும் கூட உச்சநீதிமன்றத்திலே நமக்குக் கிடைத்த முடிவு என்ன? இந்த முடிவுக்கு யார் காரணம்? 17.11.94 அன்று உச்சநீதிமன்றத்திலே இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது

உச்சநீதிமன்றம் தன்னுடைய ஆணையில் என்ன குறிப்பிட்டிருக்கிறது என்றால் -

It is significant to notice that after the order dated 18th August 1994 was passed the state itself moved for modification of that order in circumstances stated in its application. That application was filed on 23rd September 1994. In that application no plea was raised based upon the inclusion of the said Act in the 9th Schedule and Orders were obtained on 3rd October 1994.

இப்படி ஒரு சட்டம் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இருப்பதையே இவர்கள் யாரும் உச்சநீதிமன்றத்திலே சுட்டிக்ககாட்டவில்லை என்று உச்சநீதிமன்றம் சொல்கிறது. சுட்டிக்காட்டாத காரணத்தால் நாம் இந்த 69 சதவிகிதத்தைப் பெற முடியாதவர்களாக ஆகிவிட்டோம் என்று நான் மட்டுமல்ல; நானும், அருமை நண்பர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் நம்முடைய தோழமைக் கட்சித் தலைவர்கள் அத்தனைப் பேரும் ஒரே குரலிலே முழங்கியிருக்கிறோம். இதை யாரும் மறந்து இருக்கமுடியாது. அதற்காகப் போராட்டம் கூட நடத்தியிருக்கிறோம். இதைச் சுட்டிக்காட்டவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். "உச்சநீதிமன்ற ஆணை என்னவென்றால் 18.8.94 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டதற்குப் பின்னர் மாநில அரசே அந்த ஆணையை மாற்றம் செய்வதற்கான சூழ்நிலைகளைக் குறிப்பிட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்தது கவனத்திற்குரியது. அந்த மனு 23.9.94 அன்று தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பிடப்பட்ட சட்டம் இந்த 69 சதவீத சட்டம் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளதையொட்டி எந்தவிதக் கோரிக்கையும் அந்த மனுவிலே எழுப்பப் படவில்லை."

உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டுகிற அளவுக்கு

இப்படி உச்சநீதிமன்றமே சுட்டிக்காட்டுகின்ற அளவுக்கு, கடந்த கால அரசு பிழை புரிந்துவிட்டது என்பதை யாரும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. ஆனால் அதை இடம்பெறச் செய்வோம், அது எங்களுடைய நிபந்தனைகளில் ஒன்று; இல்லாவிட்டால் பதவியேற்பு விழாவிற்கே வரமாட்டோம் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அஜண்டாவைப் பார்க்கும்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், என்ன இருக்கிறது என்றால், அன்றைக்குத் தீரன் குறிப்பிட்டதைப் போல -

`We will provide legal protection to existing percentages of reservation in educational insitutions at the state level"

- என்றுதான் இருக்கிறது. ஏற்கெனவே, கல்வி, வேலை வாய்ப்பு இரண்டிலேயும் இருந்தது. இந்த அஜண்டாவைப் படித்த பிறகு, எனக்கு வருகிற பயம் என்னவென்றால், அவர் கேட்ட உறுதிமொழியின் காரணமாக, நிபந்தனையின் காரணமாக இதில் வேலை வாய்ப்பும் போய்விட்டதோ; அதிலே உள்ள ரிசர்வேஷன், இடஒதுக்கீடும் போய்விட்டதோ என்கின்ற அச்சம் என்னைப் பிடித்துவாட்டுகின்றது. பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெல்லாம் ஒரு பீதி இதன் காரணமாக இன்றைக்குத் தோன்றியிருக்கின்றது.

``We will provide legal protection to existing percentages of reservation in educational institutions at the state level"

- என்றுதான் இருக்கின்றது. கல்விக் கூடங்களில் இந்த இட ஒதுக்கீட்டிற்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கப்படும் என்று இருக்கின்றது. எவ்வளவு இட ஒதுக்கீடு? அந்தப் புள்ளி விவரம் இதிலே காட்டப்படவில்லை. எவ்வளவு காலத்திற்கு? அது காட்டப்படவில்லை. யாருக்கு என்பது எல்லாம் காட்டப்படவில்லை, எனவே, ஆங்கிலத்தில் சொல்வார்களே "வேக்" (Vague) என்று. அது மாத்திரம் அல்ல; Vague ஆக மாத்திரமல்ல; பேக்காகவும் இது அமைந்திருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதைப்போல, பெண்களுக்கு 33 சதவீதம் கேட்டபொழுது, அம்மையார் சொன்னது, பெண்களுக்கு என்று மாத்திரம் இருந்தால் போதாது. அந்தப் பெண்களிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு சதவீதம் வேண்டும்; அதோடு கூடிய சதவீதம்தான், ஒதுக்கீடுதான் தேவை என்று சொன்னார்கள். இதிலே பார்த்தால் அப்படி எதுவும் இல்லை.

``33% of the seats in Parliament andState Assemblies for Women"

- என்று இருக்கிறதே அல்லாமல், அதிலே பி.சி. உண்டா? எஸ்.சி. உண்டா? எம்.பி.சி உண்டா என்பதெல்லாம் அதிலே காணப்படவில்லை.

பிறகு, இந்த மொழிப் பிரச்சினை. இந்த மொழியைப் பொறுத்தவரையில் எல்லா மொழிகளும் மத்தியிலே உள்ள இந்தி, ஆங்கிலம் ஆகிய இந்த இரண்டு மொழிகளோடு சேர்ந்து மத்திய ஆட்சி மொழிகளாக ஆகவேண்டும்; எல்லா மொழிகளும் ஆகவேண்டும்; அதுவரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நீண்ட காலமாக எடுத்துவைக்கப்பட்டு வருகின்ற ஒரு கொள்கை முடிவு, மொழியைப் பொறுத்தது.

அதிலே மேலும் ஒரு திருத்தத்தோடு 96ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் முரசொலிமாறன் முன்மொழிந்து, நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் வழிமொழிந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம்; மத்தியிலே ஆட்சி மொழியாக அரசியல் சட்டத்திலே அட்டவணையிலே உள்ள எல்லா மொழிகளும், குறிப்பாக எல்லா மாநிலத்திலும் உள்ள ஆட்சி மொழிகளும் இடம் பெற வேண்டும்; அதற்குக் காலக்கெடு வேண்டுமென்றால் முதல் கட்டமாக எல்லா வகையிலும் வளம் பெற்ற, இலக்கிய வளம், இலக்கண வளம், தொன்மை அத்தனை சீரும் நிறைந்த தகுதி வாய்ந்த எங்கள் தமிழ் மொழியை முதல் கட்டமாக மத்திய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும்" என்பது தீர்மான வாசகம் ஆகும்.

"பொருளாதார இழப்பைக் குறைக்கவும், போலி அட்டையைக் கண்டுபிடிக்கவுமே இரட்டை வண்ணக் குடும்ப அட்டை".

இந்தியாவின் ஆட்சி மொழியாகத் தமிழ்

அதை யார் எடுத்துக்கொண்டாலும், எனக்கு மகிழ்ச்சிதான். அதை ஜெயலலிதா அவர்கள் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய கட்சி மாநாடுகளிலும் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ம.தி.மு.க. மாநாட்டிலே போட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சிதான், இந்தக் கொள்கை எல்லோருக்கும் சொந்தமாக வேண்டுமென்பதுதானே நம்முடைய கொள்கை.

அப்படி வந்ததில், இதிலே தமிழை ஆட்சி மொழியாக, இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற நிலை, இந்த நேஷனல் அஜண்டாவிலே இருக்கிறதா என்றால் இல்லை.

அன்றைக்கு ஒரு பெரியவர், இந்திய யூனியன் முஸ்லிம் லீகினுடைய தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் அரசியல் நிர்ணய சபையிலே இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக எந்த மொழி இருக்கலாம் என்று பிரச்சினை வந்தபொழுது தமிழகத்திலேயிருந்து ஒலித்த குரல் காயிதே மில்லத் அவர்களுடைய குரல், " எல்லா வளமும் நிறைந்த, எல்லா இலக்கிய இன்பமும் வாய்ந்த, எல்லா இலக்கணச்செறிவும் மிக்க தமிழ் மொழியைத்தான் இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும்." என்று அன்றைக்கு உரத்த குரல் கொடுத்தார்கள். ஆனால் அந்தக் குரல் அன்றைக்கு வெற்றி பெறவில்லை.

அதே நிலையிலேயிருந்து தமிழ் மொழி ஆட்சி மொழியாக ஆகவேண்டும், அது ஒரு நிபந்தனை என்று விதிக்கப்பட்டு, பின்னர் தயாரிக்கப்பட்டு, அவர்களும் கையெழுத்திட்டுள்ள அஜண்டாவிலே என்ன இருக்கிறது என்றால்,

"A committee will be set up to study the feasibility of treating all 19 languages included in schedule - VIII of the constitutions as Official Languages"

இதற்கு ஒரு கமிட்டி போடப்பட்டு, இது சாத்தியமா என்று ஆராயும். சாத்தியமா என்று ஆராயும்போது, ஒவ்வொரு மொழியாக எடுத்துக்கொள்ள வேண்டும். 19 மொழிகளும் சாத்தியமா என்று ஆராய்ந்தால் சாத்தியமில்லை என்றுதான் முடிவு வரும். தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி உண்டா என்று ஆராயத் தொடங்கினால், எல்லோரும் சேர்ந்து 'உண்டு' என்ற அந்த முடிவைத்தான் தெரிவிப்பார்கள். எனவே, தமிழ்மொழி அங்கே ஆட்சி மொழியாக, மத்திய ஆட்சி மொழியாக ஆவதற்கான அந்தச் சூழல் இந்த அஜண்டாவிலே இடம் பெறவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இப்படிச் சுட்டிக்காட்டுவது குறை கூற அல்ல; மேலும் இதற்கான முயற்சிகளை இன்றைக்கு அங்கே பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர்கள் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கின்றேனேயல்லாமல் குறை கூறுவதற்காக நான் சொல்லவில்லை. இவையெல்லாம் நிறைவேற வேண்டும் என்கின்ற ஆசை காரணமாகக் கூறுகின்றேன். அதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டால், ஏதோ சில நிர்ப்பந்தங்கள், ஏதோ சில பதவிகளுக்காகத்தான் செய்யப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு விரோதமான சில காரியங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் இந்த நிபந்தனைகள் எல்லாம் விதிக்கப்பட்டன என்ற ஒரு எண்ணத்தை உறுதிப்படுத்தக்கூடிய அளவுக்கு ஆகிவிடும் என்பதற்காக இதிலே மேல் நின்று முயற்சிகளை முனைப்போடு செய்யவேண்டும் அவர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமாக இங்கே பேசப்பட்ட வெடி குண்டு சம்பவங்கள். இதிலே நான் நீண்ட நேரம் பேச விரும்பவில்லையென்றாலும், ஒரு தகவலை - இந்த அரசுக்குக் கிடைத்த இந்தத் தகவல் எப்படியெல்லாம் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு எங்கே இதிலே சோடை ஏற்பட்டது என்பதை உங்களுக்கு விளக்குவதற்காகச் சொல்கின்றேன். ஏற்கெனவே, செய்தியாளர்களிடத்திலே ஒரு சிலவற்றைச் சொல்லியிருக்கின்றேன். முழுமையாக இந்த மாமன்றத்திலே சொல்ல வேண்டும் என்பதற்காக இவைகளை நான் நினைவூட்டுகின்றேன். கோவை குண்டு வெடிப்பு சம்பவம் நடப்பதற்கு முன்பே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்றெல்லாம் இங்கே உறுப்பினர்கள் பலரும் கேட்டிருக்கின்றார்கள். நான் அவர்களுக்குச் சொல்கின்ற பதிலை ஒரு அறிக்கை போல இங்கே வைக்க விரும்புகின்றேன்.

காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகள்

கோவை மாநகரக் காவல்நிலையத்தையும், காவல்துறை வாகனங்களையும் வெடிகுண்டு வைத்துத் தகர்ப்பதற்காக இஸ்லாமிய தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை, தமிழ்நாடு காவல்துறையின் புலனாய்வுத் துறை, 11.12.97 அன்று அரசுக்குத் தெரிவித்தது. மத்திய புலனாய்வுத் துறையல்ல; கவனமாகக் கேட்கவேண்டும். தமிழ்நாடு காவல் துறையினுடைய புலனாய்வுத் துறை - டி.ஐ.ஜி - 11.12.97 அன்று அரசுக்குத் தெரிவித்தது. உடனடியாக அரசின் சார்பில் இந்தத் தகவல் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாநகரக் காவல் ஆணையருக்கும் அனுப்பப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.

கோவை மாநகரக் காவல் நிலையம், காவல், துறை வாகனங்கள் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்படும். தீவிரவாதிகள், அதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற செய்தி, 11.12.97 அன்று கிடைத்த செய்தி உடனடியாகக் கோவை மாநகர காவல் துறை ஆணையருக்கு அனுப்பப்பட்டது.

பிறகு 21.12.97ல் சென்னையிலே உள்ள மத்திய புலனாய்வுத் துறை இணை இயக்குநர், ஐ.பி.யினுடைய இணை இயக்குநர், தமிழ்நாடு காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு 21.12.97ல் ஒரு தகவல் அனுப்பினார். அதில் "1997 நவம்பர், டிசம்பர் மாதங்களில் கோவை நகரில் நடந்த மதக்கலவரங்களில் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு பதில் அடி கொடுக்கும் வகையில் கோவை நகர் வெளிப்புறத்தில் சில வன்முறைகளில் அல் - உம்மா இயக்கத்தினர் ஈடுபடக்கூடும். காவல் நிலையங்கள், கோவை காவல் ஆணையர் அலுவலகம், எரிவாய்வு ஏற்றிச்செல்லும் லாரிகள் போன்றவை பாதிக்கப்படலாம்" - என்று அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த தகவலும் புறக்கணிக்கப்படவில்லை.

உடனடி நடவடிக்கைக்காகக் கோவை மாநகரக் காவல்துறை அதிகாரிகளுக்கு மாநிலக் காவல்துறை அதிகாரிகளால் அனுப்பி வைக்கப்பட்டது. பிறகு, 24.12.97 அன்று அரசின் தலைமைச் செயலாளருக்கு ஒரு தகவல் தரப்பட்டது. இந்தத் தகவலும் நான் முதலிலே குறிப்பிட்ட அதே தகவல்தான், என்னென்ன நடைபெறும் என்ற தகவல்தான் தெரிவிக்கப் பட்டது. உடனடியாக, தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர், காவல்துறை இயக்குநர், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் ஒழுங்கு) காவல்துறை கூடுதல் இயக்குநர் (உளவுத்துறை) ஆகியோரைக் கொண்ட உயர்மட்ட அலுவலர்களுடைய கூட்டம் கோட்டையிலே நடந்தது.

இந்தக் கூட்டத்தில் வெடிகுண்டு அச்சுறுத்தல் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது. ஏற்கெனவே அடையாளங் காணப்பட்ட மதத் தீவிரவாதிகளுடைய செயல்பாடுகளை உன்னிப்பாகத் தொடர்ந்து கண்காணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள, அதற்கான திட்டம் - (Contignecy Plan) - ஒன்றைத் தயாரித்து உடனடியாக அமல்படுத்த வேண்டும் எனக் காவல்துறை அதிகாரிகளுக்கு அந்தக் கூட்டத்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அதேபோல், அல் - உம்மா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பால்கேன் போன்று தோற்றம் அளிக்கக்கூடிய பொருட்களில் வெடிபொருட்களை மறைத்துவைத்து, எரிவாயு ஏற்றிச் செல்லும் லாரிகளையும், காவல் நிலையங்களையும் தாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக - ஒரு தகவலைத் தமிழ்நாடு அரசின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு எஸ்.பி.சி.ஐ.டி. 27.12.97 அன்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தது. அதையொட்டி தலைமைச் செயலாளர், காவல்துறைத் தலைவர் டி.ஜி.பி. காவல்துறை கூடுதல் தலைவர் (புலனாய்வு) ஏ.டி.ஜி.பி., (இண்டெலிஜென்ஸ்) ஆகிய உயர் மட்ட அலுவலர்களைக் கொண்ட கூட்டத்தைக் கூட்டி அதுபற்றி விவாதித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மத்திய அரசின் உள்துறையிடமிருந்து 24.1.98 அன்று ஒரு எச்சரிக்கைச் செய்தி வந்தது. அதிலே, ரம்ஜான் பண்டிகையையொட்டி அல்-உம்மா இயக்கம் கோவை நகரில் குண்டுவெடிப்பிற்குத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தகவலும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், கோவை காவல்துறை ஆணையர் அவர்களுக்கும், காவல்துறை இயக்குநருக்கும் தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டது.

> **"கைத்தறி நெசவாளர் துயர் களைவது பற்றி ஆராயத் தனிக்குழு அமைக்கப்படும்".**

மேலும் 24.12.97 அன்று கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீவிர அறிவுரைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

மத்தியப் புலனாய்வுத் துறையின் இணை இயக்குநர் 21.12.97 கடிதத்தில் என்ன தெரிவித்திருந்தாரோ அதே எச்சரிக்கைச் செய்தியை மத்தியப் புலனாய்வுத் துறை இயக்குநர் 2.1.98 அன்று மாநிலக் காவல்துறைத் தலைவருக்கு அனுப்பியிருந்தார். இக்கடிதம் 5.1.98 அன்று காவல்துறைத் தலைவரால் பெறப்பட்டது.

மத்தியப் புலனாய்வுத் துறை இணை இயக்குநர் தமிழக அரசின் காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு 19.1.98 அன்று எழுதிய கடிதத்தில் ரம்ஜான் பண்டிகையைத் தொடர்ந்து ஒரு வார காலத்திற்குள் வன்முறை செயல்களில் அல்-உம்மா இயக்கத்தினர் ஈடுபடக்கூடும் என்றும் தெரிவித்திருந்தார். இதுவும், உடனடியாகக் கோவை காவல்துறை அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டது. தெரிவிக்கப்பட்டு, கண்காணிப்போடு செயல்படுங்கள் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

முறையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட இடங்கள்

இவ்வாறு 14-ஆம் தேதி கோவையிலே வெடிகுண்டு சம்பவம் நடப்பதற்கு முன்பு இதேபோல் பல எச்சரிக்கைகள் செய்யப்பட்டு, அந்த எச்சரிக்கையின்பேரில் திருநெல்வேலி மாவட்டம் - கூடங்குளம், விழுப்புரம் மாவட்டம் - சின்னசேலம், தர்மபுரி மாவட்டம் - பாப்பாரப்பட்டி, அஞ்சட்டி, பெண்ணாகரம், கடலூர் மாவட்டம் - சிதம்பரம், செங்கற்பட்டு கிழக்கு காவல் மாவட்டத்தில் தாம்பரம், மாங்காடு, மதுரை மாவட்டம் - பேரையூர், சென்னையில் வேப்பேரி, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, தஞ்சாவூர் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை, சேலம் மாவட்டத்தில் தலைவாசல், ஆத்தூர், மகுடஞ்சாவடி, மேச்சேரி, கருமலைக்கடல், தாரமங்கலம், வீரகனூர், கொண்டலாம்பட்டி, சங்ககிரி, தீவட்டிப்பட்டி, சூரமங்கலம், தம்மம்பட்டி, ஓமலூர், சேந்தமங்கலம், விருதுநகர் மாவட்டத்தில் திருத்தங்கல், காரியாப்பட்டி, மாரனேரி, வச்சகாரப்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், முரப்பநாடு, ஆத்தூர், குமரி மாவட்டத்தில் இரணியல், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம், கோவை மாவட்டத்தில் மடத்துக்குளம் ஆகிய இடங்களில் முறையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரையில் கோவை ஒன்றைத் தவிர எல்லா இடங்களிலும் முறையாக அரசு தாக்கீதை ஏற்று டி.ஜி.பி.யினுடைய தாக்கீதை ஏற்று ஆங்காங்குள்ள காவல்துறை ஆணையாளர்கள், டி.ஐ.ஜிகள் எஸ்.பிகள் இவர்கள் முறையாகச் சோதனையை அங்கே நடத்தினார்கள். 1.2.98 முதல் 13.2.98 வரை கண்டுபிடிக்கப்பட்டவை, 13 நாட்களில், நாட்டு வெடிகுண்டு 2019, ஜெலட்டின் குச்சிகள் 586, டெட்டனேட்டர்கள் 1595, பட்டாசுகள் 2675 மற்றும் 11 பண்டல்கள், பியூஸ் வயர் 362 மீட்டர்.

இதுதான் அரசியல் பண்பாடு

தி.மு.கவை நான் கடுமையாக எதிர்த்தாலும், அண்ணாதுரையின் பிறந்தநாள் மலருக்கு ஒரு கட்டுரை கேட்டார்கள். எழுதினேன். அதேபோல, சென்னையில் என் பிறந்தநாள் விழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவரும் என்னைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்.

கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, திருக்குவளை என்ற இடத்தில் அவர் தாயின் பெயரால் கட்டப்பட்ட ஒரு பிரசவ விடுதியைத் திறந்து வைக்கவேண்டும் என்று என்னை அழைத்தார். நானும் அதை ஏற்றுக்கொண்டு சென்றேன்.

1970ல், தாம்பரத்தில் நடந்த முதலமைச்சர் கருணாநிதி பிறந்தநாள் கூட்டத்தில் கலந்துகொண்டு பாராட்டிப் பேசினேன். கருணாநிதிக்குப் பக்தவத்சலம் "சலாம் போடுகிறார்" என்று ஒரு பத்திரிக்கை எழுதியது.

இதெல்லாம் என்ன தவறு? இதுதான் அரசியல் பண்பாடு என்பது என்னுடைய கருத்து.'

- *திரு. எம்.பக்தவத்சலம் எழுதிய* **'எனது நினைவுகள்'** *என்ற நூலிலிருந்து*

- *செய்தி.* **க. வித்யா**

இதர வெடிமருந்துப் பொருட்கள் 207 கிலோ, துப்பாக்கிகள் 6, கைத்துப்பாக்கிகள் 2, எஸ்.பி.எம்.எல்.2, கேட்ரிட்ஜிகள் 5, பிப்ரவரி 1ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களையொட்டி தொடரப்பட்ட வழக்குகள் 49. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 95. இவர்களில் கைது செய்யப்பட்டவர்கள் 81 பேர்.

ஆனால், கோவையிலிருந்து வந்த பதில் என்னவென்றால், 'நீங்கள் என்ன செய்தீர்கள்' என்று கேட்டதற்கு வந்த பதில் என்னவென்றால், கோவையிலும் பல்வேறு சோதனைகள் செய்யப்பட்டதாகவும், சில இடங்களில் மத்திய காவல் படை (சி.ஆர்.பி.எப்) துணையோடு சோதனைகள் செய்யப்பட்டதாகவும், ஆனால் அந்தச் சோதனைகளில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கோவை மாநகர அதிகாரி அறிக்கை அனுப்பினார்.

ஏன் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை, என்ன செய்தாய் என்றால், இதற்கெல்லாம் முதலமைச்சரா போய்ப் பார்க்க முடியும்? அதிகாரியைத்தான் நம்பினோம். கோவை மாநகரக் காவல்துறை அதிகாரி தெளிவாகச் சொல்கிறார். கோவையிலே பல இடங்களில் சோதனைகள் செய்யப்பட்டன. சில இடங்களில் மத்திய காவல்படை (சி.ஆர்.பி.எப்) துணையோடு சோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் சோதனைகளில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று கோவை மாநகர அதிகாரி, அரசு கேட்ட விளக்கத்திற்குப் பதில் அனுப்பினார்.

தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்து ஆணை

அதற்குப் பிறகுதான் 14-ஆம் தேதி சம்பவம் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்ற நாளில் சிந்தாதிரிப்பேட்டையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தினுடைய இறுதிக்கூட்டம். நானும், மூப்பனாரும், நல்லக்கண்ணு அவர்களும், சங்கரய்யா, வடிவேலு போன்றவர்களும் அதற்குப் பிறகு அந்தச் சம்பவத்தைப் பற்றிக் கலந்து பேசிக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு பேசினோம். உடனடியாக அதே நாளில் இரண்டு மணி நேரத்திற்குள்ளாக இரண்டு தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்து அரசு, ஆணை பிறப்பித்தது.

அந்த நேரத்தில் கோவைக்குப் பிரச்சாரத்திற்கு வந்திருந்த அத்வானி அவர்களைப் பத்திரமாகத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று, 10 நிமிடங்களுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சியரோடு தொடர்புகொண்டு பேசினேன். இன்னும் சொல்லப்போனால், 14ஆம் தேதி காலையில், திரு.அத்வானி அங்கே வருகிறார் என்ற செய்தியைப் பத்திரிகையிலே பார்த்துவிட்டு, உடனடியாக நான் போலீஸ் கமிஷனர், கோவை அவர்களை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, 'அத்வானி வருகிறார், பாதுகாப்பு சரியாக இருக்கட்டும், பல கடிதங்கள் ஏற்கெனவே வந்து போயிருக்கின்றன. அந்தக் கடிதங்களில் குறிப்பிட்டபடி கண்காணியுங்கள்' என்று சொன்னபோது, சரி என்றுதான் சொன்னார், ஆனால் நிலைமை இப்படி ஆகிவிட்டது.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, திரு.அத்வானி பேசவிருந்த அந்தக் கூட்டத்திற்கும், வெடிகுண்டு வெடித்த இடத்திற்கும் கிட்டத்தட்ட 820 மீட்டர் தொலைவு. 820 மீட்டர் தொலைவிலே வெடிகுண்டு வெடித்து, அத்வானி அவர்களை அந்தக்கூட்டத்திலே கொன்றிருக்க முடியுமா என்பதை நான் உறுதியாக அறுதியிட்டுச் சொல்ல விரும்பவில்லை. இதற்கெல்லாம் கோகுலகிருஷ்ணன் அவர்களுடைய விசாரணைக் குழு ஆராய்ந்து பதில் சொல்லவிருக்கிறது.

பிரதமருக்கு இணையாக அத்வானிக்குப் பாதுகாப்பு

ஆனால் எங்களுக்கு இருந்த கவலை, நானும் மூப்பனாரும் உட்கார்ந்துகொண்டு 10 நிமிடங்களுக்கு ஒருமுறை கலெக்டருக்குப் ஃபோன் செய்து, திரு.அத்வானி அவர்களைப் பத்திரமாகத் திருப்பி அனுப்பவேண்டும் என்று சொன்னபோது, அவர் கேட்கமாட்டேன் என்கிறார். மருத்துவமனைக்குப் போகவேண்டுமென்று சொல்கிறார் என்று சொன்னபோது, சரி பலத்த பந்தோபஸ்தோடு, ஒரு பிரதமருக்குப் போடுகின்ற பந்தோபஸ்தைவிட அதிகமாக திரு.அத்வானி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர் மருத்துவமனைக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தார்.

பிறகு, திருச்சியிலும், அதைவிட அதிகமான பந்தோபஸ்தோடு அந்தக் கூட்டம் அங்கே நடைபெற்று திரு.அத்வானி அவர்கள் பத்திரமாகத் திரும்பிச் செல்வதற்கான வழிவகை ஏற்பட்ட பிறகுதான் நான் பெருமூச்சே விட முடிந்தது. அந்த அளவிற்கு அந்த நாள் அமைந்தது என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

வெடிகுண்டு சம்பவத்திற்கான காரணங்களைக் கண்டறியவும், காவல்துறைத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட எச்சரிக்கைச் செய்தி மீது இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காகவும், கோவை மாநகரக் காவல்துறை அதிகாரி செயல்பாட்டில் குறைகள் இருப்பின் அவைகள் பற்றிய உண்மை நிலையை அறியவும், நஷ்டஈடு எவ்வளவு தரவேண்டுமென்பதை அறியவும், இதற்கெல்லாம் மூலகாரணம் என்ன என்பதை அறியவும்தான், நீதிபதி பி.ஆர்.கோகுலகிருஷ்ணன் அவர்களுடைய குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

உங்களுடைய அனுமதியோடு சொல்லிக் கொள்கிறேன். இப்படி பொறுப்பற்ற ஒரு காவல்துறை அதிகாரி மீது - உங்களுடைய அனுமதியோடு - இந்த அரசு விளக்கம் கேட்டு கடுமையான நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மிகத் திறமையாக நடந்துவரும் விசாரணை

தொடர்ந்து இங்கே எதிர்க்கட்சித் தலைவர்கூட சிபிஐ.விசாரணை வேண்டுமென்று குறிப்பிட்டார். மாநிலக் காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றவர்களுடைய விளக்கங்கள் கோரப்பட்ட அந்தச் சூழ்நிலையில், விரிவான புலனாய்வு ஒன்றை நடத்த பரம்வீர் சிங் என்கிற ஐ.பி.எஸ்.அலுவலர் தலைமையில் - ஐஜி. அந்தஸ்தில் உள்ளவர் - 15.2.98 முதல் மறுநாளே விசாரணை ஆரம்பமாகிவிட்டது. இந்த விசாரணை மிகத் திறமையாக நடைபெற்று வருகிறது. நான் சிபிஐ. வேண்டாம் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. மிகத் திறமையாக இவர்கள் இந்த விசாரணையை நடத்திவருகிறார்கள்.

கேரளத்திலே விட்டுவிட்டார்களே என்று தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். கேரளத்திலே யாரையும் விடவில்லை. அங்கே 8 பேர் பிடிபட்டதாகச் செய்தி வந்தது. அவர்களுக்கும் கோவையில் நடைபெற்ற சம்பவங்களுக்கும் சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகத்தின் பேரிலே பிடிக்கப்பட்டார்கள். இவர்களும் படபடப்போடு அங்கே ஓடிச்சென்று பார்த்தார்கள். இந்தச் சம்பவத்திற்கும், இவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பதால் அவர்கள் விடப்பட்டார்களே அல்லாமல், குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டவர்கள் யாரும் விடப்படவில்லை.

இதுவரையில் 104 பேர் குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டு, 42 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து தமிழகத்திலே, மாநிலத்திலே இந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரம் எப்படி காப்பாற்றப் பட்டிருக்கிறது என்பதையெல்லாம் உறுப்பினர்கள் மிக நன்றாக, தெளிவாக அறிவீர்கள். இதற்கெல்லாம் மூல காரணங்களை ஆராய்ந்து, அதைப்பற்றி நாம் இங்கே பேசும்போது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிக அருமையாக எரிகிற 'நெருப்பிலே எண்ணெய் வார்ப்பதாக நம்முடைய பேச்சுவார்த்தைகள், எழுத்துக்கள் அமைந்துவிடக்கூடாது' என்று சொன்னார்கள். ஆனால் சில நேரங்களில் மூண்டெழுகிற உணர்ச்சிகளை அடக்க முடியாமல் சிலர் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. நம்முடைய அன்பிற்குரிய இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர், அருமைமிகு நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் பல செய்திகளை இங்கே சொன்னார்கள். அதற்குப் பதிலாக மற்றொன்று நடைபெற்றது; நவம்பர் கடைசி நாளும் டிசம்பர் முதல் நாளும், கோவையில் நடைபெற்ற சம்பவங்களுக்கு மாறாக இந்தச் சம்பவம் பதிலடியாக நடந்தது என்ற நிலையிருந்தாலும்கூட அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

வன்முறைக்கு இன்னொரு வன்முறை தீர்வல்ல

ஏனென்றால் வன்முறைக்கு இன்னொரு வன்முறை தீர்வல்ல. சட்டத்தை நாமே கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது. இதை அப்துல் லத்தீப் அவர்களும் மறுப்பவர்கள் அல்ல, ஏற்றுக்கொள்ளக் கூடியவர்தான். அத்தகைய பண்பு வாய்ந்தவர்தான் அவர்கள். இதைப் போலவே எல்லோரும்.

நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் மிகுந்த வேகத்தோடும், கொந்தளிப்போடும், குமுறல்களோடும் இங்கே தன்னுடைய ஆத்திரத்தையெல்லாம் வெளிக்காட்டினார்கள். நான் அந்த அடிப்படைகளையெல்லாம் மறக்கவில்லை. மறைக்கவும் விரும்பவில்லை. அந்த அடிப்படைகளை எல்லாம் உணர்ந்தவன்தான் நான். அந்த அடிப்படைகள் சரிசெய்யப்பட வேண்டும் என்கிற பேரியக்கத்தில் தந்தை பெரியார் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களால் வழி நடத்தப்பட்டு இன்றைக்கு உங்களோடு இருப்பவன்தான் நான் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

"காவிரி போன்ற பொதுப்பிரச்சினைகளை என்றுமே நாங்கள் புறக்கணித்ததில்லை".

எனவே, அந்த அடிப்படைகளைப் பற்றி லத்தீப் அவர்களோ, கிருஷ்ணசாமி அவர்களோ, மற்றவர்களோ எடுத்துச் சொல்கிற அந்தக் கருத்துக்கள் முரண்பாடானவை அல்ல. இருந்தாலும்கூட வன்முறைக்கு வன்முறை பரிகாரம் ஆகாது.

சென்னையிலே பிடிபட்டிருக்கின்ற 4, 5 இளைஞர்களுடைய படங்களைப் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். எவ்வளவு இளைஞர்கள் அவர்கள். அழகானவர்களாக இருக்கிறார்கள். அதேபோன்று இஸ்லாமியத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி. அவர்களைப் பார்க்கும்போது நமக்குப் பரிதாபமாக இருக்கிறது. அவர்களிடம் இந்த உணர்வைத் தட்டி எழுப்பக்கூடிய அளவிற்கு, மூளைச் சலவை என்பார்களே, அதேபோன்று சலவை செய்யப்பட்டு அவர்கள் இன்றைக்கு முடுக்கிவிடப்பட்டு இருக்கிறார்கள்.

நபிகள் நாயகம் என்ன சொன்னார்? இவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரிக் காரியங்களைச் செய்து விட்டு, செத்துப்போனால்கூட, மோட்சத்திலே நமக்கு மகிமை உண்டு என்று அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். பிடிபட்ட சில இளைஞர்களில் ஒருவர் தன்னுடைய மனைவிக்கு எழுதிய கடிதத்தில் இதைக் குறிப்பிட்டு இருக்கிறார். 'நாம் இதுபோன்ற காரியங்கள் செய்து மரணம் அடைந்தால், மரணலோகத்திலே நமக்கு எல்லா விதமான சுகமும் உண்டு. நம்முடைய லட்சியத்திற்காகப் பெறுகின்ற வெற்றி அது' என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்படி ஒரு மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறது.

நபிகள் நாயகம் அழகாகச் சொல்லியிருக்கிறார். 'மதமாச்சரியத்திற்காகப் போரிடுவதும் நல்லதல்ல. அதற்காக மரணம் அடைவதும் நல்லதல்ல. அவர்கள் எல்லாம் நம்மவர்களும் அல்ல' என்று கூறியிருக்கிறார். இதை அந்த இளைஞர்கள் உணரவேண்டும். ஏதோ ஒரு காரியத்திற்காகப் பழிக்குப் பழிவாங்குதல் என்ற காரியத்திற்காக, மொத்த சமுதாயத்தையும் அழித்துவிடக் கூடாது. அப்படியே வாதத்திற்காகச் சொல்கிறேன். பழிவாங்குவது, பகை தீர்த்துக் கொள்வது என்றால் குறிப்பிட்ட ஒரு நபரையா பழி தீர்க்கிறோம் - பலி வாங்குகிறோம்? அல்ல. யாரையோ பழிவாங்குவதாக எண்ணிக்கொண்டு, அப்பாவி மக்கள், இதைப் பற்றியே தெரியாத மக்கள், இன்னும் சொல்லப்போனால் பாபர் மசூதி என்றால் என்னவென்று தெரியாதவர்கள் - அங்கே என்ன பிரச்சினை என்று பல பேருக்குத் தெரியாது. அப்படிப்பட்ட மக்கள் - தெருவிலே வியாபாரம் செய்து கொண்டு போகிறவர்கள், பால் விற்றுக்கொண்டு போகிறவர்கள், காய்கறி விற்றுக்கொண்டு போகிறவர்கள், தன்னுடைய அண்ணனையோ, தம்பியையோ பார்க்கச் செல்கின்றவர்கள், தாயைக் காணச் செல்கின்றவர்கள், சகோதரனைப் பார்க்கச் செல்கின்றவர்கள், குழந்தையை பள்ளிக்கு அனுப்புகின்ற தாயார், இப்படிப்பட்ட ஏழையெளிய மக்கள், சாதாரண அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்படுகிறார்களே, அந்த நேரத்தில் அது நம்முடைய தாயாக இருந்தால், அப்படி இறந்தவர் நம்முடைய தந்தையாக இருந்தால், கொல்லப்பட்டது நம்முடைய குழந்தையாக இருந்தால் நம்முடைய மனம் எப்படித் துடிக்கும் என்று ஒரு கணம் எண்ணினால், இப்படிப்பட்ட தீய சிந்தனையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியும்.

தீவிரவாதம் பற்றி மார்க்ரெட் தாட்சர்

இந்த வெடிகுண்டுப் பிரச்சினையில் ஒரு அரசு எப்படி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதில் உறுப்பினர்கள் அத்தனைப் பேரோடும் சேர்ந்து நானும் இணைந்துகொள்ள விரும்புகிறேன். இதில் மாறுபட்ட கருத்து உடையவன் அல்ல நான். நான் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன். மார்க்ரெட் தாட்சர், இங்கிலாந்து நாட்டினுடைய பிரதமராக இருந்தவர். இந்தத் தீவிரவாதத்தைப் பற்றி ஒன்று சொல்லியிருக்கிறார்.

"If the terrorists succeed once, it is a great victory for them. But, we have to succeed everytime against their activities".

தீவிரவாதிகளை அடக்க முனையும் அரசு 100 தடவை முயன்றாலும், அந்த 100 தடவையும் வெற்றி பெற்றாக வேண்டும். அதாவது 100 தடவை முயன்றாலும் 100 தடவையும் வெற்றிபெற்றாக வேண்டும். ஆனால், தீவிரவாதிகளோ அவர்களது முயற்சியில் ஒரு முறை வெற்றி பெற்றாலும் அதைப் பெரும் வெற்றியாகக் கருதுவார்கள். அதையும் மனதிலே வைத்து இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும் என்பதை உறுப்பினர்கள் அனைவருக்கும் மிகுந்த பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழின் இனிமை

உலகத்தில் மூத்தமொழி தமிழ்மொழி. மொழி என்ற தமிழ்ச்சொல்லில் பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இரண்டும் உள்ளது. அத்தகைய உயர்வு பெற்ற மொழி தமிழ்மொழி.

தமிழ் என்பதில் வல்லினம், மெல்லினம், இடையினம் மூன்றுமே இருக்கின்றன. 'கசடதபற' என்ற வல்லினத்தில் "த" என்ற எழுத்து உள்ளது.

"ஙஞணநமன" என்ற மெல்லினத்தில் உள்ள 'ம' என்ற எழுத்து, மி யாக மாறியது; "யரலவழள" என்ற எழுத்து 'ழ்' இடையினத்தில் உள்ள "ழ" ஆக மாறியது. ஆகவே மூன்று இனமும் சேர்ந்த மொழியே நம் தமிழ்மொழி. இந்தப் பெருமை வேறு எந்த மொழிக்கும் இருப்பதாகத் தெரியவில்லை!

- தமிழ் இசைச் சங்கத்தின் 47ஆம் ஆண்டுவிழா (21.12.81)வில் சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தில் முதலமைச்சர் கலைஞர் பேசியது.

செய்தி. ஐ.எஸ். ஆனந்தராஜ்

இன்னும், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற பல தலைவர்கள் குறிப்பிட்டுள்ள பல்வேறு கோரிக்கைகளுக்கெல்லாம் அடுத்து வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே அதற்கான விளக்கங்களைத் தருவேன். எவை எவை ஏற்றுக் கொள்ளப்பட்டவை; எவை எவை ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதையும் அதில் நீங்கள் காணலாம்.

அட்டைப்படங்கள்

முதலாம் அட்டையில்...

மேதகு தமிழக ஆளுநர் செல்வி. பாத்திமா பீவி அவர்கள், 18.3.98 அன்று சட்டப்பேரவையில் தொடக்க உரையாற்றுதல்.

இரண்டாம் அட்டையில்...

நீலகிரி மலையின் வடக்கு எல்லையாக ஓடிவரும் மேயாறு நதி கலக்கும் இடத்தருகே அமைந்துள்ள பவானிசாகர் அணையின் அழகிய தோற்றம்.

கடைசிப்பக்க அட்டையில்...

சென்னையில் 13.3.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னாள் முதல்வர் பெரியவர் எம். பக்தவத்சலம் அவர்கள் நினைவிடத்தைத் திறந்துவைத்தார்.

ஆதிதிராவிடர்களுக்கு மொத்த வருவாயிலே 25 சதவிகிதம் தரப்பட வேண்டும் என்று, நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னார்கள். 25 சதவிகிதம் என்பது, பார்ப்பதற்கு; அவ்வளவுதானே கேட்கிறார்; குறைவாகத்தானே கேட்கிறார்; கொடுத்தால் என்ன; என்று கேட்கத் தோன்றும். ஆனால் நான் சொல்ல விரும்புகிறேன்; வருவாயிலே 50 சதவிகிதம் எங்கே போகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நாளைக்கு அவர்களுக்காகப் பேச இருக்கிறார்கள் உறுப்பினர்கள். அரசு அலுவலர்களுக்கு நம்முடைய வருவாயிலிருந்து 50 சதவிகிதம் ஊதியமாகச் செல்கிறது. 25 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கு என்று ஒதுக்கிவிட்டால், மிச்சம் 25 சதவிகிதம்தான் மற்றவர்களுக்கு என்றால், அதை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். 25 சதவிகிதமோ அல்லது அதற்குக் குறைவானதோ ஆதிதிராவிடர்களுக்கு நாம் ஒதுக்குகிறோம் என்றால், மிச்சம் இருக்கின்ற எல்லாத் தொகையும் ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்குப் போய்ச்சேருவதாக எண்ணிக்கொள்ளக் கூடாது. மிச்சத்தொகையும் ஆதிதிராவிடர்களுக்கும் சேர்த்துத்தான். சாலை போட்டால் அதில் ஆதிதிராவிடர்களும் நடக்கிறார்கள். அல்லாதவர்களும் நடக்கிறார்கள். குளம் வெட்டினால், அதில் ஆதிதிராவிடர்களுக்கும் உரிமை இருக்கிறது. சில இடங்களில் உரிமை இல்லாமல் இருக்கலாம். அந்த உரிமையைப் பெற்றுத் தரவேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

அதைப்போல எல்லாவிதமான நன்மைகளிலும், அவர்களும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், எல்லா வகைகளிலும் ஆதிதிராவிடர்களுக்குப் பங்கு இருக்கிறது. எனவே, தனியாக அவர்களை மேலும் உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான், பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட மக்களுக்கு என்று, சில சலுகைகளுக்காக, அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இந்த ஒதுக்கீடே தவிர, இதுவேதான் அவர்களுக்கு இதிலிருந்து மேலே ஏதும் அவர்களுக்குத் தர முடியாது என்று நூல் கட்டி உச்ச வரம்பு வைத்து இந்த நிதி ஒதுக்கப்படவில்லை.

பேருந்துக் கட்டணம் குறைப்பு

இறுதியாக, இந்த அவையிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்டிப்பாகக் கூடப் பேசினார். இந்தப் பேருந்துக் கட்டணத்தைப் பற்றி எல்லோரும் பேசியிருக்கின்றார்கள். இது பற்றிப் பல விளக்கங்கள் நான் அளித்திருக்கின்றேன். ஏற்கெனவே 14 காசு என்று இருந்ததை 22 காசு என்று உயர்த்தப்பட்டது. பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் கோரிக்கைக்கு ஏற்ப 22 காசு என்பது 20 காசாகக் குறைக்கப்பட்டது. அப்படி 20 காசாகக் குறைக்கப்பட்ட நிலையிலும்கூட நமக்கு ஏற்பட்ட நஷ்டம், போக்குவரத்துத் துறைக்கு, சுமார் ரூ.280 கோடி. அவர்களுக்கா நஷ்டம்? அரசுக்கு நஷ்டம். அரசு கொடுக்க வேண்டும் அவர்களுக்கு. நாம்தானே கொடுக்க வேண்டும்.

20 காசு என்று நம் மாநிலத்திலே நிர்ணயித்தபோது, ஆந்திராவிலே, நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொல்வார்கள், அங்கே 36% கொடுக்கிறார்களே, இங்கே கொடுத்தீர்களா என்று, அதற்கு மாத்திரம் அதை Campare (ஒப்பீடு) செய்வார்கள். பழனிசாமி, சுப்பராயன் எல்லோரும் அதை 'கம்பேர்' செய்வார்கள். அதை இங்கே கொடுப்பீர்களா என்று கேட்பார்கள்.

ஆந்திராவிலே, கேரளாவிலே, கர்னாடகாவிலே, ஒரு கிலோ மீட்டருக்கு 22 காசுகள், அதைவிட இங்கே 2 காசுகள் குறைவு இராஜஸ்தானிலே கிலோ மீட்டருக்கு 24 காசு. உ.பி.பெரிய மாநிலம் - அதிலே 27.80 காசு. அதைவிட நாம் 7.80 காசு குறைவாக இருக்கிறோம். இருந்தாலும்கூட, தொடர்ந்து ஆளுநர் உரையின் விவாதத்திலே அத்தனைப் பேரும் பேசி, ஆளுங்கட்சி உறுப்பினர்களும் என்னை அரித்தெடுத்த காரணத்தினால், பேருந்துக் கட்டணம் கிலோ மீட்டருக்கு மேலும் 2 காசு குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்பற்றி எல்லோரும் பேசியாகிவிட்டது. கணேசன் உட்பட எல்லோரும் பேசியாகிவிட்டது. எல்லாக் கட்சிக்காரர்களும் பேசியிருக்கிறார்கள். ஆகையினால் பொதுமக்களுடைய நன்றி, எனக்கு மாத்திரம் அல்ல; உங்கள் எல்லோருக்கும் சாரும் என்று கூறி, கி.மீட்டருக்கு கட்டணம் 18 காசாக ஆக்கப்படும்; அதற்கேற்றபடி, மற்ற நிலைகள் எல்லாம் ஆக்கப்பட்டு, அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, நல்ல கருத்துக்களைக் கூறிய உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள், பேரவை உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பதில் அளித்து உரையாற்றினார்.

முந்தின நாள் மாலை
அழைத்துப்போவாள்
அம்மா கடைவீதிக்கு.

தொட்டால் சில்லென்று
ஈரமாய் மண்வாசனையாய்
விதவிதமான பிள்ளையார்.

பேரம் பேசி
கண்ணுக்குக் குன்றிமணியை
மறக்காது வாங்கிக்கொண்டு
பிள்ளையார் குடையோடு
எனக்கும் ஒன்றுக்காகக்
கெஞ்சி சாதித்து -

சீக்கிரமாய் எழுந்திருக்க
சீக்கிரமாய் தூங்கி
பாட்டியை நச்சரித்து
இராத்திரியே எடுத்துவைத்த
நகையையும் துணியையும்
நினைத்துக்கொண்டே விழித்து -

அலங்கார அழகைப் பீற்றிக்கொள்ள
அவரை அடுத்தவீட்டுக்கு
எடுத்துப்போகையில்
வாங்கிய அடியை
பூஜை அறையில் சுருண்டு
அழுது புகார் பண்ணி -

ஐந்து நாள் கழித்து
கிணற்றில் போடும்போது
லீவுக்கு வந்த
சேது ஊருக்குப்போகும்
சோகம் அப்பும்.

அடுக்குமாடியில்
பிள்ளையார் கரைக்க இடமற்று
கடலுக்கு ஓடும்போது
பூதாகாரமாய் வாளேந்திய
பிள்ளையார்கள் பயமுறுத்துகிறார்கள்
என் மகனை!

கனிமொழி

தமிழறிஞர்கள், கவிஞர்கள், தமிழிலே தனித்திறமை பெற்றவர்கள் என மூவர் (திரு.ஏ.எஸ்.ஏ.சாமி, திரு.சாவி, திரு.ஈரோடு தமிழன்பன்) தேர்ந்தெடுக்கப்பட்டு, அண்மையில் அவர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழி வழங்கப்பட்டது 'முரசொலி அறக்கட்டளை' விழாவில்.

நம் தமிழ்நாட்டின் ஆளும் கட்சியாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் போர் வாளாக...கூரிய வேலாக...ஏச்சுப் பேச்சுகளைத் தாங்கி ஈடு கொடுக்கும் கேடயமாக...வெற்றி வீரர்களின் பாசறைப் பிரகடனமாக என்றும் திகழ்ந்திடும் நாள் ஏடாகும் 'முரசொலி'; 1942ல் தமிழர் திருநாளான பொங்கல் நாளன்றுதான் 'முரசொலி' ஏடு முதன்முதல் திருவாரூரில் இருந்து 'சிங்கிள் டெம்மி' அளவினதாக வெளியிடப்பட்டது.

இன்றைய தினம் இலட்சோப இலட்சம் பேர் படித்து மகிழ்ச்சியும், எழுச்சியும் பெற்றிடும் பெருமைமிக்க அந்த 'முரசொலி' நாளேட்டின் பெயரில், 1992ஆம் ஆண்டில் துவக்கப்பட்டதே அந்த அறக்கட்டளை. அதாவது, தஞ்சை மாவட்டம் - திருவாரூரில், நான்கு பக்கக் கையேடாகத் தொடங்கப்பட்டு அந்த ஏட்டின் பணியும் குறிக்கோளும் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி, மூங்கில் போல் முசியாது உள்ளதன் அடையாளமாக விளங்கிய பொன்விழா ஆண்டில் அறிவிக்கப்பட்ட அறக்கட்டைதான் அது.

தெள்ளிய ஆவின் சிறுபழத்தொரு விதையாயானது, அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு மன்னரும் இருக்க நிழல் தரும் ஆலமரம் ஆகும் என்பார்களே ? அப்படி-இன்றைய தினம் எழுந்து, தழைத்து, பரவி-மறவன் மடல், Rising Sun, முத்தாரம், குங்குமம், குங்குமச்சிமிழ், வண்ணத்திரை போன்ற விழுதுகள் எல்லாம் விட்டுச் செழித்திருக்கிறது 'முரசொலி'.

அந்த ஆலமர நிழலில் - அதுவும் 'நெருக்கடி காலம்' என்கிற சோதனைச் சூறாவளி வீசிய காலகட்டம் உட்பட - ஓர் ஆறாண்டுக் காலம் இருந்துபணியாற்றிய அனுபவம் எனக்கு உண்டு.

முரசொலி என்ற பெயரோடு இன்று வெளியே தெரிகின்ற மாபெரும் ஆல விருட்சத்திற்கு எங்கே விதை ஊன்றப்பட்டது ? எப்படியெல்லாம் அதன் வேர் படர்ந்தது என்று மட்டும் அந்தத் தெள்ளிய ஆலின் சிறுபழத் தொரு விதையான 'முரசொலி' - வார ஏடு பற்றி மட்டுமே - 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உள்ளார்ந்த உவகையோடும் பணிவோடும் இங்கே விளக்கிடுகின்றேன்.

'மாணவர் நேசன்' தோற்றம்

கோடையிலே இளைப்பாறிக் கொள்ள வகை கிடைத்த குளிர் தருவாக... தரு நிழலாக... நிழல் கனிந்த கனியாகத் தமிழகத்தே விளங்கிய **தந்தை பெரியார்** அவர்களை நீங்கள் அறிவீர்கள்.

ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீராக, உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலராக... தமிழகம் மேம்படத்



தன்னலம் கருதாது வாழ்ந்து மறைந்த **அறிஞர் அண்ணா** அவர்களை நீங்கள் அறியாதவர்கள் அல்ல.

மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாக, மென்காற்றில் விளை சுகமாக, அந்தச் சுகத்திலுறும் பயனாக இன்றைய தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பிலே அமர்ந்திருக்கும் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்களையும் 'உள்ளங்கை உருளைக்கிழங்காக'த் தமிழறியும், தமிழினம் அறியும், தமிழகம் அறியும்.

தந்தை பெரியார் அவர்களையும், அறிஞர் அண்ணா அவர்களையும், கலைஞர் மு.கருணாநிதி அவர்களையும் தள்ளி வைத்துவிட்டு, யாராலும் திராவிட இயக்க வரலாற்றை எண்ணிப் பார்க்கவோ, எழுதிக்காட்டவோ முடியவே முடியாது.

நமது நாட்டின் முதலமைச்சராக இருந்து, நம்மையெல்லாம் இன்னும் இரண்டாண்டில் இருபத்தோறாம் நூற்றாண்டை நோக்கிக் கரம் பிடித்து அழைத்துச் செல்லும் மாபெரும் பொறுப்பில் இருக்கின்ற கலைஞர் அவர்களை ஆசிரியராகக் கொண்டுதான் 'முரசொலி' வாரஏடு, சோழ மண்டலத்தில் மனுநீதிச் சோழனுக்குப் பெருமை சேர்த்த திருவாரூரில் இருந்து வெளிவரலாயிற்று.

மாணவர் சங்கம்

திருவாரூரை அடுத்துள்ள திருக்குவளை அவருக்குச் சொந்த ஊர். அப்போது சின்னஞ்சிறு கிராமம்; இப்போது தாலுக்கா. அங்கிருந்து அவர்கள் குடும்பம் அருகிலிருந்த நகரமான திருவாரூருக்குக் குடிபெயர்ந்ததே இவருடைய கல்வி வளர்ச்சி கருதித்தான். ஆனால் தோசை ஊற்றப்போய், ஊத்தப்பம் ஆன கதையாயிற்று பெற்றோரின் அந்த எண்ணம்.

கலைஞர், துள்ளி விளையாடும் பள்ளிப்பருவத்திலேயே - தமிழ் வளர்ச்சியில், சமூக சீர்த்திருத்தக் கருத்துகளில், தமிழினத்தாரின் தலைநிமிர்வில், பகுத்தறிவுக் கொள்கைகளில் - தனியாக நாட்டம் கொண்டார். அவற்றின் வளர்ச்சிக்காகப் பறந்து பறந்து பணியாற்றினார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை, டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம் ஆகியவை இணைந்து நடத்திய 'திராவிட இயக்க ஏடுகள்' கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை.

- பி.எல்.இராஜேந்திரன், எம்.ஏ.,

அந்நாளில், அவ்வூரிலிருந்த காங்கிரசாரும், கம்யூனிஸ்ட் பெரியவர்களும் இப்படியொரு துடிப்பான இளைஞன் நம்பக்கம் இருந்தால் நன்றாயிருக்குமே என்று குறிவைத்துச் சிந்தித்தார்கள்; அவர்கள் விரித்த வலையில் சிக்காமல், தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்க நிழலில் சுகம் காண அல்ல; புயல் பல கடந்து புதிய தமிழகம் காணவந்தார் இளைஞர் கலைஞர்.

'சங்கங்களால் - நல்ல
சங்கங்களால் - நாம்
சாதித்தல் கூடும்
பெரும் பெரும் காரியம்'

- என்று புரட்சிக்கவிஞர் பாடினாரே ? அதை உணர்ந்து, உருவாக்கப்பட்ட சிறுவர் சீர்திருத்தச் சங்கத்தின் தலைவரானார் கலைஞர்.

'சங்கம்' என்றிருந்தால் என்னதான் மாணவர் சங்கமானாலும் கூட, அதன் நோக்கம் கொள்கை பற்றியெல்லாம் மற்றவர்கள் அறிந்திடச் செய்ய மேடை மட்டும் போதுமா ?...ஏடொன்றும் தேவைதானே ?

எனவே - 1941ல் 'மாணவர் நேசன்' என்றோர் கையெழுத்து ஏடு தொடங்கினார் முதன் முதலில்.

இன்னும் அது பற்றித் தெளிவாகச் சொல்லவேண்டுமேயானால், 15ஆம் வயதிலேயே 'சிறுவர் சீர்திருத்தச் சங்கத்தின் தலைவராக விளங்கிய கலைஞர் அவர்கள்-தாமே தொடங்கி, நடத்திவந்த அந்த 'மாணவர் நேசன்' பற்றி இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> 'மாணவ நேசன்' என்பது நான் நடத்திய கையெழுத்து ஏடு; நான் பள்ளியில் நடத்திய கையெழுத்து ஏடுகளை...ஒரு சமயம் ஒருவர்தான் படிக்க முடியும்.
>
> 'நான் நடத்திய ஏடு, மாதத்திற்கு இரண்டு வெளியீடு; ஒவ்வொரு வெளியீட்டிலும் - எட்டுப் பக்கங்கள்; பிரதிகளோ, ஐம்பதுக்குக் குறையாது; ஐம்பது பிரதிகளையும்...நானும் சில நண்பர்களும் மட்டுமே உட்கார்ந்து "காப்பி எடுப்போம்; 'டெம்மி பேப்பர்' செலவை மட்டும் வசூல் செய்துகொள்வோம், உழைப்பும் கட்டுரையும் இனாம்'.

பாவேந்தர் கேலியும் பாராட்டும்

இந்த 'மாணவர் நேசன்' ஏட்டினுக்குப் **புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரிடம்** வாழ்த்துரை வழங்கிடுமாறு கேட்கப்பட்டது. அதற்குப் பாவேந்தர் அப்போது அளித்த பதில் என்ன தெரியுமா ?

'கைராட்டையால் நாடு முன்னேறும் என்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ, அவ்வளவு பைத்தியக்காரத்தனம் இந்தக் கையெழுத்துப் பத்திரிகையும்' - என்று அவர் எழுதினார். புரட்சிக் கவிஞரல்லவா ?

ஆனால், கலைஞர் அவர்கள் அதைக் கண்டு மனம் சோர்ந்து விடவில்லை.

அந்தப் பதிலையும், பத்திரிகையில் வெளியிட்டு - 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதை மாணவர்களாகிய நாங்கள் நிரூபித்துக்காட்டுவோம்' என்று அவருக்குப் பதில் எழுதினார்.

ஆனால், அதே ஏட்டினுக்கு, ஆறாம் உயர்வகுப்பிலிருந்த கலைஞர் எழுதிக் கேட்டுக் கொண்டதன் பேரில், 21.11.1942ல் அதே புரட்சிக்கவிஞர் அவர்கள் ஒரு வாழ்த்துப் பாவே அற்புதமாக எழுதியனுப்பியிருந்தார்:

முரசொலி
வார வெளியீடு
ஆசிரியர் மு.கருணாநிதி
(14-4-48)

'தண்பொழிலில் குயில்பாடும் திருவா ரூரில்
    தமிழ்நாடு தமிழ்மாண வர்மன் றம்காண்;
வன்மையோடும் உண்மையொடும் வாழ்ந் திடும்காண்;
    மக்களிடை எழுச்சிக்கு மருந்தா கும்காண்;
கண்மூடிக் குறிமறந்து தமிழர் தங்கள்
    கலைமறந்த நெஞ்சத்தில் ஒளிஎய் தும்காண்;
புண்வாய்ந்தோர் அல்லர்காண்; திருவா ரூரின்
    புலிஇளைஞர் காண்; தோள்கள் பூரித் தார்காண் !

- என்று தொடங்குவது இது முதலான அந்த எண்சீர் விருத்தக் கவிதைகள் மூன்றும்.

1943ல், முரசொலியின் முதலாம் ஆண்டு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அப்போது படித்துக்கொண்டிருந்தார்கள் **பேராசிரியர் க.அன்பழகன், நாவலர் இரா.நெடுஞ்செழியன்** ஆகியோர்; அரும்பாடுபட்டு அவர்களை வரவழைத்தே அந்த இனிய விழாவை நடத்திப் பெருமை கொண்டார் கலைஞர்.

கதையும் கருவும்

விழாவுக்கு வந்திருந்த முக்கிய விருந்தினர்களைத் திரும்ப அனுப்பிவைக்க வழிச்செலவுக்குப் பணம் கொடுத்தனுப்ப வேண்டுமல்லவா ? - அதற்குப் பணம் எங்கெங்கோ முயன்றும் எதுவும் கிடைக்காத நிலைமை, வீட்டிலிருந்த வெள்ளிச் சந்தனக் கிண்ணமொன்றை எடுத்துப்போய் அடகு வைத்துப்பணம் வாங்கியே அவர்களை வழியனுப்பி வைத்திருக்கிறார் கலைஞர்; இத்தனைக்கும் திருவாரூருக்கும் சிதம்பரத்திற்கும் ஐந்தாறு ரூபாய்தான் கட்டணம்!

பிற்காலத்தில் அந்த 'வெள்ளிச் சந்தனக் கிண்ணமே' அவரெழுதிய கதையொன்றின் கருப்பொருளாயிற்று.

'முரசொலி' சென்னைக்கு வந்தபின் நடந்த வேறோர் சம்பவமும், இதேபோல் கதையானதையும் இங்கே குறிப்பிட்டால் சுவையாக இருக்கும். 'முரசொலி' அலுவலகத்தில் பணிபுரிந்த அச்சுக்கோப்பாளர் ஒருவருக்கும் வேறோர் இளம் பெண்ணுக்கும் இடையே காதல். தினசரி இருவரும் கடிதம் எழுதிக் காதலை

வளர்ப்பது என்ற உடன்படிக்கை போலும். வேலை மிகுதியால் அவன் அவளுக்கு இரண்டு நாள் கடிதம் போடவில்லை போலிருக்கிறது. ஊடலோடு அவள் எழுதிய கடிதம், தவறுதலாக அலுவலகக் கடிதங்களோடு ஆசிரியர் கலைஞர் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதை அவர் படிக்கப் போய்த்தான் ஒரு திரைப்படத்தில் - ஒருவன் அடிக்கடி ஒருத்திக்குக் கடிதம் எழுதுவான்; அவளுக்கோ படிக்கத் தெரியாது; தபால்காரர் அதைக் காதல் ரசம் சொட்டப் படித்துக் காட்டுவார்; அவளோ எழுதியவனை மறந்துவிட்டு, படித்துக்காட்டுபவன் மீதே காதல் கொள்ளுவாள் - என்பது போல் ஒரு காதல் காட்சி உருவாக்கப்பட்டது.

இவ்வாறான பல சம்பவங்கள் கலைஞரின் கற்பனை வளத்தோடு கதையான கதைகள் பல உண்டு; அவற்றைப் பிறகு பார்ப்போம்.

நிதி நெருக்கடி முதலான பல காரணங்களாலே, பிறகு ஏழெட்டு மாதங்களிலேயே 'மாணவர் நேசனை' நிறுத்தும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

அறிஞர் அண்ணா அறிமுகம்

இதற்கிடையில், 'முரசொலி' பத்திரிகை தொடர்பான - அதன் ஆசிரியர் தொடர்பான செய்தி என்பதனாலே - **அறிஞர் அண்ணா** அவர்களுக்குத் தம் எழுத்துத் திறமை மூலமாகக் கலைஞர் அவர்கள் அறிமுகமான செய்தி ஒன்றையும் இங்கே நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

அப்போது, காஞ்சிபுரத்திலிருந்து அறிஞர் அண்ணா அவர்கள், **'திராவிட நாடு'** ஏட்டைத் தொடங்கி நான்கைந்து வாரமே ஆகியிருக்கும் அந்த ஏட்டினுக்கு **'இளமைப் பலி'** என்றோர் கட்டுரையை பதினேழு வயது மாணவராக இருந்த கலைஞர் எழுதியனுப்பியிருந்தார். 'திராவிடநாடு' ஏட்டிலும் அது அச்சாகிவிட்டது.

தம் எழுத்தை அச்சில் - அதுவும் அண்ணா நடத்தி வந்த ஏட்டில் பார்த்ததும் இளம் கலைஞரின் நெஞ்சில் ஆனந்த அலைகள் ஆர்ப்பரித்தெழுந்தன; தனது கட்டுரை வெளியாகியிருந்த 'திராவிட நாடு' ஏடு யார் கையிலெல்லாம் இருக்கிறது ? யாரெல்லாம் அதைப் படித்து இன்புறுகின்றனர் ? என்று வீதி வீதியாகப் போய்ப் பார்த்து, படித்தவர்கள் அளித்த பாராட்டால் அவரடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அதற்கடுத்த வாரமே ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்கத் திருவாரூர் வந்த அறிஞர் அண்ணா அவர்கள், கலைஞரை அழைத்து வரச்சொன்னார்; நேரில் பார்த்த பிறகுதான் அவர் ஒரு மாணவர் - இளைஞர் என்று தெரிந்திருக்கிறது. "முதலில் நன்றாகப் படி - பிறகு கட்டுரையெல்லாம் எழுதலாம்" - என்று முதுகில் தட்டிக்கொடுத்துப் பாராட்டி அறிவுறுத்திவிட்டுப் போய்விட்டார்.

இவர் விடவில்லை; மீண்டும் ஒரு கட்டுரை **'பகுத்தறிவு பரமசிவம்'** - என்று 'திராவிட நாட்டுக்கு' எழுதியனுப்பினார். ஆனால், அது அச்சாகவில்லை; ஆனாலும், கலைஞரின் எழுத்தார்வம் குறைந்துவிடவில்லை - எழுதிக் குவித்துக்கொண்டேயிருந்தார்.

எப்படி வேரை மறந்துவிட்டு மரத்தை விமர்சிக்க முடியாதோ - உருவத்தை விட்டுவிட்டு நிழலை விமர்சிக்க முடியாதோ, அதேபோலத்தான் கலைஞரை விட்டுவிட்டு 'முரசொலி'யை விமர்சிப்பதும் இயலாது; ஆகவே, இப்படிப்பட்ட சில சிறுசிறு சம்பவங்களையும் இடையிடையே நான் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும், விரல் இல்லாமல் நகமா ?

'மாணவர் நேசன்' நிறுத்தப்பட்டதை முன்னே பார்த்தோம்; எனினும், அதன் பின்னாலே - 'சட்டி சுட்டதடா, கைவிட்டதடா' என்கிற முடிவுக்குக் கலைஞர் அவர்கள் வந்தாரில்லை. **'தொந்தரவுக்குள்ளே, தோழி சுகம் கண்டேன்'** என்ற வகையில், அப்போதுதான் **'முரசொலி' என்கிற துண்டுப் பிரசுரமாவது** தொடங்கலாம் என்கிற எண்ணம் உதயசூரியன்போல் உதித்தது அவர் நெஞ்சில்.

அந்த ஆணித்தரமான எண்ணம், 1942ல் உருப்பெற்றது; ஆம்; 'முரசொலி' துண்டுப்பிரசுரம், நான்கே பக்கங்கள் கொண்டதாகத் திருவாரூரில் இருந்து வெளிவரலாயிற்று.

'முரசொலி துண்டறிக்கை **வெளியீட்டுக் கழகம்'** என்கிற அமைப்பு அதை வெளியிடுவதாக வெளி உலகுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு மூலவித்து கலைஞரே எனினும், அவர் அப்போது மாணவரல்லவா!

'முரசொலி' என்கிற தலைப்பையொட்டி, அதில் தந்தை பெரியார் அவர்களின் மார்பளவுப் படம் வெளியிடப்பட்டிருக்கும்; அதன் கீழே - 'செயலாளர்:' **தென்னன்** - பொருளாளர்; **டி.எஸ்.இராசகோபால்** எழுத்தாளர்: **சேரன்** என்று போடப்பட்டிருந்தது. அது, இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த காலமாதலால் எல்லாவற்றுக்கும் மேலே மையத்தில் 'V' என்ற வெற்றியைக் குறிக்கும் ஆங்கில எழுத்து காணப்படும்.

ஆசிரியர் மு.க. என்றோ, **மு.கருணாநிதி** என்றோ கூட, அவர் அந்த முதல் பக்கத்தில் போட்டுக்கொள்ளவில்லை; **'சேரன்'** என்கிற புனைபெயரிலேயே அதில் தன் புரட்சிக் கருத்துக்களைப் புதுமைத் தமிழ் நடை எழுத்தோவியங்களாக வெளியிட்டு படிப்போர் மனதைப் பண்படுத்தி வந்தார்.

காரணம்-பள்ளி இறுதித் தேர்வை எதிர்நோக்கியிருந்த மாணவப் பருவத்தினர் என்பதால், சொந்தப் பெயரை வெளியிட்டுக்கொள்ள இயலாத நிலை; அதனால்தான் 'சேரன்'. இத்தனை பத்திரிகைப் பிரதிகள் என்றில்லை; நிதி நிலைக்கேற்ற எண்ணிக்கையில் 'முரசொலி' வார ஏடு அச்சிடப்பட்டது. பக்கங்களும் அவ்வாறுதான்; சில சமயம் 8 பக்கம்; ஓரணா. சில சமயம் 12 பக்கம்: **விலை ஒன்றரையணா.**

5.10.1942 இரண்டாம் ஆண்டாகும்; அப்போது அச்சடித்து வெளியிடப்பட்ட 'முரசொலி' 7வது துண்டறிக்கையின் முதல் பக்கத்தில், கலைஞர் அவர்கள் 'சேரன்' என்ற பெயரிலே-சிதம்பரத்தில் நடைபெறவிருந்த வருணாச்சிரம மாநாட்டைக் கண்டித்து - **'வருணமா ? மரணமா ?'** என்ற தலைப்பிலே எழுதியிருந்த, கடுமையான புயல்வேகப் புரட்சிக் கட்டுரையானது பெரும்பான்மை மக்களால் பெரிதும் பாராட்டிப் பேசப்பட்டது; இளைஞர் பலரால் அப்போதே மனப்பாடம் செய்து பலர் நடுவே பேசிக்காட்டி எழுச்சி பெறச்செய்தது.

அப்போது-இதுபது வயது இளைஞராக இருந்த கலைஞர் எழுதிய அந்த 'வருணமா ? மரணமா ?' கட்டுரையின் துவக்கம் இது:

'தில்லையிலே - ஆம் - தீட்சிதர் கோட்டையிலே-தீனதயாபரன், கான முழக்கத்துடன் காலைத் தூக்கிக் காளியிடம் நடனம் செய்த கலைப் பகுதியிலே-புனிதர் மாநாடாம் ! பூரி தட்சணையாம் ! புண்ணியக் கூட்டமாம் ! புல்லர்கள் உள்ளவரை நல்லது ஏது ? !'...

- என்று ஏகடியத்தோடு தொடங்கும் இந்தக் கட்டுரை எழுதியதாலேயே, கலைஞரை சிதம்பரத்திற்குள் வரக்கூடாதெனத் தடைவிதித்தது அந்நாள் அரசு!

அந்த ஏட்டின் கடைசியில் -

'விரைவில் நன்கொடை அனுப்பி
வைத்தால், முரசொலி உங்களை
நாடி வரும் - அடுத்த ஒலி அக்டோபர் 25ல்'

- என்றோர் அறிவிப்பு..

'திராவிடர் தலைவர் பெரியார்
அவர்களைத் தலைவராகக் கொண்ட
திராவிடர் கழகத்தில் நீங்கள்
உறுப்பினராகச் சேர்ந்து விட்டீர்களா ?'

- என்று ஒரு விளம்பரம்.

அதற்கும் கீழே - நாகையில் நமது **'பழனியப்பன்'** நாடகம் இம்மாதம் நடைபெறும் - என்கிற வரி விளம்பரம்.

இவ்வளவுக்கும் கீழே, அது கடைசிப்பக்கம் என்பதால், 'இம்பிரிண்ட்', **கிருஷ்ணா பிரஸ், திருவாரூர்.**

இந்த கிருஷ்ணா பிரஸ் அச்சகத்தின் உரிமையாளரான **திரு டி.ஜி.நாராயணசாமிப்பிள்ளை** கலைஞர்பால் மிகுந்த அன்பு கொண்டவர்; இன்னொரு விஷயம் - அவர் ஒரு பழுத்த காங்கிரஸ்காரர்.

அடுத்தடுத்து வந்த ஏடுகளில் 'முரசொலி இலவச வெளியீடு-நன்கொடை ரசீது' விளம்பரமும் இடம் பெற்றிருந்தது.

1942 முதல் 1944 வரைதான் அரசியல் புயலாக, இலக்கியத் தென்றலாக, கதைக் களஞ்சியமாக இந்த இதழ் வெளிவந்தது.

உலகப்போர்க் காலத்தில் சரியான தாள் கூட அச்சிடக் கிடைக்காது; அந்த நெருக்கடியிலும் வெளியான 'முரசொலி' பற்றி அறிஞர் அண்ணா அவர்களே எழுதியது இது:

> **'முரசொலி வண்ணம் கொண்டு, உங்கள் இல்லம் வருகிறது. இதன் முன்னாள் வடிவம் அறிவீரா ? படித்து படித்தால் பொடியாகும். பிரித்துப் பார்த்தால் எழுத்துக் கலையும் என்றெண்ணத்தக்க விதத்தில், துண்டு வெளியீடாகத் திருவாரூர் மாணவரிடையே உலவிற்று அன்று !**
>
> **'ஒவ்வொரு நாளும்' 'முரசொலி' பரணி பாடுகிறது. அதிலே காணப்படும் திருப்பள்ளி எழுச்சி, தமிழக மாந்தர்களைத் தட்டி எழுப்புகிறது. அது கேட்டிடும் வினாக்களுக்கு விடை கூற இயலாது ஆதிக்கக்காரர்கள் திணறுகிறார்கள்.**
>
> **"அந்த 'முரசொலி' சேரன் செங்குட்டுவன் தீட்டும் சிலப்பதிகாரம்.**
> **முரசு ஒலிக்கிறது ! படை நடக்கிறது ! பகைவர் பதைக்கின்றனர் !"**
>
> **- அறிஞர் அண்ணா**

கலைஞரின் நாடகத்துறை-திரைப்படத்துறை-ஈடுபாட்டு ஆர்வம் காரணமாக, இடையிலேயே நிறுத்தப்பட்டது முரசொலி துண்டறிக்கை. பிறகு - 14.1.1948 முதல்தான் அது மறு ஜென்மம் எடுத்தது.

'பெரியார் ஆண்டு' என்கிற காலக்கணக்கீட்டை முதன் முதல் அறிமுகம் செய்த பெருமைமிக்கது 'முரசொலி'தான். இந்தப் புதிய வார ஏடு வெளியீட்டு விழா, **பாவலர் பாலசுந்தரம்** அவர்கள் தலைமையில் திருவாரூரில் நடைபெற்றது. **கரந்தை எஸ். சண்முக வடிவேலு** அவர்கள் முதல் இதழைப் பெற்றுக் கொண்டார்.

கருணை **எம்.ஜமால்** என்பவருக்குச் சொந்தமான **'கருணாநிதி மின்னியக்க அச்சகத்தில்'**தான் இந்த வார ஏடு திருவாரூரில் அச்சிடப்படலாயிற்று; அவரும் கலைஞரின் தோழரே எனினும், ரூபா அணா பைசாவில் கறார் பேர்வழி அவர்.

அந்த ஏட்டின் முன்பக்கத்தில் இருந்தவை பற்றி மட்டும் இங்கே விளக்குகிறேன்.

Reg. No.M...
விலை அணா 1

முரசொலி

முரசு 1, திருவாரூர், பெரியார் ஆண்டு 69, தை 1 (14.1.48) புதன்கிழமை ஒலி-1

- இப்படித் தொடங்கும் முதல் பக்கத்தில், 'முரசொலி' என்கிற சிவப்பு எழுத்துத் தலைப்பும் அதன் கீழே அந்த எழுத்தானது, பலமாக அடிக்கப்படும் முரசிலிருந்து கிளம்புவது போன்ற படமும் அமைந்திருந்தது.

தலைப்பில் கால்வாசி இடத்தில் இதெல்லாம் 4½ அங்குலத்தில் முடிந்துவிட, அதையடுத்து, ஒரு விளம்பரம்-2 அங்குலத்தில் இருந்தது -

> **'செல்வம் சிற்றுண்டி உணவு நிலையம், பஸ்ஸ்டாண்டு, விஜயபுரம், திருவாரூர் S.Rly. நண்பர்கட்குப் பொங்கல் நல்வாழ்த்து. தங்கள் அன்பும் ஆதரவும் என்றென்றும் அளிக்கக் கோரும் எ.முத்துக்கிருட்டினன், உரிமையாளர்.**
> **- என்பதே அந்த விளம்பரம் ஆகும்.**

> ***அடங்கி நடக்கக் கற்றுக்கொள்கிறவனுக்கு, ஆணையிடும் நிலைமை தானாக வந்துசேரும்; தொழிலாளியாக இருக்கக் கற்றுக்கொள்கிறவனுக்கு முதலாளியாகும் நேரம் விரைவில் வந்துவிடும்.***
>
> ***- விவேகானந்தர்***

அந்த முரசொலி பத்திரிகை 'கிரவுன்' சைசில் அமைந்திருந்தது. பக்க அளவு 6½ அங்குல அகலம்; உயரம் 9 அங்குலம், மொத்தம் 8 பக்கங்கள். எல்லாக் கட்டுரைகளுமே 3 காலம் அளவுதான்.

முதல் பக்கம் ஒரு கட்டுரை - **'எழுதவில்லை'**, என்பது அதன் தலைப்பு. **'பேனாமுள்'** என்கிற பெயரோடு தொடங்கி, 8ஆம் பக்கம் முடிவுறுகிறது. கட்டுரையின் கடைசியில், 'இப்படிக்குத் **தோழன் ப.ஜீவானந்தம்'** - என்று கட்டுரையாசிரியர் பெயரும் காணப்படுகிறது. இதோ, அந்தக் கட்டுரையின் தொடக்கம்.

> 'வந்தே மாதரம் ! ஜெய்ஹிந்த், வர்க்கப் புரட்சி ஓங்குக ! ஈரோட்டுப்பதை என்ற தலைப்பில் ஜனநாயகத்தில் விளாசியிருந்தேனே, படித்தீர்களா ? அடடா, அதை மட்டும் இந்த திராவிடர் கழகத்து இளைஞர்கள் படித்திருந்தால், உடனே ஜோஷிப் பாதைக்கு திரும்பிவிடுவார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை வலுப்படுத்த எத்தனையோ பாதைகளைப் போட்டுப் பார்த்தோம். மக்கள் யுத்தம் என்று ஒரு பாதை, அது 'வார் டயம்' பிசினஸ் ! 'காங்கிரஸ் லீக் ஐக்கிய முன்னணி என்ற கோஷம், பாக்கிஸ்தான், இந்துஸ்தான் பிரிவினையில் முடிந்தது. 'மெஜாரிட்டி கட்சியோடு சேர்ந்து வேலைசெய்தல் என்ற கொள்கையை அனுஷ்டித்து காங்கிரஸின் பாதாரவிந்தங்களை அர்ச்சித்து, முடிவில் 'துரோகி' என்ற பட்டத்தைப் பெற்றோம். . .

- இப்படியாக அந்த முதல் பக்கக் கட்டுரை, அந்த இதழில் தொடங்குகிறது.

> 'என்னைப்பற்றி நான் எழுதும் கட்டுரையில், நானே பெருமைப் படுத்திக் கொள்ள வேண்டிய துணிச்சலை எனக்களித்த கம்யூனிசத்திற்கு என் வந்தனம். என் வியாசத்தின் ஓட்டை உடைசல்களை அடுத்த கடிதத்தில் விளக்கமாகத் தொடர்ந்து எழுதுகிறேன்'.

- என்று தோழர் ப.ஜீவானந்தத்தின் அந்தக் கட்டுரை கடைசிப் பக்கம் நிறைவடைகிறது.

அந்த 'முரசொலி'யின் 2ஆம் பக்கம் **'பத்தினியே உன்போல்'** என்றொரு கதை-பத்தினித்தனம் என்றால் என்ன என்று தெரியாத ஒருத்தி, கருங்குழிக்குப் பார்சலான கதையொன்று இடம் பெற்றிருந்தது. எழுதியவர் பெயர் இல்லை.

இப்படிப் பெயரில்லாதவை அனைத்தும் கலைஞரின் கைவண்ணங்களே !

இவ்வாறாக 'முரசொலி' வார ஏட்டின் - முதல் இதழின் எட்டுப் பக்கமும் கட்டி வெல்லமாக இனிக்கிறது, நமக்கு.

வெட்டு ஒன்று - துண்டு இரண்டு எனக்காட்டும், கனல் தெறிக்கும் தலையங்கமும் உண்டு. கடைசிப்பக்க முடிவில் **'முரசொலிக்கு ஆண்டு சந்தா ரூ.4 தான்'** என்ற அறிவிப்பு.

முடிவில் 'இம்பிரிண்ட்'; **ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு.கருணாநிதி, திருவாரூர். பதிப்பாளர்: கருணை எம்.ஜமால், கருணாநிதி (மின்னியக்க) அச்சகம், விஜயபுரம்** - என்றிருக்கிறது.

'முரசொலி'யின் 2ஆம் இதழில், முதல் பக்கமே தந்தை பெரியார் படம் 'பாஸ்போர்ட்' அளவில், தலைப்பிலேயே இடம் பெற்றிருந்தது. அதைத் தொடர்ந்து வந்த இதழ்களில் - பெரியார் படம் இருந்த இடத்தில் சர் **ஏ.டி.பன்னீர் செல்வம், டி.பி.வேதாசலம், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், என்.வி.நடராசன்** போன்றோர் படங்களெல்லாம் தொடர்ந்து வாராவாரம் இடம் பெற்று வந்திருக்கின்றன.

13வது வார இதழில் - அறிஞர் அண்ணா, குதிரையில் ஏறி கோட்டை அருகில் பெரும்படையோடு வருவது போல் அட்டைப்பட ஓவியம்; **ஓவியர் எஸ்.விரையா** வரைந்த முழுப்பக்க ஓவியம்; 15வது வார இதழில் - தந்தை பெரியார் புகைப்படம் முதல் பக்கமே சரிபாதி அளவும், 17வது வார இதழ் அட்டையில் **'மகான் ரமணரும் மகாத்மா அரவிந்தருமே மக்கள் தம் வழிகாட்டிகள்'** என்று கூறிய **தோழர் ஜெயப்பிரகாஷ்** படத்தை **ஆணும்-பெண்ணும்** என இப்படியும் அப்படியுமாகப் பாதிப் பாதி போட்டு **'அரசியல் அர்த்த நாரி'** என்ற தலைப்போடு ஒரு கேலிச் சித்திரமும்-என இதழ் தொடர்ந்து மலர்கிறது.

என்.எஸ்.இளங்கோ, டி.கே.சீனிவாசன் போன்றோரெல்லாம் அந்த ஏட்டில் எழுதியிருக்கிறார்கள்.

'குண்டுவிச்சு' என்றொரு புதிய பகுதி அதில் அணி செய்தது. இந்தியில் வெளிவந்த 'மீரா' திரைப்படம் பற்றிய ஓர் அலசல் அது.

அந்த 2ஆம் இதழில், முதல் இதழில் இடம் பெற்றிருந்த 'ஜீவா' கடிதம் பற்றித் தெரிவிக்கப்பட்டிருந்த ஒரு விளக்கம் மிகவும் சுவையானதாகும்.

'ஜீவானந்தம் கடிதம்' என்கிற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த அந்தக் கடிதத்தில், பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையில் இப்போதும் நாம் கலைஞரிடம் காணும் வேடிக்கைக் குறும்பு மின்னுகிறது. இதோ, அந்தச் சுவைமிகு கடித அறிவிப்பு:

> "முரசொலியில் 'எழுதவில்லை' என்ற தலைப்பில் வெளியாகும் ஜீவானந்தம் கடிதம், அவர் எழுதியது தானா எனப் பல நண்பர்கள் கேட்கிறார்கள்"
>
> இல்லை...இல்லை...ஜீவானந்தம் எழுதவில்லை. 'ஜனநாயகம்' பத்திரிகையில் தோழர் ஜீவானந்தம் 'ஈரோட்டுப்பாதை' என்ற தலைப்பில் பெரியாரைப் பற்றி எழுதியுள்ள கட்டுரைக்கு மறுப்பளிக்கும் முறையில், நமது பேனாமுள் எழுதும் கடிதம் அது ! ஜீவா உண்மை உள்ளத்தோடு எழுதினால் இப்படித்தான் எழுதுவார் என்பது நம் கருத்தும்கூட !
>
> ஆனால் அவர் எழுதவில்லை !
>
> - இதுதான் அந்த 5ஆம் பக்க அறிவிப்பாகும்.
>
> இப்போது புரிகிறதா அந்தப் 'பேனாமுள்' யாரென்று !

-அடுத்த இதழில் முடியும்.

கல்வியை விட ஒழுக்கத்திற்கே நான் முதலிடம் தருகிறேன். படித்தவன்
ஒழுக்கமும் பணிவும் இல்லாதவனாக இருந்தால்,
அவன் விலங்குகளை விட ஆபத்தானவன்.
- டாக்டர் அம்பேத்கர்

அவளுடைய கேள்வி!

- தோப்பில் முகமது மீரான்

நான்காவது வீட்டிலுள்ள பெரியவருடைய சடலம் மருத்துவமனையிலிருந்து காலையில் அவர் வீட்டிற்கு எடுத்து வந்ததாக பொன்னம்மாள் பாட்டி சொன்னாள். இறந்தவர் யார் என்று தெரியாவிட்டாலும் வாசித்துக்கொண்டிருந்த நாவல் வரிகளிலிருந்து கண்களை உருவாமலேயே அவருக்கு என்னவென்று பாட்டியிடம் விசாரித்தேன். உடம்புக்கு முடியாமையால ரொம்ப நாளாகப் படுத்திருந்ததாகச் சொன்னாள்.

எச்சிப் பாத்திரங்களைப் பின்வளாகத்திற்கு எடுத்துச் செல்லுகையில், "மனுசன் கவனிப்பார் இல்லாம, ரொம்ப கஷ்டப்பட்டார், இன்னும் கிடந்து கஷ்டப்படாம போனது அவர் செய்த புண்ணியம்" என்று தானாகப் புலம்பிக் கொண்டாள்.

கூரிய அலகால் நெஞ்சுக் கூட்டிற்குள்ளிருந்த பருப்பைக் கொத்தி எடுத்துவிட்டு மரணம் உமிழ்ந்து போட்ட அவர் பொக்கை உடம்பு கிடக்கும் சந்தோஷ் நகர் தெருவை, நாவலை மூடிக்கொண்டு எட்டிப்பார்த்தேன், சிறகடித்து வந்திறங்கிப் பலவந்தமாகப் பருப்பைக் கொத்தி எடுப்பதற்கிடையில் கைகலப்பு நடந்திருந்த தெரு மணலில் கிளறல், அடையாளங்கள் எதையும் காணவில்லை. வழக்கமான மௌனம்தான் அப்பவும் காணப்பட்டது, தெருவில் - பெரிய ஒரு பன்றியின் பின்னால், நாலைந்து குட்டிகள் பந்துபோல் உருண்டோடிப்போன மௌன ஊர்வலம் மட்டும் தெரிந்தது.

மதியம் ஆனபோதிலும் பாதங்களின் மிதிவாங்காமல் கிடந்த சந்தோஷ் நகரின் மூணாவது மெயினில், பதினாறாவது குறுக்குத் தெருவில் என்னுடைய நாற்பத்தி மூன்றாவது எண், வாடகை வீட்டிலிருந்து நான்காவது வீட்டின் முன்பக்கம் சட்டை போடாத இருவர் உட்கார்ந்து பச்சைத் தென்னை ஓலையை முடைந்து கொண்டிருந்தனர், பாடைகட்ட.

முன்பு வாடகைக்குத் தங்கியிருந்த தெற்குத் தெருவானால் இந்நேரம் ஜனத்திரளாகவே இருக்கும். ஜனங்களின் பரபரப்பைக் கண்டால் மலக்குல் மௌத்-எமனைத் துரத்தி அதன் கையிலிருந்து உயிரைத் திருப்பிப் பறிக்கத் தெரு மக்கள் ஒளிப்போர் செய்யப் போவதாகத் தோன்றும். தெருவின் மேல்வெளி, ஒப்பாரி அலைகளின் ஆர்ப்பரிப்பில் மூழ்கிவிடும். தோளில் துண்டைப்போட்டுக் கொண்டு நான்காவது வீட்டிற்குத் துக்கம் விசாரிக்கப்போனது அந்தத் தெருவில் நான் ஒருவனாகத்தான் இருப்பேன். சடலத்தைச் சுற்றி உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் சில பெண்கள் கசிவு தட்டாமல் அழுது புலம்பினர். கவுடுக்கிடையில் கையைக் கொடுத்து உட்கார்ந்திருந்தவர், போன என்னைஏறிட்டுக் கூட பார்க்காததில் வருத்தப்படுவதற்கு இல்லை. அஞ்சலி செலுத்துவது போல் சில கணங்கள் நின்றுவிட்டுத் திரும்புகையில் மரணத்தின் அலகு உள்ளே நுழைந்துவிடாமல் இருக்க வாசலும் ஜன்னல்களும் மூடப்பட்ட எதிர் வீட்டிற்குள்ளிருந்து 'காதலன்' பாட்டு ஒலித்தது. மரணம் நிகழ்ந்தது எதிர் வீட்டிலானதால், 'முக்காபுலா'வில் அந்த வீட்டில் உள்ளவர்கள் குசி கண்டனர்.

மனைவியின் பிடிவாதம் தாங்காமல் சந்தோஷ் நகரில் குடிவந்தபிறகு இந்தத் தெருவில் பல மரணங்கள் நிகழ்ந்தன. மரண வீட்டிலிருந்து திரும்பி என் வீட்டு வாசலை அடைந்தேன். அதுவரை முகம் பார்த்துப் பேச வாய்ப்புக் கிடைக்காத பக்கத்து வீட்டுக்காரர், அவர் வீட்டுவாசலில் நிற்பதை முதல்முறையாக அன்றுதான் பார்க்க நேர்ந்தது. குடிசென்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, வெளியே செல்ல இறங்கி நின்றவர், நான் எதிர்ப்பட்ட சகுனப்பிழையை எண்ணித் தலைகுனிந்து நின்றார். அண்டை வீட்டாராச்சே, நாமாகப் பேச்சுக் கொடுப்போமே என்ற எண்ணம் உள்ளிருந்து என்னை உசுப்பியது.

"துட்டிக்குப் போனீங்களா ?" முகமலர்ச்சியோடு கேட்டேன்.

"யாரென்று தெரியாது." வெடுக்கென்று எரிச்சல்பட்டபோது எலி மூஞ்சியாகவே இருந்தது அவருடையது. மறு பேச்சு கொடுத்துவிடுவேனோ என்று பயந்தபடி வீட்டுக்குள்ளே அவர் போன வேகத்



தாக்குதல், என் முகத்தைத் சாகடித்தது. அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட பிளாஸ்டிக் வயர்பின்னிய நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மீண்டும் எழில்வண்ணனின் நாவலை நிப்பாட்டிய இடத்திலிருந்து வாசிக்கத் துவங்கினேன். முன்பு இருமுறை வாசித்த நாவலாக இருந்தாலும், வாசிக்க வாசிக்கப் புதுப்புது ஊற்றுக்கண்திறந்துகொண்டிருந்த வியப்பில் ஆழ்ந்தேன்.

மக்கள் அதிகமாகத் திணறி வாழும் ஒரு தெருவின் உயிர்த் துடிப்பையும், மக்களிடையே காணப்படும் பிணைப்புகளையும் பிளவுகளையும் மனவோட்டங்களையும் காட்டும் நாவல் அவருடையது. பின்னப்பட்ட கலைநுட்பம் என்னை அந்தத் தெருவுக்கே இழுத்துச் செல்கிறது. நாவலை எடுத்தாலே என்னை அது முன்பு வாடகைக்குக் குடியிருந்த தெற்குத்தெருவில் மீண்டும் வாழவைக்கிறது. பேனா முனையாலே உருவாக்கிய ஓர் அதிசய உலகில் என்னைக் குடியேற்றுகின்ற அந்த மாயாஜாலக்காரனின் விரல் முனையை முத்தமிட விரல்கள் கிடைக்காத ஏமாற்றம் எனக்கு. அவர் எங்கிருக்கிறார் என்று பலமுறை எனக்குள்ளேயே தேடல்கள் எழுந்து ஓய்ந்தன.

முன்பு வாடகைக்கு குடியிருந்த தெற்குத் தெருவைப் பார்த்துத்தான் அந்த நாவலைப் படைத்தாரோ என்று தோன்றும், அதிலுள்ள வரிகளை மனம் ஒற்றும்போது. அவருடைய நாவலில் சித்தரித்து இருப்பதுபோல் தெருவில் கண்டமத்தியில் தான் தண்ணீர்க் குழாய். காலையிலும் மாலையிலும் அதிலிருந்து நூல் தொங்கிக்கொண்டிருக்கும். அதை ஒட்டி குப்பைத் தொட்டி இரண்டும் ஒரு வீட்டிற்கு முன்பக்கம் - அது என் வீடு! காலையிலும் மாலையிலும் குடிதண்ணீர்க் குழாய்க்கு மூச்சு வருவதே குடங்கள் மோதும் ஓசை கேட்டு, தெரு உணர்ந்து உறங்கும்வரை அதன் மேல்பகுதி நீலவார்த்தைகளால் நிரம்பிக் காணப்படும். அதுபோன்ற சில வார்த்தைகளை விரசம் இல்லாமல் எழுதியிருக்கிறார் மனுசன் - அவருடைய நாவலில்.

தெற்குத் தெரு வீட்டுத் தலைவாசல் திறந்தால், பளிச்சென்று தெரிவது தண்ணீர்க் குழாயும் குப்பைத் தொட்டியும், தெருப்பக்கம் உள்ள ஜன்னலைத் திறந்தால் எதிர் வீட்டிலுள்ள அசைவுகள் தெரியும். அங்கு பெண்கள் நடமாட்டம் இருப்பதால், அவ்வப்போது இவன் ஜன்னல் கொண்டியை எச்சரிக்கையாகப் போட்டுவிடுவான். அதனால் ஜன்னல் வழியாக வீட்டிற்குள் நுழையும் வயல்காற்று உள்ளே வராததால் ஒரே வேக்காடு.

"நமக்கு இந்த கூதற தெரு வேண்டாம். சந்தோஷ் நகரிலே ஒரு வீடு பார்த்துப் போவோம்." இவள் எப்பவும் நச்சரிப்பாள்.

இவள் பெரிய ஒகவாகக் (சுத்தம்) காரி. குடிவந்த நாள்முதல் தெற்குதெரு பிடிக்கவில்லை. எட்டு வருடங்கள் அந்தத் தெருவின் மீது பறந்துபோனது எப்படி என்று தெரியவில்லை. எட்டு வருடங்கள் எண்பது வருடங்களாக இருந்தன எனக்கு. அப்படி பாடாய்ப் படுத்திவிட்டாள் சந்தோஷ் நகரில் ஒரு வீடு பார்த்துக் குடிபோக.

வீட்டுக்கு முன்னால் சாக்கடை. பகல் வேளைகளில் குழந்தைகளுக்கும் இரவு விடியும் வரை பெண்களுக்கும், அதுதான் கழிப்பிடம். மாயாண்டி நீளமான அகப்பையால் சாக்கடையை அள்ளி வீட்டிற்கு முன் கூட்டிவைப்பான். வீட்டிற்குள்ளிருந்தாலே மூச்சு முட்டிப்போகும், அப்படி வீச்சம்.

"தூ! மனுச குடியிருப்பானா இந்த ஜனங்களுக்கிடையிலே?" என்று சொல்லி காறித் துப்பி மூக்கைப் பொத்தாத நாளே இல்லை.

வீட்டிற்கு ஒரே வாசல் தான் உண்டு. அதுவழியாகத்தான் வாளியுடன் முனியம்மாள் வருவதும் போவதும். முனியம்மாள் போனதும், "இந்தத் தெருச் சனங்களைக் கண்டாரே இரணம் கிட்டாது" என்று ஓடிப்போய் தலைவாசலை அடைத்துத் தாழ்ப்பாள் போடுவாள். தெருவாசல் எப்பவும் சாத்தப்பட்டிருப்பதால்,தெருச்சனங்கள் ஊராப்பட்ட அசிங்கங்களைக் கொட்டி தொட்டியை நிரப்பிவிடுவார்கள்.

சந்தோஷ் நகரில் சாக்கடைகள் இல்லையென்றும், குப்பைத் தொட்டிகள் இல்லையென்றும் இவள் தெரிந்துவைத்திருந்தாள். அதனால்தான் சந்தோஷ் நகரில் உள்ள உயர் மக்களோடு பழக்கம் ஏற்படுத்தி, அங்கேயே ஆயுசு அளவு வாழவேண்டுமென்ற ஆசை இவளுக்கு. வீட்டுத்தரகர் நமச்சிவாயம் பிள்ளையின் நாடியைத் தாங்கி, கெஞ்சிக் கேட்டு எப்படியோ சந்தோஷ் நகரில் ஒரு வீடு அமைந்துவிட்டது.

வீட்டுச்சாவி கிடைத்த நேரம் முகடு முட்டத் துள்ளிக் குதித்தாள்.

தெற்குத் தெருபோல் இங்கு குப்பை வண்டிகள் வருவதில்லை. காலையில் நீள அகப்பையுடன் மாயாண்டி வருவதில்லை. வாளியுடன் முனியம்மாள் வருவதில்லை. தெற்குத் தெருவில் இருக்கும் போது, காலைநேரம் குப்பை வண்டி வருகையில் குப்பைத் தொட்டியின் மேல்பகுதியில் உள்ளவற்றை மட்டும் பரசி எடுக்காமல் தூர்வரை அள்ளிச் செல்ல, செல்லையாவுக்கு மாமூல் வேறு. இரண்டு பெருநாட்களுக்கும், தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், தேரோட்டம், திருச்செந்தூர் கந்தசஷ்டி, மாதப்பிறப்புகள் இப்படி எல்லாம் நல்ல நாட்களுக்கும் துட்டு வேறு. அவன் எடுத்து வரும் அலுமினியப் பாத்திரத்தையும் நிரப்பிவிட வேண்டும். கொடுப்பதில் ஏதாவது குறைகள் ஏற்பட்டால் தெற்குத் தெருவுக்குள் குப்பைவண்டி நுழையாது. மேலத்தெரு கீழத் தெருவில் உள்ள குப்பைகளை அள்ளிக்கொண்டு வண்டி ஜில் என்று கிழக்கு மாறிப்போகும். இப்படியான சவால்கள் இங்கு இல்லை. அகலமான அழகான தெரு. வீட்டுவாசல்களில் பல வண்ணக் கோலங்கள், தெருவின் இருமருங்கிலும் சோலை மரங்கள். அதட்டல்கள் இங்கு இல்லை.

தெற்குத் தெரு ஜனங்களுக்கு முனியம்மாள் ஒரு பயக்கனவு. ஒரு முறை தெருவையே ஒரு அசத்து அசத்திவிட்டாள். அவளோ ஒருத்தி வேண்டாதவோ முனியம்மாவைத் தகாத வார்த்தையைச் சொல்லி ஏசி விட்டாள். மானக்காரி முனியம்மாவுக்கு எங்குமில்லாத ஆத்திரம். அதே வார்த்தையால் அவளால் திருப்பிஏச முடியுமா? கோபமோ உச்சந்தலையைக் குடைந்தது. ஒரு வழியும் தெரியவில்லை. அவளுக்கு, தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த தெருச் சாக்கடையில் கையிலிருந்த வாளியை அப்படியே கவி த்திவிட்டு, விறு விறென்று வெற்று வாளியுடன் மேலத் தெருவுக்குள் நுழைந்துவிட்டாள். தெற்குத் தெரு ஜனம் குஞ்சும் குறுமாலும் எல்லாம் மூக்கைப்பொத்திக் கொண்டு ஓட்டமெண்ணா, தலைதெறிக்க ஓட்டம்.

மறுநாள் முனியம்மாள் தெற்குத் தெருப் பக்கமே வரவில்லை. வாளிச் சின்னத்திற்கு ஓட்டுப்போட்டு வெற்றிபெறச் செய்த ஜனங்கள், தொகுதி உறுப்பினர் வீட்டை முற்றுகையிட்டனர். தெரு உறுப்பினர் நாலு நல்ல வார்த்தைகள் சொல்லி கேட்டுக்கொண்ட பிறகுதான் தெற்குத் தெருவுக்குள் வீரநாயகியாக நுழைந்தாள். இதெல்லாம் எட்டாண்டுகளுக்கு முன்பு நடந்தாலும், இப்பவும் முனியம்மாவைக் கண்டால் ஜனங்கள் பேசிக்கொள்வதுண்டு. "வாறாடேய்".

எதிர் வீட்டில் இரண்டு பால் மாடுகள், கீழ் வீட்டில் அஞ்சாறு ஆடுகள், கொஞ்சம் நாட்டுக் கோழிகள், சொகத் தொல்லை. தெரு முனையில் உள்ள பெண்பிள்ளை கடையில் எப்பவும் காசாம்பிசாவும், பேரம் பேசலும் தானக்கேடும், வட்டிச் சண்டையும், பிள்ளைச் சோற்றுக்காக, இரண்டு பரல் உப்புக்காக, சில தட்டுமுட்டுக்காக, ஒவ்வொருத்தியும் வந்து கதவை உடைப்பாள். கொடுத்துத் தாங்காது. இவளுக் கானால் எங்குமில்லாத வேகாரி.

"கதவு துறந்து அடைச்சே மனுசனுக்கு உயிர் போவுது".

வாசலில் சைக்கிள் மணியோசை கேட்கும் போதெல்லாம் நமச்சிவாயம் பிள்ளை வந்துவிட்டாரென்று ஓடிப்போய் கதவைத் திறப்பாள். எப்பவும் ஏமாற்றந்தான். வருவதாகச் சொல்லி அனுப்புவார்; வரமாட்டார்.

"நேற்றுதான் காலியாச்சு. உடனே சாவி வாங்கிட்டேன்."

நமச்சிவாயம்பிள்ளை சாவி கைப்பற்றியதைக் கேள்விப்பட்ட பிறகுதான், பலமாத எதிப்பார்ப்புக்குபிறகு இவளுக்கு மூச்சு வெளியானது. அல்லா, தப்பினேன்.

" ரொம்ப ராசியான வீடு. அதில் வாடகைக்குக் குடியிருந்தவர் புதுவீடு கட்டிப்போனார் என்று பிள்ளைவாள் சொன்னபோதே இவளுக்கும் புது வீடுகட்டிய குதூகலம். சந்தோஷ் நகரில், அதுவும் ஒரு ராசியான ஒரு வீடு கிடைத்துவிட்ட மகிழ்ச்சிப் பெருக்கில், தன்னை மறந்து தெற்குத்தெரு ஜனம் அத்தனையும் கச்சடாவென்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.

அக்கம்பக்கம் டீசண்டான மக்கள் வாழ்கின்ற பகுதியில் குடி போவதால் கேட்டபடி அட்வான்ஸ், மறுபேச்சு இல்லாமல், சொன்ன வாடகை. வீட்டைச்சுற்றி விதவிதமான பூ மரங்கள். மொட்டை மாடிக்கு ஏறிச்செல்லப் படிகள். அங்கு நின்று பார்த்தால், 6.10க்கு மும்பைக்குச் சேனைத்தண்டன் பாம்பு சீறிப்பாய்வது தெரியும்.

சுத்தமான, அகலமான, அழகான தெரு. "ஆயத்தளவு இங்கேயேதான் தங்கனும்" குடிபோன அன்று காதில் குசுகுசுத்தாள்.

தெருவின் அமைதி ரொம்பவும் பிடித்திருந்தது. மாநகராட்சி குடிதண்ணீர்க் குழாய் தெருவோரங்களில் இல்லாததால் குடங்கள் மோதி எழும் கணீர் ஓசைகளில் காது அடைப்பதில்லை. மீன் குடலும், கோழித் தலையும், ஆட்டு எலும்புகளும் கொண்டு ததும்பும் குப்பைத் தொட்டிகள் இல்லை.

வெளிமதில் சுவரிலுள்ள கிரில் கேட்டில் பெருங்காயப் பை தொங்கவிட்டிருப்பதில், பால்காரன் மாடசாமி நெல்லை மில்க் பாக்கெட்டைப் போட்டுவிட்டு, அவன் பாட்டுக்குப் போய்க்கிட்டே இருப்பான். தெற்குத் தெருவில் பை தொங்கவிட முடியுமா? ஆளையே தூக்கிட்டுபோற கழிசடைகள்.

> நான் மாறும்போது தானும் மாறுகின்ற - நான் தலையாட்டும்போது தானும் தலையாட்டுகின்ற நண்பன் எனக்குத் தேவையில்லை; அச்செயல்களை என்னுடைய நிழல் நன்றாகவே செய்கிறது.
>
> - புளூடார்க்

உண்மையை ஒருவனும் நம்புகிறதில்லை; பொய்யை உலகம் நம்புகிறது. மோரைத் தெருத்தெருவாய் அலைந்து விற்கிறார்கள்; கள், உட்கார்ந்த இடத்திலேயே விற்றுப்போகிறது!

- கபீர்தாசர்

சைக்கிளில் உட்கார்ந்தபடி வீசப்படும் செய்தித்தாள், சுவருக்குள் சிமிண்டு முற்றத்தில் விழுந்து கிடக்கும். கிரில் கேட்டில் மாட்டப்பட்ட சிவந்த பெட்டிக்குள் தபால்களைப் போட்டுவிட்டுப் பேசாமல் போய்விடுவான் தபால்காரன். இப்படியெல்லாம் ஒரு உலகம் தெற்குத் தெருவுக்கு வெளியே உள்ளது தெரியாமல்தான் எட்டாண்டுகளைக் கடத்திவிட்ட நரகத் துயரங்கள்.

சந்தோஷ் நகரில் குடிவந்த ஆரம்ப நாட்களில் இந்தப் புது உலகைப்பற்றி முன்பு சொல்லாததால், குற்றவாளிக்கூண்டில் என்னை நிப்பாட்டி வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டாள். நகர்ந்துவிட்ட இரண்டு வருடங்களை எட்டிய இப்போதைய நாட்களில், பழைய களிப்பு இவள் முகத்தில் இல்லை. ஏதோ தீவில் தனிமைப்பட்டுப்போன மூச்சுத் திணறலும், பதற்றமும்.

எதிர் வீட்டு மாடியில் குடியிருப்பவர்கள், சீவி மினுக்கி வெளிவாசலில் வந்து நின்ற இவளைக் கண்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை.

“நான் சிரிச்சேன். அந்த லேவிண்டி முகத்தைத் திருப்பியிட்டு போயிட்டா”. வாசலில் கால் வைக்கும்போதெல்லாம் இப்படியான வரவேற்பாக இருக்கும். எதிர் பார்த்ததினால், அவை மனசில் உறைக்கவில்லை.

“பெருமைக்காரிபோல் தெரியுது” ‘இப்போது எதிர் வீட்டு மாடியை ஏறிட்டுப் பார்ப்பதில்லை. ‘கத்திரிக்காய்’ என்ற கூப்பிடுதல் கேட்டால், காலை மணி 10 ஆகிவிட்டிருக்கும். கீழ்வீட்டுக்காரியின் சிறைவாசல் திறப்பது அந்நேரம்தான்.

வெண்டைக்காய் விலைகேட்டு முனைஒடித்து சோதனை செய்கையில், கீழ்வீட்டுக்காரியிடம் நட்பு ஏற்படுத்திக்கொள்ள மெல்லப் பேச்சுக் கொடுத்தாள். இவள் முகத்தையே அவள் பார்க்கவில்லை. இவள் முகம் அப்படியே தொட்டால் சிணுங்கியாகக் குறாவி விட்டது.

காய்கறித் தாத்தா சொன்னார்.

“நானும் பத்து இருபது வருஷமாய் பார்க்கத்தான் செய்யறம்மா; மனுசன் குடியிருக்கிற இடமாகத் தெரியலை”.

இரவு என் காதில் ஒலித்தது “அந்த கீழ்வீட்டுக்காரி திமிரு பிடிச்சவளாக்கும்”.

நாலாவது வீட்டுப் பெரியவரை ஆபத்தான நிலையில் பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதும், பாட்டி சொல்லித்தான் தெரியும். நாலாவது வீட்டில் குடியிருப்பவர்கள் யாரென்று தெரிந்துகொள்வதற்கான நெருக்கங்கள் ஏற்படாததால், அதைப் பொருட்படுத்தவில்லை. எதிரில் செல்லும் என் முகம் பார்வையில் படாதபடி விலகி நடக்கும் அக்கம் பக்கத்தோடு எப்படித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதென்று வழிதெரியாத தவிப்பு உள்ளுக்குள்.

தெற்குத் தெருவில் கால் வைத்தாலே ஏகப்பட்ட விசாரிப்புகள்-சுகமாயிருக்கியளா? இளைய செறுக்கனுக்குத் திடீரென டைபாய்டு காய்ச்சல் வந்தது, அங்கு தங்கி கொண்டிருக்கும்போதுதான். நான் ஊரில் இல்லை. இவளுக்குக் கைகால் ஓடவில்லை. தெருச்சனங்கள் வந்து கூடிவிட்டார்கள். குற்றவாளிப் பட்டியலில் நிரந்தரமாக இடம் பெற்றுள்ள பாட்டில் மஸ்தான் ஓடிச் சென்றான் ஆட்டோ பிடிக்க. அவனே முன்நின்று அந்தக் கணமே பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றதால், செறுக்கன் பிழைத்துவிட்டான். இப்போது துபையில் நிற்பவன், அவனேதான்.

ஆட்டோவிற்குச் செலவான காசைக் கொடுத்தபோது, பாட்டில் மஸ்தான் வாங்க மறுத்துவிட்டதுமல்ல, அவனுடைய கேள்விக்குரல் இப்பவும் காதில் ரீங்கரிக்கின்றது “மனுசனுக்கு மனுசன் உதவாமல் இருந்தால், மனுசனா பிறந்து என்ன பயன்?”. அந்நேரம் நினைவுக்கு வந்தது, எழில் வண்ணனின் வரிகள் - துப்புரவுக்கேடான தெருவில் வாழ்ந்தாலும், அங்கு வாழும் மக்களின் மனங்கள் குளிரருவிகள்!

விடுமுறை நாட்களில் தெற்குத் தெருவைப்போல் சந்தோஷ் நகரில் பொழுது போகாது. குயிலோசை மட்டும் இனிமையாக இருக்கும். நல்ல நாவல்கள் தேடி எடுத்து வாசிப்பதில், மிகுதியான ஆர்வம். எழில்வண்ணனின் நாவல்களில் வரும் தெருவில் மனம் ஓடிக்கொண்டிருக்கும் போதுதான், நாலாவது வீட்டில் பெரியவருடைய சடலத்தை கொண்டு வந்த செய்தி பொன்னம்மா பாட்டி சொன்னது. ஒரு மனிதனை மரணம் றாஞ்சி எடுத்துவிட்ட பரபரப்பு தெருவில் காணப்படவில்லை. மரண வீடுகளுக்குப் படை எடுக்கும் தெற்குத்தெரு ஜனங்களை இங்கு காண முடியவில்லை. எப்போதும் உள்ள மவுனம்தான் அப்போதும்.

சங்கு ஊத்து கேட்டபோது, நாவல் வரிகளில் மனத்தை ஓட்ட முடியவில்லை. தெருவில் எட்டிப் பார்த்த கண்களுக்குப் பாடையைத் தூக்குவது தெரிந்தது. முன் இரு மூங்கில் கால்களையும், இருவருடைய தோள்கள் தாங்கி இருந்தன. பின் இரு மூங்கில் கால்களையும் இருகைகளால் தாங்கிக் கொண்டிருந்தவர், கவுடுக்கிடையில் கைகளைக் கொடுத்து கொண்டிருந்தவர்.

சளைக்காமல் எவ்வளவு தூரம் கைமாற்றவும், தோள்மாற்றவும் ஆளில்லாமல் இம்மூவரால் மயானம் வரை சுமந்து செல்லமுடியும் என்ற கேள்வி எனக்குள். மயானம் ரயில்வே கிராஸிங்குக்கு அப்பால் ஒரு கிலோ மீட்டர் தொலைவில். இடுக்கான பழுதடைந்த பாலம் ஒன்றையும் கடந்து செல்ல வேண்டும். பாலத்திற்கு நுழையும் இடத்தில் அபாயம் என்று போர்டு நாட்டப்பட்டிருக்கிறது.

வாசல்கள் அடைக்கப்பட்ட தெருவின் மயானத் தோற்றத்தைக் கண்டபோது, ஆபத்தான பாலத்தைத் தாண்டி ஏன் அவ்வளவு தூரம் பிணத்தைத் தூக்கிச் செல்லவேண்டும்? இந்த மயானத்தில் ஏதாவது ஒரு இடத்தில் சிதைகூட்டி எரியூட்டக்கூடாதா என்று மனசு - உரக்கக் கத்தியது. எழில்வண்ணனுடைய நாவலில் இப்படி ஒரு நிகழ்ச்சி வருணிப்பையும், கேள்வியையும் வாசித்த நினைவு என்னை அலட்டிக் கொண்டிருந்தது.

“இஞ்செ பாருங்கோ”- கூப்பிட்டாள்.

“நமச்சிவாயம் பிள்ளைங்கிட்ட சொல்லுங்க தெற்குதெருவிலே வீடு பார்க்க”.

“எதுக்கு?”

“நம்மவீட்டுல மையம் விழுந்தாலோ?”... நாலாவது வீட்டில் மையம் விழுந்ததை நினைத்துப் பார்த்திருப்பாள்.

இவள் கேள்வி நெஞ்சை உறுத்தியது. இந்த நகரில் இந்த வீட்டில் ஒரு மையம் விழுந்தாலோ? 100 மைல்களுக்கு அப்பால் ஒரு கிராமத்தில் வசிக்கின்ற உறவினர்கள் வரவேண்டும், கருமாதிகள் செய்ய, அவர்களுக்காகச் சடலத்தை போட்டிருக்க வேண்டும். போட்டிருந்தாலும், அவர்கள் வரவேண்டுமென்றில்லை. முடிச்சுகள் தானாக அவிழ்ந்து தளர்வடைகின்ற காலச்சூழலில் உறவினர்களை எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

தெரு மவுனத்தை முறிக்கும் காய்கறித் தாத்தாவின் ‘கத்திரிக்காய்’ என்று கூப்பிடுதல் ஒலிக்காததால், நாலாவது வீட்டிலிருந்து சடலத்தை எடுக்கும் முன், மார்க்கெட் போய் வர எண்ணினேன். சைக்கிளில் பையைத் தொங்கப்போட்டுக் கொண்டு, சைக்கிளை மிதித்தேன். சுவர்கள் எம்பாடும் கருப்பு மையில் கண்ணீர் அஞ்சலிகள். சைக்கிளில் ரோட்டைக் கடக்க முடியவில்லை. போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. கருப்புக்கொடிகள் கட்டிய கார்கள் அங்குமிங்கும் ஓடின. மூடப்பட்டிருந்த கடைகளின் முன் கருப்புக் கொடிகள். மக்கள் திரள் வெயிலுக்கு ஒதுங்கி நிழல்களைத் தேடிக் கொண்டிருந்தனர்.

என்னவென்று ஒருவரிடம் கேட்டதற்குக் கிடைத்த பதில், முகத்தில் அறைந்தாற்போலிருந்தது.

“இந்த ஊரிலதானே இருக்கிறோம்? நடிகச்சுடர் ரசிகர் மன்றக்கிளை உபதலைவர் இறந்தது தெரியாதா? பத்திரிக்கையிலே பார்க்கலையா?”

கண்மணி ஒயின்ஷாப் திறப்புவிழா முடித்துவிட்டு, புல்லட்டில் போய்க்கொண்டிருந்தார் உபதலைவர். எதிரில் வந்த லாரியில் மோதி விபத்துக்குள்ளாகி மாண்டுவிட்டார்.

தலைவரின் மரணத்தை ஒட்டி மார்க்கெட்டுக்கு விடுமுறை விட்டதாலும் சைக்கிளில் ரோட்டைக் கடக்க முடியாததாலும், வீட்டிற்குள் முடங்கினேன். நாலாவது வீட்டிலிருந்து மூன்று பேர் சடலத்தைத் தூக்கிச் சென்ற பிறகு எழில்வண்ணனின் நாவலை எடுத்து நிப்பாட்டிய இடத்திலிருந்து தொடர்ந்தேன். முன்வாசல் திறந்து கிடந்ததால், நல்ல காற்றோட்டமாக இருந்தது. அத்தியாயங்கள் புரண்டு போனதே தெரியவில்லை. தோளில் பை தொங்கப்போட்டிருந்த ஒருவர் வாசல் பக்கம் நின்றுகொண்டிருக்கும் நிழல், நாவல் வரிகளில் ஓடிய கண்களுக்குத் தெரிந்தது. நிழலைப் பார்க்கத் திரும்புமுன் வீட்டிற்குள்ளிருந்து சொன்னாள். “நமச்சிவாயம் பிள்ளையைப் பாருங்கோ.”

தெருவாசலை எட்டிப்பார்த்தேன். முன்பின் தெரியாத அவர் ஏதோ சொல்லத் தயங்குவது போல் தெரிந்தது. அப்பவும் வீட்டிற்குள்ளிருந்து மீண்டும் குரல் கேட்டது “தெக்குத்தெருவிலே வீடு கிடக்கிதா என்னு பார்க்கச் சொல்லுங்க”.

“பேசாம இருப்பியா!” கோபம் அடக்க முடியவில்லை.

“என்னையா?” தெருவாசலைப் பார்த்துப் புன்னகைத்தேன். உள்ளே வரத் தயங்கி நின்றார்.

“வாங்க.”

ஒரு துண்டுக் காகிதத்தைத் தந்துவிட்டுக் கேட்டார் “இந்த முகவரி?”

கண்ணை ஓட்டினேன்.

எழில்வண்ணன்,
47, 16வது குறுக்குத்தெரு,
3-வது மெயின், சந்தோஷ் நகர்.

“புரோக்கரா?” - கேட்டாள்.

அவளுடைய இந்தக் கேள்வியைக் கேட்டு அதிர்ந்து போன நான், இவள் குரல் எட்டாத தொலைவிலிருந்து தனித்துச் சுடுகாட்டை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தேன். நாலாவது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பாடையின் பின்னங்காலில் ஒன்றை, என் தோள் தாங்கிக் கொண்டிருக்கிறது இப்பவும். ★

'கபிலர் குன்று' கட்டுரை மூலம், அந்தப் பெரும்புலவரின் படைப்பாற்றலை மட்டுமல்ல; அக்குன்று தொடர்பாக அரசு ஆற்றியுள்ள அரும்பணிகளையும் அறிந்து மகிழ்ந்தோம்.

- ப.மு.பாண்டியன், சுந்தரகவுண்டனூர்.

கவிஞர் சாமி.பழனியப்பன் எழுதிய 'சேவலும் சேயிழையும்' கட்டுரையில் இலக்கிய மணம் கமழ்ந்தது. அக்காலக் காதலரின் அற்புத வாழ்வை அந்தக் கட்டுரை படம் பிடித்துக் காட்டியது. அண்ணா நினைவிடம் படத்தை முதல்பக்கமே போட்டிருக்கலாம்.

- ஜெ.சரவணன், திருப்பத்தூர்.

எஸ்.எஸ்.போத்தையா எழுதிய 'கத்தாளங் கருங்கப்' என்ற கட்டுரை அருமை. முன்பு உள்ள விளையாட்டுச் சிறுவர்களின் பாடல் முறைகளை நன்கு விளக்கியது; என் சிறுவயது விளையாட்டுகள் அதைப் படித்ததும் எனக்கு நினைவு வந்தது.

- மு. சிவகுமார், நெடுவயல்.

அரசு சாதனைகள் பற்றியும், அறிவிப்புகள் பற்றியும், தேசியத் தலைவர்கள் குறித்தும், முதலமைச்சர் ஆற்றும் உரைகளும் வெளியிடும் தங்கள் பத்திரிகை ஆளும் கட்சியினருக்கு மட்டுமல்ல; ஊராட்சி மன்றங்களுக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் பயன்படும் அளவில் உள்ளது.

- வி. கலியபெருமாள், தலைவர்,
கீழசூரியமூலை ஊராட்சி.

அறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தை ரூ.275 இலட்சம் மதிப்பீட்டில் எழில்பட வடிவமைத்திருக்கிறார் கலைஞர்; அந்தப் படமே, நேரில் பார்த்த நிம்மதியை எங்களுக்கு அளித்தது.

- டிஎஸ்.சேகர், தென்கடப்பந்தாங்கல்.

வாசகர் இதயம்

'தெரிந்துகொள்வோம்' என்றொரு பகுதியை டிசம்பர் இதழில் வெளியிட்டீர்; அதன் பிறகு காணோம். அரிய செய்திகளைத் தெரிவிக்கும் அப்பகுதியைத் தொடர்ந்து வெளியிடக்கூடாதா?

- மு.வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

'ஒருமைதரும்
தமிழகத்தின்
ஓங்குபுகழ் பரப்பிடவே
பெருமையோடு உதித்தாய்நீ
பேருலகில் -
அருமையென
இப்போது பவனிவரும்
இனியதமிழ் அரசிதழே
எப்போதும் வாழ்க
இனிது'.

- ப.அருணாசல சண்முகம்,
வீரளூர்.

"மனிதநேய உணர்வோடு வாழ்ந்தவர்"!

பெரியவர் பக்தவத்சலம் நினைவிடத்தைத் திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் புகழாரம்

"பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் - அவரை நான் அப்படித்தான் அழைப்பது வழக்கம். நான் அப்படி அழைத்த காரணத்தாலேயே 'பெரியவர் பக்தவத்சலம்' என்பது நிலைத்த ஒன்றாக ஆகிவிட்டது. அவர்களுக்கும் எனக்கும் அரசியல் ரீதியாக எத்தனையோ கருத்து மாறுபாடுகள் உண்டு. அது நீங்கள் அனைவரும் அறிந்ததாகும்.

கருத்து வேறுபாடுகள், அரசியல் மாறுபாடுகள் இவைகள் எல்லாம் என்றைக்கும் நிலையாக இருந்து மனிதர்களுக்கு மனிதர் காட்டவேண்டிய மரியாதைக்கு இடையூறாகவோ அல்லது குறுக்கீடாகவோ இருக்கக்கூடாது என்பதிலே நான் அழுத்தமான நம்பிக்கை கொண்டவன். அதனால்தான் எத்தனை மனமாச்சரியங்கள், கருத்து வேறுபாடுகள் ஒரு காலத்தில் இருந்தாலும்கூட, அவர்களால் நாட்டிற்கு விளைந்த நன்மைகள், சமுதாயத்திற்கு விளைந்த நன்மைகள், ஆட்சிக்கு ஏற்பட்ட நன்மைகள் இவைகளை மறந்துவிட இயலாது.

நான் பாளையங்கோட்டை சிறைச் சாலையில் அவரால் அடைக்கப்பட்டு, சிறையில் இருந்து மீண்டு வந்தவுடன் எனக்குத் தொலைபேசி மூலமாக அழைப்பு விடுத்து. உடனடியாக அவருடைய இல்லத்துக்கு வரச்சொன்னார். இல்லத்துக்குச் சென்றவுடனே என்னிடத்திலே "உங்களை ஏன் சிறையில் அடைத்தேன்" என்பதற்கான காரணங்களை எல்லாம் அவர் எடுத்து விளக்கினார்.

நான் அப்பொழுது அவரிடத்தில் கேட்டுக்கொண்டது "என்னை நீங்கள் சிறையிலே அடைத்தது சரி, இன்னும் சிலபேர் பாதுகாப்புக் கைதிகளாக அடைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களை எல்லாம் விடுவிக்கவேண்டும்" என்பதுதான்.

அந்த பெயர்ப் பட்டியல்களைப் பட்டியலிட்டுக் கொடுங்கள் என்று கேட்டார்கள். பட்டியலிட்டுக் கொடுத்தேன். அவர்கள் எல்லாம் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள்.

மனிதநேய உணர்வோடு வாழ்ந்து காட்டியவர்

இப்படி அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் ஒரு மனிதாபிமான உணர்வோடு, மனிதநேய உணர்வோடு வாழ்ந்துகாட்டியவர் பக்தவத்சலம் அவர்கள். அப்படிப்பட்டவருடைய நினைவுச்சின்னம் ஒன்று இருக்கவேண்டும் என்பதிலும், அதிலும் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே அந்த நினைவிடம் அமையவேண்டும் என்பதிலும் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு.

அதை ஒருமுறை அவருடைய குடும்பத்தார், குறிப்பாக அம்மையார் சரோஜினி தேவி அவர்களும், ஜெயந்தி நடராஜன் அவர்களும் எனக்கு நினைவூட்டியிருக்கின்றார்கள். அந்தக் கடமையை நான் இன்றைக்குச் செய்து முடித்திருக்கின்றேன்.

பக்தவத்சலம் போன்றவர்களின் அயராத உழைப்பு, ஓய்வில்லாத உழைப்பு, நல்ல நிர்வாகம்-என்னைப் பொறுத்தவரையிலே நான் பெரியாரிடத்திலே பகுத்தறிவைக் கற்றுக் கொண்டேன் என்றால், அறிஞர் அண்ணாவிடத்திலே அரசியல் பண்பாட்டைக் கற்றுக் கொண்டேன் என்றால், பக்தவச்சலம் அவர்களிடம் நிர்வாகத்தைக் கற்றுக் கொண்டேன்."

- 13.3.98 அன்று பெரியவர் பக்தவத்சலம் நினைவிடத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து.

• • •

"சிவப்பு நட்சத்திரம் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட்!"



"ஈ.எம்.எஸ். என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படுகின்ற அந்த மூன்று எழுத்துக்களுக்குச் சொந்தக்காரராக விளங்கிய தலைசிறந்த மார்க்சியவாதியும், புரட்சியாளரும், இந்தியாவினுடைய மூத்த அரசியல் தலைவர்களுள் ஒருவருமான திரு.ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களுடைய மறைவுச் செய்தி எனக்குக் கிடைத்தபோது அதிர்ச்சியுற்றேன்.

அவரும் நானும் மேற்கொண்ட பேச்சுவார்த்தையிலேயே, நீண்ட காலப் பிரச்சினையான பரம்பிக்குளம் ஆழியாறு பிரச்சினை இரண்டே நிமிடத்தில் சுமுகமாக முடிவுற்றது.

அவருக்கும் எனக்கும் மாநிலத்தினுடைய முதலமைச்சர் என்கின்ற முறையிலே மாத்திரம் அல்லாமல், எதிர்க் கட்சிகளுடைய தலைவர்கள் என்கின்ற முறையிலே கூட நீண்டகாலப் பழக்கம் உண்டு.

நாணயமான அரசியல், நேர்மையான அரசியல் வேண்டும் என்று விரும்புகின்ற அத்தனைப் பேருக்கும் ஈ.எம்.எஸ். அவர்களுடைய இழப்பு ஒரு பெரும் இழப்பு ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் வைக்கத்திலே நம்பூதிரிகளை எதிர்த்துத்தான் போராட்டத்தை நடத்தினார். அவ்வளவு பிற்போக்கானவர்கள் அங்கே நம்பூதிரிகள் என்ற பெயரில் இருந்தார்கள். அந்தச் சமுதாயத்திலே ஒரு புரட்சியாளர் மின்னல் கீற்றுப் போலத் தோன்றிச் சிவப்பு நட்சத்திரமாக இந்தியா முழுவதும் விளங்கி, ஏன் உலக அரங்கிலே உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு விளங்கி, அந்த நட்சத்திரம் இன்றைக்கு உதிர்ந்துவிட்டது என்றாலும்கூட, நம்முடைய உள்ளத்தில் எல்லாம் இடம் பெற்றுவிட்ட நட்சத்திரமாக அவர் விளங்குகிறார் என்று கூறி, அவருடைய இழப்பிற்காக ஆழ்ந்த இரங்கலை இந்த அவையின் சார்பாக அவருடைய குடும்பத்தாருக்கும் அவருடைய கட்சித் தோழர்களுக்கும் தெரிவித்து அமைகின்றேன்."

- 20.3.98 அன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட இரங்கல் தீர்மானத்தையொட்டிப் பேசியதிலிருந்து.



சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய குடியிருப்பு வளாகம்

தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான புதிய குடியிருப்பு வளாகம் சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசினர் தோட்டத்தில் உருவாகிறது.

பிரம்மாண்டமான இந்த அழகிய நவீன மாளிகை வளாகத்தை உருவாக்க ரூ.45 கோடி செலவாகும் என அரசால் பூர்வாங்கமாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தம் 240 குடியிருப்புகளை உள்ளடக்கிய இந்த வளாகம் பத்தடுக்கு மாடிக் கட்டடங்களைக் கொண்டதாகத் திகழும்.

வாகனங்கள் நிறுத்துமிடம், ஓட்டுநர்கள் ஓய்வெடுக்கும் பகுதி, குடிநீரைத் தேக்கி வைப்பதற்கான கீழ்நிலை நீர்த் தொட்டிகள் ஆகியவற்றைக் கொண்டதாகத் தரைத் தளம் இருக்கும். தரைத் தளத்தின் மீதுதான் மேற்குறிப்பிட்ட பத்து அடுக்குகள் கட்டப்படும்.

ஒரு தளத்துக்கு 6 வீதம் ஒரு கட்டடத்தில் 60 குடியிருப்புகள் அமையும். ஒவ்வொரு குடியிருப்பும் 144.33 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டதாக இருக்கும். இதுபோல் மொத்தம் 4 கட்டடங்கள் கட்டப்படும்.

ஒவ்வொரு கட்டடத்திலும் வேகமாக இயங்கும் 2 மின் தூக்கிகள் (Lift) இருக்கும்.

குடியிருப்புகளுக்கான கட்டடத்தைத் தவிர, இந்த வளாகத்தினுள் - உணவகம், சலவையகம், உடற்பயிற்சிக் கூடம், நூலகம், தொலைபேசி இணைப்பகம், செய்தித் தாள் - நூல் விற்பனை நிலையம் உள்ளிட்டவற்றைக் கொண்ட தனிக் கட்டடமும் கட்டப்படும்.

இவ்வளாகத்தைக் கட்ட தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக்கழகம் ரூ.40 கோடி கடனுதவியாக அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது. இதில் முதற்கட்டமாக ரூ.6.54 கோடி தரப்பட்டுள்ளது என 'ஹட்கோ'வின் மண்டலத் தலைவர் திரு. வி.அருள்குமார் தெரிவித்தார்.

இப்போது அரசினர் தோட்ட வளாகத்தில் காவல்துறைத் தலைமை இயக்குநர் (D.G.P.) அலுவலகம் எதிரே பூர்வாங்கக் கட்டுமானப் பணிகள் தொடங்கி நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் 2 ஆண்டுகளில் இவ்வளாகம் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் கட்டுமானப் பணிகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிக்காலம் முடியும் வரையில் தங்குவதற்கு என்று தில்லியில் தனித் தனிக் குடியிருப்புகள் ஒதுக்கப்படுகின்றன அல்லவா? அதைப்போல, தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களது பதவிக்காலம் முழுவதும் தங்கியிருக்க உதவும் வகையில் இக் குடியிருப்புகள் ஒதுக்கப்படும்.

மிகவும் அழகிய முறையில் - நவீன வடிவமைப்பில் இக்குடியிருப்பு வளாகமானது கட்டப்பட்டுவருகிறது. சட்டப் பேரவை உறுப்பினர்களுக்காக இத்தகைய நவீன குடியிருப்பு வளாகத்தைக் கட்டும் முதல் மாநிலம் தமிழகம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

40 லிட்டருக்குக் குறையாமல் குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இம்மாத இறுதிக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும். அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, இவ்வரசு முடிவு செய்துள்ளது. இந்த இலக்கினை அடைய, ஊரகக் குடிநீர் வழங்கும் பணிக்கான நிதியொதுக்கிடு வரும் ஆண்டுகளில் கணிசமாக அதிகரிக்கப்படும். நகர்ப்புறப் பகுதிகளுக்கு குடிநீர் வசதிகளை அதிகரிக்க பல திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன. வீராணம் ஏரியின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டு, அத்தண்ணீரை கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலுள்ள நகர்ப்புறங்களுக்கும் வழியிலுள்ள கிராமக் குடியிருப்புகளுக்கும் அளிக்கத் திட்டம் ஒன்று திட்டப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. சென்னையில் குடிநீர் வழங்கு பணியை மேம்படுத்தவும், திடக்கழிவு அகற்றும் நிருவாகத்தை மேம்படுத்தவும் வகை செய்யும் சென்னை மூன்றாவது குடிநீர்த் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன், வரும் ஆண்டில் செயல் படுத்தப்படவுள்ளது.

21. இணைப்புச் சாலை தேவையுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள 517 கிராமங்களில், நடப்பாண்டில் 216 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் எஞ்சிய 301 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும். பல்வேறு திட்டங்களின் கீழ் சென்ற ஆண்டில் 5420 கி.மீ. மற்றும் நடப்பாண்டில் 6580 கி.மீ. ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்வி, வேலை வாய்ப்புகளில் 69 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது.

22. எல்லா மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைத்திட அனைத்து வட்டார ஆரம்பச்சுகாதார மையங்களுக்கு தேவையான சாதனங்களையும், வசதிகளையும் வழங்க முழு முயற்சி மேற்கொள்ளப்படும். மாவட்ட மருத்துவமனைகளும் வட்ட மருத்துவ மனைகளும், மேல் சிகிச்சை மருத்துவமனைகளாக மாற்றப்பட்டு 24 மணி நேரமும் அவசர, அவசிய மருத்துவப்பணிகள் கிடைக்கும் வகையில் படிப்படியாக வலுப்படுத்தப்படும். அரசு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களுக்கான நிதியொதுக்கத்தை உயர்த்துவதன் மூலமாகவும் நடைமுறைகளை நெறிப்படுத்துவதன் வாயிலாகவும் அவற்றின் செயல்பாடு சீர்படுத்தப்படும்.

23. ஏழை எளியோர்க்குக் கண்ணொளி வழங்கும் விரிவானதொரு திட்டம் மாநிலம் முழுவதும்

முகாம்கள் வாயிலாக,பரவலாக நிறைவேற்றப்பட 1972 ஆம் ஆண்டு இந்த அரசினால் தொடங்கப்பட்டு அதனால் பல இலட்சம் மக்கள் பயன் பெற்றனர். இடைக்காலத்தில் அத்திட்டத்தில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி மீண்டும் அதே அளவில் மேலும் செம்மையாக கண்ணொளி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

24. கல்வித்துறை முன்னேற்றத்திற்கு அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகின்றது. 6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்துச்சிறார்களும் பள்ளியில் சேர்ந்து தொடர்ந்து கல்வி பெற எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. பள்ளிக் கல்வியின் தரத்தினை உயர்த்திட பள்ளிகளுக்குத் தேவையான வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் பல அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி படிப்பினைத்துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டுக்குத் தரமான உயர் கல்வியின் அவசியத்தை உணர்ந்து பல்கலைக் கழகங்களுக்கு வழங்கும் நிதி உதவியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் சேலத்தில் பெரியார் பல்கலைக் கழகமும், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகமும், திருச்சிராப்பள்ளியில் கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரியும் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. முதன்முறையாகப் பொறியியல் கல்லூரிகளில் கிராமப் பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியர்களுக்கு 15% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டிலிருந்து இத்தகைய ஒதுக்கீடு தொழிற்கல்வி அனைத்திற்கும் விரிவு படுத்தப்படும். இதன் மூலம் கிராமப் பகுதிகளில் கல்வி கற்ற மாணவர்களும் தொழிற்கல்வி பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் அடையும் வாய்ப்பு ஏற்படும்.

25. காவிரி நதிநீர் தாவா தற்பொழுது காவிரி நடுவர் மன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால ஆணையைத் தொடர்ந்து இறுதி ஆணைக்காக விசாரணையில் உள்ளது. தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த வல்லுநர் சாட்சிகளின் குறுக்கு விசாரணையைத் தொடர்ந்து கர்நாடகத்தின் வல்லுநர் சாட்சிகளின் குறுக்கு விசாரணையைக் காவிரி நடுவர் மன்றம் எடுத்துக் கொண்டுள்ளது. இதற்கிடையில் 1992-ஆம் ஆண்டு தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின்மீது விசாரணை நடைபெறும் சமயத்தில், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச்செயலாக்கும் பொருட்டு, மாநிலங்களுக்கிடையிலான நதிநீர் தாவா சட்டம், 1956 பிரிவு '6ஏ' ன் கீழ் ஒரு திட்டத்தை மத்திய அரசு வகுக்குமென்று 9.4.1997 அன்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது. அதனடிப்படையில் மத்திய அரசு ஒரு வரைவுத் திட்டத்தைத்தீட்டி அதன்மீது சம்பந்தப்பட்ட மாநிலங்கள் கருத்துக்களை அளித்துள்ளன. 30.9.1997 அன்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் இது குறித்து ஒரு கூட்டத்தை கூட்டி விவாதித்தார்.

இரண்டாவது பசுமைப்புரட்சியை உருவாக்கத் தொடர்ந்து அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயலாக்கும் பொருட்டு, வரைவுத் திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிடும்படி மத்திய அரசை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்தி வருவதுடன் உச்சநீதி மன்றத்திலும் வலியுறுத்தி வாதாடி வருகிறது.

26. 1.6.1997 முதல் மத்திய அரசு, வறியோர் நலனுக்கான பொது விநியோக முறையினை அறிமுகப்படுத்தியதால் இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசியின் அளவு 1.65 இலட்சம் டன்னிலிருந்து 84230 டன்னாகக்குறைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தியதால் 1997 டிசம்பர் திங்கள் முதல் இம்மாநிலத்திற்கான உணவு தானியங்களின் மொத்த ஒதுக்கீட்டை 1,19,230 டன்னாக மத்திய அரசு அதிகரித்துள்ளது. குறுவைப் பருவத்தில் நல்ல முறையில் 7 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டதால் பொது விநியோக முறையில் தங்கு தடையின்றி அரிசி வழங்கப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெய் பெற நீண்ட நேரம் காத்திருப்பது போன்ற குறைபாடுகளைக் களைய மண்ணெண்ணெய் நிலையங்கள் மூலம் விநியோகம்செய்யப்புதிய திட்டம் ஒன்றை, சென்னையில் அரசு துவக்கியுள்ளது. இந்நிலையங்கள் பெட்ரோல், டீசல் வழங்கும் நிலையங்களைப்போல் இந்திய எண்ணெய்க் கழகத்தின் தொழில் நுட்ப உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளதால் மாநிலத்திலுள்ள நகர்ப்புற பகுதிகளில் இந்நிலையங்களை அமைக்கும் திட்டத்தை விரிவுபடுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

27. சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் பொது விநியோகத் திட்டம் சீரமைக்கப்படும் என்றும் அதன்படி மூன்று நிற அட்டைகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கான கள ஆய்வு நடத்தப்பட்டு அட்டைகள் அச்சிடும் பணி நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு, சில மாற்றங்களுடன் இரண்டு நிறங்களில் மட்டுமே குடும்ப அட்டைகள் வழங்க தற்போது முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மாத வருமானம் ரூ.1250 க்குக் குறைவாக உள்ள ஏழை எளிய குடும்பங்களுக்கு இளம் சிவப்பு நிற அட்டைகளும் மற்ற குடும்பங்களுக்கு மஞ்சள் நிற அட்டைகளும் வழங்கப்படும். இளம் சிவப்பு நிற அட்டை பெறுவோருக்குத் தற்போது பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருள்கள் அனைத்தும் வழங்கப்படும். மஞ்சள் நிற அட்டை பெறுவோருக்கு

அவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் அரிசி அல்லது அரிசிக்குப் பதில் கூடுதலாகச் சர்க்கரையோ அல்லது கூடுதலாக மண்ணெண்ணையோ வழங்கப்படும். இந்த அட்டைகளின் விநியோகம், சென்னை மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் வரும் மே மாதம் முதல் தேதியிலிருந்து தொடங்கும். அந்தப் புதிய குடும்ப அட்டைகளின் அடிப்படையில் ஜூன் மாதம் முதல் பொருள்கள் வழங்கப்படும். தொடர்ந்து படிப்படியாக மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் இரு வண்ண அட்டைகள் வழங்கும் பணி நிறைவு செய்யப்பட்டு, புதிய முறை விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படும்.

28. தமிழக மகளிர் முன்னேற்றத் திட்டம் இந்த ஆண்டில் 14 மாவ்ட்டங்களில் 194 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தத் துவங்கப்பட்டுள்ளது. தற்போது மாநிலத்தில் 2 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ள 9000 தன்னிறைவுக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் இத்திட்டம் இன்னும் 7 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு மேலும் 3 இலட்சம் பெண்கள் இத்திட்டத்தின் கீழ் தன்னிறைவுக் குழுக்களில் உறுப்பினர்களாகிப் பயன் பெறுவார்கள்.

29. உலக வங்கி நிதி உதவி பெறும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து இரண்டாவது திட்டம் 1997-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்குப் பின்னும் இத்திட்டம் மத்திய மாநில அரசுகளின் நிதியிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்படும். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமணத்திட்டத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த நிதி ஆண்டில் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பயன் பெறுவோர் 53,145 பெண்கள் ஆவார்கள்.

30. சாதி வேறுபாடுகளற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் உன்னத நோக்கத்தோடு இந்த அரசு, மாநிலமெங்கும் 50 இடங்களில் எல்லா சாதியினரும் நல்லிணக்கத்துடன் வாழும் வகையில் ‘சமத்துவபுரங்களை’ உருவாக்கி வருகின்றது. ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதர சமூகத்தினர் அனைவரும் இணக்கத்துடனும், அமைதியாகவும் வாழவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், மின்சாரம், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் சமுதாயக் கூடம் போன்றவை அமைந்திடும் வகையில், மாதிரி கிராமங்களாகவும் இந்த சமத்துவபுரங்கள் உருவாக்கப்படுகின்றன.

31. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக அரசு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீட்டினைஅதிகரித்துதிட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. நடப்பாண்டில் வேலை வாய்ப்பு உடனடியாகக் கிடைக்கக்கூடிய கணினி பயிற்சி, பிளாஸ்டிக் தொழில் நுட்பம் போன்ற இனங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் பயிற்சித் திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்படும்.

32. சமுதாயத்தில் நலிந்துள்ள கைத்தறி நெசவாளர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளிகள் போன்றவர்களின் நலனைக் காத்திட இவ்வரசு முனைப்பாக உள்ளது. அதற்கான புதிய திட்டங்கள் ஆய்வில் உள்ளன. இவற்றுக்கான அரசின் முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும்.

33. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் 69 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இது குறித்த வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இவ்வழக்கில் தமிழக அரசின் நிலை தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறது. இட ஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் சமூகநீதிக் கோட்பாட்டினை மாநில அரசின் அதிகாரப் பொறுப்பில் விடுகின்ற அளவுக்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்பதை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள்.

34. நேர்மையும் பொறுப்பும் மிக்க நிருவாகத்தை அளிக்க இந்த அரசு உறுதியுடன் செயல்படுகிறது. அரசு நடைமுறைகளை எளிமையாக்கவும், ஊழலைத் தடுக்கவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தக்க பரிந்துரைகளை அளிக்க ஒய்வுபெற்ற நீதிபதி திரு.ஜி.ராமானுஜம் அவர்கள் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை அரசு அமைத்திருந்தது. இக்குழுவின் பரிந்துரைகளை, இவ்வரசு ஆய்வு செய்து வருகிறது. விரைவில் முடிவுகள் எடுக்கப்பட்டு செயலாக்கப்படும். அரசின் செயல்பாடு குறித்து பொது மக்களுக்குத் தேவையான தகவல்களை அளிப்பதற்காகத்தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதற்கான விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

செயல்படுத்தப்படுவதற்குப் பல ஆண்டுகள் ஆகக் கூடிய பெருமிதப் பகட்டான திட்டங்களை. மேற்கொள்ளுவதற்கு முன்னுரிமை தருவதை விடுத்து, பொதுமக்களுக்கு அவசியமான உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து வழங்கும் திட்டங்களுக்கே முக்கியத்துவம் அளிப்பது என்ற தலையாய கொள்கை முடிவை இந்த அரசு எடுத்துள்ளது.

35. இந்திய மற்றும் இலங்கை அரசுகளுக்கிடையே 1974-ஆம் ஆண்டில் ஒப்பந்தம் ஏற்பட்டபோது, கச்சத்திவு பகுதியில் தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்கின்ற உரிமையும், கச்சத்திவுக்கு

தமிழ்நாட்டிலிருந்து மக்கள் யாத்திரையாக செல்கின்ற உரிமையும் உண்டு என்ற பிரிவு இடம் பெற்றிருந்தது. ஆனால் 1977 முதல் செயல்படாமல் ஆக்கப்பட்டுவிட்ட இந்த பிரிவைச் செயல்படுத்த வேண்டுமென்றும், அடிக்கடி அல்லலுக்கும், இழப்புக்கும் ஆளாகும் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென்றும் மைய அரசைத்தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

36. அரசின் திட்டங்களைத் தொய்வின்றிச் செயல்படுத்தவும் திட்டங்களின் பயன்கள், உரிய காலத்தில் உரியவர்களை அடைவதற்கும், மனிதவள மேம்பாட்டுக்கும், சட்டம் - ஒழுங்கை நல்லமுறையில் பராமரிப்பதற்கும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், காவலர்கள் மற்றும் உள்ளாட்சித்துறை அலுவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசின் அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதிய விகிதங்களை ஆய்வு செய்து, மாநில அரசு அலுவலர்களுக்கு இவற்றை அளிப்பது குறித்து பரிந்துரைகளை அளிக்க நியமிக்கப்பட்ட அலுவலர்கள் குழு தனது அறிக்கையை அளித்துள்ளது. இதன் மீதான அரசின் முடிவுகள் இக்கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

37. 1992-ஆம் ஆண்டு முந்தைய அரசு இயற்றிய புதிய தொழில் வரிச் சட்டத்தில் உள்ள வரி விகிதங்களைக் குறைப்பதைப் பற்றியும் சில பிரிவுகளை நீக்குவது பற்றியும் வணிகர்களிடமிருந்து பல முறையீடுகள் வந்துள்ளன. தொழில் வரியிலிருந்து வரும் வருவாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு முக்கிய வருவாய் இனமாக உள்ளதால் தொழில் வரிச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய ஒரு குழுவினை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்றபின் அரசு தொழில் வரிச் சட்டத்தில் தேவையான மாறுதல்களைச் செய்யும்.

38. செயல்படுத்துவதற்குப் பல ஆண்டுகள் ஆகக் கூடிய பெருமிதப் பகட்டான திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு முன்னுரிமை தருவதை விடுத்து, பொதுமக்களுக்கு அவசியமான உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து வழங்கும் திட்டங்களுக்கே முக்கியத்துவம் அளிப்பது என்ற தலையாய கொள்கை முடிவை இந்த அரசு எடுத்துள்ளது.

39. இந்த அரசின் முக்கியமான நடவடிக்கைகள், சாதனைகள், எதிர்காலத் திட்டங்கள், கொள்கைகள் குறித்து நான் குறிப்பிட்டுள்ளேன். வளர்ச்சி-மேம்பாட்டுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும், விரைவுபடுத்தவும், அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இவை யாவும் செவ்வனே நிறைவேற உங்களுடைய முழு ஒத்துழைப்பு வேண்டுமெனக்கேட்டுக்கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன். ●

இந்திய தரிசனம்



ஜெயகாந்தன்

நாமறிந்தவரை பண்டைய உலக நாகரிகம் என்பது தமிழ்நாட்டையும், கிரேக்கத்தையும் ஆதாரமாகக் கொண்டு திகழ்கிறது.

பண்டைய கிரேக்க நாகரிகம் ஐரோப்பிய நாகரிகத்தின் தோற்றுவாய் என்று கருதப்படுகிறது. அதேபோலத் தமிழ்நாட்டை ஆசிய நாகரிகத்தின் தோற்றுவாய் எனக் கருதலாம்.

ஒரு பழந் தமிழ்க்கவி 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று முழங்கினான். இது நெடிய பாரம்பரியமுடைய தமிழ்ப் பண்பாட்டின் கொள்கையாகவும் நோக்கமாகவும் இருந்தது. இந்தக் கூற்றின் பின்னணியில் உள்ள செய்தி என்ன? இந்த இலட்சியத்தை உலகெங்கும் பரப்புவதும், இந்த இலட்சிய அடிப்படையில் உலகமாந்தரை உருவாக்குவதும் இந்தியப் பண்பாட்டின் அடிநாதம் என்பதே.

நமது கலாச்சார வரலாறு வேதகாலம் தொட்டுத் தொடங்குகிறது என்றாலும், புத்தரின் காலத்திலிருந்துதான் இந்திய அரசியல் கலாசாரம், உலகு தழுவிய ஒரு தேசிய கலாச்சாரமாக உருப்பெறுகிறது.

சில நாடுகள் மிகவும் தனித்துவமான அவற்றின் எல்லைக்கு உட்பட்டவையேயான கொள்கைகளையும் நெறிகளையும் கொண்டிருக்கலாம். ஆனால், இந்திய தேசியமானது உலகத்தை - ஏன், பிரபஞ்சத்தையே தழுவி நிற்கிறது; மனிதகுலம் முழுமையையும் நேசிக்கிறது. உலகமாந்தர் அனைவரின் நன்மையையும் வேண்டிநிற்கிறது. மற்ற தேசிய வாதங்கள் போல் இந்திய தேசியம் தன்னலம் பேணும் குறுகிய தேசியவாதமாகச் சுருங்கி விடவில்லை. மாறாக உலகுதழுவிய, மானுட சகோதரத்துவத்துக்காகத் தனது குரலை உயர்த்தி நிற்கிறது.

"ஸர்வே ஜனா; ஸுகினோ பவந்து" என்பது பாரதத்தின் தேசிய கோஷம். ஆம், ஒன்றோடொன்று மோதுகிற, மதங்கள், இனங்கள், வர்க்கங்கள் என்று பாகுபட்டு நிற்கிற உலகத்தில் இந்திய தேசியம் எது சத்தியமோ அதுவே ஜெயிக்கட்டும் என்று முழங்கி, 'சத்யமேவ ஜயதே' என்ற தனது பதாகையை உயர்த்திப் பிடிக்கிறது.

இந்திய நாகரிகம் எல்லாவற்றிலும் சத்தியத்தையே தேடுகிறது. உண்மைக்காகவே உயிர் கொடுக்கவும் தயாராய் நிற்கிறது. ஒரு நாட்டுக்கும் நாகரிகத்துக்கும் இதைக் காட்டிலும் ஓர் உன்னதமான குறிக்கோள் இருக்கமுடியாது.

பஞ்சசீலம் என்பது ஏதோ இக்காலத்தில் சுதந்திர இந்தியாவும், புதிய சீனாவும் கையெழுத்திட்டுப் பிரகடனம் செய்த ஒரு புதிய ஒப்பந்தம் மட்டுமன்று, அது உலக அரசியல் கலாச்சாரத்துக்கு அசோகச் சக்கரவர்த்தி அளித்த மகத்தான அருட்கொடையாகும்.

இந்தியா ஒரு பரந்ததேசம்; ஒரு துணைக் கண்டம். இந்தியாவின் தொலைதூரப் பிரதேசங்கள், தேசத்தின் பிரிக்க முடியாத பகுதிகளாகும். ஒவ்வொரு பகுதியும் அதற்கேயுரிய தனித்தன்மையுடன் விளங்குகின்றன. இந்தத் தனிச்சிறப்புகள் இந்திய தேசத்தின் ஒருமையை அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் வருகிற சிறப்பானவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்வதும் தன்வயப்படுத்திக் கொள்வதும் இந்திய தேசிய கலாசாரத்தின் பொதுவான அடிப்படைகளாகும்.

இந்தியாவின் வடபகுதியில் வாழ்ந்தோர் தம்மீது படையெடுத்து வந்தோரை எதிர்த்துப் போர் புரியவும், அவர்களைப் புறங்காணச் செய்யவும் வீரமுடையவர்களாய் இருந்தனர். மாறாக, தென் பகுதியோ மூன்று புறத்தும் கடலால் சூழப்பட்டிருந்தால், ஒருபோதும் அந்நியர் படையெடுப்புக்கு இலக்கானதே இல்லை. உண்மையில் தென்பகுதியில் ஒரு வலுவான கடல் அரணும் கடற்படையும் நமக்கு இருந்தது. அவை தமிழகத்தின் துறைமுகங்களிலிருந்து சரக்குகளையும் கைவினைப் பொருள்களையும், திரவியங்களையும் மட்டும் ஏற்றிச் செல்லவில்லை. அவை உலகின் தொலைதூரப் பிரதேசங்களில் வாழும் சகோதர மானுட குலத்தினருக்கு ஆன்மீக அறிவையும், ஞானத்தையும், நட்புணர்வையும் ஏற்றிச் சென்றன.

ஐரோப்பியர்கள் கூட, கடல் வழியே நமது நாட்டை ஆக்கிரமிப்பவர்களாகப் படைகொண்டு வரவில்லை. நல்லெண்ணத் தூதுவர்களாகவும், அறிஞர்களாகவும், பயணிகளாகவும் வந்தனர்.

வேதங்கள், உபநிஷதங்கள், மகாபார்தம், இராமாயணம் - இவையெல்லாம் இந்தியாவின் எந்தவொரு பகுதிக்கும் சொந்தமானவை அல்ல.

சமஸ்கிருதம் எந்த ஒரு பகுதிக்கும் உரிய தனி மொழியோ, வட்டார மொழியோ அல்ல. சமஸ்கிருதம் இந்தியாவின் புராதன தேசிய மொழி. தேசத்தின் பல்வேறு மொழிகளைச் சார்ந்த அறிஞர்கள் தத்தமது கருத்துக்களை அனைவரோடும் பரிமாறிக் கொள்ளவே அம்மொழி உதவிபுரிந்தது. நமது மொழிகள், வேதங்கள், காவியங்கள், புராணங்கள் ஆகியவை இப்பரந்த தேசத்தின் பல்வேறு பகுதி மக்களையும் ஒருங்கிணைப்பதில் மிக முக்கியப் பங்காற்றின.

தனிமனிதர்கள் ஒருங்கிணைந்து ஒரு சமுதாயத்தை உருவாக்குவதாகப் பலர் தவறாக எண்ணுகிறார்கள்.

மலர்களைப்போல், தேனீக்களைப் போல், பறவைகள் போல் சமுதாயமும் இயற்கையாகவே கொத்துக் கொத்துக்களாக, கூட்டம் கூட்டங்களாகப் பூமியின் பரப்பெங்கும் தோன்றியுள்ளன. தனிமனிதர்கள் என்போர்

சமுதாயத்தின் அங்கங்களாகவே சமுதாயத்தன்மை கொண்டவர்களாகவே உருவாகி இருக்கிறார்கள்.

ஒரு மலர் என்பது பல இதழ்களைக் கொண்டதாக இருக்கிறது என்பதால் பல இதழ்களை ஒன்று சேர்ப்பதின் மூலம் ஒரு மலரை உருவாக்க முடியாது. வேண்டுமானால் செயற்கையாக இத்தகைய ஒரு மலரை உருவாக்கலாம். உதாரணத்துக்கு ஐரோப்பாவில் உருவாக்கப்பட்ட, செயற்கையாக ஓர் ஒப்பந்தத்தின் மூலம் சேர்த்து இணைக்கப்பட்ட சோவியத் யூனியனைக் கூறலாம்.

இந்திய தேசமென்பது செயற்கையாக உருவாக்கப்பட்ட அத்தகைய கூட்டமைப்பு அல்ல. எந்த ஒரு மகா சக்கரவர்த்தியும் ஒரு குடைக்குக் கீழே இந்த தேசத்தைக் கொண்டுவரவில்லை. மாறாக இமயம் முதல் குமரிவரை வாழ்கிற இந்திய மக்களின் வாழ்க்கை நெறியினால் உணர்வுபூர்வமாக, கலாசாரரீதியாக, மரபுரீதியாக இந்தியா ஒரு தேசமாக உருவாகி இருந்ததால்தான் அது ஒன்றாகவே அமைக்கப்பட்டது, ஒன்றாகவே விடுலையும் பெற்றது. இந்தியா வெறும் அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்ட செயற்கையான கூட்டமைப்பு அல்லவே அல்ல.

பன்னெடுங்காலமாக இந்தியாவில் சமஸ்கிருதமும் தமிழும் மிகவும் சிறப்புற வளர்ச்சியுற்ற இலக்கியப் பொக்கிஷங்களைப் பெற்ற இருபெரும் மொழிகளாக விளங்குகின்றன. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓர் அறிஞனோ, கலைஞனோ தமிழிலும் சமஸ்கிருதத்திலும் கற்றுத்தேர்ந்தவனாக விளங்கினான். தேசத்தின் ஒரு மூலையில் உதிக்கின்ற ஒரு கருத்து, சமஸ்கிருத மொழியைத் தனது வாகனமாகக் கொள்வதன் மூலம் இந்தியா முழுவதும் திக்விஜயம் செய்ய முடிந்தது.

தெற்கே எங்கோ ஒரு மூலையில் தோன்றிய ஆதிசங்கரர் பாரதத்தின் எட்டுத் திக்குகளையும் வென்று இமயச்சிகரத்தின் முகட்டில் தமது ஐயக்கொடியை நாட்டினார் எனில், தமிழ் சமஸ்கிருதத்தைத் தனது வாகனமாய்க் கொண்டு திக்விஜயம் செய்ததனால்தான் சாத்தியமாயிற்று.



அதேபோல் இமயத்தின் அடிவாரத்தில் தோன்றிய பௌத்தம், தமிழகம் உள்ளிட்ட பாரதத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியது. இந்த வரலாற்று உண்மைகளிலிருந்து, தேசத்தின் பல்வேறு பகுதிகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொண்டிருந்தன என்றும் இதற்கு வடமொழி பெருந்துணையாய் நின்று உதவியதென்பதையும் நாம் அறிய முடிகிறது.

உண்மையும் அன்பும் நமது சமயக்கொள்கைகள் மட்டுமல்ல. அதுவே நமது சமூகக், கலாசாரத்துக்கும் அரசியலுக்கும் அடிப்படையாகும்.

ஏதேச்சதிகாரம், அடிமைத்தனம், அடக்குமுறை, கொடுங்கோல் ஆகியவற்றை நமது கலாசாரம் எல்லாக்காலங்களிலும் எதிர்த்தே நின்றிருக்கிறது. நம்மை அடிமை கொள்ளவும், அடக்கவும் முயன்றவர்கள் காலப்போக்கில் தோற்றுப்போயினர்; தோற்றுப்போவர்.

நாம் அன்பினாலும் அறத்தாலும் அவர்களை வெல்லுவோம்.

இந்திய மக்களின் உண்மையான தேசிய குணாம்சத்தை நம் காலத்தில் உலகறிய எடுத்துக்காட்டியவர் மகாத்மா காந்தி. இந்தியர்களுக்கு எதிராக கொடுமையான சக்திகள் பயன்படுத்தப்பட்டபோது நாமதனை அறவழியில் அகிம்சைமுறையில் எதிர்கொண்டு வெற்றிபெற்றோம். அகிம்சை என்பது வன்முறைச் செயல்களைத் தவிர்ப்பது மட்டுமன்று; வன்முறை எண்ணங்களையும், தீயசிந்தனைகளையும், வெறுப்பையும், பகைமையையும் மனித சித்தத்திலிருந்தே அகற்றுவதுமாகும்.

இந்திய வரலாற்றுக்கே பெருமை சேர்க்கும் மாமனிதராய் ஜவகர்லால் நேருவின், 'இந்திய தரிசனம்' என்னும் நூலிலிருந்து சில வாசகங்களுடன் இக்கட்டுரையை முடிக்க எண்ணுகிறேன்.

"மற்ற கலாசாரங்களை வரவேற்று ஏற்றுக்கொள்வது இந்தியாவின் வழிமுறையாக எப்போதும் இருந்துவந்துள்ளது. அது, இன்றைக்கு மிகவும் அவசியமாகிறது. ஏனெனில் நாம், மனித குலத்தின் சர்வதேசக் கலாசாரத்தோடு நமது தேசிய கலாசாரம் பின்னிப் பிணையப் போகிற நாளைய ஓர் உலகம் என்ற இலக்கை நோக்கி நடைபோடுகிறோம். ஞானம், அறிவு, நட்பு, தோழமை இவை எல்லாம் எங்கெங்கு கிடைக்கின்றனவோ, அங்கங்கெல்லாம் அவற்றைப்பெற்று பொதுவான உலக க்ஷேமத்துக்காக, மற்ற தேசங்களோடு ஒத்துழைத்து நாம் நிற்போம். ஆனால் மற்றவர்களின் இரக்கத்துக்காகவும், ஆதரவுக்காகவும் நாம் யாரிடமும் கையேந்தி யாசகம் கேட்டு நிற்கமாட்டோம். இவ்வாறாக நாம் உண்மையான இந்தியர்களாக, சிறப்பான ஆசியக்காரர்களாகத் திகழ்வோம். அதே நேரத்தில் நாம் சிறந்த சர்வதேசியவாதிகளாகவும் உலகப் பிரஜைகளாகவும் உயர்வோம்".

★

சத்யமேவ ஜயதே!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **ரா. சிவகுமார்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர்தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927, 564906

Verified



தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23


எம்.பக்தவத்சலம்
தோற்றம் : 9 - 10 - 1897
மறைவு : 13 - 2 - 1987